
366 கதைகள்
நாளுக்கொரு கதை
கஸ்பார் போத்திராஜலு
I
II
III
IV
V
VI
VII
VIII
IX
X

நாளுக்கொரு கதை

கஸ்தூரி போத்திராஜூலு

திருமண்டில லினாக்ஸ் அச்சகம்
பசுமலை, மதுரை - 625 004

Published by
THE DIOCESAN LENOX PRESS
Pasumalai, Madurai - 625 004.

First Edition 1989
Reprinted 1994

NALLUKKORU KATHAI
by Kasthuri Pothirajulu
in Tamil

FOR UPPER ROOM - PROMOTIONAL MINISTRY

Cover Design by: Rev. THOMAS VICTOR
Mr. CHARLES DEVADASS

IDEAL PICTURE PRODUCT, SIVAKASI. ✆ 20722, 24722

சமர்ப்பணம்

என் அன்னை

திருமதி மனோன்மணி ஜோதிநாயகம் அவர்களுக்கு

நூன்முகம்

இப்புத்தகத்திலுள்ள எல்லாக் கதைகளுமே வேதப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை. லீப் வருடங்களும் விட்டுப்போகாதபடி நாளுக்கு ஒரு கதை என்ற கணக்கில் 366 கதைகள் இதில் அடங்கியுள்ளன. இதில் கி. மு., கி. பி. சரித்திர கால சம்பவங்களும், பக்தி வரலாறுகள், அரசர்களின் வீரக் கதைகள், கடவுளின் கட்டளைகள், பக்திப் பாடல்கள், வேதக் கதைகள், உவமைகள், கடிதங்கள் முதலியன அடங்கியுள்ளன. வேதத்திலுள்ள எல்லாக் கதைகளும் இதில் இடம்பெறவில்லையானாலும், எழுதப்பட்ட கதைகளை முழுவதுமாக வாசித்து முடிக்கும்போது வேதப் புத்தகத்தைப்பற்றிய ஒரு முழுமையான கருத்து கிடைக்கிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தைக் கிறிஸ்துவுக்கு முன்காலம் என்றும், புதிய ஏற்பாட்டின் காலத்தைக் கிறிஸ்துவுக்குப் பின்காலம் என்றும் பொதுவாய்க் கொள்ளலாம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் கடவுள் மனிதர் மூலமாகப் பேசினார். ஆனால் புதிய ஏற்பாட்டின் காலத்தில் அவரே மனுஉருக்கொண்டு கடவுளின் மைந்தன் இயேசுவாக பூமியில் உலா வருகிறார். தந்தையாம் கடவுள்பற்றி மக்களுக்கு விளக்குகிறார். கடவுள் யூதருக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே இரட்சகர் என்பதை தனது மரணம், உயிர்த்தெழுதல் மூலம் உறுதிப்படுத்துகிறார். சுவிசேஷம் பூமியெங்கும் பரவுகிறது. கடைசியில் சமாதானமும சந்தோஷமும் ஆட்சிசெய்யும் புதிய வானம், புதிய பூமியின் காட்சியோடு வேதக் கதைகள் முடிவடைகின்றன.

இக்கதைகளை உங்களுக்கு அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கதைகள் என்றாலே எவர்க்கும் விருப்பம். விசேஷமாகக் குழந்தைகள் கதைகளை விரும்பி, விடாமல் படிப்பர். வேதத்தைக் கதை வடிவில் யாவரும் படித்துப் பயன்பெறும் முறையில் இதை அமைத்து உள்ளேன். புறச் சமயங்களைச் சேர்ந்த குழந்தைகளும் பெற்றோரும்கூட இவைகளை வாசித்துப் பயனடைவர் எனவும் நம்புகிறேன்.

ஒவ்வொரு கதையும் எந்த வேதப் பகுதியைச் சார்ந்தது என்ற குறிப்பும் கொடுக்கப் பட்டுள்ளதால் அந்தந்த வேதப் பகுதியையும் கதையோடு சேர்த்து வாசித்து ஆவியானவரின் துணையோடு கதையை நீங்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளுமாறு உங்களைக் கேட்டுக்கொள் கிறேன். மேலும் தாய்மார் குழந்தைகட்கு இக் கதைகளைச் சொல்லும்போது, வேதப் பகுதி வாசிப்பதோடு உங்களது கற்பனை வளங்களையும் சேர்த்துக்கொள்ளலாம். கதைகளை நீங்களும் பிறருக்குச் சொல்லலாம். அல்லது புத்தகத்தையே வாசிக்கும்படியாக உதவிசெய்யலாம். கடவுளுடைய சத்தியம் இப்படியாக உங்கள் மூலமாக பலருக்குப் பரவ இது ஒரு நல்ல வாய்ப் பாகும் என முழு மனதோடு நம்புகிறேன்.

இவ்வரிய நூல் வெளிவர எழுதுவதிலும், ஆலோசனைகள் வழங்குவதிலும் உதவியாய் இருந்த நண்பர்களுக்கும், இதனைப் புத்தகமாக வெளியிட உதவிபுரிந்த Church of Sweeden Mission சபைக்கும், United Church Board for World Ministries சங்கத்தினருக்கும், சிறப்பு ஆலோசனைகள் நல்கிய தென்னிந்தியத் திருச்சபையின் செயலர் அருள்திரு. அசரியா அவர்களுக்கும், வரைபடங்களை உருவாக்கிய ஓவியர்கள் அருள்திரு. தாமஸ் விக்டர், திரு. சார்லஸ் தேவதாஸ் ஆகியோருக்கும், இக்கதைகளை உருவாக்குவதில் எனக்கு உறுதுணையாக இருந்து உதவிய குருவானவர் அருள்திரு. பரஞ்ஜோதி, சகோதரி டெய்சி மாணிக்கம், தமிழ் ஆசிரியைகள் திருமதி சித்ரா திலகர், திருமதி மேரி வசந்தா, செல்வி நல்லையா ஆகியோருக்கும், நூல் வெளியீட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் பொதுச் செயலாளர் அருள்திரு. அறிவர் தி. தயானந்தன் பிரான்சிஸ் அவர்களுக்கும் அவருடைய உடன் ஊழியருக்கும், வாழ்த்துரைகள் வழங்கியுள்ள பெரியார்கள் CSI Synod Moderator Dr. P. Victor Premasagar, தரங்கைப் பேராயர் அருட்பெருந்திரு. ஜெயசீலன் ஜேக்கப், சகோ. டி. ஜி. எஸ். தினகரன் ஆகியோருக்கும்—எல்லாவற்றிற்கும் மேலாக துதிகளுக்குப் பாத்திரராகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கும்—என் நன்றியைத் தெரியப்படுத்துகின்றேன்.

இலக்கியத் துறையில் என்க்குள்ள ஆர்வத்தை வளர்த்துக்கொள்ள ஊக்கமளித்து வரும் என் கணவர் பேராயர் போத்திராஜுலு அவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப் பட்டுள்ளேன்.

சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பதுபோல பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்க (ஏசா. 11:9) வேண்டும் என்பதே என் அவா.

11–7–1988

கஸ்தூரி போத்திராஜுலு
ஆசிரியர்

இரண்டாம் பதிப்பு—ஆசிரியர் குறிப்பு

'நாளுக்கொரு கதை' நமது மக்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஆவிக்குரிய வளர்ச்சியாய் வளரப் பேருதவியாக இருக்கிறதென்று வாசகர்களிடமிருந்து செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன. முதல் பதிப்பின் பிரதிகள் முற்றிலுமாக விற்றுத் தீர்ந்த பின்னரும் தொடர்ந்து மக்கள் எங்களுக்கு 'நாளுக்கொரு கதை வேண்டும்' எனக் கேட்டதின் வாயிலாக மக்களின் விருப்பத்தை நிறைவேற்றவும் கர்த்தருடைய நாம மகிமைக்கென்று நற்செய்தி பரவவும் தக்கதாக இவ்விரண்டாம் பதிப்பை மகிழ்ச்சியோடு வெளியிடுகிறோம். இவ்விரண்டாம் வெளியீட்டிற்கு உதவிய கிறிஸ்தவ இலக்கிய சங்கப் பொதுச் செயலர் டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் அவர்கட்கு மனமுவந்து நன்றி கூறுகிறோம்.

கஸ்தூரி போத்திராஜுலு

Telegrams & Cables : **"Bishop, Medak"** *Tel. No. :* **179**

CHURCH OF SOUTH INDIA

MEDAK DIOCESE

The Rt. Rev. Dr. P. VICTOR PREMASAGAR, *M.A., Ph.D.*

Bishop & Moderator

BISHOP'S HOUSE
CATHEDRAL COMPOUND
MEDAK - 502 110 A.P.
INDIA

29, June 1988

I am very happy to write a 'Foreword' for the book 'A DAY A STORY' written by Mrs. Pothirajulu, wife of the Deputy Moderator of the Church of South India. I had the privilege of looking through the manuscript and the pictures that go with the stories which are very suggestive, educative and helpful for children. I am sure that this book will be used in every home in Tamil Nadu, by parents and children, and that they would be blessed by the lessons imparted by the Author. It is a new and creative idea, and I am sure that it will bring blessings to all our people. I hope that there will be translations into other languages, so that other children and families may also be blessed by this book.

I commend this book to all christian families, especially to those with young children.

I congratulate the Christian Literature Society, for publishing this important book in christian education.

P. Victor Premasagar,
Bishop & Moderator of CSI.

THE TAMIL EVANGELICAL LUTHERAN CHURCH

தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபை

President:
The Rt. Rev. Dr. Jayaseelan Jacob,
B.D., M.Th., D.D.,
Bishop of Tranquebar

"TRANQUEBAR HOUSE"
Post Box No. 86
Tiruchirapalli - 620 001. India.
Gram: BISHOP CARE 'STEWARD'
Phone: Resi.: 23798 Off.: 23588

வாழ்த்துரை

திருமதி போத்திராஜுலு அம்மையார் பேராயர் போத்திராஜுலு அவர்களின் இறைப்பணியில் முழுவதுமாக ஈடுபாடுகொண்டு ஒய்வற்ற நிலையிலிருந்தும் இலக்கியத்தின் வாயிலாக நற்செய்தி கூறும் நோக்குடன் ஓராண்டிற்குரிய 366 வேதாகமக் கதைகளை எளிய, இனிய நடையில் எல்லோரும் புரிந்துகொள்ளும் முறையில் எழுதி அச்சிட்டு நூலாக வெளியிடுவது பெருமைக்குரியதொன்றாகும்.

சத்தியவேதம் அனைவருக்கும் உரிய கடவுளின் அருட்கொடை. சாதி, இன, நிற, சமயங்களைக் கடந்து உலகிலுள்ள அனைத்து மக்களின் ஆன்மதாகம் தீர்க்கும் அரிய நூல். இந்நூலை முழுவதுமாகப் படித்தறிவது கடினமான செயலாகும். இவ்வேதாகமத்திலுள்ள வரலாறுகளை ஒரு நாளைக்கு ஒரு பாடமாக லீப் ஆண்டுக்குக்கூட பயன்படும் கதைகளாகத் தொகுத்து வெளியிடும் ஆசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது. ஒவ்வொரு வரலாற்றையும் அழகிய ஓவியங்கள் அணி செய்கின்றன.

இந்நூலை கிறிஸ்தவர்கள் ஞாயிறு பள்ளிகள், கிறிஸ்தவ இளைஞர் இயக்க கூட்டங்கள், கிறிஸ்தவப் பள்ளிகளில் கிறிஸ்தவக் கல்விப் போதனைகள் முதலியவற்றில் நன்கு பயன்படுத்தலாம். கிறிஸ்தவரல்லாதவரும் வேதாகமக் கதைகளை விரும்பிப் படித்து பயனடைவர்.

வேதாகமத்தைச் சாராக்கி கதைகளாக தொகுத்து வெளியிடும் பேராயர் அம்மையார் அவர்களை நாம் பாராட்டுகிறோம். திருச்சபைகளும், அனைத்து நிறுவனங்களும் இந்நூலினை வாங்கிப் படித்து பயனடையும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இறைமைந்தர் இயேசுகிறிஸ்துவின் பேரருள் ஆசிரியரோடும், வாசகர்கள் அனைவரோடும் இருந்து காத்திட உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

அன்புள்ள
ஜெயசீலன் ஜேக்கப்
தரங்கைப் பேராயர்

JESUS CALLS
(A Registered Charitable & Religious Trust)

16, Greenways Road, Madras-600 028.
Phone: 417110 / 417753
Telex: 41-8888 PRAY IN

Dr. D. G. S. Dhinakaran
Founder

மதிப்புரை

'பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்' (நீதி. 22:6).

'இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது.

நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும் படுத்துக்கொள்கிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி,

அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது' (உபா. 6:6—8).

மேற்கண்ட வேத வசனங்கள் நம் குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் ஆண்டவருடன் ஒன்றிணைந்து வாழும்படி செய்ய, பெற்றோர் செய்யவேண்டியதென்ன என்று விளக்கமாகக் கூறுகின்றன. இன்றைய உலகில், எங்கும் விரிவாகக் காணப்படும் சிற்றின்பங்கள், கஞ்சா அருந்துதல் போன்ற கொடிய பழக்க வழக்கங்கள், இவை அந்தோ! இளைஞர்களுடைய வாழ்வை எலும்புருக்கி நோய்போல் கெடுத்து, நாசமாக்கிக்கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், அந்த இளம் உள்ளங்களை சோதனைக்குத் தப்புவிக்கும் கேடகமாக விளங்குவது ஆண்டவருடைய வல்லமையுள்ள, என்றும் நிலைத்து நிற்கும் வார்த்தைகளே!

ஆண்டவருடைய வார்த்தைகளுள், சிப்பிக்குள் முத்து இருப்பதுபோல் அடங்கியிருக்கும் ஆழ்ந்த சத்தியங்கள், நோய்தீர்க்கும் ருசியற்ற மருந்தினை தேனில் கலக்கித் தருவதுபோல, இளம் உள்ளங்கள் இன்பமாக ஏற்றுக்கொள்ளும் வகையில், வேதாகமக் கதைகள் மூலம் இப்புத்தகத்தில் வழங்கப்படுகின்றன.

DIOCESE OF MADURA AND RAMNAD

THE CHURCH OF SOUTH INDIA

Phone No. **36085**

The Rt. Rev. Dr. D. Pothirajulu
B.A., B.D., M.A., Th.D., (Boston)
Bishop & Deputy Moderator
Church of South India

Bishop's Office:
C. M. Hospital Compound,
Post Box 233,
East Veli Street,
Madurai-625 001.

Date: 11-7-1988

வேதாகமத்திலுள்ள சத்தியங்களை அறிந்துகொள்வது மக்களுக்கு கிடைத்திருக்கும் மாபெரும் சிலாக்கியம் ஆகும். அதை முறைப்படியும் ஆனால் எளிமையாயும் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அதற்குத் தனி முயற்சி தேவை. அப்படிப்பட்ட சிறந்த முயற்சிதான் திருமதி கஸ்தூரி போத்திராஜுலு எழுதி வெளியிட்டிருக்கும் 'நாளுக்கொரு கதை' என்னும் இவ்வறிய நூலாகும். இதில் திருமறையின் சிறப்பு வரலாறுகளும், நிகழ்ச்சிகளும், அறிய அருள் போதனைகளும், எளிய உவமைகளும், கதைகளும் இடம்பெறுகின்றன.

'எனக்கு ஒரு கதை சொல்லுங்கள்' என்று கேட்கிற குழந்தைகள் ஏராளம். அவர்கட்கு என்ன கதை சொல்லலாம் என்று தவிக்கின்ற தாய்மாரும் அநேகம். ஒவ்வொரு நாள் இரவும் தூங்குவதற்கு முன்னால் தங்கள் குழந்தைகட்குத் தாய்மார் ஒரு கதை சொல்லலாமே. அது பைபிள் கதையாக இருந்தால் எத்தனை சிறப்பாக இருக்கும்? ஆகையால் உங்கள் முன் படைக்கப்பட்டிருக்கிறது 'ஒரு நாளைக்கு ஒரு கதை' வாசித்துப் பயனடையுங்கள்.

Rt. Rev. Dr. D. Pothirajulu
Deputy Moderator—CSI

எனவே, இப்புத்தகம் இளம் உள்ளங்களாலும், அவர்கள் வாழ்வின் வளத்தில் அக்கறை கொண்டுள்ள பெற்ருேராலும், குறிப்பாகத் தாய்மாராலும் பெரிதும் வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை. பாவக்கடலில் விழுந்து, தப்பிக் கரைசேர வழி தெரியாமல் தவிக்கும் பேதை உள்ளங்களுக்கு, ஒரு நங்கூரமாக இப்புத்தகம் பயன் தரும் என்பது உறுதி!

கடந்த மூன்று ஆண்டுகளாக இளைஞர்களின் ஆன்மீக வாழ்வைப்பற்றி, என் உள்ளத்தில் ஆண்டவர் ஒரு பெரும் பாரத்தைக் கொடுத்துள்ளார். அதோடுகூட, அவர்கள் அன்ருடகம் வாசித்து, இறை ஆசீர் பெறுவதற்கு, தகுதியான புத்தகம் ஒன்றுமில்லையே என்ற கவலையும் என் உள்ளத்தில் எழுந்தது. இந்தப் பெரும் தேவையைப் பூர்த்தி செய்யவே, நம் அருள்நாதர் இயேசு, நம் அன்பு சகோதரி திருமதி ஹெலன் மேரி கஸ்தூரிபாய் போத்திராஜுலு அவர்களின் உள்ளத்தில் இப்புத்தகத்தை வெளியிடுமாறு ஏவி எழுப்பினுரென நான் உறுதியாய் நம்புகிறேன். இந்த எண்ணத்தை அவர்கள் உள்ளத்தில் தந்த அருள்நாதர் இயேசுவின் பாதங்களை முத்தமிடுகிறேன்.

தேவன் தாமே அருமையான அம்மையார் அவர்களை ஆசீர்வதித்து, இன்னும் இதுபோன்ற பல உபயோகமுள்ள புத்தகங்களை வெளியிட, தம் கையிலுள்ள ஒரு சிறந்த கருவியாய்ப் பயன்படுத்துவாராக!

டி. ஜி. எஸ். தினகரன்

பொருளடக்கம்

பக்கம்

பக்கம்

பக்கம்

புதிய ஏற்பாடு

பக்கம்

பக்கம்

ஆதியாகமம்

முன்னுரை

கடவுள் மனிதனோடு கொண்ட உறவின் வரலாற்றை அறிவிக்கும் நூலே வேதாகமம் என்று கூறலாம். இந்த உறவு கடவுள் உலகையும் மனிதனையும் படைத்த பொழுது உண்டாயிற்று. உலகம் படைக்கப்பட்டதையும் மனிதன் பாவத்திற்குள்ளான தையும் இப்பகுதி நமக்கு விளக்குகிறது. கடவுள் படைத்த உலகம் அவருடைய பெரிதான அன்பையும், வல்லமையையும் வெளிப்படுத்துகிறது. கடவுள் மனிதனைத் தம்மைப்போல் உருவாக்கின உண்மை அவர் இன்னும் உயிருள்ளவராய் இருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இப்பகுதி தள்ளப்பட்ட தூதனாகிய பிசாசு மனுக்குலத்தைப் பாவத்திற் குள்ளாக்கியது. பாவத்தின் விளைவாகிய ஆன்மீகச்சாவு, ஆன்மீக வாழ்வைப் புதுப்பிக்க ஒரு மீட்பரை அனுப்பும் திட்டம் இவைபற்றியும் விளக்குகிறது. பெரியதோர் மக்களினத் தின் தந்தையாக ஆபிரகாம் அழைக்கப்படுதல் அவரின் தளராத விசுவாசம், அவர் மகன் ஈசாக்கு, பேரன்கள் யாக்கோபு, ஏசா இவர்கள் பற்றிய கதைகளும் இதில் உண்டு. யாக்கோபின் மைந்தர்களின் குடும்பங்களே இஸ்ரவேலரின் பன்னிரெண்டு இனத்தவர் களானார்கள். இஸ்ரவேலிலிருந்தே உலகத்தின் மீட்பர் பிறப்பார் என்பது கடவுளின் திட்டமாகும். இவரே அனைத்து மக்களுக்கும் விண்ணுலகம் செல்லும் ஏணியுமாவார்.

யாக்கோபின் பன்னிரெண்டு மக்களில் ஒருவராகிய யோசேப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல மனிதனாய் வாழ்கிறார் தீமைக்கான செயல்கள் எவ்விதம் கடவுளை நம்பினோர்க்கு நன்மையாய் மாறும் என்று இவர் வாழ்வின்மூலம் அறிகிறோம்.

குறிப்பு: ஆண்டவர், தேவன், கடவுள், கர்த்தர் இவை எல்லாம் ஒரே அர்த்தம் உள்ளவை. அரசன், ராஜா, மன்னன் இவையும் ஒரே அர்த்தம் உள்ளவைதான்.

படைப்பின் கதைகள்

1. கடவுள் உலகத்தைப் படைத்தார்

ஆதி. 1,2

'ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனுயிருந்தது . சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை' —யோவான் 1:1–3.

கடவுள் ஆதியிலே வானத்தையும் பூமியையும் படைத்தார். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகம் வெறுமையாயும், ஒழுங்கினமாயும், இருளாயும் இருந்தது. கடவுள் அதை ஒழுங்காகவும் அழகாகவும் அமைக்கச் சித்தம் கொண்டார். முதல் நாளில் கடவுள் இருளை அகற்றி வெளிச்சம் உண்டாகக்கடவது என்ருர். வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று கடவுள் கண்டார். வெளிச்சத்தையும் இருளையும் கடவுள் வெவ்வேருகப் பிரித்தார். கடவுள் வெளிச்சத்திற்குப் பகல் என்றும் இருளுக்கு இரவு என்றும் பெயரிட்டார்.

இரண்டாம் நாளில் கடவுள் வானத்தை உண்டாக்கியபின் பூமியிலுள்ள தண்ணீர்களை எல்லாம் ஒன்ருக்கி சமுத்திரம் என்றும் மீதி பாகத்தை வெட்டாந்தரை என்றும் பிரித்தார். மூன்ரும் நாளில் அது வெறுமையாயும், அமைதலாகவும் காணப்பட்டதைக் கண்டு கடவுள் புல் பூண்டுகளும் கனிதரும் மரங்களும் உண்டாகக்கடவது என்று கட்டளையிட்டார். பச்சையான இலைகளும் அழகிய வர்ண பூக்களும் புசிப்பதற்கான கனிகளும் அழகாகக் காணப்பட்டன.

நாலாம் நாளில் கடவுள் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பகலுக்கும், இரவுக்கும் வித்தியாசம் உண்டாக்கத்தக்கதாகச் சுடர்கள் உண்டாகக்கடவது. அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும், நாட்களையும், ஆண்டுகளையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்று, கடவுள் பகலை ஆள சூரியனை யும் இரவை ஆள சந்திரனையும், நட்சத்திரங்களையும் படைத்தார்.



ஐந்தாம் நாளில் ஜலத்தில் பெரிய, சிறிய மீன்களையும் மற்ற நீர் வாழும் உயிரினங்களையும், சகலவிதப் பறவைகளையும் படைத்தார். அவைகளை ஆசிர்வதித்து பூமியில் பலுகிப் பெருகும்படி கட்டளையிட்டார். பின்பு ஆறும் நாள் கடவுள் பூமியானது ஜாதி ஜாதியான காட்டு மிருகங்களையும் நாட்டு மிருகங்களையும் ஊரும் பிராணிகளையும் பிறப்பிக்கக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. படைப்புகளையெல்லாம் ஆண்டு நடத்துவதற்காகக் கடவுள் தம்முடைய சாயலாக மனிதனை ஆணும், பெண்ணுமாக உருவாக்கினார். கடவுள் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்து அது மிகவும் நன்றாயிருந்தது என்று கண்டார். இவ்விதமாக வானமும், பூமியும் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கி முடித்தபின்பு ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். கடவுள் அந்த நாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார்.

2. கடவுள் மனிதனைப் படைத்தல்

ஆதி. 2

ஆகாயத்திலும், பூமியிலும், சமுத்திரத்திலும் வாழக்கூடிய சகல மீன் வகைகளையும், பூமியிலே வாழக்கூடிய சகல நாட்டு மிருகங்களையும் காட்டு மிருகங்களையும், நடப்பன, பறப்பன, ஊர்வன ஆகிய சகலவித உயிர்ப்பிராணிகளையும் சந்திரன், சூரியன், நட்சத்திரங்களையும் உண்டாக்கியபின் மனிதனைத் தமது சாயலாக உண்டாக்கினார். பூமியின் மண்ணினாலே அவனை உண்டாக்கினார். அவனுக்குத் தமது ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். அவன் இந்தப் பூமிக்குரியவன் மாத்திரமல்ல, அவன் பரத்திற்குமுரியவன் என்பதைக் காட்டும்படியாக அவனுக்குத் தமது ஜீவனைக் கொடுத்தார்.

சகல படைப்பிற்கும் மேலானவனாக அவனைப் படைத்தார். பூமியிலே தாம் உண்டாக்கிய சகலவற்றையும் அவனிடம் கொடுத்தார். அவை யாவற்றிற்கும் அவனே பெயரிடும் பொறுப்பைக் கொடுத்தார். ஆகவே, ஆதி மனிதன் கடவுளால் படைக்கப்பட்ட படைப்புக்களை ஆண்டுகொள்ளவும், அவைகளைப் பாதுகாக்கவும், அவைகளைச் சீர்திருத்தவும் கட்டளையிட்டார்.

3. ஏதேன் தோட்டம்

ஆதி. 2

கடவுள் ஏதேன் என்னும் ஒரு அழகிய தோட்டத்தை உண்டாக்கித் தாம் உருவாக்கிய மனிதனை அதிலே வைத்தார். ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும், அதைப் பாதுகாக்கவும் வைத்தார். ஏதேன் செழிப்பான தோட்டம். அங்கிருந்து ஒரு பெரிய நதி புறப்பட்டு நான்கு கிளைநதிகளாகப் பிரிந்து



ஏதேன் தோட்டம் (ஆதி. 2)

பாய்கிறது. ஆதாம் ஏதேனில் தங்கியிருந்தான். கடவுள் அவனைச் சந்தித்து வந்தார்.

ஒரு நாள் கடவுள் தாம் படைத்த சகல உயிர்ப் பிராணிகளையும் ஆதாமிடம் கொண்டு வந்தார். அவனே அவற்றிற்குப் பெயரிட வேண்டும் என்றார். கடவுள் தனக்குக் கொடுத்திருக்கும் அறிவின் மேன்மையைக்கொண்டு அதனதன் குணக்களுக்குத் தகுந்த பெயரிட்டான். அவனிட்ட பெயரே இன்றைக்கும் அந்தந்த உயிர்ப்பிராணிகளுக்கும் வழங்கி வருகிறது. அவைகள் அவனுக்கு அடங்கியே நடந்தன. மிருகங்கள், பறவைகள் எல்லாம் ஜோடி ஜோடியாகத் துணையோடு வந்தன. ஆதாம் மாத்திரம் துணையில்லாமல் இருந்தான்.

இதனைக் கண்ணுற்ற கடவுள் 'அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்குவேன்' என்று சித்தம் கொண்டார்.

ஆதாமுக்கோ அயர்ந்த நித்திரையைக் கட்டளையிட்டார். அவனுடைய விலா எலும்புகளில் ஒன்றை எடுத்தார். அந்த இடத்தைச் சதையால் அடைத்தார். அந்த விலா எலும்பிலிருந்து ஒரு பெண்ணை உருவாக்கினார். அவளை ஆதாமிடத்திலே கொண்டுபோய் விட்டார். ஆதாம் அவளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான். இவள் என் எலும்பும் தசையுமாயிருக்கிறாள் என்று சொல்லி நான் இவளோடு இசைந்து, வாழ்வேன். இவள் எனக்கு மனைவியாயிருப்பாள் என்று சொல்லி அவளுக்கு ஏவாள் என்று பெயரிட்டான்.

4. சாத்தானின் சூழ்ச்சியும் ஆதாம் ஏவாள் வீழ்ச்சியும்

ஆதி. 3

ஆதாம் ஏவாள் இருவரும் கடவுளுடைய பிள்ளைகளாக ஏதேனில் வாழ்ந்து வருகிறார்கள். ஏதேன் தோட்டத்தில் பலவிதமான கனிகளைத் தரும் மரங்களிருந்தன. அவைகளைப் புசிப்பதினால் சரீரத்திற்குப் புதுப்பெலனும், தளராமையும், நீண்ட ஆயுளும் கிடைத்தது.

மனிதன் நன்மை செய்கிறவனாகவும், எப்போதும் கடவுளிடம் ஐக்கியம் உள்ளவனாகவும் இருக்கவேண்டும் என்று எண்ணி ஏதேன் தோட்டத்திலே ஒரு புதிய மரத்தைக் காட்டி ஆதாமே! ஏவாளே! நீங்கள் இந்த விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாது. இதிலே சாவு இருக்கிறது. நீங்கள் புசித்தால் செத்துப்போவீர்கள் என்றார்.

ஆகவே ஆதாமும், ஏவாளும் அந்த மரத்தின் பக்கம் போவதுமில்லை. அதைக் கண்கொண்டு பார்ப்பதுமில்லை. மிகவும் எச்சரிக்கையாகயிருந்தார்கள். சோதனையை மேற்கொள்ள அவனுக்கு ஞானமும் பெலனும் இருந்தது. நன்மை எது, தீமை எது என்று தெரிந்துகொள்ளும் அறிவும் இருந்தது. ஆகவே அவர்கள் மிகுந்த கவனமாகக் கடவுள் தங்களுக்குக் கொடுத்த கட்டளையை மதித்து நடந்து வந்தார்கள்.

இவர்கள் நன்றாக வாழ்வதைப் பொறுக்க முடியாத எதிரி ஒருவனிருந்தான். அவன்தான் சாத்தான். அவன் எங்கிருந்து வந்தான். அவன் ஆதியிலே பரிசுத்தமுள்ள தேவதூதனாயிருந்தவன். அவன் கடவுளின் சித்தத்திற்கு விலகிப் போனான். கீழ்ப்படியாமையினாலே கடவுளுடைய சமுகத்திலிருந்து தள்ளப்பட்டவன். அவனுக்குக் கீழிருந்த பொல்லாத ஆவிகளின் சேனையோடு கடவுள் அரசுக்கு விரோதமாய்த் தனது அரசை நிறுவப் பாடுபட்டான். அவன் கடவுளிடம மகிழ்ச்சியாக வாழும் ஆதாமையும், ஏவாளையும் கடவுளைவிட்டுப் பிரிக்க ஒரு சூழ்ச்சி செய்தான். அதற்குத் துணையாக ஒரு பாம்பின் வடிவை அமைத்துக்கொண்டான். அந்தப் பாம்பின் வாயைக்கொண்டு மனிதனோடு பேசினான்.

முதலாவது கடவுளுடைய வார்த்தைகளைக் குறித்து ஆதாம், ஏவாளின் இருதயத்தில் சந்தேகத்தை உண்டாக்கினான். கடவுள் பொறாமையுள்ளவர், நீங்கள் அந்த மரத்தின் கனியைப் புசித்தால் கடவுளைப் போலாகிவிடுவீர்கள். ஆகவே நீங்கள் அந்த மரத்தின் கனியைப் புசித்தால் சாகவே சாவீர்கள் என்று பயமுறுத்தியிருக்கிறார். நீங்கள் பயப்படவேண்டாம் தைரியமாக அந்தப் பழத்தை சாப்பிடுங்கள். நீங்கள் கடவுளைப் போலாகிவிடுவீர்கள் என்றான். சாத்தான் ஏவாளிடம் அவள் கணவன் இல்லாத நேரம் பார்த்து வருகிறான். கணவனுக்குத் துணையாக நின்று அவனோடு ஆலோசனை செய்யவேண்டியது மனைவியின் கடமை. ஆனால் இங்கே பெலவீனபாண்டமாகிய ஏவாள் பாம்பின் வார்த்தையைக் கேட்டு மயங்கிவிட்டாள். தன் கணவனுக்குத் தெரியப்படுத்தாமலே தானாய்க் கனியைப் பறித்துப் புசித்தாள்.

அவள் கடவுளுடைய வார்த்தையை மீறியதுமல்லாமல், தன்னுடைய கணவனையும்

ஏமாற்றி விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசிக்கச் செய்தாள். அந்தோ பரிதாபம்! விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்த வுடனே அவர்களிருவரின் கண்கள் திறக்கப் பட்டன. தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந் தார்கள். வெட்கப்பட்டவர்களாக மரங்களுக் குள் மறைந்துகொண்டார்கள். தங்களுடைய நிர்வாணத்தையும், நிர்ப்பாக்கிய நிலையையும் கண்டார்கள். கடவுளுக்குச் சமமாக இருக்க வேண்டியவர்கள் கீழே தள்ளப்பட்டார்கள்.

5. கடவுளின் நியாயத்தீர்ப்பு

ஆதி. 3

பாவத்தைப்பற்றிய நியாயத்தீர்ப்பு முதல் முதலாக ஏதேன் தோட்டத்திலே நடந்தது. கடவுள் அவர்களை நியாயம் விசாரித்தார். இந்த விசாரணையால் கடவுளுடைய நீடிய சாந்தமும், மனிதனுடைய துர்மனச் சாட்சியும் வெளிப்படுகிறது. ஆதாம் தனக்குக் கடவுள் கொடுத்த மனைவியின்மேல் பழிபோடுகிறன். அதாவது கடவுளையே குற்றம் சாட்டுகிறன்.

முதலாவதாக, கடவுள் பாம்பைச் சபிக் கிறர். நீ எல்லா ஜீவன்களிலும் சபிக்கப் பட்டிருப்பாய். வயிற்றினாலே நகர்ந்து மண்ணைத் தின்பாய். (உன் வித்துக்கும், பெண் ணின் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலைக் கொத்துவாய் என்றார்). ஏவாளைப் பார்த்து, நீ கர்ப்பவதியாயிருக்கும்போது வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன். வேதனையோடு பிள்ளை பெறுவாய். உன் ஆசை உன் கணவனைப்பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டுகொள்வான்.

அவர் ஆதாமை நோக்கி, நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து புசிக்கவேண் டாம் என்று நான் உனக்கு விலக்கின மரத்தின் கனியைப் புசித்தபடியினால் பூமியானது உன்னி மித்தம் சபிக்கப்பட்டிருக்கும். அதன் பலனை நீ வருத்தத்தோடு சாப்பிடுவாய். நீ மண்ணி லிருந்து எடுக்கப்பட்டாய், திரும்பவும் மண்ணுக்கே திரும்புவாய் என்று தீர்ப்புக்கூறி அவர்களைத் தோட்டத்தைவிட்டுத் துரத்தினர்.

அவர்கள் மறுபடியும் தோட்டத்திற்குள் வராதபடி ஜீவ கனிகொடுக்கும் மரத்திற்குப் போகும் வழியைக் காவல்காக்க ஏதேன் தோட்டத்திற்குக் கிழக்கே கேருபீன்களையும், சுடரொளிப்பட்டயத்தையும் வைத்தார்.

ஆதாமின் மூலமாகப் பாவமும், அதனோடே கூட பாவத்தின் சம்பளமாகிய மரணமும் வந்தது. ஆதாம் செய்த பாவம் மனுக்குலம் யாவற்றிக்கும் அனைத்துக்கும் பிறவிப் பாவ மாயிற்று.

6. காயீன், ஆபேல்

ஆதி. 4

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இரண்டு பிள்ளை கள் பிறந்தார்கள். மூத்தவன் காயீன், இளைய வன் ஆபேல். இவர்கள் ஏதேன் தோட்டத் திற்கு வெளியே பிறந்தார்கள் காயீன் என்பவன் நிலங்களைப் பயிர் செய்யும் விவசாய வேலை செய்துவந்தான். ஆபேல் ஆடுகளை வளர்க்கும் வேலை செய்துவந்தான்.

ஆதாமும், ஏவாளும் தங்கள் இரு பிள்ளை களிடம் ஏதேன் தோட்டத்தில் தாங்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்ததையும், கடவுள் தங்க ளோடு வந்து உறவாடியதையும்பற்றிச் சொன் னர்கள். தாங்கள் கடவுளின் கட்டளையை மீறிப் பாவம் செய்ததையும், ஏதேனைவிட்டுத் துரத்தப்பட்ட சம்பவங்களையும் சொன்னர்கள். ஏதேனில் கடவுள் எங்களோடிருந்தார். இப் போது கடவுள் எங்களோடு வந்து உறவாடுவது இல்லை. எங்களைப்பற்றி விசாரிப்பதில்லை. நாம் யாவரும் தனித்தவர்களாக இவ்வுலகில் வாழ் கிறோம். என்றாலும் கடவுள் எங்களை வஞ்சித்த பாம்பின் தலையை நசுக்கிப்போட ஒருவர் பிறப்பார் என்று சொல்லியிருக்கிறர் என்று சொன்னர்கள்.

ஒவ்வொரு நாளும் அதிகாலையிலும், மாலை நேரத்திலும் ஆதாம் ஏதேன் தோட்டத்திற்குப் போவான் தூரமாக நின்றுகொண்டு கடவுளின் பிரசன்னத்தைக் காண்பான். தான் செய்த தவறுக்காக மனம் வருந்தி மன்றாடு வான். திரும்பவும் வீட்டிற்கு வந்துவிடுவான்.

காயீனும், ஆபேலும் தங்கள் தந்தையின் செயலைக் கவனித்தார்கள். தந்தையின் மீறுதலினிமித்தமாக உலகில் துன்பம் வந்தது என்பதை உணர்ந்தார்கள். ஆகவே தாங்களும் கடவுளோடு ஒப்புரவாகவேண்டும் என்று நினைத்தார்கள். கடவுளுக்கு எதைக் கொடுத்து திருப்திபடுத்தலாம் என்று ஆலோசனை செய்தார்கள்.

இந்த பூமியும், இதிலுள்ள சகல உயிர்ப் பிராணிகளும், விளைபொருட்களும் அவருடையது. நாம் அவருடைய தயவால் வாழ்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட கடவுளுக்கு நாம் காணிக்கை செலுத்தவேண்டும் என்று முடிவு செய்தார்கள்.



காயீன், ஆபேல் (ஆதி. 4)

7. ஆபேலின் கொலை

ஆதி. 4

காயீன் விவசாயத்தொழில் செய்து வந்தான். நிலத்தில் விளைந்த தானியங்களை, கனிகளை கடவுளுக்கு காணிக்கையாகக் கொண்டுவந்து படைத்தான். ஆபேல் ஆடுகளை மேய்த்துவந்தான். அவற்றில் கொழுமையானவற்றைக் கொண்டுவந்து தகனபலி செலுத்தினன். காயீன் பாவ அறிக்கை செய்யாமல் தனது காணிக்கையைப் படைத்தான். ஸ்தோத்திரக் காணிக்கை செலுத்தினன். ஆனல் ஆபேல் தன் பெற்றோர், கடவுள் கட்டளையைமீறிச் செய்த பாவத்தையும், தன் மீதும் அந்தப் பாவம் தொடர்ந்திருக்கிறது என்பதை நினைத்தும் மனம்வருந்தி தனது ஆடுகளில் முதற்பேரானதும் கொழுமையானதுமான ஆட்டைப் பலியிட்டு கடவுளுக்கு தகனபலி செலுத்தினன். கடவுள்மேல் தன் நம்பிக்கையை வைத்தான். நன்றியோடு காணிக்கை செலுத்தினன்.

கடவுள் இரு சகோதரரின் எண்ணங்களையும் அறிந்தார். காயீன் எண்ணத்தையும் ஆபேலின் நன்றியறிதலான எண்ணத்தையும், ஆபேல் செலுத்திய தகனபலியையும் பார்த்தார். ஆபேல் செலுத்திய பலியை ஏற்றுக்கொண்டார். ஆனல் காயீன் செலுத்திய காணிக்கையையோ அவர் திரும்பியும் பார்க்கவில்லை.

காயீன் இதைப் பார்த்தான். கடவுள்மீது கோபம்கொண்டான். தன் சகோதரன்மீது பொறாமைகொண்டான். ஆபேல் தனக்கு இடையூருக இருக்கிறன். ஆகவே அவனைக் கொலை செய்துவிடவேண்டும் என்று திட்டமிட்டான். ஒருநாள் அவன் தன் சகோதரனுகிய ஆபேலைத் தனியே ஒரு இடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் அவனைக் கொன்று போட்டான். ஆபேலின் இரத்தம் பூமியில் சிந்தப்பட்டது. இரத்தம் மனிதனுக்கு உயிர். அந்த உயிர் கடவுளால் கொடுக்கப்பட்டது. ஆகவே ஆபேலின் இரத்தம் கடவுளிடம் அபயமிட்டது. கடவுள் காயீனைச் சபித்தார். நீ பூமியிலே நிலையற்றவனுய் அலைந்து திரிவாய் என்றார். பின்பு ஆதாமுக்கு அநேக மக்கள் பிறந்தனர்.


8. நோவாவின் பேழை

ஆதி. 7:8

ஆதிப்படைப்பின் மக்கள் அதிகப் பெல னுள்ளவர்களாக இருந்தார்கள். ஆதாமின் வம்சம் மலைகளிலும், காடுகளிலும் அலைந்து திரிந்து அதிகமதிகமாய்ப் பலுகிப் பெருகினர் கள். நிலையற்ற மக்களாகிய அவர்களிடம் கடவுளைப்பற்றிய பயம் கொஞ்சமும் இல்லை. அவர்கள் செய்து வந்த பாவங்களுக்குக் கணக்கே கிடையாது. அவர்கள் செய்த அக்கிரமம் பெருகிக்கொண்டே வந்தது.

ஆனாலும் அவர்களுக்குள்ளே நோவா என் பவன் நீதிமானாயும் உத்தமனாயும் இருந்தான். நோவா பூமியிலுள்ள மனிதர் யாவரிலும் நல்லவன். அவன் கடவுளைவிட்டுப் பிரியாத வனாயிருந்தான். கடவுள் நோவாமீது பிரியம் வைத்திருந்தார். ஆகவே கடவுள் நல்லவனான நோவாமூலம் இவ்வுலகத்தை இரட்சிக்கச் சித்தம்கொண்டார். பூமியில் மனிதர் செய்த அக்கிரமங்கள் பெருகிக்கொண்டு வந்தன. ஆகவே கடவுள் இந்தப் பூமியை அழித்துவிட்டு நோவாவின் குடும்பத்தைக் காப்பாற்றச் சித்தம்கொண்டார்.

கடவுள் நோவாவை நோக்கி மனிதரின் கொடுமையால் பூமி நிறைந்திருக்கிறது. நான் அதைப் பெருவெள்ளத்தால் அழித்துப்போடப் போகிறேன். ஆகவே நீயும் உன் வீட்டாரும்



நோவாவின் பேழை (ஆதி. 7,8)

தப்பித்துக்கொள்வதற்காக ஒரு பேழையை உண்டாக்கு. நான் சொல்லுகிற பிரகாரம் நீ அதைச் செய்யவேண்டும்.

பேழை செய்யக் கோப்பேர் மரம்தான் நல்லது. ஆகவே பேழையை கோப்பேர் மரத் தினால் செய்யவேண்டும். அதன் நீளம் 300 முழமும், அகலம் 50 முழமும், உயரம் 30 முழமுமாயிருக்கவேண்டும். மூன்று அடுக்குகள் வைத்துச் செய்யப்படவேண்டும். மேல் தட் டுக்கு 30 முழத்திற்குக் கீழே சன்னல் இருக்க வேண்டும். அதன் முதல் தட்டிலே வாசல் இருக்கவேண்டும். வாசல் வைத்த பின்பு மற்ற இரண்டு தட்டுகளையும் செய்யவேண்டும். அந்த இரண்டு தட்டுகளையும் அறைகளாகத் தடுக்கவேண்டும்.

நீ என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவன். ஆகவே நீயும், உன் மனைவி, உன் பிள்ளைகள் சேம், காம், யாபேத் மூவரையும் அந்தப் பேழைக்குள் பிரவேசிக்கச் செய்யவேண்டும். சகலவிதமான மாம்சமுள்ள உயிரினங்களிலும் (ஜீவன்களிலும்) ஆணும், பெண்ணுமாக ஒவ் வொரு வகையிலும் பேழைக்குள் சேர்க்கப்பட வேண்டும். சகலவிதமான பறவைகள், மிருகங் கள், ஊரும் பிராணிகள் வகைக்கு ஒரு ஜோடி சேர்த்துக்கொள். அவைகளுக்கு வேண்டிய ஆகார வகைகளையும் சேர்த்துக்கொள் என்றார்.

கடவுள் சொல்லியபடி நோவா செய்து முடித்தான். நோவாவுக்கு அறுநூறு வய தானபோது மழை பெய்யத் தொடங்கியது. நாற்பது நாள் இரவும் பகலும் பெரும் மழை பெய்தது. தண்ணீர் பெருக்கெடுத்து நிரம்பி யது. பேழையானது தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தது. உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன. மலைகளுக்கு மேலாகப் பதினைந்து முழ உயரத்திற்குத் தண்ணீர் நின்றது. தண்ணீர் பூமியின்மேல் 150 நாட்கள் ஓடிக் கொண்டிருந்தது. நோவாவுக்கு அறுநூற்று ஒன்றும் வருஷத்திலே முதல் மாதம் முதல் தேதியிலே பேழை அரராத் மலையின் உச்சியிலே தங்கி நின்றது. நோவா பேழையின் மேல் தட்டை எடுத்துப் பார்த்தான். பூமியில் தண்ணீர் வற்றியிருந்தது.

நாற்பது நாள் சென்றபின் நோவா பேழை யின் சன்னலைத் திறந்து ஒரு காகத்தை வெளியேவிட்டான். அந்தக் காகம் தண்ணீர் வற்றிப்போகிறவரைக்கும் போவதும் வருவது மாயிருந்தது. பின்பு நோவா பூமியில் தண்ணீர் குறைந்துபோய்விட்டதா என்பதை அறியும் படி அதிகாலையிலே ஒரு புறாவை வெளியே விட்டான். அந்தப் புறா சாயங்காலத்திலே

ஒரு ஒலிவ இலையை வாயில் கௌவிக்கொண்டு பேழைக்குள் வந்தது.

அப்போது நோவா பூமியின்மீது தண்ணீர் குறைந்துபோய்விட்டது என்று அறிந்துகொண்டான்.

அதன் பின்பு கடவுள் நோவாவை நோக்கி 'நீயும், உன் குமாரரும், மனைவியும் பேழையை விட்டு இறங்குங்கள். உன்னிடத்திலுள்ள உயிர் பிராணிகளையெல்லாம் பூமியிலே இறக்கிவிட்டு விடு' என்றார்.


நோவா தன்னையும், தன் குடும்பத்தையும், பூமியின் சகல ஜீவராசிகளையும் பெரும் வெள்ளத்திலிருந்து காப்பாற்றினார் என்று சொல்லி நன்றியுள்ளவனாக கடவுளுக்கு ஒரு பலிபீடம் கட்டி அதிலே கடவுளுக்குத் தகன பலி செலுத்தினான். கடவுள் அந்தப் பலியை ஏற்றுக்கொண்டு நோவாவையும், அவன் மனைவி, பிள்ளைகள் யாவரையும், சகல உயிர்ப் பிராணிகளையும் ஆசீர்வதித்தார். நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள் என்றார்.

9. வானவில்லின் உடன்படிக்கை

ஆதி. 9

நோவாவின் நன்றியறிதலான தகன பலியைக் கடவுள் ஏற்றுக்கொண்டார். அது அவருக்குப் பிரியமாயிருந்தது. ஆனாலும் 'நாம் இனி பூமியை மனிதர் நிமித்தம் அழிக்கமாட்டோம். ஏனெனில் மனிதனுடைய இருதயமானது அவன் சிறு வயது தொடங்கி பொல்லாததாயிருக்கிறது. இனி திரும்ப நாம் இப்போது செய்ததுபோல எல்லா மனிதரையும் சங்கரிக்கமாட்டோம். பூமியானது இருக்கும் நாள் மட்டும் விதைப்பும், அறுப்பும், குளிரும், அனலும், கோடைக் காலமும், மாரி காலமும், பகலும் இரவும் ஒய்ந்துபோகாதிருக்கும்' என்றார்.

நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்தார். நீங்கள் இந்த பூமியில் பலுகிப் பெருகுவீர்களாக. நான் உங்களை இனி மழையினால் அழிக்கமாட்டேன் என்றார். நான் என் வானவில்லை மேகத்தில் வைத்தேன். அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். நீங்கள் பயப்படவேண்டாம். அந்த வில் மேகத்தில் தோன்றும்போது, இது கடவுளுக்கும் மனிதனுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை, என்பதை அறிந்துகொள்ளுங்கள் என்றார். இன்றைக்கும் மழை பெய்யும் காலங்களில் வானவில்லை நாம் மேகத்தில் காணலாம். கடவுள் மனிதனை மழையால் அழிக்கமாட்டேன் என்பதற்குக் கொடுக்கப்பட்ட அடையாளம் வானவில்.



வானவில்லின் உடன்படிக்கை (ஆதி. 9)

10. பாபேல் கோபுரம்

ஆதி. 11

நோவாவின் சந்ததியார் சிநெயார் நாட்டில் வசித்தார்கள். தாங்கள் கடவுளால் காப்பாற்றப்பட்ட சந்ததி என்பதை மறந்து போனார்கள். கடவுளைப்பற்றிய பயம் அவர்களிடத்தில் கொஞ்சமும் இல்லை. தாங்கள் யாவரும் ஒரே (சாதியாராக) இனமாக இருக்கிறோம் என்று பெருமை பாராட்டினர். தங்களுடைய சுயபெலத்தின்மேல் நம்பிக்கை வைத்தனர். சர்வவல்லமையுள்ள கடவுளுக்கு எதிர்த்து நின்றார்கள். கடவுள்மீது நம்பிக்கையில்லாதிருந்தனர். நாம் பூமியிலே ஒரே மக்கள் கூட்டம். நாம் எங்கும் சிதறிப் போய் வாழக்கூடாது. நாம் யாவரும் ஒரே இடத்திலே தான் வாழவேண்டும். ஆகவே நமக்காக ஒரு அடுக்கு மாளிகை கட்டவேண்டும் என்று சொல்லி பாபேல் என்னும் ஒரு பெரிய கோபுரத்தைக் கட்ட ஆரம்பித்தார்கள். 2,000 அடி சுற்றளவுள்ள வானத்தை எட்டிப் பிடிக்கும் உயரமுள்ள பெரிய கோபுரத்தைக் கட்டத் துவங்கினார்கள்.



பாபேல் கோபுரம் (ஆதி. 11)

கடவுள் அவர்களுடைய பெருமையான எண்ணத்தையும், அவர்களிடம் காணப்பட்ட அகந்தையையும் அழிக்கச் சித்தம்கொண்டார். கட்டட வேலை நடந்துகொண்டிருந்தது. கடவுள் அங்கே இறங்கி வந்தார். அவர்கள் பேசின மொழியை ஒருவரோடொருவர், விளங்கிக்கொள்ள முடியாதபடி அவர்களைத் தாறுமாறாக்கினார். கோபுரம் கட்ட முடியாமல் நின்றுபோனது. நேபுகாத் நேச்சார் அரசன் பின்காலத்தில் பாபேல் கோபுரத்தின் பழைய அஸ்திவாரத்தின்மேல் பேல் என்னும் தேவனுக்குக் கோபுரம் கட்டினான் என்ற வரலாறும் உண்டு.

11. ஆபிரகாமின் அழைப்பு

ஆதி. 12

மூன்றாம் காலமாகிய ஆதிமனிதர் பாபேல் கோபுரம் கட்டின காலத்தில் கடவுள் மக்களைப் பல இனங்களாகப் (சாதிகளாகப்) பிரித்துவிட்டார். அப்படிப் பிரிந்து போன சந்ததியிலிருந்து ஒரு இனத்தைத் தமக்குச் சொந்த இனமாகத் தெரிந்துகொண்டு, அவர்கள்மூலம் மனுக்குலத்திற்கு மீட்பை வெளிப்படுத்த விருப்பங்கொண்டார். கடவுளை விட்டுப் பிரிந்துபோன மக்களைத் தள்ளிவிடாமல், ஆபிரகாமுடைய வித்தினாலே பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்றும், அந்தச் சந்ததியிலே மேசியா பிறக்க வேண்டும் என்றும் சித்தம்கொண்டார்.

அதற்குத் தகுதியானவர் ஆபிரகாம் என்று அவனைத் தெரிந்தெடுத்தார். ஆபிரகாமுடைய தகப்பனார் பெயர் தேராக். ஆபிரகாமுக்கு ஆரான், நாகோர் என்ற இரண்டு சகோதரர் இருந்தார்கள். ஆபிரகாமும், அவன் சகோதரரும் கல்தேயா நாட்டில் ஊர் என்ற பட்டணத்திலிருந்து, மெசெபொத்தேமியாவிலுள்ள காரான் என்ற ஊருக்குத் தங்கள் மந்தைகளுக்கு மேய்ச்சல் தேடி வந்தார்கள். ஆபிரகாமுக்கு அப்போது வயது எழுபத்தைந்து. அந்த வயதில் கடவுள் ஆபிரகாமை அழைத்தார்.

ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தையை நம்பிக் கீழ்ப்படிந்து தான் ஒருபோதும் பாத்திராத கடவுள் காண்பித்த நாட்டிற்குப் போனான். சீகேம் என்ற ஊருக்குப் பக்கமுள்ள மோரே என்ற தோப்பிலே கடவுள் ஆபிரகாமுக்குத் தம்மை வெளிப்படுத்தினார்.

12. கடவுள் ஆபிரகாமை ஆசீர்வதித்தார்

ஆதி. 12

ஆபிரகாமுக்கு கடவுள் தரிசனம் கொடுத்து அவனை ஆசீர்வதித்தார். ஆபிரகாமே, நான் உன்னை அழைத்து நான் காண்பிக்கிற தேசத்திற்குப் போ என்று சொன்ன உடனே நீ ஒன்றும் நினைக்காமல் எல்லாவற்றையும்விட்டு எனக்குக் கீழ்ப்படிந்து புறப்பட்டு வந்தாய். ஆகவே, நான் உன்னைப் பெரிய இனமாக்குவேன் (சாதியாக்குவேன்) உன்னை ஆசீர்வதிப்பேன். உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை யார் சபிக்கிறார்களோ, அவர்களை நான் சபிப்பேன். உன் மூலமாகப் பூமியிலுள்ள வம்சங்கள் யாவற்றையும் ஆசீர்வதிப்பேன் என்றார். கடவுள் எந்த இடத்திலே தரிசனமானாரோ அந்த இடத்திலேயே கடவுளுக்கு ஒரு பலி பீடத்தைக் கட்டினான். கடவுள் ஆபிரகாமோடுகூட இருந்து அவனை ஆசீர்வதித்தார்.

ஒரு தடவை அவனிருந்த நாட்டில் பஞ்சம் வந்தது. ஆகவே ஆபிரகாம் கடவுளிடம் கேளாமல் தானாகப் புறப்பட்டு எகிப்துக்குப் பஞ்சம் பிழைக்க வந்தான். அந்த இடத்திலே கடவுளுக்குப் பலிபீடம் கட்ட மறந்துவிட்டான்.

அந்தக் காலத்தில் எகிப்தின் அரசன் பொல்லாதவனாக இருந்தான். அந்நியரின் மனைவிகள்மீது விருப்பங்கொள்ளுவான். ஆபிரகாமின் மனைவி சாராய் மிகுந்த அழகானவள். ஆகவே ஆபிரகாம் எகிப்தின் அரசனுக்குப் பயந்து சாராய் தன்னுடைய சகோதரிதான் என்று பொய் சொன்னான்.

ஆனாலும் எகிப்தின் அரசன் ஆபிரகாமின் மனைவியைத் தன்னுடைய அரண்மனைக்கு வரச் சொன்னான் சாராயினிமித்தம் எகிப்து அரசன் வீட்டாரை மகா வாதைகளால் வாதித்தார். எகிப்து அரசன் பயந்து அவனுக்கு ஏராளமான பொருட்களைக் கொடுத்து மறுபடியும் ஆபிரகாமைக் கானானுக்கு அனுப்பிவிட்டான்.

13. ஆபிரகாமும், லோத்தும்

ஆதி. 13

ஆபிரகாமின் சகோதரன், ஆரானின் மகன் லோத்து என்பவன் ஆபிரகாமோடு சேர்ந்து கானானுக்கு வந்தான். லோத்துவும் ஆபிரகாமும் மிகுந்த அன்பாக ஐக்கியமாக வாழ்ந்தார்கள். நாட்கள் செல்லச் செல்ல இவ்விருவரின் மந்தை மேய்ப்பவருக்குள் சண்டை நடந்து வந்தது.

ஆபிரகாம் எகிப்தைவிட்டுத் திரும்பி வந்த பின் தன் சகோதரன் மகனாகிய லோத்துவை அழைத்துக்கொண்டு யோர்தான் சம வெளியிலே நின்றுகொண்டு தம்பி நீ இந்தப் பரந்த சமவெளியை ஏறிட்டுப் பார். நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன். நீயே உனக்காக இடத்தைத் தெரிந்துகொள் என்றான்.

ஆசையில்லாத ஆபிரகாம் உலகப் பொருள் வீண் என்று கண்டான். விட்டுக்கொடுத்தான். பெருந்தன்மையாகத் தன் தம்பி லோத்துவுக்கும் யோர்தான் சமவெளிப் பிரதேசத்தைக் கொடுத்துவிட்டான். ஆனால் ஆபிராமை அழைத்த கடவுள் 'நீ பார்க்கிற இடமெல்லாம் உனக்குத் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும். நீ இந்தப் பூமியெங்கும் நடந்துதிரி' என்றார்.

ஆபிராம் எப்ரோனிலிருக்கும் மம்ரேயின் சமனான பூமிக்கு வந்து குடியிருந்தான். அவன் எல்லா மக்களுக்கும் பாதுகாப்பாகவும் ஆசீர்வாதமாகவும் இருந்தான்.


14. சோதோம், கொமோரா

ஆதி. 18

சோதோம், கொமோரா, அத்மா செபோயீம், சோவார் அல்லது பேலா ஆகிய இவ்வைந்து பட்டணங்களுக்கும் பொதுப் பெயர் சம பூமிப் பட்டணங்கள் ஆகும். இவைகள் யோர்தான் பள்ளத்தாக்கில் இருக்கின்றன.

அக் காலத்தில் இந்தப் பட்டணங்களிலிருந்த மக்கள் துன்மார்க்கமாய் வாழ்ந்தார்கள். அவர்கள் செய்த அக்கிரமங்களுக்கு அளவில்லை.

லோத்து இந்த யோர்தான் சமவெளியைத் தான் தெரிந்துகொண்டான். இந்த சமவெளிப் பள்ளத்தாக்கின் பட்டணங்களில்தான் அவன் குடியிருந்தான். அங்குள்ள மனிதர்கள் நல்லொழுக்கமில்லாதவர்கள். லோத்து அவர்களுக்குப் பயந்து வாழ்ந்து வந்தான்.



லோத்தின் மனைவி உப்புத் தூண் ஆதல் (ஆதி. 18)
சோதோம் கொமோரா

சோதோம், கொமோரா பட்டணங்களிலுள்ள மக்களின் பாவம் கடவுளுக்குப் பொறுக்கவில்லை. ஆகவே அந்தப் பட்டணங்களை அழித்துப்போடத் தீர்மானம் செய்தார். அங்கு ஆபிரகாமுடைய சகோதரன் மகன் லோத்துவின் குடும்பம் வசித்து வந்தது. ஆகவே கடவுள் ஆபிரகாமிடம் நான் சோதோம், கொமோராப் பட்டணங்களை அழிக்கப்போகிறேன் என்றார்.

ஆபிராம் அந்தப் பட்டணங்களை அழிக்காதபடி கடவுளிடம் கெஞ்சி மன்றாடினான். பத்து நீதிமான்களாவது அப்பட்டணங்களில் காணப்பட்டால் அழிக்கமாட்டேன் என்று கடவுள் உறுதி கூறினார். கடவுளின் கோபம் அதிகமானது என்று கண்டு அவர் மௌனமாக இருந்தார். அதற்குள் இரண்டு தூதர் சோதோமுக்குப் போனார்கள். அங்கு லோத்துவின் வீட்டில் இரவு தங்கினார்கள். சோதோம் மக்கள் பொல்லாதவர்கள். அவர்களைக் கடவுள் அழிக்கப்போகிறார். நீயும் உன் வீட்டாரும் தப்பித்துப் போய்விடுங்கள் என்றார்கள். அவர்கள் சிறிது தாமதம் பண்ணினார்கள். அதற்குள் பட்டணத்தில் தீப்பற்றி எரிந்தது. தூதர்கள் அவர்களுடைய கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து காப்பாற்றினார்கள். ஆனால், லோத்தின் மனைவி சோதோமைத் திரும்பிப் பார்த்ததால் உப்புத்தூண் ஆனாள். இப்போது அந்த ஐந்து பட்டணங்கள் இருந்த இடம் சவக்கடலாக இருக்கிறது. இப்போதும் சோதோம், கொமோரா மனிதரின் பாவச் செயல்களுக்கு எச்சரிப்பாகச் சொல்லப்படுகிறது.

15. 'ஈசாக்கு' பிறந்தான்

ஆதி. 21


ஆபிரகாமுக்கு வயது நூறு. சாராளுக்கு வயது தொண்ணூறு. இவ்வளவு ஆண்டுகாலம் அவர்களுக்குக் குழந்தையே இல்லை. ஒரு நாள் ஆபிரகாம் நல்ல வெய்யிலில் கூடார வாசலிலே உட்கார்ந்திருந்தான். அப்போது மூன்று ஆண்கள் கூடாரத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். ஆபிரகாம் ஓடோடிப் போய் அவர்களை வரவேற்று அவர்கள் களைப்பைப் போக்க உபசரணைகள் செய்தான். அவர்களுக்குக் கறியும், சோறும் கொடுத்தான். அவர்கள் நன்றாகச் சாப்பிட்டார்கள்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே உன் மனைவி சாராள் எங்கே என்று கேட்டார்கள். அவள் கூடாரத்திலிருக்கிறாள் என்று ஆபிரகாம் சொன்னான். ஆனால் சாராள் கூடாரத்தில் மறைவாக நின்று இவர்கள் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அப்போது அந்த மூன்று பேரும் அடுத்த வருஷம் சாராள் ஒரு மகனைப் பெற்றெடுப்பாள் என்றார்கள்.

சாராளுக்கு வியப்பு ஒரு பக்கம், சிரிப்பு ஒரு பக்கம். எனக்கோ தொண்ணூறு வயதாகிவிட்டது. என் ஆண்டவனுக்கோ நூறு வயதாகிவிட்டது. இந்த வயதில் எங்களுக்குக் குழந்தை பிறக்குமோ என்று வியப்புற்றாள்.

கடவுளால் ஆகாத காரியம் உண்டோ. அடுத்த ஆண்டு இதே காலத்தில் நான் உன்னிடம் திரும்ப வருவேன். அப்பொழுது

சாராளுக்கு ஒரு மகன் பிறந்திருப்பான் என்றார். கடவுள் கட்டளையிட்டபடியே சாராள் ஒரு ஆண் மகனைப் பெற்றாள். அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டார்கள். ஆபிரகாமும், சாராளும் மகிழ்ச்சிப் பெருக்கினால் ஈசாக்கு பிறந்ததற்காகப் பெரிய விருந்து பண்ணினார்கள். அவர்கள் இருவரும் கடவுளுக்கு நன்றி செலுத்தினார்கள்.



ஈசாக்கு பிறத்தல். கொடுத்தவரே திரும்பக் கேட்டார் (ஆதி. 21:22)

16. கொடுத்தவரே திரும்பக் கேட்டார்

ஆதி. 22

ஆபிரகாமும், சாராளும் தங்கள் ஒரே மகனைப் பாலூட்டி, சீராட்டி வளர்த்து வந்தார்கள். தங்கள் பெயர் சொல்லும் பிள்ளையல்லவா? அவர்களின் வாரிசு அவன்தானே! ஆகவே மிகுந்த செல்லமாக ஈசாக்கை வளர்த்து வந்தார்கள். வீட்டிலே ஒரே மகிழ்ச்சி சிரிப்பு, சந்தோஷம்.

ஒரு நாள் கடவுள் ஆபிரகாமைக் கூப்பிட்டார். அப்பொழுது அவர் ஆபிரகாமிடம் உன் ஒரே மகனை ஈசாக்கை மோரியா மலைக்குக் கூட்டிப் போய் அங்கே அவனை எனக்காகத் தகன பலியிடு என்றார். இதைக் கேட்ட ஆபிரகாம் கவலைப்படவில்லை. அவரே இந்தப் பிள்ளையைக் கொடுத்தார். இப்போது அவரே தான் கொடுத்த பிள்ளையைத் திரும்பவும் கேட்கிறார்.

கடவுள் வாக்கு மாறாதவர். ஈசாக்கு உயிரோடிருந்தால்தானே அவருடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்ற விசுவாசத்துடன் ஆபிரகாம் ஈசாக்கையும், விறகுகளையும் கத்தியையும் எடுத்துக்கொண்டு மோரியா மலைக்குப் பிரயாணமானான். சாராளிடமோ, ஈசாக்கிடமோ விபரம் சொல்லவில்லை. மோரியா மலையிலே கடவுளுக்குப் பலி செலுத்தப் போகிறேன் என்று மாத்திரம் சொன்னான்.

மோரியா மலையடிவாரத்திற்கு வரும்போது ஈசாககு தன் தந்தையிடம் அப்பா, அப்பா, விறகு இருக்கிறது, கத்தியிருக்கிறது ஆனல் பலிக்கான ஆடு எங்கே என்று கேட்கிறான். அதைக் கடவுள் பார்த்துக்கொள்வார். நீ கவலைப்படாதே என்றான்.

17. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை

ஆதி. 22

ஈசாக்கு தன் தந்தை ஆபிரகாம் சொன்னபடியே பலிக்கான ஆட்டைக் கடவுள் பார்த்துக்கொள்வார் என்ற விசுவாசத்தில் நடந்து கொண்டிருந்தான். மோரியா மலையின் உச்சிக்கு வந்து விட்டார்கள். தந்தை கற்களை எடுத்து அடுக்கி பலிபீடம் அமைப்பதற்கு ஈசாக்கு உதவி செய்தான். தந்தையோடு

சேர்ந்து கட்டைகளையும் ஒழுங்காக அடுக்கினான். ஈசாக்கு தன் தந்தைக்கு மரணபரியந்தம் கீழ்ப்படிந்து நடந்தான்.

ஆபிரகாம் ஈசாக்கை பலிபீடத்தில் கட்டைகள் மேல் படுக்கச் செய்தார். ஈசாக்கு எதிர்த்துப் பேசாமல் கட்டைகளின் மீது படுத்துக் கொண்டான். ஆபிரகாம் கடவுளை நோக்கி விண்ணப்பம் செய்தான். கத்தியை எடுத்து ஈசாக்கை வெட்டிப் பலியிட கையை ஓங்கினான்.

அப்போது வானத்திலிருந்து தூதனைவன் ஆபிரகாமே பிள்ளையை வெட்டாதே. உன்னுடைய ஒரே மகனை கடவுளுக்குப் பலியிட நீ தயங்கவில்லை. உன்னுடைய விசுவாசம் பெரிது. அதோ அந்தப் புதரிலே ஒரு ஆடு கொம்பு சிக்குண்டு கிடக்கிறது. அதைப் பிடித்துக்கொண்டு வந்து பலியிடு என்றான். ஆபிரகாம் அவ்விதமே அந்த ஆட்டைக் கொண்டு வந்து கடவுளுக்குப் பலி செலுத்தினான்.

ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டிப் பிடித்து முத்தம் செய்து நன்றிப்பெருக்கால் கடவுளைத் தோத்தரித்தான்.

இச்சம்பவம் கடவுளின் ஒரே மைந்தன் மீட்பர் உலகத்தின் பாவத்திற்காகத் தமது வாழ்வை பலியாக்குவதைக் குறிப்பிடுகிறது.

18. ஆகாரின் கதை

ஆதி. *16,21*

கடவுள் ஆபிரகாமுக்கு ஒரு மகனைக் கொடுப்பேன் என்று வாக்குறுதி அளித்தபின்னும் அநேக ஆண்டுகள் சாராளும் ஆபிரகாமும் பிள்ளையில்லாமல் இருந்தனர். நாட்கள் செல்லச் செல்ல சாராள் மனந்தளர்ந்து போனாள், ஆபிரகாமோ கடவுளின் மேல் மிகவும் நம்பிக்கையாயிருந்தார். அக்காலத்தில் வழக்கப்படி தங்களுடைய அடிமைப் பெண்ணாகிய ஆகார் என்பவளை ஆபிரகாமுக்கு கட்டாயமாக மணம் செய்வித்தார்.

ஆகாருக்குப் பிள்ளைபேறு கிடைக்கும்போது அது இவர்களுடைய பிள்ளையாகக் கருதப்படும்.

ஆகார் கர்ப்பவதியானபோது அவளுக்குத் தற்பெருமை அதிகமாகிவிட்டது. இதைச் சாராளால் தாங்க முடியவில்லை. தன் கணவரிடம் முறையிட்டாள். ஆபிரகாமோ உன் இஷ்டப்படி செய் என்று சொல்லிவிட்டார். அதன் பின்பு சாராள் ஆகாரை அதிகக் கொடுமைப் படுத்த ஆரம்பித்தாள். கொடுமை தாங்காமல் ஆகார் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள். ஒரு ஊற்றின் அருகே உட்கார்ந்திருந்தபோது ஆண்டவர் அவளிடம் பேசினார். நீ திரும்பவும் உன் எஜமானியிடம் செல் என்றும் உனக்கு ஒரு மகன் பிறப்பான் அவனுக்கு இஸ்மவேல் என்று பெயரிடு என்றும் சொன்னார். நான் உன்னை காத்துக்கொள்வேன் என்று வாக்குறுதி அளித்தார்.

அடிமைப் பெண்ணாகிய ஆகார் ஆண்டவரே நம்மிடம் பேசிவிட்டாரே என்று மகிழ்ந்து அவர் சொற்படி தன்னை எஜமானியாகிய சாராளிடம் திரும்பச் சென்றாள். சிறிது காலத்தில் அவளுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு இஸ்மவேல் என்று பெயரிட்டாள்.

கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்கு ஒரு ஆண் குழந்தை கொடுத்தார். அதற்கு ஆபிரகாம் ஈசாக்கு என்று பெயரிட்டான். ஈசாக்கும் இஸ்மவேலும் கூடி விளையாடும் பொழுது இஸ்மவேல் ஈசாக்கைக் கேலி செய்வதை சாராள் கண்டு கோபமடைந்து ஆபிரகாமிடம் சென்று இந்த அடிமைப் பெண்ணையும் மகனையும் வீட்டை விட்டு துரத்திவிடும்படி ஏவினாள். ஆபிரகாம் இதைக் கேட்டவுடன் அதிக துக்கமடைந்தான். ஈசாக்கைப்போலவே இஸ்மவேலும் என் மகன்தானே! அவனை எப்படி விலக்குவேன் என்று மலைத்தார். ஆனால் கடவுளோ சாராள் சொல்லுகிறபடியே செய். இஸ்மவேலை நான் பார்த்துக்கொள்வேன் என்று வாக்குக் கொடுத்தார்.

ஆபிரகாம் அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் கொடுத்து ஆகாரையும் பிள்ளையையும் அனுப்பிவிட்டான். அவள் புறப்பட்டுப் போய் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள். தண்ணீர் செலவழிந்து போயிற்று, பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேன் என்று சத்தமிட்டு அழுதாள். தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார். தேவதூதன் வானத்திலிருந்து ஆகாரை கூப்பிட்டு பயப்படாதே பிள்ளை இருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார். நீ எழுந்து பிள்ளையை உன் கையினாலே பிடித்துக்கொண்டு போ, அவனைப் பெரிய ஜாதியாக்குவேன் என்றார்.

தேவன் அவளுடைய கண்களைத் திறக்கவே ஒரு தண்ணீர் ஊற்றைக் கண்டு, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள். தேவன் பிள்ளையுடனே இருந்தார். அவன் வளர்ந்து வனாந்தரத்திலே குடியிருந்து விவாகம் பண்ணிப் பெரிய ஜாதியானான். இன்றைய இஸ்லாமிய சகோதரர்கள் இந்த இஸ்மவேலின் வம்சத்தார் என்பது வரலாறு.

19. ஈசாக்குக்கு பெண் தேடுதல்

ஆதி. 24

ஈசாக்குக்கு முப்பத்து ஏழாவது வயதாயிருக்கையில் அவனுடைய தாயார் சாராள் மரித்துப்போனாள். அவளை மக்பேலா என்ற கெபியிலே அடக்கம் பண்ணினார்கள்.

தாயை இழந்த மகன் ஈசாக்குக்காக ஆபிரகாம் கவலைப்பட்டான். அவனுக்கு ஒரு பெண்ணைத் தேட ஆரம்பித்தான். அந்தச் சமயம் எலியேசர் ஆபிரகாம் வீட்டு விசாரணைக் காரனாக இருந்தான். இவன் நற்பண்புடையவன். ஆபிரகாமுக்கு நம்பிக்கையான ஊழியக்காரன். எஜமான்மீது அதிகமான மதிப்புக் கொண்டவன். நன்றாக ஜெபிக்கும் ஊழியன். தன்னுடைய நலனைக் கருதாதவன்.

ஆபிரகாம் எலியேசரிடம் என்னுடைய மகன் ஈசாக்கு மணம் முடிக்க வேண்டும். நான் குடியிருக்கிற இந்தக் கானானியரிடம் என் மகனுக்குப் பெண் எடுக்க விரும்பவில்லை. நீ என் இனத்தாரிடம் போய் அங்கே அவனுக்கு ஒரு பெண்ணைத் தேட வேண்டும். அங்கேயே பெண் கிடைத்துவிட்டால் அவளை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றான்.

எலியேசர் பத்து ஒட்டகங்களில் விலையுயர்ந்த பொருட்களை எடுத்துக்கொண்டு மெசப்பத்தோமியாவிலுள்ள நாகோர் என்னும் ஊருக்குப்போனான். அங்கே ஊருக்கு வெளியே ஒரு கிணறறண்டையிலே நின்றுகொண்டு ஜெபிக்கிறான். கடவுளே நான் இந்தக் கிணற்றண்டையிலே நிற்கின்றேன். இந்தக் கிணற்றிற்குத் தண்ணீர் மொள்ள எத்தனையோ பெண்கள் வருவார்கள்.

ஆனால் எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடு என்று நான் கேட்கும்போது நான் உமக்கும் தண்ணீர் தருவேன், உமது ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொண்டு வார்ப்பேன் என்று எந்தப் பெண் சொல்லுகிறாளோ அவளே என் எஜமானாகிய ஆபிரகாமின் மகன் ஈசாக்குக்கு உம்மால் நியமிக்கப்பட்ட பெண் என்று அறிந்துகொள்வேன் என்று ஜெபித்தான்.

எலியேசர் ஜெபம் செய்து முடிக்கும் முன்னமேயே ஒரு பெண் குடத்துடன் தண்ணீர் எடுக்க வந்தாள். அவள் பெயர் ரெபேக்காள். இவள் தகப்பன் பெத்துவேல். இந்த பெத்துவேல் ஆபிரகாமின் சகோதரன் நாகோருக்கும் மில்காளுக்கும் பிறந்தவன். ரெபேக்காள் நல்ல அழகியாக இருந்தாள். அவள் கிணற்றிலே தண்ணீர் மொண்டு கொண்டு வெளியே வரும் போது, எலியேசர் அம்மா எனக்குக் கொஞ்சம் தண்ணீர் குடிக்கக் கொடு என்றான். ரெபேக்காள் மலர்ந்த முகத்துடன் ஐயா நீரும் குடியும், உமது ஒட்டகங்களுக்கும் நான் தண்ணீர் கொண்டு ஊற்றுவேன் என்றாள்.

எலியேசர் ஆச்சரியப்பட்டான். என்னுடைய ஜெபத்தைக் கடவுள் கேட்டார் என்று அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான். கடவுள் என் எஜமானாகிய ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்தவர். ஆகவே அவர் கிருபை என் எஜமானை விட்டு மாறவில்லை என்று நம்பினான்.

ரெபேக்காளுக்கு ஏராளமான வளையல்களையும், காதணிகளையும், கால்தண்டைகளையும், கழுத்துக்கு ஆபரணங்களையும் கொடுத்தான். நீ யாருடைய மகள் என்று விசாரித்தான். இன்று நான் உங்கள் வீட்டில் தங்கலாமா என்று கேட்டான். அதற்கு ரெபேக்காள் 'ஐயா, வாருங்கள், எங்கள் வீட்டில் ஏராளமான இடமிருக்கிறது. நீங்களும் தங்கலாம், உங்கள் ஒட்டகங்களும் தங்கலாம். ஒட்டகங்களுக்கு வேண்டிய தீவனமும் எங்களிடமிருக்கிறது' என்று சொன்னாள்.

எலியேசர் கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டு ரெபேக்காள் வீட்டிற்குப் போனான். ரெபேக்காள் முன்னாக ஓடி தன் குடும்பத்தாரிடம் எலியேசருக்கும் தனக்கும் நடந்த சம்பாஷணைகளை விவரித்துச் சொன்னாள். பெத்துவேலும் அவனுடைய பிள்ளைகளும் எலியேசரை எதிர்கொண்டு அழைத்து வரவேற்றார்கள். எலியேசர் அன்று இரவு அவர்களுடன் தங்கினான்.

20. வியப்புக்குரிய விவாகப்பேச்சு

ஆதி. 24

பெத்துவேலின் வீட்டார் எலியேசரை அதிகமாக உபசரித்து மரியாதை செய்தார்கள். எலியேசர் எல்லா மரியாதைகளையும் ஏற்றுக் கொண்டாலும் தான் வந்த காரியத்தைப் பற்றிப் பேசாமல் சாப்பிடமாட்டேன் என்றான். அவர்கள் சொல்லும் என்றார்கள்.

அதற்கு எலியேசர் என் எஜமான் ஆபிரகாம். நான் அவருடைய வேலைக்காரன். அவர் பெரிய சீமான். ஏராளமான ஆடுமாடுகள், ஒட்டகங்

கள், கழுதைகள் ஏராளமான வெள்ளிப்
பொருள்கள், தங்கப் பொருள்கள், ஏராள
மான வேலைக்காரி வேலைக்காரன்கள் இருக்கிறார்
கள். கடவுள் என் எஜமானை ஏராளமாக ஆசீர்
வதித்திருக்கிறார். அவருக்கு ஒரு குறைவும்
இல்லை.

அவர் உங்கள் ஊரைச் சேர்ந்தவர். உங்கள்
சொந்தக்காரர். அவர் இப்போது கானானில்
குடியிருக்கிறார். அவருக்கு ஒரு மகன் இருக்
கிறான். அவன் பெயர் ஈசாக்கு. நல்ல அழ
கானவன். அவனுக்குக் கானானியரிடம் பெண்
கொள்ள விரும்பவில்லை. ஆகவே அவர் என்னை
உங்களிடம் அனுப்பி என் இனத்தில், என்
ஜனத்தில் 'என் மகனுக்கு ஒரு பெண் பார்த்து
வா' என்று என்னை அனுப்பினார். நானும் அவ்
விதம் செய்ய வாக்குக் கொடுத்து வந்தேன்.

ஒன்றுமறியாதவனாய் ஊருக்கு வெளியே
யுள்ள கிணற்றண்டையிலே நின்றுகொண்டு
கடவுளே இந்தக் கிணற்றிற்குத் தண்ணீர்
மொள்ள வருகிற பெண்களிடம் நான் தண்ணீர்
கேட்கும்போது, யார் எனக்கும் தண்ணீர்
கொடுத்து என் ஒட்டகங்களுக்கும் தண்ணீர்
மொண்டு ஊற்றுவேன் என்று சொல்லு
கிறாளோ, அவளே என் எஜமான் மகன் ஈசாக்
குக்குக் கடவுள் நியமித்த பெண் என்று அறி
வேன் என்று ஜெபித்து முடிப்பதற்குள், உங்கள்
சகோதரி ரெபேக்காள் வந்தாள். நான் கடவு
ளிடம் கேட்டபடி எனக்கும், என் ஒட்டகங்
களுக்கும் தண்ணீர் கொடுத்தாள்.


ஆகவே இது கடவுள் செய்த ஏற்பாடு.
இதற்கு நீங்கள் ஒன்றும் தடங்கல் சொல்லக்
கூடாது என்றான்.

21. விவாகமானது கடவுளால் நிச்சயிக்கப்படுகிறது

ஆதி. 25

லாபானும், பெத்துவேலும் இந்தக் காரியம்
கர்த்தரால் வந்தது என்று கண்டார்கள்.
ஆகவே நாம் ஒன்றும் சொல்லக்கூடாது. இந்தக்
காரியம் கர்த்தரால் ஏற்பட்டது. ஆகவே
ரெபேக்காளை நாம் எலியேசரோடு அனுப்பி
விடுவோம் என்று பேசி ஒழுங்கு செய்தார்கள்.

எலியேசரிடம் ஐயா, எங்கள் பெண்ணை உங்கள்
எஜமான் ஆபிரகாமின் குமாரன் ஈசாக்குக்குக்
கொடுக்கச் சம்மதிக்கிறோம். நீ அவளை அழைத்



விவாகம் கடவுளால் நிச்சயிக்கப்படுகிறது (ஆதி. 25)

துக்கொண்டு போகலாம் என்றார்கள். உடனே
எலியேசர் ஆபிரகாமின் கடவுளுக்கு நன்றி
செலுத்தினான். வெள்ளி ஆபரணங்களையும்,
தங்க ஆபரணங்களையும், உடுப்புகளையும் ரெபேக்
காளுக்குக் கொடுத்தான். ரெபேக்காளுடைய
தாய்க்கும், சகோதரனுக்கும் பொன்னாபரணங்
களையும், வெள்ளி ஆபரணங்களையும் கொடுத்
தான். அன்று இரவு அங்கே தங்கினான்.

மறுநாள் காலையில் பெண்ணை அனுப்புங்கள்
என்றான். லாபானும், பெண்ணுடைய தாயா
ரும் பத்து நாளாவது பெண் எங்களோடிருக்கட்
டும் என்றார்கள். அதற்கு எலியேசர் இது
கடவுளுடைய ஏற்பாடு, நீங்கள் தடை
சொல்லக்கூடாது என்றான்.

அவர்கள் ரெபேக்காளைக் கூப்பிட்டு 'நீ இந்த
மனிதனோடு போகிறாயா' என்றார்கள். ரெபேக்
காள் போகிறேன் என்றாள். அவர்கள் ரெபேக்
காளை 'நீ கோடா கோடியாய்ப் பெருகுவாயாக"
என்று வாழ்த்தி அவளை அனுப்பிவைத்தார்கள்.
சாயங்கால வேளையிலே ஈசாக்கு தியானம்
செய்வதற்காக 'லகாய்ரோயீ' எனப்பட்ட
துரவின் வழியாக வந்துகொண்டிருந்தான்.
தூரமாக ஒட்டகங்கள் வருவதைக் கண்டான்.
ரெபேக்காளும் தூரமாக வந்து கொண்டிருந்த
ஈசாக்கைப் பார்த்தாள். எலியேசரிடம் அதோ
தூரமாக வருகிறவர் யார் என்று கேட்டாள்.
அதற்கு எலியேசர் அவர்தான் என் எஜமான்
என்றான்.

ஈசாக்கு ரெபேக்காளைத் தன் தாயாகிய சாரா
ளின் கூடாரத்திற்குக் கூட்டிக்கொண்டு போய்,
அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டான்.

22. இரட்டையர் பிறப்பு

ஆதி. 25

ஈசாக்குக்கும், ரெபேக்காளுக்கும் விவாகமானது முதல் இருபது ஆண்டுகள் குழந்தை பிறக்கவில்லை. ஈசாக்கு பிள்ளைக்காகக் கடவுளிடம் மன்றாடினான். கடவுள் அவனுடைய வேண்டுதலைக் கேட்டார். ரெபேக்காள் கர்ப்பம் தரித்தாள். அவள் கர்ப்பத்தில் இரட்டைப் பிள்ளைகள் உற்பத்தியாகியிருந்தது.

ரெபேக்காள் இப்படி ஏன் நேர்ந்தது என்று சொல்லி கடவுளிடம் விசாரிக்கும்படி போனாள். கடவுள் அவளிடம் உன் வயிற்றில் இரு ஜாதி உற்பத்தியாகியிருக்கிறது. மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்றார். பிரசவ காலம் வந்தது. அவள் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றாள். முதலில் பிறந்தவன் சிவந்த நிறமும், அடர்த்தியான உரோமமும் உள்ளவனாயிருந்தான். அவனுக்கு ஏசா என்று பெயரிட்டார்கள். இளையவன் ஏசாவின் குதிங்காலைப் பிடித்துக்கொண்டே பிறந்தான். அவனுக்கு யாக்கோபு என்று பெயரிட்டார்கள். பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாயினார்கள்.

ஏசா வேட்டையாடுவதில் வல்லவனாயிருந்தான். ஈசாக்கு மூத்தவனாகிய ஏசாவின்மேல் பிரியமாயிருந்தான். ரெபேக்காள் யாக்கோபின் மேல் பிரியமாயிருந்தாள். ஏசாவும், யாக்கோபும் இருவிதமான சூழ்நிலையில் வாழ்ந்தார்கள். ஏசா உத்தமமான காரியங்களில் நோக்கமில்லாதவன். ஆத்திரக்காரன். தான் செய்வதே நேர்மையானது என்று எண்ணக் கூடியவன். ஆகவே இவன் சீர்கெட்டவர்களுக்கு மாதிரியானவன்.

யாக்கோபு ஓடிப்போகிறவனுடைய குதிங்காலைப் பிடிப்பவன் என்று அர்த்தம். யாக்கோபு ஆடுமாடுகளை மேய்க்கும் மேய்ப்பன்.

23. ஏசாவின் ஏமாளித்தனமும் யாக்கோபின் விவேகமும்

ஆதி. 25

மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று ஈசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் கடவுள் சொல்லியிருந்தார். தாயும், தந்தையும் தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் தனித்தனியான அக்கறை காட்டினார்கள். ஆகவே இருவரும் எதிர்த் துருவங்களாகி வாழ்ந்தார்கள். ஒருநாள் ஏசா காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். களைப்பு மிகுந்தவனாகக் காட்டிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான். பசியோ தாங்க முடியவில்லை.

அப்போது யாக்கோபு ஒருவிதமான சிவப்பு நிறமான பயற்றங் கூழைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். ஏசாவுக்கோ பசி அதிகம். தன் சகோதரனிடம் அந்தக் கூழில் எனக்கும் கொஞ்சம் கொடு என்று கேட்டான். யாக்கோபு அவனிடம் நீ உன்னுடைய மூத்தவன் என்ற சுதந்தரத்தை எனக்குத் தந்தால்தான் நான் உனக்கு இந்தக் கூழைத் தருவேன் என்றான்.

ஏசா தன்னுடைய மூத்த சுதந்தர பாக்கியத்தை அசட்டைபண்ணி தன் சகோதரனாகிய யாக்கோபுக்கு அதை விற்றுப் போட்டான். அற்பக் கூழுக்கு ஆசைப்பட்டு முதற்பிறப்பின் சுதந்தரத்தை இழந்துவிட்டான்.

24. தந்தையை ஏமாற்றிய எத்தன் யாக்கோபு

ஆதி. 27

ஈசாக்குக்கு வயதாகிவிட்டது. பார்வை மங்கிவிட்டது. ஆகவே தனக்குப் பிரியமான மூதத குமாரன் ஏசாவை ஆசீர்வதிக்க மனதாயிருந்தான். ஆகவே அவன் ஏசாவை வரச்சொன்னான். மகனே எனக்கோ வயதாகிவிட்டது. நான் இன்ன நாளில் மரிப்பேன் என்று சொல்ல முடியாது. ஆகவே நீ காட்டிற்குப் போய் வேட்டையாடி எனக்குப் பிரியமான வனத்துப் பிராணிகளை ருசியாகச் சமைத்துக் கொண்டு வா. நான் அதைச் சாப்பிட்டுவிட்டு உன்னை ஆசீர்வதிப்பேன் என்றான்.

ரெபேக்காள் இதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஏசா காட்டிற்குப் போனபின் தனக்குப் பிரியமான குமாரன் யாக்கோபை அழைத்தாள். உன் தந்தை, ஏசாவை ஆசீர்வதிக்கப்போகிறார். அதற்காக அவனை வேட்டைக்கு அனுப்பி ருசியான கறிவகைகள் செய்துகொண்டுவரச் சொல்லியிருக்கிறார். அந்த கறிவகைகளைச் சாப்பிட்டபின் அவனை ஆசீர்வதிப்பார். ஆனால் நீதான் முந்தி தந்தையின் ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும்.


ஆகையால் நீ ஆட்டு மந்தைக்குப்போய் இரண்டு நல்ல வெள்ளாட்டுக் குட்டிகளைக் கொண்டுவா. நான் அதை ருசியாகச் சமைத்துத் தருகிறேன். நீ ஏசாவுக்கு முந்திப்போய் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள் என்றாள்.

யாக்கோபு பயந்தான். ஏசா அடர்ந்த உரோமமுள்ளவன். நானோ உரோமம் இல்லாதவன், ஒருவேளை தந்தை என்னைத் தடவிப்பார்த்து அடையாளம் கண்டுகொண்டால் என்னைச் சபிப்பாரே என்று பயந்தான். அதற்கு ரெபேக்காள் வீட்டிலே தன்னிடமிருந்த ஏசாவின் உடுப்புக்களை அவனுக்கு அணிவித்து கை கழுத்து பிடரி முதலிய இடங்களில் ஆட்டுத் தோலைப் போட்டு தான் சமைத்த ருசியுள்ள பதார்த்தங்களையும் அப்பத்தையும் யாக்கோபிடம் கொடுத்து அனுப்பினாள்.

யாக்கோபு அவற்றை எடுத்துக்கொண்டு தன் தந்தையிடம் வந்தான். தந்தையே நீர் சொன்னபடி வேட்டையாடி உமக்குப் பிரியமான பதார்த்தங்கள் கொண்டுவந்திருக்கிறேன். சாப்பிட்டுவிட்டு என்னை ஆசீர்வதியும் என்றான். ஈசாக்கு கண் தெரியாதவனாயிருந்தும் சத்தம் யாக்கோபினுடையதாயிருக்கிறதே, நீ என் பக்கமாக வா, நான் உன்னைத் தடவிப் பார்க்கவேண்டும் என்றான். உடனே யாக்கோபு தந்தையின் கிட்டப் போனான். ஈசாக்கு அவனைத் தடவிப்பார்த்தான். கைகள் ஏசாவின் கைகள், சத்தமோ யாக்கோபின் சத்தமாக இருக்கிறதே. நீ ஏசாதானா என்றான். அதற்கு யாக்கோபு ஆம் நான் ஏசாதான்.

ஈசாக்கு யாக்கோபு கொண்டுவந்த பதார்த்தங்களைச் சாப்பிட்டான். பின்பு அவனை ஆசீர்வதித்தான் (ஆதி. 27:28,29). யாக்கோபு ஏசா வருவதற்குமுன் அவசர அவசரமாக ஓடிவிட்டான்.

ஏசா தான் வேட்டையாடியவற்றைச் சமைத்து ருசியுள்ள பதார்த்தங்களைச் செய்து எடுத்துக்கொண்டு தகப்பனிடம் வந்தான். அங்கேயும் யாக்கோபு தன்னை ஏமாற்றி தந்தையின் முதல் ஆசீர்வாதத்தை தந்திரமாகப் பெற்றுக்கொண்டு போய்விட்டானே என்று அறிந்து அவன் உரத்த சத்தமாய் அழுது, அலறி என் தகப்பனே என்னையும் ஆசீர்வதியும் என்று கெஞ்சிக்கேட்டான். அதற்கு ஈசாக்கு என் மகனே! ஏசா, இது கடவுளுடைய ஏற்பாடாயிருக்கலாம். நான் யாக்கோபை ஆசீர்வதித்துவிட்டேன். அவனே ஆசீர்வதிக்கப்பட்டவனாயிருப்பான் என்றான்.



தந்தையை ஏமாற்றிய எத்தன் யாக்கோபு (ஆதி. 27)

ஏசா கெஞ்சி அழுதான், அவன் தகப்பனாகிய ஈசாக்கு அவனிடம் என் மகனே! உன் குடியிருப்பு பூமியின் செழிப்போடும், வானத்திலிருந்து இறங்கும் பனியோடும் இருக்கும், நீ பட்டயத்தினாலே பிழைத்து உன் சகோதரனைச் சேவிப்பாய். உனக்குச் சரியான காலம் வரும்போது உன் நுகத்தடி தானே விலகும் என்று ஆசீர்வதித்தான்.

25. யாக்கோபின் பயணம்

ஆதி. 28

யாக்கோபு எவ்வளவுதான் எத்தனாக இருந்தாலும், சகோதரனை ஏமாற்றி ஏசா பெற வேண்டிய ஆசீர்வாதத்தைப் பறித்துக்கொண்டவனாக இருந்தாலும். யாக்கோபு ஏசாவுக்குப் பயந்து வேறு தேசத்திற்கு ஓடப்போகிறான் என்பதை அறிந்து யாக்கோபைத் தன்னிடம் வர வழைத்தான் தகப்பனாகிய ஈசாக்கு.

என் மகனே! யாக்கோபே! நீ எங்கும் ஓடிப் போகவேண்டாம். நீ பதான் ஆராமிலிருக்கும் உன் தாய் மாமன் லாபான் வீட்டிற்குப் போ. நீ கானானியப் பெண்களை விவாகம் செய்யாதே. உன் தாய் மாமன் பிள்ளைகளை விவாகம் செய் என்று புத்தி சொன்னான்.

அங்கு கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார். நீ பல ஜாதிகளாகப் பலுகிப் பெருகும்படி உன்னை ஆசீர்வதிப்பார். அவர் என் தந்தை ஆபிரகாமுக்குத் தந்த ஆசீர்வாதத்தை உனக்கும் தருவார் என்று சொல்லி யாக்கோபை அனுப்பினார்.

ஏசா இதைக் கேள்விப்பட்டான். அவன் நேராக இஸ்மவேலிடம் போய் தனக்கு முன்பிருந்த மனைவிகளோடு ஆபிரகாமின் குமாரனாகிய இஸ்மவேலின் குமாரத்தியாகிய மகலாத்தை விவாகம் பண்ணினான். ரெபேக்காள் வயிற்றிலே இரண்டு சாதி பிறக்கும் என்ற வாக்கு நிறைவேறியது.

எத்தன் யாக்கோபு பெயர்ஷெபாவை விட்டுப் புறப்பட்டு காரானுக்குப் போகும் போது வழியிலே இருட்டிவிட்டது. அங்கே தானே ஒரு கல்லை எடுத்து தலையின்கீழ் வைத்து தூங்கிவிட்டான்.



யாக்கோபின் பயணம் (ஆதி. 28)

26. பெத்தேல்

ஆதி. 28

யாக்கோபு தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தது, தன் சகோதரன் ஏசாவுக்குப் பயந்து மெசபொத்தாமியாவுக்கு ஓடிப்போகிறான். அவனை மனுஷர் கைவிட்டாலும் கடவுள் கைவிடவில்லை. அவன் வழியிலே இருட்டிலே படுத்துத் தூங்கும்போது ஒரு சொப்பனம் கண்டான். ஒரு ஏணி வானத்திற்கும் பூமிக்கும் வைக்கப்பட்டிருந்தது. அதில் தேவதூதர் ஏறுவதும் இறங்குவதுமாயிருந்தார்கள். கடவுள் எல்லாவற்றிற்கும் மேலாக நின்று கொண்டிருந்தார். நீ படுத்திருக்கிற பூமியை உனக்குத் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும், உன் மூலம் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.

இதோ நான் உன்னோடே கூடயிருந்து, நீ போகிற இடத்தில் எல்லாம் உன்னைக் காப்பாற்றி, உன்னுடைய சுயதேசத்திற்குத் திரும்பி வரப் பண்ணுவேன், நான் இதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடேன் என்றார்.

யாக்கோபு நித்திரை தெளிந்து எழுந்தவுடன் மெய்யாகவே கர்த்தர் இந்த இடத்திலிருக்கிறார் இது வானத்தின் வாசல் என்று சொல்லி அதிகாலமே எழுந்திருந்து தன் தலைக்கு வைத்து படுத்திருந்த கல்லைத் தூணாக நிறுத்தி அதின் மீது எண்ணெய் வார்த்து அந்த இடத்திற்குப் ''பெத்தேல்'' என்று பெயரிட்டான்.

பின்பு யாக்கோபு ஒரு பொருத்தனை செய்து கொண்டான். கடவுள் என்னோடிருந்து, நான் போகிற இடங்களிலே என்னைக் காத்து என்னை என் சகோதரன் வீட்டிற்குத் திரும்பிவரப் பண்ணுவாரானால், கடவுள் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் அவருக்குப் பத்தில் ஒரு பங்கு செலுத்துவேன் என்று பொருத்தனை பண்ணிக் கொண்டான்.



பெத்தேல் (ஆதி. 28)

27. யாக்கோபின் ஏமாற்றம்

ஆதி. 29

யாக்கோபு கடவுளிடம் பொருத்தனை செய்து கொண்டபின் கீழ் திசையை நோக்கிப் பிரயாணம் போனான். அங்கே வயல்களினூடே ஒரு கிணற்றையும், அதைச் சுற்றிலும் மூன்று ஆட்டுக்கிடைகள் அமர்ந்திருப்பதையும் அங்கே மேய்ப்பர்கள் கூடியிருப்பதையும் கண்டான்.

யாக்கோபு அவர்களிடத்திலே வந்து சகோதரரே நீங்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்றான். அவர்கள் நாங்கள் காரானூரார் என்றார்கள். அப்படியானால் நாகோரின் மகன் லாபான் உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டான். அதற்கு அவர்கள் ஆமாம் லாபான் எங்களுக்குத் தெரியும், அதோ அவனுடைய மகள் ராகேல் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வருகிறாள் என்றார்கள்.

யாக்கோபு, தன் தாய்மாமன் மகள் ராகேலையும், தன் மாமன் ஆடுகளையும் கண்டபோது, மிகவும் அவசரமாகக் கிணற்றை மூடியிருந்த கல்லைப்புரட்டித் தள்ளி தன் மாமன் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான். தன்மாமன் மகள் ராகேலை முத்தம் செய்து சத்தமிட்டு அழுதான். தான் ராகேலின் மாமி ரெபேக்காள் மகன் என்று அவளுக்கு அறிமுகம் செய்து கொண்டான்.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட லாபான் ஓடோடி வந்து, தன் சகோதரியின் மகன் யாக்கோபைக் கட்டிக்கொண்டு முத்தம் செய்து அவனைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போனான். யாக்கோபு ஒரு மாதம் அவனிடம் தங்கினான்.

பின்பு லாபான் யாக்கோபைப் பார்த்து நீ என்னிடம் சும்மா வேலை செய்யவேண்டாம் சம்பளம் எவ்வளவு கேட்கிறாய் என்றான். அதற்கு யாக்கோபு உம்முடைய மகள் ராகேல் நல்ல அழகியாக இருக்கிறாள். அவளுக்காக நான் ஏழு வருஷம் உமக்கு ஊழியம் செய்வேன் என்றான்.

ஏழு ஆண்டுகள் முடிந்தபின் ராகேலை மணம் செய்து தரும்படி கேட்டான். லாபான் ஊரா ரைக் கூடிவரச்செய்து அன்று இரவிலே லேயா ளைக் கூட்டிக்கொண்டு போய் அவனுக்கு மனைவி யாகக் கொடுத்தான்.

யாக்கோபு காலையிலே எழுந்திருந்தபின் தன்னை லாபான் ஏமாற்றிவிட்டதை அறிந்து ஏன் எனக்கு இப்படிச் செய்தீர் என்றான் நான் உம்மிடத்தில் வேலை செய்தது ராகேலுக்காக அல்லவா? என்றான். அதற்கு லாபான் மூத்தவளிருக்க இளையவளைக் கொடுப்பது இந்த நாட்டு வழக்கமல்ல. நீ ராகேலுக்காக மேலும் ஏழு வருஷம் எனக்கு வேலைசெய் என்றான். யாக்கோபும் அதற்குச் சம்மதித்து மேலும் ஏழு ஆண்டுகள் லாபானிடம் வேலை செய்தான். அப்போதுதான் தான் தனது சகோதரன் ஏசாவை ஏமாற்றியதை நினைத்து விசனப்பட்டான்.

யாக்கோபின் மூத்தமனைவி லேயாளுக்குப் பத்துப் பிள்ளைகள் பிறந்தனர். அவர்களே ரூபன், சிமியோன், லேவி, யூதா, தாண், நப்தலி, காத், ஆசேர், இசக்கார், செபுலோன் ஆவார்கள். இளையமனைவி ராகேல் தன் கண வன் யாக்கோபால் மிகவும் நேசிக்கப்பட்டாள். அவளின் மைந்தர்களே, யோசேப்பும் பென்ய மீனும். யாக்கோபும் இவ்விரு மக்களையும் மிக வும் நேசித்தான். மொத்தமாக யாக்கோபின் மக்கள் பன்னிருவர் ஆவர்.


28. யாக்கோபு தன்னுடைய சுய தேசத்திற்குத் திரும்புதல்

ஆதி. 32

யாக்கோபு நாற்பது ஆண்டுகள் தன் தாய் மாமன் லாபானிடம் வேலை செய்தான். மாமன் மக்களாகிய லேயாளையும், ராகேலை யும் மணம் செய்துகொண்டான். அவனுக்கு ரூபன், சிமியோன், லேவி, யூதா, யோசேப்பு, பென்யமீன், தாண், நப்தலி, காத், ஆசேர், இசக்கார், செபுலோன், என்ற பன்னிரண்டு குழந்தைகள் பிறந்தார்கள். யாக்கோபு தன் மனைவிகளுடன், வேலைக்காரிகள், வேலைக்காரர் களுடனும், பன்னிரண்டு பிள்ளைகளுடனும், ஏராளமான ஆடுமாடுகள், ஒட்டகங்களுடனும், அநேகப் பொன்னும் பொருளுடனும் புறப்பட்டு வருகிறான். அப்போது ''மக்னயீர்'' என்ற இடத்தில் கடவுளுடைய சேனைகளாகிய தூதர் கள் அவனைச் சந்தித்தார்கள்.

யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவுக்கு ஆட்களை அனுப்பி அவனைச் சமாதானப்படுத்தும் படி சொல்லியனுப்பினான். ஏசாவுக்கும் சில உடைமைகளைத் தருவேன் என்றும் சொல்லி யனுப்பினான். ஏசா நானூறு ஆட்களுடன் யாக்கோபைச் சந்திக்க வருகிறான் என்று சொன்னார்கள். இதைக் கேள்விப்பட்ட யாக் கோபு மிகவும் பயந்தான்.

அன்று இரவில்தானே யாக்கோபு தன் மனைவி பிள்ளைகள், வேலைக்காரர் யாவரையும் யாப்போக்கென்னும் ஆற்றைவிட்டு கடத்தி விட்டான். தான் மட்டும் அங்கே தங்கிவிட் டான். இரவு முழுவதும் கடவுளோடு போராடி ஜெபித்தான். கடவுளே நீர் என்னை ஆசீர்வதித்தால் அல்லாமல் உம்மைப்போக விடேன் என்று பிடித்தபிடி விடாமல் ஜெபித் தான். கடவுள் அவன் தொடைச் சதையைப் பிடித்தார். அது சுளுக்கிப் போயிற்று. நீ கடவுளோடு போராடி வெற்றிபெற்றபடியால் இனி உன்பேர் யாக்கோபு அல்லாமல் இஸ்ர வேல் எனப்படும் என்றார். யாக்கோபு அந்த இடத்திற்கு பெனியேல் என்று பெயரிட் டான்.




யாக்கோபு தன் சுயதேசத்துக்கு திரும்புதல் (ஆதி. 30)

29. ஏசா யாக்கோபு சந்திப்பு

ஆதி. 32

நாற்பது ஆண்டுகள் தன் சகோதரனைப் பிரிந்திருந்த யாக்கோபு இப்போது அவனைப் பார்க்கவருகிறான். பயம் ஒரு பக்கம், பாசம் ஒரு பக்கம், கண்டதும் கனிவுடன் பார்ப்பானோ அல்லது தடி கொண்டு அடிப்பானோ என்ற பயம், தயங்கித் தயங்கி வருகிறான்.



எசா, யாக்கோபு சந்திப்பு (ஆதி. 32)

தூரமாக ஏசா நானூறு ஆட்களுடன் வருவதைக்கண்டான். தன் மனைவி பிள்ளைகள், வேலைக்காரர் யாவரையும் தள்ளிவிட்டு விட்டு அவர்களுக்கு முன்னே வந்து ஏழுவிசை தரை மட்டும் குனிந்து வணங்கிக்கொண்டே தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான். ஏசாவும் எதிர்கொண்டு ஓடிவந்து தன் சகோதரன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தம் செய்தான். இருவரும் அன்புப் பெருக்கினால் அழுதார்கள். பின்பு தன்னுடைய மனைவி, பிள்ளைகள், வேலைக்காரர் யாவரையும் அண்ணனுக்கு அறிமுகம் செய்தான். அவர்கள் யாவரும் ஏசாவைத் தரை மட்டும் குனிந்து வணங்கினார்கள்.

யாக்கோபு தன் அண்ணன் ஏசாவுக்கு ஏராளமான வெகுமதிகளைக் கொடுத்தான். நான் உமது முகத்தைக் கண்டது எனக்குக் கடவுளைக் கண்டதுபோலிருக்கிறது. கடவுள் எனக்கு எல்லா ஆஸ்தியும் கொடுத்திருக்கிறார். நீர் தயவு கூர்ந்து இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றான்.

ஏசா, தன் தம்பியிடம் நான் உனக்கு முன்னே போய் உன்னை வரவேற்க ஏற்பாடு செய்கிறேன் என்றான். அதற்கு யாக்கோபு என்னிடம் நடக்க முடியாத கரவை மாடுகளும் இளங்கன்றுகளும் உண்டு. ஆகவே நான் மெதுவாக மந்தையை ஓட்டிக்கொண்டு வருகிறேன் என்றான்.

யாக்கோபு சுக்கோத் என்ற இடத்திலே தங்கினான். அங்கே கடவுளுக்கு ஒரு பலிபீடம் கட்டி அதற்கு ''ஏல் எலோகே இஸ்ரவேல்'' என்று பெரிட்டான்.

30. கடவுள் யாக்கோபுக்கு இஸ்ரவேல் என்று பெயரிட்டார்

ஆதி. 35

கடவுள் யாக்கோபிடம், நீ முதல் முதலாக கடவுள் உனக்குத் தரிசனமான பெத்தேலில் ஒரு பலிபீடம் கட்டு என்றார். யாக்கோபு அவ்விதமாகவே கடவுளுக்குப் பெத்தேலிலே பலிபீடம் கட்டினான். கடவுள் மறுபடியும் அவனுக்குத் தரிசனமாகி அவனை ஆசீர்வதித்து உன் பேர் இனி யாக்கோபு எனப்படாமல் இஸ்ரவேல் என்று வழங்கப்படும் என்று சொல்லி அவனுக்கு இஸ்ரவேல் என்று பெயரிட்டார்.

பின்பு கடவுள் அவனைப்பார்த்து நீ பலுகிப் பெருகுவாயாக. ஒரு ஜாதியும், ஜாதிகளின் பெருக்கமும் உனக்கு உண்டாகும். உன் சந்ததியில் ராஜாக்கள் தோன்றுவார்கள். நான் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் கொடுத்த தேசத்தை உனக்கும் கொடுப்பேன் என்று சொல்லி ஆசீர்வதித்தார்.

ராகேல் கடைசியாக ''பென்யமீன்'' என்ற மகனைப் பெற்றபின் மரித்துப் போனாள். எப்பிராத்தாவுக்குப் போகிற வழியிலே ராகேல் கல்லறை இருக்கிறது. யாக்கோபுக்கு பன்னிரண்டு குமாரர் பிறந்தார்கள். ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன், யோசேப்பு, பென்யமீன், தாண், நப்தலி, காத், ஆசேர் என்பவர்களே.

31. சொப்பனக்காரன் யோசேப்பு

ஆதி. 37


யோசேப்பு யாக்கோபின் பதினேராவது மகன். ராகேலுக்குப் பிறந்தவன். மிகவும் அழகானவன். தகப்பனுக்கு மிகவும் பிரியமான மகன். இவன் தந்தை யாக்கோபு இவனுக்கு அழகழகான அங்கிகளைத் தைத்துக் கொடுப்பான். எல்லாரையும்விட இவனைத் தங்கள் தகப்பன் நேசித்ததால் மற்ற சகோதரர்கள் இவனைப் பகைத்தார்கள். இவன்மேல் பொருமைப் பட்டார்கள்.

யோசேப்புக்குப் பதினேழு வயதானபோது இவன் தன் சகோதரருடன் ஆடு மேய்க்கப் போனான். ஆடு மேய்க்கும்போது மற்ற சகோதரர்கள் செய்யும் அக்கிரமமான செய்கைகளைத் தன் தகப்பனிடம் சொல்லுவான். இதுவும் அவர்களுக்கு இவன்மேல் வெறுப்பை உண்டாக்கியது.

ஒரு நாள் இவன் ஒரு சொப்பனம் கண்டான். அதைத் தன்னுடைய சகோதரரிடம் சென்னான். அதாவது வயலில் நாம் யாவரும் அரிக்கட்டுகளைக் கட்டிக்கொண்டிருந்தோம். என்னுடைய அரிக்கட்டுகள் நிமிர்ந்து நின்றன. உங்கள் அரிக்கட்டுகளெல்லாம் என்னுடைய அரிக்கட்டுகளைச் சுற்றி வணங்கி நின்றன என்ருன். அவனுடைய சகோதரர் யாவரும் நீ எங்களைவிட உயர்ந்தவனே, நாங்கள் உன்னை வணங்கவேண்டுமோ என்று சொல்லி அவனைப் பகைத்தார்கள்.

இன்னெரு நாள் தான் சொப்பனம் கண்டதாகச் சொன்னான். அதாவது சூரியனும், சந்திரனும், பதினெரு நட்சத்திரங்களும் என்னை வணங்கி நின்றன என்ருன். இதைக்கேட்ட சகோதரர் இவன்மேல் எரிச்சலானார்கள். நாங்களும், உன் தாயாரும், நம் தந்தையும் உன்னைச் சூழ நின்று வணங்கவேண்டுமோ என்று அவனைக் கடிந்து கொண்டார்கள்.

தகப்பனுகிய இஸ்ரவேல் இவற்றையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக்கொண்டான். ஆனுல் யோசேப்பைக் கண்டித்துப் பேசவில்லை. இது சகோதரருக்கு மிகுந்த விசனத்தைக் கொடுத்தது.



சொப்பனக்காரன் யோசேப்பு (ஆதி. 37)

32. சகோதரரின் பகை

ஆதி. 37

யோசேப்பின் சகோதரர் சீகேம் பிரதேசத்தில் ஆடுகளை மேய்க்கப் போனார்கள். அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பினிடம், நீ சீகேமுக்குப் போய் அங்கே உன்னுடைய சகோதரர் எப்படியிருக்கிருர்கள், ஆடுகளுக்கு மேய்ச்சல் இருக்கிறதா. சகோதரர் யாவரும் நலமாக இருக்கிருர்களா என்பதை அறிந்து வந்து எனக்குச் சொல் என்று சொல்லி யோசேப்பை அனுப்பினுன்.

யோசேப்பு சீகேமுக்குப் போனான். அங்கே அவனுடைய சகோதரர்களைக் காணவில்லை. ஆகவே அங்குள்ள ஆட்டு மேய்ப்பரிடம் விசாரித்தான். அவர்கள் உன் சகோதரர் தோத்தானுக்கு போவோம் என்று சொல்லிப் பேசிக்கொண்டார்கள் என்ருர்கள்.

தோத்தானிலே யோசேப்பின் சகோதரர், தூரமாக யோசேப்பு வருகிறதைக் கண்டார்கள். அவர்களில் ஒருவன் அவனை நாம்

தீர்த்துக்கட்டுவோம் வாருங்கள் என்றான். இன்னொருவன் நாம் அவனைக் கொன்று இந்தக் குழிகளில் ஒன்றிலே போட்டுவிடுவோம். அவனுடைய சொப்பனம் எப்படி முடிகிறதென்று பார்ப்போம் என்றான்.

லேயாள் மக்களில் எல்லாருக்கும் மூத்தவனான ரூபன் மிக ஞானமாக யோசேப்பை இவர்களிடமிருந்து தப்புவித்து அவனைத் தகப்பனிடம் சேர்க்கவேண்டும் என்று நினைத்து இவனை இந்தக் குழிகளில் ஒன்றிலே போட்டு விடுங்கள் என்றான். உடனே அவர்கள் அவன் அணிந்திருந்த அங்கியை உரிந்துகொண்டு அவனை தண்ணீரில்லா வெறும் குழியிலே தள்ளி விட்டார்கள்.

அவர்களில் யூதா என்பவன் தன் சகோதரன் யோசேப்பின்மீது அதிகப் பாசமுள்ளவன். ஆகவே அவன் மற்றவர்களைப் பார்த்து நாம் யோசேப்பைக் கொன்றுபோடுவதால் நமக்கு லாபம் என்ன? இதோ வியாபாரிகளாகிய இஸ்மவேலர் வருகிறார்கள். நாம் அவனை இஸ்மவேலரிடம் விற்றுப்போடுவோம் என்றான். இது எல்லாருக்கும் நலமாகப்பட்டது. ஆகவே யோசேப்பை இஸ்மவேலருக்கு இருபது வெள்ளிக் காசுக்கு விற்றுப்போட்டார்கள்.



சகோதரரின் பகை (ஆதி. 37)

33. தந்தையை ஏமாற்றிய தனையர்

ஆதி. 37

யோசேப்பை இருபது வெள்ளிக்காசுக்கு இஸ்மவேலரிடம் விற்றுப்போட்ட பின், தங்கள் தந்தை யோசேப்பைப்பற்றிக் கேட்டால் என்ன சொல்வோம் என்று சிந்தனைபண்ணினார்கள். அவர்கள் ஒரு ஆட்டைப் பிடித்து வெட்டி



தந்தையை ஏமாற்றிய தனையர் (ஆதி. 37)

அதனுடைய இரத்தத்தில் யோசேப்பின் அங்கியைத் தோய்த்து அதில் இரத்தக்கறை படும்படி செய்து தங்கள் தகப்பனிடம் கொண்டு வந்தார்கள்.

தந்தையே இது நமது யோசேப்பின் அங்கி இதை நாங்கள் வரும் வழியிலே கண்டெடுத்தோம். யோசேப்பை ஏதோ துஷ்ட மிருகம் கொன்று தின்றுபோட்டிருக்கலாம் என்றார்கள். யோசேப்பின் அங்கியை வாங்கிப் பார்த்தான். ஆம் இது என் மகன் யோசேப்பின் அங்கிதான். ஐயோ! என் அருமையான மகன் மறைந்து போனானே என்று அழுதான்.

மூத்த சகோதரன் ரூபனும், மற்ற சகோதரரைவிட்டுத் தூரமாக ஒரு இடத்திற்குப் போயவிட்டுத் திரும்பவும் வந்து யோசேப்பைத் தப்புவித்துத் தன் தகப்பனிடம் சேர்க்க வேண்டுமே என்ற எண்ணத்துடன் யோசேப்பைத் தள்ளிய குழியில் எட்டிப் பார்த்தான். யோசேப்போ அங்கு இல்லை. ஆகவே ரூபன் தலையில் அடித்துக்கொண்டு தன் அங்கியைக் கிழித்துக்கொண்டு யோசேப்புக்காக அழுதன். ஐயோ! நான் அவனை எங்கே காண்பேன் என்று கதறினன்.

34. அனாதை யோசேப்பு

ஆதி. 39

யோசேப்பை இஸ்மவேலரிடம் இருபது வெள்ளிக் காசுக்கு விற்றுப்போட்டார்கள். இப்போது யோசேப்பு ஒரு அனாதை. இதில் ஓர் விந்தை. இஸ்மவேலரும் ஆபிரகாமின் கோத்திரம். யோசேப்பு ஆபிரகாமின் கோத்திரம். யார் அறிவார் இதின் இரகசியத்தை.

யோசேப்பு ஓர் யூத வாலிபன். மிகுந்த அழகுள்ளவன். கெம்பீரமான தோற்றம், யாரும் விரும்பும் முகக்களை. ஆகவே இவனை இலகுவில் விற்றுவிடலாம் என்று இஸ்மவேலர் நம்பினார்கள். ஆகவே யோசேப்பை எகிப்தில் பார்வோன் அரசன் அரண்மனைப் பக்கமாக விற்பதற்காகக் கொண்டுபோனார்கள்.

போத்திப்பார் என்பவன் பார்வோனுடைய சேனாதிபதி. அவனிடம் யோசேப்பை விற்றுப் போட்டார்கள். யோசேப்பின் சகோதரர் அவனைக் கைவிட்டு விட்டார்கள். ஆனால் கடவுளோ யோசேப்புடன் கூடவேயிருந்தார். யோசேப்பு நல்ல பக்திமான். எப்போதும் ஜெபிப்பான். கடவுள் சொப்பனத்தின் மூலம் அவனோடு பேசுவார். அவனுடைய எஜமான் போத்திப்பார் கடவுள் யோசேப்பு கூடவேயிருக்கிறார் என்பதை அறிந்துகொண்டான். ஆகவே யோசேப்பின்மீது அனுதாபமும், அன்பும் கொண்டான். சகோதரர் கைவிட்டாலும், தந்தையைவிட்டுப் பிரிக்கப்பட்டாலும் கடவுள் அவனைவிட்டுப் பிரியவில்லை. கடவுளின் கிருபை அவனோடிருந்தது.

போத்திப்பார் யோசேப்பைத் தன் வீட்டின் விசாரணைக்காரனாக்கினார். வீட்டின் எல்லாக் காரியத்தையும் தன் விசாரணைக்காரனாகிய யோசேப்பிடம் ஒப்புவித்தான். தன் பணம், பொருட்கள் யாவற்றையும் அவன் கையிலே ஒப்புவித்தார். ஏனென்றால் யோசேப்பு அவ்வளவு உண்மையுள்ளவனாயிருந்தான்.

35. யோசேப்புக்கு ஏற்பட்ட சோதனை

ஆதி. 39

யோசேப்பு எபிரேய வாலிபன். எபிரேயர் எப்போதும் நல்ல சிவப்பு நிறமாகவும், உயரமாகவும், அழகாகவும் அழகான முடியுடனும் காணப்படுவார்கள். யோசேப்பும் அவ்விதமாகச் சவுந்தரியமும் அழகிய தோற்றமுள்ளவனாக இருந்தான்.

போத்திப்பாரின் மனைவி யோசேப்பின்மீது ஆசைகொண்டாள். அவனோடு பேசவும், உல்லாசமாக ஆடவும், பாடவும் ஆசைப்பட்ட பின், ஒரு நாள் வீட்டில் ஒருவரும் இல்லாத நேரம் யோசேப்பினிடம் அவள் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். அதற்கு இணங்கும்படி அவனை வற்புறுத்தினாள். யோசேப்போ, நான் என் எஜமானுக்கும் கடவுளுக்கும் விரோதமாகப் பாவம் செய்யமாட்டேன் என்று அவளிடம் கூறினன்.

இதனால் கோபம்கொண்ட போத்திப்பார் மனைவி தன் எஜமானிடம் யோசேப்பு தன்னிடம் தகாதவிதமாய் நடந்துகொண்டான் என்று பொய்க்குற்றம் சாட்டினாள். உடனே போத்திபார் ஒன்றையும் விசாரிக்

காமல் யோசேப்பைச் சிறையில் அடைத்தான். அங்கு அரசாங்கக் கைதிகளும் இருந்தனர். யோசேப்போ ஒன்றையும் குறித்து கவலைப்பட வில்லை. யோசேப்பு குற்றமற்றவன். நிரபராதி. ஆகவே அவன் காரகிரகத்தில் அடைக்கப் பட்டதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஏனென்றால் அவன் கடவுளுக்குப் பயந்து போத்திப்பாரின் வீட்டில் உண்மையுள்ள வீட்டு விசாரணைக்காரனாய் நடந்துவந்தான்.

அவன் எந்தத் துரோகமும் செய்யவில்லை. ஆகவே அவன் சந்தோஷமாகத் தண்டனையை ஏற்றுக்கொண்டான். கர்த்தர் யோசேப்புகூட இருந்தார். சிறைச்சாலைத் தலைவனின் உதவி யோசேப்புக்குக் கிடைக்கும்படி செய்தார். யோசேப்பை சிறைச்சாலைத் தலைவனாக யாவற்றையும் நடப்பிக்கும்படி கடவுள் மாற்றினார். சிறைச்சாலைத் தலைவனுடைய நட்பும் அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார்.

36. சொப்பனத்தின் பலன்

ஆதி. 40

கடவுளின் பிள்ளைகளைச் சிறைச்சாலை என்ன செய்யும்? யோசேப்பு சிறைச்சாலையில் கைதியைப் போலல்ல, அவன் சிறைச்சாலையின் விசாரிப்புக்காரனாக விளங்கக் கடவுள் கிருபை செய்தார். யோசேப்பு சிறைச்சாலையிலிருந்த காலத்திலே, பார்வோனுக்கு திராட்சை ரசம் வார்த்துக்கொடுப்பவனும், அவனுக்கு ஆகாரம் கொடுப்பவனும் ஏதோ பார்வோனுக்கு விரோதமாகக் குற்றம் செய்ததற்காக அவர்கள் இருவரையும் சிறையிலடைத்தார்கள். யோசேப்பு வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே இவர்களிருவரும் இருந்தார்கள், காவற் கூடத்தின் சேனாதிபதி இவர்களை யோசேப்பினிடத்திலே ஒப்புவித்தான். நீண்டகாலம் இவர்கள் காவலிலிருந்தார்கள்.

ஒருநாள் இரவிலே அந்த திராட்சை ரசம் கொடுப்பவனும் ஆகாரம் கொடுப்பவனும் சொப்பனம் கண்டார்கள். ஆகவே பயந்து போய் மகிழ்ச்சியில்லாமலிருந்தார்கள். யோசேப்பு ஒவ்வொருநாளும் காலை நேரத்தில் கைதிகளை விசாரிக்கிறது வழக்கம். அப்படியே ஒருநாள் யோசேப்பு இந்த திராட்சை ரசம் கொடுப்பவனையும், ஆகாரம் கொடுப்பவனையும் சந்தித்தான். அவர்கள் கவலையாயிருந்தார்கள். யோசேப்பு அவர்களைப் பார்த்து நீங்கள் ஏன் கவலையாயிருக்கிறீர்கள் என்று கேட்டான். அதற்கு அவர்கள் நாங்கள் இருவரும் வெவ்வேறு விதமான சொப்பனம் கண்டோம். ஆனால் சொப்பனங்களை விவரித்துச் சொல்ல ஆள் இல்லை, ஆகவே கவலையாயிருக்கிறோம் என்றார்கள்.

சொப்பனத்திற்குப் பொருள் சொல்லுதல் கடவுளுக்குரியதல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள் என்றான்.

பானபாத்திரக்காரன் சொன்னான்: ஒரு திராட்சைச் செடி எனக்கு முன் நிற்கக் கண்டேன். அதில் மூன்று கொடிகளிருந்தன. அதில் அரும்பு பிடித்திருந்தது. அதில் பூக்கள் மலர்ந்திருந்தன. அதில் பழுத்த குலைகள் இருந்தன. அவற்றைப் பறித்து சாறு பிழிந்து அதை நான் பார்வோன் கையில் கொடுத்தேன் என்றான். சொப்பனத்தின் பலன்: அந்த மூன்று கொடிகள் மூன்று நாளாம். மூன்று நாளைக்குள் பார்வோன் உன்னை விடுதலை செய்வான் நீ மறுபடியும் பார்வோனுக்குப் பானபாத்திரக்காரனாகவேயிருப்பாய் என்றான். மேலும் பானபாத்திரக்காரனிடம் நீ வாழ்ந்திருக்கும் போது இந்த யோசேப்பை நினைத்துக்கொள். பார்வோனிடம் எனக்காகப் பரிந்துபேசு. என்னை இவ்விடத்தைவிட்டுச் சீக்கிரமாய் வெளியேற்ற வேண்டும். என்னை மறந்துவிடாதே என்று சொல்லி தன்னைப்பற்றிய விருத்தாந்தத்தையும் விபரமாகச் சொல்லியனுப்பினான்.

இரண்டாம் ஆள் கண்ட கனவு:

நான் அரசனுக்கு ஆகாரம் சமைத்துக் கொடுக்கிறவர்களுக்குத் தலைவன். பதார்த்தங்



சொப்பனத்தின் பலன் (ஆதி. 40)

கள் நிறைந்த மூன்று கூடைகள் என் தலையிலிருந்தன. என் தலைமேலிருந்த கூடைகளிலுள்ள பதார்த்தங்களைப் பறவைகள் வந்து தின்றுவிட்டன என்றான்.

கனவின் பலன்:

மூன்று கூடைகள் மூன்று நாட்கள். மூன்று நாட்களுக்குள் பார்வோன் உன்னைத் தூக்கில் போட்டுவிடுவான். பறவைகள் உன் மாம்சத்தைத் தின்னும் என்றான். மூன்றும் நாள் அவ்விதமாகவே இவனுக்குச் செய்யப்பட்டது.


அந்த இருவரையும் சிறையிலிருந்து அழைத்து வரும்படி பார்வோன் உத்தரவிட்டான். அப்படியே அந்த இருவரும் அரசன் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர். அப்போது அரசன் பானபாத்திரக்காரனை மன்னித்து அவனை விடுதலை செய்தான். முன்பு போலவே அவனைப் பானபாத்திரக்காரத் தலைவனுகப் பணியாற்றப் பணித்தான். ஆனால் ஆகாரம் கொண்டு வரும் தலைவனையோ தூக்கிலே போடும்படி உத்தரவிட்டான்.

ஆனால் விடுதலைபெற்று மறுபடியும் பணியேற்றுக் கொண்ட பானபாத்திரக்காரன் யோசேப்பை மறந்து போய்விட்டான். யோசேப்பு இன்னும் சிறையிலேதான் இருந்தான். கடவுளின் கிருபையும் அவனோடிருந்தது.


37. பார்வோன் சொப்பனம்

ஆதி. 41

பார்வோன் ஒரு சொப்பனம் கண்டான். அதாவது அவன் நதிக்கரையிலே நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது ஏழு கொழுத்த பசுக்கள் நதியிலிருந்து கரையில் ஏறிவந்து புல் மேய்ந்துகொண்டிருந்தது. இவற்றிற்குப் பின்பு எலும்பும் தோலுமான ஏழு பசுக்கள் அதே நதியிலிருந்து புறப்பட்டு வந்து நதியின் கரையில் முன்பு நதியிலிருந்து வந்த ஏழு கொழுத்த பசுக்களண்டையிலே நின்றன. அந்த ஏழு



பார்வோனின் சொப்பனம் (ஆதி. 41)



பார்வோனின் சொப்பனம்

மெலிந்த பசுக்கள், ஏழு கொழுத்த பசுக்களைத் தின்றுபோட்டன. இதைக் கண்ட பார்வோன் திகி விழித்துக்கொண்டான். சற்று நேரம் திகி லடைந்தவனாக யோசனையிலிருந்துகொண்டே தூங்கிவிட்டான். அதன் பின்பு வேறொரு சொப்பனம் கண்டான். அதிலே ஏழு கொழுமையான கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளர்ந்து நின்றன. அதன் பின்பு சாவி யானதும், தீய்ந்து போனதுமான ஏழு கதிர்கள் முளைத்து எழுந்தன. இந்த சாவியான கதிர்கள் செழுமையும், கொழுமையுமான ஏழு கதிர்களை யும் தின்றுபோட்டன. பார்வோன் உடனே விழித்துக்கொண்டான்.

காலையிலேயே பார்வோன் அரசன் எழுந்து விட்டான். அவனுக்கு மனம் நன்றாக இல்லை. கவலையுடன் காணப்பட்டான். எகிப்திலுள்ள சகல மந்திரவாதிகளையும் சாஸ்திரிகளையும் வரச் சொன்னான். அவர்களிடம் தான் கண்ட கனவைச் சொல்லி அதற்கு அர்த்தம் சொல்லும்படி கேட்டான். அந்தச் சொப்பனத் திற்கு அர்த்தம் சொல்ல யாராலும் முடிய வில்லை. ஆகவே அதிக வருத்தத்துடன் காணப் பட்டான். அந்தச் சமயம் பானபாத்திரக் காரன் சிறையிலிருக்கும்போது தனக்கு சொப் பனத்திற்கு அர்த்தம சொன்ன யோசேப்பை நினைத்தான்.

அரசனிடம் சென்று யோசேப்பை 'நீங்கள் அரண்மனைக்கு வரவழைத்து சொப்பனத்தைக் கூறினால் உடனே அவன் அதின் அர்த்தத்தைக் கூறுவான்' என்றான். அரசனும் உடனே யோசேப்பை அழைத்து வரும்படி அதிகாரிகளை அனுப்பினான். யோசேப்பு சிறையிலிருந்து அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டான்.

பார்வோன் அரசன் யோசேப்பைப் பார்த்து, ''என் பானபாத்திரக்காரன் உன்னைப்பற்றிக் கூறினான். நீ சொப்பனத்தை அர்த்தம் சொல்லுவதில் வல்லவன் என்று காண்கிறேன்' என்றான். அதற்கு யோசேப்பு, 'நான் அல்ல அரசே, கடவுளே தாங்கள் கண்ட சொப்பனத் திற்குப் பதில் சொல்லுவாராக' என்றான்.

38. சொப்பனத்தின் விளக்கம்

ஆதி. 41

பார்வோன் தான் கண்ட சொப்பனங்களை யோசேப்புக்குச் சொன்னான். ஏழு கொழுத்த பசுக்களை ஏழு மெலிந்த பசுக்கள் தின்று விட்டன. ஏழு சாவியான கதிர்கள் ஏழு கொழுமையான கதிர்களைத் தின்றுவிட்டன. இதன் விவரததை நீதான் சொல்லவேண்டும் என்றான்.

யோசேப்பு, பார்வோனிடம், அரசே உம் முடைய சொப்பனத்திற்குக் கடவுளே மங்கள மான பதில் சொல்வாராக என்று சொல்லி ஜெபித்து பார்வோனுடைய சொப்பனத் திற்குப் பதில் சொன்னான்.

அதாவது: அரசே! நீங்கள் கண்ட சொப்பனம் இரண்டும் ஒன்றுதான். கடவுள் தாம் செய்யப் போவதை முன்கூட்டியே உமக்கு அறிவித்திருக் கிறார்.

அதாவது: அந்த ஏழு கொழுத்த பசுக்களும் ஏழு செழிப்புள்ள ஏழு ஆண்டுகள். அதேபோல அந்த ஏழு கொழுமையான கதிர்களும், ஏழு செழிப்பான ஆண்டுகள். அவைகளின்பின் நீர் கண்ட ஏழு மெலிவான பசுக்களும் ஏழு பஞ்சமுள்ள ஆண்டுகள், ஏழு சாவியான கதிர் களும் ஏழு பஞ்சமுள்ள ஆண்டுகளையே குறிக்கும்.

அதாவது: பார்வோன் அரசே! கடவுள் உமக்குச் சொல்லுவது என்னவென்றால் எகிப்து தேசம் முழுவதும் ஏழு ஆண்டுகள் நல்ல விளைவு இருக்கும். ஆனால் அதன் பின்பு ஏழு ஆண்டுகள் கடுமையான பஞ்சம் உண்டாகும். அப் பொழுது இந்த ஏழு ஆண்டுகளின் நல்ல விளைச்சலும் குறைந்துபோகும். தேசம் எங்கும் கொடுமையான பஞ்சம் உண்டாகும். அப் பொழுது மக்கள் அதிகம் கஷ்டப்படுவார்கள்.

ஆகையால் அரசே! நல்ல ஞானமும், விவேக முள்ள ஒரு நல்ல மனுஷனைத் தெரிந்தெடுத்து உமது நாட்டின் அதிபதியாக்கும். அவன் நல்ல செழிப்பான ஆண்டுகளில் விளைச்சலின் பலனில் 1/5 வாங்கி சேர்த்து வைக்கட்டும். இப்படி செழிப்பான ஏழு ஆண்டுகளில் சேர்த்து வைக்கப்படும் தானியம் வரப்போகிற ஏழு ஆண்டின் பஞ்சத்தைத் தாங்கக்கூடியதாக இருக்கும் என்று பார்வோனின் சொப்பனத் திற்கு அர்த்தம் சொன்னான்.

39. யோசேப்பின் உயர்வு

ஆதி. 41

யோசேப்பு விவேகமாகச் சொன்ன சொப்பனத்தின் அர்த்தம் பார்வோனுக்கும், அவன் ஊழியக்காரர் எல்லோருக்கும் நலமாகப் பட்டது. அப்பொழுது பார்வோன் கடவுளின் ஆவியைப் பெற்ற இந்த மனிதனைப் போன்றவன் யாரும் நமது ஆட்சியில் உண்டோ? இல்லையே! நீ இவற்றையெல்லாம் வெளிப்படுத்தினபடியினால் உன்னைப்போல ஞானமும் விவேகமுள்ளவன் இங்கே இல்லை. ஆகவே நீயே என்னுடைய நாட்டிற்கு அதிபதியாக இருப்பாயாக என்றான்.

நீ சொல்லுகிறபடியே என்னுடைய நாட்டு மக்கள் கேட்கவேண்டும். உனக்கு அடங்கி நடக்கவேண்டும். நான் சிம்மாசனத்திலிருப்பவன்தானே தவிர நீயே நாட்டில் அதிபதியாக இருந்து எல்லாவற்றையும் கவனித்துக்கொள் என்று சொல்ல, தன் கையிலே போட்டிருந்த முத்திரை மோதிரத்தைக் கழற்றி யோசேப்புக்கு அணிவித்தான். அழகான மெல்லிய உடுப்பை அவனுக்கு அணிவித்து, பொற் சரப்பணியை அவன் கழுத்திலே போட்டான்.


தன்னுடைய இரண்டாம் இரதத்தை அவனுக்குக் கொடுத்து, அவனை இரதத்தின் மேல் ஏற்றிக்கொண்டு பவனியாக வந்து இவனே என்னுடைய நாட்டின் அதிபதி. நீங்கள் யாவரும் இவன் சொற்படியே கேட்கவேண்டும், ஆகவே நீங்கள் யாவரும் இவனைத் தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அறிவிப்புச் செய்தான். மக்கள் யாவரும் யோசேப்பைத் தெண்டனிட்டுப் பணிந்துகொண்டார்கள்.

பார்வோன் யோசேப்புக்கு 'சாப்நாத்பன்னேயா' என்ற புதுப் பெயர் கொடுத்தான். ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்திப்பிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்தை யோசேப்புக்கு மனைவியாகக் கொடுத்தான். இரு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களுக்கு மனாசே, எப்பிராயீம் என்று பெயரிட்டான். இவ்விதமாகக் கடவுள் அவனை ஆசீர்வதித்தார்.

40. யோசேப்பு எகிப்தின் அதிபதி

ஆதி. 41

யோசேப்பு ஆட்சியை ஏற்றுக்கொண்ட ஆண்டு செழிப்புள்ள ஆண்டின் துவக்கம். ஆகவே ஞானமுள்ள யோசேப்பு செழிப்பான ஏழு ஆண்டுகளில் விளைவில் ஐந்தில் ஒரு பங்கை வசூல் செய்து அவற்றைக் களஞ்சியங்களில் சேர்த்துவைத்தான். இவ்விதமாக ஏழு செழுமையான ஆண்டுகளிலும் மிகுதியான தானியத்தைச் சேர்த்து வைத்தான். வரும் ஏழு ஆண்டுகளின் கடும பஞ்சத்தையும் தாங்கக்



யோசேப்பு எகிப்தின் அதிபதி (ஆதி. 41)

கூடியதற்கு அதிகமான தானியத்தைச் சேர்த்து வைத்தான். எகிப்திலுள்ளவர்கள் மட்டுமல்ல அதனைச் சுற்றிலும் பஞ்சத்தினால் கஷ்டப்படும் யார் வந்தாலும் அவர்களுக்கும் உதவி செய்வதற்குப் போதுமான அளவு தானியத்தை யோசேப்பு சேர்த்து வைத்திருந்தான்.

யோசேப்பு சொல்லியபடியே ஏழு ஆண்டுப் பஞ்சம் துவங்கியது. ஜனங்கள் ஆகாரத்திற்காகப் பார்வோனை நோக்கி ஓலமிட்டார்கள். பார்வோன் அவர்களிடம், நீங்கள் யோசேப்பினிடம் போங்கள். அவன் உங்களுக்கு உதவி செய்வான் அவன் சொல்லுகிறபடி நீங்கள் செய்யுங்கள் என்றான்.

தேசமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாயிற்று. யோசேப்பு எகிப்து தேசம் மட்டுமல்ல, மற்ற தேசத்தினருக்கும் படியளந்தான். சகல தேசங்களிலிருந்தும் தானியம் வாங்க மக்கள் எகிப்திற்கு வந்தார்கள்.

41. அன்னமிட்ட யோசேப்பு

ஆதி. 42

திக்கெட்டும் பஞ்சம் எகிப்திலேதான் தானியம் கிடைக்கிறது என்று யாவரும் அறிந்து கொண்டார்கள். அந்தக் காலத்தில் கானான் நாட்டிலே யாக்கோபும் அவன் பிள்ளைகளும் வாழ்ந்து வந்தார்கள். கானானிலும் பஞ்சம் வந்தது. எங்கும் தானியம் கிடைக்கவில்லை. எகிப்திலேதான் தானியம் கிடைக்கும் என்று கேள்விப்பட்ட யாக்கோபு தன் குமாரரைப் பார்த்து நீங்கள் எகிப்திற்குப் போய்த் தானியம் வாங்கிக்கொண்டு வாருங்கள் என்று அவர்களை அனுப்பினான்.

தங்கள் சகோதரன் யோசேப்புதான் எகிப்து தேசத்தின் அதிபதியாக இருக்கிறான் என்பது அவர்களுக்குத் தெரியாது. இஸ்ரவேலின் மக்களில் பென்யமீன் தவிர மற்ற பத்துப் பேரும் தானியம் வாங்க எகிப்திற்கு வந்திருந்தார்கள். அவர்கள் யோசேப்பிடம் வந்து முகங்குப்புறத் தரையிலே விழுந்து அவனை வணங்கினார்கள்.

இப்போது யோசேப்பு முப்பது வயதுள்ளவனாக இருக்கிறான். நல்ல அழகனும், முகக்களையுள்ளவனுமாய், இராஜ கெம்பீரமுள்ளவனுமாய்க் காணப்பட்டான். ஆகையால் அவன் சகோதரரால் யோசேப்பு தங்கள் சகோதரன் என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் யோசேப்பு தன் சகோதரரை நன்கு அறிந்துகொண்டான். ஆனால் அவர்களோ அறியவில்லை.

யோசேப்பு அவர்களைப் பார்த்து நீங்கள் யார் எவ்விடத்தார் எதற்காக எகிப்துக்கு வந்தீர்கள். எங்கள் நாடு திறந்து கிடக்கிறது. நீங்கள் உளவாளிகளாயிருப்பீர்களோ என்று சந்தேகிக்கிறேன் என்றான். அதற்கு அவர்கள் ஐயா, நாங்கள் அப்படி உளவாளிகளல்ல. எங்கள் நாட்டிலே பஞ்சம் வந்துவிட்டது சாப்பாட்டிற்குத் தானியம் கிடைக்கவில்லை. எகிப்திலேதான் தானியம் கிடைக்கிறது என்று அறிந்து தானியம் வாங்க வந்தோம் என்றார்கள். அதற்கு யோசேப்பு, இல்லை நீங்கள் வேவுகாரர்கள்தான் என்றான்.

அதற்கு அவர்கள் ஆண்டவனே, உண்மையானவர்கள். எங்கள் சகோதரர் மொத்தம் பன்னிரண்டு பேர் எங்களில் ஒருவன் காணாமல் போய்விட்டான். இளையவன் பென்யமீன் அவனை எங்கள் தகப்பன் எங்களோடுகூட அனுப்ப மறுத்துவிட்டார். மூத்த மகன் ஒருவன் காணாமல் போய்விட்டான். இவனும் காணாமல் போய்விட்டால் நான் என்ன செய்வேன் ஆகவே அவனை அனுப்பமாட்டேன் என்று சொல்லிவிட்டார் என்றார்கள்.

அப்பொழுதும் யோசேப்பு அவர்களைப் பார்த்து நான் சொன்னது சரியாய்ப் போய் விட்டது நீங்கள் உளவாளிகள்தான். ஆகவே ஒன்று செய்யுங்கள் உங்கள் கடைசி சகோதரன் பென்யமீனை இங்கே கொண்டுவந்து காட்டுவீர்களானால் நீங்கள் சொல்வது உண்மையென்று நம்புவேன். ஆகவே உங்களில் ஒருவன் இங்கே பிணையாக நின்றுகொள்ளுங்கள். மற்றவர்கள் உங்கள் தந்தையிடம் போய்ச் சொல்லி கடைசிப் பையன் பென்யமீனையும் அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று சொல்லி அவர்களை மூன்று நாட்கள் காவலிலே போடுவித்தான்.

அவர்கள் நம்முடைய சகோதரனுக்கு நாம் துரோகம் செய்தோம். அந்தத் துரோகத்தை இப்பொழுது அனுபவிக்கிறோம். அவனுடைய இரத்தப் பழி நம்மீது கேட்கப்படுகிறது என்று சொல்லிப் பேசிக்கொண்டார்கள். யோசேப்பு மொழிபெயர்ப்பாளனைக்கொண்டு அவர்களுடன் பேசினபடியால் அவன் இன்னான் என்று அறிந்துகொள்ளவில்லை. ஆனால் யோசேப்போ அவர்களைவிட்டுத் தனியே போய் அழுதான்.

திரும்பவும் அவர்களிடம் வந்தான். சிமி யோனைப் பிடித்து பிணையாளியாக வைத்துக் கொண்டு மற்றவர்களைச் சாக்குகளில் தானியத் தைப் போட்டு, அவர்கள் கொடுக்கவேண்டிய பணத்தையும் அவனவன் சாக்கிலே போட்டுக் கட்டச் செய்தான். அவர்களுக்கு ஆகாரம் கொடுத்தபின் அவர்களை அனுப்பிவிட்டான். அவர்கள் புறப்பட்டுப் போனார்கள். வழியிலே தாங்கள் தங்கின இடத்திலே கழுதைக்குத் தீவனம் போடுவதற்காகச் சாக்கைத் திறந் தான். ஆனால் அதனுள்ளே தாங்கள் தானியத் திற்காகக் கொடுத்த பணமும் இருந்தது. அப்படியே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சாக்குகளைப் பார்த்தார்கள். அவரவர் பணம் அப்படியே உள்ளே போட்டு கட்டப்பட்டிருந் தது.

42. யாக்கோபின் மகன் பென்யமீன்

ஆதி. 42,43

சகோதரர் கானான் தேசத்திற்கு வந்து தங்கள் தகப்பனாரிடத்தில் எகிப்தில் நடந்த சம்பவங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி தங்களை வேவுக்காரர் என்று யோசேப்பு நினைத்ததையும், தங்கள் தங்கள் சாக்குகளிலே தாங்கள் தானிய விலைக்காகக் கொடுத்த பணம் அப்படியே எங்கள் சாக்குகளிலே வந்து விட்டன என்றும் விபரமாய்ச் சொன்னார்கள்.

நாங்கள் வேவுக்காரரல்ல என்பதை ருசுப் படுத்தவேண்டுமானால் நமமுடைய பென்ய மீனையும் கொண்டு வரவேண்டும். பென்ய மீன் எகிப்துக்கு வந்து சேரும்வரைக்கும் உங்களில் ஒருவன் இங்கே பிணையாளியாக இருக்கவேண்டும் என்று சொல்லி எங்களில் சிமியோனைப் பிடித்து வைத்துக்கொண்டு நீங்கள் போய் பென்யமீனை அழைத்துக் கொண்டு வரவேண்டும் என்று உத்தரவிட்டிருக் கிறான். நாங்கள் பென்யமீனோடு போகாவிட் டால் நம் சகோதரன் சிமியோனை அவன் விட மாட்டான் என்று சொன்னார்கள்.

நீங்கள் பென்யமீனை என்னிடம் கொண்டு வந்து காட்டினால் நீங்கள் வேவுக்காரன் அல்ல என்பதை அறிந்துகொள்வேன். உங்கள் சகோ தரன் சிமியோனையும் விடுதலை செய்வேன் நீங்கள் எகிப்திலே வியாபாரம் செய்யலாம் என்றும் சொன்னான். இவை யாவற்றையும் கேட்ட யாக்கோபு என் பிள்ளைகளில் யோசேப் பும் இல்லை, சிமியோனும் இல்லை இப்போது பென்யமீனையும் கொண்டுபோகப் பார்க்கிறீர் களே என்று அங்கலாய்த்தான். அதற்கு ரூபன் தந்தையே பென்யமீனை நான் பத்திரமாகத் திரும்பக் கொண்டு வந்து சேர்க்கிறேன். அவனை நான் கொண்டு வராவிட்டால் என்னுடைய இரண்டு பிள்ளைகளையும் கொன்று போடும் என்றான்.

நீங்கள் என் மகன் பென்யமீனைப் பத்திர மாகக் கொண்டு வந்து சேர்க்காவிட்டால் நான் வயதான காலத்திலே சஞ்சலத்தோடுதான் சாவேன் என்று சொன்னான்.

தேசத்தில் பஞ்சம் கொடியதாக வந்தால் தகப்பன் தன் பிள்ளைகளிடம் மறுபடியும் நீங்கள் எகிப்திற்குப் போய்த் தானியம் வாங்கிக்கொண்டு வாருங்கள் என்றான். அதற்கு அவர்கள் பென்யமீனை நீர் எங்களோடு அனுப்பாவிட்டால் நாங்கள் போகமாட்டோம் என்றார்கள். நீங்கள் ஏன் இன்னொரு சகோ தரன் எங்களுக்கு இருக்கிறான் என்று அவ னிடம் சொன்னீர்கள். எனக்கு ஏன் இப்போது சஞ்சலத்தைக் கொடுக்கிறீர்கள் என்றான்.

அதற்கு அவர்கள் தந்தையே அந்த மனிதன் நமது குடும்பத்தை அறிந்திருப்பவன்போல உங்கள் தகப்பன் இன்னும் உயிரோடிருக் கிறாரா? இன்னொரு சகோதரன் உங்களுக்கும் இருக்கிறானா? என்று நமது குடும்பத்தைப்பற்றி விசாரித்தான். ஆகவே நாங்கள் அவனிடம் உண்மையைச் சொன்னோம். அவன் இப்படி உங்கள் சகோதரன் பென்யமீனை என்னிடம் கொண்டு வாருங்கள் என்று அவன் சொல்லு வான் என்று நாங்கள் நினைக்கவில்லை என்றார் கள்.

யூதா என்பவன் தந்தையின் மன நிலையை அறிந்துகொண்டான். ஆகவே தந்தையிடம் தந்தையே பஞ்சத்தினால் நாம் சாகப் போகிறோம். நீர் பென்யமீனை அனுப்பாவிட் டால் நிச்சயம் நாம் பஞ்சத்தால் செத்துப் போவோம். ஆகவே அவனை என்னோடு அனுப் பும் நான் அவனைப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்க்கிறேன் என்றான்.

இதைக் கேட்ட யாக்கோபு அப்படியானால் நமது தேசத்தில் கிடைக்கக்கூடிய மிகவும் விலை யுயர்ந்த பொருட்களாகிய பிசின் தைலம், வெள்ளைப் போளம், தேன், தொரபிந்துக் கொட்டை, வாதுமைக் கொட்டை இவைகளை அந்த மனிதனுக்குக் காணிக்கையாகக் கொண்டு போய்க் கொடுங்கள். அதோடு இரட்டிப்பான

பணத்தையும் கொண்டுபோங்கள், சாக்குகளில் அவர்கள் வைத்துக் கட்டிய பணத்தையும் கொண்டு போங்கள் ஏனென்ருல் அது கைப் பிசகாய்க்கூட வந்திருக்கலாம் என்ருன்.

அவர்கள் காணிக்கையையும், தங்கள் கைகளில் இரட்டிப்பான பணத்தையும் எடுத்துக் கொண்டு, பென்யமீனையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்குப் புறப்பட்டுப் போனுர்கள்.

43. யோசேப்பு-பென்யமீன் சந்திப்பு

ஆதி. 43

யோசேப்புக்குத் தன் உடன் பிறந்த சகோதரனுகிய பென்யமீனைப் பார்க்கத் துடிக்கும் இருதயம், தன்னை வெறுத்த சகோதரரை நேசிக்கத் துடிக்கும் நெஞ்சம். பென்யமீன் வந்திருக்கிருன் என்று கேள்விப்பட்டவுடனே யோசேப்பின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கியது. காணத் துடித்தது கண்கள். யாவற்றையும் அடக்கிக்கொண்டு யோசேப்பு தன் வேலைக்காரரிடம் தன் சகோதரருக்கு நல்ல ஆகாரம் ஒழுங்கு செய்யும்படி கட்டளையிட்டான். இந்த மனிதர் என்னேடு சாப்பிடுவார்கள் என்ருன்.

உடனே வேலைக்காரன் அவர்களை யோசேப்பின் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனுன். யோசேப்பின் வீட்டிற்குக் கொண்டுபோகப்படுகிரும் என்று அறிந்தவுடனே அவர்கள் பயந்தார்கள். பந்தம் அறியாத பாசம் அவர்களைப் பயப்படச் செய்தது. பந்தத்தை அறிந்திருந்தால் பதறிப்போயிருப்பார்கள். ஆனந்தக் கண்ணீரல்லவா வடித்திருப்பார்கள்.

அவர்கள் பயப்படுவதிலும் நியாயம் உண்டு. ஏனென்ருல் அவர்கள் வஞ்சக நெஞ்சர்கள். ஆகவே யோசேப்பு தங்களைத் தண்டிப்பான் என்று பயந்தார்கள். அந்தப் பயத்திலே வாய் குழறியவர்களாக அய்யனே தாங்கள் முன்பு வந்தபோது நாங்கள் தானியக் கிரையமாகக் கொடுத்த பணம் எங்கள் சாக்கிலேயே திரும்பவும் எங்களிடம் வந்துவிட்டது. ஆகவே எங்கள் குறையை மன்னித்து இந்தப் பணத்தை ஏற்றுக்கொள்ளும் என்று யோசேப்பின் வேலைக்காரனிடம் சொன்னுர்கள்.

அதற்கு அந்த வேலைக்காரன் பயப்படவேண்டாம். உங்கள் பிதாக்களின் கடவுள் உங்களோடிருக்கிருர். ஆகவே அந்தப் பணத்தை உங்கள் சாக்கிலேயே உங்களுக்குப் புதையலாக அனுப்பிவிட்டார். ஆனுல் எங்களுக்குச் சேரவேண்டிய பணம் எங்களுக்கு வந்துவிட்டது என்ருன்.

சிமியோனையும் விடுதலைப் பண்ணி அவனையும் சகோதரரோடு கொண்டு வந்து சேர்த்தான். யோசேப்பின் வீட்டிலே அவர்களுக்கு விருந்து என்று கேள்விப்பட்டபடியால் அவர்கள்



யோசேப்பு பென்யமீன் சந்திப்பு (ஆதி. 43)



யோசேப்பு பென்யமீன் சந்திப்பு (ஆதி. 43)

யோசேப்பு வரும் வரையில் காத்திருந்தார்கள். யோசேப்பு வீட்டிற்குள் வந்ததும் தங்கள் காணிக்கைகளையும், கைபபிசகாய் வந்த பணத்தையும் அவன்முன் வைத்துவிட்டுத் தரை மட்டும் குனிந்து வணங்கினார்கள்.

அப்பொழுது யோசேப்பு அவர்கள் சுக செய்தியை விசாரித்தான். உங்கள் தந்தை உயிரோடிருக்கிறாரா என்று விசாரித்தான். பின்பு பென்யமீனைப் பார்த்து இவன்தானா உங்கள் கடைசி சகோதரன் என்று கேட்டான். அன்புக் கடல் பொங்கி அடங்க முடியாமல் கண்ணீர் கரை புரண்டோடியது. அதை மறைக்க யோசேப்பு சடுதியாய் அகன்றுபோய் அழுது தீர்த்தான். முகத்தைக் கழுவியபின் தன்னை யடக்கிக்கொண்டு உணவு படைக்கச் சொன்னான். எபிரேயரும் எகிப்தியரும் ஒன்றாக உட்கார்ந்து உணவு உண்ணமாட்டார்கள். ஆகவே அவர்களிருவரும் எதிர் எதிரே உட்கார்ந்து உணவருந்தினார்கள்.

பந்தி வரிசையிலே மூத்தவன் முதல் கடைக்குட்டிவரை வரிசையாக உட்காரவைத்தான். அவனவன் வயதின்படியே உட்காரவைத்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். பங்கிடு செய்வதிலும் பாரபட்சமா? பென்யமீனுக்கு ஐந்து மடங்கு அதிகமாகப் படைக்கப்பட்டது. அன்று யாவரும் சாப்பிட்டு, பானம் அருந்தி மகிழ்ச்சியாயிருந்தார்கள்.

44. யோசேப்பு தன்னை சகோதரருக்கு வெளிப்படுத்தல்

ஆதி. 44

யோசேப்போடு சகோதரர் யாவரும் உணவருந்தினார்கள். மகிழ்ச்சியாக இருந்தார்கள். அந்த மகிழ்ச்சி வேளையிலே யோசேப்பின் வேலைக்காரன் அந்த மனிதருடைய சாக்குகளில் தானியத்தை நிரப்பி அவனவன் பணத்தையும் அதிலே போட்டுக் கட்டச் செய்தான். இளையவனாகிய பென்யமீன் சாக்கிலே தன்னுடைய வெள்ளிப் பாத்திரத்தையும் போட்டுக் கட்டும்படி உத்தரவிட்டிருந்தான். யோசேப்பு சொன்னபடியே அவர்கள் செய்து முடித்தார்கள்.

அதிகாலையில் அந்தச் சகோதரர் எழும்பி தங்கள் கழுதைகளை ஓட்டிக்கொண்டு கானானுக்குப் புறப்பட்டார்கள். பட்டணத்தை விட்டு கொஞ்சத் தூரம்தான் போயிருப்பார்கள். யோசேப்பு தன்னுடைய வேலையாட்களை அனுப்பி அவர்களைப் பார்த்து நீங்கள் அன்னமிட்ட வீட்டிலே கன்னமிடலாமா? இதோ உங்களில் யாரோ ஒருவன் எங்கள் அதிபதி பானம் பண்ணுகிற வெள்ளிப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு வந்துவிட்டான். நீங்கள் நன்மை செய்தவர்க்குத் தீமை செய்தது என்ன என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள் ஐயன்மாரே நாங்கள் அப்படிப்பட்ட துரோகத்தைச் செய்வோமா? இதற்கு முந்திய தடவை 'நாங்கள் வந்தபோது எங்கள் சாக்குகளின் வாயிலே நாங்கள் கண்ட பணத்தைக் கானான் தேசத்திலிருந்து திரும்ப உம்மிடத்துக்கு கொண்டு வந்தோம்.' ஆகவே நாங்களா இப்படிப்பட்ட இராஜ துரோகம் செய்வோம் என்று சொன்னார்கள்.

அப்பொழுது மூத்தவன் சாக்கு முதல் இளையவன் சாக்குவரை சோதித்துப் பார்த்தார்கள்! அந்தக் கிண்ணம் பென்யமீன் சாக்சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்டது. சகோதரர் யாவரும் தலையிலே அடித்துக்கொண்டு மறுபடியும் யோசேப்பின் அரண்மனைக்குச் சென்றார்கள்.

யோசேப்பு அவர்களைப் பார்த்து நான் உங்களுக்கு நன்மை செய்திருக்க நீங்கள் எனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தது என்ன? என்னைப் போன்ற மனிதருக்கு ஞான திருஷ்டியினால் காரியம் தெரியவரும் என்று நீங்கள் அறியாமல் போனீர்களே, என்றார்.

அதற்கு யூதா என்பவன் ஆண்டவனே நாங்கள் உம்மிடத்தில் என்ன சொல்வோம் நாங்கள் நிரபராதிகள் என்பதை எப்படி நிரூபிப்போம். பாத்திரம் வைத்திருக்கிறவனும், நாங்களும் உமது அடிமைகள் என்றான். அதற்கு யோசேப்பு என்னுடைய குறிக்கோளெல்லாம் எவனிடத்தில் பாத்திரம் கண்டு பிடிக்கப்பட்டதோ அவனே என்னுடைய அடிமையாகவேண்டும் என்றான்.

இதைக் கேட்ட யூதாவின் இருதயம் வெடித்துவிடுவதுபோலிருந்தது. ஆகவே அவன் யோசேப்பிடம் ஆண்டவனே! எங்கள் தந்தை யாக்கோபு பென்யமீனிடம் அதிகமான பாசமுள்ளவர். தன்னுடைய உயிரையே அவன் மேல் வைத்திருக்கிறார். ஏனென்றால் எங்கள் சகோதரன் யோசேப்பு காணாமல் போய்விட்ட ஏக்கம் இன்னும் எங்கள் தந்தையைவிட்டு அகலவில்லை. ஆகவே பென்யமீனை எங்களோடு

கூட்டிக்கொண்டு போகாமல் போனால் எங்கள் தந்தை இறந்துபோனாலும் போவார். ஆகையால் தாங்கள் தயவுகூர்ந்து எங்கள் சகோதரன் பென்யமீனை விடுதலை கொடுத்து எங்களோடு அனுப்பவேண்டும் என்றான்.

உமது அடிமையாகிய நான் அவனுக்குப் பதிலாக அடிமையாக இருக்கிறேன் என்றான். இவனை விட்டுவிட்டு நான் எப்படி என் தகப்பன் முகத்தில் விழிப்பேன். என் தகப்பனுக்கு ஏற்படும் தீங்கை எப்படிச் சகிப்பேன் என்றான்.

45. யோசேப்பின் அன்பு

ஆதி. 45

யோசேப்பு தந்தையின் பாசத்திற்காகவும் சகோதரரின் பாசத்திற்காகவும் ஏங்கினான். ஆனால் யாருமே கண்டுகொள்ள முடியாத பல விதமான தடைகள். எப்படித்தான் தன்னை வெளிப்படுத்துவது என்ற அன்பின் வெள்ளத்தை அவனால் அணைகட்ட முடியவில்லை.

சகோதரர்கள் தவிர மற்றவர்களை வெளியே போகச்செய்தான். அவர்கள் கழுத்தைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதான். கண்களே குளமாக கண்ணீரே வெள்ளமாகி விம்மி அழுதான். அன்பு ஆறுகப் பெருக்கெடுத்தோடியது. உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான் நீங்கள் என்னை விற்றுப் போட்டதற்காகச் சஞ்சலப்படவேண்டாம். உங்கள் யாவரையும் காப்பாற்றுகிறதற்காகக் கடவுள் என்னை இங்கே முன்னதாகவே கொண்டு வந்தார். அதற்காகவே என்னை எகிப்து தேசம் முழுவதற்கும் அதிபதியாக வைத்தார். நீங்கள் சீக்கிரமாய் நமது தந்தையினிடத்திலே போய் கடவுள் என்னை இந்த தேசம் முழுவதற்கும் அதிபதியாக வைத்திருக்கிறார். ஆகவே என்னைப் பார்க்க சீக்கிரமாகப் புறப்பட்டு வரச் சொல்லுங்கள் என்றான். எகிப்தில் எனக்கிருக்கும் சகல அதிகாரங்களையும் மரியாதைகளையும் மகிமையையும் நீங்கள் கண்ட யாவையும் என் தகப்பனுக்கு அறிவித்து அவரை இவ்விடத்திற்கு வரும்படி செய்யுங்கள் என்று சொல்லி தன் தம்பியாகிய பென்யமீன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதான். பின் தன் சகோதரர் யாவரையும் கட்டி முத்தம் செய்து அழுதான்.

46. பார்வோன் அரசனின் நலமிக்க பேச்சு

ஆதி. 45

யோசேப்பின் சகோதரர் வந்திருக்கிறார்கள் என்ற விபரம் பார்வோனுக்கும், பார்வோன் அரண்மனை முழுவதற்கும் தெரிய வந்தது. பார்வோனும் அவன் ஊழியக்காரரும் சந்தோஷமடைந்தார்கள்.

பார்வோன் யோசேப்பிடம் நீ உன் சகோதரரிடம் நீங்கள் சீக்கிரமாய்க் கானானுக்குப் போய் உன் தகப்பனையும், உன் குடும்பத்தார் யாவரையும் அழைத்துக்கொண்டு வரச் சொல். உன் சகோதரர், உங்கள் மனைவிகள், உங்கள் குழந்தைகள் யாவரையும் உங்கள் தட்டுமுட்டுச் சாமான்கள், உங்களுக்குத் தேவையான சகல பொருட்களையும் ஏற்றிக்கொண்டு வருவதற்கு வண்டிகளையும் கழுதைகளையும் தருகிறேன் என்று சொன்னான்.

யோசேப்பும் தன் சகோதரரிடம் நீங்கள் சீக்கிரமாய்ப் போய் என் தகப்பனையும், அவனுடைய பிள்ளைகளையும், பேரப் பிள்ளைகளையும் ஆடு மாடுகளோடும், இன்னும் சகல உடமைகளோடும் வந்து கோசேன் நாட்டிலே என் பக்கத்திலேயே குடியிருக்கலாம் என்று சொல்லியனுப்பினான்.

இஸ்ரவேலின் குமாரருக்கு வண்டிகளையும், கொடுத்ததுமன்றி ஒவ்வொருவருக்கும் இரண்டிரண்டு உடுப்புக்களும், தன் தகப்பனுக்குப் பத்துக் கழுதைகள் சுமக்கத்தக்க உச்சிதமான பொருட்களையும் கொடுத்து அனுப்பினான்.

அவர்கள் கானானுக்குப் போய் அங்கே தங்கள் தந்தையிடம் யோசேப்பு உயிரோடிருக்கிறான் என்றார்கள். யாக்கோபு யோசேப்பு உயிரோடிருக்கிறான் என்ற செய்தியைக் கேட்ட அதிர்ச்சியில் அவனுடைய இருதயம் ஒரு கணம் நின்றது, என்றாலும் நம்பவில்லை.

யோசேப்பு தங்களிடம் சொன்ன வார்த்தைகள் யாவையும் சொன்னபின், அவன் அனுப்பிய பொருட்களைப் பார்த்தபின் அவனுடைய உயிர் அவனுக்குத் திரும்ப வந்தது. நான் மரணமடையுமுன்னே அவனைப் போய்ப் பார்ப்பேன் என்று உடனே எகிப்துக்குப் புறப்பட்டான்.

47. தந்தை மகன் சந்திப்பு

ஆதி. 46

யாக்கோபு தனக்குண்டான யாவற்றையும் சேர்த்துக்கொண்டு, புறப்பட்டு பெயர்செபா விற்குப்போய் தன் தகப்பனுகிய ஈசாக்கின் தேவனுக்குப் பலியிட்டான். அன்று இரவிலே கடவுள் இஸ்ரவேலுக்கு தரிசனமாகி இஸ்ர வேலே நான் உன் கடவுள். உன் தகப்பனுடைய கடவுள். நீ எகிப்துக்குப் போக யோசிக்கவோ, பயப்படவோ வேண்டாம். நானும் உன்னேடு எகிப்துக்கு வருவேன். உன்னை மறுபடியும் உன் சொந்த நாட்டிற்கு அழைத்து வருவேன். உன் பிரியமான மகன் யோசேப்பும் உன் கடைசி நாட்களில் உன்னேடு இருப்பான். அவனே உன்னை அடக்கம் செய்வான் என்றார்.

இஸ்ரவேலும், அவனுடைய மக்களும், மருமக்கள்மாரும், பேரப் பிள்ளைகளுடனும், தங்கள் ஆடுமாடுகள், தாங்கள் கானனில் சேர்த்துவைத்த பொருட்களையும் எடுத்துக் கொண்டு பார்வோன் அரசன் அனுப்பிய வாகனங்களில் ஏறிப் புறப்பட்டுப் போனார்கள்.

எகிப்திற்குப் போன இஸ்ரவேலின் குடும்பத் தினர் மொத்தம் எழுபதுபேர். கோசேன் நாடு தான் அவர்களுக்குப் பார்வோனல் கொடுக்கப் பட்ட நாடு. கோசேனையடையும் முன்னதாக இஸ்ரவேல் யூதாவைத் தனக்கு முன்னதாக அனுப்பி யோசேப்பு தன்னைக் கோசேன் நாட்டில் சந்திக்கும்படி சொல்லி அனுப்பினன்.

தந்தையைக் காணத் துடித்துக்கொண்டிருந் தான் யோசேப்பு. அந்தச் சமயம் யூதாமூலம் தன்னுடைய தந்தையின் வரவை அறிந்து மகிழ்ச்சியடைந்தான். யோசேப்பு தன்னு டைய இரதத்தில் ஏறித் தன் தகப்பனுகிய யாக்கோபைக் கோசேனில் சந்தித்து அவனு டைய கழுத்தைக் கட்டிக்கொண்டு வெகு நேரம் அழுதான்.

இஸ்ரவேலும் தன் மகன் யோசேப்பை முத்தம் செய்து என் மகனே நான் உன்னைக் கண்டேன். இனி நான் சமாதானமாக மரிப் பேன் என்றான்.

இஸ்ரவேலும் அவனுடைய பன்னிரண்டு பிள்ளைகளும் அவனுடைய குடும்பமும் அந்நிய நாட்டிலே தன் மகன் யோசேப்பை நீண்ட காலத்திற்குப்பின் சந்தித்த மகிழ்ச்சியிலே தங்களையும் மறந்து கடவுளின் பிரசன்னத்தை யும் அவருடைய வழிநடத்துதல்களையும் நினைத்து நன்றிப் பெருக்கால் அப்படியே நின்றனர். கடவுள் அவர்களை ஆசீர்வதித்தார்.

48. பார்வோனின் பெருந்தன்மை

ஆதி. 47

யோசேப்பு பார்வோனிடம்போய் என் தகப்பனும், சகோதரரும் தங்கள் ஆடுமாடு களுடனும், தங்களுக்கு உண்டான யாவற் றோடும் கானன் நாட்டிலிருந்து கோசேன் நாட்டிற்கு வந்துவிட்டார்கள். இப்போது கோசேனில் தான் இருக்கிறார்கள் என்று அறி வித்தான்.

யோசேப்பு தன் சகோதரில் ஐந்துபேரைப் பார்வோனிடத்திற்குக் கூட்டிக்கொண்டு வந் தான். பார்வோன் அவர்களோடே பேசினன். யோசேப்பின் சகோதரர் திரளான ஆடுமாடு களுள்ளவர்கள் என்றும் கடவுளால் ஆசீர் வதிக்கப்பட்ட குடும்பம் என்றும் அறிந்து கொண்டான். பின்பு யோசேப்பு தன் தந்தை யாகிய யாக்கோபையும் பார்வோனிடம் அழைத்துக்கொண்டு போனன். பார்வோன் யாக்கோபை நோக்கி ஐயா உங்களுடைய வயது என்ன என்று கேட்டான்? அதற்கு யாக் கோபு என் வயதையும், என் பிதாக்கள் வயதை யும் ஒப்பிட்டால் என் வயது சொற்பமே, இப் போது என் வயது நூற்று முப்பது என்று சொன்னன். பின்பு யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்தான்.

பின்பு பார்வோன் யோசேப்பிடம் எகிப்து தேசம் முழுவதும் உன்னிடம் இருக்கிறது. உன் சகோதரர் இந்த தேசத்தில் எந்த இடத்திலே யும் குடியிருக்கலாம். அவர்களில் திறமையுள்ள வர்கள் யாராவது இருந்தால் நமது ஆடு மாடு களை மேய்ப்பவர்களுக்குத் தலைவனுகவும் ஏற்படுத்தலாம் என்றான்.

அவ்விதமாக யாக்கோபின் பிள்ளைகள் கோசேன் நாட்டிலே குடியிருந்தார்கள். அவர் களும் தங்கள் விளைச்சலிலே ஐந்தில் ஒரு பங்கை யோசேப்பிடம் கட்டி வந்தார்கள். யாக்

கோபும் அவனுடைய பிள்ளைகளும் எகிப்து தேசத்திலே பதினேழு வருடம் குடியிருந்தார்கள். யாக்கோபுக்கு வயது அப்போது நூற்று நாற்பதிதேழு.

இவ்விதமாகக் கடவுள் தெரிந்துகொண்ட மக்களாகிய யாக்கோபின் வம்சத்தாராகிய இஸ்ரவேலுக்கு கடவுள் பார்வோன் கண்களிலே தயவு கிடைக்கச் செய்தார்.

49. யாக்கோபின் இறுதி நாட்கள்

ஆதி. 49

தன்னுடைய தகப்பன் மரணத்தறுவாயிலிருக்கிறார் என்று அறிந்து யோசேப்பு தன்னுடைய குமாரனாகிய மனாசேயையும் எப்பிராயிமையும் கூட்டிக்கொண்டு தகப்பனுடைய கடைசி ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வந்தான். யோசேப்பு வந்திருக்கிறான் என்று கேள்விப்பட்டவுடனே இஸ்ரவேல் எழுந்து உட்கார்ந்தால்.

யோசேப்பு தன் குமாரர் இருவரையும் தந்தையின் முன்னால் நிறுத்தி அவர்களை ஆசீர்வதிக்கும்படி கேட்டான். யாக்கோபின் பார்வை மங்கியிருந்ததால் அவர்களைத் தன் பக்கமாக வரச்சொன்னான். பின்பு யாக்கோபு என் மகனே! யோசேப்பே! நான் உன்னைக் காண்பேன் என்று நினைக்கவில்லை. ஆனாலும் கடவுள் உன்னையும் உன் பிள்ளைகளையும் காணக் கிருபை செய்தார் என்றான். இதைக் கேட்ட யோசேப்பு தன் தகப்பனுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து அவனை வணங்கினான். பின்பு தன் மகன் மனாசேயைத் தன் தகப்பனுடைய வலது கைக்கு நேராகவும், எப்பிராயீமை இடது கைக்கு நேராகவும் நிறுத்தினான்.

இஸ்ரவேலோ தன்னுடைய வலது கையை எப்பிராயீம் மீதும் இடது கையை மனாசே மீதும் வைத்தான். அதற்கு யோசேப்பு அப்பா மனாசேதான் மூத்தவன் அவன்மீது உமது வலது கையை வையும் என்றான். அதற்கு இஸ்ரவேல் அது எனக்குத் தெரியும். மனாசேயும் ஆசீர்வதிக்கப்படுவான். ஆனால் இவன் தம்பியோ இவனிலும் அதிகமாய் ஆசீர்வதிக்கப்படுவான் என்றான்.

இஸ்ரவேல் கடைசியாக யோசேப்பை நோக்கி இதோ நான் மரணமடையப்போகிறேன். தேவன் உங்களோடேயிருப்பார் அவர் உங்களை மறுபடியும் கானானுக்குள் கூட்டிச் சேர்ப்பார் என்று சொல்லி தன்னுடைய பிள்ளைகள் யாவரையும் கூட்டிவரச் செய்தான். பன்னிரண்டு பிள்ளைகளையும் வயதுப் பிரகாரம் வரிசையாக நிறுத்தி ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்தான்.

கடைசியாக என் பிள்ளைகளே, என்னை என் பிதாக்களோடே அடக்கம் பண்ணுங்கள் எப்ரோனிலுள்ள மத்பேலாவிலே நம் தந்தை ஆபிரகாமும், சாராளும், ஈசாக்கும் அவர் மனைவியாகிய ரெபேக்காளும், அங்கே லேயாளும் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறாள். என்னையும் அங்குக் கொண்டுபோய் அடக்கம் பண்ணுங்கள் என்று சொல்லி, கட்டிலின்மேல் படுத்து மரித்துப் போனான். யோசேப்பு தன் தகப்பன் மேல் விழுந்து அழுதான். பிள்ளைகள் யாவரும் அழுதார்கள்.

50. யாக்கோபின் அடக்கம்

ஆதி. 50

யோசேப்பு தன் தகப்பனுடைய சரீரத்திற்குச் சுகந்த வர்க்கமுள்ள வாசனைத் திரவியங்களை வார்க்கும்படி தன்னுடைய வைத்தியர்களுக்குக் கட்டளையிட்டான். நாற்பது நாள் அந்த சரீரத்திற்குச் சுகந்த வர்க்கமிட்டார்கள். எகிப்தியர் எழுபது நாட்கள் துக்கம்கொண்டாடினார்கள்.

யோசேப்பு பார்வோனுக்கு இந்தச் செய்தியை அறிவித்தான். பார்வோன் யோசேப்பிடம் உன் தந்தை இறுதி நாட்களில் உன்னிடம் சொன்னபடி எப்போனிலுள்ள மக்போலாவிலே அவரை கொண்டுபோய் அடக்கம் செய்யுங்கள் என்றான்.

யோசேப்பு தன் தகப்பனை அடக்கம் பண்ணப் போகும்போது பார்வோன் அரண்மனையிலிருந்த சகல உத்தியோகஸ்தரும், எகிப்து தேசத்திலுள்ள சகல பெரியோரும், யோசேப்பின் வீட்டாரனைவரும், யோசேப்பின் சகோதரர் குடும்பத்திலுள்ள யாவரும், இரதங்களும், குதிரை வீரரும், பெரிய பரிவாரக் கூட்டமாக வந்தார்கள்.

இந்தப் பவனியைக் கண்ட கானான் தேசத்தாரும் இவர்களோடு கூடிக்கொண்டார்கள். அங்கே தானே ஆபிரகாம் தன்னுடைய மனைவி சாராளை அடக்கம் செய்ய விலைக்கு வாங்கிய பூமியிலே யாக்கோபை அடக்கம் செய்தார்கள். தங்கள் தந்தையை அடக்கம் பண்ணியபின் சகோதரர் யாவரும் எகிப்திற்குத் திரும்பினார்கள். தந்தை இறந்துபோனதால் யோசேப்பு தங்கள்மீது கோபப்படுவானோ என்று பயந்து போய் அவனிடத்திலே ஆள் அனுப்பி உமது சகோதரர் செய்த பொல்லாப்புகளையும் நீர் மன்னிக்கவேண்டும் என்று பரிந்து பேசும்படி சொன்னார்கள். யோசேப்பு அவர்கள் பார்க்கும்படி வந்தான். அப்போது அவர்கள் அவன் காலில் விழுந்து தாங்கள் செய்த துரோகத்தை மன்னிக்கவேண்டும் என்றார்கள். யோசேப்பு அவர்களைப் பார்த்து அழுதான். நீங்கள் பயப்படாதிருங்கள் நான் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் பராமரிப்பேன் என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி அவர்களை அன்பாக நடத்தினான்.

யாத்திராகமம்

முன்னுரை

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு இவர்கள் வழித் தோன்றிய மக்கள் இனத்திற்குக் கடவுள் ஒரு புதிய பெயர் கொடுக்கிறார். அதுதான் இஸ்ரவேல் மக்கள் எனப்பட்டது. அவர்கள் தம் நாட்டைவிட்டு எகிப்து நாட்டில் குடியேறி நானூற்று ஐம்பது ஆண்டுகள் தங்கி வாழ்ந்தனர்.

அதன் பின்பு அவர்கள் எகிப்து நாட்டிலிருந்து கடவுளால் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குக் கடவுளின் துணையோடு யாத்திரை செய்த வரலாற்றைக்கொண்டது யாத்திராகமம்.


யோசேப்புக்கு எகிப்து அரசன் கண்களில் தயவு கிடைத்தது. இதனால் 'இஸ்ரவேல்' என்று கடவுளால் அழைக்கப்பட்ட யாக்கோபுவும், அவர் பிள்ளைகளும், அவர்கள் குடும்பங்களுமாகச் சுமார் எழுபதுபேர்கள் கானான் தேசத்திலிருந்து எகிப்துக்குக் குடிவந்தனர். அவர்கள் யாவரும் 'கோசேன் என்னும் பகுதியில் தங்கள் மந்தைகளுடன் வாழ்ந்தனர். இவர்கள் 'இஸ்ரவேலர்கள்' என அழைக்கப்பட்டனர். சுமார் நானூற்று முப்பது ஆண்டுகள் கடந்தபின் இந்த இஸ்ரவேலர்கள் பத்து லட்சத்திற்கும் அதிகமாகப்பெருகி எகிப்து நாட்டில் வாழ்ந்தார்கள்.

51. எகிப்தில் இஸ்ரவேலர்கள்

யாத். 1

இஸ்ரவேலர்கள் எகிப்தில் குடியேறி சுமார் நானூற்றி முப்பது ஆண்டுகளுக்குப்பின், யோசேப்பையும் அவர்மூலம் எகிப்து பெற்ற நன்மைகளையும் அறியாத ஒருவர் எகிப்தின் அரசரானார். இஸ்ரவேலர்களின் பெருக்கத்தையும், அவர்கள் பலசாலியாக இருப்பதையும் அந்த அரசன் விரும்பவில்லை. எனவே அவன் இஸ்ரவேலர்களுக்குக் கட்டிடவேலை, வயல்வேலை போன்ற கடின வேலைகளைக் கொடுத்தான். 'பித்தோம்', 'ராம்சேஸ்' போன்ற பெரிய களஞ்சியப் பட்டிணங்களைக் கட்டுவதற்கு இஸ்ரவேலர்களைப் பயன்படுத்தினான். இஸ்ரவேலர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். என்றாலும் இஸ்ரவேலர்களின் பெருக்கமும் குறையவில்லை, அவர்கள் பலமும் குன்றவில்லை.

அரசன் தன் அமைச்சர்களுடன் ஆலோசனை செய்தான். பின்னர் மருத்துவத் தாதியர்களை அழைத்து, 'நீங்கள் எபிரேயப் பெண்களுக்கு பிரசவம் பார்க்கும்போது, ஆண் குழந்தை பிறந்தால் கொன்று போடுங்கள், பெண் குழந்தை பிழைத்துப்போகட்டும்' என்று கட்டளையிட்டான். ஆனால் கடவுளுக்குப் பயந்த அந்தத் தாதிகள் குழந்தைகளைக் கொல்லாததோடு அரசன் கேட்டதற்குத் தங்கள் உதவியில்லாமலேயே எபிரேயப் பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்ளுவதாகவும் கூறினர். சில நாட்கள் சென்றன. மீண்டும் தன் அமைச்சர்களுடன் ஆலோசனை செய்த அரசன் ஒரு முடிவுக்கு வந்தான். இஸ்ரவேலர்கள் அனைவர்க்கும், 'உங்களுக்கு ஆண் குழந்தைகள் பிறந்தால் நதியிலே தூக்கி எறிந்துவிட வேண்டும், பெண் குழந்தைகள் உயிரோடிருக்கட்டும்' என்று கட்டளையிட்டான். இப்படியாக இஸ்ரவேலர் நெருக்கப்பட்டனர்.



எகிப்தில் இஸ்ரவேலர் (யாத். 1)

52. மோசேயின் பிறப்பு

யாத். 2

எகிப்து நாட்டில் 'லேவி'யின் குடும்பத்தைச் சேர்ந்த அம்ராம்—யோகெபேத் தம்பதியினர் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு இரு குழந்தைகள் இருந்தனர். மூத்த பெண் குழந்தைக்குப் பதிமூன்று வயது. மிரியம் என்பது அப்பெண்ணின் பெயர். இரண்டாவது ஆண் குழந்தைக்கு மூன்று வயது ஆரோன் என்பது அவன் பெயர். மூன்றாவது குழந்தை பிறக்கவிருந்த நேரத்தில்தான் எகிப்து அரசன் ஆண் குழந்தைகளைக் கொன்றுவிடும்படி கட்டளையிட்டிருந்தான். இந்நிலையில் இந்த அன்பான தம்பதிகளுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையைக்கொல்ல மனமில்லாமல் இந்தத் தம்பதியினர் மூன்று மாதங்கள்வரை ஒளித்து, ஒளித்து வளர்த்தனர். தொடர்ந்து ஒளித்து வளர்க்கவும் இயலவில்லை, கொல்லவும் மனம் வரவில்லை என்ன செய்வது? என சிந்தித்தார்கள்.

'யோகெபெத்'திற்கு ஒரு யோசனை வந்தது. அதன்படி கீல் பூசப்பட்ட ஒரு கூடையில் அக்

குழந்தையைக் கிடத்தி ஆற்றுப்படுகையில் உள்ள நாணல்களுக்கு மத்தியில் கொண்டு போய் வைத்தார்கள். அக் குழந்தையின் சகோதரி மிரியத்தைச் சற்று தூரத்தில் ஒளிந்து நின்று என்ன நடக்கிறதென்று பார்த்துவரும் படி கூறினார்கள். அப்போது அந்நாட்டின் இளவரசி தன் தோழியர் புடைசூழ குளிப் பதற்காக அங்கு வந்தாள். அச்சமயம் பச்சிளங் குழந்தை ஒன்றின் அழுகுரல் கேட்டது. குழந் தையின் அழுகுரல் எங்கிருந்து வருகிறது? என்று அவர்கள் தேடியபோது. அவர்கள் கண் களில் அந்தக் கூடை தென்பட்டது. இளவரசி அந்தக் கூடையை எடுத்துவரச் செய்து, அதனுள் இருந்த அழகான ஆண் குழந்தை யைக் கண்டாள். குழந்தைமேல் அவளுக்கு அன்பு பிறந்தது. அதைத் தன் குழந்தையாக வளர்க்க எண்ணினாள். நான் தண்ணீரினின்று எடுத்தேன், என்று சொல்லி அக் குழந்தைக்கு 'மோசே' என்று பெயரிட்டாள்.



மோசேயின் பிறப்பு (யாத். 2)

குழந்தை பசித்து அழுதது, அப்பொழுது மிரியம் ஓடிவந்து இளவரசியைப் பார்த்து 'உங்களுக்காக இந்தப் பிள்ளையை வளர்த்து வருவதற்கு நான் ஓர் எபிரேயப் பெண்ணை அழைத்து வரவா?' என்று கேட்டாள். உடனே அழைத்து வா, என்று இளவரசி கூறவே ஓடிப் போய்த் தந்திரமாய்க் குழந்தையின் தாயாகிய யோகெபேத்தை அழைத்து வந்தாள் மிரியம். இளவரசி அக்குழந்தையைத் தாயிடம் கொடுத்து எனக்காக வளர்த்து வா என்று சொல்லி அதற்கான செலவை சம்பளமாகவும் பெற்றுக்கொள் என்றாள். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் இருக்கிறதல்லவா?

குழந்தை மோசேக்குத் தாய்ப்பாலோடு, தாய் நாட்டுப் பற்றும் இனப்பற்றும், கடவுள் பக்தியும் கிடைத்தன. உரிய பருவத்தில் மீண் டும் அரண்மனைக்கே இளவரசியின் மகனாகக் கொண்டுசெல்லப்பட்டான். அரண்மனையில் அரசகுமாரனாக மோசே வளர்ந்து வந்தான்.

53. அரண்மனை வாழ்வு

யாத். 2

மோசேயின் முதல் ஆசிரியர் அவரது தாயே. தன் சிறு குழந்தையைக் காத்த கடவுள், அக் குழந்தையைக்கொண்டு பெரிய காரியங்களைச் செய்வார் என்று விசுவாசித்த யோகெபேத் நாள்தோறும் ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், யோசேப்பு போன்ற பக்தர்களின் வரலாற்றைக் கதைகளாக மோசேக்குக் கூறு வது வழக்கம். ஜெபம் பண்ணுவது எப்படி என்பதுவும் மோசேக்குக் கற்றுக் கொடுக்கப் பட்டது. தன் இனத்தாருக்காகத்தான் ஏதா வது செய்யவேண்டும் என்ற எண்ணமும் அவர் மனதில் பதியத் தொடங்கியது. ஆண்டு கள் பல கடந்தன.

மோசேக்கு பனிரெண்டு வயதானபோது அரண்மனை வாழ்வு தொடங்கியது. அழகான தோற்றத்துடன், நற்குணங்களுடன், புத்திக் கூர்மையுடன் இருந்த மோசேயை அரண்மனை யிலிருந்த யாவரும் விரும்பினர், அரசனும் விரும்பினான். அரசன் மோசேயை நேசித்த தற்கு ஒரு காரணம் இருந்தது. அவனுக்கு ஆண் குழந்தை இல்லை. தன் மகளின் வளர்ப்பு மகன் ஒருநாள் எகிப்தின் அரசனாக வரக்கூடும் என்று அவன் நம்பினான். எனவே அரசனுக்குரிய அனைத்துக் கலைகளையும் மோசே கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தார்.

கல்வியிலே தேர்ந்த மோசேக்கு, பொறி யியல், கட்டிடக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, போர்க்கலை ஆகியவற்றிலும் தேர்ச்சி கிடைத் தது. எகிப்தியர் வணங்கும் கடவுளர்களைப் பற்றியும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு மோசேக்குக் கிடைத்தது. சகல கலைகளிலும் தேர்ந்த மோசே, தன் தாய் தனக்குக் கற்றுக் கொடுத்தவற்றை அரண்மனையின் ஆடம்பர வாழ்விலும் மறக்கவில்லை என்பதுதான் ஆச்சரியமான உண்மை.

54. அரண்மனையைவிட்டு ஓட்டம்

யாத். 2

எகிப்து அரண்மனையில் சுகமாக வாழ்ந்த மோசே, அரண்மனைக்கு வெளியே தன் இனத்தார் கடின வேலை செய்வதையும், குறைவாகக் கூலி பெறுவதையும், மிருகங்களைப்போல அடிபடுவதையுங் கண்டு மனம் நொந்தார். இதைக் குறித்து அரண்மனையில் அவர் விவாதித்த போதெல்லாம், அரசன், 'அந்த மக்களைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? அவர்களை மறந்துவிடு' என்று கூறுவதுண்டு. ஆனால் மோசே அவர்களையே அதிகம் நினைக்கத் தொடங்கினார்.

ஒருநாள், எகிப்தியன் ஒருவன் ஒரு இஸ்ரவேலனைக் கடுமையாக அடித்துத் துன்பப்படுத்துவதை மோசே பார்த்தார். 'இஸ்ரவேலனைக் காக்கவேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றிய அடுத்த கணம், மோசே சீறுகின்ற புலிபோல அந்த எகிப்தியன்மீது பாய்ந்து அவனைக்கொன்று மணலில் புதைத்தும் போட்டார். காப்பாற்றப்பட்ட இஸ்ரவேலனோ மோசேக்கு நன்றி கூறிவிட்டுச் சென்றான். இந்தச் சம்பவம் நடந்தபோது மோசேக்கு வயது நாற்பது. எகிப்தியன் கொல்லப்பட்ட செய்தி அரண்மனைக்கும் எட்டியது, அரசனுக்கும் எட்டியது. 'மோசே தான் ஒரு எபிரேயன் என்பதைக் காட்டிவிட்டான். இவனை அரசனுக்க எண்ணினேனே. மோசே அரசனால் இஸ்ரவேலர்களைக்கொண்டு எகிப்தில் பெரும் புரட்சியைச் செய்துவிடுவான். எனவே இவனைக் கொன்றுவிடுவதே நல்லது' என்று அரசன் தனக்குள் முடிவுசெய்துகொண்டு கொல்ல வகை தேடினான். இதைக் கேள்விப்பட்ட மோசே தன்னைக் காத்துக்கொள்ள எகிப்தைவிட்டே ஓடினார். ஓடினார்... ஓடினார்... செங்கடலின் மறுபுறமுள்ள மீதியான் தேசத்தை அடையும்வரை ஓடினார்.

கடவுளின் பிள்ளையான மோசே அநியாயத்தைக் கண்டு துடித்தது சரிதான். ஆனால் தன் உடல் வலிமையால் தன் இனத்தைக் காக்க முடியும் என்று நினைத்ததுதான் தவறு. கடவுளின் துணைகொண்டுதான் செயல்பட முடியும் என்பதை மோசே புரிந்துகொள்ள மற்றும் ஒரு நாற்பது ஆண்டுகாலம் தேவைப்பட்டது.

55. திருப்பணிக்கு மோசே பெற்ற பயிற்சி

யாத். 2


மீதியான் தேசத்தில் தன் வாழ்வைத் தொடங்கிய மோசே ஒருநாள் ஊருக்கு வெளியேயுள்ள ஒரு கிணற்றருகே அமர்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது சில பெண்கள் தங்கள் மந்தைகளுக்குத் தண்ணீர் இறைக்க அங்கு வந்தனர். மீதியான் தேசத்தின் ஆசாரியன் 'எத்திரோ' என்பவரின் ஏழு புதல்விகளே அவர்கள். அப் பெண்கள் தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்த சில இடையர்கள் அவர்களை விரட்டினர். அநியாயத்தைக் கண்டதால் பொறுக்காது, பொங்கியெழும் மோசே இங்கும் பொங்கி எழுந்தார். இடையர்களை விரட்டிவிட்டு அப் பெண்களின் மந்தைகளுக்குத் தாமே தண்ணீர் இறைத்து ஊற்றினார். நன்றியோடு வீடு சென்ற அப் பெண்கள் தங்கள் தந்தையிடம் நடந்ததைக் கூறினர். எத்திரோ மோசேயைத் தன் இல்லத்திற்கு அழைத்து வரச்செய்தார், விருந்தளித்தார், உபசரித்தார். மோசேயின் நிலைகுறித்து விசாரித்து அறிந்துகொண்ட எத்திரோ தன் வீட்டிலேயே தன் மேய்ப்பர்களில ஒருவராக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். மோசே மிகுந்த மகிழ்ச்சியுடன் எத்திரோவின் மேய்ப்பர்களில் ஒருவராக வாழத் தொடங்கினார்.

மோசேக்கு, ஆபிரகாமின் சந்ததியைச் சேர்ந்த, உண்மைக் கடவுளை வணங்கும் ஒரு நல்ல குடும்பத்தின் நட்பு கிடைத்தது, அதோடு ஆடுகளை மேய்ச்சல் நிலங்களுக்கு வழி நடத்துகின்ற இந்தப் பயிற்சியே பின்னர் இஸ்ரவேலர்களை வழிநடத்த மோசேக்குப் பெரிதும் உதவியாய் இருந்தது என்பது மறுக்க முடியாத மறைக்க முடியாத உண்மையன்றோ?

56. எரிகிற முட்செடி

யாத். 3

எத்திரோவின் மேய்ப்பர்களில் ஒருவராய் இருந்த மோசே, அவர் புதல்விகளில் ஒருத்தி யான சிப்போராளை மணந்து வாழ்ந்தார். அவர்களுக்கு 'கேர்சோம்', 'எலியேசர்' என்ற இரு புதல்வர்கள் பிறந்தனர். மோசே மீதி



எரிகிற முட்செடி (யாத். 3)

யான் தேசத்திற்கு வந்து தன் வாழ்வைத் தொடங்கி நாற்பது ஆண்டுகள் கடந்து விட்டன.

ஒரு நாள் மோசே 'ஒரேப்' மலையருகே தன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார். அப் பொழுது கண்கள் கூசுவது போன்று திடீரென வெளிச்சம் தெரிந்தது. நிமிர்ந்து பார்த்த மோசே ஒரு முட்புதர் எரிவதைக் கண்டார். ஆனால் என்ன ஆச்சரியம் அந்த முட்புதர் கருக வில்லை! அதற்கு மாருகத் தீப்பிழம்புகளுக்கு நடுவே கடவுள் அவருக்குத் தோற்றமளித்தார். வியப்புமேலிட்ட மோசே, அருகில் சென்று பார்க்க எண்ணி நெருங்கினார். அப்பொழுது, 'மோசே மோசே' என்று அழைக்கிற கடவுளின் குரல் கேட்டது. மோசே உடனே, 'இதோ அடியேன்' என்றார். உடனே மீண்டும் அந்தக் குரல் கேட்டது. 'நீ அருகில் வராதே. உன் கால்களிலுள்ள மிதியடிகளைக் கழற்றிப் போடு. நீ நிற்கும் இடம் புனிதமானது. நான் ஆபிர காமின் கடவுளும், ஈசாக்கின் கடவுளும், யாக் கோபின் கடவுளுமாகிய உன் பிதாக்களின் கடவுளாயிருக்கிறேன்' என்று கடவுள் தன் ேனாடு பேசுவதைக் கண்ட மோசே பயந்து நடுங்கினார். பயத்தின் காரணமாகக் கைகளால் தன் முகத்தை மூடிக்கொண்டார்.

பரிசுத்தமான கடவுள் முகமுகமாய்ப் பேசுகிற அனுபவம் எப்படியிருந்திருக்கும்!

57. மோசே பெற்ற அழைப்பு

யாத். 3,4

மோசே வாழ்க்கையில் நாற்பது வயது வரை அரண்மனை வாழ்வு, ஆடம்பர வாழ்வு, சகல வசதிகளோடுங்கூடிய வாழ்வு, சகல கலை களையும் கற்று வல்லவராகத் திகழ்ந்த வாழ்வு. அதற்கு நேர் எதிராக அடுத்த நாற்பது ஆண்டு கள் மீதியான் தேசத்தில் மோசே வாழ்ந்த வாழ்வு மிக எளிய வாழ்வு. மாறுபட்ட இரு வாழ்க்கைகளையும் வாழ்ந்த மோசே, தனது எண்பதாவது வயதில் கடவுளை முகமுகமாய்த் தரிசிக்கும் பேறு பெற்றார். இப்பேறு யாருக்குக் கிடைக்கும்? கடவுள் தன்னோடு பேசு வதைக் கண்டு மோசே பயந்தாலும், கடவுள் அவரை விடவில்லை. மீண்டும் பேசத் தொடங் கினார்.

'உன் பிதாக்களின் கடவுளாகிய நான், நெருக்கப்படுகிற என் மக்களின் கூக்குரலைக் கேட்டேன். அவர்கள் எகிப்தியரின் கைகளி னின்று விடுதலையாக்கி பாலும் தேனும் ஓடும் நல்ல தேசத்திற்குக் கொண்டு வருவேன். என் மக்களை அழைத்து வரும்படி உன்னை எகிப்து அரசனிடம் அனுப்புவேன் வா' என்று கடவுள் தன்னிடம் பேசியதைக் கேட்ட மோசே சற்று பயம் தெளிந்தவராய், 'இந்தப் பெரிய காரியத்தைச் செய்ய நான் எம்மாத்திரம்' என்றார். அதற்குக் கடவுள், 'நான் உன்னோடு இருப்பேன். நீ என் மக்களை எகிப்திலிருந்து அழைத்து வந்தபின் நீங்கள் இந்த மலையில் கடவுளுக்கு ஆராதனை செய்வீர்கள். நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே!

அடையாளம்' என்றார். மோசே கடவுளிடம், 'இஸ்ரவேலர்கள் என்னை நம்பமாட்டார்கள்' என்றார். கடவுள், மோசே 'உன் கையிலிருக்கும் கோலை தரையில் போடு' என்றார். மோசே கோலை தரையில் போட அது பாம்பாயிற்று. மோசே அந்தப் பாம்பைத் தொட்டபோது அது கோலாயிற்று என்றாலும் மோசேக்கு நம்பிக்கை வரவில்லை. 'உன் கையை மடியில் வை' என்ற கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்த மோசேயின் கை வெண்குஷ்டமாயிற்று. மீண்டும் கையை மடியில் வைத்து எடுத்த போது நல்ல கையாயிற்று. இந்த இரண்டு அடையாளங்களைக் கண்டும் இஸ்ரவேலர்கள் நம்பவில்லையெனில், தண்ணீரைத் தரையில் ஊற்றினால் அது ரத்தமாகும் என்றும் கடவுள் கூறினார். எகிப்திய மந்திரவாதிகளைக் காட்டிலும் இஸ்ரவேலர்களின் கடவுள் வல்லமை மிக்கவர் என்பதை வெளிப்படுத்தவே கடவுள் இந்த அற்புதங்களை மோசேக்குக் காட்டினார்.

மோசேக்கு இன்னும் பயம் தெளியவில்லை. எனவே கடவுளை நோக்கி, 'ஆண்டவரே, நான் திக்குவாயன், மந்த நாவுள்ளவன்' என்றார். கடவுள், 'நீ போ, நான் உன்னோடு இருந்து நீ பேசவேண்டியதைப் போதிப்பேன்' என்றார். அப்பொழுதாவது மோசே சரி என்றாரா? 'வேறு யாரையாவது அனுப்பும்' என்று முறையிட்டார். கடவுளுக்குக் கோபம் வந்தது. கோபத்தோடு குரலை உயர்த்திய கடவுள் மோசேயிடம் கோபிக்கவில்லை. 'உன்னைப் பார்ப்பதற்காக உன் சகோதரன் ஆரோன் வருகிறான். அவன் உன் வாயாக இருப்பான். நீ அவன் தேவனாக இருப்பாய். உங்கள் இருவருடனும் நான் இருப்பேன்' என்றார். இந்த உறுதிமொழி மோசேயைத் திடப்படுத்தியது.

58. மோசே மீண்டும் எகிப்துக்குப் போகுதல்

யாத். 4

கடவுளோடு பேசும் பேறு பெற்ற மோசே, கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். எகிப்து செல்ல முடிவு செய்தார். தன் மாமனார் எத்திரோவிடம் சென்று தன் இனத்தாரைக் காண எகிப்து செல்ல தனக்கு அனுமதி தருமாறு கேட்டார். எத்திரோ மோசேயை, 'சமாதானமாய்ப் போய்வா' என்று கூறி ஆசீர்வதித்து அனுப்பிவைத்தார். மோசே தன் மனைவி சிப்போராள், தன் புதல்வர்களான கேசோம், எலியேசர் ஆகியோருடன் எகிப்து நோக்கிப் பயணமானார். அதே சமயத்தில் மோசேயைக் காண்பதற்காக ஆவலோடு எகிப்திலிருந்து புறப்பட்டு ஆரோன் வருகிறார். இருவரும் ஓரேப் மலையருகே சந்தித்துக் கொள்ளுகின்றனர். நாற்பது ஆண்டுக்கால நீண்ட இடைவெளிக்குப்பின் சந்தித்துக் கொண்ட சகோதரர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையேது!

மோசே மூலம் கடவுளுக்கும் மோசேக்கும் நடந்த உரையாடல் முழுவதையும் ஆரோன் அறிந்துகொள்ளுகிறார். தன் சகோதரனைக் கண்டவுடன் ஆரோன் அடைந்த மகிழ்ச்சி தன் இனத்தாரை மீட்க தானும் ஒரு கருவியாகப் பயன்படப்போவதை அறிந்தும் மேலும் பெருகுகிறது. மோசேயும், ஆரோனும் பயணத்தை விசுவாசத்தோடு எகிப்து நோக்கித் தொடர்ந்தனர். இருவரும் எகிப்தை அடைந்தபின், இஸ்ரவேல் மக்களைச் சந்தித்தனர், சகல காரியங்களையும் அவர்களுக்கு அறிவித்தனர். ஆரோன் அற்புதங்களைச் செய்து காட்டினார். தங்களுக்கு விடிவுகாலம் வந்துவிட்டதை அறிந்துகொண்ட இஸ்ரவேலர்கள் மோசேயோடும் ஆரோனோடும் கடவுளைத் தொழுது கொண்டனர்.

59. இஸ்ரவேலரின் அடிமைத்தனம்

யாத். 5

யோசேப்பின் காலத்தில் சுதந்திரமாக வாழத் தொடங்கிய இஸ்ரவேலர்கள் நாளடைவில் அடிமைகளாக்கப்பட்டார்கள். கடின வேலை, குறைந்த ஊதியம், தடியடி, பசிக் கொடுமை இவற்றால் துன்பப்பட்ட அவர்களில் பெரும்பாலோர் கடவுள்மீதுள்ள நம்பிக்கையை இழக்கத் தொடங்கினர். ஆனால் சிலரோ விசுவாசத்தோடு தங்கள் துயரங்களை நீக்குமாறு கடவுளிடம் இடைவிடாது வேண்டிக்கொண்டிருந்தனர். இப்படிப்பட்டவர்களின் உருக்கமான ஜெபமே மோசே எகிப்துக்கு வரக் காரணமாயிருந்தது.

நம்பிக்கையை இழந்திருந்த அந்த இஸ்ரவேல் மக்கள் மோசேயையும், ஆரோனையும் சந்தித்த

பின் மீண்டும் புத்துயிர் பெற்ருர்கள். இந் நிலையில் மோசேயும் ஆரோனும் எகிப்து அரண்மனைக்குச் சென்ருர்கள். அங்கு அவர்கள் எகிப்தின் புதிய அரசனைச் சந்தித்தார்கள். தங்கள் கடவுளை வழிபட இஸ்ரவேலர்கள் எல் லோருக்கும் மூன்று நாட்கள் விடுமுறை கேட் டனர். அரசன் அவர்களின் வேண்டுகோளைக் கேட்கவில்லை.

இஸ்ரவேலர் நிலை மேலும் மோசமாகியது. விடுமுறை கேட்ட அவர்கள் முறைகேடாக நடத்தப்பட்டனர். ஏற்கெனவே செய்துவந்த செங்கல் அறுக்கும் வேலை மேலும் கடினமாக்கப் பட்டது. செங்கல் அறுப்பதற்குத் தேவையான வைக்கோலை முன்னர் அரசாங்கம் கொடுத்து வந்தது. இப்பொழுதோ அவரவர்க்குத் தேவைப்படும் வைக்கோலை அவரவரே தேடிக் கொள்ளவேண்டுமென்றும், ஏற்கெனவே கொடுத்து வந்த அளவு செங்கல் அறுக்கும் வேலையும் குறையக்கூடாதென்றும் இஸ்ர வேலர்கள் வற்புறுத்தப்பட்டனர். இஸ்ர வேலர்கள் அடைந்த துன்பத்திற்கு அளவே யில்லை. வெந்த புண்ணில் வேல் பாய்ந்தால் அவர்கள்தான் என்ன செய்வார்கள்? மோசே யையும், ஆரோனையும் கோபித்துக்கொண்ட தோடு தாங்கள் அனுபவிக்கும் துன்பங்களுக் கும் அவர்களே காரணம் எனவும் குற்றம் சாட்டினர்.

60. மோசே பார்வோனைச் சந்தித்தல்

யாத். 7


இஸ்ரவேலர்களின் துன்பங்கண்ட மோசே மனம் வருந்தினர். கடவுளிடம் கண்ணீரோடே முறையிட்டார். கடவுள் மீண்டும் மோசே யுடன் பேசினர். 'நான் யெகோவா, உங்கள் கடவுள் நானே. நான் என் உடன்படிக்கையை உறுதிப்படுத்துகிறேன். உங்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கி உங்களைக் கானான் தேசத்திற்குக் கொண்டு போவேன். இந்த உடன்படிக்கையை இஸ்ரவேலர்களிடம் கூறு.



பார்வோனைச் சந்தித்தல் (யாத். 7)

பின்னர் எகிப்து அரசனிடம் போய்ப் பேசு' என்று கடவுள் மோசேக்குக் கட்டளையிட்டார்.

எண்பது வயது மோசேயும், எண்பத்து மூன்று வயது ஆரோனும் அரசனைச் சந்தித்தனர். அவர்கள் கையில் கடவுளுடைய கோல் இருந்தது. அரசனிடம் தங்கள் இனத்தாராகிய இஸ்ரவேலரை விடுதலை பண்ணும்படி வேண்டினர். அரசன் இவர்கள் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மோசேயும் ஆரோனும் தாங்கள் கடவுள் கட்டளைப்படி வந்தவர்கள் என்பதை அரசனுக்குக் காட்ட விரும்பினர். ஆரோன் தன் கையிலிருந்த கோலை அரசன் முன் விட்டெறிந்தார், அது உடனே பாம்பாயிற்று. அரசன் தன் நாட்டு மந்திரவாதிகளை வரவழைத்தான். அவர்களும் தங்கள் தங்கள் கோல்களை விட்டெறிந்தனர். அவைகளும் பாம்புகளாயின. ஆனால் அந்தோ பரிதாபம்! ஆரோனின் கோல் அவர்கள் கோல்களை விழுங்கிவிட்டது. சாத்தானுக்கு எவ்வளவு வல்லமை இருந்தாலும் கடவுளின் வல்லமைக்கு முன்னால் அது துரும்புதானே.



பார்வோனைச் சந்தித்தல் (யாத். 7)

பத்து வாதைகள்

61. தண்ணீர்—இரத்தமாகுதல்

யாத். 7

கடினப்பட்ட மனதையுடைய எகிப்து அரசனைக் கடவுளின் கட்டளைப்படி மோசேயும் ஆரோனும் மீண்டும் சென்று கண்டனர். கடவுளின் கட்டளைப்படியே ஆரோன் தன் கோலை நீட்டி நைல் நதியின்மேல் அடித்தார். அதிலுள்ள தண்ணீர் முழுவதும் ரத்தமாக மாறிற்று. பிறகு மோசே அந்தக் கோலை எகிப்திலுள்ள எல்லா நீர்நிலைகளுக்கும் எதிராக உயர்த்திப் பிடித்தார். அந்தக்கணமே எகிப்து தேசத்திலுள்ள ஆறுகள், கால்வாய்கள், குளங்கள், நீர்த்தேக்கங்கள் போன்ற நீர்நிலைகள் யாவும் ரத்தமாக மாறின. அதுமட்டுந்தானா? நதியிலுள்ள மீன்களெல்லாம் செத்து நதியும், நீர்நிலைகளும் நாறிப்போயின. எகிப்து தேசம் முழுவதும் தண்ணீர்ப் பஞ்சம். தண்ணீர் ரத்தமாக மாறிவிட்டதால் எகிப்தியர் குடிநீருக்காக அலைந்தனர். நதியோரங்களில் ஊற்றுத் தோண்டினர்.

எகிப்து அரசன் மந்திரவாதிகளை அழைத்தான். அவர்களும் இவ்வாறு ஊற்றுத்தோண்டி எடுத்த தண்ணீரை ரத்தமாக்கிக் காட்டினர். அரசனுக்குப் பரம திருப்தி. இந்த முதல் வாதையைக் கண்டு அவன் பயப்படவில்லை. குடிமக்கள் அனைவரும் குடிநீருக்காகத் தொடர்ந்து ஏழு நாட்கள் சிரமப்பட்டும் அரசன் அதைப் பொருட்படுத்தவேயில்லை. இஸ்ரவேலரைப் போக அனுமதிக்கவும் இல்லை.

இஸ்ரவேலரின் கடவுள் வல்லமை மிக்கவர் என்பதைக் காட்டும் வாதைகள் இது முதற்கொண்டு தொடர இருப்பதை அரசன் உணரவில்லை.

62. தவளைகள் படையெடுப்பு

யாத். 8

மீண்டும் மோசேயும், ஆரோனும் அரசனைச் சந்தித்து, 'எங்கள் கடவுளுக்கு ஆராதனை செய்ய எங்கள் இனத்தாரை அனுப்பிவிடுங்கள்' என்று வேண்டினர். அரசன் அவர்கள் வேண்டுகோளை ஏற்காது அனுப்பமுடியாது என்று மறுத்தான். கடவுள் கட்டளைப்படி ஆரோன், தன் கையிலுள்ள கோலை எகிப்திலுள்ள நீர் நிலைகள்மேல் நீட்டினார். நீர்நிலைகளினின்றும் புறப்பட்டு தவளைகள் அணியணியாய் வந்தன. அரண்மனை தவளையால் நிரம்பி வழிந்தது என்று சொல்லலாம். எகிப்தியர்கள் அனைவர் வீடுகளிலும் தவளைகள். மக்கள் மேலெல்லாம் தவளைகள் ஏறின. எகிப்து தேசம் முழுவதும் தவளைகளைத் தவிர வேறு எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை. அந்த அருவருப்பான தவளைகளைக் கண்டு மனம் வருந்திய அரசன், மோசேயையும் ஆரோனையும் அழைத்து, 'என்னையும் என் குடிமக்களையும் விட்டு இந்தத் தவளைகள் நீங்கும்படி உங்கள் கடவுளை வேண்டிக்கொள்ளுங்கள். நான் உங்களைப் போகவிடுவேன்' என்றான்.

மோசே கடவுளிடத்தில் தண்ணீரில் மட்டுமே தவளைகள் இருக்கும்படியாகவும், ஏனைய இடங்களிலுள்ள தவளைகளை அழித்து விடும்படியாகவும் உருக்கமாக வேண்டிக் கொண்டார். கடவுள் மோசேயின் ஜெபத்தைக் கேட்டார். என்றாலும் அரசன் தான் கூறியபடி இஸ்ரவேல் மக்களைப் போக விடவில்லை.




தவளைகள் படையெடுப்பு (யாத். 8)

63. எங்கு பார்த்தாலும் பேன்கள்

யாத். 8

கடவுள் மீண்டும் மோசேயுடன் பேசினார். 'நீ ஆரோனிடம், 'உன் கோலை நீட்டி பூமியின் புழுதியின்மேல் அடி'' என்று கூறு. அப்பொழுது அது எகிப்து தேசமெங்கும் பேன்களாய்ப் போகும்' என்றார். கடவுளின் கட்டளைப்படி ஆரோன் தன் கையிலிருந்த கோலை நீட்டி பூமியின் மேற்பரப்பிலுள்ள புழுதியின்மேல் அடித்தார். அப்பொழுது அப்புழுதி மனிதர்கள்மீதும், மிருகங்கள்மீதும் பேன்களாய் மாறின. வீடெங்கும் பேன்கள், தெருவெங்கும் பேன்கள், நாடெங்கும் பேன்கள். அரசன் மந்திரவாதிகளை அழைத்தான். அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அவர்கள் 'இது

சர்வ வல்லமையுள்ள கடவுளால் உண்டான வாதை' என்றார்கள். ஆனாலும் அரசனுடைய இதயம் கடினப்பட்டது. அவன் இஸ்ரவேல் மக்களை அனுப்பச் சம்மதிக்கவில்லை.



பேன்கள், வண்டுகள் (யாத். 8)

64. தேசத்தை சேதப்படுத்திய வண்டுகள்

யாத். 8

மோசே கடவுளை நோக்கி விண்ணப்பம் பண்ணி ஆலோசனை கேட்டார். கடவுள் அவரிடம் அரசனை மீண்டும் சந்தித்துப் பேசும்படி கட்டளையிட்டார். 'இஸ்ரவேலரை அனுப்பா விட்டால், அரசன் மேலும் எகிப்தியர் அனைவர் மேலும் அனைவர் வீடுகள்மீதும் பலவித வண்டுகளை அனுப்பி வாதிக்கப்போவதாக எங்கள் கடவுள் உரைக்கிறார்' என்றும், 'அந்த நாட்களில் கோசேன் பகுதியில் வாழும் இஸ்ரவேலர் களிடத்தில் அந்த வண்டுகள் வராது' என்றும், 'இதுவே நாங்கள் வழிபடும் உண்மைக் கடவுளை உணர்ந்துகொள்ள அடையாளம்' என்றும் அரசனுக்குக் கூறும்படி கடவுள் மோசேக்குக் கூறினார்.

அவ்வாறே மறுநாள் மோசே அரசனைச் சந்தித்து கடவுளின் வார்த்தைகளையும் உரைத்தார். கடவுளின் கட்டளைப்படி வண்டுகள் அந்த தேசம் முழுவதும் நிறைந்து தேசத்தைச் சேதப்படுத்தின. ஆனால் கோசேன் பகுதியிலோ ஒன்றுகூட காணப்படவில்லை. பயந்து போன அரசன், மோசே, ஆரோன் இருவரையும் அழைத்து, 'வண்டுகள் மறைந்துபோகும்படி வேண்டிக்கொள்ளுங்கள். நான் இஸ்ரவேலர்களை அனுப்பிவிடுகிறேன். ஆனால் நீங்கள் வெகுதூரம் செல்லவேண்டாம்' என்று கேட்டார். மனமிரங்கிய மோசே வண்டுகளை மறையப்பண்ணும்படி கடவுளிடம் கேட்டார், மன்றாடினார். வண்டுகள் மறைந்த பின்போ அரசனின் மனம் மீண்டும் கடினப்பட்டது.

65. கொள்ளைநோயால் மிருகங்கள் அழிவு

யாத். 9

மறுபடியும் மோசே அரசனைச் சந்தித்து 'இன்று நீர் இஸ்ரவேலரைப் போக விடாவிட்டால் உம் நாட்டிலுள்ள மிருகங்கள் அனைத்தும் அழிந்துவிடும். ஆனால் இஸ்ரவேலரின் மிருகங்களுக்கோ ஒரு அழிவும் நேரிடாது. இது கடவுளுடைய வாக்கு' என்று கூறினார். மோசே எச்சரித்தபடியே எகிப்தியர்களுக்குச்

சொந்தமான ஆடு, மாடு, குதிரைகள் அனைத்தும் செத்தன. இஸ்ரவேலரின் மிருகங்களோ ஒன்றும் சாகவில்லை. அரசன் இதனைக் கேள்விப்பட்டபோது அதிகப் பிடிவாதக்காரனாகி, இஸ்ரவேலர்களை அனுப்பச் சம்மதிக்கவில்லை. 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்பார்கள் அல்லவா?




கொள்ளை நோயால் மிருகங்களின் அழிவு (யாத். 9)

66. கொப்புளங்கள்

யாத். 9

மறுநாள் கடவுளின் கட்டளைப்படி மோசேயும் ஆரோனும் தங்கள் கைகள் நிறைய சாம்பலை அள்ளிக்கொண்டு எகிப்து அரசனின் கண்களுக்கு முன்பாக அதை வானத்திற்கு நேராக இறைத்தார்கள். அது எகிப்து தேசமெங்கும் மனிதர்கள் மீதும், மிருகங்கள் மீதும் எரிச்சல் கொடுக்கின்ற பெரிய பெரிய கொப்புளங்களாக மாறின. எகிப்தின் மந்திரவாதிகளும் இந்த வாதைக்குத் தப்பவில்லை. அவர்கள் மீதும் கொப்புளங்கள்தான். கொப்புளங்களின் எரிச்சல் தாங்காது மக்களெல்லாம் புலம்பிக்கொண்டிருக்க அரசன் மனமோ மீண்டும் கடினப்பட்டது.



கொப்புளங்கள் (யாத். 9)

67. கல்மழை

யாத். 9

கடவுள் மீண்டும் மோசேயுடன் பேசினார். 'நீ அதிகாலையில் அரசனிடம் சென்று 'எனக்கு ஆராதனை செய்ய என் மக்களை அனுப்பிவிடு, விடாவிட்டால், எகிப்து தோன்றிய நாள் முதல் இதுவரைக்கும் அதில் பெய்யாத மிகவும் கொடிய கல்மழையை நாளை இந்நேரம் பெய்யப் பண்ணுவேன். இப்பொழுதே ஆள் அனுப்பி வீட்டிற்கு வெளியேயிருக்கும் மனிதர்களையும், மிருகங்களையும் வீட்டிற்குள் சேர்த்துக் கொள். வீட்டிற்கு வெளியே இருக்கும் மனிதர்களும் மிருகங்களும் அழியத்தக்கதாய் கல்மழை பெய்யும் என்று கடவுள் சொல்லுகிறார்' என்று அந்த அரசனிடம் கூறு' என்று கடவுள் பேசினார். கடவுள் கட்டளையிட்டபடியே மோசே அரசனைச் சந்தித்தார், கடவுள் கூறிய எச்சரிப்பையும் கூறினார். அரசனின் ஊழியர்களில் சிலர், மோசே கூறிய எச்சரிப்பைக் கேட்டதும் பயந்து தங்கள் மிருகங்களையும், வேலைக்காரர்களையும் வெளியே விடாது வீட்டிற்குள் வைத்துக்கொண்டனர். வேறு சிலரோ அந்த எச்சரிப்பை அசட்டை செய்தனர்.

மறுநாள் கடவுள் கட்டளைப்படியே கல்மழை பெய்யத்தக்கதாய் மோசே வானத்திற்கு நேராகத் தன் கோலை நீட்டினார். உடனே இடிமுழக்கங்களுடன் கந்தகமும், அக்கினியும் கலந்த பலத்த கல்மழை பெய்தது. எகிப்து தேசமெங்கும் வெளியில் இருந்த மனிதர்கள், மிருகங்கள், பயிர்வகைகள், மரங்கள் யாவும் அழிந்தன. இஸ்ரவேலர்கள் வாழ்ந்த கோசேன் பகுதியில் மட்டும் கல்மழை பெய்யவில்லை.

அரசன் மோசேயையும், ஆரோனையும் அழைப்பித்து, 'நான் இந்தமுறை பாவம் செய்தேன். கடவுள் நீதியுள்ளவர், நானும், என் குடிமக்களும் துன்மார்க்கர். இதுபோதும் இந்த மகா கொடிய கல்மழையை நிறுத்து. நான் உங்களைப் போகவிடுவேன். இனி உங்களுக்குத் தடையில்லை என்றான். அப்படியே மோசே கடவுளிடம் விண்ணப்பம் செய்தார். இடிமுழக்கமும், கல்மழையும் நின்று போனது. ஆனால் அரசனோ தனது வாக்குறுதியைக் காக்கவில்லை.



கல் மழை (யாத். 9)


68. பயிர்களை அழித்த வெட்டுக்கிளிகள்

யாத். 10

மறுநாள் மோசேயும் ஆரோனும் அரசனிடம் வந்து, 'நீ எதுவரைக்கும் உன் இருதயத்தைக் கடினப்படுத்துவாய்? நீ என் இனத்தாரைப் போகவிடாவிட்டால், நாளை உன் தேசம் முழுவதும் வெட்டுக்கிளிகளை வரப் பண்ணுவேன்' என்றார். எரிச்சலடைந்த அரசன், 'ஆண் பிள்ளைகள் மட்டும் போய் உங்

கள் கடவுளுக்கு ஆராதனை செய்யுங்கள், பெண்களும், பிள்ளைகளும் இங்கேயே இருக்கட்டும்' என்று சொல்லி அவர்களிருவரையும் விரட்டிவிட்டான்.

மோசே அரண்மனையை விட்டு வெளியே வந்து எகிப்து தேசத்தின்மேல் தன் கோலை நீட்டினார். அப்பொழுது பயங்கரமான காற்று பகலும் இரவும் வீசி வெட்டுக்கிளிகளைக் கொண்டு வந்தது. வெட்டுக்கிளிகள் எகிப்து தேசம் முழுவதையும் மூடி கல்மழைக்குத் தப்பிப் பிழைத்த எல்லாப் பயிர்களையும் அழித்துவிட்டது. அரசன் மோசேயை அழைத்து 'இந்த ஒருமுறை என்னை மன்னித்து வெட்டுக்கிளிகளை என்னை விட்டு அகற்று, உன் இனத்தாரைப் போக விடுகிறேன்' என்றான். மோசே அவ்வாறே செய்தார். ஆனால் இந்த முறையும் எகிப்து அரசன் இஸ்ரயேலர்களைப் போகவிடவில்லை.




வெட்டுக்கிளிகள் (யா. 10)

69. காரிருள்

யாத். 10

கடவுள் மோசேயை நோக்கி, 'மகா காரிருள் எகிப்து தேசமெங்கும் உண்டாகும்படி உன் கையை நீட்டு' என்றார். மோசே வானத்திற்கு நேராகத் தன் கையை நீட்ட அப்பொழுது எகிப்து தேசமெங்கும் மூன்று நாள் காரிருள் உண்டாயிற்று. இஸ்ரவேல் மக்கள் குடியிருப்பிலே நல்ல வெளிச்சம் இருந்தது. மூன்று நாட்கள் தொடர்ந்து இருட்டாகவே இருந்தால் எப்படியிருந்திருக்கும்? மக்கள் யாவரும் பயந்தனர். அரசன் எரிச்சலோடும் கோபத்தோடும் மோசேயைப் பார்த்து, 'நீங்கள் ஆண்களும் பெண்களும், குழந்தைகளும் உடனே புறப்படலாம், ஆனால் உங்கள் கால்நடைகள் இங்கேயே இருக்கட்டும்' என்றான். அதற்கு மோசே, 'எங்களுக்குரிய யாவற்றையும் எடுத்துக்கொண்டுதான் போவோம். அதற்கு அனுமதியுங்கள்' என்றார். அரசன் மிகுந்த கோபமடைந்து, 'இனி என் முகத்தில் விழிக்காதே, ஓடிப்போ' என்று மோசேயை விரட்டிவிட்டார். மோசே போகும்போது, 'உண்மைதான், இனி நான் உன் முகத்தைப் பார்ப்பதில்லை' என்று கூறினார்.



காரிருள் (யாத். 10)

70. தலைப்பிள்ளை சங்காரம்

யாத். 11



தலைச் சங்காரம் (யாத். 11)

கடவுள் இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு பண்டிகை நாளைக் குறிப்பிட்டு அந்தப் பண்டிகை நாள் இரவிலே எகிப்து அரசனின் தலைப்பிள்ளை முதல் கூலி வேலை செய்யும் அடிமைப் பெண்ணின் தலைப்பிள்ளை வரையும்—சகல மிருகங்களின் தலையீற்றனைத்தையும் செத்துப் போகும்படி செய்தார். ஆனால் இஸ்ரவேலர்கள் குடியிருக்கும் கோசேன் பகுதியிலோ ஒரு நாய்க்குட்டி கூட சாகவில்லை. எகிப்து தேசமெங்கும் அழுகையும் கூக்குரலும் உண்டாயிற்று. சாவு இல்லாத வீடே எகிப்தில் இல்லை. அப்பொழுது எகிப்து அரசனும் அவனுடைய ஊழியக்காரரும் அந்த இரவிலேயே மோசேயையும் ஆரோனையும் அழைத்து, 'நீங்கள் உங்கள் கடவுளுக்கு ஆராதனை செய்யப் புறப்பட்டுப் போகலாம். நீங்கள் கேட்டுக்கொண்டபடியே உங்கள் பெண்களையும், குழந்தைகளையும், ஆடுகளையும், மாடுகளையும், உங்களுக்குச் சொந்தமான எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு செல்லுங்கள். நீங்கள் போகலாம்' என்று கூறி எகிப்தை விட்டு இஸ்ரவேலர்கள் செல்ல அனுமதி கொடுத்தார்.

71. பஸ்கா பண்டிகை

யாத். 12

அடிமை எகிப்து நாட்டில் அரசன் வீட்டிலிருந்து அடிமை வீடு வரை ... மிருகங்கள் உட்பட தலையீற்றுகள் அனைத்தும் அழிந்தன என்று நாம் பார்த்தோம் இல்லையா? அப்பொழுது இஸ்ரவேலர் வீடுகளில் அந்த அழிவு நடக்கவில்லை. காரணம் என்ன தெரியுமா? அவர்கள் அனைவர் வீடுகளிலும், கதவு நிலைகளிலும், சட்டங்களிலும் ரத்தம் பூசப்பட்டிருந்தது, தெளிக்கப்பட்டிருந்தது. ஒரு வயது ஆட்டுக்குட்டி ஒன்றின் ரத்தந்தான் அது. அப்புறம் என்ன நடந்தது தெரியுமா? புளிப்பில்லாத அப்பங்களோடும், கசப்புக் கீரையோடும் அந்த ஆட்டுக்குட்டியின் வாட்டிய இறைச்சியை அந்த இஸ்ரவேலர்கள் அனைவரும் இரவு நேரத்தில் உண்டார்கள். அதுவும் எப்படி? புறப்படத் தயாரான நிலையில் அமர்ந்து உண்டார்கள். மீதியை விடிவதற்குமுன் சுட்டெரித்தார்கள். ஏனெனில் கடவுளின் கட்டளை இது. இந்த நாளே பிற்காலத்தில் பஸ்கா பண்டிகை எனப்பட்டது.

எகிப்தியரின் தலையீற்றனைத்தையும் அழித்த கடவுள், எகிப்திலிருந்த இஸ்ரவேல் மக்களைக் காத்தார் என்பதுதான் இப்பண்டிகையின் பொருள். இந்த முதல் பஸ்கா பண்டிகை மிக மிகச் சிறப்பாக நடந்தது. இதன் விளைவுதான் எகிப்திலிருந்த இஸ்ரவேலர்களுக்கு அடிமை நிலையிலிருந்து விடுதலை. எனவே இந்தப் பண்டிகையை விடுதலை நாள் என்றும் கூறலாம்.

72. விடுதலைப் பயணம்

யாத். 13

மோசேயின் கட்டளைப்படியே இஸ்ரவேலர்கள் நள்ளிரவிலேயே எகிப்தை விட்டுப் புறப்படத் தொடங்கினர். பிசைந்த மாவு புளிக்கு முன் அதை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். எகிப்து மக்கள், இஸ்ரவேலர்கள் தங்களிடம் கேட்ட ஆடைகள், அணிகள், போர்வைகள் யாவற்றையும் பரிசாகக் கொடுத்தனர்.

எழுபது பேராக எகிப்துக்குக் குடிவந்த இஸ்ரவேலர் இப்போது திரள்திரளாக அணியணியாகக் கிளம்பினர். ஆடவரின் எண்ணிக்கை மட்டும் ஆறு லட்சத்துக்கும் அதிகமாக இருந்தது. இவர்களோடு பெண்கள், குழந்தைகள், கால்நடைகள் அடங்கிய ஒரு பெருங்கூட்டம் கால்நடையாகப் புறப்பட்டது. 'அவர்கள் தங்களோடு தைலமிடப்பட்டு பாதுகாத்து வைத்திருந்த யோசேப்பின் எலும்புகளையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

'ராம்சேஸ்' என்னும் இடத்திலிருந்து புறப்பட்ட அவர்கள் 'சுக்கோத்' என்னும் இடத்திற்கு வந்தார்கள். பின்னர் சுக்கோத்திலிருந்து புறப்பட்டு 'ஏத்தாம்' வந்து அங்கு கூடாரமடித்துத் தங்கினார்கள். அவர்கள் பயணம் தொடங்கியது. முதல் கடவுளுடைய சமூகம் அவர்களோடு இருந்தது. பகலிலே மேகத்தூணும் இரவிலே நெருப்புத் தூணும் அவர்களுக்கு வழிகாட்டின. மேகத்தூண் நகரத் தொடங்கினால் இவர்கள் பயணம் செய்தார்கள். மேகத்தூண் நின்றால் அவ்விடத்தில் கூடாரம் அடித்துத் தங்கினார்கள்.

நானூற்று முப்பது ஆண்டுக்கால அடிமை வாழ்விற்கு ஒரு முற்றுப் புள்ளியிட்டு அவர்கள் விடுதலைப் பயணம் இவ்வாறு தொடங்கியது.

73. கடவுள் உங்களுக்காக யுத்தம் செய்வார்

யாத். 14

எகிப்து அரசன் இஸ்ரவேலரை அனுப்பியதற்காக வருத்தப்பட்டான். எகிப்தில் கூலி வேலை செய்யவும், கட்டிட வேலை செய்யவும், ஏனைய கடினமான வேலை செய்யவும் ஆட்கள் இல்லை. குறைவான கூலி பெற்றுக்கொண்டு அதிக வேலை செய்பவர்களுக்கு நாம் இனி என்ன செய்வது? என்று அரசனைச் சுற்றி இருப்பவர்களும் அரசனிடம் முறையிட்டார்கள். இஸ்ரவேலர்களின் பிரிவு பேரிழப்பாக அரசனுக்குத் தோன்றியது. செங்கடலை நோக்கிப் பயணமாகும் இஸ்ரவேலரைத் துரத்திப் பிடித்து அழைத்துவர ரதங்களில் போர் வீரர்களை அனுப்பினான். ஒன்றா, இரண்டா? அறுநூறுக்கும் மேலான ரதங்களில் போர் வீரர்கள் சென்றார்கள். எல்லாவற்றிற்கும் மேலாகத் தானும் ஒரு ரதத்தில் ஏறிப் பின் தொடர்ந்தான்.

கடவுளுடைய சமூகம் தங்களோடு இருப்பதை உணர்ந்து மகிழ்ச்சியாகப் பயணம் செய்து கொண்டிருந்த இஸ்ரவேலர்கள், 'ஏத்தாமிலிருந்து' புறப்பட்டுச் சற்று தூரம் சென்ற நிலையில் தங்களுக்குப் பின்புறம் போர் ரதங்கள் வரும் ஒலியைக் கேட்டார்கள். ஏராளமான போர் ரதங்கள் வருவதைக் கண்டு பயந்தார்கள். ஆனால் மோசே விசுவாசத்தோடு, 'கடவுள் உங்களுக்காக யுத்தம் செய்வார். பயப்படாதிருங்கள்' என்றார்.

74. இஸ்ரவேலர் செங்கடலைக் கடத்தல்

யாத். 14,15

எகிப்து தேசத்திலுள்ள செங்கடல் அகலம் குறைவான, ஆனால் ஆழம் அதிகமான கடல். கோசேன் பகுதியிலுள்ள ராம்சேஸ் என்னும் இடத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர்கள் செங்கடல் அருகே வந்து விட்டனர். இனி அதை அவர்கள் கடந்து செல்ல வேண்டும். இந்த நிலையில் எகிப்து அரசன் கட்டளைப்படி அறுநூறு ரதங்களில் போர்வீரர்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பின்னே அரசனும் வந்தான்.

இஸ்ரவேலர்களுக்கு முன்புறமோ ஆழமான கடல், பின்புறமோ வாளேந்திய போர்வீரர்கள். பயந்த இஸ்ரவேலர்களுக்குக் கடவுளிட்ட

கட்டளை 'முன்னேறிச் செல்லுங்கள்' என்பது தான். தான் செய்ய வேண்டியதைக் குறித்துத் தன்னிடம் கேட்ட மோசேக்கு கடவுளிட்ட கட்டளை 'உன் கோலை நீட்டி செங்கடலைத் தொடு' என்பதுதான். மோசேயும் இஸ்ரவேலர்களும் கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தனர். விளைவு என்ன தெரியுமா? வரலாறு காணாத அற்புதம் ஒன்று அங்கு நடந்தது. செங்கடல் இரண்டாகப் பிரிந்து இருபுறமும் கடல்நீர் பெரிய சுவர்போல் நின்றது. நடுவில் தெரிந்த தரை வழியே நடந்து இஸ்ரவேலர்கள் செங்கடலைக் கடந்தார்கள்.

'முன்னேறிச் செல்லுங்கள்' என்ற கட்டளைப்படி கடலின் நடுவே சென்ற இஸ்ரவேலர்களைப் பார்த்த எகிப்து அரசன், தன் வீரர்களுக்கும் 'பின் தொடருங்கள்' என்று கட்டளையிட்டான். இப்பொழுது எகிப்தியப் போர் வீரர்களும் செங்கடலின் நடுவே விரைந்து செல்லத் தொடங்கினர். இஸ்ரவேலர்கள் அனைவரும் கடலைக் கடந்து விட்டதை அறிந்ததும் மோசே தன் கோலைச் செங்கடலை நோக்கி நீட்டினார். உடனே இருபுறமாகப் பிரிந்து நின்ற செங்கடல் ஒன்றாக இணைந்தது. அந்தோ பரிதாபம்! கடவுளின் பிள்ளைகளோடு யுத்தம் செய்ய வந்த எகிப்தியர்களும், அவர்கள் ரதங்களும், குதிரைகளும் பரிதாபமாக அழிந்தன. அரசன் வேதனையோடு நாடு திரும்பினான். செங்கடலின் ஒரு கரையில் அழிவின் ஓலம். மறு கரையிலோ மகிழ்ச்சி வெள்ளம்.

மோசே, ஆரோன், மிரியம் இவர்கள் தலைமையில் இஸ்ரவேலர்கள் கடவுளைத் துதித்துப் பாடினார்கள்.



இஸ்ரவேலர் செங்கடலை கடத்தல் (யாத். 14, 15)

75. மிரியாமின் பாடல்

யாத். 15

இந்த மிரியாம் என்ற பெண்மணி யார் தெரியுமா? பார்வோனுக்குப் பயந்து தன் தம்பியாகிய மூன்றுமாத குழந்தையைத் தேவன் காப்பாற்றித் தருவார் என்ற நம்பிக்கையுடன் நைல் நதியின் நாணல் புதரின் மத்தியில் மிதக்கவிட்ட அருமை சகோதரி ஆவாள். மோசேயை அழிவிலிருந்து காப்பாற்றித் தன் தாயிடமே கொண்டு வளர்த்துவரும் பாக்கியத்தைப் பெற்றுப் பார்வோன் குமாரத்தியின் குமாரனுக்கிக் கடவுளின் அழைப்புக்குப் பாத்திரமாக்கி இந்த விடுதலை பயணத்தின் தலைவனாகக் கண்ட பெருமையுடையவள்.

மோசேயின் தலைமையில் இஸ்ரவேலர் செங்கடலைத் தாண்டியபொழுது இஸ்ரவேலர் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் தங்கள் தேவனைத் துதித்தார்கள். தங்கள் எதிரிகளான பார்வோனின் சேனை இரதங்களோடும், குதிரை வீரரோடும் செங்கடலில் மூழ்கியதைக்

குறித்தும் தாங்கள் சமுத்திரத்தின் நடுவிலே வெட்டாந்தரையில் நடந்ததுபோல நடந்து செல்ல வழிவகுத்த தேவனைக் குறித்தும் பாடி மகிழ்ந்தனர்.

மிரியாம் தீர்க்கதரிசிகளில் ஒருவளும் ஆனாள். அவள் தன் கையிலே தம்புருவை எடுத்துக்கொண்டு பாடி நடனம் ஆடினாள். எதிரிகள் கடலிலே மூழ்கவும் தாங்கள் வெற்றி சிறந்ததையும் குறித்து பாடினாள். சகல பெண் களும் தம்புருவோடும் நடனத்தோடும் அவளுக் குப் பின்சென்றனர்.

இவ்விதமாக நாமும்கூட கடவுள் நமக்குச் செய்த நன்மைகளுக்காக நன்றியோடு ஆடிப் பாடலாமே.



மிரியாமின் பாடல் (யாத். 15)

76. கசப்பு—இனிப்பானது

யாத். 15

கடவுளுக்குப் புதுப்பாட்டைப் பாடிக் கொண்டே இஸ்ரவேலர்கள் செங்கடல் பகுதியி லிருந்து புறப்பட்டார்கள். சூர் வனாந்தரத்தில் பயணம் செய்த அவர்கள் மூன்று நாட்கள் வரை தண்ணீர் கிடைக்காமல் துன்பப்பட்டார் கள். நாவறட்சியால் துன்புற்ற அவர்கள் மூன்று நாட்களுக்குப்பின் ஓரிடத்தில் தண்ணீ ரைக் கண்டதும் ஆவலாய் ஓடி அதைக் குடித் தார்கள். அத்தண்ணீரோ குடிக்க முடியாத படி கசப்பாக இருந்தது. உடனே அவர்கள் 'இப்போது நாங்கள் எதைக் குடிப்போம்?' என்று முணுமுணுத்தார்கள். மோசே கடவுளை நோக்கிக் கூப்பிட்டார். 'அதோ அந்த மரத்தை எடுத்துத் தண்ணீரில் போடு' என்று கடவுள் காட்டிய மரத்தை மோசே எடுத்துத் தண்ணீரில் போட்டார். கசப்பான அந்தத் தண்ணீர், உடனே மதுரமான தண் ணீர் ஆயிற்று. அந்த இடம் 'மாரா' என அவர்களால் அழைக்கப்பட்டது. மீண்டும் அவர்கள் பயணம் தொடர்ந்தது. அவர்கள் 'ஏலீம்' என்ற இடத்திற்கு வந்தார்கள். அவ்விடம் பன்னிரெண்டு நீரூற்றுக்களும், எழு பது பேரீச்ச மரங்களும் நிறைந்த அழகான இட மாகும். அவ்விடத்தில் கூடாரம் அடித்துத் தங்கினார்கள்.

77. கேளுங்கள் கொடுக்கப்படும்

யாத். 16

இஸ்ரவேலர்கள் 'ஏலீமை' விட்டுப் புறப் பட்டுப் பயணமாகி சீன் வனந்தரத்திற்கு வந் தார்கள். எகிப்து தேசத்திலே தாங்கள் உண்ட அப்பத்தையும், இறைச்சியையும் நினைத்து ஏங்கிய அவர்கள் மோசேயுடன் முணு முணுத்தார்கள். மோசே அவர்களுக்காக, அவர்களது ஆசையை நிறைவேற்றுமாறு கடவு ளிடம் விண்ணப்பம் செய்தார். கடவுள் அவர் கள் விருப்பத்தையெல்லாம் நிறைவேற்றினர். மாலை நேரத்தில் அவர்கள் கூடாரங்களைச் சுற்றி 'காடைகள்' விழுந்து கிடந்தன. அதி காலையில் கொத்துமல்லி விதையளவு சிறிய வெண்மையான உருண்டையான பனிக்கட்டி போன்ற ஒரு பொருள் அவர்கள் கூடாரங்களைச் சுற்றி விழுந்து கிடந்தன. மோசே கட்டளைப் படி சுவைமிகுந்த அந்தப் பொருள்களை அவ ரவர் தேவைக்கேற்ப அவர்கள் பொறுக்கிக் கொண்டனர். அவற்றிலிருந்து அப்பம் செய்து இறைச்சியோடு அவர்கள் உண்டார்கள். அப் பொருளுக்கு அவர்கள் 'மன்னு' என்று பெயரிட்டனர். ஒவ்வொருநாளும் அவ்ரவர் குடும்ப எண்ணிக்கைக்கு ஏற்ப, அவரவர் தேவைக்கு ஏற்ப மட்டுமே அவர்கள் அவற் றைச் சேகரிக்கவேண்டும் என்பது கடவுளின் கட்டளை.

கானான் தேசத்தின் எல்லையை அவர்கள் அடையும்வரை, அவர்கள் வனத்திலே பயணம் செய்த நாற்பது ஆண்டுகளும் அவர்களுக்கு இந்த அப்பமும் இறைச்சியும் கடவுள் கிருபை யால் கிடைத்தது. அவர்களது சின்னஞ்சிறு தேவைகளையும் கடவுள் கொடுத்தார். கேளுங்கள் கொடுக்கப்படும் என்பது உண்மை யான வாக்கன்றோ?



கேளுங்கள் கொடுக்கப்படும். மன்னு காடைகள் (யாத். 16)

78. கற்பாறையினின்று குடிநீர்

யாத். 17

இஸ்ரவேலர்கள் பயணம் தொடர்ந்தது. சீன் வனந்தரத்திலிருந்து புறப்பட்ட அவர்கள் 'ரெவிதீம்' என்னும் இடத்திற்கு வந்தார் கள். இங்கும் குடிநீர் கிடைக்காது துன்பப் பட்ட அவர்கள் மோசேயை நோக்கி, 'தாகத் தால் செத்துப்போகவா நாங்கள் எகிப்தி லிருந்து வந்தோம்?' என்று முறுமுறுத்தார் கள். மோசே கடவுளிடம் விண்ணப்பம் செய் தார். தன்னிடம் விண்ணப்பித்த மோசேக்குக் கடவுள், ,'நீ நதியை அடித்த கோலால் நான் நிற்கும் ஓரேப் மலையை அடி' என்று கட்டளை யிட்டார். இஸ்ரவேல் மூப்பர்களையும் தன் னேடு அழைத்துக்கொண்டு புறப்பட்ட மோசே, ஓரேப் மலையின் கற்பாறையைத் தன் கோலினல் அடிக்க கற்பாறையினின்று தண்

ணீர் புறப்பட்டது. தாகத்தால் தவித்த அவர்களின் தாகம் தீர்க்க பாறையினின்று தண்ணீர் வந்தது எவ்வளவு அதிசயம்! அவர்கள் கர்த்தரைப் பரீட்சை பார்த்ததின் நிமித்தமும் வாதாடினதின் நிமித்தமும் அந்த இடத்திற்கு மாசா என்றும் மேரிபா என்றும் மோசே பெயரிட்டார்.



கற்பாறையினின்று குடிநீர் (யாத். 17)

79. இஸ்ரவேலர்களின் யுத்தம்

யாத். 17

இஸ்ரவேலர்கள் 'ரெவிதீம்' என்னும் இடத்தில் தங்கியிருந்தபோது அங்கு வசித்து வந்த அமலேக்கியர் என்பவர்கள் இஸ்ரவேலர்களுடன் போருக்கு வந்தார்கள். ஏன் தெரியுமா? அந்த வனாந்தர பிரதேசத்தில் காணப்படும் நீர்நிலைகளைக்கண்டு புதிதாய் வந்த இஸ்ரவேலரும் தண்ணீரைப் பயன்படுத்த ஆரம்பித்ததினால் ஏற்பட்ட பிரச்சினைகளே சண்டைக்குக் காரணம். மோசே, யோசுவா தலைமையில் இஸ்ரவேலர்களை யுத்தத்துக்கு அனுப்பினார்.

மோசேயும் ஆரோனும், ஊர் என்பவனும் மலையுச்சியில் நின்றார்கள். மோசே தன் கைகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டார். மோசேயின் கை உயர்ந்திருக்கும்போது இஸ்ரவேலர்களுக்கு வெற்றியும், மோசேயின் கை தாழும்போது அமலேக்கியருக்கு வெற்றியும் மாறி மாறி கிடைத்துக்கொண்டிருந்தது. தொடர்ந்து இஸ்ரவேலர்களுக்கே வெற்றி கிடைக்கவேண்டுமானால் மோசே தன் கைகளை உயர்த்திய நிலையிலேயே இருக்கவேண்டும். மோசே முயற்சி செய்தார். ஆனால் அவரது கைகளோ மிகவும் சோர்ந்துபோயின.

அப்பொழுது ஆரோனும், ஊர் என்பவனையும் மோசேயையும் ஒரு கல்லின்மீது உட்கார வைத்து அவர்களது கைகளை ஆளுக்கொன்றாகத் தாங்கி, தூக்கிப் பிடித்துக்கொண்டார்கள். சூரியன் மறையும் வரை மோசேயின் உயர்த்திய கை கீழே தாழவில்லை. இஸ்ரவேலர்கள் தாங்கள் நடத்திய முதல் யுத்தத்தில் முதல்தரமான வெற்றிபெற்றார்கள்.

80. மாமன் மருமகனுக்குச் சொன்ன யோசனை

யாத். 18

மோசேயின் மாமனாகிய எத்திரோ, இஸ்ரவேலருக்குத் தேவன் செய்த யாவையும் கேள்விப்பட்டபோது மோசேயின் மனைவியாகிய சிப்போராளையும் அவளுடைய இரு குமாரரையும் அழைத்துக்கொண்டு மோசேயைக் காண வந்திருந்தார். மறு நாள் மோசே மக்களை நியாயம் விசாரிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மக்கள் கூட்டம் கூடிநின்று நாள்முழுவதும் காத்திருந்து ஒவ்வொருவராக வந்து போனதை

அவர் ஆட்சேபித்து மோசேயை அழைத்து ஏன் இவ்வளவு தாமதமாகக் காரியம் செய்கிறாய் என்று கேட்டார். அப்பொழுது மோசே தான் ஒவ்வொருவரின் காரியத்தையும் விசாரித்து கடவுளின் கட்டளைப்படி நியாயம் சொல்லுவதால் அதிக நேரம் ஆகிறது என்றான்.

அனுபவம் நிறைந்த எத்திரோ மருமகனுக்கு ஒரு புத்திமதி சொன்னார். தேவனுக்குப் பயந்த உண்மையுள்ள திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு அவர்களை ஆயிரம் பேருக்கு, நூறு பேருக்கு, ஐம்பது பேருக்கு, பத்து பேருக்கு ஒவ்வொரு அதிபதிகளாகவும் நியமித்து அவர்களையே ஜனங்களை நியாயம் விசாரிக்கும்படியாகவும் பெரிய காரியங்களை மட்டும் மோசேயிடம் கொண்டுவந்தால் காரியங்கள் இலகுவாக இருக்கும் என்பதே அந்த புத்திமதி.

மோசே ஒரு பெரிய தலைவனாக இருந்தும் மாமனால் தனக்குக் கொடுக்கப்பட்ட புத்திமதியை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு அதன்படி செய்தார்.

81. பத்துக்கட்டளைகள்

யாத். 20

கடவுளின் கோபத்தைத் தணிக்க இம் மக்களுக்காக மீண்டும் மோசே கெஞ்சி மன்றாடினார். சீனாய் மலையில் நாற்பது நாட்கள் இரவும் பகலும் கடவுளோடு தங்கியிருந்து மன்றாடினார். அவர் திரும்பிவரும்போது வேறு இரு பலகைகளில் கடவுளின் கட்டளைக் கொண்டு வந்தார். அவையாவன:

1. என்னையன்றி வேறு கடவுளை வணங்குதல் கூடாது.
2. விக்கிரகங்களை வணங்குதல் கூடாது.
3. என் கட்டளைகளை மீறுகிறவர்களை நான் தண்டிப்பேன். என் கட்டளைகளை கடைப்பிடிக்கிறவர்களையோ நான் ஆசீர்வதிப்பேன்.
4. என் நாமத்தை வீணாக வழங்கக்கூடாது.
5. பரிசுத்த ஓய்வுநாளைத் தூய்மையாகக் கழிக்க வேண்டும்.
6. பெற்றோர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும்.
7. கொலை செய்யக்கூடாது.
8. விபச்சாரம் செய்யக்கூடாது.
9. களவு பண்ணக்கூடாது.
10. பிறருக்குரிய எப்பொருளையும் விரும்பக் கூடாது என்பவையே. இந்த பத்துக் கட்டளைகளும் கடவுள் அருளிய அறநெறிகளுள் மிக முக்கியமானவை. இவற்றை எழுதிய கற்பலகைகளைக் கடவுளே மோசேயிடம் கொடுத்தார்.

இவை தவிர நீதி, இரக்கம், ஒழுக்கம், ஓய்வு ஆண்டு, முப்பெரும் விழாக்கள் போன்ற பலவற்றையும் எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கடவுள் கூறினார். மோசே இவற்றையும் எழுதி வைத்துக்கொண்டார்.




பத்துக் கட்டளைகள் (யாத். 20)

82. பொன் கன்றுக்குட்டி

யாத். 32

'ரெவிதீம்' என்னும் இடத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர்கள் 'சீனாய்' மலைக்கருகில் தங்கினர். அங்கு அந்த மலையில் கடவுள் மோசேக்குத் தரிசனமானார். இஸ்ரவேலர் யாவரும் பரிசுத்தப் படுத்தப்பட்ட நிலையில் பரிசுத்தமான அந்த மலைக்கு அருகில் வரக்கூடாதவர்களாய்த் தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தனர். பரிசுத்த கடவுள் பரிசுத்த மக்கள் கடைபிடிக்கவேண்டிய சில அறநெறிகளை மோசேக்குக் கூறினார்.

இஸ்ரவேலர்கள் பார்த்துக் கொண்டிருக்க சீனாய் மலையில் ஏறிச்சென்ற மோசே திரும்பிவர தாமதமானது. இஸ்ரவேலர் ஆரோனை நோக்கி, 'மோசேக்கு என்ன நேர்ந்தது என்று நாங்கள் அறியோம். எனவே எங்களுக்கு ஒரு கடவுளை உண்டாக்கும்' என்றார்கள். ஆரோனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அம்மக்கள் கொண்டுவந்த பொன் காணிக்கைகளால் ஒரு பொன் கன்றுக்குட்டியை உருவாக்கி இதுவே உங்கள் கடவுள் என்று கூறினார். அவர்கள் அக் கன்றுக்குட்டியை வணங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். அந்த நேரத்தில் மோசே, கடவுள் தந்த அறநெறிகள் அடங்கிய கற்பலகைகளோடு மலையிலிருந்து இறங்கி வந்தார். மக்கள் செய்கையைப் பார்த்த மோசேக்குக் கோபம் வந்தது. கோப மிகுதியால் தன் கையிலிருந்த கடவுள் தந்த பலகைகளை உடைத்துப்போட்டார். பொன் கன்றுக்குட்டி சாம்பலாக்கப்பட்டது. என்றாலும் கடவுளின் தண்டனைக்கு அந்த மக்கள் தப்பவில்லை. ஏராளமான மக்கள் கொள்ளை நோயால் அழிந்தார்கள்.



பொன் கன்றுக்குட்டி (யாத். 32)

83. இஸ்ரவேலர்களின் உடன்படிக்கைப்பெட்டி


யாத். 33

இஸ்ரவேலர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளைக் கடவுளிடமிருந்து அறிந்து கொண்ட மோசே அவற்றை மக்களுக்கு அறிவித்தார். அவற்றை எழுதியும் வைத்தார். இந்த அறநெறிகளைக் கடைப்பிடிக்காதவர்களுக்குக் கண்டிப்பாகத் தண்டனை உண்டு என்பதும், கடைப்பிடிப்பவர்களுக்கோ ஆசீர்வாதம் கிடைக்கும் என்பதும் ஒரு முக்கியமான அறநெறியே. இதனை கடவுள் இஸ்ரவேலர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கை என்று கூறுவர். எனவே மோசே கொண்டு வந்த பத்துக்கட்டளைகள் அடங்கிய கற்பலகையை உடன்படிக்கைப் பலகை என்று அவர்கள் அழைத்தனர். இந்த உடன்படிக்கைப் பலகையை ஒரு பேழையில் வைத்த

னர். இந்தப் பேழை சித்தீம் மரத்தால் செய்யப்பட்டு பொன்னால் மூடப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கைப் பேழையை இஸ்ரவேலர்கள் மிகவும் புனிதமாகப் போற்றி வந்தனர்.

கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேலர்கள், கடவுளிடம் தாங்கள் விரும்பியதையெல்லாம் கேட்டுப் பெற்றுக்கொண்ட இஸ்ரவேலர்கள் அவரைத் தொழுதுகொள்ள தங்களுக்கு ஒரு கூடாரம் தேவையென்பதை உணர்ந்தார்கள். மோசே கட்டளைப்படி ஒரு கூடாரத்தையும் அமைத்தார்கள். சித்தீம் மரத்தால் கட்டப்பட்ட இக் கூடாரத்தின் பக்கப் பகுதிகளை விலையுயர்ந்த பட்டுத் துணிகளால் மூடினார்கள். வெள்ளாட்டுத் தோலைக் கொண்டு கூரைப்பகுதியை மூடினார்கள். ஆங்காங்கே திரைகளும் வளையங்களும் அமையப் பெற்றிருந்த அந்தக் கூடாரத்தில் உட்பகுதியில் தொங்கு திரையால் மூடப்பட்ட பரிசுத்த இடம் ஒன்று இருந்தது. இதில்தான் அந்த உடன்படிக்கைப் பேழை வைக்கப்பட்டது. பரிசுத்த இடத்திற்கு முன்பாக அப்பமேஜை, பலிபீடம், விளக்குத் தண்டு, வெண்கல நீர்த் தொட்டி போன்றவைகளும் இருந்தன.

இந்தத் தொழுகைக் கூடாரமும், கூடாரத்திற்குள் இருந்த அனைத்துப் பொருட்களும் இஸ்ரவேலர்கள் கொடுத்த காணிக்கைப் பொருள்களாலானவையே. இஸ்ரவேலர்களின் முதல் ஆலயம் இந்தக் கூடாரமே. மோசேதான் இவர்களது முதல் போதகர். அங்குமிங்கும் அலைந்து திரிந்த இஸ்ரவேலர் தாங்கள் செல்லும் இடமெங்கும் இந்தக் கூடாரத்தைத் தூக்கிச் சென்றார்கள்.



இஸ்ரவேலரின் உடன்படிக்கைப் பெட்டி (யாத். 33)

84. இஸ்ரவேலரின் பலிபீடம்

யாத். 34–40

உடன்படிக்கைப்பெட்டி இருந்த கூடாரத்திற்கு வெளியே பலிபீடம் அமைக்கப்பட்டது. இந்தப் பீடத்தின்மேல் மிருகங்கள் பலி செலுத்தப்பட்டு, எரிக்கப்படும். கடவுளின் சட்டத்தை மீறுகிறவன் கட்டாயம் பலி செலுத்தித் தன்னை சீர்திருத்திக் கொள்ளவேண்டும் என்பது கட்டளை. பலி ஒரு ஆடாகவோ, கன்றுக் குட்டியாகவோ இருக்கலாம். இப்படிபலி செலுத்துவது கடவுளிடம் தான் செய்த பாவத்திற்கு மன்னிப்புக் கேட்பதற்குச் சமமாகும். இந்த மிருகம் பலியிடப்படுவதினால் மட்டும் மன்னிப்பு இல்லை. கடவுளின் இரக்கத்தினால் மட்டுமே மன்னிப்பு கிடைக்கிறது.

ஆனாலும் மிருகங்களைக் கொண்டுவந்து பலியிடுவது கடவுளுக்கு நன்றி சொல்லும் ஒரு வழியாகும். கடவுள் அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு நான் எப்போதும் உங்களோடு இருப்பேன் என்று வாக்குக் கொடுக்கிறார். ஆகவே அவர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் இந்தக் கூடாரமும், பலிபீடமும் அவர்கள் தெய்வ வழிபாட்டில் முக்கிய இடத்தைப் பெற்றன.

தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தை நோக்கி மறுபடியும் சீனாய் மலையிலிருந்த இஸ்ரவேலர் பயணப்பட்டனர்.

எண்ணாகமம்

முன்னுரை

எகிப்திலிருந்து வெளியேறிய இஸ்ரயேலின் எண்ணிக்கையை இப்பகுதி கூறுகிறது. கடவுள் தங்களுக்கு அளித்த மாபெரும் விடுதலையை நினைத்து நன்றி செலுத்துவதற்குப் பதிலாக, இவர்கள் பல முறை கடவுளை எதிர்த்து முறுமுறுத்தனர். கீழ்ப்படியாமையால் பிடிவாத குணத்துடன் நடந்து கொண்டனர். ஏனெனிலும் கடவுள் தாம் திட்டமிட்டிருந்த மீட்பின் செயலின் பொருட்டு அவர்கள்மேல் இரக்கமே காட்டி வந்தார்.

85. இஸ்ரவேல் புத்திரரை ஆளும் பிரபுக்கள்

எண். 1


கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலிருக்கிற ஆசரிப்புக் கூடாரத்திலே மோசேயைச் சந்தித்தார். மோசேயை நோக்கி இஸ்ரவேல் புத்திரரின் பிதாக்களின் வம்சங்களிலுள்ள இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்துக்குப் புறப்படத்தக்க எல்லோரையும் நீயும் ஆரோனும் எண்ணிப் பார்ப்பீர்களாக என்றார்.

மேலும் மோசேயை கூப்பிட்டு மோசேயுடனும், ஆரோனுடனும் நிற்பதற்கு ஒவ்வொரு கோத்திரத்துக்கும் ஒவ்வொரு மனிதனின் பெயரையும் கர்த்தர் மோசேக்குச் சொன்னார். இவர்கள் இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்குத் தலைவர் என்றார்.

இப்படி கர்த்தர் கட்டளையிட்டபடி மோசேயும், ஆரோனும் பேர்பேராகக் குறிக்கப்பட்ட மனிதர்களைக் கூட்டிக் கொண்டு போய் இஸ்ரவேல் புத்திரரின் பிதாக்களின் வம்சத்தில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்களை எண்ணினான். அவ்வாறு எண்ணியவர்களின் தொகையானது ஆறு லட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேராயிருந்தார்கள்.

கர்த்தர் கட்டளையிட்டபடியே லேவியர் கோத்திரம் எண்ணப்படவில்லை. அவர்கள் சாட்சியின் வாசஸ்தலத்தைக் காவல் காப்பவர்களாக நியமிக்கப்பட்டனர்.

கோத்திரங்களின் நாமங்களாவன:—



இஸ்ரவேல் புத்திரரை ஆளும் பிரபுக்கள் (எண். 1)

1. ரூபன்	7. காத்
2. சிமியோன்	8. ஆசேர்
3. யூதா	9. நப்தலி
4. செபுலோன்	10. எபிராயீம்
5. இசக்கார்	11. மனசே
6. தான்	12. பென்யமீன்

86. பெரிய மேகம்

எண். 9

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு பிரயாணப்பட்டுப் போகையில் வழியில் எங்கெல்லாம் கூடாரம் அமைத்துத் தங்கினார்களோ, அங்கெல்லாம் மேகமானது உடன்படிக்கைப் பெட்டியையும் கூடாரத்தையும் மூடிற்று. இரவில் கூடாரத்தின் மேல் அக்கினித் தோற்றம் உண்டாயிற்று.

மேகம் கூடாரத்தின் மேல் இருக்கும் வரை இஸ்ரவேல் புத்திரர் பாளயத்தில் தங்கியிருப்பார்கள். மேகம் நெடு நாள் கூடாரத்தின் மேல் தங்கியிருந்தாலும் இஸ்ரவேல் புத்திரர் புறப்படாமல் கர்த்தரின் கட்டளைக்குக் காத்திருப்பார்கள். மேகம் எழும்பும் போது பகலானாலும் இரவானாலும் இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்படுவார்கள்.

இப்படியாகக் கர்த்தர் மோசேயைக் கொண்டு மக்களை வழி நடத்திச் சென்றார்.

87. பன்னிரெண்டு ஒற்றர்கள்

எண். 13

கர்த்தர் மோசேயை நோக்கி நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்கு ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒவ்வொரு பிரபுவை அனுப்பு என்றார். அதன்படியே மோசே அனுப்பினான்.

கானான் நாட்டைச் சுற்றிப் பார்க்கச் சென்றவர்கள், அது பாலும் தேனும் ஓடுகின்ற நாடு எனக் கண்டார்கள். அந்நாட்டு மக்கள் தங்களைவிடப் பலவான்களாக இருப்பதைப் பார்த்தார்கள். அவர்கள் திரும்பி வரும் பொழுது ஒரே குலையுள்ள திராட்சக்கொடியை அறுத்து அதை ஒரு தடியில் கட்டி இரண்டு பேர் தூக்கிக் கொண்டு வந்தார்கள். தாங்கள் தங்கியிருந்த காதேசுக்கு வந்தவர்கள் இஸ்ரவேல் சபையாருக்கு தாங்கள் கண்டதை அறிவித்து கனிகளைக் காண்பித்தார்கள். கனிகளைக் காண்பித்த அவர்களிலே காலேப்பும், யோசுவாவும் தவிர மற்றவர்கள் கானான் நாட்டைப்பற்றித் துர்ச்செய்திகளை மக்களுக்குள்ளே பரப்பினர். அவர்களோ பெரிய இராட்சதர்கள் என்றும் ஏனாக்கின் குமாரர் என்றும், நாங்கள் அவர்களுக்குமுன் வெட்டுக்கிளி போன்றிருந்தோம் என்றும் கூறினார்கள், இதைக்கேட்ட இஸ்ரவேல் புத்திரர் அழுது புலம்பினர்.

88. யோசுவாவும், காலேபும் இஸ்ரவேல் மக்களோடு பேசுதல்

எண். 14



யோசுவாவும் காலேபும் (எண். 13)

இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டின் பலவான்களைப் பற்றிக் கேட்டவுடன் மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தார்கள். தங்களுக்கு ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொண்டு எகிப்துக்குத் திரும்பிப் போவோம் என்றார்கள்.

கானான் நாட்டைச் சுற்றிப் பார்த்தவர்களில் காலேபும், யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரர் பேசியதைக் கேட்டவுடனே தங்கள் ஆடையைக் கிழித்துக் கொண்டனர். இஸ்ரவேல் சமஸ்த முழு சபையை நோக்கி நாங்கள் போய் சுற்றிப்பார்த்த நாடு மகா நல்ல நாடு என்றார்கள். அந்த நாட்டு மக்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். கர்த்தர் நம்மோடே இருக்கிறார் என்றார்கள். யோசுவாவும், காலேபும் அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றும் முடியவில்லை. இதனால் கடவுளுடைய கோபம் இஸ்ரவேல் மக்கள்மீது மூண்டது. தான் வாக்களித்த கானான் நாட்டை யோசுவாவும் காலேபும் தவிர மற்ற பத்து கோத்திரத் தலைவர்கள் காண்பதில்லை, அவர்களின் பிள்ளைகள் தான் காண்பார்கள். அதுவரை மேலும் நாற்பது வருடம் வனாந்தரத்தில் அலைந்து திரியும்படி கடவுள் கட்டளையிட்டார்.

89. பன்னிரெண்டு கோல்கள்

எண். 17, 18

கர்த்தர் மோசேயை நோக்கி இஸ்ரவேல் புத்திரரின் பிதாக்களின் வம்சங்களாகிய ஒவ்வொரு வம்சத்தினுடைய பிரபுக்களிடத்தும் ஒவ்வொரு கோலாகப் பன்னிரெண்டு கோல்களைவாங்கி அவனவன் கோலின் மீது அவனவன் பெயரை எழுதுவாயாக என்றார்.

ஆனால் லேவியருடைய கோலின் மீது ஆரோன் பெயரை எழுது. இக்கோல்கள் அனைத்தையும் ஆசரிப்புக் கூடாரத்தில் சாட்சி பெட்டிக்குமுன் வை. அப்பொழுது நான் தெரிந்துகொள்ளப்பட்டவனுடைய கோல் மட்டும் துளிர்க்கும் என்றார். மோசே கர்த்தர் கட்டளையிட்டபடியே செய்தான்.

இதோ மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் சென்றபோது லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் மட்டும் துளிர்த்திருந்தது.

கர்த்தர் ஆரோனை நோக்கி நீயும், உன் சகோதரரும் ஆசரிப்புக் கூடாரத்தின் முன் ஊழியம் செய்யக்கடவீர்கள் என்றார்.

90. கன்மலையும் தண்ணீரும்

எண். 20

சீன் வனாந்திரத்தில் இஸ்ரவேல் மக்களுக்குத் தண்ணீரில்லாமலிருந்தது. விதைப்பும், அத்தி மரமும், திராட்சச் செடியும், மாதுளஞ்செடியும், தண்ணீருமில்லாத இந்த கெட்ட இடத்திற்கு, எகிப்திலிருந்து எங்களைக் கொண்டுவந்த தென்னவென்று இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராக கூட்டம் கூடினார்கள்.

அப்பொழுது மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலின் முன் முகங்குப்புற விழுந்தார்கள். கர்த்தர் மோசேயை நோக்கி, நீ கோலை எடுத்துக் கொண்டு சபையாருக்கு முன்பாக கன்மலையைப் பார்த்து பேசு என்றார். மோசே கர்த்தர் கட்டளையிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கோலை எடுத்து சபையாரைக் கூடிவரச் செய்து கன்மலை முன்பாக நின்று கன்மலையைக் கோலினால் இரண்டுமுறை அடித்தார் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வந்தது. சபையார் தண்ணீரைக் குடித்தார்கள். மிருகங்களும் குடித்தன.

ஆனால் கடவுள் மோசேயின் மேல் கோபம் கொண்டார். பேசுவதற்குப் பதிலாகக் கோலினால் கன்மலையை மோசே அடித்து விட்டாரல்லவா? கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாதபடியினால் மோசே கானானுக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை இழந்தார்.

91. ஏதோம் அரசன்

எண். 20

இஸ்ரவேல் மக்கள் சீன் வனாந்திரத்தில் காதேசிலே தங்கியிருந்தனர். மோசே காதேசிலிருந்து ஏதோம் அரசனுக்கு ஸ்தானாதிபதிகளை அனுப்பி, கர்த்தரால் நாங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு, காதேஸ் ஊரில் வந்திருக்கின்றோம். உமது தேசத்தின் வழியாகக் கடந்து செல்வதற்கு உத்தரவு கொடும், நாங்கள் வயல் வெளியாக, திராட்சத் தோட்டங்கள் வழியாகச் செல்லாமல் துரவுத்தண்ணீரைக் குடியாமல் ராஜபாதையாக நடந்து, உமது எல்லையைக் கடந்து போகும் மட்டும் வலதுபுறம், இடதுபுறம் சாயாதிருப்போம் என்று உமது சகோதரனாகிய இஸ்ரவேல் சொல்லி அனுப்புகிறான் என்று சொல்லச் சொன்னான்.

ஆனால் ஏதோம் அரசனோ இஸ்ரவேல் புத்திரருக்குத் தன் தேசத்தைக் கடந்துபோவதற்கு உத்தரவு கொடுக்க மறுத்து விட்டான். எனவே இஸ்ரவேல் புத்திரர் ஏதோம் அரசனின் தேசத்தை விட்டு விலகிப் பிரயாணப்பட்டு 'ஓர்' என்னும் மலைக்குப் போனார்கள்.

92. ஆரோன் மரணம்

எண். 20

'ஓர்' என்னும் மலையிலே கர்த்தர் மோசேயுடனும் ஆரோனுடனும் பேசினார். நீங்கள் மேரிபாவின் தண்ணீரைப் பற்றிய காரியத்தில் என் வாக்குத்தத்தத்திற்குக் கீழ்ப்படியாமற் போனீர்கள். எனவே நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் நாட்டில் ஆரோன் பிரவேசிப்பதில்லை என்றார். கர்த்தர் மோசேயை நோக்கி, நீ ஆரோனையும் அவன் குமாரன் எலெயாசாரையும் ஓர் என்னும் மலையில் ஏறப்பண்ணு. அங்கே ஆரோன் உடுத்தியிருக்கிற உடைகளைக் கழற்றி அவைகளை அவன் குமாரன் எலெயாசாருக்கு உடுத்துவாயாக. ஆரோன் அங்கே மரித்து தன் மக்களோடே சேர்க்கப்படுவான் என்றார்.

மோசே கர்த்தர் கட்டளையிட்டபடியே இஸ்ரவேல் சபையாருக்குமுன்பாகச் செய்தார். ஆரோன் மரித்துப் போனதைச் சபையார் எல்லாரும் கண்டபோது ஆரோனுக்காக முப்பது நாள் துக்கம் கொண்டாடினர்.

93. வெண்கலப் பாம்பு


எண். 21

இஸ்ரவேல் மக்கள் ஏதோம் நாட்டைச் சுற்றிப் போகும்படிக்கு ஓர் மலையை விட்டு சிவந்த சமுத்திரத்தின் வழியாய்ப் பிரயாணப்பட்டுப் போனார்கள். வழியில் இஸ்ரவேல் ஜனங்கள் மனமடிவாகி தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி, நாங்கள் வனாந்தரத்தில் சாகும்படி எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? என்றார்கள்.

அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ப் பாம்புகளை மக்களுக்குள்ளே அனுப்பினார். பாம்பு கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக மக்கள் செத்தார்கள்.

அதினால் இஸ்ரவேல் மக்கள் மோசேயிடம் சென்று, நாங்கள் கடவுளுக்கும் உமக்கும் விரோதமாகப் பேசிப் பாவம் செய்தோம் இந்தப் பாம்புகளை எங்களைவிட்டுப் போகும்படியாகக் கடவுளிடத்தில் எங்களுக்காக விண்ணப்பம் செய்யும் என்றார்கள். மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்காக தேவனிடம் விண்ணப்பம் செய்தார்.

அப்பொழுது கடவுள் மோசேயை நோக்கி, நீ ஒரு கொள்ளிவாய்ப் பாம்பின் உருவத்தை வெண்கலத்தினால் செய்து அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கிவை. கடிக்கப்பட்டவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்றார். மோசே அப்படியே செய்தார். பாம்பு கடித்தவன் அதை நோக்கிப் பார்த்துப் பிழைத்தான். இதில் அவனவன் விசுவாசமும் கீழ்ப்படிதலும் வெளிப்பட்டது. பின்பு இஸ்ரவேல் மக்கள் ஓபோத்தில் பாளயமிறங்கினார்கள்.



வெண்கலப் பாம்பு (எண். 21)

94. குறிகாரர்கள்

எண். 21

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கானான் நாட்டிற்கு அழைத்துக்கொண்டு வரும் காலத்தில், ஆங்காங்கே சில இடங்களில் குறிகாரர்களும் வசித்து வந்தனர்.

இவர்கள் கர்த்தருடன் பேசிப் பின்னால் நிகழப்போகும் காரியங்களை முன்னாலே தெரிந்துகொள்ளுவார்கள். கர்த்தர் இவர்களுடனே எதைச் சொன்னாரோ அதை மட்டுமே இவர்கள் மக்களுக்கோ, மன்னர்க்கோ அறிவிப்பார்கள். கர்த்தர் சொல்லியதை சொல்லுவதற்குப் பயப்படவே மாட்டார்கள். அதில் ஒன்றைக் கூட்டியும் குறைத்தும் சொல்ல மாட்டார்கள். இப்படிப்பட்ட மனிதர்களில் ஒருவர் தான் பிலேயாம்.

பிலேயாம் சிறந்த தெய்வபக்தர். கர்த்தருடன் உரையாடிய பின்புதான் தான் சொல்ல வேண்டியதைச் சொல்லிக்கொண்டு வந்தான். எனவே மக்கள் மன்னர்மீது மதிப்பும் அன்பும் கொண்டிருந்தனர். ஏனென்றால் பிலேயாம் சொல்லியது நடந்தது.

ஒரு சமயம் இஸ்ரவேல் புத்திரர் மோவாப் நாட்டிலே வந்து தங்கினர். மோவாப் நாட்டு அரசன் பாலாக் இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்தான். அவர்களின் பலம் செல்வாக்கு சம்பத்துக் கண்டு பொறாமைப்பட்டான். கலக்கம் கொண்டான்.

இஸ்ரவேல் புத்திரரை எப்படியாவது ஒழிக்க நினைத்தான். அதைப்பற்றி பலவாறு சிந்தித்தான். கடைசியாகக் குறிகாரன் பிலேயாம் நினைவு வந்தது. பிலேயாம் சொன்னால் எதுவும் பலிக்கும் என்றும் பாலாக் அரசனுக்குத் தெரியும். எனவே அரசன் பாலாக், பிலேயாமை அழைப்பித்தான்.

அரசன் பிலேயாமிடம் எனக்காக நீர் இந்த இஸ்ரவேல் புத்திரரைச் சபிக்கவேண்டும் என்றான். பிலேயாமோ மன்னன் என்றும் பாராது கடவுள் தனக்குச் சொல்லியபடியே இஸ்ரவேல் மக்களை ஆசீர்வதித்தான். இஸ்ரவேல் புத்திரர் பலத்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர்.

கர்த்தர் அவ்வப்போது இவ்வாறாகக் குறிகாரர்களைக் கொண்டும் இஸ்ரவேல் மக்களை வழிநடத்தினார்.

95. பாலாக்கும் பிலேயாமும்


எண். 22

இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்பண்ணி மோவாபின் சமனான வெளிகளில் பாளையம் இறங்கினார்கள். இஸ்ரவேல் புத்திரர்நிமித்தம் மோவாப் மன்னன் பாலாக் மிகவும் கலக்கமடைந்தான்.

பாலாக், பிலேயாமுக்கு ஸ்தானாதிபதிகளை அனுப்பி, அவனைத் தனக்கு எதிராக இஸ்ரவேல் புத்திரரை சபிக்கும்படியாக அழைத்து வரச் சொன்னான்.

பிலேயாம் கர்த்தரிடத்தில் கேட்டபொழுது பாலாக் மன்னனின் ஆட்களுடன் செல்ல வேண்டாமென்றும், இஸ்ரவேல் மக்களைச் சபிக்கவேண்டாம் அவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்றும் சொன்னார்.

இரண்டாவது முறையாக பாலாக் ஆட்களை அனுப்பியதும் பிலேயாம் அவர்களுடன் புறப் பட்டான். கர்த்தருடைய தூதனானவர் வழியிலே அவனுக்கு எதிராளியாக நின்றார்.



கர்த்தருடைய தூதனும் பிலேயாமும் (எண். 22)

96. கழுதை பேசியது

எண். 22

பிலேயாம், கழுதையில் பாலாக்கின் ஆட்களோடு செல்வதைக் கர்த்தர் வெறுத்தார். எனவே தேவதூதனைக்கொண்டு பிலேயாமின் வழியை மறித்தார்.

கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்துடன் வழியிலே நிற்பதைக் கண்ட கழுதை வழியை விட்டு விலகிச் சென்றது. பிலேயாம் கழுதையை அடித்தான். பின்பு கர்த்தருடைய தூதனானவர் இருபுறத்திலும் சுவர் வைத்திருந்த திராட்சைத் தோட்டப் பாதையிலே நின்றார். கழுதை சுவர் ஓரமாய் ஒதுங்கி, பிலேயாமின் காலை சுவரோடே நெருக்கியது. அப்பொழுதும் பிலேயாம் கழுதையை அடித்தான்.

பின்பு கர்த்தருடைய தூதன் வலதுபுறம், இடதுபுறம் செல்லமுடியாத இடுக்கமான வழியில் நின்றார். கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு பிலேயாமின் கீழ் படுத்துக் கொண்டது. பிலேயாம் கடுங்கோபத்துடன் கழுதையைத் தடியால் அடித்தான். கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார். 'நீர் என்னை இப்பொழுது மூன்றுதரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன்' என்றது.

கர்த்தர் பிலேயாமின் கண்களைத் திறந்தார். வழியிலே நின்ற கர்த்தருடைய தூதனைக் கண்டு முகங்குப்புற விழுந்தான்.

கர்த்தருடைய தூதனானவர் அவனை நோக்கி, உன் வழி எனக்கு மாறுபாடாயிருக்கிறதினால், நான் உனக்கு எதிரியாகப் புறப்பட்டு வந்தேன். கழுதை என்னைக் கண்டு விலகிற்று. எனக்கு விலகாமல் இருந்ததானால், இப்பொழுது நான் உன்னைக் கொன்றுபோட்டு, கழுதையை உயிரோடே வைப்பேன் என்றார்.

அப்பொழுது பிலேயாம் நான் பாவம் செய்தேன். உமது பார்வைக்குத் தகாததாயிருக்குமானால் நான் திரும்பிப் போய்விடுகிறேன் என்றான்.

அதற்குக் கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமை நோக்கி, நீ அந்த மனிதரோடே போ, ஆனாலும் நான் சொல்லும் வார்த்தையை மாத்திரம் சொல்லக்கடவாய் என்றார். அப்படியே பிலேயாம் பாலாக்கின் பிரபுக்களோடே கூடப்போனான்.

97. சாபம் ஆசீர்வாதமாக மாறியது

எண். 23,24

பிலேயாம் வருகிறதை பாலாக் கண்டு அவனை மிகச் சிறப்பாக வரவேற்றான். பிலேயாமை நோக்கி எனக்காக இஸ்ரவேல் மக்களைச் சபிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அதற்கு பிலேயாமோ கடவுள் என் வாயிலே அளிக்கும் வார்த்தையையே சொல்லுவேன் என்றான். அந்தப்படியே பிலேயாம் இஸ்ரவேல் மக்களைப் பார்த்து கடவுளாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார். ராஜாவின் ஜயகெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது. இஸ்ரவேல் மக்களை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், அவர்களைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள். ஏனென்றால் அவர்கள் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றான். இப்படியாக பிலேயாம் மூன்று முறை இஸ்ரவேல் மக்களுக்கு கடவுள் அருளின வாக்கின்படியே ஆசீர்வாதம் உரைத்தான், பாலாக் கோபமடைந்து தன் வழியே திரும்பினான்.

98. மோசேயின் மரணம்

உபா. 34

கடவுளுடைய மனிதனாகிய மோசே தான் மரணமடையுமுன்னே இஸ்ரவேல் மக்களை ஆசீர்வதித்தான். பின்பு மோசே நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறினான். கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தை மோசேக்குக் காண்பித்தார். கர்த்தர் சொன்னபடியே மோசே கானான் நாட்டைத் தன் கண்களால் மட்டும் பார்த்தார். ஆனால் அதற்குள் செல்லுமுன்னே மோவாப் தேசத்திலே மோசே மரித்துப் போனார். கர்த்தர் மோசேயை பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம் பண்ணினார். இந்நாள் வரைக்கும் மோசேயின் பிரேதக்குழியை ஒருவனும் அறியான்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்காக முப்பது நாள் துக்கம் கொண்டாடினர். மோசேக்குப் பின்பு யோசுவா இஸ்ரவேல் மக்களை வழி நடத்தினான்.

கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல், ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை.



மோசேயின் மரணம் (உபா. 34)

யோசுவா

முன்னுரை

இஸ்ரவேலரை எகிப்தினின்று விடுதலை செய்த பெருமை மோசேக்கு உரியது எனினும் அவர்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் கொண்டு சேர்க்கும் பேர் அவருக்குக் கிட்டவில்லை. அவருக்குத் துணைவராய் இருந்து, அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேலர் கானான் நாட்டைக் கைப்பற்றினர். வீழ்ச்சிகளுக்கும், தோல்விகளுக்கும் இடையே கடவுளுடைய மக்கள் அவருடைய உறுதிமொழிகள் நிறைவேறும் என்று தளராத நம்பிக்கைகொண்டிருந்தனர். மோசேயின் தலைமையில் செங்கடலைக் கடந்ததுபோல யோசுவாவின் தலைமையில் யோர்தானைக் கடந்து கானான் நாட்டைக் கைப்பற்றினர்.

99. யோசுவாவுக்குக் கடவுளின் கட்டளை

யோசு. 1

கடைசியாக நாம் மோசே மரித்துப் போனதைப் பார்த்தோமல்லவா? ஆனால் மோசேக்குப் பின் இஸ்ரவேல் மக்களைக் கர்த்தர் கைவிடவில்லை. அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட இனமல்லவா? ஒருபோதும் அவர்களைக் கைவிடமாட்டார்.

மோசே உயிரோடிருந்த காலத்திலேயே கர்த்தரின் கட்டளைப்படி மோசே, யோசுவாவை இஸ்ரவேலுக்குத் தலைவனாக நியமித்துப் பயிற்சி கொடுத்து அபிஷேகம் பண்ணினார். யோசுவாவுக்கு இன்னொரு பெயர் ஓசேயா. இந்த யோசுவா எப்ராயீம் கோத்திரத்தைச் சேர்ந்த நூன் என்பவரின் மகன். எகிப்திலிருந்து புறப்படும்போது இவருக்கு வயது நாற்பது. மோசே காலத்தில் அமலேக்கியர் வந்து இஸ்ரவேலரோடு யுத்தம் செய்தபோது இவர் இஸ்ரவேல் படைக்குச் சேனாபதியாயிருந்தார். மோசேயினால் கானான் நாட்டை உளவு பார்க்க அனுப்பப்பட்டு வந்து மக்களை தைரியப்படுத்திய இருவரில் ஒருவர் இவர்.

மோசே மரித்தபின், கர்த்தர் யோசுவாவிடம் நேருக்கு நேராகப் பேசி கட்டளையிட்டார்.

'நீ கால்வைத்து நடக்கும் இடமெல்லாம் வனாந்தரத்திலிருந்து நதிவரைக்கும், பெரிய சமுத்திரத்திலிருந்து பூமியின் கடைசிபரியந்தமும் உனக்குச் சொந்தமாகும், நான் உன்னோடேகூட இருப்பேன். பலன்கொண்டு திடமனதாயிரு. என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடந்தால் நீ பாதுகாப்பாயிருப்பதுடன் வெற்றியும் பெறுவாய். உங்கள் மனைவியரையும், குழந்தைகளையும், ஆடுமாடுகளையும் நதியின் இப்புறத்தில் விட்டுவிட்டு, உங்களிலுள்ள வீரர்களனைவரையும் சேர்த்துக்கொண்டு யோர்தானைக் கடந்து செல்லுங்கள்.' இதுதான் கர்த்தரின் கட்டளை.

கர்த்தரால் இடப்பட்ட இக்கட்டளையைக் கேட்டு யோசுவா மக்களைத் தன்னிடத்தில் அழைத்து, கர்த்தர் தமக்கிட்ட கட்டளையைச் சொன்னார். இஸ்ரவேல் மக்கள் அனைவரும் அவரை ஏகமனதுடன் தலைவராக ஏற்றுக்கொண்டு, மோசேக்குக் கீழ்ப்படிந்ததுபோல் அவருக்கும் கீழ்ப்படிவதாகவும், தங்கள் முழு ஒத்துழைப்பு அவருக்கு என்றும் உண்டென்றும் கூறி அவரைப் பலன்கொண்டு திடமனதாயிருக்கும்படி உற்சாகப்படுத்தினார்கள்.

100. ராகாப்

யோசு. 2

கர்த்தர் இட்ட கட்டளைப்படி யோசுவாவும் இஸ்ரவேல் வீரர்களும், யோர்தான் கரைக்கு வந்து தங்களுக்கு எதிரேயிருக்கும் எரிகோ பட்டணத்திற்கு எதிராகத் தங்கி, இரண்டு மனிதரை எரிகோ பட்டணத்தை உளவு பார்த்து வரும்படி அனுப்பினார்கள்.

பேரீந்துமரப் பட்டணம் என்றழைக்கப்படும் இந்த எரிகோ பட்டணத்தைச் சுற்றி உயரமான கோட்டைச் சுவர்கள் கட்டப்பட்டிருந்தன. அந்தப் பட்டணத்தில் ராகாப் என்னும் ஒரு பெண்ணிருந்தாள். ராகாப் என்பதற்கு 'விசாலம்' என்று பொருள். இவள் தன் பெற்றோரை விட்டுப் பிரிந்து தனியாக ஒரு சத்திரம் வைத்து நடத்துவதுடன் சிறிது ஒழுக்கக்கேடாக நடந்துகொள்பவளாகவுமிருந்தாள். பிறருக்கு உதவி செய்யும் நல்ல மனப்பான்மையும் இவளுக்கு உண்டு. இஸ்ரவேலர் எரிகோ பட்டணத்தைப் பிடிப்பதற்கு இவள் மிகவும் உதவியாயிருந்தாள். அதற்கு ஈடாக அவளும் அவள் தகப்பன் வீட்டாரும் எரிகோவுக்கு ஏற்பட்ட பேரழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டனர்.

101. இரு வேவுகாரரும் ராகாபும்

யோசு. 2

யோசுவாவால் அனுப்பப்பட்ட அந்த இரண்டு உளவாளிகளும் புது இடமாகிய அந்த எரிகோ பட்டணத்துக்குள் தைரியமாகச் சென்று ஒரு சத்திரத்தை அடைந்தனர் நல்ல வேளை, அதுதான் ராகாபின் சத்திரம். இதற்குள்ளாக இந்த இரு வேவுகாரரின் வருகை எரிகோ பட்டணத்து அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அரசனும் எல்லா இடங்களிலும் தேடியதுடன் சத்திரத்திற்கருகில் இருந்த ராகாபின் வீட்டிற்கும் ஆட்களை அனுப்பித் தேட கட்டளையிட்டான். அரசனால் அனுப்பப்பட்ட ஆட்களும் ராகாபிடம் வந்து அங்கு வந்த வேவுகாரரைப்பற்றி விசாரித்தனர்.

தேடி வந்த அந்த இரு மனிதர்களிடமும் ராகாப் அந்த உளவாளிகள் வந்தது உண்மை தானென்றும் ஆனால் அவர்கள் இருட்டுகிற நேரத்தில் வெளியேறிவிட்டதாகவும், அவர்கள் போய்ச் சிறிது நேரம்தான் ஆகியிருந்தபடியால், அரசனின் ஆட்கள் உடனே புறப்பட்டுச் சென்றால் அவர்களைப் பிடித்துவிடலாமெனவும் சாமர்த்தியமாகப் பொய் கூறினாள்.

ஆனால், உண்மையில் அவள் அந்த உளவாளிகளைமேல் வீட்டிற்குக் கொண்டுபோய், வீட்டின் மேல் பரப்பப்பட்ட சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்தாள். அவள் சொற்களை நம்பிய அரசனின் ஆட்களிருவரும் யோர்தான் நதிவரைக்கும் சென்று, அவர்களைத் தேடியும் காணாமல் திரும்பிப் போய்விட்டனர். ராகாப் அந்த உளவாளிகளிடம் ஏறிப்போய் அவர்களிடம் கடவுள் இந்த தேசத்தை உங்கள் கையில் கொடுத்துவிட்டார் என்பதை நான் அறிவேன். அதனாலே தேசத்து மக்கள் உங்களுக்குப் பயப்படுகிறார்கள். சிவந்த சமுத்திரத்தை உங்கள் நன்மைக்காக வற்றிப்போகப்பண்ணினதையும் நாங்கள் அறிவோம். ஆகையால், நீங்கள் இந்தப் பட்டணத்தைப் பிடிக்கும் நாளில் நான் உங்களுக்கு உதவி செய்ததுபோல நீங்களும் எனக்குத் தயை காண்பித்து என்னையும் என் தாய் தந்தையரையும், என் உடன் பிறப்புக்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் சேதமின்றி காப்பாற்றுவதாக எனக்கு வாக்குக் கொடுங்கள் எனக் கேட்டாள். அதற்கு அவர்களும் அவள் தங்கள் காரியத்தை வெளிப்படுத்தாதிருந்தால், பட்டணத்தைக் கர்த்தர் தங்களுக்குக் கொடுக்கும் நாளில், அவர்களை மறவாமல் தயவும், சத்தியமும் பாராட்டிக் காப்பாற்றுவதாக வாக்குக் கொடுத்தார்கள்.



வேவுகாரர் தப்பிச் செல்லுதல் (யோசு. 2)

102. வேவுகாரர் தப்பிச் செல்லல்

யோசு. 2

சணல் தட்டைகளுக்குள் ராகாபினால் ஒளித்து வைக்கப்பட்ட அந்த இரு வேவுகாரரும் தப்பிச் சென்றவிதம் மிகச் சுவையானது.

அவர்களைத் தேடி வந்த அரசரின் ஆட்கள் சென்றபின், அவ்வேவுகாரர்களிடமிருந்து தன்னையும் தம் குடும்பத்தினரையும் காப்பாற்றுவதாக வாக்குறுதி பெற்றபின் ராகாப் ஒரு நீள பலமான கயிற்றை எடுத்து வந்து, அந்த ஊரின் கோட்டைச் சுவர்மேல் இருந்த அவள் வீட்டுச் சன்னல் ஒன்றில் கட்டி வைத்து, அக்கயிற்றைக் கோட்டைக்கு வெளியில் விட்டு, வெகு கவனமாக அந்த கயிறு வழியாய் அவர்களைப் பத்திரமாய் இறக்கிவிட்டாள். அவர்

களைத் தேடுகிறவர்கள் அவர்களைக் காணாதபடிக்கு, மலையில்போய் அவர்கள் திரும்பிச் செல்லுமட்டும் அங்கே மூன்று நாள் ஒளிந்திருந்து பின்பு அவர்கள் வழியே செல்லும்படி ஆலோசனை கூறியனுப்பினாள்.

அப்பொழுது அவர்கள் தாங்கள் மீண்டும் அந்த தேசத்துக்குள் வெற்றியுடன் வரும்போது அவள் தங்களை இறக்கிவிடும் அந்த ஜன்னலில் ஒரு சிவப்பு நூல் கயிற்றை அடையாளமாகக் கட்டி வைத்திருக்க வேண்டுமென்றும், அவள் தகப்பன், சகோதரர் வீட்டாரனைவரையும் அவளிடத்தில் அவள் வீட்டில் சேர்த்து கூட்டிவைத்திருக்க வேண்டுமென்றும், அவள் தங்கள் காரியத்தை வெளிப்படுத்தினால் அவள் தங்களிடம் வாங்கிய ஆணைக்குத் தாங்கள் நீங்கலாயிருப்பதாகவும் கூறினார்கள். அதற்கு அவளும் தான் ஒரு சொல்லையும் வெளியிடப்போவதில்லை என்று அவர்களுக்கு ஆணையிட்டபின், ஒரு சிவப்பு நூல் கயிற்றை எடுத்து அவர்கள் போனபின் அந்த ஜன்னலில் கட்டி வைத்தாள், இப்படியாக அந்த உளவாளிகள் தப்பிச் சென்றனர்.

குறிப்பு: வேவுகாரர் அல்லது உளவாளிகள் என்பதற்கு இரகசியமாக பிறநாட்டு நடவடிக்கைகளை அறிந்து தம் நாட்டு அரசனிடம் கூற அனுப்பப்பட்டவர்கள்.

103. உளவாளிகள் யோசுவாவிடம் திரும்புதல்

யோசு. 2

தப்பிச் சென்ற அந்த இரு உளவாளிகளும் ராகாபின் ஆலோசனைப்படி மூன்று நாள் மலையில் ஒளிந்திருந்தார்கள். அவர்களைத் தேடுகிறவர்கள் எல்லா இடங்களிலும் தேடியும் அவர்களைக் காணமுடியாததால் சலிப்படைந்து தங்கள் இடங்களுக்குச் சென்றுவிட்டார்கள். அதன்பின் அந்த இரண்டு மனிதரும் மலையிலிருந்து கீழிறங்கி ஆற்றைக் கடந்து யோசுவாவிடம் வந்தார்கள். வந்து தங்களுக்குச் சம்பவித்ததையெல்லாம் யோசுவாவிடம் கூறினார்கள்.

அப்பொழுது யோசுவா அவர்களிடம் அவர்கள் அங்கு கண்டவைகளையும், அவைபற்றி அவர்களது ஆலோசனையையும் கேட்டார். அதற்கு அவர்கள் கர்த்தர் தேசத்தையெல்லாம் தங்கள் கையில் ஒப்புக்கொடுத்தார் என்றும், தேசத்துக் குடிகளெல்லாம் தங்களுக்கு முன்பாகச் சோர்ந்துபோனதாகவும் கூறினார்கள். அதனால் யோசுவாவும் மக்களும் தைரியமும் உற்சாகமுமடைந்தார்கள்.

104. ஆறு வழிவிட்டது

யோசு. 3

இஸ்ரவேலர் உளவாளிகளின் சொற்படி எரிகோவைப் பிடிக்கவேண்டுமானால் எரிகோவுக்கும் அவர்களுக்கும் நடுவே ஓடுகிற யோர்தான் நதியைக் கடந்து செல்லவேண்டும். இந்த ஆறு பாலஸ்தீனா நாட்டிலுள்ள எல்லா ஆறுகளிலும் பெரியது. இதன் நீளம் இருநூறு மைல். அதன் அகலம் தொண்ணூறு அடி முதல் இருநூறு அடி வரை உள்ளது. மாரி காலத்திலும் அறுப்புக் காலத்திலும் இதில் வெள்ளம் கரைபுரண்டோடும்.

இஸ்ரவேல் புத்திரர் எரிகோவுக்குப் போகுமுன் மூன்று நாள் அந்த நதிக் கரையில் தங்கியிருந்தார்கள். பின்பு புறப்பட ஆயத்தமானபோது, மக்களின் அதிபதிகள் ஆசாரியர்களால் சுமந்து செல்லப்படும் உடன்படிக்கைப் பெட்டி முன் செல்ல, ஜனங்கள் பின்னால் சற்று தூரத்தில் பின்செல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். பின் யோசுவாவின் கட்டளைப்படி தங்களைச் சுத்தம் செய்துகொண்டு மக்கள் புறப்பட்டார்கள். கர்த்தரின் கட்டளைப்படி உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து செல்லும் ஆசாரியர்கள் யோர்தான் கரையில் வந்து நின்றனர். அறுப்புக் காலமாதலால் யோர்தான் கரைபுரண்டோடியது. ஆசாரியரின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே

என்ன ஆச்சரியம்; அந்த யோர்தான் நதி இரண்டாக வலது இடதுபுறம் பிரிந்து இருபக்கமும் நீரானது சுவர்போல் நிற்க நடுவில் வெட்டாந்தரை காணப்பட்டது. அப்பொழுது மக்கள் அதன் ஊடாக எரிகோவுக்கு எதிராக உற்சாகமாய்க் கடந்துசென்றார்கள்.

எல்லா மக்களும் யோர்தானைக் கடந்து தீருமளவும் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானில் காலூன்றி நிற்கும்போது இஸ்ரவேலரெல்லாரும் தண்ணீரற்ற உலர்ந்த தரையில் கடந்து சென்றார்கள். இங்ஙனமாகக் கடவுளின் ஆணையால் அவர் சொந்த மக்களுக்கு இயற்கையாகிய ஆறும் வழிவிட்டது.

105. கடவுளின் ஸ்தானாபதி

யோசு. 5

இவைகள் நடந்தபோது கர்த்தர் யோசுவாவைச் சகல மக்களுக்கும், இஸ்ரவேலின் கண்களுக்கும் முன்பாக மேன்மைப்படுத்தினார். அவர்கள் மோசேக்குப் பயந்திருந்ததுபோல யோசுவா உயிரோடிருந்த நாளெல்லாம் அவனுக்கும் பயந்திருந்தார்கள். ஏறக்குறைய நாற்பதாயிரம் வீரர்கள் யோர்தானைக் கடந்து வந்தார்கள். இப்பெரிய அற்புதத்தைப் பின் சந்ததியார் அறியும் பொருட்டு கடவுள் யோசுவாவுக்குக் கட்டளையிட்டபடியே மக்கள் தங்கள் பன்னிரெண்டு பிரிவுகளாகிய கோத்திரங்களுக்குத் தக்கதாகப் பன்னிரெண்டு கற்கள் எடுத்து வந்திருந்தார்கள். யோர்தானைக் கடந்து வந்தவுடன் இஸ்ரவேலர் கில்கால் என்னுமிடத்தில் பாளையமிறங்கினார்கள். அங்கே யோசுவா அந்தப் பன்னிரெண்டு கற்களையும் நட்டு, அக்கற்கள்பற்றி அவர்களது பிள்ளைகள் விசாரித்தால் அன்று நடந்த அந்த பேரதிசயம்பற்றி அவர்களுக்குச் சொல்ல வேண்டுமென ஆணையிட்டார்.

பின் கடவுளின் கட்டளைப்படி அங்குள்ள ஆண் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய விருத்தசேதனம் எனும், சடங்கு நடைபெற்றது.

அதன்பின் கர்த்தரின் கட்டளைப்படி எகிப்தின் அடிமை வாழ்விலிருந்து அவர்கள் பெற்ற விடுதலையை நினைவுகூரும் பண்டிகையாகிய பஸ்காவை அம்மாதம் பதினான்காம் தேதி ஆசரித்தார்கள்.

பின்பு யோசுவா எரிகோவுக்கு அருகேயுள்ள சமமான வெளியிலிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது தனக்கு எதிரே ஒருவர் உருவின பட்டயத்துடன் நிற்கக் கண்டார். அப்பொழுது யோசுவா அவரிடம் கிட்டச் சேர்ந்து நீர் எங்களைச் சேர்ந்தவரா? எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரா? எனக் கேட்டார். அதற்கு அவர் நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் உங்களை நடத்திச் செல்ல வந்தேன் என்றார். அப்பொழுது யோசுவா தரையில் முகங்குப்புற விழுந்து பணிந்துகொண்டு ‘என் ஆண்டவர் தமது அடியேனுக்குச் சொல்லுகிறதென்ன?’ என்று கேட்டார். அப்பொழுது கர்த்தருடைய சேனையின் அதிபதி யோசுவாவை நோக்கி ‘உன் கால்களிலிருக்கிற காலணிகளைக் கழற்றிப் போடு. நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது’ என்றார். யோசுவாவும் தனக்குச் சொல்லப்பட்டபடியே செய்தார். கடவுளின் சேனையின் அதிபதி அவரை முன்நடத்திச் சென்றார்.

106. எரிகோவின் சுற்றுச் சுவர்கள் வீழ்தல்

யோசு. 6

எரிகோ ஒரு பெரிய பட்டணம். அது நன்கு பாதுகாக்கப்பட்டிருந்தது. இஸ்ரவேலர் கட்டாயம் தங்கள் பட்டணத்தைப் பிடிக்க வருவார்கள் என்று எரிகோவின் மக்கள் அறிந்து அஞ்சியதால் ஒருவரும் வெளியே போகவுமில்லை, உள்ளே வரவுமில்லை. எரிகோவைப் பிடிக்கும் முறைபற்றி கடவுள் ஏற்கெனவே யோசுவாவிடம் சொல்லியிருந்தார். யோசுவா அதைத் தம் மக்களுக்குச் சொன்னார்.

அதுபற்றி கடவுள் கொடுத்த கட்டளையாவது, ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்துசெல்லவேண்டும். ஏழு ஆசாரியர்

கள் பெட்டிக்கு முன்பாக ஏழு கொம்பு எக்காளங்களைப் பிடித்துக்கொண்டு செல்ல வேண்டும். நீங்களனைவரும் பட்டணத்தைச் சூழ்ந்து ஒரு நாளைக்கு ஒருமுறை சுற்றிவர வேண்டும். இப்படி ஆறு நாள் செய்ய வேண்டும். ஏழாம் நாளில் பட்டணத்தை ஏழு முறை சுற்றி வந்து ஆசாரியர்கள் எக்காளங்களை ஊதவேண்டும். எக்காள சத்தத்தைக் கேட்கும்போது மக்கள் மகா ஆரவாரத்துடன் ஆர்ப்பரிக்கவேண்டும். அப்பொழுது பட்டணத்தின் சுவர் இடிந்துவிழும். உடனே மக்கள் அவரவர் தங்களுக்கு நேரே பட்டணத்திற்குள் போகக்கடவர்கள் என்பதே.

யோசுவா மக்களை ஆர்ப்பரியுங்கள் என்று சொல்லும் வரைக்கும் மக்கள் ஆர்ப்பரியாமலும், வாயினால் சத்தங்காட்டாமலும் ஒரு பேச்சும் புறப்படாமலிருக்கவேண்டுமென்ற, இந்த விபரங்களை யோசுவா மக்களுக்குக் கூறிய பின், அமைதியாக ஒரு நாளைக்கு ஒருமுறை வீதம் ஆறு நாள் எரிகோவின் கோட்டைச் சுவரைச் சுற்றிவந்தார்கள். ஏழாம் நாளின் அதிகாலையில் எழுந்திருந்து அந்தப்படியே பட்டணத்தை ஏழு முறை சுற்றி ஏழாவது முறை ஆசாரியர்கள் எக்காளங்களை ஊதுகையில், யோசுவா மக்களிடம் 'ஆர்ப்பரியுங்கள், பட்டணத்தைக் கர்த்தர் உங்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்' என்றார். எக்காளங்களை ஊதுகையில் மக்கள் ஆர்ப்பரித்தார்கள். மகா ஆரவாரத்தோடு முழங்குகையில் என்ன ஆச்சரியம்! கோட்டைச் சுவர் தானாக இடிந்து தரைமட்டமாகியது. உடனே மக்கள் அவரவர்களுக்கு நேரே பட்டணத்திற்குள் போய் பட்டணத்தைப் பிடித்தார்கள். இவ்விதமாய் எரிகோ பட்டணத்தைக் கர்த்தர் இஸ்ரவேலரின் கையில் அற்புதமாய் ஒப்புக்கொடுத்தார்.



எரிகோவின் சுற்றுச் சுவர்கள் வீழ்தல் (யோசு. 6)

107. ராகாபை அழிவினின்று காப்பாற்றுதல்

யோசு. 6

எரிகோவின் கோட்டைச் சுவர் இடிந்தவுடன், மக்கள் தங்களுக்கு நேராகப் பட்டணத்திற்குள் போய், பட்டணத்தைப் பிடித்ததாகப் பார்த்தோமல்லவா? அங்கு அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? யோசுவாவின் கட்டளைப்படி அப்பட்டணத்திலுள்ள ஆண்களையும் பெண்களையும், வாலிபரையும் கிழவர்களையும், ஆடு மாடுகளையும் கழுதைகளையும் சகலத்தையும் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள். அந்தப் பட்டணத்திலுள்ளவைகளெல்லாம் சாபத்தீடானவைகளாதலால் அவைகளை எடுப்பதால் சாபத்துக்குள்ளாகாதிருக்கும்படி யோசுவா மக்களுக்குக் கட்டளையிட்டிருந்தார்.

அப்பொழுது யோசுவா பட்டணத்தை வேவு பார்க்கச் சென்ற அந்த இரண்டு மனிதரையும் நோக்கி 'நீங்கள் போய், வேவு பார்க்க உங்களுக்கு உதவியாயிருந்த ராகாப் என்னும் அந்தப் பெண் வீட்டிற்குச் சென்று, நீங்கள் அவளுக்கு வாக்குக் கொடுத்தபடி, அவளையும், அவள் தகப்பன் வீட்டாரையும், அவள் உடன் பிறப்புகளையும், அவர்களுக்குண்டான யாவற்றையும் காப்பாற்றிகொண்டு வாருங்கள்' என்று ஆணையிட்டார். அப்படியே அவ்விருவரும் சென்று அவளையும், அவளுக்குண்டான யாவற்றையும் பட்டணத்துக்கு வெளியே கொண்டு வந்து இஸ்ரவேலர் தங்கியிருந்த இடத்துக்கு வெளியே இருக்கும்படி ஏற்பாடு செய்தார்கள்.

பட்டணத்தையும் அதிலுள்ள யாவற்றையும் நெருப்பினால் சுட்டெரித்தார்கள். அங்கு கிடைத்த வெள்ளியும் பொன்னும், இரும்புமாகிய உலோகங்களைப் பரிசுத்தப்படுத்தி கடவுளின் ஆலயப் பொக்கிஷத்தில் சேர்த்தார்கள். இப்படியாக எரிகோ இஸ்ரவேலர் வசமாயிற்று. இஸ்ரவேலரும் நன்றி மறவாமல் ராகாபுக்குத் தாங்கள் கொடுத்த வாக்குறுதியை மறவாமல் நிறைவேற்றி அவளை அழிவினின்று காப்பாற்றினார்கள்.

108. ஆயி பட்டணத்தைப் பிடித்தல்

யோசு. 8

கடவுளின் கட்டளைப்படி இஸ்ரவேலர் யோர்தான் நதியைக் கடந்தபின் எரிகோவுக்கு அடுத்தபடியாகப் பிடித்த இரண்டாவது பட்டணம் ஆயி என்னும் பட்டணம்.

கடவுளின் கட்டளைப்படி யோசுவா ஆயி பட்டணத்துக்கு வேவுகாரரை அனுப்பி அதை எளிதில் பிடித்துவிடலாமென்று அறிந்தபின் போர் வீரர்களையனுப்பி அதன்மேல் போர் தொடுத்துத் தோல்வியே கண்டார். அத் தோல்விக்குக் காரணத்தைக் கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள். அதன்மூலம் இஸ்ரவேலரில் ஒருவர் கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் எரிகோவின் சாபத்தீடான பொருளை எடுத்ததே காரணமென்றறிந்து ஆகான் என்னும் பேருடைய ஒருவனைக் கண்டுபிடித்து அவன் ஒப்புக்கொண்டபின் அவனுக்குத் தக்க தண்டனை கொடுத்து அவனைக் கல்லெறிந்து கொன்றனர். அதன்பின் கடவுளின் கட்டளைப்படி இரண்டாவது முறையாக ஆயியின்மேல் படையெடுத்துச் சென்றனர்.



ஆயி பட்டணத்தைப் பிடித்தல் (யோசு. 8)

யோசுவா தகுதியுள்ள முப்பதினாயிரம் பேரைத் தெரிந்தெடுத்து அவர்கள் பட்டணத்துக்குப் பின்னால் வெகுதூரம் போகாமல் பதிவிருந்து ஆயத்தமாயிருக்கவேண்டுமென்று கட்டளையிட்டார். மீதியுள்ள வீரர்களும் யோசுவாவும் ஆயியைப் பிடிக்க வருவதுபோல் அதை நெருங்குகையில் ஆயியின் மக்கள் அவர்களை விரட்டிக்கொண்டு பட்டணத்தை விட்டு வெளியே வருவார்கள். இஸ்ரவேல் மக்கள் அவர்களுக்குப் பயந்தவர்கள்போல் பின்வாங்கி ஓடவேண்டும். அப்பொழுது ஆயியின் மக்கள் அவர்களை விரட்டிக்கொண்டு வெகுதூரம் சென்றபின் யோசுவா தன் கையிலுள்ள பட்டயத்தை பட்டணத்துக்கு நேராக நீட்டவேண்டும். அப்பொழுது அங்கு ஏற்கெனவே பதிவிருந்த முப்பதினாயிரம் பேரும் பட்டணத்துக்குள் சென்று அதைத் தீக்கொளுத்திப் போடவேண்டுமென்று கடவுள் கொடுத்த கட்டளையை மக்களுக்கு யோசுவா எடுத்துக் கூறினார்.

கர்த்தர் யோசுவாவிடம் கூறியதுபோலவே மக்கள் நடந்து பட்டணத்தைத் தீக்கொளுத்திப்போட்டார்கள். இஸ்ரவேலரை விரட்டிச் சென்ற ஆயியின் மக்கள் தங்கள் பட்டணம் எரிவதைக் கண்டு பின் திரும்பியபோது முன்னும் பின்னும் இஸ்ரவேல் மக்களால் நெருக்கப்பட்டு கடைசிவரை போரிட்டு மடிந்தார்கள். யோசுவா சொன்னதுபோல் இஸ்ரவேலர் ஆயிப்பட்டணத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்டார்கள்.

109. பழைய கந்தலாடைகளை உடுத்தி வந்த தூதுவர்கள்

யோசு. 9

கிபியோன் என்பது பென்யமீன் கோத்திரத்தில் லேவியரின் ஊர். எருசலேமிலிருந்தும் ஆறு மைல் தூரத்திலுள்ளது. எரிகோவுக்கும் ஆயிக்கும் யோசுவாவும் இஸ்ரவேலரும் செய்ததைக் கிபியோனியர் கேள்விப்பட்டு, அவர்களுக்கு அதிகமாக அஞ்சினார்கள். அவர்கள் செல்வமிக்க நகரத்திலே வாழ்ந்து வந்தாலும் தங்களை ஏழைகள்போல் யோசுவாவுக்குக் காண்பித்துத் தங்களை இஸ்ரவேலர் கொல்லவில்லை என்று அவர்களிடம் உறுதிமொழி வாங்கத் தீர்மானித்தார்கள்,

அந்தத் தீர்மானத்தின்படி அவர்களில் சிலர் தங்களைத் தானுபதிகள்போல் காண்பித்துப் பழைய இரட்டுப்பைகளையும் பீறலும் பொத்தலுமான பழைய திராட்சரசத் துருத்திகளையும் தங்கள் கழுதைகள்மேல் வைத்து பழுது பார்க்கப்பட்ட பழைய செருப்புகளைத் தங்கள் கால்களில் அணிந்துகொண்டு பழைய ஆடைகளை உடுத்திக்கொண்டார்கள். வழிக்கு அவர்கள் கொண்டுபோன அப்பமெல்லாம் உலர்ந்ததும் பூசணம் பூத்ததுமாயிருந்தது.'

அவர்கள் யோசுவாவிடத்தில் போய் தாங்கள் மிகவும் ஏழைகளென்றும் தூரதேசத்திலிருந்து வந்து இஸ்ரவேலரோடே உடன்படிக்கை பண்ண வந்ததாகவும் கூறினார்கள். அதற்கு யோசுவா, 'நீங்கள் யார்? எங்கிருந்து வந்தீர்கள்?' என்று கேட்டார். அதற்கு அவர்கள் தாங்கள் இஸ்ரவேலுடைய அடிமைகள் என்றும், அவர் கடவுளாகிய கர்த்தருடைய பேர் பிரஸ்தாபத்தைக் கேட்டு, வெகு தூர தேசத்திலிருந்து வந்து அவர்களுடன் உடன்படிக்கை பண்ண வந்ததாகவும், அவர்கள் புறப்படும்போது அவர்கள் அணிந்திருந்த ஆடையும் செருப்பும் புதியனவாயிருந்ததாகவும் அவர்கள் கொண்டு வந்த அப்பம் சூடாயிருந்ததாகவும் கூறினார்கள்.

யோசுவா அவர்களை நம்பிவிட்டார். கர்த்தருடைய ஆலோசனையைக் கேட்காமல் மக்கள் அவர்கள் அப்பங்களில் சிறிது வாங்கிக்கொண்டார்கள். யோசுவாவும் அவர்களுடன் சமாதானம் பண்ணினார். மூன்று நாட்கள் சென்றபின் அவர்கள் தங்கள் அயலார் என்றும், தங்கள் நடுவே குடியிருக்கிறவர்கள் என்றும் அறிந்தார்கள். அவர்களைக் கொல்வதில்லை என்று உடன்படிக்கை செய்த காரணத்தால் அவர்களைச் சங்காரம் செய்யாமல் அவர்களை அழைத்து, கண்டித்து யோசுவா அவர்களைப் பார்த்து 'நீங்கள் சபிக்கப்பட்டவர்கள். எங்கள் தேவனுடைய ஆலயத்துக்கு விறகு வெட்டுகிறவர்களாகவும், தண்ணீர் சுமக்கிறவர்களாகவும், பணிவிடைக்காரருமாயிருப்பீர்கள். உங்களை விட்டு இந்த ஊழியம் நீங்காது. நாங்கள் உடன்படிக்கை பண்ணினதினிமித்தம் உங்களைக் கொல்லாமல் விடுகிறோம்' என்றார். அவர்களும் தாங்கள் இஸ்ரவேலருக்கும் அவர்கள் கடவுளுக்கும் மிகவும் பயந்ததினாலே அப்படிச் செய்ததாகக் கூறினர். இஸ்ரவேலர் இந்த விஷயத்தில் கர்த்தரின் ஆலோசனையைக் கேட்காத காரணத்தாலேயே இப்படி ஏமாற்றப்பட்டார்கள்.

110. ஐந்து அரசர்கள்

யோசு. 10

யோசுவா, ஆயி என்ற பட்டணத்தைப்பிடித்துச் சங்காரம் பண்ணினதையும், எரிகோவுக்கும் அதன் இராஜாவுக்கும் செய்ததுபோல ஆயியின் இராஜாவுக்குச் செய்ததையும், கிபியோனியர் இஸ்ரவேலரோடு சமாதானம் பண்ணி, அவர்கள் நடுவே வாசமாயிருக்கிறதையும் எருசலேமின் இராஜா கேள்விப்பட்டான். எருசலேம் அக்காலத்தில் உலகத்திலுள்ள பேர் பெற்ற பட்டணங்களெல்லாவற்றிலும் சிறந்ததாயிருந்தது.

எருசலேமின் அரசன் இதைக் கேள்விப்பட்டு மிகவும் பயந்தான். கிபியோன் செல்வம் நிறைந்ததும், பராக்கிரம சாலிகளான வீரர்கள் நிறைந்ததுமான நகரம். அது தலைநகராகவும் விளங்கியது. ஆதலால் தனக்கு அருகிலுள்ள அரசர்களைத் தன்னோடு சேர்ந்து கிபியோனுக்கு விரோதமாய்ப் போர் செய்ய அழைத்தான். அப்படியே எமோரியரின் அரசர்களாகிய எருசலேம், எபிரோன் யர்மூத், லாகீஸ், எக்ரோன் ஆகிய இடங்களிலுள்ள ஐந்து அரசர்களும் அவர்களுடைய எல்லாச் சேனைகளும் கிபியோனுக்கு விரோதமாய்ப் பாளையமிறங்கி அதன் மேல் யுத்தம் பண்ணினார்கள்.

அப்பொழுது கிபியோனின் மனிதர் யோசுவாவுக்கு ஆளனுப்பித் தங்களுக்காக யுத்தம் செய்து தங்களைப் பாதுகாக்கவேண்டுமென்று வேண்டினார்கள். உடனே யோசுவாவும் அவனோடுகூட யுத்த வீரரும் சகல பராக்கிரம சாலிகளும் புறப்பட்டுப் போனார்கள். கர்த்தரும் யோசுவாவுக்குத் துணைசெய்வதாகக் கூறி புறப்படச் செய்தார்.


யோசுவாவும் அவரோடிருந்தவர்களும் இரவு முழுவதும் பிரயாணம் பண்ணி திடீரென்று அந்த ஐந்து அரசர்கள் மேலும், அவர்களது சேனைகள் மேலும் படையெடுத்து வந்துவிட்டார்கள். அந்த ஐந்து அரசர்களும் இஸ்ரவேலுக்கு முன்பாக மிகவும் கலங்கிப் போனார்கள். ஆகையால் இஸ்ரவேலர் அவர்களை மகா சங்காரமாய்ச் சங்கரித்து முறியடித்தார்கள். அவர்கள் பின்வாங்கி ஓடியபோதும் அவர்களை விடாமல் துரத்தி முறியடித்தார்கள். மீதியாயிருந்து ஓடிப்போகிறவர்கள்மேல் கர்த்தர் வானத்திலிருந்து பெரிய கற்களை விழப் பண்ணினார். அவர்களும் அவர்கள் சேனைகளும் செத்தார்கள். போரினால் மடிந்தவர்களைக் காட்டிலும் கல்மழையினால் மடிந்தவர்கள் அநேகர். இப்படியாக இஸ்ரவேலின் ஐந்து பகையரசர்களும் முறியடிக்கப்பட்டார்கள்.

111. இயற்கை பணிந்தது

யோசு. 10

இஸ்ரவேலருக்கும் எமோரியரின் அரசர்களுக்கும் யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது, கர்த்தர் எமோரியரை இஸ்ரவேலின் கைகளில் ஒப்புக்கொடுக்கும் நாளிலே யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, பின்பு அவரது ஆணையால் சூரிய சந்திரருக்குத் தம் தம் இடத்தில் தரித்து நிற்கும்படி ஆணையிட்டார். சூரியனே! நீ கிபியோன் மேலும் சந்திரனே! நீ ஆயலோன் பள்ளத்தாக்கின் மேலும் தரித்து நில்லுங்கள். உங்கள் ஒளியினால் நாங்கள் சத்துருக்களைக் கண்டுபிடித்து அவர்களைச் சங்காரம் செய்வோம் என்றார்.

என்ன ஆச்சரியம்! மக்கள் தங்கள் சத்துருக்களை முற்றிலுமாக முறியடிக்கும் மட்டும் சூரியன் மறையாமல் தரித்தது, சந்திரனும் நின்றது. பகைவர்கள் அவர்கள்மீது மீண்டும் படையெடுத்துவரும் எண்ணத்தையே விட்டுவிட்டார்கள். இப்படி கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்லைக் கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்குப் பின்னும் இல்லை, அதற்கு முன்னும் இல்லை. கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார்.



இயற்கை பணிந்தது (யோசு. 10)

112. பெரும் போர்

யோசு. 11

இஸ்ரவேலருக்குக் கர்த்தர் கொடுப்பேனென்று வாக்களித்த இடங்களில் ஒரு பகுதி மீதியாயிருந்தது. அதுதான் ஆத்சோர் பட்டணம்.

யோசுவாவும் அவர் மக்களும் தங்கள் சத்துருக்களுக்குச் செய்த எல்லா நீதிகளையும் கேள்வியுற்ற ஆத்சோரின் அரசனாகிய யாபீன் வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலுமுள்ள தனக்கருகில் இருக்கின்ற நாடுகளுக்கெல்லாம் தூதுவர்களை அனுப்பி, இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் போர் செய்யும்படி அவர்களை அழைத்தனுப்பினான். அவர்கள் கடற்கரை மணலைப்போல் ஏராளமான தங்கள் எல்லாச் சேனைகளோடும் இரதங்களோடும் குதிரைகளோடும் புறப்பட்டார்கள். இந்த அரசர்களெல்லாரும் கூடி இஸ்ரவேலரோடு யுத்தம்பண்ண வந்து மேரோம் என்னும் பள்ளத்தாக்கில் கூடினார்கள்.

அப்பொழுது கர்த்தர் யோசுவாவைத் தைரியப்படுத்தி பயப்படாமல் யுத்தம் செய்யவும், சத்துருக்களை அவர்கள் கையில் வெட்டுண்டவர்களாக ஒப்புக்கொடுப்பதாகவும் வாக்

களித்து இஸ்ரவேலர் தங்கள் பகைவரை முறியடிக்கும் நாளில், பகைவர்களது குதிரைகளின் குதிங்கால் நரம்புகளை அறுத்து, அவர்கள் இரதங்களைச் சுட்டெரிக்கும்படியும் கட்டளையிட்டார். போர் பெரும் போராய் மூண்டது. கர்த்தர் இஸ்ரவேலரின் கையில் அவர்கள் பகைவரை ஒப்புக்கொடுத்தார். இஸ்ரவேலர் தங்கள் பகைவர்களை முறியடித்து வெகுதூரம் வரை துரத்தி அவர்களில் ஒருவரும் மீதியாயிராதபடி வெட்டிப்போட்டார்கள். இஸ்ரவேலர் தவிர அவர்கள் பகைவர்களில் எவரும் மீதியாயிருக்கவில்லை. ஆத்சோர் பட்டணம், தன்னைச் சுற்றியுள்ள பட்டணங்களுக்கெல்லாம் தலைமைப் பட்டணமாயிருந்தது. அந்தச் சிறப்பான பட்டணத்தைச் சுட்டெரித்து அதன் உயிர்ப் பிராணிகளையெல்லாம் கொன்றுபோட்டார்கள். சுவாசமுள்ளது ஒன்றும் மீதியாயிருக்கவில்லை.

அதன்பின் யோசுவா எல்லா இடங்களையும், மலைகளையும், தென் தேசத்தையும், கோசன் நாட்டையும், சமனான பூமியையும், எர்மோன் மலையின் அடியிலுள்ள லீபனோனின் பள்ளத்தாக்கையும் பிடித்துக்கொண்டார். கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்னபடியெல்லாம் தேசமனைத்தையும் பிடித்து அதை இஸ்ரவேலருக்கு அவர்கள் வம்சங்களின் (கோத்திரங்களின்) பங்குகள்படியே யோசுவா சுதந்தரமாகக் கொடுத்தார். யுத்தம் ஓய்ந்ததினால் தேசம் அமைதலாயிருந்தது. இப்படியாகக் கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை யோசுவாவைக் கொண்டு நிறைவேற்றினார்.

நியாயாதிபதிகள்

முன்னுரை

இஸ்ரவேலர் கானான் நாட்டில் குடியேறியபோது கானானிய மக்கள் அவர்களை எதிர்த்துப் போராடினர். இவர்களிடமிருந்து தங்கள் மக்களைப் பாதுகாக்க கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் நியாயாதிபதிகள் எனப்படுவர். இவர்களின் வீரச் செயல்களை வர்ணிக்கும் நூல் நியாயாதிபதிகள் ஆகும்.

இஸ்ரவேலர் கடவுளுக்கு முன்பாகத் தீமை செய்கின்றனர். கடவுள் அவர்கள்மேல் கோபம்கொண்டு எதிரிகளிடம் அவர்களைக் கையளிக்கிறார். அவர்கள் மனந்திரும்பிக் கடவுளை நோக்கி அபயமிடுகின்றனர். கடவுள் மனமிரங்கி அவர்களுக்கு ஒரு மீட்பரை, நீதிபதியை தோற்றுவிக்கிறார். இப்படிப் பலமுறை நடைபெறுகிறது.

113. துன்பம் துக்கம்

நியா. 1,2

யோசுவா இஸ்ரவேல் புத்திரரைத் தன் வாழ்நாட்களிலெல்லாம் கர்த்தருடைய வழியிலே நடத்தி வந்தான். அவன் இறந்த பின்பும் இஸ்ரவேல் மக்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து வந்தார்கள். சில பெரியவர்கள் அவ்வப்பொழுது மக்களுக்குக் கர்த்தரின் செயல்களையும், அன்பையும் நினைவுபடுத்தினர்கள்.

பின்பு இஸ்ரவேல் மக்களை ஆளும் தலைவர்கள் இல்லை. எனவே மக்கள் யோசுவாவை மறந்தனர். கர்த்தரின் வழியை விட்டு தங்களுக்குப் பிரியமான வழிகளில் நடந்தனர். கானானியருடன் பழகினர். திருமண உறவுகளை ஏற்படுத்தினர். பின்னர் கானானியரின் தெய்வமான பாகாலை வணங்க ஆரம்பித்தனர். கானானியரின் மதமோ விக்கிரக வணக்கமுள்ளது. பாகாலைப் பிரியப்படுத்த அவர்கள் தங்கள் குழந்தைகளை நெருப்புக்குப் பலியாக்கினர். இஸ்ரவேல் புத்திரரும் கானானியருடன் கலந்ததால் கர்த்தர் துக்கம் அடைந்தார். இஸ்ரவேல் மக்களின் அருவருப்பான செயல்களைக் கண்டு அவர்கள்மீது கோபங்கொண்டார்.

கர்த்தர் கூறியபடி அவர்கள் கானானியரைத் தங்கள் நடுவிலிருந்து விரட்டாததால், கானானியர் பலங்கொண்டனர். இஸ்ரவேல் மக்களைக் கொடுமைப்படுத்தினர். கடுமையான வரிகளை விதித்து அவர்களை வாதித்தனர். துன்பத்திற்குள்ளான இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நினைத்தார்கள். தங்களுக்கு உதவிசெய்யக் கர்த்தரை கூப்பிட்டார்கள். இஸ்ரவேல் மக்களை கர்த்தர் நேசித்ததினால் அவர்கள் கூப்பிடுதலுக்கு இரங்கினர். பகைவர்களிடமிருந்து அவர்களை விடுவிப்பதற்கு தலைவர்களை அனுப்பினர். அவர்கள் இஸ்ரவேல் மக்களை விரோதிகளிடமிருந்து விடுவித்தனர். ஞானத்துடன் அவர்களை வழிநடத்தினர். அவர்கள் நியாயாதிபதிகள் என்று அழைக்கப்பட்டனர்.

114. ஏகூத்

நியா. 3

மோவாபின் அரசன் எக்லோன் பலம் கொண்டவன். கொழுமையானவன் (புஷ்டியானவன்). இஸ்ரவேல் மக்களை அடிமையாக்கினன். அவர்களிடம் அதிகமான வரிகளை வசூல் செய்தான். வரிப் பணத்தினல் தன் அரண்மனையில் பல விருந்துகளை நடத்தினன். பதினெட்டு வருடங்கள் இஸ்ரவேல் மக்கள் அவனிடம் அடிமைகளாக அல்லலுற்றனர். வரிப் பளுவைத் தாங்கமுடியாமல் இஸ்ரவேல் மக்கள் அலறினர்.

இச்சமயத்தில் இஸ்ரவேலர் கர்த்தரை நோக்கிக் கெஞ்சினர். கர்த்தர் அவர்களுக்காக ஏகூத்தை எழும்பப் பண்ணினர். அவன் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவன். ஏகூத் இடதுகை பழக்கமுடையவன்.

ஒரு சமயம் இஸ்ரவேல் மக்கள் தங்கள் வரிப் பணத்தை ஏகூத் கையிலே கொடுத்து மோவாப் அரசனிடம் அனுப்பினர். ஏகூத் இருபுறமும் கருக்கான ஒரு முழ நீளமுள்ள கத்தி ஒன்றை தன் வலதுபுறத்து இடுப்பிலே வைத்துக் கொண்டான். சில ஆட்களை கூட்டிக்கொண்டு வரிப் பணத்துடன் ஏகூத் புறப்பட்டான். மோவாப் அரசன் எக்லோனிடம் வரிப் பணத்தைச் செலுத்தினன். பின்பு அரசனிடம் ஒரு முக்கியமான இரகசிய செய்தி சொல்ல வேண்டுமென்று தனியே வரும்படி சொன்னன்.

எக்லோன் அரசனும் தனியே குளிர்ச்சியான அறையிலே ஏகூத்திடம் செய்தியைக் கேட்க வந்தான். தனியே அரசன் வந்தவுடன் ஏகூத் தன் இடதுகையினல் கத்தியை உருவி எக்லோன் அரசனின் வயிற்றுக்குள் பாய்ச்சினன். கத்தி அரசனின் வயிற்றுக்குள் சென்று பின்புறம் வந்தது. ஏகூத் கதவை சாத்தி பூட்டிப்போட்டுச் சென்றுவிட்டான்.

அரசனின் ஆட்கள் வெகுநேரமாகியும் அரசன் அறையிலிருந்து வெளிவராததைக் கண்டு கதவைத் திறந்து பார்த்தனர். அங்கே அரசன் தரையிலே செத்துக்கிடந்தான்.

இதற்குள் ஏகூத் இஸ்ரவேல் மக்களை அழைத்துக்கொண்டு மோவாபியருடன் யுத்தம் செய்ய ஆயத்தமாயிருந்தான். யுத்தத்தில் ஏகூத்திற்கு பெரிய வெற்றி கிடைத்தது. மோவாப் தோல்வியடைந்தது. இவ்விதமாக ஏகூத் இஸ்ரவேல் மக்களை மோவாபியரிடமிருந்து விடுவித்தான்.

115. தெபொராளும் பாராக்கும்

நியா. 4,5

ஏகூத் இறந்தபின்பு இஸ்ரவேல் மக்கள் மறுபடியும் கடவுளை மறந்தார்கள். அச்சமயம் கானானியரை யாபீன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுடைய தளபதி சிசெராவிடம் தொளாயிரம் இரும்பு ரதங்கள் இருந்தன. சிசெரா இஸ்ரவேல் மக்களுக்கு எதிராகப் போர் தொடுத்தான். இஸ்ரவேல் மக்கள் கடவுளை மறந்ததினால் சிசெராவின் பலத்த படையினால் வெகு எளிதாகத் தோற்கடிக்கப்பட்டார்கள்.

இஸ்ரவேல்மீது வெற்றிபெற்ற சிசெரா இருபது ஆண்டுகளாக இஸ்ரவேலரை கடுமையாக ஒடுக்கினான். சிசெராவின் கொடுமையைத் தாங்கமுடியாத இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்.

இச்சமயத்தில் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்து வந்தது ஒரு பெண்மணியாகும். அவள் பெயர் தெபொராள். அவள் ஒரு பேரீச்சமரத்தின்கீழ் குடியிருந்தாள். அவள் பாராக்கைத் தன்னிடம் வரவழைத்தாள். தெபொராள் பாராக்கிடம் நீ ஒரு படையை திரட்டிக்கொண்டு சிசெராவுக்கு எதிராக போ. கர்த்தர் உனக்கு உதவியாக இருப்பார் என்றாள். பாராக்கோ சிசெராவின் பெரிய படைக்கு நடுங்கினான். எனவே தெபொராளை நோக்கி நீ என்னுடன் வந்தால் நான் போகிறேன் என்றான். அதற்கு தெபொராள் நல்லது நான் உன்னுடன் வருகின்றேன். ஆனால் கர்த்தர் சிசெராவை உன் கையில் ஒப்புக்கொடுக்கமாட்டார். ஒரு பெண்மணியின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றாள்.

பாராக் இஸ்ரவேல் படைகளைக் கூட்டிக்கொண்டு தாபோர் மலையில் நின்றான். சிசெராவோ, பாராக்கை எதிர்க்க கீசோன் பள்ளத்தாக்கிலே படைகளை நிறுத்தினான்.

உடனே தெபொராள் பாராக்கிற்குக் கட்டளையிட்டாள். எழுந்துபோ, இன்று சிசெராவின் படைகளைக் கர்த்தர் உன் கையில் கொடுப்பார் என்றாள். அந்தப்படியே சிசெராவின் படைகளைக் கலங்கடித்தனர். பாராக்கிற்கு பெரிய வெற்றி கிடைத்தது. அவன் தெபொராளுக்கு தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டான்.

116. சுத்தியலும்—கூடார ஆணியும்

நியா. 4

பாராக்கிற்கும், சிசெராவிற்கும் நடந்த போரின் கடைசியில் சிசெரா ரதத்தைவிட்டு கால்நடையாய் ஓடிவந்தான். வரும் வழியில் யாகேலின் கூடாரம் இருந்தது. அந்நாட்களில் யாகேலின் கணவனும், யாபீன் அரசனும் நண்பர்களாயிருந்தார்கள். எனவே சிசெரா, யாகேலின் கூடாரத்திற்கு ஓடி வந்தான்.

யாகேல் அவனை கூடாரத்திற்குள்ளே வரவழைத்தாள். கூடாரத்திற்குள் வந்த சிசெரா தாகமாயிருக்கிறேன், குடிக்க எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தா என்றான். யாகேல் அவனுக்கு குடிக்கப் பாலைக் கொடுத்தாள். சிசெரா தாகம் தீர்ந்தபின்பு ஓய்வெடுக்க நினைத்தான். எனவே யாகேலைப் பார்த்து நான் ஓய்வெடுக்கின்றேன். யாராவது வந்து என்னைக் கேட்டால் இல்லை என்று சொல்லிவிடு என்றான். சிசெரா சிறிது நேரத்தில் அயர்ந்து தூங்கிவிட்டான்.

யாகேலுக்கோ, யாபீன் அரசனைப் பிடிக்கவில்லை. அவன் சேனாபதி சிசெராவையும் வெறுத்தாள். சிசெராவைக் கொல்ல தீர்மானித்தாள். அவளது முகத்தின் புன்னகை மாறியது. கையிலே சுத்தியலை எடுத்தாள். ஒரு கூடார ஆணியையும் எடுத்தாள். அயர்ந்த நித்திரையாயிருந்த சிசெராவின் நெற்றியிலே ஆணியை வைத்து சுத்தியலைக்கொண்டு அடித்தாள். ஆணியானது சிசெராவின் தலையை ஊடுருவிச் சென்று தரையில் புதைந்தது. அவன் செத்துப்போனான். சிறிது நேரத்திற்குப் பின்பு பாராக் அவ்வழியாக சிசெராவைத் தேடிக்கொண்டு வந்தான். யாகேல் அவனைக் கண்டு இதோ நீர் தேடி வருகிற மனிதனைக் காண்பிப்பேன் என்று சொல்லி அவனை கூடாரத்திற்குள் அழைத்துச் சென்றாள். அங்கே சிசெராவின் நெற்றியில் ஆணி அடித்திருந்தது. அவன் செத்துக் கிடந்தான்.

இதற்குப் பின்பு யாபீன் அரசன் ஒடுங்கினான். இஸ்ரவேல் புத்திரர் கொடூரமான மன்னனிடமிருந்து பாதுகாக்கப்பட்டனர்.

117. கிதியோனின் கதை

நியா . 6

இஸ்ரவேல் புத்திரர் செழித்திருக்கும் பொழுது கர்த்தரைப் பின்பற்ற மறந்து விடுவார்கள். பாராக் இறந்த பின்பு மீண்டுமாக இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மறந்தனர். எனவே அவர்களுக்கு எதிராக மீதியானியரின் கை பலத்திருந்தது.

மீதியானியர் இஸ்ரவேலரின் விளைச்சலைக் கெடுத்தனர். அறுவடை காலத்தில் மீதியானியர் எண்ணிமுடியாத ஒட்டகங்களின்மீது வந்து தானியங்களை அள்ளிக்கொண்டும், ஆடு, மாடுகளையும், கழுதைகளையும் ஓட்டிக்கொண்டும் போய்விடுவார்கள். இதனால் இஸ்ரவேல் மக்கள் தானியம், திராட்சைப்பழமின்றி அவதியுற்றனர். மீதியானியரின் வருகைக்குப் பயந்து குகைகளிலும், கெபிகளிலும் ஒளிந்து கொண்டனர். இப்படியாகக் கடவுளை மறந்த இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டனர். தங்களால் ஒன்றும் செய்யமுடியாமல் போகவே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்.

இச்சமயத்தில்தான் மனாசே கோத்திரத்தில் கிதியோன் என்ற ஒரு பலசாலி இருந்தான். கர்த்தர் அவனைக்கொண்டு இஸ்ரவேல் புத்திரரை மீதியானியரின் கையினின்று தப்புவிக்கத் தீர்மானித்தார். கர்த்தர் கிதியோனைச் சந்திக்க ஒரு தேவதூதனை அனுப்பினார்.

118. தேவதூதனும்—கிதியோனும்

நியா . 6

ஒருநாள் கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்கு அருகே அதைப் போரடித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அவனுக்கு முன்பாகத் தோன்றி பராக்கிரமசாலியே, கர்த்தர் உன் கையில் மீதியானியரை ஒப்புக்கொடுப்பார் என்றான். அதற்கு கிதியோன், நான் என் தகப்பன் வீட்டில் எல்லாரிலும் சிறியவன், என்னாலே முடியாதே என்றான்.

அதற்கு கர்த்தர், நான் உன்னுடனே இருக்கிறேன். ஒரே மனிதனை முறியடிப்பதுபோல் நீ மீதியானியரை முறியடிப்பாய் என்றார்.

கிதியோனுக்கோ தன்னுடன் பேசுவது கர்த்தர்தானா என்பது சந்தேகமாயிருந்தது. கர்த்தரா என்பதை உறுதிசெய்ய விரும்பினான். எனவே தன்னோடு பேசினவரிடம் கொஞ்சம் பொறுத்திரும், உமக்காகக் காணிக்கை கொண்டுவருகிறேன் என்று சொல்லி தீவிரமாய்ப் போய் அப்பத்தையும், இறைச்சியையும், ஆணத்தையும் கொண்டு வந்தான். நீர் தேவரீர்தான் என்பதைக் காட்டவேண்டும் என்றான்.

அப்பொழுது தேவதூதன் கிதியோனை நோக்கி, நீ கொண்டுவந்த காணிக்கையை இந்த கற்பாறையின்மேல் வை என்றார். அந்தப்படியே கிதியோன் பாறையின்மீது இறைச்சியையும் அப்பத்தையும் வைத்து அதன்மீது ஆணத்தையும் ஊற்றினான். கர்த்தருடைய தூதன் தனது கையிலிருந்த கோலை நீட்டி அதை தொட்டார். உடனே அக்கினி கற்பாறையிலிருந்து புறப்பட்டு, வைத்திருந்த இறைச்சி அப்பம் அனைத்தையும் சுட்டெரித்தது. கர்த்தருடைய தூதன் போய்விட்டார். அதைக்கண்ட கிதியோன் மெய்யாகவே நான் கர்த்தருடைய தூதனைக் கண்டேன் என்றான். அந்த இடத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான். யெகோவா ஷாலோம் என்று பேரிட்டான்.

கர்த்தருடைய தூதன் கிதியோன் சந்தித்த அன்றிரவு கர்த்தர் கிதியோனை அழைத்தார். அவனுடனே பேசினார். கிதியோனிடம் சில செயல்களைச் செய்யும்படி உத்தரவிட்டார்.

கர்த்தர் கிதியோனிடம் நீ பாகாலின் பலிபீடங்களையெல்லாம் தகர்த்து விக்கிரக தோப்பை வெட்டிப்போடு. அந்த இடத்தில் கற்பாறையின் உச்சியில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டு என்றார்.

கர்த்தர் சொன்னபடியே கிதியோன் செயல்பட ஆரம்பித்தான். இரவோடு இரவாகத் தன்னுடன் பத்து ஆட்களைக் கூட்டிக்கொண்டு போய்ப் பாகாலின் பலிபீடங்களைத் தகர்த்துப் போட்டான். தோப்புகளை வெட்டினான். பின்பு கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தையும் கட்டி கர்த்தருக்கு அங்கே பலியிட்டான்.

அதிகாலையிலே ஊரார் கிதியோனின் செயல்களைக் கேள்வியுற்று அவனைக் கொல்ல நினைத்தனர். அவனது தகப்பன் யோவாஸிடம் வந்து உன் மகன் எங்கே, அவன் சாகவேண்டும் என்றார்கள். அதற்கு யோவாஸ், பாகாலுக்காக வழக்காடுகிறவன் சாகக்கடவன். பாகால் உண்மையான தெய்வமானால் வந்து தன் பலிபீடத்தை தகர்த்ததினிமித்தம் வழக்காடட்டும் என்றான். அதற்கு ஊர் மக்கள் ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் போய் விட்டார்கள்.

120. தோலினால் அடையாளம்

நியா. 6

கிதியோன் இஸ்ரவேல் புத்திரருக்குத் தலைவனாக விருப்பமுடையவனானான். இருப்பினும் கர்த்தருடைய அழைப்பை மீண்டும் உறுதியாக்க நினைத்தான். எனவே கடவுளிடம் மீண்டும் ஒரு அடையாளத்தைத் தரும்படி கேட்டான். கர்த்தரும் ஒப்புதல் அளித்தார். கர்த்தரிடம் கிதியோன் கேட்ட அடையாளமானது இரவில் களத்திலே போடப்படும் ஒரு மயிருள்ள தோலின்மீது மட்டும் பனி பெய்திருக்கவேண்டும். அப்படியே காலையில் கிதியோன் பார்த்தபொழுது தோலில் மட்டும் பனிபெய்திருந்தது. தரையெல்லாம் காய்ந்திருந்தது.

மறுபடியும் கிதியோன் கர்த்தரை நோக்கி இன்னும் ஒருமுறை உம்மிடம் கேட்கிறேன் என்றான். கர்த்தர் கிதியோனின் கவலைகளையும், பயத்தையும் கண்டு அவனது கூப்பிடுதலுக்கு சம்மதம் தெரிவித்தார்.

இரண்டாவது முறையாகக் கிதியோன் கேட்ட அடையாளம் தோல் மட்டும் காய்ந்திருக்க வேண்டும், மற்ற இடங்களில் பனி பெய்திருக்க கட்டளையிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அந்தப்படி கர்த்தர் கட்டளையிட்டார். மறுநாள் கிதியோன் பார்த்தபொழுது தோல் நீங்கலாக மற்ற இடங்களிலெல்லாம் பனி பெய்திருந்தது.

இந்த அடையாளங்களினால் கிதியோன் கர்த்தர் தன்னை இஸ்ரவேல் புத்திரரின் நியாயாதிபதியாகத் தெரிந்தெடுத்தது உண்மை என்பதை உறுதியாக்கிக் கொண்டான்.

121. கிதியோன் இராணுவத்தைத் தேர்ந்தெடுத்தல்

நியா. 7

கிதியோன் மீதியானியரை விரட்டியடிக்க ஒரு இராணுவத்தை உருவாக்கத் தீர்மானம் செய்தான். கிதியோன் மனாசே நாடெங்கும் ஸ்தானாபதிகளை அனுப்பி, அவனுடன் சேர்ந்து யுத்தம் செய்ய வீரர்களை அழைத்தான். அநேக வீரர்கள் கிதியோனுக்கு உதவி செய்ய வந்தனர். கிதியோன் எல்லோரையும் கூட்டிக்கொண்டு ஆரோத் என்னும் நீரூற்றின் பக்கத்தில் தங்கினான்.

அங்கே கிதியோன் தன் வீரர்களை நோக்கி போரைக் குறித்துப் பயப்படுகிறவர்கள் இப்

பொழுதே வீட்டிற்குச் செல்லலாம் என்ருன். அதன்படி அநேக வீரர்கள் சென்றுவிட்டனர். பின்பு கிதியோன் கர்த்தர் கூறியபடி தண்ணீரண்டை மீதியான வீரர்களை அழைத்துச் சென்ருன். அங்கே கர்த்தர் கிதியோனை நோக்கி, தண்ணீரை அள்ளி நாய்போன்று நக்கிக் குடிப்பவர்களை மட்டும் உன் படைக்கு வீரர்களாகத் தேர்ந்தெடு என்ருர். அந்தப்படியே தண்ணீர் குடிக்கச் சென்ற வீரர்களில் முன்னூறு பேர் மட்டும் தண்ணீரைக் கைகளால் அள்ளி நாய் போன்று நக்கிக் குடித்தார்கள். அந்த முன்னூறு பேர்களை மட்டும் கிதியோன் தன் படை வீரர்களாகத் தேர்ந்தெடுத்தான். மற்ற வீரர்களோ முழங்காலிட்டுத் தண்ணீர் குடிக்க குனிந்தார்கள். அவர்களைத் திரும்ப வீட்டிற்கு அனுப்பிவிட்டான். இவ்வாறு கர்த்தரின் ஆலோசனையின்படி கிதியோன் முன்னூறு பேர் கொண்ட தனது இராணுவத்தை உருவாக்கினன்.



கிதியோன் இராணுவத்தைத் தேர்ந்தெடுத்தல் (நியா.7)

122. சொப்பனம் பலித்தது

நியா. 7

கிதியோனும், அவனது முன்னூறு வீரர்களும் மீதியானியருடன் போர் தொடுக்க ஆயத்தமாயினர். மீதியானியரின் சேனை அவர்களுக்குத் தாழ்விடமான பள்ளத்தாக்கிலே இருந்தது. அன்றிரவு கர்த்தர் கிதியோனை மீதியானியரின் சேனைக்குள் போ. அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்ருர். கிதியோன் திரளான மீதியானியரின் சேனையைக் கண்டு பயந்தான்.

அதற்குக் கர்த்தர் நீயும், உன் வேலைக்காரன் பூராவும் மீதியானியரின் சேனை தங்கியிருக்கும் இடத்திற்குப் போங்கள். அங்கே உன் பயம் நீங்கும் என்ருர். அந்தப்படியே கிதியோன் தன் வேலைக்காரனைக் கூட்டிக்கொண்டு போனன். மீதியானியரின் சேனை தங்கியிருக்கும் இடத்தை அடைந்தனர். அப்பொழுது இருவர் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டனர்.

ஒருவன் தான் கண்ட சொப்பனத்தைபக்கத்திலிருப்பவனிடம் சொல்லிக் கொண்டிருந்தான். அதாவது, சுட்டிருந்த ஒரு வாற்கோதுமை அப்பம் மீதியானியரின் பாளையத்திற்கு உருண்டுவந்து கூடாரத்தைக் கவிழ்த்துப் போட்டது என்ருன். பக்கத்திலிருந்து அச்சொப்பனத்தைக் கேட்டவன், இது யோவாசின் குமாரனுகிய கிதியோனின் பட்டயமே. கடவுள் மீதியானியரை கிதியோன் கையில் ஒப்புக்கொடுத்தார் என்ருன்.

கிதியோன் அந்தச் சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் கேட்டபோது, அவன் பணிந்து கொண்டு, இஸ்ரவேலின் பாளையத்திற்குத் திரும்பி வந்து, எழுந்திருங்கள் கர்த்தர் மீதியா

னியரின் பாளையத்தை உங்கள் கைகளில் ஒப்புக் கொடுத்தார் என்று சொல்லி, அந்த முந்நூறு பேரை மூன்று படையாக வகுத்து, அவர்கள் ஒவ்வொருவன் கையிலும் ஒரு எக்காளத்தையும் வெறும் பானையையும் அந்தப் பானைக்குள் வைக்கும் தீவட்டியையும் கொடுத்தான்.

அவர்களை நோக்கி நான் செய்வதைப் பார்த்து, அப்படியே நீங்களும் செய்யுங்கள். இதோ, நான் பாளையத்தின் முன்னணியில் வந்திருக்கும்போது நான் எப்படி செய்கிறேனோ அப்படியே நீங்களும் செய்யவேண்டும் என்று கட்டளை கொடுத்தான்.

கிதியோனும் அவனோடு இருக்கும் சகலமான பேரும் எக்காளம் ஊதும்போது நீங்களும் பாளையத்தைச் சுற்றி எங்கும் எக்காளங்களை ஊதி, கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று கூறும்படி சொன்னான். நடு ஜாமத் துவக்கத்தில் பாளைத்தின் முன்னணியில் வந்து கிதியோனும், அவனோடிருந்த நூறு பேரும் எக்காளங்களை ஊதி தங்கள் கையிலிருந்த பானைகளை உடைத்தார்கள்.

மூன்று படைகளின் மனுஷரும் எக்காளங்களை ஊதி பானைகளை உடைத்தார்கள். தீவட்டிகளைத் தங்கள் இடது கைகளிலும் ஊதும் எக்காளங்களைத் தங்கள் வலது கைகளிலும் பிடித்துக் கொண்டு, 'கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம்' என்று சத்தமிட்டார்கள். பாளையத்தைச் சுற்றிலும் அவரவர்கள் தங்கள் இடத்திலே நின்றார்கள். அப்போது பாளையத்தில் இருந்தவர்கள் எல்லாரும் சிதறிக் கூக்குரலிட்டு ஓடிப்போனார்கள்.

முந்நூறு பேரும் எக்காளங்களை ஊதுகையில் நப்தலி, ஆசேர், மனேசியின் சகல மனிதர்களுமாகிய இஸ்ரவேலர் கூடிவந்து மீதியானியரைத் துரத்தி வெற்றியடைந்தனர். இப்படியாகக் கர்த்தர் கிதியோன் மூலம் இஸ்ரவேலர் மீதியானியரை முறியடிக்கச்செய்தார்.

123. யெப்தா

நியா. 11

இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் மறுபடியுமாகக் கர்த்தரைவிட்டு விலகிப் போனார்கள். பாகாலைச் சேவித்தனர். அச்சமயத்தில் அம்மோன் புத்திரர் கூட்டங்கூடி இஸ்ரவேல் புத்திரரை எதிர்த்தனர். இஸ்ரவேல் புத்திரர் நெருக்கப்பட்டனர். கிலேயாத்திலிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் பக்கத்திலே அம்மோன் புத்திரர் வந்து பாளையம் இறங்கினர். இதைப் பார்த்த இஸ்ரவேல் புத்திரர் நமக்கு யார் தலைவனாக வரப்போவது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் நினைவெல்லாம் யெப்தா பக்கம் திரும்பியது.

அப்பொழுது யெப்தா பராக்கிரமசாலியாக இருந்தான். அவன் கிலேயாத்தின் மகன். அவனது சகோதரர்கள் யெப்தாவை நோக்கி நீ எங்கள் அம்மாவிற்கு மகனல்ல. எனவே எங்களை விட்டுப்போ என்று விரட்டியடித்தார்கள். வீட்டைவிட்டு வெளியேறிய யெப்தா கிலேயாத் பள்ளதாக்கிலே சுற்றித் திரிந்தான்.

இஸ்ரவேல் புத்திரர் யெப்தாவைத் தங்கள் தலைவனாக இருக்கவேண்டினார்கள். யெப்தா இஸ்ரவேல் புத்திரரின் தலைவனானான். இஸ்ரவேல் புத்திரரைக் கூட்டிச்சேர்த்து அம்மோனியரை எதிர்க்க ஆயத்தமானான். யுத்தத்திற்குப் போவதற்குமுன் யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனை பண்ணினான்.

தேவரீர் அம்மோனியரை என் கையில் ஒப்புக்கொடுத்தால் நான் சமாதானத்தோடே திரும்பி வரும்பொழுது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ, அது கர்த்தருக்கு உரியதாகும். அதைச் சர்வாங்கத் தகனபலியாகச் செலுத்துவேன் என்றான். அந்தப்படியே அவன் அம்மோனியரை வென்று திரும்பி வரும்பொழுது இதோ அவனுக்கு எதிர்கொண்டு மிகுந்த ஆரவாரத்துடன் அவனது ஒரே மகள் வந்தாள். யெப்தா தன் மகள் வருகையின் காட்சியைக் கண்டு மிகுந்த மனவேதனை அடைந்தான். இருப்பினும் தான் கர்த்தருக்குப் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன், அதினின்று மாறவேமாட்டேன் என்று சொல்லி, தனது அருமையான ஒரே மகளையும் கர்த்தருக்குப் பலியிட்டான். ஆனால் கடவுள் இத்தகைய பலியை அவனிடம் எதிர்பார்க்கவில்லை. இதை ஆபிரகாமின் மூலம் நமக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். கடவுள் நம்மிடம் விரும்புவது விசுவாசமும் கீழ்ப்படிதலுமே.

124. ஷிபோலேத்

நியா. 12

யெப்தா அம்மோனியரை வென்று இஸ்ரவேல் புத்திரருக்குத் தலைவனானான். இஸ்ரவேல் புத்திரரை நன்முறையில் நியாயம் விசாரித்து வந்தான். இப்படியிருக்கும்பொழுது எப்பிராயீம் மனிதர் யெப்தாவுக்கு எதிராகக் கூடினர். யெப்தாவை நோக்கி, நீ அம்மோனியருடன் யுத்தம் செய்யும்பொழுது எங்களையும் ஏன் உன்னுடன் சேர்த்துக்கொள்ளவில்லை. ஆகையால் இப்பொழுது உன்னையும் உன் வீட்டையும் தீயினால் கொழுத்தப்போகிறோம் என்றார்கள்.

அதற்கு யெப்தா, எனக்கும் அம்மோனியருக்கும் வழக்கிருக்கும்பொழுது உங்கள் உதவியை நாடினேன். அப்பொழுது எனக்கு உதவி செய்ய முன்வரவில்லை. இப்படியிருக்க நான் இப்பொழுது மட்டும் உங்களை எப்படி உதவிக்குக் கூப்பிடுவேன் என்றான். இதனால் கோபமடைந்த எப்பிராயீம் மக்கள் யெப்தாவுடன் போர் செய்தனர். யெப்தா வெற்றியடைந்தான். இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கைப்பற்றினர். தோல்வியடைந்த எப்பிராயீம் மக்கள் சிதறலடைந்து யோர்தானுக்கு ஓடி வந்தார்கள். யோர்தானை எப்பிராயீம் மக்கள் கடக்கும்பொழுது இஸ்ரவேல் மக்கள் அவர்களைப் பிடித்து ஷிபோலேத் என்று சொல்லச் சொன்னார்கள். எப்பிராயீம் மக்கள் சிபோலேத் என்று உச்சரித்தார்கள். உச்சரிப்பினால் இனம் கண்டு அவர்களை உடனே இஸ்ரவேல் மக்கள் வெட்டிப்போட்டனர். இஸ்ரவேலர் கை அக்காலத்தில் மற்ற மக்களின் மத்தியிலே பலத்திருந்தது.

125. சிம்சோன்—சிறப்பான குழந்தை

நியா. 13

நியாயாதிபதியாகிய யெப்தா இறந்தபின்பு இஸ்ரவேல் மக்களை ஆளுவதற்குத் தலைவர்கள் யாரும் இல்லை. இஸ்ரவேல் புத்திரர் பல துன்பங்களுக்குள்ளானார்கள். அக்காலத்தில் பெலிஸ்தியர் இஸ்ரவேல் புத்திரரை வென்று பல துன்பங்களுக்குள்ளாக்கினர். பெலிஸ்தியரின் கையில் அகப்பட்டு கொடுமைகளை அனுபவித்த இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடம் தங்களுக்கு ஒரு தலைவனைத் தரும்படி கேட்டனர்.

கர்த்தர் தான் கோத்திரத்தானாகிய மனோவாவின் மனைவியோடே பேசினார். 'இதோ நீ ஒரு குமாரனைப் பெறுவாய், அவன் தலைமுடி பிறந்த நாள் முதல் மரணநாள் மட்டும் வெட்டப்படாது. அவன் தேவனுக்கென்று நசரேயனாய் இருப்பான். அவன் இஸ்ரவேல் புத்திரரை பெலிஸ்தியரிடமிருந்து விடுவிப்பான்' என்றார். கர்த்தர் சொல்லிய அனைத்துக் காரியங்களையும் மனோவாவும், அவன் மனைவியும் விசுவாசித்தார்கள். குழந்தை பிறந்தது, மிகுந்த கவனத்துடன் அதை வளர்த்தனர். அதற்கு சிம்சோன் என்று பெயரிட்டனர். சிம்சோன் வளர்ந்து கடவுளுக்கென்று நசரேயனாக விளங்கினான்.

126. திருமணம் ஒழுங்கு செய்தல்

நியா. 14

சிம்சோன் ஒருநாள் பல இடங்களைச் சுற்றிப் பார்க்கச் சென்றான். அப்பொழுது திம்னாத் ஊரிலே ஒரு அழகான பெண்ணைக் கண்டான். அவளைத் திருமணம் செய்துகொள்ள நினைத்தான். எனவே சிம்சோன் தன் பெற்றோரிடம் சென்று தான் பார்த்த பெண்ணைத் தனக்கு திருமணம் செய்து தரும்படி கேட்டான். அதற்கு மனோவாவும் அவனது மனைவியும் சிம்சோனை நோக்கி பெலிஸ்தியரின் பெண்ணை திருமணம் செய்யவேண்டாம். நம் இனத்தாரிடத்தில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள் என்றனர். ஆனால் சிம்சோனுக்குப் பெலிஸ்தியர் பெண் பார்வைக்கு

அழகாயிருந்தாள். அவளைத் திருமணம் செய்வதாக உறுதியாக தன் பெற்றோர்களிடம் சொல்லிவிட்டான். பின்பு சிம்சோனின் பெற்றோர்களும் அதற்குச் சம்மதம் தெரிவித்தனர்.

ஒருநாள் திருமணக் காரியங்களைப்பற்றிப் பேசுவதற்கு சிம்சோனும், அவனது பெற்றோர்களும் திம்னாவுக்குச் சென்றனர். போகும் வழியில் ஒரு சிங்கம் சிம்சோனை எதிர்த்தது. சிம்சோன் மிகுந்த பலசாலி. தேவ பலமும் அவனுடனிருந்ததால் அவன் அந்த சிங்கத்தின் வாயைக் கிழித்துக் கொன்றுபோட்டான். இதை தன் பெற்றோர்களிடம் அவன் சொல்லவே இல்லை. திம்னாத்தை அடைந்து அந்த பெண்ணின் வீட்டிற்குச் சென்றனர். திருமணக் காரியங்கள் அனைத்தும் பேசி முடிந்த பின்பு அனைவரும் வீடு திரும்பி விட்டனர்.

127. விடுகதை

நியா. 14

சிம்சோனின் திருமண நாள் வந்தது. சிம்சோன், அவனது பெற்றோர் அனைவரும் திம்னாவுக்குப் புறப்பட்டனர். போகும் வழியில் சிம்சோனுக்குத் தான் கொன்றுபோட்ட சிங்கம் நினைவிற்கு வரவே அதைச் சென்று பார்த்தான். அங்கே சிங்கத்தின் உடலுக்குள்ளே தேன் கூடு இருந்தது. சிம்சோன் தேனை எடுத்து தன் பெற்றோர்களுக்குக் கொடுத்தான். அவர்கள் அதைச் சாப்பிட்டார்கள்.

திருமணம் முடிந்தது. அந்த நாளிலே மணவாளனுடன் இருப்பதற்குப் பெண் வீட்டார் முப்பது வாலிபர்களைக் கொடுப்பது வழக்கம். அதேபோல் பெண் வீட்டார் முப்பது வாலிபர்களை சிம்சோனுக்கு அனுப்பினர். சிம்சோன் அவர்களுக்கும், திருமண வீட்டாருக்கும் ஏழு நாள் விருந்து பண்ணினான்.



விடுகதை (நியா. 14)

விருந்து நடந்து கொண்டிருக்கும்போது சிம்சோன் அவர்களுக்கு ஒரு விடுகதையை சொன்னான். விடுகதையானது பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும், பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது. விடுகதையைச் சொன்ன சிம்சோன் இந்த விடுகதையை பெலிஸ்தியர் விடுவிக்காவிட்டால் தனக்கு முப்பது துப்பட்டிகளையும் முப்பது மாற்று உடைகளையும் தரவேண்டும் என்றான்.

சிம்சோனின் விடுகதையை பெலிஸ்தியரால் விடுவிக்க முடியவில்லை. எனவே கோபமடைந்த பெலிஸ்தியர் சிம்சோன் மனைவியிடம் வந்து நீ அந்த விடுகதையை உன் கணவனிடம் கேட்டு எங்களுக்குச் சொல்ல வேண்டும். சொல்லாவிட்டால் உன்னையும் உன் தகப்பன் வீட்டையும் அக்கினிக்கு இரையாக்குவோம் என்று பயமுறுத்தினர். சிம்சோனின் மனைவி மிகவும் பயமடைந்து தன் கணவனிடம் அந்த விடுகதையின் அர்த்தத்தை. தனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டாள். அவள் அழுகிறதைப் பொறுக்க முடியாத சிம்சோன் விடுகதையை தன் மனைவியிடம் விடுவித்தான். அவளோ பெலிஸ்தியரிடம் சொல்ல பெலிஸ்தியர் அதை சிம்சோனுக்குச் சொன்னார்கள்.

சிம்சோன் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய முப்பது துப்பட்டிகளையும், முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுத்துவிட்டு தன் மனைவியின்மீது கோபங்கொண்டு தன் இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டான்.

சிலநாள் கழித்து தன் மனைவியைப் பார்க்க சிம்சோன் வந்தான். அப்பொழுது அவனது மனைவியை மற்றொருவனுக்கு கொடுத்துவிட்டதை அறிந்து அதிக கோபமடைந்து ஆயிரக் கணக்கான பெலிஸ்தியரைக் கொன்றான். சிம்சோனைக் கண்டு பெலிஸ்தியர் பயமும், திகிலும் அடைந்தனர்.

128. சிம்சோனும் தெலீலாளும்

நியா. 16

இஸ்ரவேல் புத்திரருக்கு சிம்சோன் ஒரு சிறந்த அரணாக இருந்தான். இதனால் பெலிஸ்தியருக்கு இஸ்ரவேல் புத்திரரை அடிமைப்படுத்தவோ, சிறுமைப்படுத்தவோ முடியவில்லை. பெலிஸ்தியருக்கு சிம்சோன் சிம்ம சொப்பனமாக விளங்கினான்.

எனவே பெலிஸ்தியர் எப்படியும் சிம்சோனைக் கொலை செய்ய எண்ணினர். அவன் இருக்கும் இடத்தைத் தேடி அலைந்தனர்.

சிம்சோன் தெலீலாள் என்னும் பெண்ணை நேசித்து அவளுடனிருந்தான். பெலிஸ்தியர் அதைக் கேள்வியுற்று அவளிடம் வந்தார்கள். அவளோ பணத்திற்கு மிகவும் ஆசைப்பட்டவள். பெலிஸ்தியர் அவளிடம் வந்து நீ சிம்சோனின் மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்துக் கொடுத்தால் உனக்கு ஆயிரத்துநூறு வெள்ளிக்காசு தருவோம் என்றார்கள்.

பணத்தின்மேல் ஆசைவைத்த தெலீலாள் தன்னை விரும்பி வந்த சிம்சோனின் பலம் எதிலிருக்கிறது என்று அறிய விரும்பினாள். முதல் முறைஅவனை உலராத பச்சை கயிற்றினால் கட்டி சோதித்துப்பார்த்தாள். இரண்டாவது முறை புதுக் கயிறுகளால் கட்டிவைத்துப் பார்த்தாள். மூன்றாவது முறையாக சிம்சோனின் தலைமயிரின் ஏழு சடைகளை நெசவு நூல் பாவோடே பின்னி அவற்றை ஆணியடித்து மாட்டி வைத்து சோதித்தாள். மூன்று முறையும் சிம்சோன் அவற்றை வெகு எளிதாகத் தூக்கி எறிந்தான். பெலிஸ்தியர்களால் அவனைப் பிடிக்க முடியவில்லை. தெலீலாள்மீது கோபம் கொண்டனர். பணம் கொடுக்கவும் மறுத்தனர்.

129. பலத்தின் இரகசியம் வெளியானது

நியா. 16

தெலீலாள் எப்படியாயினும் சிம்சோன் பலத்தின் இரகசியத்தை அறிய விரும்பினாள். தன்னை உண்மையாய் நேசிக்கும் சிம்சோனை விட பணமே அவளுக்கு மேன்மையாகத் தெரிந்தது.

ஒவ்வொருநாளும் தெலீலாள் சிம்சோனை தொந்தரவு செய்துகொண்டு வந்தாள். மூன்று முறையும் அவனின் பலம் எதிலிருக்கிறது என்பதை அறியமுடியாது தோல்வியடைந்த தெலீலாள் மனக்கசப்படைந்தாள்.

ஒருநாள் சிம்சோனிடம் நீ என்னை இதயப் பூர்வமாக நேசிக்கவில்லை. அப்படி உண்மையாக என்னை நீ நேசிப்பாயானால் உன் பலத்தை எதினால் அறிந்துகொள்ள முடியும் என்பதை எனக்குச் சொல்ல வேண்டுமென்றாள்.

சிம்சோனின் இருதயம் மரணத்துக்கத்தால் மூடியது. வேறு வழியின்றி தன் இருதயத்தை அவளுக்குத் திறந்தான், தன் பலம் தன் தலைமயிரிலிருக்கிறது என்றும், அதை வெட்டிவிட்டால் தன் பலம் எல்லாம் போய்விடும் என்றும் தன் பலத்தின் இரகசியத்தை தெலீலாளுக்கு வெளிப்படுத்திவிட்டான்.

ஒருசமயம் சிம்சோன் தெலீலாள் மடியில் தலை வைத்து தூங்கிக்கொண்டிருந்தான். தெலீலாள் அவனது தலைமயிரை எல்லாம் வெட்டினாள். பெலிஸ்தியருக்கு ஆள் அனுப்பி வரச் சொன்னாள். பெலிஸ்தியர் வந்து அவனை பிடித்துக்கொண்டனர். தூங்கி எழுந்த சிம்சோன் தன்னைப் பிடித்திருந்த பெலிஸ்தியரினின்று தப்ப முடியவில்லை. தன் தலைமயிர் வெட்டப்பட்டதினால் தன் பலம் போயிற்று என்பதை உணர்ந்தான். ஒரு பெண்ணுக்காக ஆசைப்பட்டு மோசம் போய்விட்டோமே என்று நினைத்துக் கலங்கினான். பெலிஸ்தியர் சிம்சோனின் கண்களைப் பிடுங்கி எடுத்தனர். விலங்கிட்டு சிறைச்சாலையில் அடைத்து மாவரைக்க வைத்தனர். இஸ்ரவேல் புத்திரரின் பாதுகாப்பான அரண் தகர்க்கப்பட்டது.

130. சிம்சோனின் கடைசி நாள்

நியா. 16

சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டிருந்த சிம்சோனின் தலைமுடி வளர ஆரம்பித்தது. சிம்சோனின் பலமும் அதிகரித்தது.

பெலிஸ்தியர் தங்களுக்குக் கிடைத்த வெற்றியைக் கொண்டாட ஒரு விழாவையும், விருந்தையும் ஆயத்தப்படுத்தினர். தலைக்கனம் கொண்ட பெலிஸ்திய அதிபதிகள் சிலர் சிம்சோனை விளையாட்டுப் பொருளாக விழாவிற்குக் கொண்டுவர உத்தரவிட்டனர். விழாவில் தாங்கள் களிப்புடனிருக்க சில விளையாட்டுகளை செய்து காட்டுமாறு கட்டளையிட்டனர். தினவெடுத்த கொடூர உள்ளம்கொண்ட பெலிஸ்திய பிரபுக்களுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென சிம்சோன் நினைத்தான்.

கண்கள் பிடுங்கப்பட்ட நிலையில் விலங்குகளுடன் சபைக்கு வந்தான். சிம்சோனை விருந்துச்சாலையில் கேலி செய்தனர், பரியாசம் செய்தனர். சிம்சோனை இரண்டு பெரிய தூண்களுக்கிடையில் நிறுத்தி வைத்தனர்.

பெலிஸ்திய பிரபுக்களின் பரியாசத்தையும் கடுஞ்சொற்களையும் கேட்டு சகிக்கமுடியாமல் சிம்சோன் புழுவாகத் துடித்தான். தன் கண்களைப் பிடுங்கிவிட்டு விளையாட்டுக் காட்டும்படி கூறிய பெலிஸ்தியரை பழிவாங்க நினைத்தான். கர்த்தரை நோக்கினான். கர்த்தாவே இந்த ஒருவிசை மட்டும் எனக்குப் பலத்தைத் தாரும் என்று கேட்டான். கர்த்தர் அவன் வேண்டுதலுக்கு இரங்கினார். அவனுக்கு வேண்டிய பலத்தைக் கொடுத்தார்.

சிம்சோன் தன் இரு கைகளாலும் தூண்களைப் பிடித்துக்கொண்டு கர்த்தரை நினைத்து மகா பலமாய் அசைத்தான். தூண்கள் அசைந்தன, கூரையும் அசைந்தது. அப்படியே வீடு அங்கிருந்த பெலிஸ்தியப் பிரபுக்கள்மீது விழுந்தது.

சிம்சோன் உயிரோடிருக்கும் காலத்தில் இறந்தவர்களைக், காட்டிலும் அவன் இறக்கும்பொழுது இறந்தவர் அதிகமான பேர். பின்பு சிம்சோனின் சகோதரரும், தகப்பன் வீட்டார் அனைவரும் வந்து அவனை எடுத்துக்கொண்டுபோய் அவன் தகப்பன் மனோவாவின் கல்லறையிலே அடக்கம் பண்ணினார்கள்.

சிம்சோனின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் மனமகிழ்ச்சியாயிருந்தார்கள். இருபது ஆண்டுகள் சிம்சோன் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்தான். சிம்சோன் இறந்தபின்பு சிறந்த தலைவனில்லாது இஸ்ரவேல் மக்கள் வழிதப்பி நடக்கலாயினர்.



சிம்சோனின் கடைசி நாள் (நியா. 16)

ரூத்தின் சரித்திரம்

முன்னுரை

ரூத் அந்நிய நாடாகிய மோவாபை சேர்ந்தவள். இவளது வரலாறு நியாயாதிபதிகள் காலத்தில் நடந்தது. இஸ்ரவேல் குலத்தைச் சேர்ந்த தன் மாமியார் நகோமிக்கு உத்தம மருமகளாயிருந்து, அதன் காரணமாக யூத மதத்தைத் தழுவினவள். தன் கணவரின் மரணத்திற்குப்பின் போவாஸ் என்பவனை மணந்துகொண்டாள். இதனால் தாவீது அரசனுக்கு முப்பாட்டி ஆனாள். இயேசுவின் பரம்பரை வரிசையில் சொல்லப்படும் நான்கு பெண்களில் இவளும் ஒருத்தி ஆனாள். கடவுள் அவளைத் தெரிந்தெடுத்தது, அவர் இஸ்ரவேல் மக்களைத் தெரிந்துகொண்டதால் மற்ற நாட்டினர் அனைவரையும் முற்றும் மறந்து ஒதுக்கிவிடும் அளவுக்கு தனது மீட்புத் திட்டத்தினின்று அவர்களை விலக்கவில்லை என்பதைத் தெளிவாக்குகிறது. அனைவருக்குமே மீட்பு உண்டு என்ற உண்மையை நிரூபிக்கிறது. இப்படியே கிறிஸ்துவின் வாழ்க்கையிலும் கீழ்த்திசையினின்று மூன்று ஞானிகளின் வருகை யூதர் அல்லாதாருக்கும் கடவுள் மீட்பராய் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

131. ரூத்—மாமியாரும் மருமகளும்

ரூத். 1

நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில் இஸ்ரவேல் தேசத்தில் பஞ்சம் உண்டாயிற்று. அவ்வமயம் பெத்லெகேம் ஊரானாகிய எலிமெலேக்கு தன் மனைவியாகிய நகோமியோடும், தன் இரண்டு குமாரரோடும் கூட மோவாப் தேசத்திலே போய் குடியிருந்தான். மக்லோன், கிலியோன் மோவாபிய பெண்களான ஓர்பாள், ரூத் என்பவர்களைத் திருமணம் செய்து, அங்கே பத்து வருஷம் வாசம்பண்ணினார்கள்.

பின்பு எலிமெலேக்கும் அவளது இரு குமாரர்களும் மரித்துப் போனார்கள். எனவே நகோமி கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து உணவுஅருளுகிறார் என்று கேள்விப்பட்டு மோவாபை விட்டு யூதா நாட்டிற்குத் திரும்பிப் போனாள். போகும் வழியில் இரு மருமக்களையும் நோக்கி நீங்கள் உங்கள் தாய் வீட்டுக்குத் திரும்பிப்போங்கள் என்று முத்தமிட்டு வழியனுப்பினாள். அப்பொழுது மருமக்கள் சத்தமிட்டு அழுது, நகோமியைப் பார்த்து உம்முடைய ஜனத்தண்டைக்கே உம்முடன்கூட வருவோம் என்றார்கள்,

அதற்கு நகோமி, என் மக்களே, திரும்பிப் போங்கள். நான் வயது சென்றவள். உங்கள் நிமித்தம் எனக்கு மிகுந்த வருத்தமிருக்கிறது என்றவுடன் மீண்டும் அவர்கள் அழுதார்கள். ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப் போய் விட்டாள். ரூத்தோ தன் மாமியை விடாமல் பற்றிக்கொண்டாள். நகோமி அவளை மீண்டும் தன் ஜனங்களிடத்திற்கும் தேவர்களிடத்துக்கும் திரும்பிப் போக வேண்டிக்கொண்டாள்.

அதற்கு ரூத், 'நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன். மரணமே அல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னைப் பிரிக்காது' என்று கூறினாள். நகோமி அவள் தன்னோடு கூட வர மன உறுதியாயிருக்கிறதைக் கண்டு, இருவரும் பெத்லெகேம் மட்டும் நடந்து போனார்கள்.

ஊரார் எல்லாரும் அவர்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, இவள் நகோமியோ என்று பேசினார்கள். அதற்கு அவள் என்னை நகோமி என்று சொல்லாமல் மாராள் என்று சொல்லுங்கள். சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார் என்றாள்.

132. ரூத் போவாசை சந்தித்தல்

ரூத் 2

நகோமிக்கு அவளுடைய புருஷனின் உறவின் முறையில் போவாஸ் என்னும் பேருள்ள மிகுந்த பணக்காரனாகிய இனத்தான் ஒருவன் இருந்தான். அவனுடைய வயல் வெளியில் கதிர்களை பொறுக்கிக்கொண்டு வர ரூத் மாமியிடம் உத்தரவு பெற்றுப் போனாள். இன்னும் அநேகர் பெத்லெகேமிலிருந்து கதிர் பொறுக்க வந்திருந்தனர். போவாஸ் அவர்களைப் பார்த்து கர்த்தர் உங்களோடு இருப்பாராக என்றான். அதற்கு அவர்கள் கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக என்றார்கள்.

போவாஸ் கண்காணியிடம் ரூத்தைப் பார்த்து இந்தப் பெண்பிள்ளை யாருடையவள் என்று கேட்டான்? இவள் மோவாப் தேசத்திலிருந்து நகோமியோடேகூட வந்த மருமகள் என்றான். போவாசும் அவளை நோக்கி மகளே, கேள், கதிர்பொறுக்க இவ்விடத்தை விட்டு வேறே வயலுக்குப் போகாமல் இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடே கூடவே இரு. மேலும் தாகத்துக்கு தண்ணீரும் இங்கே குடிக்கலாம் என்றான்.

அப்பொழுது அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி நான் அந்நிய தேசத்தாளாயிருக்க, நீர் என்னை விசாரிப்பதின் காரணம் என்ன என்றாள். அதற்கு போவாஸ் உன் புருஷன் மரணமடைந்த பின்பு மாமியோடு வந்ததும் நீ உன் பெற்றோரையும், உன் சொந்த நாட்டையும் விட்டு, நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்த விவரம் தெரிவிக்கப்பட்டது. கர்த்தர் உனக்கு பலன் அளிப்பார் என்றான்.

அதற்கு ரூத் என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்க வேண்டும். நீ எனக்கு ஆறுதல் சொல்லி உம்முடைய அடியாளோடே பட்சமாய்ப் பேசினீரே என்றாள். பின்னும் போவாஸ் அவளுக்கு

உணவும் கொடுத்து, அவளை ஏராளமான கதிர்களை பொறுக்கிக்கொள்ள வகை செய்தான்.

சாயங்காலமட்டும் ரூத் கதிர் பொறுக்கினாள். ஏறக்குறைய ஒரு மரக்கால் கோதுமை எடுத்துக் கொண்டு மாமியிடம் கொடுத்தாள். மாமி, இன்று எங்கே கதிர் பொறுக்கினாய் என்று கேட்க, வயல்காரன் பேர் போவாஸ் என்றாள். அப்பொழுது நகோமி, ரூத்தைப் பார்த்து, அவன் கர்த்தராலே ஆசீர்வதிக்கப் படுவானாக, அந்த மனிதன் நெருங்கின உறவின் முறையாலும் நம்மை ஆதரிக்கிற சுதந்தரவாளிகளில் ஒருவனுமாய் இருக்கிறான் என்றாள்.

ரூத் அவர் என்னை நோக்கி, 'என் அறுப்பெல்லாம் அறுத்துத் தீருமட்டும், நீ என் வேலைக்காரிகளோடே கூடவே இரு என்று சொன்னார்' என்றாள். உடனே மாமி, நீ வேறொரு வயலுக்குப் போகாமல் போவாசுடைய வயலிலே கதிர் பொறுக்கு' என்றாள். அப்படியே கோதுமை, வாற்கோதுமை அறுப்பும் தீருமட்டும் ரூத் போவாசுடைய வயலில் கதிர் பொறுக்கி தன் மாமியிடம் தங்கி வந்தாள்.

133. நகோமியின் ஆலோசனை

ரூத் 3

ரூத் சுகமாக வாழ்ந்திருக்கும்படி நகோமி அவளுக்கு சவுக்கியத்தைத் தேட ஒரு ஆலோசனை கூறுகிறாள். நீ போவாசின் வேலைக்காரிகளோடே கூடியிருந்தாயே, அவன் நம்முடைய உறவின் முறையான் அல்லவா? இதோ அவன் இன்று வாற்கோதுமை தூற்றுவான். நீ குளித்து எண்ணெய் பூசி, உன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்தக் களத்திற்குப் போ, அவன் படுத்துக்கொண்டபோது, அவன் கால்களின் மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கி, நீ படுத்துக்கொள். அப்பொழுது அவன் நீ செய்யவேண்டியது இன்னது என்று சொல்லுவான் என்றாள்.

ரூத் நகோமி சொன்னபடியே செய்தாள். பாதிராத்திரியிலே, போவாஸ் பயந்து ஒரு பெண் தன் பாதத்தண்டையிலே படுத்திருக்கிறதைக் கண்டு, நீ யார் என்று கேட்டான். அவள் 'நான் உம்முடைய அடியாளாகிய ரூத், நீர் உம்முடைய அடியாள் மேல் உம்முடைய போர்வையை விரியும். நீர் எனக்கு சுதந்தரவாளி' என்றாள்.

அதற்கு போவாஸ் அவள் நற்குணத்தைப் பாராட்டி நீ பயப்படாதே, உனக்கு வேண்டியதையெல்லாம் செய்வேன். நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள். நான் சுதந்தரவாளி என்பது மெய்தான் என்றான். எனினும் இன்னொரு நெருங்கின சுதந்தரவாளி ஒருவன் உண்டு. அவனிடம் உன்னை நான் திருமணம் பண்ணக் கேட்போம். அப்படி அவன் மனதில்லாதிருந்தால் நானே உன்னை சுதந்தர முறையாய் திருமணம் பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுகிறேன். விடியற்காலமட்டும் படுத்துக் கொண்டிரு என்றான்.

அவள் விடியற்கால மட்டும் அவன் பாதத் தண்டையில் படுத்திருந்து பின் எழுந்து அந்தப் போர்வையில் ஆறுபடி வாற்கோதுமை அளந்துபோட்டபின் மாமியிடம் கொடுக்கச் சொன்னான். அவள் மாமியிடம் கொண்டு போய் கொடுத்தாள். உடனே நகோமி என் மகளே இந்தக் காரியம் சித்தியாக முடியும் என்று கூறினாள். மங்களகரமான காரியம் நடந்தேற தேவன் கிருபை செய்வாராக என்று பிரார்த்தனை செய்தாள்.

134. ரூத்தின் திருமணம்

ரூத் 4

போவாசும் முதல் சுதந்தரவாளியைக் கூப்பிட்டு அவன் சம்மதத்தைக் கேட்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தான்.

அந்த சுதந்தரவாளியோ போவசை நோக்கி நீர் அதை மீட்டுக்கொள்ளும் என்று சொல்லி தன் பாதரட்சையைக் கழற்றிப் போட்டான். அப்பொழுது போவாஸ் மூப்பரையும் சகல

ஜனங்களையும் நோக்கி மரித்தவனுடைய சுதந்தரத்திலே அவன் பேரை நிலைநிறுத்த நான் மக்லோனின் மனைவியாயிருந்த மோவாபிய பெண் ரூத்தை எனக்கு மனைவியாகக் கொண்டேன். அதற்கும் இன்றைய தினம் நீங்கள் சாட்சி என்றான்.



ரூத்தின் திருமணம் (ரூத். 4)

அப்பொழுது ஒலிமுகவாசலில் இருக்கிற சகல மக்களும் மூப்பரானவர்களும் அவனை நோக்கி, நாங்கள் சாட்சிதான். உன் வீட்டிலே வருகிற மனைவியைக் கர்த்தர் இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டு பேராகிய ராகேலைப் போலவும், லேயாளைப்போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக, நீ பாக்கியவானாயிருந்து பெத்லெகேமிலே புகழ்பெற்றிருக்கக் கடவாய் என்று வாழ்த்தினார்கள்.

போவாஸ் ரூத்தை விவாகம் பண்ணினான். அவள் அவனுக்கு மனைவி ஆனாள். அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. நகோமி அந்தப் பிள்ளையை எடுத்து, தன் மடியிலே வைத்து அதை வளர்க்கிற தாயானாள். அயல் வீட்டுக்காரிகள் அந்தப் பிள்ளையை வாழ்த்தி ஓபேத் என்று பேரிட்டார்கள். அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன் ஆனான்.

குறிப்பு: சுதந்தரவாளி—முறை மாப்பிள்ளை,

சாமுவேல் முதலாம், இரண்டாம் புத்தகம்

முன்னுரை

நியாயாதிபதிகளில் கடைசியானவர் சாமுவேல். இவர் ஒரு தீர்க்கதரிசியும் ஆவார். தம்மால் தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேலருக்குத் தாம் ஒருவரே அரசரும் தலைவரும் தந்தையுமாயிருக்கவேண்டும் என்று கடவுள் விரும்பினர். ஆனால் இஸ்ரவேல் மக்கள் தம்மைச் சூழ்ந்திருந்த நாடுகளில் அரசர்கள் மக்களை ஆண்டு நடத்துவதைக் கண்டு தங்களுக்கும் அத்தகைய அரசன் ஒருவன் இருக்கவேண்டுமென்று விரும்பி சாமுவேலை வேண்டினர். சாமுவேல் முதலில் தயங்கினர், மறுத்தார். ஆனால் கடவுளின் அனுமதியின்பேரில் மக்களின் விருப்பத்திற்கு விரும்பி சவுலை அரசனாக்கினர். முதல் அரசன் சவுல் ஆட்சி சிறந்ததாய் இருக்கவில்லை. அவனுக்குப் பதிலாக பெத்லகேம் ஆயர் குலத்தைச் சேர்ந்த தாவீது அரச பதவிக்கு சாமுவேலால் அபிஷேகம் செய்யப்பட்டார். இந்த தாவீதின் மைந்தன் எனப்பட்ட மேசியா இவர் பரம்பரையில் தோன்றியவர். தாவீது எருசலேம் நகரைக் கட்டினர். அங்கு கடவுளுக்கு ஒரு கூடாரத்தை அமைத்து அங்கு கடவுளுடைய உடன்படிக்கைப் பெட்டியை வைத்தார்.

135. அன்னாளின் குழந்தை

1 சாமு. 1

இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டில் குடியிருந்தபொழுது கடவுளின் உடன்படிக்கைப் பெட்டியானது சீலோவ் என்னும் ஊரில் உள்ள ஆசாரியர்களிடமிருந்தது. எனவே இஸ்ரவேல் மக்கள் தங்களது காணிக்கைகளைச் செலுத்துவதற்காக அங்கே போவது வழக்கம்.

இஸ்ரவேல் மக்களில் எல்கானா என்ற பெயர் கொண்ட ஒருவன் ஆண்டுதோறும் தன் குடும்பத்தை சீலோவ் நகருக்கு அழைத்துச் செல்வான். அவனுக்கு அன்னாள், பெனின்னாள் என்ற இரண்டு மனைவிகள் உண்டு. பெனின்னாளுக்கு குழந்தைகள் இருந்தார்கள். அன்னாளுக்குக் குழந்தைகள் கிடையாது. பெனின்னாள் அன்னாளுக்குக் குழந்தைகள் இல்லாதது கண்டு, அடிக்கடி அவளை மனவருத்தப்படுத்துவாள். அப்பொழுதெல்லாம் அன்னாள் தனக்கு ஒரு குழந்தையில்லையே என்று வேதனைப்படுவாள். அப்பொழுது எல்கானா அன்னாளைப் பார்த்து நான் உன்னை அதிகமாக நேசிக்கிறேனே. அது உனக்குப் போதாதா என்று ஆறுதல் கூறுவான், மறுபடியும் பென்னினாள் தனக்கு இருக்கிற பெண் குழந்தைகளையும் ஆண் குழந்தைகளையும் சுட்டிக்காட்டி அன்னாளை மனவருத்தமடையச் செய்வாள். எனவே அன்னாள் ஆண்டுதோறும் செல்கின்ற சீலோவ் பயணத்தைக் குறித்து மிகவும் அச்சம் கொள்வாள். பெனின்னாளும் அவளுடைய குழந்தைகளும் சீலோவில் நடக்கின்ற விருந்தில் கலந்துகொண்டு மகிழ்ச்சியுடன் இருக்கும் பொழுது அன்னாள் மட்டும் கவலையுடன் இருப்பாள். இவ்வாறு ஆண்டுதோறும் நடைபெற்று வந்தது.

ஒருமுறை சீலோவில் எல்லோரும் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்தபொழுது, அன்னாள் சிறிது சாப்பிட்டுவிட்டு கடவுளின் உடன்படிக்கைப் பெட்டி இருக்கின்ற கடவுளின் சந்நிதி சென்று, தன் கண்களிலிருந்து கண்ணீர் உருண்டோட அழுது உள்ளமுருக வேண்டுதல் செய்தாள். 'கடவுளே, என்னை இரக்கமுடன் கண்ணோக்கிப் பாரும். நான் மனவருத்தத்துடன் இருக்கின்றேன். எனக்கு ஒரு குழந்தை வேண்டும். அவ்வாறு நான் கேட்கின்றபடி நீர் ஒரு ஆண் குழந்தையை எனக்குக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும்வரை அவனை உமக்கு ஊழியக்காரனாக ஒப்புக்கொடுப்பேன்' என்று வேண்டுதல் செய்தாள்.

அவள் இவ்வாறு வேண்டுதல் செய்வதை 'ஏலி, என்று அழைக்கப்படுகின்ற வயதான ஆசாரியன் பார்த்துக்கொண்டே இருந்தார். ஒருவேளை மது அருந்தினதால் அவள் இவ்வாறு உதடுகள் அசையாமல் பேசிக்கொண்டிருக்கிறாள் என்று நினைத்து அவளோடு பேசினார். அப்பொழுது அன்னாள் நான் மது அருந்தவில்லை. நான் மிகவும் மனவருத்தப்படுவதால் நான் கடவுளிடம் எனக்கு உதவி செய்யும்படியாகக் கேட்டேன் என்றாள்.

பின்பு ஏலி, 'அன்னாளே! நீ சமாதானத்துடன் போ. உன் விண்ணப்பத்திற்கு கடவுள் பதில் அளிப்பார்' என்று சொன்னார். உடனே அவள் சென்று எல்கானாவுடனும் பென்னினாளுடனும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் விருந்தில் கலந்துகொண்டாள். அவள் சீலோவிலிருந்து திரும்பும் வழியிலும் அவள் மனது மிகவும் சந்தோஷமாக இருந்தது. அவள் தன்னுடைய மன வருத்தங்களையெல்லாம் கடவுளிடம் கூறிவிட்டாள்.

இப்பொழுது அவள் கடவுளின் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

136. சிறுவன் வீட்டை விட்டுச் சென்றான்

1 சாமு. 2

அன்னாள் தான் வேண்டிக்கொண்டபடி தாய்மை அடைந்தது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். அவளுக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அவள் அந்தக் குழந்தைக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள். அன்னாள் சாமுவேலை மிகவும் நேசித்தாள். அதே நேரத்தில் கடவுளிடம் கொடுத்த வாக்குறுதியையும் மறக்கவில்லை.

அவளுடைய குடும்பம் வழக்கப்படி, சீலோவுக்குப் போகும்பொழுது, அவள் எல்கானாவிடம்

நாம் இந்த ஆண்டு சிலோவுக்கு வரவில்லை. நான் கடவுளுக்கு வாக்குக்கொடுத்தபடி சாமுவேல் தானாக உண்டு உடுத்தும்பொழுது நாம் இருவரும் அவனை ஏலியினிடத்தில் அழைத்துச் செல்வோம். அவன் கடவுளுக்கு ஊழியம் செய்யும்படி அங்குள்ள ஆலயத்தில் இருக்கட்டும் என்று சொன்னாள்.

மறு வருடம் சிலோவுக்கு சாமுவேலை அவன் பெற்றோர்கள் அழைத்துச் சென்றபொழுது சாமுவேல் தனது தாயின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டான். அன்னாளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. இருந்தபோதிலும் சாமுவேலின் பிஞ்சுக் கரங்களை தம் கையினின்றும் விடுவித்து ஏலியிடத்தில் ஒப்படைத்தாள். நான் கடவுளிடம் வாக்குக் கொடுத்தபடியால் இந்தக் குழந்தையை உம்மிடம் விட்டுச் செல்கின்றேன் அவனை நன்றாக கவனித்துக்கொள்ளும் என்றாள்.

சிலோவை விட்டுப் போகும்பொழுதும் மறுபடியும் அன்னாள் கர்த்தரின் சந்நிதிக்குச் சென்று, சாமுவேலைக் கொடுத்ததற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தினாள்.

அன்னாள் அடுத்த ஆண்டு எப்பொழுது வரும் சாமுவேலை மறுபடியும் எப்போது பார்ப்போம், அவன் எவ்வாறு வளர்ந்திருப்பான் என்று மாதங்களை எண்ணிக்கொண்டே இருப்பாள். அவள் ஒவ்வொரு வருடம் போகும்பொழுதும் ஒவ்வொரு புது உடுப்பை எடுத்துக்கொண்டு செல்லுவாள். அதன் மூலம் அவன் எவ்வளவு வளர்ந்திருக்கிறான் என்று தெரிந்துகொள்வாள்.

ஏலி, தனக்கு உதவியாக வந்த சாமுவேலிடம், அவன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றியும், கடவுளின் கட்டளைகளைப்பற்றியும் சொல்லிக் கொடுப்பார். ஏலி சாமுவேலின் பெற்றோர்களிடம், நீங்கள் மிகவும் நல்லவர்கள். அதனால்தான் சாமுவேலை கடவுளின் ஊழியத்திற்கும், எனக்குத் துணையாகவும் கொடுத்திருக்கிறீர்கள். இன்னும் உங்களுக்குக் கடவுள் அநேகம் குழந்தைகளைக் கொடுத்து ஆசீர்வதிப்பார் என்று கூறினார்.

ஏலியின் விண்ணப்பம் கேட்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்தில் அன்னாளுக்கு மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தன. எனினும் அவள் சாமுவேலை மறக்கவில்லை.

137. கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கிறேன்

1 சாமு. 3

பல ஆண்டுகள் உருண்டோடின. ஏலி வயது சென்றவனாக இருந்தான். அவன் கண்கள் பெலவீனமடைந்து பார்வை மங்கிப்போயிற்று. ஏலி இரவு நேரங்களில் சாமுவேலை உடன் படிக்கைப் பெட்டி இருக்கின்ற அறை அருகே படுக்கச் சொல்லிவிட்டு தான் மட்டும் தன் அறையில் படுத்துக்கொள்ளுவான். உடன் படிக்கைப் பெட்டி இருக்கும் அறையில் எப்பொழுதும் ஒரு விளக்கு எரிந்துகொண்டே இருக்கும். அதைப் பார்த்து சாமுவேல் மகிழ்ந்துகொண்டே இருப்பான்.

ஓர் இரவில் 'சாமுவேல்' என்று தன் பெயர் அழைக்கப்படுவதைக் கேட்டு சாமுவேல் எழுந்துகொண்டான். எழுந்து ஏலி படுத்திருந்த அறைக்குச் சென்று நான் தங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு ஏலி நான் உன்னைக் கூப்பிடவில்லையே என்று கூறி படுக்கைக்குத் திரும்பிப் போகுமாறு உத்தரவிட்டான். சாமுவேலும் பயத்துடன் சென்று போர்த்திக்கொண்டு படுத்தான். மறுமுறையும் தன் பெயர் அழைக்கப்படுவதைக் கேட்டு, ஏலி படுக்கைக்குச் சென்று என்னை அழைத்தீர்களா என்று கேட்டான். அதற்கு நான் உன்னை அழைக்கவில்லை. உன் படுக்கைக்குத் திரும்பிப் போ என்று கூறினான். சாமுவேல் படுக்கைக்குச் சென்றதும் மூன்றாவது முறையாக தன் பெயர் அழைக்கப்படுவதைக் கேட்டான். சாமுவேல் தான் கனவு ஒன்றும் காணவில்லை என்பதை நிச்சயமாக உணர்ந்து ஏலியிடம் சென்றான். இம்முறை ஏலி அது தேவனுடைய குரல் என்பதை உணர்ந்து, அவனைப் படுக்கைக்குப் போ என்று சொல்லாமல் மறுபடியும் அக்குரல் கேட்டால் 'கடவுளே நீர் பேசும் இதோ உம் அடியேன் கேட்கிறேன்' என்று சொல்லுவாயாக என்றான்.

சாமுவேல் தனது படுக்கைக்கு வந்து சேர்ந்ததும் மறுபடியும் சாமுவேல் என்று அழைக்கும் சத்தத்தைத் தெளிவாகக் கேட்டான். உடனே சாமுவேல் முழங்கால்படியிட்டு

கடவுளே உமக்குக் கீழ்ப்படிகிறேன். இப்பொழுது 'நீர் சொல்லும் கர்த்தாவே அடியேன் கேட்கிறேன்' என்றுன்.

கடவுள் கூறினதைக் கேட்டு சாமுவேல் அதிர்ச்சி அடைந்தான். ஏலியினுடைய இரண்டு மகன்களும் ஏலியைப் போன்று நல்லவர்கள் இல்லை. அவர்கள் கடவுளுக்கு கீழ்ப்படியாமல், மக்கள் கடவுளுக்குக் கொண்டு வந்த காணிக்கைப் பொருட்களையெல்லாம் தாமே எடுத்துக்கொண்டார்கள். இனி ஒரு போதும் ஏலி குடும்பத்திலுள்ளவர்களை ஆசாரியர்களாக அனுமதிக்கமாட்டேன் என்று கூறினர்.

அதிகாலையில் சாமுவேல் ஏலியிடம் வந்து தேவன் உன்னோடு பேசினரா என்று கேட்டான். சாமுவேல் கடவுள் சொன்னதைச் சொல்ல விருப்பமில்லாமல் கவலையுடன் கீழேயே பார்த்துக்கொண்டிருந்தான். கடவுள் சொன்னதை ஒன்றுவிடாமல் என்னிடம் கூறுவாயாக என்று ஏலி வற்புறுத்தவே, சாமுவேல் ஏலி குடும்பத்தை கடவுள் எச்சரித்ததுபற்றி ஒன்று விடாமல் கூறினன். அதைக் கேட்ட ஏலி தன் முகத்தைத் தொங்க வைத்துக்கொண்டு, கடவுளுக்கு எது நல்லது எது தவறு என்று தெரியும் என்று சொல்லிக்கொண்டே போய் விட்டான். சாமுவேல் வளர்ந்த பிறகு கடவுள் அடிக்கடி அவனுடன் பேசினர். சாமுவேல் மூலம் இஸ்ரவேல் மக்களுக்குச் செய்திகள் கொடுத்தார். எல்லா மக்களும் சாமுவேல் சொன்னதைக்கேட்டு நடக்க ஆரம்பித்தார்கள்.



கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்
(1 சாமு. 3)

138. ஏலி குடும்பத்தின் அழிவு

1 சாமு. 4

பெலிஸ்தியர்கள் மறுபடியும் பலம்கொண்டார்கள்; அவர்கள் இஸ்ரவேல் ஜனங்களோடு போரிட்டு அவர்களைத் தோற்கடித்தார்கள். அதனுல் இஸ்ரவேல் மக்கள் கவலைகொண்டார்கள். இஸ்ரவேல் மக்கள் கடவுளின் உடன்படிக்கைப் பெட்டி நம்மிடையே இருந்தால் தான் பெலிஸ்தியர்களை முறியடிக்க முடியும் என்று நினைத்தார்கள். அதற்காக ஏலியின் இரண்டு மகன்களும் கடவுளின் உடன்படிக்கைப் பெட்டியை, போர் வீரர்களுக்கு முன்பாகக்கொண்டு வந்தார்கள். அதைக் கண்டு இஸ்ரவேல் வீரர்கள் ஆரவாரம் செய்தனர். அந்த ஆரவாரத்தைக் கேட்ட பெலிஸ்தியர்களும் இப்போரில் கஷ்டப்பட்டுத்தான் போரிட வேண்டியிருக்கும் என்று நினைத்தனர். பெலிஸ்தியர்கள் இஸ்ரவேல் மக்களோடு கஷ்டப்பட்டு போர் செய்து வெற்றி கண்டார்கள். போரில் ஏலியின் இரண்டு மகன்களையும் கொன்று கடவுளின் உடன்படிக்கைப் பெட்டியையும் கைப்பற்றிக்கொண்டார்கள்.

தொண்ணூற்றெட்டு வயதான ஏலி, சீலோவில் இஸ்ரவேல் வீரர்களின் செய்திகளுக்காக சாலையருகே காத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது இஸ்ரவேல் படையிலிருந்து ஓடி வந்த ஒருவன் தெருக்களில் சென்று இஸ்ரவேல் மக்கள் தோற்கடிக்கப்பட்டதைத் தெரிவித்தான். அச்செய்தியைக் கேட்டவுடன். இஸ்ரவேல் மக்கள் எல்லாம் அழத் தொடங்கினர். அழுகுரலைக் கேட்ட ஏலி என்ன நடந்தது என்று கேட்டான்? உடனே அப்படை வீரன் ஏலியிடம் உன் இரண்டு மகன்களும் பெலிஸ்தியர்களால் கொல்லப்பட்டார்கள். தேவனுடைய பெட்டியும் பிடிபட்டுப் போயிற்று என்று கூறினன். இதைக்கேட்ட ஏலி ஐயோ! நான் பல வருடங்களாகக் காத்துவந்த உடன்படிக்கைப் பெட்டி பிடிபட்டுப் போயிற்றே என்று கருதி மல்லாந்து விழுந்தான். அவன் வயது சென்றவனுதலால் பிடரி முறிந்து இறந்தான்.

139. விநோதமான சம்பவம்

1 சாமு. 6

பெலிஸ்தியர்கள் தாங்கள் வெற்றியடைந்ததைக் குறித்து மகிழ்ச்சி அடைந்தனர். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியைப் பிடித்துக் கொண்டதன் மூலமாக இஸ்ரவேலின் தேவனையும் வெற்றி கண்டோம் என்று இறுமாப்புக் கொண்டார்கள்.

பெலிஸ்தியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை 'தாகோன்' என்று அழைக்கப்படுகின்ற தங்களது கடவுளின் சிலைக்கு முன்பாக வைத்தனர். அடுத்த நாள் காலையில் தங்களது 'தாகோன் சிலை' கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக விழுந்து கிடந்ததைக் கண்டு பயந்தார்கள். கீழே விழுந்துகிடந்த தாகோனின் உருவச் சிலையை மறுபடியும் அதன் இருப்பிடத்திலே நிறுத்தினர்கள். பெலிஸ்தியர்கள் அடுத்த நாள் வந்து பார்த்தபொழுது மறுபடியும் 'தாகோன் சிலை' கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக விழுந்து கிடந்தது. அதன் தலையும் இரண்டு கைகளும் வாசல்படியின்மேல் உடைந்துகிடந்தது. இஸ்ரவேல் மக்களின் தெய்வம் தாகோனைவிட பெரியவராகவும், பெலமுள்ளவராகவும் இருந்தபடியால், பெலிஸ்தியர்கள் வாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு மூலநோய் வந்தபோது இஸ்ரவேல் தெய்வம்தான் இவ்வாறு தண்டிக்கின்றது என்று நினைத்தார்கள். ஆகவே கர்த்தருடைய பெட்டியை வெகு சீக்கிரத்தில் அனுப்பிவிடத் தீர்மானித்தனர். இரண்டு பசுக்களை ஒரு வண்டியினுள் பூட்டி அவ்வண்டிக்குள் விலைமதிப்புடைய பல பொருள்களையும் வைத்து வண்டி யோட்டி இல்லாமல் அனுப்பிவிட்டார்கள். அப் பசுக்கள் அவ்வண்டியை இஸ்ரவேல் நாட்டிற்கு இழுத்துச் சென்றது. இதனால் இஸ்ரவேல் கடவுளினால் தான் இவ்வளவும் நடந்தது என்று பெலிஸ்தியர் தெரிந்துகொண்டனர். அந்த இரண்டு மாடுகளும் இஸ்ரவேல் நாட்டின் எல்லைக்குள் வந்து சேர்ந்தன. பசுக்களின் சத்தம் கேட்டு, அச்சமயம் அறுவடை செய்துகொண்டிருந்த இஸ்ரவேல் மக்கள் அவ்வண்டிக்கு அருகில் சென்றார்கள். அவ்வண்டியினுள் விலை மிகுந்த பொருள்களோடு, கர்த்தரின் உடன்படிக்கைப் பெட்டியும் இருந்ததைக் கண்டு மகிழ்ச்சி கொண்டார்கள். இவ்வாறாக கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி திரும்பவும் இஸ்ரவேல் மக்களிடத்திற்கு வந்து சேர்ந்தது.

140. எங்களுக்கு ஓர் அரசன் வேண்டும்

1 சாமு. 7,8

அனைத்து இஸ்ரவேல் மக்களும், சாமுவேல் தீர்க்கதரிசியை விரும்பினார்கள். அவர்கள் தங்களுக்குக் கிடைத்த ஒரு புதிய நியாயாதிபதியாக சாமுவேலைக் கருதினார்கள். கடவுள் இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த தீர்க்கதரிசிகளுள் சாமுவேல்தான் கடைசித் தீர்க்கதரிசி.

சாமுவேல் எல்லா இஸ்ரவேல் மக்களையும் கூடிவரச் செய்து 'நீங்கள் எல்லாரும் பெலிஸ்தியர்களின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற விரும்பினால், நீங்கள் கடவுள் கொடுத்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும் நீங்கள் மற்ற தெய்வங்களை வழிபட்டாலும், அப்போதும் கடவுள் உங்களைக் காப்பாற்ற மாட்டார்' என்று கூறினான்.

சாமுவேல் இஸ்ரவேல் மக்களின் வார்த்தைக்குச் செவி கொடுத்து கடவுளையே பணிந்து கொண்டார்கள். அதனால் அவர்கள் பெலிஸ்தியர்களுக்கு எதிராகப் பலம்கொண்டார்கள்.

சாமுவேல் இஸ்ரவேல் நாட்டில் நான்கு இடங்களிலும் தனது செயலகத்தை நடத்தி வந்தான். ஆண்டுதோறும் அந்த நான்கு இடங்களுக்கும் சென்று மக்களிடம் காணப்பட்ட பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைப்பான்.

சாமுவேல் முதிர்வயதானபோது, இஸ்ரவேல் மக்கள் சாமுவேல் இறந்துவிட்டால் தாங்கள் என்ன செய்வது! தங்களுக்கு ஒரு அரசன் வேண்டுமே என்று நினைத்தார்கள். இத்திட்டத்தை சாமுவேலிடம் கூறினார்கள். இதைக் கேட்ட சாமுவேல், மக்கள் இனிமேல் தன்னை விரும்பவில்லை என்று கருதி கடவுளிடம் வருத்தத்துடன் முறையிட்டான். அதற்கு கடவுள் சாமுவேலை நோக்கி, 'அவர்கள் உன்னை மறுக்கவில்லை என்னைத்தான் மறுக்கின்றார்கள். நான் அவர்களின் ராஜா. ஆனால் நான் ஆள்வதை அவர்கள் விரும்பவில்லை' என்று சொன்னார்.

பின்பு சாமுவேல் இஸ்ரவேல் மக்களிடம், உங்களுக்கென்று ஒரு அரசனை விரும்பினால் அவனுக்கு இந்த நாட்டில் எல்லாவித உரிமைகளும் உண்டு. அவன் விரும்புகின்ற செயல்களையெல்லாம் செய்வான். உங்களுக்கு உரியவைகளையெல்லாம் அவன் எடுத்துக்கொள்வான். போரில் சண்டையிடுவதற்காக உங்கள் மகன்களையெல்லாம் அழைப்பான். உங்களது பெண்பிள்ளைகளைத் தனது அரண்மனையில் வேலை செய்வதற்காக அழைப்பான். உங்களது நிலங்களிலிருந்து கிடைக்கின்ற அறுவடைகளில் பங்கு கேட்பான் என்று சொன்னான். இவ்வாறு சாமுவேல் சொன்ன எல்லாவற்றையும் கேட்ட பிறகும் இஸ்ரவேல் மக்கள் தங்களுக்கென்று ஒரு அரசன் வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அவர்கள் மிகுந்த பெலமுள்ளவர்கள்தான் அரசனாக வருவார்கள் என்று நினைத்தனர். ஆனால் பெலவீனமுள்ளவர்களும் தங்களுக்கு அரசனாக வரலாம் என்று நினைத்துப் பார்க்கவில்லை.

கடவுள், சாமுவேலிடம் இஸ்ரவேல் மக்கள் விரும்பினதைப் பெற்றுக்கொள்வார்களாக என்று கூறினார். சாமுவேலும் தனது இஸ்ரவேல் மக்களிடம் குறிப்பிட்ட காலத்தில் உங்களுக்கு ஒரு அரசன் கிடைப்பார் என்று கூறினார்.

141. இஸ்ரவேலர்களின் முதல் அரசன்

1 சாமு. 9

இஸ்ரவேல் மக்களில் பென்யமீன் கோத்திரத்தில் 'கீஸ்' என்னும் பேருள்ள செல்வந்தன் இருந்தான். அவனுக்கு 'சவுல்' என்ற மகன் உண்டு. அவன் மிகவும் அழகானவனாகவும், உயரமுள்ளவனாகவும் இருந்தான். ஒரு நாள் காலையில் சவுலின் தகப்பன் தன் மகனைப் பார்த்து 'சவுலே நம் கழுதைகள் காணாமல் போயிற்று. நீ ஒரு வேலைக்காரனைக் கூட்டிக்கொண்டுபோய்க் கழுதைகளைத் தேடிவா' என்று உத்தரவிட்டான். அதன்படி சவுலும், அவன் வேலைக்காரனும் இரண்டுநாள் தேடினார்கள், கிடைக்கவில்லை. கொண்டுவந்த சாப்பாடு எல்லாம் தீர்ந்துபோயிற்று. எனவே சவுல் வேலைக்காரனிடம் என் தந்தை கழுதைகள் மேல் உள்ள கவலையை விட்டு விட்டு என்மேல் கவலைகொள்ளாதபடி திரும்பிப்போவோம் என்று கூறினான்.

அப்பொழுது வேலைக்காரன், பக்கத்தில் இருக்கின்ற பட்டணத்திற்குப் போவோம். அங்கே சாமுவேல் தீர்க்கதரிசி இருக்கின்றார். அவரால் நம் கழுதைகள் எங்கு இருக்கின்றன என்று சொல்லமுடியும் என்று சவுலினிடம் கூறினான். அப்படியே இருவரும் சாமுவேல் இருக்கின்ற பட்டணத்திற்குச் சென்றார்கள். சாமுவேலும் அன்றைக்குத்தான் பட்டணத்திலுள்ள எல்லா மனிதர்களுக்கும் பலிகளைச் செலுத்தும்படிக்கு அங்கே வந்திருந்தான். சவுலும் அவன் வேலைக்காரனும் சாமுவேலின் அருகில் சென்றவுடனே, சாமுவேல் அவர்களைப் பார்த்து கவலைப்படாதீர்கள் உமது கழுதைகள் அகப்பட்டது என்றான். பின்பு சாமுவேல் சவுலை சிறிதுநேரம் உற்றுப்பார்த்து, 'சவுலே நீ இஸ்ரவேல் மக்களிடத்தில் மிகவும் குறிப்பிடத்தக்கவன்' என்று சொன்னான். அதற்கு சவுல் 'நானா!' என்று ஆச்சரியத்துடன் கேட்டு 'நான் ஒன்றும் குறிப்பிடத்தகுந்தவன் கிடையாது. என்னுடைய தந்தை சாதாரண விவசாயி' என்று சொன்னான். சாமுவேலிடம் ஏற்கெனவே சவுலைப்பற்றிக் கடவுள் சொல்லியிருந்ததால் சாமுவேல் அதற்குமேல் ஒன்றும் பேசாமல் அவர்கள் இருவரையும் விருந்திற்கு அழைத்து சாப்பிடச் சொன்னான். அவர்களும் சந்தோஷத்தோடு சாப்பிட்டனர்.

142. வியக்கத்தக்க ஒரு இரகசியம்

1 சாமு. 9,10

சவுல் சாமுவேல் கொடுத்த விருந்தினை முடித்த பிறகு, அன்று இரவு சாமுவேலின் மேல் வீட்டில் படுத்து உறங்கினான். அடுத்த நாள் விடியற்காலையில் சாமுவேல் சவுலைக் கூப்பிட்டு, 'சீக்கிரம் புறப்படு, நான் இந்தப் பட்டணம் முடியும் வரைக்கும் உன்னோடு வருகிறேன்' என்று சொல்லி இருவருமாகப் புறப்பட்டார்கள். அவர்கள் பட்டணத்தின் கடைசி மட்டும் வந்தபோது சாமுவேல் சவுலைப்

பார்த்து 'உன்னிடம் ஒரு இரகசியம் சொல்ல வேண்டியிருக்கிறது. அதனால் உன் வேலைக்காரனை முன்னே போகச் சொல்' என்றான். வேலைக்காரன் முன்னே சென்ற பிறகு சாமுவேல் சவுலிடம் 'உன்னை இஸ்ரவேல் மக்களின் முதல் அரசனாக கடவுள் தேர்ந்தெடுத்திருக்கிறார்' என்று சொன்னான். இதைக் கேட்டதும் சவுல் ஒன்றும் பேசமுடியவில்லை. பின்பு சாமுவேல் ஒலிவ எண்ணெய்க் குப்பியிலிருந்து சில துளிகளை அவன்மேல் தெளித்து 'இதுதான் கர்த்தர் உன்னை அரசனாகத் தேர்ந்தெடுத்ததற்கு அடையாளம்' என்று கூறினார். இவ்வளவும் நடந்த பிறகும்கூட சாமுவேல் சொன்ன வார்த்தைகளை சவுலால் நம்பமுடியவில்லை. பின்பு சாமுவேல், சவுலிடம் 'நீ போகும் வழியில் மூன்றுவித சம்பவங்கள் நிகழும். அவைகளைப் பார்க்கும் பொழுது நீ கர்த்தருடைய வார்த்தையை நம்புவாய்' என்றான்.

நீ போகும் வழியில் முதலில் இரண்டு மனிதர்கள் தென்படுவார்கள். அவர்கள் உன் கழுதைகள் கிடைத்தது என்று சொல்லுவார்கள். இரண்டாவதாக, காணிக்கைப் பொருட்களை கடவுளுக்காக எடுத்துச் செல்லும் சில மனிதர்களைக் காண்பாய். அவர்கள் உனக்கு சில அப்பங்களைத் தருவார்கள். மூன்றுவதாக, தீர்க்கதரிசிகளுக்கு முன்னே ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் செல்லுகின்ற கூட்டத்தைக் காண்பாய். நீயும் அவர்களோடு சேர்ந்து கொண்டு கடவுளைத் துதிப்பாய் என்று கூறினான். இவைகளையெல்லாம் கேட்ட பிறகு சவுல் சாமுவேலுக்கு நன்றி கூறிவிட்டு தன் வேலைக்காரனோடு வீட்டிற்குப் புறப்பட்டான். போகும் வழியில் சாமுவேல் சொன்னது போலவே மூன்று சம்பவங்களும் நிகழ்ந்தன. அப்பொழுது சவுல் கடவுளுடைய வார்த்தைகளை நம்பத் தொடங்கினான்.

சவுலும் அவன் வேலைக்காரனும் தங்களுடைய வீட்டை அடைந்தபோது சவுலின் சிறிய தகப்பன் எதிர்வந்து இவ்வளவுநாளும் எங்கே சென்றீர்கள் என்று கேட்டான். அதற்கு சவுல் கழுதைகளைத் தேடச் சென்றோம், கழுதைகள் கிடைக்காமல் போகவே சாமுவேல் தீர்க்கதரிசியிடம் சென்றோம் என்றான். அதற்கு சவுலின் மாமன், சாமுவேல் உன்னிடத்தில் என்ன சொன்னார் என்று ஆவலோடு கேட்டான். அதற்கு சவுல் கழுதைகள் பத்திரமாக இருக்கும் என்று சாமுவேல் சொன்னார் என்றான். ஆனால் சவுல் தன் மாமனிடம் சாமுவேல் சொன்ன கடவுளின் ரகசியத்தை வெளியிடவில்லை.

143. சவுல் அரசனாதல்

1 சாமு. 10,11

சாமுவேல் எல்லா இஸ்ரவேல் மக்களையும் கூடிவரச் செய்து அவர்களுக்குரிய அரசனை அறிவிப்பதாகச் சொன்னார். ஆனால் உடனே அரசனது பெயரை அறிவிக்காமல் அவனது கோத்திரத்திலிருந்து சொல்ல ஆரம்பித்தார்.

தேவன் இஸ்ரவேல் மக்களில் உள்ள பென்யமீன் கோத்திரத்தில், கீஸ் என்பவர் குடும்பத்திலுள்ள சவுலைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். இனிமேல் சவுல்தான் உங்கள் அரசன் என்று அறிவித்தான். இவ்வாறு சாமுவேல் அறிவித்ததும் எல்லோரும் தங்களது அரசனைப் பார்க்க விரும்பினர். ஆனால் சவுலைக் காணவில்லை. அரசன் எங்கே எங்கே? என்று மக்கள் முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டார்கள். சாமுவேலுக்குக்கூட சவுல் இருந்த இடம் தெரியவில்லை. உடனே சவுலை எல்லோரும் தேட ஆரம்பித்தார்கள். இறுதியில் அவன் தளவாடங்கள் இருக்கிற இடத்திலே கண்டு பிடிக்கப்பட்டு, எல்லா இஸ்ரவேல் மக்களுக்கும் முன்பாக நிறுத்தப்பட்டான். அவன் மக்கள் நடுவே வந்தபோது, எல்லா மக்களும் அவன் தோளுக்கு கீழாய் இருக்கத்தக்க உயரமுள்ளவனாக இருந்தான். அப்பொழுது சாமுவேல் இவன்தான் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதன் என்று அறிவித்தான். உடனே ஜனங்கள் எல்லோரும் ஆரவாரம் செய்தனர்.

பிறகு சாமுவேல், இஸ்ரவேல் அரசர்களுக்குரிய கடமைகளையெல்லாம் ஒரு புத்தகத்தில் எழுதிவைத்தான்.

1 சாமு. 11

சாமுவேல், சவுலே அரசனாக அறிவித்ததை எல்லா மக்களும் விரும்பவில்லை. இஸ்ரவேல் மக்களில் சிலர் இவனா? நமக்கு அரசன் என்று சொல்லி சவுலை அசட்டை பண்ணினார்கள். சில நாட்களுக்குள் அம்மோனியர், இஸ்ரவேல் மக்களுக்கு எதிராகப் படையெடுத்து 'யாபேஸ்' என்னும் பட்டணத்தை முற்றிகை போட்டார்கள். உடனே யாபேசில் இருந்த மக்கள் அம்மோனியர்களிடம் எங்களோடு சண்டையிட வேண்டாம், எங்களோடு உடன்படிக்கை பண்ணிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அம்மோனியர்கள் உங்கள் எல்லாருடைய வலது கண்களைப் பிடுங்கி அதன் மூலம் நிந்தை வரப்பண்ணுவதே நாங்கள் செய்யும் உடன்படிக்கை என்றார்கள். இதைக் கேட்டு யாபேசின் மக்கள் கலக்கமுற்றார்கள். பின்பு யாபேசின் மக்கள், அம்மோனியர்களிடத்தில், எங்களுக்கு ஏழு நாட்கள் தவணை கொடுங்கள். எங்களுக்கு உதவி செய்பவர்கள் யாரும் இல்லை யென்றால் அப்பொழுது உம்முடன் உடன்படிக்கைப் பண்ணுவோம் என்றார்கள்.

அந்த ஏழு நாட்களுக்குள் யாபேசின் மூப்பர்கள், எல்லா இஸ்ரவேல் மக்களிடத்திலும் சென்று அச்செய்தியைக் கூறினார்கள். அச்செய்தியைக் கேட்ட எல்லா இஸ்ரவேலருடைய மக்களும் 'ஓவ்வென்று அழுதார்கள், அழுகுரல் கேட்டு ஓடிவந்த சவுலினிடமும் இச் செய்தியை அறிவித்தார்கள். உடனே சவுல் ஒரு நிமிடத்தையும் வீணாக்காது எல்லா இஸ்ரவேல் கோத்திரங்களுக்கும் அம்மோனியர்களுடன் போரிடும் படிக்கு வீரர்களை அனுப்பும்படி உத்தரவிட்டான். அவ்விதம் அவர்கள் வீரர்களை அனுப்பமறுத்தால் பெரிய துன்பங்கள் வரக் காத்திருக்கின்றது என்று சொல்லி அனுப்பினான். சவுலின் கட்டளைக்குப் பயந்து எல்லா இஸ்ரவேல் கோத்திரங்களும் தங்களது படைவீரர்களை அனுப்பினார்கள். எல்லாப் படைவீரர்களையும் பார்த்த சவுல் யாபேசின் மூப்பர்களிடம் நாளைக்கு உங்களுக்கு உதவி கிடைக்கும் என்று சொல்லி அனுப்பினான். யாபேசின் மக்கள் சவுல் கூறியதை ரகசியமாக வைத்துக் கொண்டு அம்மோனியர்களிடம் நாளை உம்மோடு உடன்படிக்கை பண்ணுவோம் என்றார்கள்.

அன்று இரவு சவுல் தன் படைகளை மூன்று வகையாகப் பிரித்து, அவைகளை யாபேசுக்குச் செல்லும்படி உத்தரவிட்டான். பின்பு அம்மோனியர்கள் எதிர்பார்க்காத விடியகாலைப் பொழுதில் அவர்களோடு போரிட்டு வெற்றி தேடித்தந்தான். அதற்குப் பின் மக்களே சாமுவேலிடம், சவுலை விரும்பாத மக்களை இன்று கொன்று போடுவோம் என்று கூறினார்கள். அதற்கு சவுல் இன்று கடவுள் நமக்கு வெற்றி தேடிக் கொடுத்த நாள். இன்று யாருமே சாகக்கூடாது என்று கூறினான். சவுல் தன்னை அரசனாக நிரூபித்து விட்டான் என்று இஸ்ரவேல் மக்கள் ஒவ்வொருவரும் பேசிக் கொண்டார்கள்.

யாபேசின் மக்கள் சவுல் தங்களுக்குச் செய்த உதவியை ஒரு போதும் மறக்கவே இல்லை.

145. யோனத்தானின் வீரம்

1 சாமு. 14

சவுல் என்ற ஒரு வீரமிக்க அரசன் இருந்தான். பெலிஸ்தியர்கள் அவனோடு போரிட்ட போதெல்லாம் தானே யுத்தகளத்தில் குதித்துப் போரை நடத்துவான்.

இஸ்ரவேலர் யாவரும் அவரவர் தங்கள் மண்வெட்டிகளையும், கோடாரிகளையும், கடப்பாரைகளையும் தீட்டிக் கூர்மையாக்குவதற்கு பெலிஸ்தரின் உதவியை நாடவேண்டியிருந்தது. இஸ்ரவேல் மக்களில் ஒரு கொல்லன் கிடையாது. ஆகவே சவுலும் அவர் மகன் யோனத்தானையும் தவிர ஆயுதங்கள் கொண்ட வீரர் அவர்கள் படையில் இல்லை. பெலிஸ்தியர் இஸ்ரவேல் மீது படையெடுத்ததால் இஸ்ரவேல் மக்கள் பயந்து போயிருந்தார்கள். அறுநூறு படைவீரர் கொண்ட இஸ்ரவேலியப் படை சவுலின் தலைமையில் காத்திருந்தது. யோனத்தானும் அவன் சேவகனும் கூடாரத்தை விட்டு வெளியேறி எதிரிகளை ஒரு

நோட்டம் விட்டனர். எதிரிகள் ஒரு பள்ளத் தாக்கில் தங்கியிருந்தனர். மலையிலுள்ள ஒரு கணவாயை இரு வீரர்கள் காவல் புரிந்தனர். அந்தக் கணவாய் வழியாகப் போய் எதிரிகளை வீழ்த்த யோனத்தான் திட்டமிட்டான், உயரமான பாறைகளின்மேல் அமைந்த அந்தக் கணவாயை நோக்கி தவழ்ந்து தவழ்ந்து இருவரும் ஏறினார்கள். மேலே இருந்த சேவகர்கள் இவர்களைக் கண்டதும் 'மேலே வாருங்கள், உங்களுக்கு நல்ல பாடம் கற்பிப்போம்' என்று கேலி செய்தனர்.

ஆனால் யோனத்தானும் சேவகனும் தைரியமாகக் கடவுளின் பெலத்தால் முன்னேறினர். மேலே சென்றதும் இரு காவலாளிகளையும் கொன்று கணவாய் வாசலைப் பிடித்துக் கொண்டனர். இதைக் கண்ட பெலிஸ்தியர்கள் இஸ்ரவேல் படைகள் தங்கள்மேல் விழப் போகிறார்கள் என்று பயந்து, பின்னிட்டுப் பாராமல் ஓடிப் போய்விட்டனர். இப்படி ஓடிய பெலிஸ்திய வீரரைக்கண்ட இஸ்ரவேல் படையினர் மேன்மேலும் அவர்கள் பின்னால் ஓடி அவர்களை முறியடித்தனர்.

146. சவுலின் கீழ்ப்படியாமை

1 சாமு. 13,15

சவுல் தன் வெற்றியைக் குறித்து அதிக கர்வம் கொண்டான். மேன்மேலும் தன்னைப் பலப்படுத்திக் கொண்டான். அமலேக்கியர்கள் மேல் படை எடுத்து அங்குள்ள யாவற்றையும், ஆடு மாடு முதலாய் அழிக்கக் கடவுள் சவுலுக்குக் கட்டளையிட்டார். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது அமலேக்கியர் அவர்களுக்கு வழி மறித்தசெய்கையைக்கடவுள் மனதில் வைத்திருந்ததால் இப்படிக் கட்டளையிட்டார். ஆனால் சவுல் அமலேக்கியரை முறியடித்து அவர்களின் ஆடு மாடுகளில் சிறந்தவற்றை சொந்தமாக்கிக் கொண்டு வந்து விட்டான்.

கடவுள் பார்வையில் இந்தக் காரியம் சரியில்லாததாகக் காணப்பட்டது. அவர் சாமுவேலை அழைத்து சவுலிடம் எச்சரிக்கை செய்யும்படி சொன்னார். சாமுவேல் சவுலிடம் சென்று ''இஸ்ரவேலின் உண்மையான அரசன் கடவுள். இஸ்ரவேலை ஆளுகிறவர்கள் கடவுளின் சொல்படிதான் நடக்கவேண்டும். நீ கடவுளின் சொல்லை மதியாமல் ஆடு, மாடுகளை அழிப்பதற்குப் பதில் கடத்திக்கொண்டு வந்துவிட்டாய். இதனால் கடவுள் உனக்கு ஒரு கெட்ட செய்தி சொல்லச் சொன்னார். உனக்குப் பின். உன் பிள்ளைகள் அரசராக மாட்டார்கள் என்று சொன்னார். கடவுளுக்கு கீழ்ப்படியாவிட்டால் சாபம் தான். சவுல் கடவுளுக்குப் பலியிடுவதற்காக அவற்றில் சிறந்தவற்றை மட்டும் கொண்டு வந்ததாகக் கூறினான். ஆனால் பலியிடுவதைப் பார்க்கிலும் கடவுள் விரும்புவது கீழ்ப்படிதலையே என்று சாமுவேல் சொன்னார். கடவுள் சவுலுக்கு பதிலாக ஒரு புதிய அரசனை நியமிப்பார் என்றான்.

147. புதிய அரசன்

1 சாமு. 16

கடவுள் ஒரு புதிய அரசனைத் தெரிந்து கொள்ளும்படி பெத்லெகேமுக்கு போகும் படியாக சாமுவேலை ஏவினார். சாமுவேல் சவுல் தன்னைக் கொன்றுபோடுவானே என்று பயந்தான். ஆனால் சவுலுக்குத் தெரியாமல் போகும் படி கடவுள் சொல்ல சாமுவேல் புறப்பட்டு பெத்லெகேமில் ஒரு விருந்து ஆயத்தம்பண்ணி, யாவரையும் வரவழைத்தான். ஈசாய் என்பவர் குடும்பத்தினரோடு வந்திருந்தார். தன் மூத்த மகன் எலியாவை சாமுவேலுக்கு அறிமுகப் படுத்திய போது, இவன் தான் தெரிந்தெடுக்கப்பட்ட அரசனோ என்று கடவுளிடம் கேட்டான். கடவுள் இவன் இல்லை என்றார். இப்போல் ஈசாயின் மக்கள் ஏழுபேரையும் பார்த்தான். கடவுளின் சம்மதம் கிடைக்கவில்லை. வேறு பிள்ளை உண்டா என்று கேட்க, ஈசாய் எட்டாவதாக தாவீது என்று ஒரு மகன் இருப்பதாகவும் அவன் ஆடு மேய்ப்பதாகவும் கூறினான். அவனை அழைத்துவர ஆள் அனுப்பி அவன் வந்தபோது, சாமுவேல் அவன் சிவந்த மேனியும், அழகிய கண்களும், நல்ல ரூபமும் உள்ளவனாகக் கண்டான். கடவுள் இவனை அபிஷேகம் பண்ணும்படியாக உத்தரவிட்டார்.

சாமுவேல் தன்னிடமிருந்த ஒலிவ எண்ணெயை எடுத்து அவன் தலையில் தெளித்து கடவுளின் செய்தியை அதாவது அவன் இஸ்ரவேலின் அரசனாகப் போவதை அவன் காதுகளில் இரகசியமாகச் சொன்னார். கடவுள் அன்று முதல் அவனோடிருந்து அவனைப் பலப்படுத்தினார்.

148. கோலியத்தின் சாவல்

1 சாமு. 17

இஸ்ரவேலர்கள், பெலிஸ்தியரோடு தொடர்ந்து யுத்தம் தொடுத்துக் கொண்டே இருந்தனர். இரண்டு சேனைகளும் எதிர் எதிரான இரண்டு மலைகளின் மேல் பாளையம் இறங்கி இருந்தனர். நடுவிலே ஒரு பள்ளத்தாக்கு இருந்தது. ஈசாயின் மூத்த மக்கள் மூவரும் இஸ்ரவேலின் சேனையில் இருந்தனர். ஈசாய் போர் முனையிலுள்ள தன் மக்களைப் பற்றி மிக்க கவலை கொண்டான். அவர்களைப் பார்த்து சுகசெய்தி அறிந்து வர தாவீதை அனுப்ப ஏற்பாடு செய்தான். அவர்களுக்குக் கொஞ்சம் தின்பண்டங்களும், அதிகாரிகளுக்குக் கொஞ்சம் பாலாடைக் கட்டிகளும் எடுத்துக் கொண்டு தாவீது கிளம்பினான். பத்திரமாய்ச் சென்று சுகசெய்தி அறிந்து சீக்கிரமாய்த் திரும்பிவரும்படி புத்தி சொல்லி அனுப்பினான்.

தாவீது யுத்தகளத்தில் அணிவகுத்து நிற்கும் தன் சகோதரரைக் கண்டு நலம் விசாரித்தான். திடீரென்று ஒரு பெரிய சப்தம் கேட்டது. அனைவரும் அமைதியாயினர். பள்ளத்தாக்கில் ஆறு முழ உயரத்திற்கும் மேல் உயரமும் கனமான உருவமும் கொண்ட பெலிஸ்திய வீரன் தன்னோடு எதிர்த்து சண்டை போட ஆட்கள் முன்வரும்படி சவால் விடுத்துக் கொண்டிருந்தான். அவன் முழுவதும் ஆயுதங்கள் அணிந்த போர்வீரனாய் காணப்பட்டான். அனைவரும் அவனைக் கண்டு பயந்து அமைதியாயிருந்தனர். அவன் பெயர் கோலியாத்து.

கோலியாத் தன்னை எதிர்த்துச் சண்டையிட்டு வெற்றி பெறுகின்றவர்களுக்கு தான் அடிமை ஆகிவிடுவதென்று சவால் விட்டு போருக்கு அழைத்த வண்ணம் இருந்தான். ஒருவரும் அவனோடு போர் புரியத் தயாராயில்லை. தாவீது இந்த விநோதமான வீரனைக் கண்டான். இவன் என்ன நம் கடவுளைக் காட்டிலும் பெரியவனா என்று நினைத்தான். அரசனிடம் சென்று இவனோடு நான் சண்டையிட்டு இவனை ஜெயித்துக் காட்டுகிறேன் என்றான். சகோதரர் இவன் பேச்சைக் கேட்டு பயந்தனர். அரசன் ஆச்சரியப்பட்டான். நீயோ சிறுவன். கோலியாத் அனுபவசாலியான பலமுள்ள வீரன். உன்னால் எப்படி அவனை வெல்ல முடியும் என்று கேட்டான். அதற்கு தாவீது கடவுள் நம் பக்கம் இருக்கிறார். மேலும் சிங்கம் கரடியின் வாயிலிருந்து நான் ஆடுகளை அநேகம்தரம் மீட்டிருக்கிறேன்.

ஆகவே கடவுள் எனக்கு உதவி செய்து வெற்றி கொடுப்பார். நான் கோலியாத்தை வென்று விடுவேன் என்று கூறினான்.

149. தாவீதும் கோலியாத்தும்

1 சாமு. 17

சவுல் தாவீதை மேலும் கீழும் பார்த்தான். அவன் சரியாக பாதுகாக்கப்படவேண்டும். அதனால் சவுல் தன்னுடைய தலைக் கவசத்தையும், அவனுடைய கவச ஆடையையும் தாவீதுக்குக் கொடுத்தான். ஆனால் தாவீது பெரிய வாளைத் தன் இடையில் கட்டியவுடனேயே அவனால் நகரமுடியவில்லை. அவனால் மூச்சுகூட விட முடியவில்லை. இது நன்றாக இல்லை என்று கூறி 'நான் ஒரு வீரனும் அல்ல. இவைகளோடு போரிடவும் முடியாது. எனக்குத் தெரிந்ததும் நாம் நம்பக்கூடியதுமான ஆயுதத்தையுமே வைத்துப் போரிடமுடியும்' என்றான்.

உடனே அருகே இருந்த ஆற்றங்கரைக்குச் சென்று அங்கே தண்ணீரில் கிடந்த ஐந்து கூழாங்கற்களை வேகமாய் எடுத்தான். சவுல் இதைப் பார்த்துக் கொண்டே இருந்தான். தாவீது தன் பையில் இவற்றைப் போட்டுப் பின்னர் தன் தோல்பையையும், சரிபார்த்துக் கொண்டான். அவன் தன் கவணையும் கல்லையும் எடுத்துக் கொண்டு பெலிஸ்திய மாவீரனாகிய கோலியாத்தைச் சந்திக்கப் புறப்பட்டான். கோலியாத் எப்பொழுதும் போல் தன் அறைகூவலோடு முன்னே வந்தான். வழக்கத்திற்கு மாறாக பயந்து நடுங்கிப் பின் வாங்கும் இஸ்ரவேல் வீரர்களுக்கு மாறாக, ஒரு மனிதன் அவன் முன்னே வரக்கண்டான். தாவீதையும் அவன் எளிமையான தோற்றத்தையும் ஆயுதமில்லாதவனாக இருக்கவும் கண்டு அதிகமான கோபத்தினாலும், எரிச்சலினாலும் நிறைந்தான்.



தாவீதும் கோலியாத்தும் (1 சாமு. 17)

கோலியாத் தாவீதைப் பார்த்து, என்னோடு போருக்கு வருவதற்கு உனக்கு எவ்வளவு தைரியம்? எதற்காக கவணோடு வருகிறாய்? நான் என்ன நாயா? இன்னும் பக்கமாய் வா. உன்னைக் கொன்று உன் சடலத்தை பறவைகளுக்குப் போடுவேன் என்று தாவீதைச் சபிக்கத் துவங்கினான்.

உடனே தாவீது கோலியாத்தைப் பார்த்து, 'நீ உன் பட்டயம், ஈட்டி, உன் மிகுந்த பலத்தோடு என்னோடு போர் செய்ய வருகிறாய். நானோ, கர்த்தருடைய நாமத்தினாலே உன்னிடம் வருகிறேன். அவர் போர்வீரனைக் காட்டிலும் மகா பலசாலி. நீ அவரை அடிக்கடி சபிக்கிறாய். எல்லாரும் அவரே உண்மையான கடவுள் என்று அறியும்படிக்கு அவர் எனக்கு வெற்றியைத் தருவார் என்று கூறி, கூழாங் கல்லைக் கவணில் வைத்து, கோலியாத்தின் நெற்றியைக் குறிபார்த்து எறிந்தான். கோலியாத் நெற்றியில் கல்பட்டவுடனே கீழே விழுந்தான். தாவீது வேகமாய் ஓடி, அவன் வாளைப் பிடுங்கி அவனையும் கொன்றுவிட்டான்.

பெலிஸ்திய மகாவீரன் கோலியாத் இறந்துவிட்டான். உடனே யுத்தகளத்தை விட்டு பெலிஸ்தியர் ஓடோடி விட்டார்கள்.

150. சவுல் ராஜாவின் பொறுமை

1 சாமு. 16,18

சவுல் ராஜா, கடவுளுக்குக் கீழ்ப்படியாமல், தன் விருப்பப்படியாகவே நடந்தபோதும், அவன் மகிழ்ச்சியாயில்லை. கடவுள் அவனிடம் இப்போது இல்லை என்பதை அறிந்தான். அசுத்த ஆவி அநேகந்தரம் அவனை அலைக்கழித்தது. ஒரு நாள் சவுல் ராஜா மிகவும் கவலையோடு சோர்வுற்று இருந்தான், சுரமண்டல இசை அவனை உற்சாகப்படுத்தும் என்று கீதம் வாசிக்கும் ஈசாயின் மகனாகிய தாவீதுக்கு ஆள் அனுப்பினார்கள். தாவீதும் அரசரிடம் வந்து சேர்ந்தான்.



சவுலின் பொறுமை (1 சாமு. 16)

அவனைப் பார்த்த ராஜா, அவன்மீது விருப்பம் கொண்டான். அசுத்த ஆவி அலைக்கழிக்கும் போதெல்லாம் தாவீதின் இசை அவனை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. அப்போது தாவீது [illegible] பயிற்சிபெற்று, வீரனாகத் திகழ்ந்தான். தாவீது தன்னைவிட பெரும் புகழும்

பெறுகின்றான் என்று அறிந்த மாத்திரத்தில் ராஜாவின் மகிழ்ச்சி வெறுப்பாக மாறியது. சவுலும் தாவீதும் வெற்றிபெற்று வரும்போது, பெண்கள் ஆடிப்பாடி வரவேற்றபோது 'சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்' என்று ஆடிப்பாடி மகிழ்ந்தனர். உடனே ராஜாவுக்கு தாவீதின் மீது பொறாமையும் கோபமும் ஏற்பட்டது.

ஒரு நாள் சுரமண்டலம் தாவீது வாசிக்கும் போது சவுல் ஈட்டியை தாவீதின்மீது எறிந்தான். தாவீது தப்பினான். ஆனாலும் தாவீது சவுலுக்குப் பயப்படவில்லை. ஆனால் சவுலோ அதிகமாய்ப் பயந்தான். தாவீதோடே கர்த்தர் இருப்பதை சவுல் நன்கு அறிந்திருந்தான்.

151. ஆயுள் நண்பர்கள்

1 சாமு. 18,19

சவுல் ராஜா தாவீதை அதிகமாக வெறுத்த போதிலும், சவுலின் மகனான யோனத்தான், தாவீதை மிகவும் நேசித்தான். அவனும் ஒரு பெலசாலியாயும், வீரனாயும் இருந்ததினால், தாவீதின் வீரத்தை மெச்சி, அவனை அதிகமாக நேசித்தான். தாவீதும் யோனத்தானும் நெருங்கிய நண்பர்களாயிருந்தனர். யோனத்தான் தன் வாள், வில், அரைக் கச்சை யாவையும் தங்கள் நட்பின் அடையாளமாகக் கொடுத்தான். தாவீதின்மீது கொண்ட பொறாமை வளர்ந்து சவுலைப் பைத்தியமாக்கியது. அவனைக் கொன்றுவிட நினைத்தான். இதை அறிந்த யோனத்தான் தாவீதிடம் விரைவாகப்போய், தப்பிப்போகும்படி கூறி, சவுல் மனம் மாறும் மட்டும் தாவீதை ஒளிந்து கொள்ளும்படி கூறினான். சவுலிடம் தாவீதிற்கு எந்த தீங்கும் செய்யவேண்டாம் என்று கெஞ்சினான். மேலும் தாவீதின் வீரச் செயல்களையெல்லாம் எடுத்துக் கூறினான். இவைகளைக் கேட்ட சவுல் சற்றுநேரம் மௌனமாய் இருந்து பின் யோனத்தானை நோக்கி, 'தாவீதை இனி நான் கொல்வது இல்லை' என்று கடவுள்பேரில் சத்தியம் செய்தான்.

சவுலின் இந்த வார்த்தைகள் யோனத்தானுக்கு சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது. ஆகவே தாவீதை அரச சபைக்கு வரும்படி யோனத்தான் கூறினான்.



ஆயுள் நண்பர்கள் (1 சாமு. 18,19)

152. தப்பிய இரவு

1 சாமு. 19

பெலிஸ்தியர் மீண்டும் போருக்கு வரவே, தாவீது அவர்களைத் தோற்கடித்தான். இப்பொழுதும் சவுல் தாவீதைப் பாராட்டாது, அவனை வெறுத்தான். மறுபடியும் சுரமண்டலம் வாசிக்கும்போது ஈட்டியால் தாக்கினான். தாவீது தப்பி ஓடிவிடவே, வீரர்களை அனுப்பி அவன் வீட்டை வளைத்து அவனைக் கொன்று வரும்படிக் கட்டளை கொடுத்தான். சவுலின் மகளும் தாவீதின் மனைவியுமாகிய மீகாள், வீரர்கள் வீட்டை வளைந்திருக்கையில் அவன் தப்பிப்போகும்படி சன்னல் வழியாக இறக்கி விட்டுப் படுக்கையில் அவன் படுத்திருப்பது போல் போர்வையை மூடிவைத்துவிட்டாள். காலையிலும் போர்வீரர் உள்ளே வரவிடாது தடுத்துவிட்டாள். சவுல் தாவீதைக் கட்டிலுடன் தூக்கிவரும்படி கோபமாக கூறினான்.

உடனே போர்வீரர் தாவீதின் படுக்கை அறைக்குச் சென்றனர். படுக்கையில் வெறும் துணி பொட்டலமும், மூடிய போர்வையைப் பார்த்து, தாவீது தந்திரமாய்த் தப்பிவிட்டதைக் கண்டுகொண்டார்கள். தப்பிய தாவீது தான் ஒருநாள் ராஜாவாக ஆவேன் என்று சொன்ன சாமுவேலைச் சந்திக்கப் போனான்.

153. அபாய அடையாளம்

1 சாமு. 20

சாமுவேலைச் சந்தித்தபின் தாவீது யோனத்தானைச் சந்தித்து, ஏன் அவன் தகப்பன் தன்னைக் கொல்லப் பார்க்கிறான் என்று கேட்டான். உடனே யோனத்தான், தன் தகப்பனின் மன நிலையை அறிந்து சொல்லுவதாகக் கூறினான். அவர்கள் இருவரும் யாரும் தங்களைப் பார்க்காத வயல் பக்கம் போய் பேசிக்கொண்டிருந்தார்கள். யோனத்தான் தான் தாவீதை அவ்விடத்திலேயே ஒளிந்திருக்கும்படி கூறி, தான் தன் தகப்பன் மனதை அறிந்தபின் வில் அம்புடன் வந்து குறிவைத்து பழகுவதுபோல் அம்புகளை எய்து தன் வேலைக்காரனைப் பார்த்து, 'அம்பு உன் பக்கத்தில்தான் கிடக்கிறது' என்று கூறினால் ஆபத்து ஒன்றுமில்லை என்று அர்த்தம் என்றும், அம்பு தூரத்தில் உள்ளது என்றால் 'ஆபத்து நீங்கவில்லை, உயிருக்கு ஆபத்து என்றும் பொருள், என்று கூறினான்.

இதன்பின் இருவரும் பிரிந்தனர். யோனத்தான் தன் தகப்பனிடம் தாவீது அவர்மீது கொண்டுள்ள பக்தியையும், அன்பையும்பற்றிக் கூறி அவரை சமாதானப்படுத்தலாம் என்று நம்பிப் பேசினான். ஆனால் சவுலோ அதிக கோபம்கொண்டான். தாவீது சாகவே சாக வேண்டும் என்று கத்தினான். தாவீது ஏன் சாகவேண்டும் என்று கேட்டபோது, அதிக மூர்க்கம் கொண்டவனாக சவுல் யோனத்தானின் மீது ஈட்டியை எறிந்தான். யோனத்தான் கோபமாய் வெளியேறினான். வயல் வெளிக்குச் சென்று, அம்பினை எய்து, தன் வேலைக்காரனை நோக்கி, 'அம்பு தள்ளி விழுந்து கிடக்கின்றது' என்று கூறினான். உடனே வேலைக்காரன் அம்பினை எடுத்துவரச் சென்றான். வேலைக்காரனை வீட்டிற்கு அனுப்பி விட்டு, யாரும் தங்களைப் பார்க்கவில்லை என்று அறிந்து ஒளிந்திருந்த தாவீதிடம் சென்று, 'நீ ஒருநாள் இராஜாவாக ஆவாய்' என்று கூறி, அப்போது என்னையும், என் குடும்பத்தையும் நன்றியோடு காக்கும்படிக் கேட்டு, கடவுள் எப்போதும் தாவீதோடே இருப்பார் என்றும் கூறி, அதிக விசனத்தோடு வாக்குறுதி கொடுத்து தன் அரண்மனைக்கு யோனத்தான் போனான். தாவீது எங்குபோவது என்று அறியாதவனாய், ஒளிந்திருப்பதே நல்லது என்று நினைத்தான்.

154. ஆகாரமும் ஆயுதமும்

1 சாமு. 21

தாவீது இவ்வாறு ஒளிந்திருக்கையில், அவனிடம் ஆகாரமோ, ஆயுதமோ இல்லை. எங்கும் போகத் துணியாமல் இருந்தான். அதன்படி நோபி என்னுமிடத்தில் இருக்கும் கடவுளின் ஆசாரியர்கள் நம்பத்தகுந்தவர்கள் என்றும், அங்கேதான் பத்திரமாக இருக்கலாம் என்றும் நினைத்தான். ஆசாரியனுகிய அகிமலேக்கு தாவீது வருவதைப் பார்த்து விரைந்து அவனுக்கு எதிர்கொண்டு போனுன். தாவீதைப் பார்த்து உன்னுடைய மனிதர்கள் எங்கே என்று அகிமலேக்கு கேட்டான். தாவீது பயத்தால் உண்மையைச் சொல்லவில்லை. தனக்கு ஆகாரமும், ஆயுதங்களும் தந்து உதவும்படியும் கேட்டான். அதற்கு அகிமலேக்கினிடம் சாப்பிட ரொட்டி இல்லை என்றும், தன்னிடம் ஆசாரியர் மட்டும் சாப்பிடத் தக்க ரொட்டி மட்டுமே உள்ளது என்று கூறினுன். அவசரமாக இருப்பதால் ரொட்டிகளைத் தரும்படி கூறினுன். அகிமலேக் அந்த ரொட்டிகளைத் தருவதாகக் கூறியவுடன் தாவீது அவனிடம் ஆயுதங்கள் இருக்கிறதா என்று வெகு ஆவலாய்க் கேட்டான். அகிமலேக்கு அதைக் கேட்டு சிரித்துவிட்டு கடவுளின் சன்னிதானத்தில் ஆயுதங்களை நாங்கள் வைப்பதில்லை. ஆனுல் கடவுள் உன் மூலமாய்க் கொடுத்த வெற்றியில் நீ கோலியாத்திடம் இருந்து எடுத்து வந்த அந்த ஞாபகார்த்தமான வாள் இங்கு வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னுன். உடனே தாவீது அதை தனக்குத் தரும்படிக் கேட்டான். உடனே அகிமலேக்கு வாளை தாவீதுக்குக் கொடுத்தான். சாப்பிட ஆகாரமும் தன்னைக் காத்துக்கொள்ள வாளும் கிடைத்தவுடன் அவைகளுடன் தாவீது தன் வழியே புறப்பட்டான்.

அகிமலேக்கு தவிர மற்றவர்களும் தாவீதைப் பார்த்தார்கள். அவன் பேசியவற்றையும் அவர்கள் கவனித்தார்கள்.

155. கட்டுக்கதை

1 சாமு. 22

சுற்றித் திரிந்த தாவீது ஒரு பெரிய குகையைத் தன் தலைமையகமாக ஏற்படுத்திக் கொண்டு அங்கே தங்கினுன். அநேகர் அவனுடன் தொடர்புகொண்டனர். சிலர் தங்கள் எஜமானின் கொடுமைக்கு ஆளானவர்கள். சிலர் கடன் தொல்லையால் பாதிக்கப் பட்டவர்கள். சிலர் சூதாடிகள். சிலர் நொந்து போனவர்கள். தாவீது அவர்கள் அனைவரையும் தன்னிடம் விசுவாசமுள்ளவர்களாகவும், வீரம் நிறைந்தவர்களாகவும் மாற்றினுன்.

தாவீதைக் கண்டுபிடிக்க முடியாத சவுல், தன் வீரர்களைச் சந்தேகித்து, தாவீதை கண்டுபிடித்துக்கொடுக்க யாராலும் முடியாதா என்று குற்றப்படுத்தினுன். உடனே பிரதானியான தோவேக் முன்வந்து தான் தாவீதைப் பற்றிய தகவல் ஒன்றைக் கூறப்போவதாக ஆரம்பித்தான். அதைக்கேட்ட சவுலின் முகம் மகிழ்ச்சியால் பிரகாசித்தது. தோவேக் தாவீது அகிமலேக்கை சந்தித்தது முதல் நடந்த யாவையும் கூறினுன். சவுல் மிகவும் கோபமடைந்தான். அகிமலேக்கை உடனே கொண்டுவருமாறு கட்டளையிட்டான். அகிமலேக், சவுலின் வேலைகளை தாவீது செய்ய வந்திருக்கிறுன் என்று நினைத்துதான் உதவி செய்ததாகக் கூறினுன். சவுல் உடனே அவர்களைக் கொன்றுவிட ஆணையிட்டான். அகிமலேக்கின் மகன் அபியாதார் மாத்திரம் தப்பி ஓடி, தாவீதிடம் நடந்ததைக் கூறினுன். தன்னுல் அவன் குடும்பம் கொல்லப்பட்டதை அறிந்த தாவீது, மனம் வருந்தி, தோவேக் சவுலிடம் கட்டுக்கதைகளைச் சொல்வான் என்று கூறி, அபியாதாரைத் தன்னுடன் தங்கியிருக்கும்படி கூறினுன்.

156. கண்ணும்பூச்சி

1 சாமு. 24,26

தாவீது சவுலுக்குப் பயந்து அடிக்கடி இடத்தை மாற்றிக்கொண்டு ஒளிந்து கொண்டிருக்கும்போது பாலைவனத்தில் சவுலும், அவன் வீரர்களும் தாவீதை வளைத்துக் கொண்டனர். அத்தருணத்தில் சவுலை எதிர்த்துப் போரிட பெலிஸ்தியர் வந்து விட்டார்கள் என்ற அவசர செய்தி சவுலுக்குத் தரப்பட்டது. உடனே சவுல் வீரர்களோடு தங்கள் நகரத்திற்கு விரைந்து திரும்பினர். தாவீதும் காப்பாற்றப்பட்டான்.

தாவீதும், அவன் மனிதர்களும் குகைகளில் ஒளிந்துகொண்டார்கள். அங்கே நல்ல நீர் நிலை ஒன்று இருந்தது. இளவயதான தாவீதும், அவன் ஆட்களும் இருக்கையில் ஒருநாள் சவுலின் வீரர்கள் அவர்களை நெருங்கிவிட்டனர். அங்கு வந்த சவுல் குகைக்குள் நுழைந்தான். குகையினுள் இருந்த தாவீதையும், அவன் மனிதர்களையும் அவனால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. சவுலைக் கொன்று விடும்படி தாவீதின் மனிதர் கூறினார்கள். தாவீதோ அப்படிச் செய்யாமல், சவுலின் அங்கியின் ஓரத்தை வாளால் வெட்டி எடுத்துக் கொண்டு மீண்டும் பதுங்கி, இருந்த இடத்திற்குத் திரும்பினான். சவுல் ஒன்றையும் அறியவில்லை. அவனைத் தாவீது விரைந்து தொடர்ந்து என் ராஜாவே என்று கூப்பிட சவுல் திரும்பிப் பார்த்து தாவீதைக்கண்டு ஆச்சரிப்பட்டான். உடனே தாவீது சவுலை வணங்கி, 'அரசே நான் உங்களுக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டேன்' என்று சொல்லி, சவுலின் அங்கியில் வெட்டப்பட்ட துண்டைக் காண்பித்தான். அப்போது சவுல் தான் தாவீது மீதுகொண்ட மூர்க்கமான கோபத்தை நினைத்து வெட்கப்பட்டு அழுதான். அவன் கண்ணீர் வடித்தான். சவுல் தாவீதைப் பார்த்து, 'உனக்கு விரோதமாகக் குற்றம் செய்தேன். நீ ஒருநாள் ராஜாவாக ஆவாய், அப்போது என் குடும்பத்திற்கு இரக்கம் காட்டு' என்று சொல்லி வருத்தத்துடன் தன் அரண்மனைக்குத் திரும்பினான்.

ஆனாலும் சவுலின் கோபம் தன்னைவிட்டு முற்றிலுமாய் நீங்கவில்லை, மீண்டும் தன்னைச் சவுல் தொடர்வான் என்று தாவீது உணர்ந்து கொண்டான்.

157. அபிகாயில்

1 சாமு. 28

சவுல் ராஜாவிற்குப் பயந்து, ஓடி ஒளிந்து கொண்டிருந்த தாவீதும், அவன் நண்பர்களும் தங்கள் மறைவிடத்தின் அருகில் இருந்த மேய்ப்பர்களையும், அவர்கள் மந்தைகளையும் நட்புணர்வுடன் நடத்தினர்.

ஒரு சமயம் தாவீது ஒளிந்திருக்கும் பகுதியில் உள்ள பணக்காரனான நாபால் ஓர் விருந்து நடத்தினான். அதை அறிந்த தாவீது, உண்ண ஆகாரம் கிடைப்பது கடினமாக இருந்ததால், தன் ஆட்களை நாபாலிடம் அனுப்பினான். அவர்கள் தாவீதின் வாழ்த்துக்களை நாபாலுக்குத் தெரிவித்தனர் மேலும் தாவீதும், அவன் மனிதர்களும் எவ்விதமாய்த் தங்களிடம் அன்பாய் இருக்கிறார்கள் என்றும், அங்கே உணவு உண்பதற்குக் கிடைப்பது சிரமம் என்றும், நாபால் தரக்கூடியதை தாங்கள் உண்ணத் தரவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டான். அதைக்கேட்ட நாபால் அவர்கள் மீது கோபம்கொண்டு, தனக்குத் தாவீதைப் பற்றித் தெரியாது எனக் கூறி, என் நல்ல உணவை நாடோடிக்கும் அவன் மனிதருக்கும் கொடேன் என்று கூறினான்.

தாவீது இதைக் கேட்டவுடன் மிகுந்த கோபம்கொண்டு, தான் யார் என்பதைத் தெரிவிக்க ஆயுதங்களோடு புறப்படும்படி மனிதர்களுக்குக் கட்டளை கொடுத்தான். நாபாலின் மேய்ப்பர்களில் ஒருவன் தன் எஜமான் தாவீதின் உதவிகளை மறந்து அவனையும் மதிக்காமல் பேசியதையும், இரவும் பகலும் அவர்கள் எப்படி தங்களுக்கும், தங்கள் ஆடுகளுக்கும் காவலாய் இருந்தார்கள் என்பதையும், தாவீது கோபத்தோடே இப்போ வருகின்றதையும் நாபாலின் மனைவியிடம் கூறினார்கள். உடனே அதைக்கேட்ட அபிகாயில் தாமதிக்காமல் ரொட்டித் துண்டுகளையும், வறுத்த கறித்துண்டுகளையும், திராட்சை ரசத்தையும், அத்திப்பழ அடைகளையும் எடுத்து அவைகளைக் கழுதைகளில் ஏற்றி தன் வேலையாட்களோடு அவளும் தாவீதை சந்திக்கச் சென்றாள். அவள் தாவீதைப் பார்த்து உடன் தன்

கழுதையிலிருந்து இறங்கி அவனை வணங்கினாள். தாவீதிடம் தன் கணவனின் மதிகெட்ட செயலை மன்னித்து விடுமாறும், பழிவாங்க வேண்டாம் என்றும், தான் நன்றியுடன் செலுத்தும் காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளும்படி கெஞ்சினாள். அபிகாயிலுக்கு அவள் குடும்பத்திற்கு எந்தத் தீங்கும் தான் செய்யப்போவதில்லை என்று தாவீது மகிழ்ச்சியோடு சத்தியம் செய்து கொடுத்தான். அபிகாயில் அடுத்தநாள் காலையில் தன் கணவனிடம் நடந்த யாவற்றையும் கூறினாள். இதை அறிந்த நாபால் பத்து நாட்கள் வியாதியாய் இருந்து பின் செத்துப்போனான். பின் தாவீது அபிகாயிலை மணந்து கொண்டான்.

158. நாளை உன் மரணம்

1 சாமு. 28

சாமுவேல் முதிர் வயதில் மரணமடைந்தார்.

சவுல் ராஜாவும், தாவீதும் தீர்க்கதரிசியான சாமுவேலின் மரணத்தைக் குறித்து வருத்தப்பட்டார்கள். கடைசியாகச் சவுல் சாமுவேலை சந்தித்தபோது மனத்தாங்கல் ஏற்பட்டிருந்த போதிலும் சவுல் சாமுவேலை நினைத்துக் கவலைப்பட்டான்.

சவுலைப் பிடித்திருந்த அசுத்த ஆவி அவனை வெறி பிடித்தவனாய் மாற்றியது. மேலும் பெலிஸ்தியர் மீண்டும் யுத்தத்திற்கு வருகின்றனர் என்று சவுல் கேள்விப்பட்டபோது மிகவும் தளர்ந்தான். தனக்கு உதவுவார் இல்லையே என்றும் ஏங்கினான். கடவுளிடம் வேண்டினான். கடவுள் தன்னைக் கைவிட்டார் என்பதை அறிந்தான். சவுல் கானானில் உள்ள மீதியானியர் இறந்தவர்களின் ஆவிகளை வரவழைக்கும் பழக்கத்தைத் தடை செய்து வைத்திருந்தான்.

ஆனால் இப்போதோ சவுல் எந்தோரில் அவர்கள் இருப்பதை விசாரித்துத் தெரிந்துகொண்டான். மாறு வேடம் தரித்து, எதிரிகளைக் கடந்து செல்ல இரவோடு இரவாகச் சென்றான்.

சவுலைப் பார்த்த மீதியானியப் பெண் அவனை வேவுகாரன் என்றும், இராஜாவிடம் காட்டிக் கொடுத்துவிடுவான் என்றும் நினைத்தாள். உடனே பயத்தால் தன்னை அறியாமல் கத்தினாள். உடனே சவுல்தான் அவளுக்கு எந்தத் தீங்கும் செய்வதில்லை என்றும் சத்தியம் செய்து, இறந்துபோன சாமுவேலின் ஆவியை வரவழைக்கும்படி அவளைக் கேட்டுக்கொண்டான்.

அவள் சாமுவேலைக் கூப்பிட்டாள். அது சாமுவேல் என்று சவுல் கண்டுகொண்டு, 'நான் என்ன செய்வேன் கடவுள் என்னைக் கைவிட்டுவிட்டாரே' என்று கத்தினான். அப்போது சாமுவேலின் ஆவி அவனைப் பார்த்து, 'நீ கடவுளின் வார்த்தையை மிறி உன் சுய வழியில் நடந்து உன் அழிவை நீயே தேடிக்கொண்டாய். ஆகையால் நீயும் உன் மகனும் நாளை காலையில் இறந்துபோவீர்கள்' என்று சொன்னது. இதைக் கேட்டவுடன் சவுல் பயந்து, செயலற்றவன் ஆனான். இவைகளைப் பார்த்த அவள், சவுலை படுக்க வைத்துவிட்டு அவனுக்கும் அவனுடன் வந்தவர்களுக்கும் ஆகாரம் தயாரித்தாள். சவுல் சாப்பிட்டு சற்று இளைப்பாறிவிட்டுத் தள்ளாடிக்கொண்டே இஸ்ரவேலின் படைகளின் முகாமிற்குப் புறப்பட்டான்.

159. பகைவருடன் தாவீது

1 சாமு. 27,29

சவுலின் கைக்குத் தப்பி அலைந்த தாவீதும் சவுலைப்போலவே தவிப்படைந்தவனாய் என்றாலும் ஒரு நாள் சவுல் தன்னைக் கொன்றுவிடுவான் என்றும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தகுந்த இடம் பெலிஸ்தியர் நாடு என்றும் எண்ணினான். சவுல் மீதியான் தேசத்திற்கு போவதற்குமுன் ஒரு வருடம் தாவீது பெலிஸ்தியாவில் இருந்தான்.

பெலிஸ்தியாவை ஆளுகை செய்தவர்களில் ஒருவனான அக்கீஸ் தாவீதுமீது பாசம்கொண்டவனாக இருந்தான். அவன் தாவீதிடமும், அவன் மனிதர்களிடமும் நல்லுறவு கொண்டு சிக்லாக் என்ற இடத்திலுள்ள கோட்டையை அவர்கள் வசிக்கக் கொடுத்தான். அங்கிருந்து கொண்டு தாவீது தான் கைப்பற்றிய பொருட்களை எல்லாம் அக்கீஸிற்குக் கொடுத்தான்.

அவைகளைத் தாவீது பெலிஸ்திய வட்டாரங்களில் கொள்ளை அடித்திருந்தான்.

இஸ்ரவேலருடன் பெலிஸ்தியர் போருக்குச் செல்கையில் அக்கீஸ் தாவீதைத் தன் பாதுகாவலனாய் இருக்கும்படி கேட்டான். அப்படியே தன் ஜனத்திற்கு விரோதமாக தான் போர் செய்ய ஆயத்தப்படுவதுபோல் பாசாங்கு செய்தான். உண்மை நிலையை அக்கீஸிற்கு தாவீதால் சொல்ல முடியாத நிலையிலிருந்தால் அவ்வாறு செய்தான். போர் துவங்கியபோது தாவீதும் அவன் மனிதர்களும் தங்கள் குடும்பங்களைச் சிக்லாவில் விட்டுவிட்டு போரின் முன்னணிக்குச் சென்றார்கள். தாவீதையும், அவன் ஆட்களையும் கண்ட பெலிஸ்திய வீரர்கள் கலக்கமடைந்தனர். அவர்கள் அக்கீஸிடம் தாவீது இங்கு என்ன செய்கிறான் எனக் கேட்டார்கள். அதற்கு அக்கீஸ், தாவீதும், அவன் ஆட்களும் தன்னிடம் அன்பாக இருக்கிறார்கள் என்றும் பயப்படவேண்டாம் என்றும் கூறினான். தாவீதை உடனே அனுப்பிவிடுமாறு கூறினார்கள். அதைக் கேட்ட அக்கிஸ் மனதில்லாமல் தாவீதை அழைப்பித்து, தனக்கு அவன்மீதுள்ள நம்பிக்கையைக் கூறி, ஆனால் அவன் ஆட்களுக்கு அவன்மீது நம்பிக்கையில்லை என்பதையும் கூறி, சிக்லாகிற்குப் போகுமாறு கூறினான். உண்மையில் தாவீது மகிழ்ச்சி அடைந்தான். ஆனால் பெருத்த ஏமாற்றம் அடைந்தவனைப்போன்று பாவனை செய்து, தாவீது திரும்பினான். கடவுள் இவ்வாறு தாவீதைக் காப்பாற்றியதற்குத் தகுதியற்றவனாய் அவன் இருந்தாலும் கடவுள் அவனைக் காப்பாற்றினார்.

160. எல்லாம் அழிந்தது

1 சாமு. 30

தாவீதும், அவன் மனிதர்களும் இரண்டு நாட்கள் சோர்வுற்றவர்களாய் நடை தளர்ந்து சிக்லாகிற்குத் திரும்பினார்கள். அவர்கள் நகரத்திற்குப் பக்கமாய் வரும்போது நகரம் அக்கினியால் சுட்டெரிக்கப்படுவதைப்போன்று தொலைவில் பெரிய புகையும், மணமும் வந்தது. உடனே தங்கள் பயண முடிவில் என்ன நடக்குமோ என்று கதிகலங்கி விரைவாக ஓட ஆரம்பித்தார்கள். அவர்கள் வந்து பார்த்தபோது, அவர்களை வரவேற்க குடும்பத்தினர் ஒருவரும் வரவில்லை. ஒரு மிருகம்கூட கண்ணில் தென்படவில்லை. எரிந்து கருகிக் கிடந்த பொருட்களையே நகரில் கண்டார்கள். தங்கள் மனைவிகளுக்காகவும், பிள்ளைகளுக்காகவும் அழுது கூச்சலிட்டார்கள். பதில் கொடுக்க அங்கு ஒருவருமே இல்லை.

கவலையினாலும், களைப்பினாலும் அதிகமாக அழத் தொடங்கினர். அவர்கள் அழுது முடித்த பின்பு மிகுந்த கோபத்தோடு தாவீதிடம் சென்று, அவன்மீது கல்லெறியக் கற்களை எடுத்தார்கள். இதுவரை தாவீதை உண்மையோடு பின்பற்றி வந்த மனிதர்கள் இப்போது தங்கள் தலைவன்மீதுள்ள நம்பிக்கையை இழந்தனர். அவர்களுக்கு மிகப் பெரிய அழிவைக் கொண்டு வந்தான் என்று நினைத்தனர். தங்கள் போரில் இருந்த நேரத்தில் நகரத்தையும், மனைவி பிள்ளைகள் எல்லாவற்றையும் சூறையாடி, தரைமட்டமாக்கிவிட்டனர். என நினைத்தனர்.

தாவீது அதிகக் கவலைக்குள்ளானான். சவுல் நோபாவைக் கொன்றபோது, அவ்விடத்திலிருந்து தப்பி வந்த அபியத்தார் இன்னும் தாவீதோடே இருந்தான். தாவீது அபியத்தாரை நோக்கி, நான் செய்யவேண்டுவது யாது என்பதை தேவனிடத்தில் எனக்காகக் கேள் என்றான் 'கொள்ளைக்காரர்கள் பின்னால் போவாயாக' என்பதே கர்த்தரின் கட்டளை என அபியத்தார் கூறினான். உடனே தாவீது அதிக பெலமடைந்தவனாய், கொள்ளைக்காரரைத் தேடும்படிக்கு தன் மனிதர்களுக்குக் கட்டளையிட்டான். அந்த மனிதர்கள் மீண்டுமாய்த் தாவீதின் பின் சென்றனர்.

இவ்வாறு அவர்கள் பிசோர் ஓடை அருகே வருகையில் அதிகக் களைப்படைந்ததால், அவ்வோடையைக் கடக்கவும், தொடர்ந்து செல்லவும் கூடாதவர்களாயிருந்தார்கள். அப்போது தாவீது அவர்களைச் சுமந்து வந்த பளுவான சுமைகளை எடுத்துக்கொண்டு தொடர்ந்து வரும்படி கூறினான். அதன்படி இருநூறு மனிதர்கள் அங்கே தங்கிவிட்டனர். மற்றவர்கள் ஓடையைக் கடந்து தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

161. சிறுவனைக் காப்பாற்றுதல்

1 சாமு. 30

தாவீதும் அவனுடன் அவன் மனிதர்
நானூறு பேரும் தொடர்ந்து செல்கையில் வழி
யருகே ஒரு சிறுவன் கிடப்பதைப் பார்த்தார்
கள். அச்சிறுவன் இறந்து கிடக்கிறான் என்று
நினைத்தனர். மற்றொருவன் அவன் பசி மயக்
கத்தால் கிடக்கிறான் என்று கூறினான். அவர்கள்
அச்சிறுவனை தாவீதிடம் தூக்கி வந்தார்கள்.
அங்கு அவனுக்கு ஆகாரமும், தண்ணீரும்
கொடுக்கப்பட்டது. அதன்பின் அச்சிறுவன்
புத்துயிர் பெற்றவனாய் எழுந்து உட்கார்ந்
தான். உட்கார்ந்து தான் இப்போது தெளி
வாக இருப்பதையும் மூன்று நாட்கள் உண
வில்லாததால் தனக்கு இந்நிலை ஏற்பட்டது
எனவும் கூறினான். தாவீது அவனை நோக்கி
எங்கிருந்து வருகிறாய்? எனக் கேட்டான்.
அதற்கு அச்சிறுவன் தான் எகிப்து நாட்டவன்
என்றும், அமலேக்கியரின் அடிமை என்றும்,
தன் எஜமான் சிக்லாகின்மீது போர் தொடுத்
துப் போகும் வழியில் தான் சுகவீனப்பட்ட
தால் விட்டுச் சென்றதாகவும் கூறினான்.
உடனே தாவீது அவன் காதைத் திருகி அவன்
தங்களுக்கு உபயோகமான தகவலைத் தரக்
கூடும் என்று நினைத்தான். பின்பு அவனைப்
பார்த்து, சிக்லாகின்மீது படை எடுத்தவர்கள்
எங்கு இருக்கிறார்கள் என்று அவனிடம் கேட்க,
அச்சிறுவன் தன்னை அவன் எஜமானனிடம்
ஒப்படைக்கவில்லையானால், அவர்களிடம் கூட்
டிச் செல்வதாகவும் பயந்துகொண்டே சொன்
னான். இதைக் கேட்ட தாவீதும், மற்றவர்
களும் அப்பையனைத் தொடர்ந்து சென்றனர்.
அச்சிறுவனுக்கு அவர்கள் காட்டிய அன்பிற்குத்
தகுந்த வெகுமதி கிடைத்தது. திறந்த வெளி
யில் குடித்தும், வெறித்தும், உணவருந்திக்
கொண்டிருந்த அமலேக்கியரிடம் வந்து சேர்ந்

தாவீது வெகு தொலைவில் இருக்கிறான்
தனர். தாவீது வெகு தொலைவில் இருக்கிறான்
என்று கருதிய அவர்கள் பாதுகாவலர்களைக்கூட
நிறுத்தாது, கவலையற்று இருந்தனர். அவர்
களைப் பார்த்த தாவீது ஏற்ற வேலைக்காகக்
காத்திருந்தான். அதிகாலை வேளையில் அமலேக்
கியர் உண்ட மயக்கத்தில் தூங்கிக்கொண்
டிருக்கையில், தாவீதும், அவன் மனிதர்களும்
அவர்களைத் தாக்கி, அவர்களைப் பிடித்து வந்த
தங்கள் மனிதரை விடுவித்ததோடல்லாமல்
அவர்கள் பொருட்களையும் கொள்ளை அடித்
தார்கள். மீட்கப்பட்ட குழந்தை, தாய்மார்
களும், மனைவிகளும் தங்கள் தகப்பன்
மார்களைப் பார்த்து நன்றி தெரிவித்தனர்.
எல்லாருமாக சிக்லாகிற்குப் புறப்பட்டனர்,
திரும்பும் வழியில் போசோர் ஓடை அருகே.
அவர்களுக்காகக் காத்திருந்த தங்கள் மனித
ரைச் சந்தித்தார்கள். அப்போது தாவீதுடன்
வந்த மனிதர்களில் சிலர் அப்படிக் காத்துக்
கொண்டிருந்த மற்றவர்களுக்கு அவர்களுடைய
பிள்ளைகளையும், மனைவியையும் மட்டுமே
திரும்பத் தரவேண்டும் என்றும், பொருட்கள்
எதனையும் கொடுக்கக் கூடாதென்பதையும்
தாவீதிடம் இரகசியமாய்க் கூறினார்கள். ஆனால்
தாவீதோ கிடைத்த வெற்றியும், பொருட்
களும் கடவுள் தங்களுக்குத் தந்தது என்றும்,
தங்களோடு வராது, சுமையைக் காத்துக்
கொண்டிருந்த மக்களுக்கு சரி பங்கு தர
வேண்டும் என்றும், சமமாகப் போர் செய்த
வர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோலவே அவர்
களுக்கும் பங்கு தரப்படவேண்டும் என்றும்
கூறினார். அப்போது யாவரும் சந்தோஷம்
அடைந்தார்கள். தாவீதும் மகிழ்ச்சிகொண்
டான். மனப்பாரம் நீங்கியது அவன் கஷ்டங்
களுக்கு ஓர் முடிவு வந்தது என நினைத்தான்.

162. ஒன்று சேர்த்த மரணம்

1 சாமு. 31; 2 சாமு. 1

எந்தோரில் குறி சொல்லும் மீதியாளைச்
சந்தித்தபின் தன் படையுடன் வந்து சேர்ந்த
சவுல், பயத்தாலும் கவலையாலும் பாதிப்
பட்டான். ஆகவே மறு நாள் இஸ்ரவேலர்
தோற்றதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அப்
போரில் இஸ்ரவேல் வீரர்கள் பலர் கொல்லப்
பட்டனர். சவுலும் அவன் குமாரரும் தப்பி
ஓடினார்கள்.

உயிருக்குப் பயந்து ஓடிவிட்டார்கள். ஆனால்
பெலிஸ்தியர் அவர்களைத் தொடர்ந்து பிடித்துக்
கொன்று போட்டனர். நகரில் வசிக்கும் இஸ்ர
வேலர் அச் செய்தியைக் கேட்டுப் பயந்து,
தங்கள் வீடுகளை விட்டு ஓடிப்போனார்கள்.
வெற்றிகொண்ட பெலிஸ்தியர் அவர்களின்
நகரங்களைக் கைப்பற்றினார்கள். மறு நாள்
சிக்லாகில் இருந்த தாவீதுக்கு சவுலும் யோனத்
தானும் இறந்துபோன செய்தி அறிவிக்கப்

பட்டது. அப்போது தாவீது தன்னுடைய நல்ல நண்பனுகிய யோனத்தான் இறந்ததைக் குறித்து மிகவும் கவலையடைந்தான். சவுலுக்கு பொறுமையும், தீய ஆவியும் வருவதற்குமுன் சவுலுடன் கழித்த நல்ல நேரத்தை தாவீது நினைத்துப் பார்த்தான். தாவீதிற்கு அவர்களை மறக்கவே முடியவில்லை. ஆதலால் அவர்களைப் பற்றியும் இப்போதும் மக்கள் அறியும்படியாக, புலம்பல் பாட்டு ஒன்றினைத் தாவீது எழுதினுன் அப்பாடலாவது;

'இஸ்ரவேலின் மலைகளே, இறந்தாரே நம் தலைவன், வீரம்கொண்ட போர் வீரரும் மடிந்தாரே. அரிதும் அருமையும் கொண்டவரே சவுலும் யோனத்தானும் இணைந்தனரே வாழ்விலும், இறப்பிலும், கழுகின் வேகமும், சிங்கத்தின் வலிமையும் கொண்டவரே, அவ்விருவர், மலையில் மடிந்தாரே, யோனத்தானே உனக்காகக் கலங்குகின்றேன். என் உடன் பிறப்பாம் யோனத்தானே என்மீது நீ கொண்ட அன்பும் ஓர் அதிசயமே பெண்ணின் அன்பிலும் மேம்பட்டதல்லோ? உன் அன்பு வீரரும் சாய்ந்தனரே. அவர் தம் ஆயுதமும் அழிந்ததே' எனப் பாடினுன்.

163. தாவீது அரசன் வாழ்க

2 சாமு. 2–5

சவுல் மரித்தபின்பு, தாவீது இஸ்ரவேலுக்குத் திரும்பினுர். கடவுள் அவனிடம் யூதேயா பட்டணங்களில் ஒன்ருகிய எப்ரோனுக்கு போகும்படிக் கட்டளையிட்டார். மக்கள் அவரை சந்தோஷமாக வரவேற்று அரசனுக்கினுர்கள்.

இதே நேரத்தில் சவுலின் தளபதியாகிய அப்னேர் என்பவன் சவுலின் கடைசி மகனுன இஸ்போசேத் என்பவனை கையோடு அழைத்துக் கொண்டு இஸ்ரவேல் நாட்டின் வட பகுதிக்குச் சென்று அவனை அங்கு அரசனுக பிரகடனம் செய்துவிட்டான். கொஞ்ச நாட்களுக்கு இஸ்ரவேலின் வட பகுதிக்கு இஸ்போசேத்தும் தென் பகுதிக்கு தாவீதும் அரசனுனுர்கள்.

தாவீதின் படைத் தலைவனுன யோவாபும் சவுலின் படைத் தலைவனுன அப்னேரும் ஒருவருக்கொருவர் விரோதமான எண்ணம் கொண்டவர்கள் யோவாபு தாவீதே இஸ்ரவேல் முழுவதும் அரசாளவேண்டும் என்று விரும்பினுன். அதேபோல் அப்னேரும், இஸ்போசேத் முழு இஸ்ரவேலையும் அரசாள வேண்டும் என விரும்பினுன். ஆகவே ஒவ்வொரு பக்கத்திலும் பன்னிரெண்டு படை வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் போர் செய்தனர். யார் வெற்றியடைகிருர்களோ, அவர்களின் அரசன்தான் இஸ்ரவேல் முழுவதும் ஆட்சி செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.

கடுமையான சண்டை ஆரம்பமானது. ஆனுல் அது தீவிரமாகி இரண்டு பக்கத்து சேனைகளும் யுத்தத்தில் இறங்கின. யுத்தம் பல நாட்கள் தொடர்ந்தது. இதில் தாவீதின் வீரர்கள் மென்மேலும் பெலனடைந்து வர எதிரிகள் பலம் குன்றிப்போயினர். இறுதியில் அப்னேர் பின்வாங்கிப் போய்த் தாவீதின் படையில் சேர்ந்துகொண்டான். தாவீது இவனை சேர்த்துக்கொண்டாலும் யோவாப் இவனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே சிறிது நாட்களில் அப்னேரையும் இஸ்போசேத்தையும் கொன்றுவிட்டான்.

சவுல் மரித்து ஏழு வருடங்களுக்குப்பின் நாடு அமைதியாகி இஸ்ரவேல் முழுவதற்கும், தாவீதே எப்ரோனிலே அரசனுக முடிசூட்டப் பட்டார். மக்கள் சந்தோஷப்பட்டு அரசனே நீடூழி வாழ்க என்று வாழ்த்தினர்.

164. எருசலேம் நகரம்

2 சாமு. 5,6

தாவீது தன் முப்பதாவது வயதில் அரசனுகி நாற்பது வருடம் அரசாண்டான். அவன் எப்ரோனிலே யூதேயாவின் மேல் ஏழு வருடமும் எருசலேமிலே சமாதானமான இஸ்ரவேலின் மேலும் யூதேயாவின் மேலும் முப்பத்து மூன்று வருடமும் சிறப்பாக அரசாண்டான். இஸ்ரவேலில் சிறந்த தலைநகரம் ஒன்று கட்ட விரும்பினுன். எருசலேம் நகரம் தான் அதற்குத் தகுதி என்று நினைத்தான். எருசலேம் ஒரு மலை சூழ்ந்த நகரம். கோட்டைகள் போன்று மூன்று பக்கம் மலைகளும் ஒரு பக்கம்

பெரிய கோட்டை வாயில்களும் கொண்ட நகரம். இத்தகைய அழகிய நகரம் இஸ்ரவேலுக்குச் சொந்தமானது அல்ல. கானுனில் இஸ்ரவேலர் குடியேறியபோது எருசலேமை அவர்கள் கைப்பற்றவில்லை. இப்போது தாவீது அரசன் அதைக் கைப்பற்ற எண்ணினுன்.

எருசலேமில் எபூசியர்கள் என்னும் கூட்டத்தினர் பாதுகாப்பாடு வாழ்ந்துவந்தனர். தாவீது தங்களை முறியடிக்க முடியாது என்று திட்டமாய் நம்பியிருந்தனர். தாவீது தந்திரமாகத் திட்டமிட்டு எருசலேமைப் பிடித்தான். எருசலேம் நகருக்கு தண்ணீர் வசதி செய்யும் சுரங்கக் குழாய் மூலம் வீரர்களை அனுப்பி எருசலேம் நகரின் வாசல்களைத் திறக்கச் செய்து, தாவீதின் வீரர் உள்ளே நுழைந்து எருசலேம் நகரைப் பிடித்தனர். சுற்றிலும் மதிலைக் கட்டி தாவீது அதில் குடியிருந்தான். கடவுளின் நகரமாக அதை மாற்ற எண்ணி கடவுளின் உடன்படிக்கைப் பெட்டியை நகரத்தில் வைக்க விரும்பினுன்.

165. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி

2 சாமு. 6

சவுலின் காலத்தில் கொண்டுவரப்படாத உடன்படிக்கைப் பெட்டியைத் தாவீது கிபியாவிற்கு கொண்டுவந்தான். அதற்காக முப்பதிஞயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு அங்கே போய் தேவனுடைய பெட்டியை ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றி அபினதாபின் குமாரராகிய ஊசாவும் அகியோவும் அந்த இரதத்தை நடத்தினர்கள். அகியோ பெட்டிக்கு முன்னதாகச் சென்று நடத்தினுன். தாவீதும், இஸ்ரவேலரும் சாலவித கீத வாத்தியங்களோடும், சுரமண்டலம், தம்புரு, வீணை, மேளம், கைத்தாளம் ஆகிய இவைகளோடு கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டு போனுர்கள்.



உடன்படிக்கைப் பெட்டி (2 சாமு. 6)

அவர்கள் கீதோனின் களம் மட்டும் வந்தபோது, மாடுகள் இடறினபடியால், ஊசா பெட்டியைப் பிடிக்க தன் கையை நீட்டினுன். அப்பொழுது கர்த்தர் ஊசாவின் மேல் கோபம் கொண்டவராய், அவனை அடித்தார். அவன் தேவ சமூகத்தில் செத்தான். அப்பொழுது தாவீது பயந்தான். அந்த ஸ்தலத்திற்கு பேரேஸ் ஊசா என்று பெயரிட்டான். உடன்படிக்கைப் பெட்டியை, தன்னுடைய தாவீதின் நகரத்தில் வைக்காமல் ஓபேத் ஏதோமின் வீட்டில் வைத்தான்,

அங்கே மூன்று மாதங்கள் இருந்தன. அப்பொழுது கர்த்தர், ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார். தாவீது, சணல் நூல் ஆடையைத் தரித்துக்கொண்டு நடனம் செய்தார். ஆடு மாடுகளையும் பலியிட்டார். இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் கெம்பீர சத்தத்தோடும் எக்காள தொனியோடும் அந்தப் பெட்டியைக் கொண்டுவந்தார்கள். தாவீது போட்ட கூடாரத்திலிருக்கிற அதன் ஸ்தானத்தில் வைத்தார்கள். தாவீது கர்த்தருடைய நாமத்தினலே ஜனங்களை ஆசீர்வதித்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அப்பத்தையும் ஒவ்வொரு இறைச்சித் துண்டையும் ஒவ்வொரு படி திராட்ச ரசத்தையும் கொடுத்தான். பிற்பாடு ஜனங்கள் எல்லோரும் அவரவர் தங்கள் வீட்டிற்குப் போய்விட்டனர். இந்த மகிழ்ச்சியான வைபவங்களை ஜன்னல் வழியாக ஒரு பெண்மணி பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் யார் தெரியுமா? அவள் சவுலின்

மகளாகிய மீகாள்தான். ஒரு காலத்தில் தாவீதின் மனைவியாக இருந்தவள். சவுல் தாவீதைப் பகைத்த காலத்தில் தன் மகளைத் தாவீதினிடமிருந்து பிரித்து வேறொருவனுக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டான். இவள் தாவீது நடனமாடியதைக் கண்டு எரிச்சல் அடைந்தாள். அவனைக் கடிந்துகொண்டாள். ஆனால் தாவீதோ 'என்னைக் குறித்து கவலையில்லை, என் கடவுளின் மகிமைக்காக நான் ஆடிப்பாடினேன்' என்றார்.

166. தாவீதின் திட்டம்

2 சாமு. 7

இஸ்ரவேல் தேசமெங்கும் அமைதி நிலவியது. தாவீது அரசன் சமாதானமாக இருந்தான். தீர்க்கதரிசி நாத்தான் அவரோடிருந்தான். அரசன் அவனைப் பார்த்து நான் மட்டும் கேதுரு மரங்களால் ஆகிய அழகிய அரண்மனையில் குடியிருக்கும்போது தேவனுடைய பெட்டி இன்னும் கூடாரத்தில் உள்ளதே என்று வருந்தினான். கடவுளுக்கு ஒரு ஆலயம் கட்ட விரும்புவதாய்க் கூறினான். நாத்தான் 'இது ஒரு அருமையான திட்டம். உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள்' என்று தாவீதை உற்சாகப்படுத்தினான். அன்றிரவும் கடவுள் நாத்தானிடம் பேசினார். அந்த செய்தியை நாத்தான் அரசனிடம் கூறினார்.

'கடவுள் மனிதரின் கைகளால் கட்டப்பட்ட கோவில்களில் மட்டும் குடியிருப்பதில்லை. ஆகவே தற்போது தாவீதின் கைகளினால் ஆலயம் கட்டவேண்டாம் என்றும் தாவீதின் சந்ததியில் ஒருவன் கடவுளுக்கு ஆலயம் கட்டுவான் என்றார். இஸ்ரவேல் மக்கள் எங்கெங்கு செல்கிறார்களோ அங்கெல்லாம் செல்ல வசதியாக கூடாரத்தில் இருப்பதே நல்லது என்று கடவுள் கருதினார் போலும்' என்றான்.


தாவீது இச் செய்தியைக் கேட்டு மனம் வருந்தினான். ஆனால் நாத்தானே ஒரு நற்செய்தியையும் சொன்னார். தாவீதின் சந்ததியாரே இஸ்ரவேலை என்றென்றும் அரசாள்வார்கள் என்றும் தெரிவித்ததாகச் சொன்னார். தாவீது உடன்படிக்கைப் பெட்டி இருந்த கூடாரத்திற்குச் சென்று கடவுளைப் பணிந்து கொண்டு நன்றியும் துதியும் செலுத்தினான். சவுலின் மக்கள் ஒருவன்கூட தன் தகப்பனுக்குப் பின் அரசனாகவில்லை. அப்படியிருக்கும் போது தன் மக்கள் தனக்குப் பின் பரம்பரையாக ஆட்சி செய்வார்கள் என்று கடவுள் வாக்கு அருளியிருக்கிறாரே என்று மிகவும் மகிழ்ந்தான். நன்றி செலுத்தினான் தாவீது அரசன்.

167. தாவீது தன் சொல்லைக் காத்தல்

2 சாமு. 9

தாவீதுக்குத் தன் உள்ளத்திற்குப் பிரியமான நண்பன் யோனத்தானை மறக்க முடியவில்லை. அவனுடைய பிள்ளைகளைக் காப்பாற்றுவேன் என்று முன்பு ஒருமுறை தன் நண்பனுக்கு வாக்களித்திருந்தான். ஆகவே தன் வேலைக்காரரை அழைத்து யோனத்தான் குடும்பத்தினரைப்பற்றி விசாரித்தான். சவுலின் வேலைக்காரனான சீபா என்பவனை அழைத்து யோனத்தானின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உண்டா? என்று கேட்க, அவன் மேவிபோசேத் என்ற முடமான மகன் இருக்கிறான் என்று சொன்னான்.

மேவிபோசேத் ஐந்து வயது சிறுவனாயிருந்த போது தகப்பன் யோனத்தானும் தாத்தா சவுலும் ஒரே நாளில் கொல்லப்பட்டனர். அச்



தாவீது தன் சொல்லைக் காத்தல் (2 சாமு. 9)

செய்தியைக் கேட்ட மேவிபோசேத்தின் ஆயா அவனைத் தூக்கிக்கொண்டு பயந்துபோய் அரண்மனையை விட்டு ஓடினுள். அப்போது தடுக்கி விழுந்து சிறுவனை கீழே போட்டு விடவே, குழந்தையின் கால்கள் இரண்டும் முடமாகிவிட்டது. அவன் இப்போது மாகிரின் வீட்டிலிருக்கிறுன் என்ற செய்தி கேட்டவுடன், அவனை தாவீது அழைத்தனுப்பி 'நீ பயப் படாதே, உன் தகப்பனுகிய யோனத்தான் நிமித்தம், நான் நிச்சயமாய் உனக்குத் தயை செய்து, உன் தகப்பனுகிய சவுலின் நிலங்களை யெல்லாம் உனக்குத் திரும்பக் கொடுப்பேன், நீ என் பந்தியில் நித்தம் அப்பம் புசிப்பாய்' என்ருன்.

அப்பொழுது மேவிபோசேத் வணங்கி 'செத்த நாயைப்போலிருக்கிற என்னை நீர் நோக்கிப் பார்க்கிறதற்கு, உமது அடியான் எம் மாத்திரம்' என்ருன். தாவீது கொன்று போடத்தான் வரவழைத்துள்ளான் என்று பயந்தான். ஆனல் தாவீதோ அவனை அன்பாக அரவணைத்துத் தேற்றி, அரண்மனையிலேயே தன்னேடு வைத்துக்கொண்டான். சீபாவும் அவன் குடும்பத்தாரும் மேவிபோசேத்துக்கு வேலையாட்களாக அவனேடு இருந்தார்கள். சவுலின் நிலங்களை எல்லாம் மேவிபோசேத் துக்குத் தாவீது கொடுத்து அவனை சுகமாகத் தங்கச் செய்தான். யோனத்தானுக்காக அவன் மகனை அருமையாக நேசித்தான் தாவீது அரசன்.

168. தாவீதும் பத்சேபாளும்

2 சாமு. 11

ஒரு யுத்த சமயத்தில் தாவீது யோவாபை அவனேடுகூடத் தன் சேவகரையும் அம்மோன் புத்திரரை முறியடிக்க அனுப்பினுன். தாவீது யுத்தத்திற்குப் போகாமல் எருசலேமிலே தங்கி விட்டான்.

ஒருநாள் தாவீது தன் மேல் மாடியில் உலாவிக்கொண்டிருந்தபோது குளித்துக் கொண்டிருக்கும் ஒரு அழகிய பெண் அவன் கண்ணில் பட்டாள். அவள் யாரென்று விசாரிக்க ஆள் அனுப்பினுன். அவள் போர்ச் சேவகனுன உரியாவின் மனைவி பத்சேபாள் என்று அறிந்தான். உடனே அவளை அழைத்து வரச் செய்தான். அவளை நேசித்தான். அவள் கர்ப்பவதி ஆனுள்.

தாவீது உரியாவைப் போரிலிருந்து திரும்பி வர ஆளனுப்பினுன். போர்ச் செய்திகளை அவனிடம் கேட்டு வீட்டிற்கு அனுப்பிவைத் தான். அவனே தன் உடன் சிநேகிதர்கள்

யுத்த களத்தில் இருக்க தான் மட்டும் வீட்டிலிருப்பதா என்று அரண்மனை முற்றத்தில் காவல்காரரோடு தூங்கிவிட்டான். இதை அறிந்த அரசன் மறுநாள் அவன் வீட்டிற்குச் செல்கிறனா என்று பார்த்தான். மறுநாளும் உரியா வீட்டிற்குச் செல்லவில்லை. வேறு வழியில்லாமல் 'உரியாவைப் போர்க்களத்தில் மாண்டுபோகும்படி வழி செய்துவிடு' என்று யோவாபுக்கு எழுதி, அவன் கையிலே கொடுத்து போர்க்களத்துக்கு அனுப்பிவிட்டான். விஷயம் தெரியாத உரியா இந்தக் கடிதத்தை யோவாபிடம் கொடுக்க, அவன் அரச கட்டளைப்படி உரியாவை போர்க்களத்தில் கொன்றுபோட வழி செய்தான். அவன் மரித்த செய்தியை அரசனிடம் கூறினான். அவனுக்காக பத்சேபாள் சில நாள் துக்கம் கொண்டாடினாள். பின்பு தாவீது அவளை மணந்துகொண்டான். ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இந்தக் காரியம் கடவுளின் பார்வையில் தீங்காய் இருந்தது. குழந்தை வியாதிப்பட்டு ஏழாம் நாளில் இறந்தது.





தாவீதும் பத்சேபாளும் (2 சாமு. 11)

169. நாத்தான்வேலின் எச்சரிக்கை

2 சாமு. 12

நாத்தான் தாவீதினிடத்தில் வந்து ஒரு உவமானக் கதையைச் சொன்னான். ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர்கள் இருந்தார்கள். ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரித்திரன். ஐசுவரியவானுக்கு ஆடு மாடுகள் வெகு திரளாய் இருந்தது. தரித்திரனுக்கு ஒரே ஒரு சின்ன ஆட்டுக்குட்டியைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது. அது அவனோடும் அவன் பிள்ளைகளோடும் கூட இருந்து வளர்ந்தது, அவன் வாயின் அப்பத்தைத் தின்று, அவன் பாத்திரத்திலே குடித்து, அவன் மடியிலே படுத்துக்கொண்டு அவனுக்கு ஒரு மகளைப்போல் இருந்தது.

அந்த ஐசுவரியவானிடத்தில் ஒரு வழிப்போக்கன் வர அவனுக்கு சமையல் பண்ணுவிக்க, தன்னுடைய ஆடு மாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதில்லாமல், அந்த தரித்திரனுடைய ஆட்டைப் பிடித்து, தன்னிடத்தில் கொண்டுவந்து, அந்த மனுஷனுக்குச் சமையல் பண்ணுவித்தான் என்றான். அப்பொழுது தாவீது அந்த மனுஷன்மேல் மிகவும் கோபம் கொண்டவனாகி, அவன் மரணத்திற்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு ஆணையிட்டான். அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனையாகத் திரும்பச் செலுத்தவேண்டும் என்றான்.

அதற்கு நாத்தான்வேல் தாவீதை நோக்கி, 'நீயே அந்த மனுஷன், உரியாவை பட்டயத்தால் கொன்று, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டதினால் கர்த்தருக்கு விரோதமான பாவம் செய்தாய். ஆனபடியால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும்' என்று சொல்லி, நாத்தான்வேல் தன் வீட்டுக்குப் போய்விட்டான்.

அப்பொழுது பத்சேபாள் பெற்ற ஆண் பிள்ளை வியாதிப்பட்டு கேவலமாய் இருந்தது. அப்பொழுது தாவீது உபவாசித்து, தேவனிடத்தில் பிரார்த்தனை செய்து இராமுழுவதும் தரையில் கிடந்தான். அப்பம் சாப்பிடாமலும்

கிடந்தான். ஏழாம் நாளில் பிள்ளை செத்துப் போயிற்று. தாவீது இதைக் கேள்விப்பட்டு தரையை விட்டு எழுந்து, குளித்து எண்ணெய் பூசி, தன் உடைகளை மாற்றி கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து பணிந்துகொண்டு, தன் வீட்டுக்கு வந்து சாப்பிட உணவு கேட்டான். அவன் முன்னே அதை வைத்தபோது அதைப் புசித்தான். மேலும் அவன் சொன்னது, 'நான் இனிமேல் உபவாசிக்க மாட்டேன். குழந்தையினிடத்திற்கு நான் போவேனே அல்லாமல் அது என்னிடத்திற்கு திரும்பிவரப் போவதில்லை. நான் கடவுளுக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்' என மனம் வருந்தினான். கடவுள் அவன் பாவத்தை மன்னித்தார். பத்சேபாளுக்கும் ஆறுதல் கூறினான்.

170. குடும்பத்தில் கலகம்

2 சாமு. 13

தாவீதுக்கு மனைவியர் பலர். ஆகவே மக்களும் அதிகம். பத்சேபாளுக்குப் பிறந்த முதல் மகன் மரிக்கவே, அடுத்த மகன் சாலமோன் பிறந்தான். இன்னும் அநேகம் மக்களும் பிறந்தனர். தாவீதுக்குப்பின் அரசனாகப்போவது யார்? என்ற போட்டியும் ஏற்பட்டது. இதற்கிடையில் தாவீதின் மூத்த மகன் அம்னோன் என்பவன் தாவீதின் மற்றொரு மனைவியின் மகளான தாமார்மீது தகாத ஆசை கொண்டான். இதுவே அவனுக்கு வியாதியாக மாறியது. தாமார் தாவீதின் மகன் அப்சலோமின் சொந்த சகோதரி, வியாதிப் படுக்கையில் இருந்த அம்னோன், தாமார் தன்னைப் பார்க்க வரும்படி வேண்டினான். அதன்படி தாவீது அவளை சமையல் செய்துகொடுத்து வரும்படி அனுப்பி வைத்தான். அவள் அம்னோன் வீட்டிற்குப் போய் மா பிசைந்து தட்டி பணியாரங்களைச் சுட்டு அவனுக்குச் சாப்பிடக் கொடுத்தாள். அவனோ அவளை அவள் தடுத்தும் கேட்காமல் அவமானப்படுத்தி வீட்டிற்கு வெளியே தள்ளி அனுப்பிவிட்டான். அவள் அழுதுகொண்டே தன் சகோதரன் அப்சலோமிடம் சென்று நடந்த காரியத்தைச் சொன்னாள்.

அப்சலோம் அம்னோனைச் சமயம் பார்த்துக் கொலை செய்துவிட்டு காட்டில் போய் பயந்து ஒளிந்துகொண்டான். இரண்டு வருடங்கள் ஒளிந்திருந்தான். தாவீது அதைப்பற்றிக் கவலைகொள்ளவில்லை. மூத்த மகன் அம்னோன் கொலை செய்யப்பட்டதைக் குறித்தே தாவீது வருந்திக்கொண்டிருந்தான்.

171. அப்சலோமே வா!

2 சாமு. 14

அப்சலோம் தகப்பனுக்குப் பயந்து, எருசலேமுக்கு வராமலே இருந்தான். யோவாப் அரசன் அப்சலோமை திரும்ப அழைத்துக்கொள்ள ஓர் தந்திரம் செய்தான். அதாவது ஒரு பெண்ணை அவனிடம் அனுப்பினான். பின் அவளை கீழ்க்கண்டவாறு சொல்லி அழும்படியாக ஏற்பாடு செய்தான். அதன்படி அவள் 'எனக்கு இரண்டு குமாரர் உண்டு. சண்டையிட்டதில் ஒருவன் மற்றவனைக் கொலை செய்தான். ஆகவே மக்கள் மற்றொரு மகனும் கொலை செய்யப்பட வேண்டும் என்று அவனைத் தேடுகிறார்கள். என் மகனை நீங்கள்தான் காப்பாற்றவேண்டும்' என்று சொல்லி அழுதாள். அரசன் மனம் இரங்கி அவள் மகனைக் காப்பாற்ற வாக்குக் கொடுத்தான். உடனே அந்தப் பெண் இந்த விதமாகவே அப்சலோமை மன்னித்து அழைத்துக்கொள்ளுங்கள் என்று கூறினாள். தாவீது உடனே இது யோவாபின் சூழ்ச்சி என்று அறிந்து யோவாபை அழைத்து அப்சலோமை எருசலேமுக்குக் கூட்டிவர உத்தரவு கொடுத்தான். அப்சலோம் திரும்பி வந்து தன் வீட்டில் வசித்துவந்தான். ஆனால் தாவீது அவனைப் பார்க்கவில்லை.

172. சதித்திட்டம்

2 சாமு. 14,15

அப்சலோமை அவன் தகப்பன் தாவீது இரண்டு வருடங்களாகப் பார்க்கவில்லை. இதனால் அப்சலோம் எரிச்சலடைந்து யோவாபைக் கோபித்தான். யோவாப் அரசனிடம் சென்று சமாதானமாகப் பேசி தகப்பனும் மகனும சந்திக்க ஏற்பாடு செய்தான். அவர்கள் அன்போடு கட்டித்தழுவி சந்தித்தனர். மக்கள் மகிழ்ந்து அப்சலோமே அடுத்த அரசன் என நினைத்தனர். அப்சலோமும் அரசனாக ஆசை கொண்டிருந்தான். ஆனால் தகப்பன் இறக்கும் வரைக்கும் பொறுத்திருக்க விரும்பவில்லை.

தனக்கென்று நல்ல குதிரைகளையும், இரதங்களையும் வாங்கினான். தன்னைச் சுற்றிலும் எப்போதும் ஐம்பது வேலை ஆட்களை வைத்துக் கொண்டு தன்னை முக்கியமானவனாக் கருதினான். அரசனைப் பார்க்கவரும் ஒவ்வொருவரையும் இவன் முதலில் சந்தித்து அன்புடன் உரையாடி மக்களின் பிரியத்தைச் சம்பாதித்தான். இதனால் அப்சலோம் அரசனானால் நல்லது என்று மக்கள் நினைத்தனர். இப்படி நான்கு வருடங்கள் சென்றபின் தாவீது முதன் முறை பட்டம் சூட்டிக்கொண்ட எபிரோனிலே தனக்கென்று ஒரு சேனையை தயார்செய்தான். தன்னை அரசனாகப் பிரகடனப்படுத்திக்கொள்ள எல்லா ஆயத்தங்களையும் செய்தான்.

173. தாவீது ஓடிப்போதல்

2 சாமு. 15

தாவீது அப்சலோமின் காரியங்களைக் கேள்விப்பட்டபோது நிலைமையைக் குறித்து விசாரித்தான். தனக்கு வேண்டிய மிக முக்கியஸ்தர்கள்கூட அப்சலோம் பக்கம் சேர்ந்து விட்டதை அறிந்து பயந்து எருசலேமைவிட்டு ஓடிப்போனான். அவனோடுகூட அறுநூறுபேர் கொண்ட ஒரு கூட்டம் கீதரோன் ஆற்றைக் கடந்து வனாந்தர வழியாய்ச் சென்றார்கள். நகர மக்கள் கவலைப்பட்டனர்.



அப்ாலோம் மரணம் (2 சாமு. 16)

சாதோக்கும், தலைமைக்குரு அபியாத்தாரும் கடவுளின் உடன்படிக்கைப் பெட்டியை தாவீதுகூட எடுத்துச் செல்லும்படியாகக் கொண்டுவந்தனர். தாவீது 'பெட்டியைத் திரும்பக் கொண்டுபோய் அதன் இடத்திலே வைத்துவிடுங்கள். திரும்ப நான் எருசலேமுக்கு வந்து அதைப் பணிந்துகொள்ளுமாறு கடவுள் எனக்கு அருள்புரியப்படும். மேலும் உங்கள் மக்களாகிய அகிமாசும் யோனத்தானும் திரும்பி எருசலேமுக்குக் கூட்டிப்போங்கள். அங்கு நடப்பவற்றை நீங்கள் எங்களுக்கு அவ்வப்போது தெரியப்படுத்திக்கொண்டிருங்கள்' என்றான்.

யோர்தான் நதியைத் தாண்டி ஒரு மலையை நோக்கி தாவீது கூட்டத்தார் அழுகையோடு நடந்து சென்றனர். மலை உச்சியில் தாவீது கடவுளைப் பணிந்துகொண்டபோது தன் மற்றொரு நல்ல நண்பன் ஊசாய் என்பவன்

தாவீதுக்காக வருந்தி அழுது அவன் பின் சென்றான். அவனைத் தாவீது தேற்றி எருச லேமுக்கு திரும்பிச் சென்று அங்கு நடப்ப வற்றை அபியத்தார், சோதோக் மூலம் தனக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொண்டு அவனைத் திருப்பி அனுப்பிவிட்டான்.

174. இரண்டு ஒற்றர்களும் வெற்றியும்

2 சாமு. 17–20

அபியாத்தார் மகன் யோனத்தானும், சோதேக்கின் மகன் அகிமாசும் அப்சலோம் அரண்மனையில் நடக்கும் காரியங்களை எல்லாம் ஒன்றுவிடாமல் தாவீதுக்குத் தெரியப்படுத்தி வந்தார்கள். அப்சலோம் தாவீதுமீது படையெடுக்கத் திட்டமிட்ட செய்தி கிடைத்ததும் தாவீதும் போருக்குத் தன்னைத் தயார் செய்தான்.

தாவீதுக்குப் பிரியமான மக்கள் வழிகளில் எல்லாம் அவர் கூட்டத்தாருக்குத் தேவையான உணவு வகைகளை கொடுத்து மகிழ்த்தனர். தாவீதின் வீரர்கள் அப்சலோமின் வீரர்களைத் தாக்க தயாராய் இருந்தபோது அப்சலோம் தற்செயலாய் அவர்களுக்கு எதிர்ப்பட்டான். இவர்களிடமிருந்து தப்பிக்க வேகமாகத் தன் குதிரையை விரட்டினான். குதிரை வேகமாக ஓடுகையில் அது ஒரு கருவாலி மரத்தடியில் ஓடியபோது அப்சலோமின் அழகான நீண்ட தலைமயிர் மாத்திரம் முள்ளிலும், கிளைகளிலும் சிக்கிக்கொண்டது. குதிரை தன் எஜமான் ஆகாயத்தில் மரத்தில் மாட்டிக்கொண்டு தொங்குவதை அறியாமல் ஓடிவிட்டது. யோவாபும் அவன் வீரரும் ஓடிச்சென்று அப்சலோம் தலையை வெட்டிக் கொலைசெய்தனர். இச் செய்தியைக் கேட்ட தாவீது அப்சலோம் 'என் மகனே, உனக்குப் பதில் நான் மரித்தால் நலமாக இருந்திருக்குமே' என்று அழுதான்.

யோவாப் அப்சலோம் இறந்துபோனதை எல்லாருக்கும் தெரிவித்து, எருசலேம் திரும்ப ஆயத்தமானார்கள். மக்கள் மகிழ்ந்தனர். எல்லோரும் பழையபடி ஒன்றுகூடி தாவீது அரசனை வாழ்த்தி எருசலேமுக்குள் அழைத்துச் சென்றனர். தாவீது சமாதானமாக இஸ்ரவேலைத் தன் முதிர்வயது வரை ஆட்சி செய்து வந்தான்.

இராஜாக்கள் முதல், இரண்டாம் புத்தகம்

முன்னுரை

தாவீதுக்குப் பிறகு சாலொமோன் அரியணை ஏறினார். ஞானம் நிறைந்த இவர் எருசலேமில் முதல் தடவையாக கடவுளுக்கு அழகிய ஒரு ஆலயம் கட்டினார்.

சவுல், தாவீது, சாலொமோன் இம்மூவரின் மொத்த ஆட்சிகாலம் சுமார் நூறு ஆண்டுகள் நீடித்தது. சாலொமோனுக்குப்பின் நாடு வட பகுதி, தென் பகுதி என்று பிளவுபட்டது. வட பகுதியில் பத்து கோத்திரங்கள் வாழ்ந்தனர். அது இஸ்ரவேல் ராஜ்யம் எனப்பட்டது. இந்த அரசாட்சி சுமார் 260 (இருநூற்று அறுபது) ஆண்டுகளுக்குப்பின் அசிரியர்களால் முறியடிக்கப்பட்டு இஸ்ரவேல் ஆட்சி முடிந்தது. தென் பகுதியாகிய யூதேயாவில் மீதி இரு கோத்திரங்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் சுமார் 400 (நானூறு) ஆண்டுகளுக்குப்பின் பாபிலோனியர்களால் அடிமைகளாகக் கொண்டுபோகப்பட்டனர். எருசலேம் நகரமும் அழிந்தது. அந்த அடிமைத்தனத்துடன் இஸ்ரவேலின் மொத்த 500 (ஐநூறு) ஆண்டு அரசாட்சியும் முடிவடைந்தது.

175. சாலொமோன் அரசனாதல்

1 இரா. 1

தாவீது அரசனுக்கு அதிக வயதானபோது, அப்சலோமின் சகோதரன் அதோனியா ரகசியமாக தனக்குத்தானே முடிசூட்டிக்கொண்டான். அவனது ஆதரவாளர்கள் அவனோடு சேர்ந்து மகிழ்ச்சிகொண்டாடினர்.

இதனைக் கேள்விப்பட்ட தீர்க்கதரிசி நாத்தான், சாலொமோன் தாயார் பத்சேபாளிடம் இதனை அறிவித்தார். தீர்க்கதரிசி கூறிய ஆலோசனையின்படி தாவீது அரசனைச் சந்திக்க பத்சேபாள், அவர் படுத்தபடுக்கையாக இருந்த அறைக்குச் சென்றாள்.

அங்கே தன்னை வணங்கி எழுந்த பத்சேபாளிடம், 'உனக்கு என்ன வேண்டும்?' என்று தாவீது அரசன் கேட்டார்.

அதற்கு அவள், 'உமது மரணத்திற்குப்பின் நமது மகன் சாலொமோன்தான் அரசனாவான் என்று நீர் எனக்கு சத்தியம் செய்து கொடுத்திருக்கிறீர். ஆனால் இப்பொழுது, ராஜாவாகிய உமக்குத் தெரியாமல் அதோனியா அரசனாகிறான்' என்றாள். மேலும் அவள், 'உமக்குப் பிறகு யார் அரசனாவான் என்பதை நீரே அறிவிககவேண்டும் என்று நம் நாட்டு மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். இப்போது இதை நீர் அறிவியாமற்போனால் நானும் எனது மகன் சாலொமோனும் குற்றவாளிகளாவோம்' என்று தெரிவித்தாள்.

ஏற்கெனவே திட்டமிட்டபடி, அச்சமயத்தில் தீர்க்கதரிசி நாத்தான் அங்கே வந்து, 'என் ஆண்டவனே, உமக்குப் பிறகு அதோனியா தான் அரசனாவன் என்று நீர் அறிவித்தது உண்டா? ராஜாவாகிய அதோனியா வாழ்க என்று அவனது ஆதரவாளர்கள் வாழ்த்துகிறார்களே' என்றார்.

தனக்குத் தெரியாமல் நடைபெற்ற இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட தாவீது அரசன் கோபமடைந்து, 'இன்றே சாலொமோனை எனது அடுத்த வாரிசாக அறிவிக்கப்போகிறேன்' என்றார்.

அங்கே நின்றுகொண்டிருந்த நாத்தானைப் பார்த்து, சாலொமோனை தனது கோவேறு கழுதையில் ஏற்றி, சீகோனுக்கு அழைத்துச் சென்று, அங்கே அவனை அரசனாக அபிஷேகம் பண்ணும்படி கட்டளையிட்டார்.

இதனால் மகிழ்ச்சியடைந்த பத்சேபாள் தாவீது அரசனை வணங்கி வாழ்த்தினாள்.

தாவீது அரசனின் கட்டளைப்படி சாலொமோன் புதிய அரசனாக அபிஷேகம் பண்ணப்பட்டான். பின்னர் அவனை ஊர்வலமாக அழைத்து வந்தனர். அப்பொழுது மக்கள் யாவரும் எக்காளம், நாதசுரம் ஆகியவற்றை ஊதி விண்ணதிரத்தக்கதாக ஆனந்த முழக்கமிட்டனர்.



சாலொமோன் அரசனாதல்

சாலொமோன் புதிய அரசனாக அபிஷேகம் பண்ணப்பட்ட செய்தியை அதோனியா கேள்விப்பட்டபோது, அவனும் அவனோடிருந்தவர்களும் கலங்கினார்கள். அவனது ஆதரவாளர்கள் அவனைவிட்டுப் பிரிந்துபோனார்கள். சாலொமோனுக்குப் பயந்து அதோனியா பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டான்.

இதனை அறிந்த சாலொமோன், அதோனியாவை அழைத்துவரும்படி ஆட்களை அனுப்பினார். சாலொமோனுக்கு முன்பாக அவனைக் கொண்டுவந்தபோது, 'நீ நல்லவனாக நடந்துகொண்டால் உன் தலைமயிரில் ஒன்றாவது தரையில் விழாது. தீயவனாக நடந்துகொண்டால், நீ சாகவே சாவாய்' என்று கூறி அவனை அனுப்பிவைத்தார்.

தனது மரண வேளையில், சாலொமோனுக்குப் பல்வேறு அறிவுரைகளை வழங்கிய தாவீது அரசன் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்.

176. சாலொமோனின் வேண்டுதல்

1 இரா. 2,3

கடவுளிடத்தில் அன்புகூர்ந்து சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளையின்படியே நடந்தார்.

ஒருநாள் இரவு, இறைவழிபாட்டிற்குப்பின் தூங்கிக்கொண்டிருந்த சாலொமோனுக்குக் கடவுள் சொப்பனத்தில் தரிசனமாகி, 'நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்' என்றார்.

அதற்கு சாலொமோன், 'ஆண்டவரே, சிறியவனாகிய எனக்கு நீரே இந்த அரசாட்சியைத் தந்தீர். நீர் தெரிந்துகொண்ட எண்ணிக்கைக்கு அடங்காத உமது மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமையைப் பகுத்தறியவும் வேண்டிய ஞானத்தை எனக்குத்தாரும்' என்று கேட்டுக்கொண்டார்.

இந்த வேண்டுதல் இறைவனுக்கு மிகவும் பிரியமாயிருந்தது. இதனால் மகிழ்ச்சி அடைந்த இறைவன், 'சாலொமோனே, பொன்னும் பொருளும் நீ கேட்கவில்லை. மண்ணின் வாழ்வும் விருமபவில்லை. விரோதிகளின் உயிரையும் கூட நீ கேட்கவில்லை. நான் உன்னை அரசாளப் பண்ணின மக்களை நியாயம் விசாரிக்கத்தக்க ஞானத்தையும் விவேகத்தையும் நீ கேட்டாய். ஆதலால் நீ கேட்ட ஞானத்தையும், நீ கேட்காத செல்வம், மகிமை, கனம் அனைத்தையும் உனக்குத் தந்தேன்' என்று கூறி மறைந்தார்.

கடவுளிடமிருந்து ஞானம்பெற்ற சாலொமோன், அதற்காக நன்றி வழிபாடு நடத்தி கடவுளை மகிமைப்படுத்தினார். தனது ஊழியர்களுக்கு விருந்துசெய்து மகிழ்ந்தார்.

177. சாலொமோனின் ஞானம்

1 இரா. 4,5

கடவுள் சாலொமோனுக்கு மிகுந்த ஞானத்தையும், மேலான அறிவையும், பரந்த உள்ளத்தையும் கொடுத்திருந்தார். கீழை நாட்டார், எகிப்தியர் அனைவரின் ஞானத்தையும்விட சாலொமோனின் ஞானம் சிறந்து விளங்கிற்று.

இரண்டு தாய்மார்கள் ஒருநாள் சாலொமோனிடம் வந்தார்கள். அவர்களில் ஒருத்தி, 'ராஜாவே! நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம். எங்களைத் தவிர வேறு யாரும் எங்கள் வீட்டில் இல்லை. இராத்திரி தூக்கத்தில் இவள் புரண்டு படுத்தபோது இவள் அருகே படுத்திருந்த இவளின் குழந்தை இறந்துபோயிற்று. நடு ராத்திரியில் அதை என் பக்கம் படுக்கவைத்துவிட்டு, எனது உயிருள்ள குழந்தையை இவள் எடுத்துக்கொண்டாள்' என்று அருகில் நின்ற பெண்ணைச் சுட்டிக்காட்டி முறையிட்டாள்.

அடுத்தவளோ, 'அவள் குழந்தைதான் இறந்துபோயிற்று, உயிரோடிருப்பது எனது குழந்தை' என்று வாதிட்டாள்.


மன்னன் சாலொமோன், வாள் ஒன்றைக் கொண்டுவந்து உயிரோடிருக்கும் குழந்தையை இரண்டாகப் பிளந்து இரு பெண்களுக்கும் பிரித்துக் கொடுக்கும்படி உத்தரவிட்டார்.

இதனைக் கேட்டதும் முதலாவது முறையிட்ட பெண், 'ஐயோ, என் ஆண்டவனே! உயிரோடிருக்கிற குழந்தையைக் கொல்ல வேண்டாம். அதை அவளிடமே கொடுத்து விடுங்கள்' என்று கண்ணீரோடு கூறினாள். மற்றவளோ, 'அது ஒருவருக்கும் வேண்டாம், பிளந்து போடுங்கள்' என்றாள்.

அப்பொழுது சாலொமோன், 'அந்த குழந்தையைக் கொல்லவேண்டாம். தாயுள்ளம் கொண்டு கண்ணீர்விடுகின்ற அந்தப் பெண்ணிடமே குழந்தையைக் கொடுங்கள்' என்று கட்டளையிட்டார்.

கடினமான இந்த வழக்கில் வழங்கப்பட்ட நியாயமான தீர்ப்பைக் கேள்விப்பட்ட நாட்டு மக்கள் அனைவரும் கடவுள் அருளிய ஞானம் சாலொமோனிடம் இருப்பதை அறிந்து அவனுக்குப் பயந்து நடந்தனர்.

சாலொமோன் மூவாயிரம் ஞானவாக்கியங்களையும் ஆயிரத்து ஐந்து பாடல்களையும் எழுதினார். மிருகங்கள், மரங்கள், பறவைகள், ஊர்வன, மீன்கள் முதலியற்றைக் குறித்தும் இவர் கவிதைகள் எழுதினார். உலகமெங்கும் இவரது புகழ் பரவியது.



சாலொமோனின் ஞானம் (1 இரா. 4,5)

178. சாலொமோனின் மேன்மை

1 இரா. 7,9,10

சாலொமோன் தனது விரோதிகளை ஒழித்து தன் அரசை உறுதிப்படுத்தினார். தனது படைகளில் பல புதிய அம்சங்களைப் புகுத்தி, கோட்டை கொத்தளங்களைக் கட்டினார். இவரது ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர்.

இஸ்ரவேலர்களில் ஒருவரையும் சாலொமோன் அடிமையாக வைத்துக் கொள்ளவில்லை. இவர்கள் பிரபுக்கள், தலைவர்கள், வீரர்களாகப் பணிபுரிந்தனர். ஆரம்ப நாட்களில் இஸ்ரவேல் மக்களால் அழிக்க முடியாதுபோன எமோரியர், ஏத்தியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் போன்ற இனத்தவரை சாலொமோன் அடிமைகளாக்கி, அவர்களிடம் வேலை வாங்கினார்.

இவரது காலத்தில் இஸ்ரவேலர்கள் கடல் கடந்து வாணிபம் செய்தனர். இதற்காக இஸ்ரவேல் நாட்டிலேயே கப்பல்கள் கட்டப்பட்டன.

இவரது ஆட்சியில், இஸ்ரவேல் நாட்டின் எல்லை பெலிஸ்தியரின் தேசம் மட்டும் மற்றும் எகிப்தின் எல்லை வரைக்கும் விரிந்து பரந்து கிடந்தது. இந்த எல்லைக்குட்பட்ட சகல மன்னர்களும் சாலொமோன் அரசனுக்குக் கப்பம் கட்டி அவரை சேவித்து வந்தனர். இதனால் படையெடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லாதிருந்தது. இஸ்ரவேலைச் சுற்றி இருந்த அண்டை நாடுகளிலும்கூட சமாதானம் நிலவியது.

இஸ்ரவேல் நாடு செழிப்புடன் காணப்பட்டது. இஸ்ரவேல் மக்கள் அச்சமின்றித் தத்தம் திராட்சைத் தோட்டத்திலும், அத்தி மரச் சோலைகளிலும் எந்தக் குறைவுமின்றி நலமுடன் வாழ்ந்து வந்தனர்.

179. சாலொமோனின் செல்வாக்கு

1 இரா. 10

ஞானி சாலொமோன் கலை ஆர்வம் மிகுந்தவர். அவர் கட்டிய 'லீபனோன் வனம்' என்னும் மாளிகை, நியாய விசாரணை மண்டபம், பதின்மூன்று ஆண்டுகளாகக் கட்டிய அரண்மனை ஆகிய அனைத்தும் மிகுந்த கலை நுட்பத்தோடு கட்டப்பட்டிருந்தன. விலையேறப் பெற்ற கற்களால் கட்டப்பட்ட 'லீபனோன் வனம்' பணி முட்டுகளெல்லாம் பசும் பொன்னினால் செய்யப்பட்டிருந்தன. பசும்பொன்னால் இருநூறு பெரிய கேடயங்களையும், முந்நூறு சிறிய கேடயங்களையும் செய்து அம் மாளிகையில் வைத்தார்.

தந்தத்தினால் பெரியதோர் சிங்காசனம் செய்து, அதைப் பசும் பொன்னால் அலங்கரித்தார். வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு இது சிறப்ப வேலைப்பாடு கொண்டிருந்தது. சாலொமோன் பயன்படுத்திய பான பாத்திரங்களெல்லாம் பொன்னினால் செய்யப்பட்டிருந்தன.

சாலொமோன் அரசன் தனக்கு வேண்டிய குதிரைகளையும், ஆடைகளையும் மற்றும் இரதங்களையும் எகிப்திலிருந்து வரவழைத்தார். தம்மிடமிருந்த இரதங்களை நிறுத்தவும், வீரர்கள் இருக்கவும் நாடெங்கும் பல்வேறு பட்டணங்களை அமைத்தார். சாலொமோன் திருமணம் செய்த பார்வோன் மகளுக்காக அழகான ஒரு மாளிகையைக் கட்டித் தந்தார்.

சாலொமோனின் நாட்களில் ஈராமின் கப்பல்கள் ஓப்பீரிலிருந்து பொன்னையும், வாசனை மிகுந்த மரங்களையும் கொண்டு வந்தன. அம்மரங்களைக் கொண்டு பாடகர்களுக்கு இசைக்கருவிகள் செய்யப்பட்டன. தர்ஷீசின் கப்பல்கள் பொன், வெள்ளி, யானைத் தந்தங்கள், குரங்குகள், மயில்களைக் கொண்டு வந்தன.

பொற்பாத்திரங்கள், வெள்ளிப்பாத்திரங்கள், வஸ்திரங்கள், ஆயுதங்கள், சுகந்தவர்க்கங்கள், குதிரைகள், கோவேறு கழுதைகளும் நாலு திசையிலிருந்தும் காணிக்கையாக வந்து குவிந்தன. வியாபாரிகள், வணிகர்கள், அராபிய அரசர்கள், மாநில ஆளுநர்களும் ஆண்டுதோறும் பொன் கொண்டு வருவதுண்டு.

இதனால் ராஜாவின் கருவூலம் நிரம்பி வழிந்தது. சாலொமோனின் காலத்தில் வெள்ளி கற்களைப் போலவும், கேதுரு மரங்கள் காட்டத்தி மரங்களைப் போலவும் மிகுதியாயிருந்தன.



சாலொமோனின் செல்வாக்கு (1 இரா. 10)

180. சாலொமோனின் ஆலயம்


1 இரா. 6,7,8

ஆட்சிப்பொறுப்பை ஏற்ற நான்காம் வருடத்தில், தாவீது அரசன் கட்டத் தீர்மானித்திருந்த அதே இடத்தில் சாலொமோன் தேவாலயம் கட்ட ஆரம்பித்தார்.

விலையேறப் பெற்ற கற்களால் தேவாலயம் கட்டப்பட்டு, அதன் உட்புறம் கேதுரு மரப் பலகைகளால் மூடப்பட்டது. அது மொட்டுகளும், மலர்ந்த பூக்களுமான சித்திர வேலையால் அழகு செய்யப்பட்டது. ஆலயத்தின்

உட்புற, வெளிப்புறச் சுவர்களில் கேருபீன்களும், மலர்ந்த பூக்களுமான சிற்பங்கள் செதுக்கப்பட்டன. ஆலயத்தின் உட்புறம் எங்கும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டது.

ஆண்டவருடைய உடன்படிக்கை பெட்டியை வைப்பதற்காகக் கருவறையைக் கட்டி, இதனைப் பொன் தகட்டால் மூடினார். அந்த அறைக்குப் பொன்னாலான கதவுகள் போடப்பட்டன. பொன்தகட்டால் மூடப்பட்ட இரண்டு கேருபீன்கள் இந்த அறையில் வைக்கப்பட்டன. இது ஒவ்வொன்றும் 10 முழம் உயரமுள்ளதாக இருந்தது. இவற்றின் செட்டைகள் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருந்தன.



சாலொமோனின் ஆலயம் (1 இரா. 6,7,8)

தேவாலயக் கட்டுமானப் பணி ஏழு ஆண்டுகள் நடந்தன. ஆலயம் கட்டி முடிக்கப்பட்ட பின், தாவீது அரசன் பரிசுத்த காணிக்கையாக நேர்ந்துகொண்ட பொன். வெள்ளி, பணிமுட்டுகளைக் கொண்டு வந்து தேவாலயத்தின் கருவூலத்தில் வைத்தார்.

ஆலய மங்கலப் படைப்பு அன்று குடும்பத் தலைவர்கள், கோத்திரத் தலைவர்கள், மூப்பர்கள் மற்றும் மக்கள் அனைவரும் எருசலேமில் கூடினார்கள். உடன்படிக்கைப் பெட்டி, ஆசரிப்புக் கூடாரம், கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் ஆசாரியரும் லேவியரும் சுமந்து கொண்டு வந்தனர். அவற்றை ஆலயத்தின் கருவறையில் கேருபீன்களின் செட்டைகளின் கீழே கொண்டு வந்து வைத்தார்கள். மோசே வைத்த இரண்டு கற்பலகைகள் மட்டும் அதில் இருந்தன.

அப்பொழுது கடவுளுடைய மகிமை தேவாலயத்தை நிரப்பியது. யாவரும் கடவுளுக்குத் துதிசெலுத்தினர். சாலொமோன் எழுந்து நின்று இஸ்ரவேல் சபையார் அனைவரையும் ஆசீர்வதித்தார்.

மங்கலப் படைப்பு திருநாளை முன்னிட்டு, மக்கள் யாவரும் ஏழு நாள் திருவிழா கொண்டாடினர். எட்டாம் நாளில் சாலொமோன் அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார். அவர்கள் அரசனை வாழ்த்தி, கடவுள் செய்த நன்மைகளுககாக சந்தோஷப்பட்டு மன மகிழ்ச்சியோடே தத்தம் வீடுகளுக்குச் சென்றனர்.

181. சேபா நாட்டு அரசி

1 இரா. 10

சாலொமோனின் புகழைக் கேள்விப்பட்ட சேபா நாட்டு அரசி, அவரைச் சோதித்து உண்மை நிலையை அறிவதற்காக மிகுந்த பரிவாரத்தோடு எருசலேமுக்கு வந்தாள்.

அவள் சாலொமோனைச் சந்தித்து தனது மனதில் எழுந்த பல்வேறு காரியங்களைக் குறித்து அவரோடு பேசினாள். அவள் கேட்ட எல்லாவற்றிற்கும் ஞானி தக்க பதிலளித்தார். அரசிக்கு விடுக்கக் கூடாதபடிக்கு ஒன்றாகிலும் சாலொமோனுக்கு மறைபொருளாயிருக்கவில்லை. இதனால் மெய்யாகவே கடவுள் சாலொமோனுக்கு ஞானம் வழங்கியுள்ளார் என்றும் கடவுள் அரசனோடு இருக்கிறார் என்பதையும் அரசி கண்டு கொண்டாள்.

சாலொமோன் கட்டியிருந்த தேவாலயம், அரண்மனை, அவரது ஞானம் மற்றும் அவரது ஊழியர்களைக் கண்ட அரசி ஆச்சரியத்தில் மூழ்கிப் போனாள்.

அவள் ஞானியைப் பார்த்து, 'உம்முடைய ஞானத்தைப்பற்றி எனது நாட்டில் நான் கேள்விப்பட்ட போது, முதலில் அதை நம்பவில்லை. இப்போது அதை உண்மை என்று கண்டு கொண்டேன். உமது ஞானமும்,

செல்வமும் நான் கேள்விப்பட்டதைவிட அதிகமாகயிருக்கிறது' என்று பாராட்டினாள். மேலும் சாலொமோனுக்கு ஞானம் கொடுத்த கடவுளுக்குத் துதி செலுத்தினாள்.

சாலொமோனுக்கு அரசி பொன், மிகுந்த நறுமணப் பொருட்கள், இரத்தினங்களைப் பரிசாக வழங்கினாள். அரசனும் அவளுக்குப் பல்வேறு வெகுமதிகளைக் கொடுத்தார். அரசி விரும்பிக் கேட்ட பொருட்களையும் ராஜா கொடுத்து அவளை வழி அனுப்பி வைத்தார். சேபா நாட்டு அரசி மிகுந்த மனநிறைவுடன் தன் நாடு திரும்பினாள்.

182. சாலொமோனின் பாவங்கள்

1 இரா. 11

கடவுள் இஸ்ரவேல் மக்களைப் பார்த்து, 'நீங்கள் அந்நிய இனத்தாரில் பெண் கொள்ளவும் வேண்டாம், கொடுக்கவும் வேண்டாம். ஏனெனில் அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தெய்வங்களை வணங்கும்படி உங்களை மாற்றி விடுவார்கள்' என்று ஏற்கெனவே கட்டளையிட்டிருந்தார்.

ஆனால் சாலொமோனின் மனைவிமார்களும், மறுமனையாட்டிகளுமோ அந்நிய இனத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். அவர்கள் கடவுளின் வழியை விட்டு சாலொமோனைக் கொஞ்சம் கொஞ்சமாக வழிவிலகச் செய்தனர்.

சாலொமோனுக்கு வயதானபோது பிற தெய்வங்களுக்குக் கோயில்கள் கட்டி, தனது மனைவியரைப் பிரியப்படுத்துவதற்காக அவற்றை வழிபட ஆரம்பித்தார்.

இது கடவுளுக்குப் பிரியமில்லாதிருந்தது. எனவே கடவுள் சாலொமோனுக்கு இரண்டு முறை தரிசனமாகி, 'பிற தெய்வங்களை வழிபடவேண்டாம்'' என்று எச்சரித்தார். ஆயினும் மன்னனோ மனந்திரும்பவில்லை.

இதனால் கோபமடைந்த கடவுள் சாலொமோனை நோக்கி, ''எனது கட்டளைகளை நீ கைக்கொள்ளாமற் போனதால் உன் அரசை உன்னிடமிருந்து பிடுங்கி உன் ஊழியரில் ஒருவனுக்கு கொடுக்கப் போகிறேன். ஆயினும் உன் தகப்பனாகிய தாவீதின் பொருட்டு, அதை உன் காலத்தில் செய்யாமல் உனது மகன் நாட்களில் செய்வேன். நான் தெரிந்து கொண்ட தாவீதினிமித்தமும், எருசலேமினித்தமும் உனது மகன் இஸ்ரவேலின் ஒரு பகுதிக்கு மட்டும் அரசனாக இருப்பான் என்றார்.

சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப் போலக் கடவுளைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கடவுளின் பார்வைக்குப் பொல்லாப்பானதையே செய்தார்.

183. சாலொமோனின் மரணம்

1 இரா. 11

சாலொமோனின் இறுதி நாட்களில், விரோதிகள் பலர் அவருக்கு விரோதமாக எழும்பினார்கள். தாவீது அரசனின் படைத் தலைவனாகிய யோவாப் ஏதோமிய ஆண் மக்களைக் கொலை செய்தபோது, எகிப்துக்கு தப்பி ஓடிப்போன ஆதாத் என்பவன் இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்பி வந்து சாலொமோனுக்கு எதிராக பொல்லாப்புச் செய்தான்.

சீரிய நாட்டு அரசனாகிய ரேசான் என்பவன், சாலொமோனுடைய நாட்களெல்லாம் இஸ்ரவேலுக்கு விரோதியாயிருந்தான்.

சாலொமோனின் ஊழியக்காரனான யெரொபெயாம் என்பவனும் அரசனுக்கு விரோதமாக எழும்பினான். இவன் இளைஞனும், பராக்கிரமசாலியும், கரும வீரனுமாயிருந்தான்.

ஒருநாள் தீர்க்கதரிசி அகியா, தான் போர்த்தியிருந்த புதுச்சால்வையை பன்னிரெண்டு துண்டுகளாகக்கிழித்து, 'பத்துத் துண்டுகளை எடுத்துக்கொள்' என்று யெரொபெயாமிடம் கூறினார். மேலும், 'சாலொமோன் மகனின் கையிலிருந்து ஆட்சியை எடுத்து, அதில் பத்து கோத்திரங்களை உனக்குக் கொடுப்பேன். மீதி இரண்டு பகுதியை சாலொமோன் மகன் ரெகொபெயாம் ஆட்சி செய்வான். எனது கட்டளைகளின்படி நீ நடந்தால், நான் உன்னோடிருப்பேன் என்று கடவுள் கூறுகிறார்' என்றும் தீர்க்கதரிசி கூறினார்.

இச்செய்தியைக் கேள்விப்பட்ட சாலொமோன், யெரொபெயாமைக் கொலே செய்ய வகை தேடினன். எனவே யெரொபெயாம் எகிப்துக்கு ஓடிப்போனன்.

சாலொமோன் நாற்பது ஆண்டுகள் அரசாட்சி செய்து மரணம் அடைந்தார். அவரைத் தாவிதின் நகரத்தில் அடக்கம் செய்தனர்.

184. பிளவுற்ற அரசு

1 இரா. 12

சாலொமோன் மரணத்திற்குப்பின், அவரது மகன் ரெகோபெயாம் அரசரானர். சாலொமோனுக்குப் பயந்து எகிப்துக்கு ஓடிப்போன யெரொபெயாம் இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்பி வரும்படி மக்கள் அழைத்தனர்.

யெரொபெயாம் தலைமையில் மக்கள் யாவரும் ஒன்றுகூடி அரசனிடம் சென்று, 'உமது தகப்பனர் எங்களைக் கொடுமையாக அரசாட்சி செய்தார். அவர் எங்கள்மீது வைத்த பாரமான நுகத்தை நீர் இலகுவாக்கும். அப்போது உம்மை சேவிப்போம்' என்றனர். அதற்கு அரசன், 'நீங்கள் போய் மூன்று நாள் கழித்து என்னிடம் திரும்பி வாருங்கள். அப்பொழுது நான் பதிலளிக்கிறேன்' என்ருர்.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசன் முதியோரிடம் ஆலோசனை கேட்டார். பொது மக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் படி அவர்கள் கூறினர். பின்னர் இளைஞர்களிடம் அவர் கேட்டபோது, மக்களை மேலும் கொடுமையாக ஆட்சி செய்யும்படி ஆலோசனை கூறினர்கள். இளைஞர்களின் ஆலோசனையை அரசன் ஏற்றுக்கொண்டார்.

மூன்றும் நாளில் தம்மிடம் கூடிவந்த மக்களிடம், 'எனது தகப்பனரைவிட நான் கொடுமையாக ஆட்சி செய்யப்போகிறேன்' என்று அறிவித்தார். இதனல் கோபமடைந்த மக்கள்,' 'இனி எங்களுக்கும் தாவிதுக்கும் பங்கு கிடையாது. தாவீதே, நீ உன் கோத்திரத்தைக் கவனித்துக்கொள்' என்று கூறிவிட்டுத் தத்தம் வீடுகளுக்குச் சென்றனர். தனது ஊழியக்காரனகிய அதோராமை அரசன் அவர்களிடம் அனுப்பிய போது, அவனைக் கல்லெறிந்து கொன்றனர்,

இவ்வாறு கலகம் செய்து பிரிந்துபோன இஸ்ரவேல் மக்கள் தங்களுக்கு யெரொபெயாமை அரசனுக்கிக் கொண்டார்கள். யூதா பென்யமீன் கோத்திரங்களுக்கு மட்டும் சாலொமோனின் மகன் ரெகொபெயாம் அரசனயிருந்தார்.

185. ஆகாபும் அவன் அரசியும்

1 இரா. 14,15

யெரொபெயாமுக்கு கடவுளுடைய செய்தி அகியா தீர்க்கன்மூலம் வந்தது ஏற்ற சமயத்தில் நிறைவேறிற்று. யெரொபெயாம் மரித்தவுடன், குமாரரில் ஒருவன் அரசனனன். ஆனல் அவன் நீண்ட காலம் அரசாட்சி செய்ய வில்லை. அவனுக்கு எதிராக ஆட்சி செய்ய வேண்டுமென்பவன் அவனைக் கொன்றுவிட்டு அரசனனன். பின் அவன் யெரோபெயாம் குடும்பத்தினர் ஒவ்வொருவரையும் கொடூரமாகக் கொன்ருன். புதிய அரசன் இறந்தவுடன் அவன் மகன் அரசனனன். ஆனல் அவரும் அரசாங்க உத்தியோகஸ்தனல் கொல்லப்பட்டான். ஏனெனில் அவன் அரசனக வேண்டுமென்பதற்காக. இவ்விதமாக அரண்மனை முழுவதும் வேவுகாரராலும், சதி திட்டங்களாலும், கொலைகளாலும் நிறைந்திருந்தது.

ஒருநாள் தளபதி ஓம்ரி என்பவன் வீரர்களின் உதவியால் அரசனனன். அவன் அரசாட்சியைப் பற்றி அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் கேள்விப்படலாயினர். ஏனெனில் அவன் கெட்டிக்காரனகவும் வீரமுள்ள அரசனகவும் இருந்தான். இஸ்ரவேலின் புதிய தலைநகரமாகிய சமாரியா பட்டணத்தைக் கட்டினன். ஆனல் அவன் கடவுளைச் சேவிக்கவில்லை. அவன் உண்மையற்ற தெய்வத்தை தொழுது வந்தான். ஓம்ரி இறந்தவுடன் அவன் மகன் ஆகாப் அரசனனன். ஆனல் சீதோன் அரசியாகிய யேசபேல் அவன் மனைவியாகி இஸ்ரவேலை ஆண்டு வந்தாள். இஸ்ரவேலுக்கு வந்தபோது நூற்றுக்கணக்கான பாகால் தீர்க்கதரிசிகளையும் கூட அழைத்து வந்தாள். ஆகாப் சமாரியாவில் ஒரு பாகால் கோயிலை அவளுக்காகக் கட்டினன்.

யேசபேல் இஸ்ரவேலின் கடவுளை வழிபடாதபடி செய்தாள். கடவுளின் தீர்க்கதரிசிகள் யாவரையும் கொன்று போட்டாள். ஏனெனில் அவள் பாகால் தெய்வத்தை எல்லோரும் வணங்கவேண்டும் என்றும், இஸ்ரவேலின் தெய்வத்தை மறந்துவிடவும் வழி வகுத்தாள். கடவுளின் கற்பனைகளைக் கைக்கொள்ளாதபடியும் அவரின் அன்பை மற்றவர்களுக்கு காட்ட வேண்டும் என்ற கடவுளின் கட்டளையையும் மறக்கும்படி செய்தாள். ஆனால் கடவுளோ ஒரு விசேஷமான மனிதனை எலியாவை தெரிந்துகொண்டார். மக்களுக்கு ஒரு உண்மையான கடவுள் உண்டு என்று காண்பிக்கவும், அவர்களைக் கடவுளிடம் திரும்ப கொண்டுவரவும் தெரிந்துகொண்டார்.

எலிசா திறந்த வெளிகளில், வாழ்பவனாகவும், இரட்டை உடுப்பை அணிந்தவனுமாயிருந்தான். மௌனமாய் இல்லாமல் அரசனிடமும் கடவுளின் செய்தியைச் சொல்லுவதற்குத் தைரியமுள்ள ஒரு உண்மையான கடவுளின் தீர்க்கதரிசியாகவும். நீதிக்கும், உண்மைக்கும் கடவுளில் நிலைத்திருப்பவனாகவும் இருந்தார்.

186. ஓர் நீண்ட வறட்சிக் காலம்

1 இரா. 17

ஒருநாள் கடவுளின் தீர்க்கதரிசியான எலியா ஆகாப் அரசனிடம் தைரியமாகச் சென்று நான் கடவுளின் நாமத்தில் சொல்லுகிற காரியம் என்னவென்றால் நாட்டில் இரண்டு வருஷத்திற்குமேல் மழை பெய்யாமல் இருக்கும் என்று கூறினான். நான் மறுபடியும் சொல்லும் வரை மழை பெய்யாதிருக்கும் என்று உண்மையுள்ள கடவுள் சொல்லுகிறார், என்பதை நீ நாளடைவில் அறிந்துகொள்வாய். அவர் இஸ்ரவேலில் வல்லமை உள்ளவர் என்றும் கூறினான்.

இப்படிப்பட்ட உஷ்ணமான வறட்சி காலத்தில் மழை அபூர்வம். மழை இல்லாவிடில் கோதுமை மணிகளும், பச்சை காய்கறிகளும் காய்ந்துபோகும். உணவும் கிடைக்காத பஞ்ச காலம் ஏற்படும் என்பது தெரிந்த உண்மை. ஆகாபின் மனைவி யேசபேல், பாகால் என்ற தெய்வத்தினிடம் வேண்டினால் கட்டாயம் மழை பெய்யும் என்று ஜெபித்தாள். ஆனால் மழை பெய்யவில்லை. ஆகாபும் யேசபேலும் எலியாவோடு கோபம் கொண்டு அவனைக் கொலை செய்ய விரும்பினர்.

ஆனால் கடவுள் எலியாவை நோக்கி, நீ அரசனைவிட்டு கேரீத் ஆற்றண்டையில் போய் ஒழித்துக்கொள். நான் உன்னை காகங்களால் போஷிப்பேன் என்றார். எலியா கடவுளின் வார்த்தையின்படியே கேரீத் ஆற்றில் தங்கினார். அப்போது காகங்கள் அப்பத்தையும், இறைச்சியையும் கொண்டு வந்து எலியாவை போஷித்தன. அவன் நன்றியோடு ஆகாரத்தை உட்கொண்டான். அதிகமான வெயில் அடித்ததினால் மழை இல்லை, கேரீத் ஆற்றுத் தண்ணீரும் வற்றிப்போயிற்று. உடனே கடவுள் எலியாவை நோக்கி, 'சாரிபாத் ஊருக்குப் போ. அங்கே ஒரு விதவை உன்னை போஷிப்பாள்' என்றார்.

எலியா, சாரிபாத் ஊருக்கு வாசலண்டை வந்தபோது ஒரு விதவை குனிந்து விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். இவள்தான் கடவுள் சொன்ன பெண்மணி என்பதை அறிந்துகொண்டார். அவளிடம் தாகத்திற்குத் தண்ணீரும் பசிக்கு அப்பமும் கொண்டு வந்து தருமாறு கேட்டார்.



187. குறைவு படாத ஆகாரம்

1 இரா. 17

உணவும் தண்ணீரும் கேட்ட எலியா விடம் சாரிபாத் ஊர் விதவை என் பானையில் ஒரு பிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல் என்னிடத்தில் வேறு ஒன்றும் இல்லை என்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லு கிறேன் என்று எலியா தீர்க்கதரிசியிடம் கூறினாள். இதோ என் குமாரனும் நானும் சாப்பிட்டு செத்துப்போக அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்று சொன்னாள்.

அப்பொழுது எலியா 'பயப்படாதே, மகளே! நீ போய் என் வார்த்தையின்படி ஆயத்தப் படுத்து, முதலில் எனக்கு ஒரு சிறிய அடை யைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா' என்றான். மேலும் அவர் ஆசீர்வதித்து சொன்னது 'கர்த்தர் தேசத்தின்மேல் மழை யைக் கட்டளையிடும் நாள்வரைக்கும் பானையில் மா செலவழிந்துபோவதும் இல்லை. கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதுமில்லை' என்றான். அவள் போய் எலியா சொன்னபடி செய் தாள். அந்தப்படியே பானையிலே மா செல வழிந்து போகவுமில்லை, கலசத்தில் எண்ணெய் குறைந்து போகவுமில்லை. அவளும் இவனும் அவள் வீட்டாரும் அநேக நாள் சாப்பிட்டார் கள். இப்படியிருக்க விதவையின் மகன் வியாதி யில் விழுந்தான். அவனுடைய சுவாசம் நின்று விட்டது. உடனே விதவை எலியாவினிடம் முறையிட்டாள் அவன் அவனை எடுத்து, தான் தங்கி இருந்த மேல்வீட்டிலே அவனைக்கொண்டு கட்டிலின்மேல் வைத்து கர்த்தரை நோக்கி, விண்ணப்பம் செய்தான். அவன் மூன்று முறை பிள்ளையின்மேல் குப்புற விழுந்து கர்த்தாவே இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பி பிரவேசிக்கப்பண்ணும் என்று கர்த்தரை வேண்டிக்கொண்டான்.

கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார். பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பி வந்தது. அவன் பிழைத்தான். பிள்ளையை எடுத்து மேல் வீட்டிலிருந்து கீழ் வீட்டிற்கு கொண்டு வந்து அவள் தாயினிடத்தில் கொண்டு வந்து பிள்ளை உயிரோடிருக்கிறான் என்றார். அப்பொழுது நீர் தேவனுடைய மனுஷன் என்றும் கர்த்தருடைய வார்த்தை உண்மை என்றும் இதனால் அறிந்திருக்கிறேன் என்றும் அறிக்கையிட்டாள்.

188. மலையின்மேல் ஒரு போட்டி—உண்மை கடவுள்

1 இரா. 18

மூன்று வருஷம் கழித்து ஆண்டவர் ஒரு நாள் எலியாவிற்குத் தோன்றி நான் பூமியின் மேல் மழை பெய்யச் செய்யும் பொருட்டு; நீ போய் உன்னை ஆகாபுக்குக் காட்டு என்று அவ னுக்குக் கட்டளையிட்டார். எலியா அப்படியே போய்த் தன்னைக் காட்டினான். அதன் முன்ப தாக ஒபதியா என்ற தீர்க்கதரிசி மூலமாய், ஆகாபைச் சந்தித்தான்.

ஆகாப் எலியாவைக் கண்டபோது அவனை நோக்கி இஸ்ரவேலரைக் கலங்கப் பண்ணுகிற வர் நீர் அல்லவா? என்றான். அதற்கு எலியா இஸ்ரவேலரைக் கலங்கப்பண்ணுகிறவர் நான் அல்ல, 'கர்த்தரின் கட்டளைகளைவிட்டு பாகால் களைப் பின்பற்றினதினால், நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாரும் இஸ்ரவேலரைக் கலங்கப் பண்ணுகிறவர்கள்' என்றான். மேலும் அவன் கூறியது கர்மேல் பர்வதத்தில் இஸ்ரவேலர் அனைத்தையும் பாகாலின் தீர்க்கத்தரிசிகள் நானூற்று ஐம்பது பேரையும் யேசபேலின் தீர்க்கத்தரிசிகள் நானூறு பேரையும் என்னிடத் தில் கூட்டிக்கொண்டு வர ஆட்களை அனுப்பும் என்றான்.

அப்படியே ஆகாப் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிடத்திலும் ஆட்களை அனுப்பி, கர்மேல் பர்வதத்திலே அந்தத் தீர்க்கத்தரிசிகளைக் கூடி வரும்படி செய்தான். அப்பொழுது எலியா சகல மக்களிடத்திற்கும் வந்து சொன்னது 'நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள். கர்த்தர் தெய்வ மானால் அவரைப் பின்பற்றுங்கள். பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்; பலி செலுத்தும்படி பாகால் தீர்க்கத்தரிசிகளுக்கும், எனக்கும் காளை இரண்டை கொண்டுவந்து கொடுங்கள். அவர்கள் ஒரு காளையைச் சந்து சந்தாகத் துண்டித்து நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் வைக்கக் கடவன். நான் மற்றக் காளையை நெருப்புப் போடாமல் அப்படியே வைப்பேன். நீங்கள் உங்கள் கடவு ளுடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுங்கள்.

நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடுவேன். அப்பொழுது அக்கினியால் உத்தரவு அருளும் கடவுளே உண்மை கடவுள்' என்று சொன்னன்.

அதைக் கேட்ட மக்கள் இது நல்ல வார்த்தை நான் என்றார்கள், அதன்படி செய்து பாகாலின் நாமத்தை, காலை முதல் மத்தியானம் வரை சொல்லிக் கூப்பிட்டார்கள். ஒரு உத்தரவும் வரவில்லை. திரும்பவும் பாகாலே எங்களுக்கு கேட்டருளும் என்றார்கள். எலியா சொன்னது 'பாகால் இப்பொழுது தியானம் செய்தாலும் செய்வான். வேறு ஏதோ ஒரு அலுவலாய் இருப்பான், பயணம் போய் இருந்தாலும் போய் இருந்திருப்பான். தூங்கினாலும் தூங்கி இருப்பான்' என்று நகைத்து, இகழ்ந்து சொன்னான். அவர்கள் கூக்குரலிட்டு கூப்பிட்டு இரத்தம் மேலெல்லாம் வடிய கத்தியினால் தங்களைக் கீறி காயப்படுத்திக்கொண்டார்கள். ஆயினும் ஒரு சத்தமும் பதிலும் வரவில்லை.

அப்பொழுது எலியா சகல மக்களையும் கிட்டே வரவழைத்து பன்னிரெண்டு கற்களை எடுத்து ஒரு பலிபீடம் கட்டி, அதைச் சுற்றிலும் ஒரு பள்ளம் பறித்து, காளையை அடித்து துண்டாக்கி, அத்துண்டுகளை விறகு கட்டைகளின்மேல் அடுக்கி வைத்தான். அதன்மேல் மூன்று தரம் தண்ணீர் ஊற்றச் சொல்லி, பின் ஆண்டவரை பணிந்துகொண்டு 'ஆண்டவரே ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் கடவுளே நீரே உண்மை கடவுள் என்றும், நான் உமது அடியான் என்றும் ஊழியக்காரன் என்றும் இன்றைக்கு விளங்கப் பண்ணும்' என்று ஜெபித்தான். அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகன பலியையும், விறகுகளையும், கற்களையும் மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்து தண்ணீரையும் நக்கிப் போட்டது. மக்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து கர்த்தரே—தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள். எலியா, பாகாலின் தீர்க்கதரிசிகளைப் பிடித்துக் கீசோன் என்னும் ஆற்றங்கரையில் கொண்டு போய் அங்கே கொலை செய்து போட்டான்.

189. யேசபேலின் கோபம்

1 இரா. 19

யேசபேல், ஆகாபு மூலம் கேள்விப்பட்டதை அறிந்து அவள் எலியாவைக் கொன்று பழிவாங்கத் தீர்மானம் செய்தாள். அதை அறிந்த எலியா உயிர் தப்பிப் பிழைக்க அவ்விடம் விட்டு வனாந்தரத்தில் சென்று அங்கே ஒரு சூரைச் செடியின் அடியில் உட்கார்ந்து ஆண்டவரே போதும் இனி என் உயிரை வாங்கிக்கொள்ளும் அடியேன் தன் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி மனம் சோர்ந்து படுத்துத் தூங்கிவிட்டான். அவன் தூங்கும்பொழுது ஒரு தூதன் வந்து எழுந்து சாப்பிடு என்று சொல்லி அவனை தட்டி எழுப்பினான். அவன் விழித்து பார்த்தபோது தன் தலைமாட்டிலே சுட்ட ஒரு அடையும் தண்ணீர் நிரம்பிய பாத்திரமும் இருக்கக் கண்டான். அவன் எழுந்து பசியும் தாகமும் தீர்த்துக்கொண்டு பழையபடி தூங்கினான்.

தேவதூதன் மறுபடியும் வந்து, அவனை எழுந்து சாப்பிடு, நீ போகவேண்டிய இடம் வெகுதூரம் என்று சொல்லி அவனை தட்டி எழுப்பினான். எலியா உடனே எழுந்து பசி தாகத்தைத் தீர்த்துக்கொண்டு, அந்த பெலத்தினால் நாற்பது நாட்கள் அல்லும் பகலும் நடந்து ஓரேப் என்னும் தேவனது மலையில் வந்து சேர்ந்து அங்கே ஒரு குகையிலே நுழைந்து அங்கு இராத் தங்கினான்.

அங்கேயும் தேவன் அவனுக்கு தரிசனமானார். அவர் பூமியதிர்ச்சியிலும், சுழல் காற்றிலும் அக்கினியிலும் காணப்படாமல், மெல்லிய காற்றில் தன்னை வெளிப்படுத்தினார். எலியாவே, நீ வந்த காரியம் என்ன என்ற சப்தம் கேட்டது. அதற்கு எலியா, நான் ஆண்டவருக்காக வைராக்கியம் பாராட்டினேன். ஆனாலும் உமது தீர்க்கதரிசிகளை பட்டயத்தினால் வெட்டிப் போட்டார்கள். அடியேன் ஒருவனே மீதி என் உயிரையும் வாங்கப் பார்க்கிறார்களென்று முறையிட்டான். அதற்கு எலியாவை நோக்கி, 'பாகாலுக்கு முழங்கால் முடங்கி முத்தம் செய்யாத ஏழாயிரம் பேரை நான் மீதி வைத்திருக்கிறேன்' என்று ஆண்டவர் அவனுக்குச் சொன்னார். உடனே எலியா அவ்விடம் விட்டு புறப்பட்டுப் போகும் வழியிலே எலிசா உழுது கொண்டிருப்பதைக் கண்டு, அவன்மேல் தன் சால்வையைப் போட்டான். எலிசா, எலியாவைப் பின்தொடர்ந்து அவனுக்குப் பணிவிடை செய்தான்.

190. ஆகாபின் ஆசை யேசபேலின் ஆலோசனை

1 இரா. 20

நாபோத்து எனப்படும் ஒரு எளிய மனிதனுக்கு சமாரியாவின் இராஜாவாகிய ஆகாபின் அரண்மனை அண்டையில் ஒரு திராட்சத் தோட்டம் இருந்தது. ஆகாப் நாபோத்தோடே பேசி உன் திராட்சத் தோட்டத்தை கீரைத் தோட்டம் ஆக்கும்படி எனக்குக் கொடு. அதைப் பார்க்கிலும் நல்ல திராட்சத் தோட்டத்தை அதற்குப் பதிலாக உனக்குத் தருவேன் என்றான்.

நாபோத், ஆகாபை நோக்கி, நான் என் பிதாக்களின் சுதந்திரத்தை உமக்குக் கொடாதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக என்றான். உடனே ஆகாப் அரசன் சலிப்பும், சினமுமாய்த் தன் வீட்டிற்கு வந்து உணவுகூட உண்ணாமல் தன் கட்டிலின்மேல் படுத்துத் தன் முகத்தை திருப்பிக்கொண்டிருந்தான். அதன் காரணத்தை யேசபேல் அறிந்தாள்.

உடனே யேசபேல் ஆகாபிடம், நான் நாபோத்திடம் பேசி, திரும்ப அந்த திராட்சத் தோட்டத்தை உமக்குக் கொடுப்பேன் என்று கூறினாள். அதற்காக ஆகாபின் பெயரால் நிருபங்களை எழுதி அவன் முத்திரையை அவைகளுக்குப் போட்டு அதை மூப்பர்களுக்கு அனுப்பினாள். அதிலே நாபோத் அரசனைத் தூஷித்ததாகவும் அவனை கல்லெறியப்பட வேண்டும், அதனால் அவன் சாகவேண்டும் என்று எழுதினாள். உடனே அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய் அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறிந்தார்கள். அவன் செத்ததும் ஆகாப் அவன் திராட்சத் தோட்டத்தைச் சொந்தமாக எடுத்துக்கொண்டான்.



ஆகாபின் ஆசை (1 இரா. 20)

191. ஆகாபின் மரணம்

1 இரா. 22

கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாயிற்று, அவர் ஆகாபைப் பார்த்துச் சொன்னது என்னவென்றால் நீர் நாபோத்தை கொலை செய்து அவன் திராட்சத் தோட்டத்தை எடுத்துக்கொண்டபடியாலும், நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள்

நக்கும் என்றும் யேசபேல், அவள் சாகுமிடத்தில் நாய்கள் அவள் இரத்தத்தை நக்கும் என்றும் கர்த்தர் சொல்லுகிருர்' என்ருர்.

மேலும் ஆகாபின் சந்ததியில் பட்டணத்திலே மரிக்கிறவனை ஆகாயத்துப் பறவைகளும் தின்னும் என்ருர். ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்டபோது தன் வஸ்திரங்களைக் கிழித்துத் தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக்கொண்டு உபவாசம்பண்ணி இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்துகொண்டான். கர்த்தர் அதைப் பார்த்து ஆகாப் தன்னை தாழ்த்தினதினுல் அவன் நாட்களில் அந்தப் பொல்லாப்பை வரப்பண்ணுமல் இருந்தார். பின் அவன் குமாரன் நாட்களில் அதை அவன் வீட்டின்மேல் வரப்பண்ணுவேன் என்று கூறினுர். ஆகாப் தன் பிதாக்களோடு நித்திரை அடைந்தபின் அவன் குமாரனுகிய அகசியா அவன் ஸ்தானத்தில் இராஜாவாஞன்.

192. மலையின்மேல் நெருப்பு

2 இரா. 1

இஸ்ரவேலின் அரசனுகிய ஆகாபுக்குப்பின் அவன் மகனுகிய அகசியா அரசனுஞன். அவன் ஆட்சியின் ஆரம்பத்தில் மிகவும் வியாதிப் பட்டுப்போஞன். அதனுல் அவன்தான் அந்த வியாதி நீங்கிப் பிழைக்கமுடியுமா என்று அறியும்படி எக்ரோனிலுள்ள அந்நிய தேவர்களிடத்தில் விசாரிக்க ஆட்களை அனுப்பினுன்.

விசாரிக்கச் சென்ற ஆட்கள் வழியில் எலியா தீர்க்கதரிசியைச் சந்தித்துத் தாங்கள் போகின்ற காரணத்தைக் கூறினர். கர்த்தருடைய தூதன் ஏற்கெனவே எலியாவிடம் அதுபற்றி பேசியிருந்ததால் அவர் அவர்களிடம் 'இஸ்ரவேலில் தேவன் இல்லையென்று நீங்கள் அந்நிய தேவர்களிடம் விசாரிக்கப்போகிறீர்கள்? இதனுல் உங்கள் அரசன் ஏறிய கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவான் என்று அவனுக்குச் சொல்லுங்கள்' என்று சொல்லியனுப்பினுர்.

எலியா தீர்க்கதரிசி சொன்னதையெல்லாம் அந்த ஆட்கள் அரசனிடத்தில் கூறினர். அதனுல் அரசன் மிகவும் கோபமடைந்து எலியாவைப் பிடித்து வரும்படி ஒரு தலைவனையும் அவனுடைய ஐம்பது சேவகரையும் அனுப்பினுன். அந்த ஆட்கள் எங்கு தேடியும் காணுமல் இறுதியில் ஒரு மலையுச்சியில் அவர் இருப்பதையறிந்து அவரிடம் சென்று அரசர் அழைத்திருப்பதால் கீழே இறங்கி வரும்படி ஆணையிட்டனர். அதற்கு எலியாதான் தேவனுடைய மனுஷனுயிருந்தால் வானத்திலிருந்து நெருப்பு இறங்கி அவர்களை அழிக்கட்டும் என்று கூற அப்படியே நெருப்பு இறங்கி அவர்களை அழித்தது. தான் அனுப்பியவர்கள் திரும்பி வராததால் அரசன் மீண்டும் ஒரு தலைவனையும் அவனுடைய ஐம்பது சேவகரையும் தேடும்படி அனுப்பினுன். மலையுச்சியில் அவர்கள் எலியாவைக் கண்டு அரசன் ஆணைப்படி கீழே இறங்கி வரும்படி ஆணையிட்டனர். அந்த முறையும் எலியா விரும்பியதுபோல் வானத்திலிருந்து நெருப்பு இறங்கி அவர்களை அழித்துப்போட்டது. அப்படியிருந்தும் அரசன் திருப்தியடையாமல் மீண்டும் ஒரு தலைவனையும் ஐம்பது சேவகரையும் எலியாவைப் பிடித்துவர அனுப்பினுன்.

இந்த மூன்ருவது தலைவன் மலையுச்சிக்கு ஏறி வந்து எலியாவுக்குமுன் முழந்தாளிட்டு தன்னுடைய உயிரும் தன்னுடன் வந்திருப்பவர்கள் அவர் பார்வையில் அருமையாயிருக்கும்படி வேண்டிக்கொண்டான். கர்த்தருடைய தூதனுனவர் ஏற்கெனவே எலியாவிடம் பயப்படாமல் அவனுடன் இறங்கிப்போகும்படி சொல்லியிருந்ததால் அந்த தலைவனுடன் சென்று அரசனைப் பார்த்து 'இஸ்ரவேலில் தேவன் இல்லையென்று நீ அந்நிய தேவர்களிடம் விசாரிக்க ஆட்களை அனுப்பிய காரணத்தால் நீ ஏறிய கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிருர்' என்ருர். அந்தோ! பரிதாபம்! கர்த்தர் எலியாவிடம் சொன்னபடியே கர்த்தருக்கு முதலிடம் கொடுக்காத அவ்வரசன் குணமடையாமலே இறந்துபோனுன்.

193. அக்கினி இரதம்

2 இரா. 2

எலியாவுக்கு வயது அதிகமாகி முதுமையடைந்து தான் இன்னும் மிகச் சொற்ப நாட்களே உயிரோடிருக்கமுடியும் எனத் தெரிந்த போது, அவர் தமது சீடனாகிய எலிசாவைத் தம்முடன் அழைத்துக்கொண்டு தாம் எந்த இடத்தில் ஆண்டவரிடத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவாரோ அந்த இடத்திற்கு தமது சீடனையும் அழைத்துச் சென்றார்.

அவர்கள் நடந்துசென்று யோர்தான் நதியை அடைந்தபோது எலியா தம் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தார். அந்த நதி இரண்டாகப் பிரிந்து இருபுறமும் நீர்ச்சுவராக நின்று நடுவில் உலர்ந்த தரை காணப்பட்டது. அவர்களிருவரும் அதன் வழியாய் நதியைக் கடந்து அக்கரைக்குப் போனார்கள். அக்கரை சேர்ந்தபின் எலியா எலிசாவிடம் தான் அவரைவிட்டுப் பிரியுமுன் அவருக்கு விருப்பமானதைக் கேட்கும்படி ஆணையிட்டார். அதற்கு எலிசா தன் குருவிடமுள்ள ஆவியின் வரம் தமக்கு இரட்டிப்பாகக் கிடைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அதற்கு எலியா 'மிக அரிதான காரியத்தைக் கேட்டாய், உன்னை விட்டு நான் எடுத்துக்கொள்ளப்படும்போது நீ என்னைக் கண்டால் உனக்குக் கிடைக்கும்' என்றார்.

அவர்கள் அப்படிப் பேசிக்கொண்டு போகையில், இதோ, அக்கினி இரதமும், அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து அவர்களிருவரையும் பிரித்தது. எலியா சுழல் காற்றில் மேலோகத்திற்கு ஏறிச்சென்றார். எலியாவின் பிரிவைத் தாங்கமுடியாத எலிசா, 'என் தகப்பனே! இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரைவீரருமாயிருந்தவரே!' என்று புலம்பிக் கொண்டிருந்தபோது, எலியாவின் மேலிருந்த சால்வை கீழே விழுந்ததைக்கண்டு அதை எலிசா எடுத்துத் திரும்பிப்போய், யோர்தானின் கரையில் நின்று, 'எலியாவின் கடவுளாகிய கர்த்தர் எங்கே?' என்று தண்ணீரை அடித்தார். முன்புபோலவே தண்ணீர் இரண்டாகப் பிரிந்து எலிசா அக்கரைப்பட்டு, நகரத்திற்குப் போக வழிவிட்டது.

அப்படி எலிசா போய்க் கொண்டிருக்கும்போது சில மனுஷர் அவருக்கு எதிர்ப்பட்டு, 'இதோ எங்கள் ஆண்டவன் காண்கிறபடி, இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு நல்லது, தண்ணீரோ கெட்டது. நிலமும் பாழ்பட்டது' என்று குறைப்பட்டுக்கொண்டார்கள். அதற்கு எலிசா தம்மிடம் உப்புக் கொடுக்கும்படிக் கேட்டு வாங்கி அந்த உப்பை அங்குள்ள நீரூற்றில் போட்டு, 'இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன். இனி இதனால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார்' என்றார். எலிசா சொன்ன சொல்லின்படியே அந்தத் தண்ணீர் இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி ஆரோக்கியமாயிற்று. நிலமும் உயிர்பெற்று வளமடைந்தது.

194. விதவையும் எண்ணெயும்

2 இரா. 4

தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்து விதவையான ஒரு பெண் மிகுந்த கவலையுடன் எலிசாவிடம் வந்து தான் கர்த்தருக்குப் பயந்து நடந்த ஒரு தீர்க்கதரிசியின் மனைவி என்பது அவருக்குத் தெரியுமென்றும், கணவனுக்குப்பின் வறுமை மிஞ்சியதால் தான் ஒருவனிடம் கடன்பெற்றதாகவும், கடன்பெற்று நெடுங்காலமாகியும் தன்னால் அக்கடனைத் திருப்பித்தர முடியாததால் தன் இரண்டு புதல்வர்களையும் கடன் கொடுத்தவன் தனக்கு அடிமையாக்கிக் கொள்ளப்போவதாகக் கூறுவதாகவும் முறையிட்டாள்.

அதற்கு எலிசா தான் அவளுக்கு உதவி செய்யும்படி அவளிடம் வீட்டில் உள்ளது என்னவென்று கேட்டார். தன்னிடம் ஒரு குடம் எண்ணெய் மட்டுமல்லாமல் வேறெதுவும் இல்லையெனக் கூறினாள். அப்பொழுது அவர்

அவளை அவளது அயல் வீட்டாரிடம் எல்லாம் சென்று, அவர்களிடம் அநேகம் வெறும் பாத்திரங்களை வாங்கி உள்ளே போய் அவள் பிள்ளைகளுடன் நின்று கதவைப்பூட்டி அப்பாத்திரங்களில் எண்ணெய் ஊற்றி நிறைந்த பாத்திரங்களை ஒரு பக்கமாக வைத்து அவைகளை விற்று கடனடைக்கும்படி கூறியதுடன், அங்ஙனம் ஊற்றியதால் அக்குடம் என்றும் காலியாகாதென்றும் கூறினர்.

அந்த விதவையும் வீட்டிற்குச் சென்று எலிசா தனக்குச் சொன்னபடியே செய்தாள். எல்லாப் பாத்திரங்களும் நிறையுமட்டும் எண்ணெய் நின்றுபோகவில்லை. இதை எலிசாவிடம் சென்று அவள் கூறியபோது நிறைந்த பாத்திரங்களிலுள்ள எண்ணெயை விற்று கடனடைத்தபின் மீதமிருக்கும் எண்ணெயை வைத்து அவளும் அவள் பிள்ளைகளும் வாழ்க்கை நடத்தலாமென்றும், இனி அவள் கடன்படுவதில்லையென்றும் சொன்னர். எலிசா சொன்னதுபோலவே அவளும் அந்த எண்ணெயை விற்றுத் தன் கடனை அடைத்துவிட்டு மீந்ததை வைத்துத் தன் குடும்பத்தை நடத்தி கடன்படாமல் மகிழ்ச்சியோடிருந்தாள்.



விதவையும் எண்ணெயும் (2 இரா. 4)

195. எலிசாவும் சூனேமியாளும்

2 இரா. 4

ஒரு நாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும்போது அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு பெண் அவனைப் போஜனம்பண்ண வருந்திக் கேட்டுக்கொண்டாள். அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கேவந்து தங்குவான்.

அவள் தன் புருஷனிடம் தீர்க்கதரிசியைப் பற்றிக் கூறி அவர் ஒரு பரிசுத்தவான், அவருக்கு ஒரு சிறிய அறை வீட்டை மெத்தையின்மேல் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டில், மேஜை, நாற்காலி, குத்துவிளக்கு வைக்கவேண்டும். அவர் நம்மிடத்தில் வரும்போதெல்லாம் அங்கே தங்கலாம் என்றாள். அதன்படியே தீர்க்கதரிசி எலிசா தங்கி, அந்த அறை வீட்டிலே இருக்கும்போது, தன் வேலைக்காரனை அழைப்பித்து நீ அந்த சூனேமியாளிடம்போய் அவளுக்குத் தேவையானது என்ன என்று விசாரிக்கும்படி அனுப்பினர்.

அதற்கு அவள் என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன் என்றாள். அவளுக்குச் செய்யவேண்டியது என்னவென்று கேயாசியை கேட்க, அவன் அவளுக்குப் பிள்ளை இல்லை. அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்றான். எலிசா உடனே அவளைக் கூப்பிடு என்றான். அவள் வந்து வாசற்படியே நின்றாள். அப்பொழுது எலிசா 'ஒரு பிராண உற்பத்திக்காலத் திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாய்' என்றான். அதற்கு அவள் ஏது? தேவனுடைய மனுஷனாகிய என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்லவேண்டாம் என்றாள்.

எலிசா தன்னோடு சொன்னபடியே ஒரு உற்பத்திகாலத் திட்டத்தில் ஒரு குமாரனைப் பெற்றாள். அந்தப் பிள்ளை வளர்ந்தான். ஒரு நாள் தகப்பனைப் பார்த்து, தலைநோகிறது என்று சொல்லவே, அவனைத்தன் தாயிடம் கொண்டு போனார்கள். அவள் தன் மடியிலே மத்தியான

மட்டும் அவனை வைத்திருந்தாள். பின் அந்த மகன் இறந்துவிட்டான். உடனே அவள் மேல் வீட்டில் தேவனுடைய மனுஷன் கட்டிலின்மேல் வைத்து, கதவைப் பூட்டிவிட்டு, தன் புருஷனிடம் ஆள் அனுப்பி தேவனுடைய மனுஷனைப் பார்க்க ஒரு வேலைக்காரனும் கழுதையும் அனுப்பும்படி சொல்லச் சொன்னாள். அப்படியே கழுதையின்மேல் சேணம்வைத்து வழியில் எங்கும் நிற்காமல் கர்மேல் பர்வதத்திலிருக்கிற தேவனுடைய மனுஷனிடத்திற்குப் போனாள்.

அங்கு சென்றவுடன் எலிசா காலைப்பிடித்துக் கொண்டாள். அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது என்று அறிந்தான். அவள் நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குமாரன் வேண்டும் என்று கேட்டதுண்டா? எனக்கு அபத்தம் சொல்லவேண்டாம் என்று நான் சொல்லவில்லையா என்றாள். கர்த்தர் இந்தக்காரியத்தை எனக்கு அறிவியாமல் மறைத்து வைத்தார் என்று எலிசா அறிந்து கேயாசியைப் பார்த்து தன் தடியைக் கொடுத்து வழியில் ஒருவரிடமும் பேசாமல் சூனேமியாளின் பிள்ளையின் முகத்தின் மேல் வை என்று அவனை அனுப்பினான்.

அதற்கு பிள்ளையின் தாயோ நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும்கொண்டு சொல்லுகிறேன் என்றாள். அப்பொழுது எலிசா எழுந்து அவள் பின்னே போனான். கேயாசி அவர்களுக்கு முன்னேபோய் அந்தத் தடியைப் பிள்ளையின் முகத்தின்மேல் வைத்தான். ஆனாலும் சத்தமும், உணர்ச்சியும் இல்லை. ஆகவே அவன் திரும்பி வந்து எலிசாவிடம் பிள்ளை விழிக்கவில்லை என்றான்.

எலிசா வீட்டிற்குள் வந்தபோது இதோ அந்தப் பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்துக் கிடந்தான். உள்ளே போய், கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து, பிள்ளையின்மேல் குப்புறப்படுத்து அனல் உண்டாக்கினபின் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான். உடனே அவனைத் தாயிடம் ஒப்புவித்தான். அவள் எலிசா பாதத்திலே விழுந்து தரைமட்டும் பணிந்து, தன் குமாரனை உயிருடன் எடுத்துக்கொண்டு போனாள்.

196. பானையில் சாவு, இருபது அப்பம்

2 இரா. 4

எலிசா கில்காலுக்குத் திரும்பிப்போனான். அப்பொழுது, தேசத்தில் பஞ்சம் உண்டாயிற்று. அவர் தன் வேலைக்காரனை நோக்கி, நீ பெரிய பானையை அடுப்பிலே வைத்துத் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குக் கூழ்காய்ச்சு என்றான். அப்பொழுது ஒருவன் கீரைகளோடு போய்க் கொம்மட்டிக் காய்களை அறுத்து வந்தான். அவைகளை அரிந்து கூழ்ப்பானையிலே போட்டான். பின் மக்களுக்கு கூழ் வார்க்கையில் அதைச் சாப்பிடக்கூடாமல் போயிற்று. கடவுளுடைய மனுஷனே பானையிலே சாவு இருக்கிறது என்று சத்தமிட்டார்கள். அப்பொழுது தேவ மனிதன் மாவைக் கொண்டு வரச் சொல்லி அதைப் பானையிலே போட்டு மக்களைச் சாப்பிடும்படி சொன்னார். அப்புறம் பானையிலே தோஷம் இல்லாமற் போயிற்று. எல்லோரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தனர்.

பின்பு பாகால் சலீஷாவிலிருந்து ஒரு மனிதன், எலிசாவிற்கு முதற்பலனான இருபது வாற் கோதுமை அப்பங்களையும் தாள் கதிர்களையும் கொண்டுவந்து கொடுத்தான். அப்பொழுது எலிசா, மக்களுக்குச் சாப்பிடக்கொடு என்றான். அதற்கு பணிவிடைக்காரன் இதை நானூறுபேருக்கு முன் எப்படி வைப்பது என்றான். அதற்கு எலிசா சாப்பிட்டப் பிற்பாடு இன்னும் மீதி உண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். மக்கள் முன் வைத்தபின் அவர்கள் சாப்பிட்டதுமன்றி மீதியும் இருந்தது. இது கர்த்தருடைய வார்த்தையின்படியே நடந்தது. என்று மக்கள் ஆச்சரியப்பட்டு கடவுளை தொழுதுகொண்டனர். ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த சம்பவத்தை நினைவுபடுத்துகிறதல்லவா?

197. தொழுநோயாளனும் பொன்னும்

2 இரா. 5


சீரியா நாட்டு அரசனிடம் படைத்தலைவனு யிருந்தவன் நாகமான். இவன் தன் அரச னிடத்தில் பெரிய மனுஷனும் மதிப்புக்குரிய வனுமாயிருந்தான். மிக பலமும் வீரமுமுள்ள அவன் தொழுநோயாளனுய் இருந்தான்.

சீரியா தேசத்து படைவீரர்கள் இஸ்ரவேல் தேசத்திலிருந்து சிறைப்பிடித்துக் கொண்டு வரப்பட்டவர்களில் ஒரு சிறு பெண் நாகமா னின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண் டிருந்தாள். அவள் தன் எஜமாட்டி தன் தலை வனுடைய நோய்குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது அவளிடம் அச்சிறுமி 'என் எஜமான் சமாரியாவிலிருக்கிற தீர்க்க தரிசியிடம் போவாரானுல் அவர் இவருடைய நோயைக் குணமாக்கிவிடுவார்' என்ருள். அதைக்கேட்ட அவளுடைய எஜமாட்டி சீரியா தேசத்து அரசனிடம் அச்சிறு பெண் கூறியதை யெல்லாம் கூறியபோது, அந்த அரசன் தாம் இஸ்ரவேல் தேசத்து அரசனுக்கு அதுபற்றி கடிதம் எழுதுவதாகக் கூறி கடிதம் கொடுத்த துடன் ஆருயிரம் பொன் முதலிய பரிசுப் பொருட்களையும் நாகமானைக் குணமாக்குகிற வருக்குக் காணிக்கையாகவும் கொடுத்தனுப்பி ஞன்.

நாகமானும் அவனுடனிருந்தவர்களும் சென்று இஸ்ரவேல் தேசத்து அரசனிடம் கடிதத்தைக் கொடுத்தனர். அந்த அரசன் கடிதத்தைப் படித்து செய்வதின்னதென்றறி யாமல் திகைத்தபோது, அவனது அமைச்சர் கள் எலியா தீர்க்கதரிசியைப்பற்றி நினைவூட் டியவுடன் நாகமானை எலிசாவிடம் அனுப்பி வைத்தான். எலிசாவும் நாகமானின் நோயை யறிந்து அவனை யோர்தான் நதியில் ஏழுமுறை குளிக்கும்படி கூறினுர். ஆனுல் நாகமான் இது கேட்டு மிகுந்த எரிச்சலடைந்தான். தன் பட் டணமாகிய தமஸ்குவில் உள்ள ஆப்ஞு, பர்பார் ஆகிய நதிகளைக்காட்டிலுமா யோர்தான் நதி சிறந்த குணமாக்கும் தன்மையுடையது? என்று மனதில் புழுங்கினுன். அதுகண்ட அவனுடன் வந்த வேலையாட்கள், 'தகப்பனே! தீர்க்க தரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்யச் சொல்லியிருந்தால் செய்வீரல்லவா? ஸ்நானம் பண்ணும், அப்பொழுது நீர் சுத்தமாவீர் என்று உம்மிடம் அவர் சொல்லும்போது அதைச் செய்யவேண்டியது எத்தனை அவசியம்' என்று சொன்னுர்கள்.

அப்பொழுது நாகமான் யோர்தான் நதியில் இறங்கி தேவனுடைய மனிதனுகிய எலிசாவின் சொற்படி ஏழுமுறை குளித்தபோது யாவரும் வியப்படையும் வண்ணம் அவன் உடம்பு சிறு பிள்ளையின் உடம்புபோல மாறி சுத்தமானுன். பின்பு அவன் தன் கூட்டத்தாரோடு தேவ னுடைய மனுஷனுகிய எலிசாவிடம் திரும்பி வந்து 'இதோ இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என் பதையறிந்தேன்'. என்று சாட்சி கூறி அவன் கொண்டுவந்த பொன் முதலிய காணிக்கைப் பொருட்களைப் படைத்தபோது எலிசா வாங்க மறுத்தார். அவன் வாங்கிக்கொள்ளும்படி எவ்வளவு எலிசாவை வற்புறுத்தியும் அவர் உறுதியாக மறுத்துவிட்டார்.

பின்பு நாகமான் தன் தேசத்துக்குப் புறப் பட்டுச் சென்ருன். ஆனுல் எலிசாவின் வேலைக் காரனுகிய கேயாசி என்பவன் அந்தப் பொன் னைப் பார்த்து அதன்மீது ஆசைகொண்டு நாக மானுக்குப் பின்சென்று தன் எஜமான் தம் மனதை மாற்றிக்கொண்டதால் அப்பொன்னை யும் பொருளையும் வாங்கிவரும்படி சொன்னுர் எனப் பொய் கூறினுன். நாகமானும் மிக்க மகிழ்ச்சியுடன் பொன்னையும் பொருளையும் அவன் கையில் கொடுத்தனுப்பினுன். நடந்த யாவற்றையும் எலிசா அறிந்துவிட்டபடியால்



தொழுநோயாளனும் பொன்னும் (2 இரா. 5)

கேயாசியின் மீது கோபங்கொண்டு நாகமானிடம் பெற்ற பொருட்களைத் தன் வீட்டில் வைத்து விட்டு வந்த கேயாசியைப் பார்த்து நாகமானைப் பிடித்திருந்த குஷ்டம் அவனையும் அவன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்குமெனச் சாபமிட்டார். ஐயோ! பரிதாபம். அந்த நேரமே நாகமானின் குஷ்டம் அந்தப் பேராசை பிடித்த வேலைக்காரனாகிய கேயாசியைப் பிடித்துக்கொண்டது. அவன் எலிசாவின் வீட்டிலிருந்து வெளியேறினான்.

198. இரும்பு மிதந்தது

2 இரா. 6

எலிசாவினுடைய தீர்க்கதரிசிகளின் புத்திரர், எலிசாவை நோக்கி இதோ நாங்கள் உம்முடன் குடியிருக்கிற இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது. நாங்கள் யோர்தான் மட்டும் போய் அவ்விடத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உத்திரத்தை வெட்டி, குடியிருக்க அங்கே எங்களுக்கு ஒரு இடத்தை உண்டாக்குவோம் என்று கேட்டுக்கொண்டனர். அதற்கு எலிசா போங்கள் என்றான்.

அவர்களில் ஒருவன் நீரும் எங்களோடுகூட வரவேண்டும் என்று வேண்டிக்கொண்டான். உடனே எலிசாவும் அவர்களோடுகூடப் போனான். அவர்கள் யோர்தான் நதியருகே வந்தபோது மரங்களை வெட்டினார்கள். ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழ்த்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது. அவன் ஐயோ, என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவி அழுதான்.

தேவனுடைய மனிதன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான். அவன் அந்த விழுந்த இடத்தைக் காண்பித்தபோது ஒரு கொம்பை வெட்டி, அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்கப் பண்ணினார், அதை எடுத்துக்கொள் என்றான். அப்படியே அவன் தன் கையை நீட்டி அதை எடுத்துக்கொண்டான். இப்படியாக தேவ மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்து மனிதர்களை பிரமிக்கச் செய்தார். இதன்மூலம் உண்மை தெய்வத்தில் சிலர் விசுவாசம் வைத்தனர்.

199. குஷ்டரோகிகளும் நற்செய்தியும்

2 இரா. 7

எலிசா, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள், நாளை இந்நேரத்தில் சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

அப்பொழுது ராஜாவுக்கு கைலாகு கொடுக்கிற பிரதானி ஒருவன், தேவ மனுஷனே நீ சொல்லுகிற இக்காரியம் நடக்கவே நடக்காது நடக்குமா? என்றான். அதற்கு எலிசா உன்னுடைய கண்களினாலே அதைக் காண்பாய். ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்றான்.

குஷ்டரோகிகளான நாலுபேர் ஒலிமுக வாசலில் இருந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன? இப்பொழுதே சீரியருடைய இராணுவத்திற்குப் போவோம் வாருங்கள். அவர்கள் உய்ரோடு வைத்தால் பிழைப்போம். கொன்றால் சாவோம் என்று சொல்லி சீரியருடைய இராணுவத்திற்கு இருட்டோடே போனார்கள்.

கடவுள் அவர்களுடைய இராணுவத்திற்கு இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும், மகா இராணுவத்தின் இரைச்சலையும் கேட்கப்பண்ணினதினால், அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, இதோ நம்மிடத்தில் போருக்கு இஸ்ரவேலின் இராஜா ஏத்தியரின், எகிப்தியரின் ராஜாக்களும், நமக்கு விரோதமாக வருகிறார்கள் என்று சொல்லி, இருட்டோடே தங்கள் கூடாரங்களையும், குதிரைகளையும், கழுதைகளையும் தங்கள் பாளையத்திலே விட்டு விட்டு உயிர்தப்பும்படி ஓடிப் போனார்கள்.

அந்தக் குஷ்டரோகிகள் பாளையத்தின் கூடாரத்தில் பிரவேசித்துப் புசித்துக் குடித்து அதிலிருந்து வெள்ளி, பொன் வஸ்திரங்களையும் எடுத்து ஒளித்து வைத்துவிட்டு வேறொரு கூடாரத்திற்குள் சென்று அதிலிருந்தும் அப்படியே எடுத்துக் கொண்டுபோய் ஒளித்து வைக்கும்

போதுதான், இது நியாயமல்ல, நாம் செய்கிற இந்தக் காரியம். இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள். நாம் மவுனமாயிருந்து பொழுது விடியும் மட்டும் காத்திராமல் இப்போதே நாம் போய் ராஜாவின் அரண்மனையாருக்கு இதை அறிவிப்போம் என்று புறப்பட்டார்கள்.

பட்டணத்து வாசல் காவலாளனை நோக்கி, சீரியரின் பாளையத்தில் ஒருவரும் இல்லை என்று சொன்னார்கள். அப்பொழுது அவன் மற்றவர்களைக் கூப்பிட்டு அரண்மனையாருக்கு அதை அறிவித்தான். ராஜா அதை நம்பாமல் சீரியரின் இராணுவத்தைத் தொடர்ந்து போகும்படி இரண்டு இரதக் குதிரைகளை அனுப்பினான். அவர்கள் பாளையத்தைவிட்டு ஓடிப்போயினர் என்று அறிந்து ஜனங்கள் பாளையத்தைக் கொள்ளையிட்டனர். கர்த்தருடைய வார்த்தையின்படியே நடந்தது. சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்றது.

நற்செய்திகள் அடக்கிவைக்கப்பட வேண்டியவை அல்ல! பிறருக்கு அறிவிக்கப்படவேண்டியவை ஆகும்.

200. யேசபேலின் முடிவு

2 இரா. 9

ஆகாப் அரசன் இறந்தபின் அவன் மகன் யோராம் ஆட்சி செய்தான். மகனும் பெற்றோரைப்போலவே கொடியவனாய் இருந்தான் அவன் தாய் யேசபேல் இன்னும் உயிரோடிருந்தாள்.

கடவுள் எலிசாவிடம் யெகூ என்பவனை யோராமுக்குப் பதிலாக அரசனாக அபிஷேகம் செய்யச் சொன்னார். எலிசாவும் அப்படியே செய்தார். யெகூ புறப்பட்டுப் போய் யோராமைக் கொன்று போட்டு யேசபேலையும் மாடியிலிருந்து தள்ளிவிடும்படி வேலையாட்களுக்கு உத்தரவிட்டான். வேலையாட்களும் இதுதான் கொடிய யேசபேலை ஒழிக்கச் சரியான சமயம் என்று உடனேயே மாடி ஜன்னல் வழியாய் அவளைத் தூக்கி எறிந்தனர். அவள் அந்த இடத்திலே உயிரைவிட்டாள்.

எலியா தீர்க்கனின் சாபப்படி இவளுடைய இரத்தத்தையும் தெருவில் நாய்கள் நக்கின.

201. சிறிய அரசன்

2 இரா. 11

இஸ்ரவேல் தேசத்தில் அநேக யுத்தங்கள் நடந்து அநேக அரசர்கள் மடிந்துபோனார்கள். ஒரு யுத்தத்தில் அகசியா என்னும் யூத அரசன் மடிந்தபோது அவனுடைய தாயும் இராஜமாதாவுமாயிருந்த அத்தாலியாள் எழும்பி அரச பரம்பரையினர் அனைவரையும் கொன்று போட்டு அவளே தேசத்தை ஆண்டு வந்தாள். ஆனால் அகசியாவின் சகோதரியாகிய யோசேபாள் கொலையுண்ணப்படுகிற அரச குமாரரின் நடுவிலிருந்து அகசியாவின் மகனாகிய யோவாசைக் களவாய் எடுத்து அவன் கொல்லப்படாதபடி அவனையும் அவன் தாதியையும் அத்தாலியாளுக்குத் தெரியாமல் ஒளித்துவைத்தாள்.

இந்தக் குழந்தை ஆறு வருஷம் கர்த்தருடைய ஆலயத்தில் ஒளித்துவைக்கப்பட்டிருந்தான். ஏழாம் வருஷத்திலே அப்பொழுது பிரதான ஆசாரியனாயிருந்த யோய்தா ஜனங்களின் தலைவர்களை அழைத்து அவர்களுடன் உடன்படிக்கைபண்ணி அவர்களிடம் வெளியில் எவரிடமும் சொல்லாமலிருக்கும்படி உறுதிமொழி பெற்றபின் ஒளித்துவைக்கப்பட்டிருந்த அரசகுமாரனாகிய யோவாசைக் காண்பித்தான். பின் ஆலயத்தில் தகுந்த பாதுகாப்பு ஏற்படுத்தி அரசகுமாரனை வெளியே கொண்டு வந்து கிரீடத்தை அவன் தலைமீது வைத்து சாட்சியின் ஆகமத்தை அவன் கையில் கொடுத்தான். இப்படி அவனை இராஜாவாக்கி அபிஷேகம் பண்ணியபோது ஜனங்கள் 'இராஜா வாழ்க' என்று வாழ்த்திக் கைக்கொட்டினர்.

ஓடி வருகிற மக்கள் செய்த ஆரவாரத்தை அத்தாலியாள் கேட்டபோது அவள் கர்த்தருடைய ஆலயத்துக்கு மக்களிடத்தில் வந்து இராஜ முறைமையின்படி இராஜா தூணண்

டையில் நிற்கிறதையும், அருகில் நின்ற பிரபுக்களையும், எக்காளம் ஊதுகிறவர்களையும் தேசத்து ஜனங்களெல்லாரும் சந்தேசப்பட்டு எக்காளம் ஊதுகிறதையும் கண்டவுடனே அத்தாலியாள் மிகவும் கோபங்கொண்டு, தன் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு 'துரோகம் துரோகம்' என்று கத்தினள். அப்பொழுது ஆசாரியனாகிய யோய்தா, இராணுவத் தலைவர்களிடம் அவளை வரிசைகளுக்கு வெளியே கொண்டுபோக வேண்டுமென்று அவளைப் பின் பற்றுகிறவனைப் பட்டயத்தால் வெட்டிப்போடவும் கட்டளையிட்டான். அவர்கள் அவளை ஆலயத்தில் கொல்லாமல் அவள் அரண்மனைக்குப் போகிற வழியில் அவளைக் கொன்று போட்டார்கள்.

அரசனாகிய யோவாசைக் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து இறங்கப்பண்ணி, அரச அரண்மனைக்குள் அழைத்துக்கொண்டுபோனார்கள். அங்கே அவன் அரச அரியணைமேல் அமர்ந்தான். தேசத்தின் மக்கள் எல்லாரும் மகிழ்ந்து நகரம் அமைதலாயிற்று. யோவாஸ் அரசனாகும்போது ஏழு வயதாயிருந்தான்.

202. யோவாசுடைய அம்புகள்

2 இரா. 13

இஸ்ரவேலின் அரசனாகிய யோவாசின் நாட்களில் எலிசா மரணத்துக்கேதுவான வியாதிப்பட்டார். அப்பொழுது யோவாஸ் அவரிடத்துக்கு போய்ச் சுக செய்தி விசாரித்து மிகுந்த அனுதாபம் காட்டி 'என் தகப்பனே! என் தகப்பனே! இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாயிருந்தவரே! என்று புலம்பினன். எலிசா அவனைச் சமாதானப்படுத்தி அவனிடம் வில்லையும் அம்புகளையும் பிடிக்கச் சொன்னார். அப்படியே யோவாஸ் வில்லையும் அம்புகளையும் பிடித்துக்கொண்டான். பின்பு எலிசா யோவாசைக் கைகளை வில்லின்மேல் வைக்கும்படி கட்டளையிட்டார். அவனும் அப்படியே செய்தான். பின்பு எலிசா தன் கைகளை அரசனுடைய கைகளின்மேல் வைத்து கிழக்கே இருக்கிற ஜன்னலைத் திறக்கும்படி ஆணையிட்டார். அவனும் அப்படியே திறந்தபோது எலிசா அரசனை அம்புகளை எய்யும்படி கூறினார். அரசன் எய்தபோது அந்த அம்பு ஜன்னல் வழியே வெளியேறியது. அப்பொழுது எலிசா 'அது கர்த்தருடைய இரட்சிப்பின் அம்பும், சீரியாவிலிருந்து விடுதலையாக்கும் அம்புமானது நீர் ஆப்பெக்கிலே சீரியரைத் தீர முறியடிப்பீர்' என்றார்.

பின்னும் எலிசா அரசனை அம்புகளைப் பிடிக்கக் கட்டளையிட்டார். அவனும் அவைகளைப் பிடித்தான். எலிசா இஸ்ரவேலின் அரசனைப் பார்த்து அம்பைத் தரையில் அடிக்கும்படி கூறினார். இஸ்ரவேலின் அரசன் மூன்று முறை அடித்து நின்றான். அப்பொழுது எலிசா அவன்மேல் கோபமாகி 'நீர் ஐந்தாறு விசை அடித்தீரானால் சீரியரைத் தீர முறியடிப்பீர். இப்பொழுதோ சீரியரை மூன்றுமுறை மட்டுமே முறியடிப்பீர்' என்றார். ஏனெனில் சீரியர் இஸ்ரவேலருக்கு ஓயாமல் தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அதன்பின் எலிசா மரித்துத் தன் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டார்.

203. கடவுள் காப்பாற்றுதல்

2 இரா. 17,18

யூதேயா நாட்டை ஆகாஸ் அரசனின் மகன் சிதேக்கியா ஆண்டபோது அந்நாட்டின் மேலும் படை எடுக்க சீரியா ராஜா திட்டமிட்டார். அவரை சமாதானப்படுத்தி யுத்தத்திலிருந்து தப்பித்துக்கொள்ள எருசலேம் ஆலயத்திலிருந்து மேலும் கொஞ்சம் பொன், வெள்ளியை எடுத்துக் கொடுத்தான் சிதேக்கியா. அப்படியும் சீரியா அரசரிடமிருந்து தப்ப முடியவில்லை.

சீரியா அரசன் ஒரு படையை எருசலேமுக்கு அனுப்பியேவிட்டான். மவுனமாக இருக்கும்படி சிதேக்கியா மக்களுக்கு அறிவித்திருந்தான். சீரியா ராஜாவின் அதிகாரி ஒருவன் மக்களைப் பார்த்து நீங்கள் உங்கள் அரசனை நம்பாமலும் உங்கள் கடவுளை நம்பாமலும் எங்களிடம் சரண் அடைந்துவிடுங்கள். உங்களுக்கு மேன்மையான வாழ்வைத் தருவோம் என்றான்.

சிதேக்கியாவும் மக்களும் மவுனமாயிருந்தனர். சீரியா அரசன் ஒரு கடிதத்தை எழுதி

யூதேயா அரசனுக்கு அனுப்பி வைத்தான். அதில் 'நீ நம்புகிற கடவுள் உன்னைக் காப்பாற்ற முடியாது, காப்பாற்றவும்மாட்டார்' என்றான். அக்கடிதத்தை சிதேக்கியா ஆலயத்திற்கு எடுத்துச் சென்று ஜெபித்து கடவுள் தங்களைக் காக்கும்படி வேண்டினான்.

ஏசாயா தீர்க்கனின்மூலம் கடவுள் பதில் கொடுத்தார். 'கடவுள் எல்லாரிலும் பெரியவர். அவர் அனுமதியாமல் சீரியா அரசன் எருசலேம் மக்களை ஒன்றும் செய்ய இயலாது. கடவுள் எருசலேமைக் காப்பார்' என்று ஏசாயா கூறினார். அதன்படி சீரியா அரசன் சேனையில் அன்றிரவு ஆயிரத்திற்கும் மேலான எண்ணிக்கையுள்ள வீரர்கள் இறந்தனர். இதைக் கண்ட அரசன் பயந்துபோய் சில வீரர்களைமட்டும் அழைத்துக்கொண்டு பின்னிட்டுத் திரும்பிப் போனான். கடவுளுக்குப் பயந்து கீழ்ப்படிந்த மக்களை கடவுள் இவ்விதமாகக் காப்பாற்றினார்.

204. பெரிய புதையல்

2 இரா. 22

சிதேக்கியா அரசன் மரணமடைந்த பின்பு அவன் மகன் மனாசே அரசனானான். அவன் மிகப் பொல்லாதவன். பாகால்களுக்கு விக்கிரகங்களைச் செய்தும் ஆலயங்கள் கட்டியும் பிள்ளைகளை நரபலி கொடுத்தும் இன்னும் பல கெட்ட காரியங்களை மக்களிடையே பிரசித்தம் செய்தான். மக்களும் அவனுடைய தீய காரியங்களைப் பின்பற்றலாயினர். யூதேயா நாட்டு ஆலயங்களில் விக்கிரகங்கள் நிரம்பி வழிந்தன.

தெருவெங்கும் நரபலிபீடங்கள் தோன்றின. மனாசேக்குப்பின் அவன் மகன் ஆமோன் அரசனானான். தகப்பனைப்போலவே கொடியவனாயிருந்தான். ஆகவே மக்கள் அவனைக் கொலை செய்துவிட்டு அவன் சிறிய மகனாகிய யோசியா என்னும் எட்டு வயதுச் சிறுவனை அரசாக்கினார்கள். யோசியா தெய்வ பயத்திலும் பக்தியிலும் வளர்ந்தான். கடவுளை நேசித்தான். மக்களையும் அவ்வாறே கடவுளிடம் வழி நடத்தினான். தன் தகப்பன், பாட்டன் இவர்களின் விக்கிரக வழிபாடுகளை அறவே வெறுத்தான்.

ஆகவே பாகால்களுக்குக் கட்டிய பீடங்களையும் விக்கிரகங்களையும் அழித்து ஆலயங்களைப் புதுப்பிக்க நினைத்தான். தன்னுடைய உதவியாள் சாப்பானை பிரதான ஆசாரியனாகிய கில்காளிடத்தில் அனுப்பி ஆலயத்தைப் பழுதுபார்க்க ஆசாரி, கொத்தனார் இவர்களை ஏற்பாடு செய்யும்படி அனுப்பினான். வேலையாட்கள் ஆலயத்தை சுத்தம் செய்ய ஆரம்பித்த போது குப்பைகளுக்கிடையே தூசு படிந்து கிடந்த ஒரு தோல் சுருளைக் கண்டு அதை பிரதான ஆசாரியனான கில்காளுக்கு அனுப்பினார்கள். கில்க்காள் அதை வாசித்து அவை கடவுளுடைய கட்டளைகள் என்று கண்டான். அரசன் அதை படித்து அறிந்துகொள்ளும்படியாக சாப்பான்மூலம் அனுப்பி வைத்தான்.

சாப்பான் அதை யோசியா அரசனுக்கு வாசித்துக் காண்பித்தபோது, அரசன் விசனப்பட்டுத் தன் ஆடைகளை கிழித்துக்கொண்டார். கட்டளைகளைக் கேட்கக் கேட்க தானும் தன் குடிமக்களும் எவ்வளவாகக் கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் வாழ்ந்து வருகிறோம் என்று மனம் நொந்தான். இதுபற்றி மேலும் விளக்கம் பெறுவதற்காக ஒரு தீர்க்கதரிசியின் உதவியை நாடினான். அரசனின் ஆட்கள் உல்தாள் என்னும் தீர்க்கத்தரிசியினிடத்திற்குப் போய் இதுபற்றிப் பேசினார்கள். அவள் ஒரு வஸ்திர சாலை அதிகாரியின் மனைவி. அவள் தீர்க்கதரிசனம் உரைத்துச் சொன்னது என்னவென்றால் மக்கள் கடவுளைவிட்டு விலகி அவர் கட்டளைகளை மறந்ததால் கடவுளின் கோபம் பற்றி எரியும். ஆனாலும் யோசியா அரசன் கடவுளின் கட்டளைகளைக் கேட்ட மாத்திரத்தில் மனம் வருந்தி ஆடைகளைக் கிழித்துக்கொண்டு கடவுளிடம் மன்னிப்புக் கேட்டபடியால்,

அவன் உயிரோடு இருக்கும்வரை எந்தத் தீங்கும் வராது. சமாதானத்தோடு வாழ்வான் என்று தீர்க்கதரிசனம் உரைத்தாள் உல்தாள்.

தீர்க்கதரிசியின் வார்த்தைகளை சாப்பான் அரசனிடம் சொன்னபோது அரசன் மக்களை எல்லாம் கூட்டிச் சேர்த்து கடவுளுடைய கட்டளைகளையும் உடன்படிக்கை பற்றியும் எடுத்துச் சொல்லி மக்கள் எல்லாம் கடவுளை நேசிக்கவும் அவர் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் வேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னான். தானும் கடவுளை மேலும் நேசிக்கவும் கீழ்ப்படியவும் உறுதிகொண்டான். அதற்கான காரியங்களில் ஈடுபட ஆரம்பித்தான். மக்கள் யாவரும் அரசனோடு ஒத்துழைத்தார்கள்.

ஆலயங்களில் மறைந்து கிடந்த பாகால் விக்கிரகங்களை அப்புறப்படுத்தினான். அவை

களை ஒன்றாக ஓரிடத்தில் குவித்து நெருப்பிவிட்டான். பாகால் வணக்கம் நரபலி யாவற்றையும் நிறுத்தும்படி உத்தரவிட்டான். தீமையான காரியங்கள் யாவும் நிறுத்தப்பட்டபின் யோசியா அரசன் கடவுளுக்கு ஒரு பெரிய விழா எடுத்தான். இது பஸ்கா பண்டிகை போன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மக்கள் யாவரும் இதில் மகிழ்ச்சியோடு பங்கு கொண்டனர்.

யோசியா அரசனுக்குப் பின் வந்த அரசர்கள் கடவுளின் பார்வையில் பொல்லாப்பானதைச் செய்தார்கள். ஆகவே கடவுள் கோபம் கொண்டு இஸ்ரவேலையும் யூதேயாவையும் பகைவரிடம் கையளிக்கச் சித்தம்கொண்டார்.



பெரிய புதையல் (2 இரா. 22)

205. எருசலேமின் கடைசி நாட்கள்

2 இரா. 24,25

யோயாக்கீமென்பவன் யூதேயாவிலே ஆளுகை செலுத்தின காலத்தில் பாபேலின் அரசன் நேபுகாத்நேச்சாரென்பவன் படையெடுத்து வந்து எருசலேமைக் கைப்பற்றிக்கொண்டு யோயாக்கீமைச் சிறைபிடித்துப் பாபேலுக்குக் கொண்டுபோகச் சங்கிலி இரண்டால் கட்டினான். தெய்வாலயத்தின் பண்டம்பாடிகளிலும் சிலவற்றை யெடுத்துக்கொண்டு போய்ப் பாபேலிலுள்ள தன் குலதெய்வத்தின் ஆலயத்தில் வைத்தான். அன்றியும் இஸ்ரவேலின் மக்களில் உயர்ந்த குடியில் பிறந்த இளைஞரையும் பொறுக்கிக்கொண்டு போனான். இதுதான் எழுபது வருஷம்கொண்ட பாபேல் சிறையிருப்புக்குத் துவக்கம். பின் யோயாக்கீமென்பவன் அரசாண்ட காலத்தில் நேபுகாத்நேச்சார் மீளவும் படையெடுத்துவந்து நகரத்தை வளைத்துக் கைப்பற்றித் தெய்வாலயத்திலும் அரசனது மாளிகையிலும் சேர்த்துவைத்திருந்த செல்வப் பொருளனைத்தையும் எடுத்துக்கொண்டு சாலமோன் ஆலயத்துக்காகச் செய்துவைத்திருந்த பொன் தட்டுமுட்டுக்களையெல்லாம் உடைத்துப் போட்டான். அதன்றி அரசனையும் அவன் வீட்டாரனைவரையும் நாட்டிலே செல்வாக்கும் வலிமையும் திறமையுமுடையவர்களையும் சிறைப்பிடித்துக் கொண்டுபோனான்.

சிதேக்கியா என்பவன் அரசாண்ட காலத்திலே நேபுகாத்நேச்சார் மூன்றாந்தரம் எல்லாச் சேனையோடும் வந்து திருநகரமாகிய எருசலேமை வளைத்து அதைச் சுற்றிலும் கொத்தளங்கள் கட்டினான். காலம் செல்லச் செல்ல நகரத்திலே பஞ்சம் பெருகிப்போயிற்று. அப்படி மக்கள் ஆகாரமின்றிப் பசியும் பட்டினியுமாய்க் கிடந்த காலத்தில் மதிலில் ஒரு திறப்புண்டாயிற்று. அது கண்ட அரசனும் அவன் போர் வீரரும் ஓட்டம் பிடித்தார்கள். ஆயினும் கல்தேயர் அரசனைப் பின்தொடர்ந்தோடி எரிகோவின் வயல்வெளிகளிலே அவனைப் பிடித்துப் பாபேலின் அரசன்முன் கொண்டுவந்து

விட்டார்கள். அந்த அரசன் சொன்ன தீர்ப்பின்படி சிதேக்கியா பார்த்திருக்க அவன் பிள்ளைகளை வெட்டினார்கள். பின் அவன் கண்ணிரண்டையும் குத்திக் குருடாக்கி அவனைச் சங்கிலிகளால் கட்டிப் பாபேலுக்குக் கொண்டுபோனார்கள். கல்தேயர் ஆண்டவரது ஆலயத்திலும் அரசனது மாளிகையிலும் எருசலேமிலுள்ள எல்லா வீடுகளிலும் நெருப்புவைத்து நகரத்தைச் சூழ்ந்த மதிலை இடித்துப்போட்டார்கள். ஆலயத்துத் தட்டு முட்டுக்களையோ பாபேலுக்குக் கொண்டுபோனார்கள். அவ்வாறு யூதா தன் நாட்டை இழந்து சிறை பிடியுண்டு போயிற்று. இதைத்தான் எரேமியா புலம்பலாகப் பாடியுள்ளார்.

எஸ்ரு—நெகேமியா

முன்னுரை

பாபிலோனிய அடிமைத்தனத்தோடு இஸ்ரவேலில் முடி ஆட்சி முடிவுற்றது. கி.மு. 538-ல் பாரசிக மன்னன் கோரேஸ், நாடுகடத்தப்பட்ட யூதர்களை யூதேயாவிற்குத் திரும்பிப்போக அனுமதித்தான். எருசலேமில் குடியேறியவுடன் அழிந்த ஆலயத்தை திரும்பவும் எழுப்பும் வேலையில் யூதர்கள் ஈடுபட்டனர். கி.மு. 475-ல் அவர்கள் ஒரு தலைவரை ஏற்படுத்தினர். அவர்தான் எஸ்ரு. அவர் வழிபாட்டைப் புதுப்பித்து கடவுளின் உடன்படிக்கைக்கு மீண்டும் முக்கியத்துவம் அளித்தார். ஞான வாழ்விலும், நன்னெறி யிலும் மீண்டும் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

ஆலயத்தைக் கட்டிப் புதுப்பித்தவர் எஸ்ரு. எருசலேமின் மதிலை மறுபடியும் கட்டியவர் நெகேமியா.

206. யூதர் எருசலேமுக்குத் திரும்பிவருதல்

எஸ்றா 1–3

நேபுகாத்நேச்சார் அரசன் எருசலேமை முற்றுகையிட்டு சுமார் எழுபது ஆண்டுகளுக்குப் பின் கோரேஸ் என்னும் ஓர் அரசன் பாபிலோனை ஆண்டான். பாபிலோனில் வசித்து வந்த யூதர்கள் பலர் இந்த எழுபது வருட காலத்தில் எருசலேமை மறந்துவிட்டனர். இளைஞர்கள் எருசலேம்பற்றிய செய்திகளை முந்தின தலைமுறையினரிடம் கதைபோல் கேட்டறிந்து வைத்திருந்தனர்.

எரேமியா, எசேக்கியேல் தீர்க்கதரிசிகளின் மூலம் கடவுளின் வாக்குப்படி ஒருநாள் தங்கள் சொந்த நாடாகிய எருசலேமிற்குத் திரும்பச் செல்வோம் என்று யூதர் நம்பினர். கோரேஸ் அரசன் மிகவும் நல்லவன். அவன் ராஜ்யம் விரிந்து, பரந்து இருந்தது. பெருந்தன்மை மிக்க கோரேஸ் மக்கள் யாவரும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டுமென்று விரும்பினான். ஆகவே போர் நடந்தபோது பிடிபட்ட யூத மக்கள் அவரவர், சொந்த இடமாகிய எருசலேமுக்குத் திரும்பச் செல்லலாம் என்று அறிவித்தான். அதன்படி பாபிலோனில் வசித்துவந்த யூத மக்கள் எருசலேமுக்குச் செல்ல ஆயத்தமானார்கள். நேபுகாத்நேச்சார் காலத்தில் எருசலேம் ஆலயத்திலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட அரிய பொக்கிஷங்களையும் கோரேஸ் யூதர்களிடம் திரும்பக் கொடுத்ததுமன்றி எருசலேமுக்குத் திரும்பிச் செல்லும் எளிய மக்களுக்குப் பொருள் உதவியும் செய்தான்.

அநேகம் ஆயிரம் யூதர்கள் பாபிலோனில் வாழ்ந்தாலும் கொஞ்சம் பேரே செருபாபேல் என்பவன் தலைமையில் யோசுவா என்னும் பிரதான ஆசாரியனோடு புறப்பட்டார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசனத்தின்படி வெட்டி எறியப்பட்ட தலைமயிர்களில் ஒன்றிரண்டை மறுபடியும் சேகரித்ததுபோல் மிகச் சிலரே எருசலேமுக்குப் பயணப்பட்டனர்.

அவர்கள் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் தங்கள் பூர்வீக இடமாகிய எருசலேமுக்குள் நுழைந்தார்கள். ஆனால் அந்தோ பரிதாபம்! அவர்கள் எதிர்பார்ப்பெல்லாம் வீணாகி ஆலயம் இடிந்த பாழடைந்த ஒரு நகரைத்தான் கண்டார்கள். அது மட்டுமா? அக்கம் பக்கம் வசித்த சமாரிய மக்கள் இவர்கள் வரவை விரும்பவில்லை.

முன்பு இஸ்ரவேலர்கள் அசீரியர்களால் முறியடிக்கப்பட்டபோது இஸ்ரவேலருக்குப் பதிலாக சமாரியர்கள் அங்கு குடியேற்றப்பட்டிருந்தனர். இந்த சமாரியர்கள் விக்கிரக வணக்கம் செய்பவர்கள். இவர்களுக்கு யூதரைக் கண்டால் பிடிக்கவில்லை. இந்நிலையில் நகரத்தைத் திரும்பக் கட்டுவது எப்படி என்று செருபாபேலும் யோசுவாவும் சிந்தனை செய்தனர்.

207. தேவாலயம் கட்டத்தொடங்குதல்

எஸ்றா 2,3

எருசலேமுக்குத் திரும்பிவந்த யூதர்கள் முதலில் தாங்கள் குடியிருப்பதற்கு லகுவான வீடுகளை அமைத்துக்கொண்டார்கள். பிறகு எருசலேமின் நிலையை சீர்திருத்தவும் ஆலயம் கட்டவும் பொருள் சேகரிக்கவும் ஆரம்பித்தனர். அதற்குமுன் ஒரு பலிபீடம் கட்டி தகன பலி செலுத்தி செருபாபேல், யோசுவா இவர்கள் தலைமையில் பண்டிகைகளை ஆசரித்தனர். இந்தப் பலிபீடம் சாலொமோன் கட்டியபழைய ஆலயத்தின் பலிபீடம் மீதே கட்டப்பட்டது.

ஆலயம் கட்ட பொன், வெள்ளியைக் கொடுத்தனர். மக்கள் தங்களால் இயன்ற சகல பொருட்களையும் (உ-ம்) எண்ணெய்கூட கொடுத்து உதவினர். லீபனோன் மரங்கள் முந்திய ஆலயத்திற்கு வாங்கப்பட்ட இடங்களிலே மறுபடியும் வாங்கப்பட்டது. ஒரு வருடத்திற்குப்பின் ஆலயம் கட்ட ஆரம்பமானது. அவர்கள் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடும்போதும்கூட எக்காளம் ஊதியும் ஆசாரியரும், லேவியரும் 'ஆண்டவர் நல்லவர். அவர் கிருபை இஸ்ரவேலின்மேல் என்றும் உள்ளது' என்றும் கடவுளைப் பாடிப் புகழ்ந்து துதி செலுத்தினார்கள்.

ஆனாலும் முன்னிருந்த ஆலயத்தைப் பார்த்தவர்களில் பலர் இப்புதிய அஸ்திபாரத்தைக் கண்டு தேம்பி, தேம்பி அழுதனர். ஒரு கூட்டத்தார் மகிழ்ந்து ஆரவாரத்தோடே கடவுளைத் துதித்தனர். அழுகையும், குதூகல ஓசையும் கலந்து எங்கும் பரவிற்று.

208. ஆலயம் கட்டி முடித்தல்

எஸ்றா 5

இஸ்ரவேலர் எனப்பட்ட யூதர்கள் திரும்பி வந்து எருசலேமில் ஆலயம் கட்டுகிறார்கள் என்று சமாரியரும் மற்றும் யூதரைப் பகைப்ப வரும் கேள்விப்பட்டு செருபாபேலைத் தேடி வந்து தாங்களும் சேர்ந்து ஆலயம் கட்டுவதாக முன்வந்தார்கள். செருபாபேல் அவர்களைத் தடுத்தான். 'நீங்கள் விக்கிரக வணக்கம் செய் பவர்கள். மேலும் கடவுள் எங்களைப் பிற தெய்வங்களை வணங்கியதற்காக அநேகம் தடவை தண்டித்து இருக்கிறார். இனிமேலும் அந்தத் தவற்றை நாங்கள் செய்யமாட்டோம். விக்கிரக வணக்கம் செய்பவர்களோடு நாங்கள் கலந்துகொள்ள விரும்பவில்லை. இந்த ஆலயத்தை நாங்களே கட்டி முடிப்போம்' என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட சமாரியரும் மற்றவரும் கோபம்கொண்டு ஆலய வேலை தொடராத படி அநேக தடைகள் செய்தனர். அரசனுக்கு யூதர்கள்பற்றி பொய்யான குற்றச்சாட்டுகளை எழுதினர்கள். பதினாறு வருடங்களாக ஆலயம் கட்டும் வேலை தொடராமல் நின்றது. அரசனாகிய கோரேஸ் விருப்பப்படி பணமும் உதவியும் கொடுத்து உற்சாகப்படுத்தி இப்படியாக ஆலயம் கட்டடம் தொடர்ந்து கட்டப்பட்டது. மேலும் சகரியாவும் ஆகாயும் சொன்ன தீர்க்க தரிசனங்களினால் மக்கள் ஊக்கமடைந்து உற்சாகத்தோடு இப்புதிய ஆலயத்தைக் கட்டி முடித்தனர்.

சாலொமோன் அரசன் கட்டிய ஆலயம் இடிக்கப்பட்டு எழுபது ஆண்டுகள் கழித்துத் தான் இந்த ஆலயம் கட்டி முடிந்தது. தீர்க்கதரிசிகள் ஜனங்களை நோக்கி, இந்த ஆலயத்தின் மகிமைதான் மிகப் பெரிதாகும் என்றும் சியோனின் குமாரத்தியே களிகூறு, எருசலேமின் குமாரத்தியே மகிழ்ந்திரு, இதோ உன் இராஜா வருவார். அவர் நீதி நிறைந்தவர், வெற்றி சிறந்தவர். அவர் மனத்தாழ்மை உடையவராய் ஒரு கழுதைக் குட்டியின்மேலே ஏறிவருகிறார் என்று ஆர்ப்பரித்து மக்களை ஆற்றித் தேற்றினார்கள். இவ்வாறு யூதர் ஆலயத்தைக் கட்டி முடித்து அக, முக மலர்ச்சியுடன் பிரதிஷ்டை செய்து மகிழ்ந்தார்கள்.

209. அரசனின் பானபாத்திரக்காரன்

நெகே. 1-2

பாபிலோனில் வசித்து வந்த யூதர்களில் நெகேமியா ஒருவன். அவன் அரசனின் பான பாத்திரக்காரனாயிருந்தான். அதாவது அரசன் குடிக்கும் திராட்சை ரசத்தைப் பரிமாறுபவன்.

ஒருநாள் எருசலேமிலிருந்து சில யூதர்கள் திரும்பி பாபிலோனுக்கு வந்திருந்தனர். அவர்கள் நெகேமியாவைச் சந்தித்தனர். சுக சேமங்களைப் பரிமாறிக்கொண்டபின் எருசலேமின் நிலையைப் பற்றிப் பேசினர். அங்கு எருசலேம் நகரின் கோட்டைச் சுவர்கள் அழிந்துபோய்க் கிடப்பதைப்பற்றியும் எதிரிகளினால் விளையும் துன்பங்கள் பற்றியும் நெகேமியாவிற்குத் தெரியப்படுத்தினார்கள். அக் காலத்தில் முக்கிய நகரங்கள் கோட்டைச் சுவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்தன.

நெகேமியாவுக்கு மிகுந்த துக்கம் உண்டாயிற்று. தனியாகச் சென்று ஜெபித்தான். எருசலேமின் மதில்கள் மறுபடியும் கட்டப்பட கடவுள் தனக்கு ஒரு வழியைக் காட்ட வேண்டும் என்று காத்திருந்தான். ஒருநாள் அரசனின் சமூகத்தில் முகவாட்டமுடையவனாய்க் காணப்பட்டான். அரசன் காரணம் கேட்ட போது தன் மனதைத் திறந்து அரசனிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தான்.

அரசன் மனமிரங்கி நெகேமியா விரும்பிய எல்லாவற்றையும் அவனுக்கு அளித்தான். அவனுக்குத் தேவையான விடுமுறை கொடுத்து, பொருளுதவி அளித்து காடுகளிலிருந்து மரங்கள், எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதற்கான பயணச்சீட்டு, மேலும் துணைக்கான பல சிப்பாய்களையும் கொடுத்து உற்சாகப்படுத்தி நெகேமியாவை அரசன் எருசலேமுக்கு அனுப்பி வைத்தான்.

210. எருசலேம் மதில்கள் கட்டப்படுதல்

நெகே. 2-4


நெகேமியா எருசலேமை அடைந்து, சில நாட்கள் ஓய்ந்திருந்து எல்லாவற்றையும் ஊன்றிக் கவனித்தான். ஒருநாள் இரவு சில நண்பர்களை மட்டும் அழைத்துக்கொண்டு கழுதைமேல் ஏறி எருசலேம் நகரைச் சுற்றி வந்தான். இப்படியாக எருசலேமின் பாழான இடங்களைக் கண்டு, செய்யவேண்டிய காரியங்களைத் திட்டமிட்டான்.

மறுநாள் தன் வசமுள்ள தலைவர்களையும் மற்ற பிற உதவிகள் செய்ய முன்வருபவர்களையும் ஆர்வமுடையவர்களையும் அழைத்து, கடவுள் தன்னை அங்கு வழிநடத்திய காரியத்தையும் எடுத்துக்கூறி எருசலேமின் மதில்கள் எப்படிக் கட்டப்பட வேண்டும் என்று திட்டம் தீட்டினான். பகுதி பகுதியாகச் சுவர்களை எழுப்ப மக்களைக் குழுக்களாகப் பிரித்தான். சில குடும்பங்கள் சில பகுதிகளைக் கட்டித்தர முன்வந்தன.

வேலை ஆரம்பிக்கப்பட்டது. சமாரியர்கள் அவர்களைக் கேலி செய்தனர். அநேக இடையூறுகளுக்கிடையே மதில்கள் பாதிவரைக் கட்டப்பட்டுவிட்டன. ஆனால் சமாரியர்கள் மறுபடியும் எருசலேம் கட்டப்படுவதை விரும்பாமல் போர் செய்ய ஆயத்தமானார்கள்.

நெகேமியா இதைக் கேள்விப்பட்டு, ஒரு கூட்டத்தார் வேலை செய்யவும், மறு கூட்டத்தார் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவும் பிரித்து வைத்தான். பயப்படாதீர்கள் தைரியமாய் வேலை செய்யுங்கள், கடவுள் நம்மோடிருக்கிறார் என்று உற்சாகப்படுத்தி, ஒவ்வொரு வேலையாள் வசமும் ஒரு போர் ஆயுதத்தையும் துணையாகக் கொடுத்து வைத்தான். வேலை செய்யும்போது எதிர்பாராத விதமாக விரோதிகளால் தாக்கப்பட்டுவிட்டால் பாதுகாப்பும் வேண்டுமல்லவா?

எல்லோரும் ஜாக்கிரதையோடும், கருத்தோதோடும், உற்சாகத்தோடும் இரவு, பகல் என்று பாராமல் வேலை செய்து மதில்களைக் கட்டி முடித்தனர். எருசலேம் இப்போது பலமான, பாதுகாப்பான நகரமாக மாறியது.



எருசலேம் மதில்கள் கட்டப்படுதல் (நெகே. 2—4)

211. கடவுளின் கட்டளைகளைக் கற்றுக்கொள்ளுதல்

நெகே. 8

எருசலேம் நகரத்தைச் சுற்றி மதில்கள் கட்டி முடிக்கப்பட்ட பின் மக்கள் யாவரும் பெரியோரும், சிறியோரும் ஆண்களும், பெண்களும் குடும்பங்களாகக் கூடி கடவுளின் செய்தியை நெகேமியாவின்மூலம் கேட்டு மகிழ்ந்தனர்.

கடவுளின் கட்டளை அறியும்படி அவைகளை வாசிக்கச் சொன்னார்கள். எஸ்றா தீர்க்கனால் நியமிக்கப்பட்ட பதின்மூன்று லேவியர்களின் உதவியோடு காலையிலிருந்து மாலை வரை கடவுளின் கட்டளைகளை மக்களுக்கு விளக்கிக் கூறினார்கள்.

இதைக் கேட்ட மக்கள் தாங்கள் கடவுளின் கட்டளைகளை அநேகந் தடவை மீறி நடந்துள்ளோமே என்று அழுது மனம் திரும்பினார்கள். நெகேமியாவும் எஸ்றாவும் அவர்களை அமைதிப்படுத்தி 'இன்று பரிசுத்த நாள், எல்லோரும் மனமகிழ்ச்சியோடு வீடு சென்று விருந்து சமைத்து உண்ணுங்கள்' என்றும், 'இல்லாதவர்களோடும், எளியவர்களோடும் பகிர்ந்து சாப்பிடுங்கள்' என்றும் உற்சாகப்படுத்திக் கூட்டத்தை அனுப்பிவைத்தார். இப்படியாக இரண்டு வாரங்கள் கடவுளின் செய்தி அவர்களுக்குத் தொடர்ந்து சொல்லப்பட்டது. அதன் பின் ஸ்தோத்திர பலி செலுத்தி இனிமேல் கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்போம் என்று உறுதி செய்துகொண்டார்கள்.

எஸ்தரின் சரித்திரம்

முன்னுரை

யூதர்கள் அந்நியரின் ஆதிக்கத்திலும், அடிமைத்தனத்திலும் வாழ்ந்த பெர்சிய ஆட்சிக்காலம். இக்கதையின் பின்னணி, கடவுள் தன் மக்களை எப்படியும் விடுவிக்கக் கூடும். வலிய கருவிகள் அவருக்குத் தேவை இல்லை. மிக எளிய கருவிகளைக் கொண்டும் காப்பாற்றக்கூடும் என்னும் கருத்தைக் கொண்டதுவே எஸ்தரின் வரலாறு.

212. புதிய அரசியைத் தேர்ந்தெடுத்தல்

எஸ். 1-2

ஆகாஸ்வேர் மன்னன் பெர்சியா நாட்டை ஆண்டு வந்தான். அவன் ஒருநாள் தன் பிரபுக்களோடு விருந்துண்டு களித்திருந்த சமயத்தில் தன் மனைவி வஸ்தியையும் சபை முன் வரும்படி அழைத்தான். அவள் வர மறுத்ததால் சபை முன் தனக்கு அவமானம் ஏற்பட்டுவிட்டது என்று நினைத்து தனக்குக் கீழ்ப்படியாத மனைவிமேல் கோபம் கொண்டு அவளை பட்டத்தரசி ஸ்தானத்திலிருந்து விலக்கிவிட்டான்.

அவளுக்குப் பதிலாகப் பட்டத்து ராணியாக வேறு யாரையாவது தேர்ந்தெடுக்கும் நோக்கத்துடன் நாட்டிலுள்ள அழகிய பெண்களை எல்லாம் அரண்மனைக்கு அழைத்துவரும்படி நாடெங்கும் பறைசாற்றினான்.

மொர்தெகாய் என்ற யூதன் பாபிலோனில் வசித்து வந்தான். அவன் அரண்மனையில் வேலை செய்து வந்தான். அவனிடம் பெற்றோரை இழந்த உறவுப் பெண் பிள்ளை ஒருத்தியிருந்தாள். அவள் பெயர் எஸ்தர். அவள் மிகுந்த பேரழகுடன் விளங்கியதால் மொர்தெகாய் அவளையும் அரண்மனைக்கு பிற அழகிய பெண்களுடன் அனுப்பிவைத்தான். அவள் யூதப் பெண் என்பதை வெளியில் சொல்லாதபடி எச்சரித்து வைத்திருந்தான். அரண்மனையில் எல்லோரும் எஸ்தரை அவள் அழகுக்காகவும் குணநலன்களுக்காகவும் மிகவும் விரும்பினர்.

ஒரு நாள் இந்தப் பெண்கள் அலங்காரம் செய்யப்பட்டு அழகிய ஆடை ஆபரணங்களுடன் ஒவ்வொருவராக அரசன் முன்னால் நிறுத்தப்பட்டனர். எஸ்தர் முறை வந்தபோது அரசன் மனமகிழ்ந்து 'இவளே என் பட்டத்து ராணி' என்று அறிவித்தார். எஸ்தருக்கு பயம் ஒரு பக்கம் இருந்தாலும் மகிழ்ச்சியாகவும் இருந்தது மொர்தெகாயின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அரண்மனையிலேயே இருவரும் இருந்ததால் அடிக்கடி நலம் விசாரித்துக் கொண்டனர்.

ஒருமுறை அரசனைக் கொலை செய்யும்படி இருவர் திட்டமிட்டதை மொர்தெகாய் அறிந்து எஸ்தர் மூலம் அரசனுக்குத் தெரியப்படுத்தி இப்படியாக அரசன் உயிரைக் காப்பாற்றினான். விரோதிகள் தூக்கிலிடப்பட்டனர். இச் செய்தியை அரசாங்கக் குறிப்பேடுகளில் எழுதிவைக்குமாறு அரசன் கட்டளையிட்டான்.



புதிய அரசியைத் தேர்ந்தெடுத்தல் (எஸ்தர் 1,2)

213. யூதர்களுக்கு எதிரான சதி

எஸ். 3-4

அரசனுக்கு அடுத்த இடத்தை வகிப்பவன் முதல் மந்திரியாகிய ஆமான். இவன் மிகக் கொடியவன். எல்லோரும் தன்னை தரையில் விழுந்து வணக்கம் செய்வதை விரும்புவான். எல்லோரும் அப்படியே செய்தனர். ஒருவன் தவிர. அவன்தான் மொர்தெகாய். மற்றவர் அவனைக் காரணம் கேட்டபோது தான் ஒரு

யூதனென்றும் கடவுளைத் தவிர வேறு யாருக் கும் தலை வணங்கமாட்டேன் என்றும் கூறினன். ஆமானுக்கு இது தெரிய வந்தபோது மொர் தெகாய்மேல் கடுங்கோபம் கொண்டு அவன் மக்களாகிய யூதர்களை அடியோடு ஒழிக்கத் திட்டமிட்டான். ஒருநாள் அரசனிடம் சென்று யூதர்கள் சட்டதிட்டங்களை அதிகம் மீறுகிறார் கள் என்றும் மற்றும் அநேக பொய் குற்றங்களை அவர்கள்மீது சுமத்தி நாடெங்கிலும் உள்ள யூதர்களை ஒரே நாளில் அழிப்பதற்கு அரச னிடம் உத்தரவு கேட்டான். அரசன் உத்தரவு கொடுத்தால் தான் கருவூலத்தில் ஏராளமான வெள்ளிக்காசுகளை சேர்ப்பேன் என்றும் கூறி னன்.

உடனே அரசன் சம்மதித்து முத்திரை மோதிரம் பதித்த கட்டளையும் கொடுத்துவிட் டான். இது ஒவ்வொரு நாட்டிலும் பறைசாற் றப்பட்டது. இதைக் கேட்ட யூதர்கள் பயந்து நடுங்கி உபவாசித்துக் கடவுளிடம் மன்றாடினர். இச் செய்தியை மொர்தெகாய் எஸ்தருக்குச் சொல்லி அனுப்பி யூத மக்களைக் காக்க நடவடிக்கை எடுக்கும்படி வேண்டினன். அக்கால வழக்கத்தின்படி அழைக்கப்படாமல் அரசன் முன் போய் யாராவது நின்றால் அவனுக்கு மரணம்தான் தண்டனை. ஆகவே அழைக்கப்படாமல் அரச சமுகத்தில் எப்படிப் போய் நிற்பேன் என்று எஸ்தர் பயந்தாள். ஆனால் மொர்தெகாய் 'யூதர்களைக் காக்கத் தான் கடவுள் உன்னை இங்கு அரசியாக நியமித் திருக்கிறார். உன்னை விட்டால் யூதர்களுக்கு வேறு வழியில்லை' என்று கூறினன். எஸ்தர் மனம் இறங்கினாள். தனக்காக மூன்று நாள் உபவாசம் செய்து ஜெபிக்கும்படியாக மொர் தெகாய் மூலம் யூதர்களுக்குச் செய்தி அனுப்பி னள். தானும் உபவாசத்துடன் ஜெபித்தாள்.

214. எஸ்தர் அரசியின் வேண்டுகோள்

எஸ். 5,6

மூன்றும் நாளிலே எஸ்தர் தன்னுடைய ராஜ உடைகளை அணிந்துகொண்டு பயத் தோடும், நடுக்கத்தோடும் அரச சபையில் அரசனுக்கு முன்பாக அழைப்பில்லாமல் போய் நின்றாள். அரசன் அவளைக் கண்டதும் மகிழ்ச்சி யோடு தனது பொற்செங்கோலை எஸ்தரிடம் நீட்டினன். அப்பொழுது அவள் கிட்டவந்து செங்கோலின் நுனியைத் தொட்டாள்.

ராஜா அவளை நோக்கி,'எஸ்தர் ராஜாத்தியே, உனக்கு என்ன வேண்டும்? நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட் டும் கேட்டாலும் உனக்குக் கொடுக்கப்படும்' என்றான். அப்பொழுது எஸ்தர் தான் ராஜா வுக்கு வைத்திருக்கும் விருந்திற்கு ராஜாவும் ஆமானும் இன்றைக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். உடனே அரசன் அதற் குச் சம்மதித்தார். ஆமானுக்கோ இருந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அரசிகூட தன்னைக் கனம்பண்ணுகிறாளே என்று கர்வமும் கொண்டான்.

ஆனாலும் மொர்தெகாய் உயிரோடு இருக்கு மளவும் தான் மகிழ்வோடு இருக்க முடியா தென்று கருதித் தன் மனைவியின் ஆலோசனையின் பேரில் மொர்தெகாயைக் கழுவில் ஏற்ற ஒரு கழுமரம் ஒன்றைத் தயார் செய்தான். இதற் காக அரசனிடம் ஒரு உத்தரவு பெற்று வரலா மென்று அரண்மனைக்குச் சென்றான். அரண் மனையில் அன்று அரசனுக்குத் தூக்கம் வர வில்லை. அதனால் அரசாங்கக் குறிப்பேடுகளைக் கொண்டு வந்து, வேலை ஆளை வாசிக்கச் சொன் னன். அதில் மொர்தெகாய் அரசன் உயிரைக் காத்த செய்தி குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கேட்ட அரசன் மொர்தெகாய்க்குப் பதில் மரியாதை செய்யப்பட்டதா என்று வினவினன். வேலையாள் இல்லை என்று பதில் கூறினன். அந்த நேரத்தில் ஆமான் அரண் மனைக்குள் வந்தான். அரசன் அவனிடம் 'அரச மரியாதை ஒருவனுக்குச் செய்ய வேண்டு மென்றால் என்ன செய்ய வேண்டும்' என்று கேட்டான்.

உடனே ஆமான் அது தனக்குத்தான் என்று எண்ணிக்கொண்டு ராஜ உடையணிந்து அரச குதிரைமேல் ஏறி நகரைச் சுற்றி ஊர்வலம் வரவேண்டும் என்று கூறினன். அரசன் அதை ஆமோதித்து இந்த மரியாதையை மொர்தெ காய்க்குச் செய்யும்படி ஆமானுக்கு உத்திர விட்டான். இது எரிகிற நெருப்பிற்கு மேலும் எண்ணெய் வார்த்தது போலிருந்தது, ஆமா னுக்கு. ஆனாலும் ஒன்றும் பேசாமல் ஏமாற்றத் தோடு வீடு வந்து சேர்ந்தான்.

215. பூரீம் பண்டிகை

எஸ். 7,8

எஸ்தர் ராணியின் அரண்மனையில் அரசன் ஆகாஸ்வேரா் விருந்துண்டு கவனித்திருந்தான். கூட இருந்த ஆமானோ மன நிம்மதியில்லாதவனாய் இருந்தான். அரசன் திராட்சரசம் பருகியவாறே 'அரசியே உன் வேண்டுதல் என்ன? நீ எதைக் கேட்டாலும், இந்த ராஜ்யத்தில் பாதியைக் கேட்டாலும் தருவேன்' என்றார். அதற்கு எஸ்தர் 'ராஜாவே என்னுடைய உயிரும் என் யூத மக்களுடைய உயிரும் ஒரு கெட்ட மனிதனின் சூழ்ச்சியால் அழியப்போகிறது' என்றாள். உடனே அரசனுக்கு கோபம் மூண்டது 'யார், அந்த மனிதன்' எனக் கேட்டார். 'இதோ இந்த ஆமான்தான்' என்று எஸ்தர் சுட்டிக் காட்டினாள். ஆமான் முகம் வேறுபட்டு பயந்து பேச்சு மூச்சில்லாமல் அரசியின் கால்களில் விழுந்து தன் உயிருக்காக மன்னிப்புக் கேட்க முயற்சித்தான். தன் அரசியின் கால்களைப் பிடிக்க இந்த ஆமான் நெருங்கினதைக் கண்டு மேலும் அரசன் கோபம் கொண்டு ஆமானை கழுமரத்தில் தூக்கிப்போட உத்திரவிட்டான். மொர்தெகாய்க்காக ஆமான் வெட்டிவைத்த கழுமரத்திலேயே தானே அவன் போடப்பட்டான். 'தான் வெட்டின குழியில் தானே விழுந்தான்' என்ற முதுமொழி உண்மையாயிற்று.

பின்பு ஆமான் இடத்தில் மொர்தெகாய் முதல் மந்திரியாக நியமிக்கப்பட்டார். ஆமானின் பத்துக் குமாரரும் கழுவில் ஏற்றப்பட்டனர். எஸ்தர் ராணி, ராஜாவிடம் சென்று, யூதர்களைக் கொலை செய்யும்படியான கட்டளை மாற்றப்பட வேண்டும் என்று பரிவுடன் கேட்டாள். அதற்கு அரசன் எழுதிய கட்டளையை மாற்ற முடியாது. ஆனால் எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெறலாம் என்று மறு உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவு நாடெங்கும் பறைசாற்றப்பட்டது. ஆகவே யூதர்கள் தங்கள் எதிரிகளைக் கொன்று வெற்றி விழா கொண்டாடி மகிழ்ந்தார்கள். அதற்கு பூரீம் பண்டிகை என்று பெயர் வந்தது. இன்றும் யூதர்களிடையே மார்ச் மாதத்தில் இப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

யோபுவின் சரித்திரம்

முன்னுரை

கடவுள்மேல் தன் முழு விசுவாசத்தையும் வைத்திருந்த நீதிமானின் கதை. பிசாசினால் சோதிக்கப்பட்டபோது துன்பம் என்னும் பிரச்சினைக்கு விடைகாண முயல்கின்றனர், யோபும் அவர் நண்பர்களும். 'துன்பத்திற்குக் காரணம் பாவம், நீ இப்பொழுது துன்புறுகிறாய். ஆகவே நீ பாவம் செய்திருக்கவேண்டும்' என்பது நண்பர்களின் வாதம். 'நான் பாவம் செய்யவில்லை என்பதற்கு என் மனமே சாட்சி, ஆகவே என் துன்பத்திற்குக் காரணம் என் பாவமாயிருக்க முடியாது' என்பது யோபுவின் எதிர் வாதம். ஆயினும் கடவுள்மேல் அவர் வைத்த விசுவாசம் தளரவில்லை. உச்சநிலையையும் அடைகிறது. இறுதியாகக் கடவுள் தம் ஞானத்தின் செயல்களைச் சொல்லிக்காட்டி யோபின் வாயை அடைக்கிறார். சோதனையில் நிலைத்திருந்த யோபுக்கு மக்களையும் செல்வத்தையும் இரட்டிப்பாக மீண்டும் தருகிறார் கடவுள்.

216. யோபுவின் கைகள்

யோபு கடவுளுக்குப் பிரியமான ஒரு உத்தமமான மனிதன், அவன் கடவுளுக்குப் பயந்தும், பொல்லாப்புக்கு விலகியும் இருந்தான். ஏராளமான பொருட்களும் ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் இருந்தார்கள். அவன் மக்கள் செழித்து விருத்தியடைந்திருந்தனர். நல்ல ஒற்றுமையும் மனமகிழ்ச்சியும் கொண்ட குடும்பங்களாக இருந்தனர்.

சாத்தான் யோபின் மேலே கவனம் வைத்து கர்த்தர் அவனை முற்றிலும் ஆசிர்வதித்து வைத்திருப்பதால்தான் அவன் கடவுளுக்குப் பயந்து நடக்கிறான் என்று கருதி அவன் கடவுளைத் தூஷிக்க ஒரு வழி உண்டாக்க விரும்பினான். ஆகவே தேவ தூதர்களோடு சேர்ந்து கடவுளின் சந்நிதானத்தில் போய் நின்றான்.



யோபுவின் கதைகள் (யோபு 1)

யோபுவைச் சோதிக்கக் கடவுளிடம் உத்தரவு கேட்டான். அவன்மேல் மாத்திரம் கை போடாதே, அவன் உடைமைகளை அழித்துவிடு என்று உத்தரவு கொடுத்தார்.

சாத்தான் திரும்பி வந்து யோபுவின் உடைமைகளான ஆடுமாடு, ஒட்டகங்கள், பயிர்கள், மக்கள் யாவையும் ஒவ்வொன்றாக அழித்தான். மிருகஜீவன்கள் எதிரிகளால் களவாடப்பட்டன, பயிர்கள் அழிக்கப்பட்டன. வேலையாட்களும் கொல்லப்பட்டனர். வீடு இடிந்து அவருடைய பிள்ளைகள் மாண்டபோது யோபின் துக்கம் எல்லை மீறியது. அவன் எழுந்து தன் சால்வையைக் கிழித்து தலையைச் சிரைத்து தரையிலே விழுந்து நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன், நிர்வாணியாய்த் திரும்புவேன் என்று கூறினான். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், அவர் நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்றார். எனினும் யோபு பாவம் செய்யவில்லை, கடவுளைக் குறை கூறவும் இல்லை.

சாத்தான் மறுபடியும் கடவுளோடு வழக்காடி யோபுவின் சரீரத்தையும் வாதிக்க அனுமதி பெற்றான். பிராணனை மட்டும் விட்டு வைக்குமாறு கடவுள் எச்சரித்தார். யோபுவின் உள்ளங்கால் தொடங்கி, உச்சந்தலைவரை கொடிய பருக்கள் உண்டாயிற்று. அவன் ஒரு ஓட்டை எடுத்துத் தன்னைச் சுரண்டிக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான். அவன் மனைவி அவனைப் பார்த்து 'நீர் இன்னும் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறீரோ? கடவுளை தூஷித்து ஜீவனைவிடும்' என்று சொன்ன போது, யோபுவோ 'நீ பயித்தியக்காரிபோல் பேசுகிறாயே. கடவுள் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ' என்றார். அப்படியும் யோபு தன் உதடுகளினால் பாவம் செய்யவில்லை.

217. யோபுவின் நண்பர்கள்

யோபுவின் பாவங்கள், துன்பங்கள் பற்றியே யாவரும் பேசினார்கள். அவருடைய நண்பர்களான மூன்று பேர் அவனை ஆறுதல் படுத்தும் பொருட்டு வந்தனர். எலிப்பாஸ், பில்தாது, சோப்பார் என்பது அவர்கள் பெயர்கள். யோபுவை தூரத்திலிருந்து கண்டபோது அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல், சத்தமிட்டு அழுதார்கள். தங்கள் சால்வையைக் கிழித்துக்கொண்டு வானத்தைப் பார்த்து தங்கள் தலைகள்மேல் புழுதியைத் தூற்றிக்கொண்டு வந்தார்கள். அவன் துக்கம்

மகா கொடியது என்று கண்டு, அவனோடு ஒரு வார்த்தையும் பேசாமல் இரவு பகல் ஏழு நாள் அவனோடுகூட தரையில் உட்கார்ந்திருந்தனர்.

பின்பு ஒவ்வொருவராக அறிவுரை சொல்ல ஆரம்பித்தனர். ஏதாவது கடவுளுக்கு விரோத மான பாவம் செய்திருந்தால் மன்னிப்பு கேட்கும்படியாக ஆலோசனை வழங்கினார்கள். ஆனால் யோபுவோ கடவுளுக்கு முன்பாகக் குற்ற மற்றவனாகக் காணப்பட்டான். நண்பர்கள் இதை நம்பவில்லை. கடவுள் என்னிடம் பேசினால்தான் அதை விளக்குவேன் என்றான் யோபு.

அப்போது மற்றொரு நண்பன் எலிகூ குறுக்கிட்டு வானங்களையும், நட்சத்திரங்களையும் படைத்த உன்னதக் கடவுள் யோபு நல்லவனா கெட்டவனா என்பதைப் பற்றி பெரிதாகக் கருதமாட்டார் என்றான். யோபுவுக்கு இது மேலும் வருத்தத்தைக் கொடுத்தது. இறுதியில் யோபுவுக்குத் தன் நண்பர்களால் எந்தவித மான ஆறுதலான வார்த்தைகளும் கிடைக்கவில்லை.

218. யோபு தேற்றப்படுதல்

கடவுள் புயல், மின்னல், மழையின் ஊடே யோபுவோடு பேசினார். 'என்னைக் கேள்விகள் கேட்கும் முன்பே, நான் உன்னைக் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டும் என்றார். நான் உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் படைக்கும்போது எங்கிருந்தாய்? பின் பனி, மலை, கடல், வெளிச்சம் இவைபற்றி உனக்குத் தெரியுமா? மிருகங்களையும், பறவைகளையும்பற்றி உனக்குத் தெரியுமா?' என்று கடவுள் பல கேள்விகளைக் கேட்க யோபு மௌனமாக இருந்தார்.

ஏனெனில் உன்னதமான கடவுளே கேள்விகள் கேட்க, அற்ப மனிதனாகிய தான் யார்? என்ற உணர்வு எழுந்தது. தான் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற ஒரு மனிதனாக இருப்பதினால் தான் கடவுளைக் கேள்விகள் கேட்கலாமா? என்று உணர்ந்தான். கடவுள் யோபுவுக்குத் துன்பம் வந்த காரணத்தை விளக்கவில்லை. ஆனால் எல்லாவற்றிலும் கடவுள் செய்வதே சரி என்று ஒப்புக்கொள்ளும் ஞானத்தையும் கொடுத்தார்.

யோபுவின் நண்பர்கள் தனக்குச் சரியானபடி கடவுளைக் காட்டவில்லை என்று அறிந்த யோபு கடவுளோடு பேசியபின் அவர் மகிமையை அறிந்தார். மேலும் தன் நண்பர்களுக்காகவும் கடவுளை நோக்கி மன்றாடி அவர்களை ஆசீர்வதித்தான். கடவுளும் யோபுவை இரட்டிப்பான ஆசீர்வாதத்தினால் நிரப்பினார். யோபு பரிபூரண நற்சுகம் பெற்றுக்கொண்டார். பத்து குழந்தைகளையும் திரும்ப தேவன் யோபுவிற்குக் கொடுத்தார். ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் பிறந்தனர். யோபின் குமாரத்திகளைப்போன்று அழகான பெண்கள் எங்கும் காணப்படவில்லை. அவர்கள் பெயர்களாவன: எமிமாள், கெத்சீயாள், கேரனாப்பு. அவர்களுக்கும் சுதந்தரம் கொடுத்தான். இதற்குப் பிறகும் யோபு நூற்று நாற்பது வருஷம் உயிரோடிருந்து நாலு தலைமுறையாகத் தன் பேரப்பிள்ளைகளையும் அவர்கள் பிள்ளைகளையும் கண்டான். பின்பு பூரண வயதுள்ளவனாய் மரித்தான்.

சங்கீதம்

இஸ்ரவேலரின் கீதங்கள்

இஸ்ரவேல் மக்கள் ஆடல் பாடல்களை அதிகமாக விரும்புபவர்கள். சங்கீதப் புத்தகமே அவர்களின் ஞானப்பாட்டும், கீர்த்தனைகளுமாயிருந்தது. அவர்கள் ஆலயங்களில் பலவித கீதவாத்தியங்களோடு பாடிக் கடவுளை மகிமைப்படுத்தினார்கள்.

சங்கீதப் புத்தகத்தில் அடங்கிய சங்கீதங்கள் பல வருடங்களாகப் பல காலங்களில் பல கவிஞர்களால் எழுதப்பட்டவை. கடவுளுக்காகக் கொண்டாடப்பட்ட விழாக்களில் பாடப்பட்டவை பல. தேசிய விழாக்களில் பாடப்பட்டவை சில. கடவுளுக்கு நன்றி செலுத்தும் எண்ணத்தில் பாடப்பட்டவை சில. சில சங்கீதங்கள் பாடியவரின் உள்ளத்து உணர்ச்சிகளை அப்படியே பிரதிபலிக்கின்றன.

தாவீது அரசன் ஒரு நல்ல பாடகர். கவிஞரும்கூட. அவர் வாழ்வில் பாடப்பட்ட அநேக சங்கீதங்கள் இன்றும் நம் வாழ்விலும் மகிழ்ச்சியையும், துக்கத்தையும், நன்றியையும், கடவுளின் மகத்துவத்தையும் பிரதிபிம்பிப்பதாய் இருக்கின்றன. (உ-ம்) சங். 8,24, 67,100,103,108,117. சில சங்கீதங்கள் நம்மை ஆற்றித் தேற்றுவனவாயும், உதவி செய்பவையாயும் இருக்கின்றன. (உ-ம்) 23,46,121.

நீதிமொழிகள், பிரசங்கி

தாவீது அரசனின் மகன் சாலொமோன் அரசனானபோது கடவுள் அவருக்கு எல்லா ஆசீர்வாதங்களையும் அருளிச்செய்தார். சாலொமோனும் கடவுளிடம் வேறு எதையும் கேளாமல் ஞானத்தைக்கேட்டுப் பெற்றுக்கொண்டார். கடவுள் கொடுத்த அந்த சிறந்த ஞானத்தால் சாலொமோன் அநேக ஞான புத்திமொழிகளை எழுதிவைத்தார். அவையே நீதி மொழிகளும் பிரசங்கியும் ஆகும்.

வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் சிறப்பாக இயக்கிக்கொள்வதுதான் ஞானம். அந்த முறையில் பிரசங்கியும், நீதிமொழிகளும் நமக்கு மிகவும் உபயோகமாய் உள்ளது. குடும்ப வாழ்க்கை, நண்பர்கள், மகிழ்ச்சி, சோம்பல்தனம், வீண் பேச்சு இப்படி எல்லா வற்றிலும் நம்மை விழிப்புணர்ச்சியோடு வழிநடத்துகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகக் கடவுளுக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்று வலியுறுத்துகிறது.

பெரிய தீர்க்கதரிசிகள் நால்வர்

ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் இந்த நான்கு தீர்க்கர்களும் கி.மு. ஏழாம், ஆறும் நூற்றாண்டில் எருசலேம் வீழ்ச்சியின்போதும் அதன் பிறகும் வாழ்ந்தவர்கள். எழுபது ஆண்டுகள் தொடர்ந்து இஸ்ரவேல் மக்கள் தங்கள் சொந்த நாட்டைவிட்டு வெளியே அலைந்து திரிந்தார்கள். இந்தத் தீர்க்கதரிசிகள்தான் இஸ்ரவேல் மக்கள் யாவரையும் ஒன்றுசேர்த்து திரும்பவும் எருசலேமிலே குடியேறச் செய்து அவர்களுக்கு ஒரு ராஜா வருவார், அவருடைய இராஜ்யம் சமாதானமாய் விளங்கும் என்றும் இயேசுவின் பிறப்பை அவரவர் வழியாய் முன்னுரைத்தனர்.

219. ஏசாயாவின் தரிசனம்

ஏசா. 6

இஸ்ரவேல் நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி இஸ்ரவேல் என்றும் மறு பகுதி யூதேயா என்றும் ஆனது அல்லவா? இஸ்ரவேலை இரண்டாம் ரெகொபெயாம் என்னும் அரசனும் யூதேயாவை உசியா என்னும் அரசனும் ஆண்டு வந்தனர். உசியா கடவுளை அதிகம் நேசித்து அவருக்குக் கீழ்ப்படிந்து அரசாட்சி செய்தார். அவர் இறந்தபோது யூதேயாவின் எதிர் காலம் என்னவாகுமோ என்று மக்கள் பேசிக்கொண்டனர்.

அப்போது ஏசாயா என்னும் நற்குணமுள்ள இளைஞன் ஆலயத்தில் நாட்டின் எதிர்காலத்தைக் குறித்து ஜெபித்துக்கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு ஒரு தரிசனம் தோன்றியது அது என்னவென்றால் உசியா ராஜா மரணமடைந்த ஆண்டில் ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டார். அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகள் இருந்தன. அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து, ஒருவரையொருவர் நோக்கி 'சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது' என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து ஆலயம் புகையினால் நிறைந்தது.

அப்பொழுது ஏசாயா 'ஐயோ! அதமானேன், அசுத்த உதடுகளுள்ள மனுஷன் நான், அசுத்த உதடுகளுள்ள மக்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன். சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே' என்றார். அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, கிட்டத்தில் பறந்து வந்து, அதினால் ஏசாயாவின் வாயைத் தொட்டு, 'இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது' என்றான். பின்பு 'யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்' என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தம் கேட்டது. அதற்கு ஏசாயா, 'இதோ, அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்' என்றான். அப்பொழுது அவர், 'நீ போய், இந்த மக்களை நோக்கி நீங்கள் காதாரக் கேட்டும், உணராமலும், கண்ணாரக் கண்டும், அறியாமலும் இருக்கிறீர்கள்' என்று சொல்லும்படிக் கடவுள் அனுப்பினார்.

220. ஏசாயாவின் தீர்க்கதரிசனம்

ஏசா. 7

உசியாவிற்குப் பிறகு அவர் பேரன் ஆகாஸ் யூதேயாவின் அரசனானான். அப்போது சீரியாவின் ராஜாவும் சேர்ந்துகொண்டு யூதேயாவின் மேல் படை எடுக்கத் தீர்மானித்தான். இதைக் கேட்ட யூதேயாவின் அரசன் ஆகாஸ் பயந்து என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்க ஏசாயா தீர்க்கதரிசிக்கு ஆளனுப்பினான்.

ஏசாயாவோ கடவுளை நம்பி அமைதியாக இருக்கும்படி ஆலோசனை சொன்னார். ஆனால் ஆகாஸ் அரசனோ அதைக் கேட்காமல் முட்டாள்தனமாக சீரியாவின் அரசனோடு சமாதானம் செய்துகொள்ள முயற்சித்து அவனுக்கு அடிமைபட்டுப்போனான். யூதேயாவின் அரசனாக இருந்துகொண்டு அசீரியாவின் அரசனுக்கு

ஏராளமான பொன், வெள்ளி, கப்பம் கட்டிக் கொண்டிருந்தான்.

ஆகாஸ் அரசனுக்கு ஏசாயா ஆலோசனை சொல்லிக்கொண்டிருந்த வேளையில் கிறிஸ்து பிறப்பின் தீர்க்கதரிசனத்தையும் முன் உரைக்கிறார். ஏசா. 7:14-ல் கூறியபடி ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடப் படும். இந்த தீர்க்கத்தரிசனம் 700 ஆண்டு களுக்குப் பின் நிறைவேறிற்று.

221. சூரியக் கடிகாரம்

ஏசா. 38

அந்நாளிலே எசேக்கியா என்னும் அரசன் வியாதிப்பட்டு மரணப் படுக்கையிலிருந்தார். அவர் உடலில் ஒரு பெரிய கொப்புளம் ஏற்பட்டு உடல் முழுவதும் அதன் விஷத்தினால் வேதனைப்பட்டார். அப்போது ஆமோத்தின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அரசனிடம் வந்து நீர் சீக்கிரம் மரித்துப் போவீர் என்றான். அரசன் எசேக்கியா கடவு ளிடம் 'நான் உமக்கு முன்பாக உண்மையும் உத்தமமுமாக நடந்தேனே. உமது பார் வைக்கு நலமானதைச் செய்தேனே' என்று அழுது விண்ணப்பம் செய்தான்.

கர்த்தர் அவன் விண்ணப்பத்தைக் கேட்டு ஏசாயாவிடம் 'நீ போய் அவன் ஆயுள் நாட்க ளோடே பதினைந்து வருடங்களைக் கூட்டிக் கொடுப்பேன் என்றும் இந்த தேசத்தையும் உன்மேல் போர் தொடுக்க இருக்கும் அசீரிய அரசனின் கைக்குத் தப்புவிப்பேன்' என்றும் சொல்லச் சொன்னார். ஏசாயா இதை அரச னிடம் கூறியபோது 'இதை நான் எப்படி நம்புவேன்? எனக்கு என்ன அடையாளம்' என்றார்.

அரசன் எசேக்கியாவின் தகப்பனாகிய ஆகாஸ் என்பவர் நேரத்தை அளக்கும் பொருட்டு ஒரு படிகட்டுப் பாதையைக் கட்டியிருந்தான். சூரிய ஒளி அந்தப் படிக்கட்டின்மேல் பிரகாசிப் பதை வைத்து நேரத்தைக் கணக்கிட்டார்கள். இதற்கு சூரியக் கடிகாரம் என்று பெயர். அதில் பத்து பாகையை பின்னிட்டு சூரிய வெளிச்சம் திரும்பியது. இதுவே அடையாளம் என்றார் ஏசாயா தீர்க்கன்.

எசேக்கியா ராஜா கடவுளுக்கு நன்றியோடு ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடினார். இந்த ஏசாயா தீர்க்கதரிசிதான் இயேசு பிறப்பைக் குறித்து, கன்னியின் வயிற்றில் பிறப்பார். அவர் சமாதான பிரபு என்றும், கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும் என்றும் இப்படி யாக முன்கூட்டியே தீர்க்கதரிசனம் உரைத்த வர். இஸ்ரவேல் மக்களின் போக்கையும் கண்டித்து உணர்த்தியவர்.

222. எரேமியா

எரே. 1

யோசியா என்ற அரசன் இளைஞனாய் இருந்த காலத்தில் எரேமியா என்னும் இளைஞன் எருசலேம் ஆலயத்தில் ஒரு ஊழியக் காரனாய் இருந்தான். அவனுக்காகக் கடவுள் வேறு திட்டம் வைத்திருந்தார். அவன் ஒரு தீர்க்கதரிசியாகக் கடவுளின் வார்த்தைகளை யூதேயா தேசமெங்கும் சொல்கிறவனாகவேண் டும் என்று விரும்பினார். இதை கடவுள் அவ னுக்குத் தெரிவித்தபோது 'இதை என்னால் செய்யமுடியாது நான் இளைஞன் என்றார். கடவுள் அவன் வாயைத் தொட்டு நீ பேச வேண்டிய வார்த்தையை உன் வாயில் கொடுப் பேன்' என்றார். கடவுளிடம் மேலும் பேசாமல் கீழ்ப்படிந்தார்.

கடவுள் இரு தரிசனத்தைக் காட்டினார். வாதுமை மரத்தின் இலையையும், ஒரு பொங்கு கிற பானை, வடக்கு நோக்கி திரும்பியுள்ளது போலவும் காண்பித்தார். இதன் அர்த்தம் வடக்கேயிருந்து தேசத்திற்குத் தீங்கு வரும் என்பதே. பிற தெய்வங்களை வணங்காமல் உண்மையான கடவுளாகிய தன்னை மட்டும் வணங்கும்படி மக்களுக்குச் சொல்லும்படி கடவுள் எரேமியாவிற்குக் கட்டளையிட்டார். தீங்கு வராதபடி மக்களை மனம் திரும்பச் சொல் என்றார். இப்படியாக மக்களுக்கு எச்சரிக்கை செய்யும் தீர்க்கதரிசியாக எரேமியா விளங்கினார்.

223. குயவன் வீட்டில் எரேமியா

எரே. 18,19

ஒருநாள் கடவுள் எரேமியாவை ஒரு பானை செய்கிற குயவனிடம் போகச் சொன்னார். அங்கு அவருக்குத் தன்னுடைய வார்த்தைகளை வெளிப்படுத்தினார். எரேமியா அங்கு சென்று குயவன் மண்பாண்டத்தைத் திரிகையினாலே வனைந்துகொண்டிருப்பதைக் கண் கொட்டாமல் கவனித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அந்த மண்பாண்டம் ஏதோ காரணத்தால் கையில் கோணலாக அமைந்தது. உடனே குயவன் அந்தப் பானையை முழுவதுமாக அழித்து பின் நன்றாக அந்தக் களிமண்ணை மறுபடியும் பிசைந்து ஒரு நல்ல பானையாகச் செய்தான். அப்போது எரேமியாவிற்குக் கடவுளின் வார்த்தை காதில் ஒலித்தது, 'நானும் என் மக்களை இந்தக்குயவன் செய்ததுபோலவேதான் செய்வேன்' என்றார். அவர்கள் தங்கள் தீய வழிகளை விட்டுத் திரும்பவேண்டும். அப்படி திரும்பாவிட்டால் அவர்களை அழித்து மறுபடியும் ஒரு புதிய தலைமுறையை உண்டாக்குவேன் என்றார்.

மறுபடியும் ஒரு செய்தி எரேமியாவுக்கு கிடைத்தது. ஒரு மண் ஜாடியை வாங்கி தண்ணீர் நிரப்பி அதைத் தலையில் சுமந்து செல்லுமாறு கடவுள் சொல்ல எரேமியா அப்படியே செய்தார். அவரைப் பின் தொடர்ந்த மக்கள் கேள்விக் குறியோடு அவர் செய்யப்போவதை ஆச்சரியத்துடன் எதிர் பார்த்து நின்றனர். நீர் நிறைந்த அந்த ஜாடியைத் திடீரென்று தெருவில் தூக்கி எறிந்து தூள் தூளாகச் சிதறப்பண்ணினார். தண்ணீரும் சிதறியது. எரேமியா உரத்த சத்தமாக 'கடவுள் உங்களுக்காக நன்மை செய்யவேண்டுமென்று பொறுமையோடு காத்திருந்தார். நீங்களோ அவர் சத்தத்திற்கு செவி கொடுக்காமல் மனம் கடினப்பட்டுப் போனீர்கள். ஆகவே, நீங்கள் இந்த மண் ஜாடியைப்போல் உடைந்து போவீர்கள். உங்கள் எதிரி உங்களை முற்றுகையிடுவான்.'

இப்படியாகப் பல இடங்களில் கடவுளின் வார்த்தைகளைக் கூறினதினால் அநேக மக்களின் கோபத்திற்கு ஆளாகி அடிபட்டுத் தண்டனையும் பெற்றார்.

224. அத்திப்பழக் கூடைகள்

எரே. 24

நேபுகாத்நேச்சர் எருசலேமை முற்றுகையிட்டு யூதர்களைச் சிறைபிடித்து பாபிலோனுக்குக் கூட்டிச் சென்றான் அல்லவா? பாபிலோனில் உள்ள யூதர்கள் தாம் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடவாமையால்தான் இந்தத் தண்டனை நமக்கு உண்டாயிற்று என்று உணர்ந்து கடவுளிடம் மன்னிப்புக் கேட்டு மனந்திருந்தி நடக்க ஆரம்பித்தனர். கடவுள் அவர்கள் பேரில் கருணைகூர்ந்து இவர்களை மறுபடியும் எருசலேமிலே கூட்டிச் சேர்த்துப் புதுவாழ்வைக் கொடுக்க விருப்பங்கொண்டார்.

ஆனால் எருசலேமில் வாழ்ந்த யூதர்களோ, தாங்கள் கடவுளுக்குப் பிரியமானவர்கள், அதனால்தான் நாம் சிறைபிடிக்கப்படாமல் எருசலேமில் வாழ்கிறோம் என்று பெருமை கொண்டு கடவுளுக்குப் பிரியமில்லாத வழிகளில் நடந்தார்கள். கடவுள் இவர்களை அழிக்கத் தீர்மானம் செய்தார்.

இதை ஒரு தரிசனத்தால் எரேமியாவுக்கு விளக்கினார். இரண்டு கூடைகள் இருந்ததை எரேமியா தரிசனமாகக் கண்டார். ஒன்றில் நல்ல அத்திப் பழங்கள் நிறைந்திருந்தன. மற்றொன்றில் கெட்டுப்போன அத்திப் பழங்கள் இருந்தன. பாபிலோனில் வசிக்கும் யூதர்கள் நல்ல அத்திப் பழங்களுக்கும் எருசலேமில் வசித்த யூதர்கள் கெட்ட அத்திப் பழங்களுக்கும் ஒப்பாவார்கள் என்று கடவுள் விளக்கினார்.

225. அரசனின் சூரிக்கத்தி

எரே. 36

கடவுள் தன்னுடன் பேசிய வார்த்தைகள் எல்லாவற்றையும் சகல ஜாதிகளுக்கும் இருபது வருடங்களாக எரேமியா மக்களுக்குத் தெரிவித்துவந்தார். கடவுள் மேலும் எரேமியாவிடம் பேசிய எல்லா செய்திகளையும் எழுதி வைக்கும்படியாகவும் அதைப் படித்தாவது மக்கள் மனம் திரும்புவார்கள் என்றும் கூறினார்.

223. குயவன் வீட்டில் எரேமியா

எரே. 18,19

ஒருநாள் கடவுள் எரேமியாவை ஒரு பானை செய்கிற குயவனிடம் போகச் சொன்னார். அங்கு அவருக்குத் தன்னுடைய வார்த்தைகளை வெளிப்படுத்தினர். எரேமியா அங்கு சென்று குயவன் மண்பாண்டத்தைத் திரிகையினாலே வனைந்துகொண்டிருப்பதைக் கண் கொட்டாமல் கவனித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அந்த மண்பாண்டம் ஏதோ காரணத்தால் கையில் கோணலாக அமைந்தது. உடனே குயவன் அந்தப் பானையை முழுவதுமாக அழித்து பின் நன்றாக அந்தக் களிமண்ணை மறுபடியும் பிசைந்து ஒரு நல்ல பானையாகச் செய்தான். அப்போது எரேமியாவிற்குக் கடவுளின் வார்த்தை காதில் ஒலித்தது, 'நானும் என் மக்களை இந்தக்குயவன் செய்ததுபோலவேதான் செய்வேன்' என்றார். அவர்கள் தங்கள் தீய வழிகளை விட்டுத் திரும்பவேண்டும். அப்படி திரும்பாவிட்டால் அவர்களை அழித்து மறுபடியும் ஒரு புதிய தலைமுறையை உண்டாக்குவேன் என்றார்.

மறுபடியும் ஒரு செய்தி எரேமியாவுக்கு கிடைத்தது. ஒரு மண் ஜாடியை வாங்கி தண்ணீர் நிரப்பி அதைத் தலையில் சுமந்து செல்லுமாறு கடவுள் சொல்ல எரேமியா அப்படியே செய்தார். அவரைப் பின் தொடர்ந்த மக்கள் கேள்விக் குறியோடு அவர் செய்யப்போவதை ஆச்சரியத்துடன் எதிர் பார்த்து நின்றனர். நீர் நிறைந்த அந்த ஜாடியைத் திடீரென்று தெருவில் தூக்கி எறிந்து தூள் தூளாகச் சிதறப்பண்ணினார். தண்ணீரும் சிதறியது. எரேமியா உரத்த சத்தமாக 'கடவுள் உங்களுக்காக நன்மை செய்யவேண்டுமென்று பொறுமையோடு காத்திருந்தார். நீங்களோ அவர் சத்தத்திற்கு செவி கொடுக்காமல் மனம் கடினப்பட்டுப் போனீர்கள். ஆகவே, நீங்கள் இந்த மண் ஜாடியைப்போல் உடைந்து போவீர்கள். உங்கள் எதிரி உங்களை முற்றுகையிடுவான்.'

இப்படியாகப் பல இடங்களில் கடவுளின் வார்த்தைகளைக் கூறினதினால் அநேக மக்களின் கோபத்திற்கு ஆளாகி அடிபட்டுத் தண்டனையும் பெற்றார்.

224. அத்திப்பழக் கூடைகள்

எரே. 24

நேபுகாத்நேச்சர் எருசலேமை முற்றுகையிட்டு யூதர்களைச் சிறைபிடித்து பாபிலோனுக்குக் கூட்டிச் சென்றான் அல்லவா? பாபிலோனில் உள்ள யூதர்கள் தாம் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடவாமையால்தான் இந்தத் தண்டனை நமக்கு உண்டாயிற்று என்று உணர்ந்து கடவுளிடம் மன்னிப்புக் கேட்டு மனந்திருந்தி நடக்க ஆரம்பித்தனர். கடவுள் அவர்கள் பேரில் கருணைகூர்ந்து இவர்களை மறுபடியும் எருசலேமிலே கூட்டிச் சேர்த்துப் புதுவாழ்வைக் கொடுக்க விருப்பங்கொண்டார்.

ஆனால் எருசலேமில் வாழ்ந்த யூதர்களோ, தாங்கள் கடவுளுக்குப் பிரியமானவர்கள், அதனால்தான் நாம் சிறைபிடிக்கப்படாமல் எருசலேமில் வாழ்கிறோம் என்று பெருமை கொண்டு கடவுளுக்குப் பிரியமில்லாத வழிகளில் நடந்தார்கள். கடவுள் இவர்களை அழிக்கத் தீர்மானம் செய்தார்.

இதை ஒரு தரிசனத்தால் எரேமியாவுக்கு விளக்கினார். இரண்டு கூடைகள் இருந்ததை எரேமியா தரிசனமாகக் கண்டார். ஒன்றில் நல்ல அத்திப் பழங்கள் நிறைந்திருந்தன. மற்றொன்றில் கெட்டுப்போன அத்திப் பழங்கள் இருந்தன. பாபிலோனில் வசிக்கும் யூதர்கள் நல்ல அத்திப் பழங்களுக்கும் எருசலேமில் வசித்த யூதர்கள் கெட்ட அத்திப் பழங்களுக்கும் ஒப்பாவார்கள் என்று கடவுள் விளக்கினார்.

225. அரசனின் சூரிக்கத்தி

எரே. 36

கடவுள் தன்னுடன் பேசிய வார்த்தைகள் எல்லாவற்றையும் சகல ஜாதிகளுக்கும் இருபது வருடங்களாக எரேமியா மக்களுக்குத் தெரிவித்துவந்தார். கடவுள் மேலும் எரேமியாவிடம் பேசிய எல்லா செய்திகளையும் எழுதி வைக்கும்படியாகவும் அதைப் படித்தாவது மக்கள் மனம் திரும்புவார்கள் என்றும் கூறினார்.

எரேமியா சொல்லச் சொல்ல பாருக் என்ற அவரது உதவியாள் அதை ஒரு சுருளில் எழுதினர். ஆலயத்திற்கு எடுத்துச் சென்று அதை மக்களுக்கு வாசித்துக் காட்டும்படி எரேமியா சொன்னர். பாருக்கு வாசித்தார். மக்கள் அதைக் கேட்டனர். இந்தக் காரியம் அரசன் யோயாக்கீமுக்குத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சுருள் அரண்மனைக்குக் கொண்டுபோய் அரசன்முன் வாசிக்கப்பட்டது.

எரேமியாவையும் பாருக்கையும் மக்கள் அரசனின் கோபத்திற்கு அஞ்சி ஒளிந்து கொள்ளச் செய்தனர். சுருளில் இருந்த செய்தியை அரசன் அறிந்தபோது கோபத்தினல் தன் கையிலிருந்த கத்தியால் கிழித்து தான் குளிர் காய்ந்துகொண்டிருந்த நெருப்பில் போட்டு எரித்துவிட்டான். எரேமியாவைக் கைது செய்யும்படி கட்டளையும் இட்டான். அவர்கள் தான் ஒளிந்துகொண்டார்களே. கடவுள் மேலும் அவர்களிடம் பேசி மறுமுறை எல்லாவற்றையும் புத்தகச் சுருளில் எழுதி வைக்கும்படி கூறினர். எரேமியாவும் அப்படியே எழுதி வைத்தார்.

226. எரேமியா காப்பாற்றப்படுதல்

எரே. 38

எருசலேமில் எரேமியா தீர்க்கதரிசியின் போதனை வளர்ந்துகொண்டே இருந்தது. பாபிலோனிய அரசனிடம் உண்மையாக இருக்கும்படி சிதேக்கியாவையும் மற்றவர்களையும் கேட்டுக்கொண்டே இருந்தார். ஆனல் மக்கள் செவிசாய்க்காமல் அரசனுக்கு விரோதமான சதிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அரசன் இதை அறிந்தபோது ஒரு படையை அனுப்பி வைத்தான். அப்படை எருசலேமைத் தாண்டி எகிப்தை நோக்கிச் சென்றுவிட்டது. உடனே மக்களும் சிதேக்கியாவும் 'இவன் எருசலேமுக்கு எதிராகப் பேசுகிருன். பாபிலோனுக்கு ஓடிப் போகப் போகிருனே' என்று அவன்மேல் கோபங்கொண்டு அவனை விலங்கிட்டு ஒரு குழிக்குள் இறக்கிவிட்டனர். அங்கு ஈரமான சகதியும் துர்நாற்றமுமாயிருந்தது. உணவும் கொடுக்கப்படவில்லை. எபத்மெலக்கு என்ற சிநேகிதர் அரசனின் உத்தரவுபெற்று கயிறுகளைக் கொண்டுபோய்க் குழியிலிருந்து எரேமியாவை விடுவித்தார். எரேமியா கடவுளுக்கு நன்றி செலுத்தினர். எபத்மெலக்குக்காகவும் சிறப்புத் துதிகளை ஏறெடுத்தார் எரேமியா.

227. எரேமியாவின் கடைசி நாட்கள்

எரே. 52

எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்து எருசலேமைப்பற்றி சொன்ன யாவும் சிறிது காலத்திற்குப்பின் உண்மையில் நிறைவேறின. எருசலேம் மறுமுறை முற்றுகையிடப்பட்டது. சிதேக்கியா எரேமியாவைத் தன்னிடத்தில் வரும்படி அழைத்து மீண்டும் கடவுளுடைய செய்தியைச் சொல்லும்படி கேட்டான். எத்தனை முறை கேட்டாலும் அதை அலட்சியம் செய்தும் விடுவான். சொன்னவரையும் தண்டிப்பான். ஆகவே எரேமியா உயிருக்கு பயந்து தயங்கினர். ஆனல் சிதேக்கியா எரேமியாவின் உயிருக்கு உத்திரவாதம் அளித்து ஏதாவது ஆலோசனை சொல்லும்படி கேட்டான். பாபிலோன் அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி ஆலோசனை சொன்னர்.

ஆனல் சிதேக்கியா இந்த ஆலோசனையை ஏற்கவில்லை. கடவுளின் கோபத்துக்கு ஆளாகினன். எருசலேம் பிடிபட்டது. சிதேக்கியா ஒரு இரகசிய வழியாகத் தப்பி ஓடினன். அப்படியும் தப்பிக்க முடியவில்லை. எதிரிகளின் கையில் சிக்கி விலங்கிடப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டான். அங்கு சிறையில் வாடி கண்களை இழந்து பின் மரணமடைந்தான். தீர்க்கதரிசிகளின் வார்த்தையை அற்பமாய் எண்ணக்கூடாது. ஓரிரண்டு ஏழை யூதர்களும் எரேமியாவையும் தவிர எருசலேமில் யாரும் இல்லை. கடவுளின் சத்தத்திற்கு செவி கொடாத மக்கள் எல்லாம் பாபிலோனில் அகதிகளாக இருந்தனர். எரேமியாவோ தன் காலமெல்லாம் எருசலேமுக்காகப் புலம்பிக் கொண்டே இருந்தார்.

228. சக்கரங்களும் இறக்கைகளும்

எசே. 1,2

நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகை யிட்டு அங்கு கிடைத்த சிறந்த பொருட்களை எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டு சென்றார் அல்லவா? அறிவில் சிறந்த வாலிபர்களையும் அவன் விட்டு வைக்கவில்லை. தன்கூடவே பாபி லோனுக்கு அழைத்துச் சென்ற வாலிபர்களில் எசேக்கியேலும் ஒருவர். தன் சிறுவயதிலேயே கடவுளுக்கென்று ஊழியம் செய்ய ஆவல் கொண்டவர்.

சிதறடிக்கப்பட்ட யூதர்கள் பாபிலோனைச் சுற்றிலும் வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ ஆரம்பித்தார்கள். ஒருநாள் எசேக்கியேல் அந்தப் பக்கமாக வந்தபொழுது கரியமேகம் அந்த இடத்தில் வருவதைப் பார்த்தார். ஒரு புயல் வருவதற்கான அறிகுறி தென்பட்டது. கரிய மேகங்களினிடையே மின்னல் பளிச் சிட்டது. அதன் நடுவில் பிரகாசமான இயந் திரம் போன்ற ஒரு பொருள் இறங்கிவந்தது. எசேக்கியேல் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே அந்த பெரிய இயந்திரம் மேலும் கீழுமாக வேகமாக அசைய ஆரம்பித்தது.

எசேக்கியேல் அந்த விநோதப் பொருளை உற்று நோக்கினார். அது தன்னை நோக்கி வருவ தாகக் கண்டார். அது நான்கு உயிர் பிராணி களும் ஒன்றாக இறக்கைகளால் இணைக்கப் பட்டதுபோல் தோன்றியது. மேலும் இந்த ஒவ்வொரு பிராணிக்கும் முறையே மனித முகம், சிங்க முகம், காளை முகம், தேவதூதன் முகம்போலும் காணப்பட்டது. இந்த முழு ஜீவ இயந்திரமும் மின் வேகத்தில் எட்டுத் திக்கும் சுற்றிவந்தது.

ஒவ்வொரு பிராணியும் இரண்டு ஜோடி சக்கரங்களோடு இருந்ததால் பூமியில் ஓடவும், இறக்கைகள் இருந்ததால் ஆகாயத்தில் பறக்க வும் முடிந்தது. இயந்திரத்தின் நடுவில் ஒரு நெருப்புக்கோளமும் அதன்மேல் ஒரு மண்டல மும் இருந்தது. அந்தப் பிராணிகள் பறந்த பொழுது இறக்கைகளால் உண்டான சத்தம் கடலலைபோல் கேட்டது. அந்த மண்டலத்தின் மீது நீல இரத்தினம்போல் விளங்கும் ஒரு சிங்காசனத்தின் சாயலும் அதன்மேல் மனுஷ சாயலுக்கு ஒத்த சாயலும் காணப்பட்டது. அது அக்கினிமயமாகவும் பிரகாசமாகவும் வானவில் நிறத்திலும் இருந்தது. அதை எசேக்கியேல் கண்டபோது முகங்குப்புற விழுந்து இது கர்த்தருடைய தரிசனம் என்றார். அப்பொழுது கடவுள் அவருடனே பேசினார். எசேக்கியேல் 'நீ என்னுடைய தீர்க்கதரிசி, என்னுடைய வார்த்தைகளை சிதறடிக்கப்பட்ட யூத மக்களுக்கு சொல்லும்படியாக நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்றார்.'

229. எசேக்கியேலின் மௌனச் செய்திகள்

எசே. 3-5

யூதர்கள் எருசலேமிலிருந்து சிதறடிக்கப் பட்டு பாபிலோன் நகரைச் சுற்றிலும் வாழ்ந்து வந்தார்கள் என்று பார்த்தோமல்லவா? அவர் களை மறுபடியும் எருசலேமிற்குக் கூட்டிச் சேர்க் கும் காரியத்தைக் கடவுள் எசேக்கியேல் மூலம் வெளிப்படுத்த சித்தம் கொண்டார். அதற் குள் அவருக்கு அதிகத் துன்பங்கள் உண்டு, என்பதையும் எசேக்கியேல் தன் செய்கைகள் மூலம் அவர்களுக்குத் தெரியப்படுத்தும்படிக் கட்டளையிட்டார். எசேக்கியேல் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து அவர் சொன்னபடி செய்தார்.

எசேக்கியேல் ஒரு செங்கல்லை எடுத்து அதில் எருசலேம் நகரின் படம் வரைந்து சுற்றிலும் சேனைகள் நிற்பதுபோல் வரைந்தார். எருச லேம் முற்றுகையிடப்படப் போகிறதென்பதை இது யூதர்களுக்கு உணர்த்தியது.

எசேக்கியேல் தன்னுடைய ஆகாரத்தைக் குறைந்த அளவு மாவிலே செய்து உண்டு அதிக அளவு தண்ணீரைக் குடித்தே வயிற்றை நிரப்பி னார். எருசலேம் மக்களுக்கு உணவுப் பஞ்சம் வரப்போகிறது என்பதை இச்செய்கை யூதர் களுக்கு உணர்த்தியது.

மற்றொரு நாள் எசேக்கியேல் ஓர் விநோத மான காரியத்தைச் செய்தார். ஓர் கத்தியை எடுத்து கல்லில் கூர்மையாகத் தீட்டினார். அதை வைத்து தன்னுடைய தலை மயிரையும், தாடியையும் வெட்டி எறிந்தார். இதைக் கண்டு கூடியிருந்த யூதமக்கள் மிகவும் பயந்த னர். பிறகு வெட்டி எடுத்த முடியைத் திரட்டி ஒரு தராசில் நிறுத்து அதை மூன்று பங்காகப் பிரித்தார். ஒரு பங்கை நெருப்பிலிட்டு எரித் தார். அடுத்த பங்கைத் தன்னுடைய கூர்மை யான பட்டயத்தால் பொடிப் பொடியாக

வெட்டினுர். கடைசிப் பங்கை காற்றில் பறக்க விட்டார். எல்லாம் முடிந்தபின் குனிந்து தேடி தரையில் கிடந்த கையில் அகப்பட்ட தலைமயிர்களை ஒவ்வொன்ருகப் பொறுக்கி தன் ஆடையில் பத்திரப்படுத்தினர். மக்கள் இந்தச் செய்கையின் அர்த்தம் புரியாமல் ஒருவரையொருவர் வினவிக்கொண்டிருந்த னர். உண்மையில் எசேக்கியேல் தெரிவித்த காரியம் என்னவென்ருல் பின்ஞல் எருசலேம் மக்களுக்கு சம்பவிக்கப்போகும் ஒரு நிகழ்ச்சியே ஆகும். அதாவது மூன்றில் ஒரு பங்கு மக்கள் கொல்லப்படுவர். மறு பகுதியில் சிதறடிக்கப் படும் கடைசிப் பகுதியில் சிலர் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டிச் சேர்ந்து ஒரு நல்ல ஆரம்பத்தைக் காண்பார்கள் என்பதா கும்.

230. உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்றன

எசே. 37

எசேக்கியேல் வருங்காரியங்களை மக்களுக்கு உணர்த்தினுர் அல்லவா? கடவுள் மறுபடியும் அதுபற்றிய தரிசனத்தை எசேக்கியேலுக்கு கொடுத்தார்.

எசேக்கியேல் ஒரு பள்ளத்தாக்கில் நிற்கிருர். அருகிலே பெரிதும், சிறிதுமான உலர்ந்த மனித எலும்புகள் கும்பலாகக் கிடக்கின்றன. இந்த எலும்புகள் உயிர் பெறுமா என்று கடவுள் எசேக்கியேலைக் கேட்கிருர். 'நீர் சொன்ஞல் நடக்கும்' என்ருர் எசேக்கியேல். 'எலும்புகளை என் சத்தத்தைக் கேட்டு உயிர் பெறுமாறு சொல்' என்று கடவுள் கட்டளையிட, எசேக்கி யேல் எலும்புகளை நோக்கி உரக்க கடவுள் சொன்னதைச் சொன்ஞர். உடனே எலும்பு கள் ஒன்ருேடொன்று உரசும் சப்தங்கள் கேட் டன. எசேக்கியேல் பார்த்துக்கொண்டிருக்கும் போதே எலும்புகள் மனித உடல்களாக மாறின. உயிரற்ற உடல்கள் மீது காற்று வீசும்படி கட்டளையிடு என்று கடவுள் சொல்ல எசேக்கியேல் காற்றை வேகமாக வீசும்படி கட்டளையிட்டார். மனித உடல்கள் உயிர் பெற்று ஒரு பெரிய சேனையாக எழுந்து நின்றன. மேற்சொன்ன இந்தப் புல்லரிக்கும் காட்சி உடனே மறைந்தது.

உடனே கடவுள் 'என்னுடைய மக்கள் இந்த உலர்ந்த எலும்புகளைப் போன்றிருக்கிருர்கள். அவர்கள் மறுபடியும் உயிர் பெறுவார்கள். நான் அவர்களுக்கு புது உயிர் தருவேன். நான் அவர்களைத் திரும்பவும் எருசலேமிலே கூட்டிச் சேர்த்து மறுபடியும் ஒரு புது வாழ்வைத் தருவேன்' என்ருர்.

231. அரண்மனையில் பயிற்சி

தானி. 1

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச் சார் எருசலேமுக்குள் நுழைந்து அதை முற் றுகையிட்டபோது தன் பிரதானிகளின் தலைவ ஞகிய அஸ்பேஞசுக்கு ஒரு கட்டளையிட்டான். அதென்னவெனில் இஸ்ரவேல் புத்திரருக் குள்ளே மாசில்லாதவர்களும், அழகானவர் களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும் ராஜாவின் அரண்மனையில் சேவிக்கத் திறமை யுள்ளவர்களுமாகிய சில வாலிபரைத் தேர்ந் தெடுத்து, அவர்களுக்கு அரண்மனையில் கல்தேயரின் எழுத்துக்களையும், பாஷைகளையும் பயிற்றுவிக்க வேண்டும் என்பதே ஆகும்.

அப்படித் தெரிந்தெடுக்கப்பட்ட வாலிபர் களில் ஒருவன் தான் தானியேல். அவனும் அவ னுடைய மூன்று நண்பர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களும் தேர்ந் தெடுக்கப்பட்டிருந்தனர். மூன்று ஆண்டு பயிற் சிக்காக அவர்கள் அரண்மனைக்கு வந்திருந்தனர். அவர்களுக்கு உணவும், திராட்சை ரசமும் அரசனுக்குப் போலவே பரிமாறப்பட்டன. ஆஞல் தானியேலும் நண்பர்களுமோ பருப்பு, காய்கறி போன்ற மரக்கறி உணவையே கேட்ட னர். அதற்கு பிரதானிகளின் தலைவன் 'நீங்கள் மரக்கறி உணவை மட்டும் உண்டு முகக் களைப்பை உங்கள் முகத்தில் காட்டிவிட்டால் நானல்லவோ தண்டிக்கப்படுவேன், என்று பதறிஞன். தானியேலோ 'பத்து நாள் எங் களை கவனித்துப் பாரும். எங்கள் முகங்களை யும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும். பின்பு நீர் காண்கிற படி எங்களுக்குச் செய்யும்' என்று விசாரிப்புக்

காரனை மேல்ஷார் என்பவனைக் கேட்டுக் கொண்டான். பத்து நாள் சென்ற பின்பு ராஜபோஜனம் புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும் சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது. ஆகவே அவர்கள் தொடர்ந்து மரக்கறி உணவையே உட்கொண்டார்கள்.

இந்த நான்கு வாலிபரையும் கடவுள் சகல ஞானத்தாலும் நிரப்பினர். சிறப்பாகத் தானியேலை சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனுக்கினர். இவர்கள் தங்கள் மூன்று வருட பயிற்சிக்குப்பின் ராஜ சமூகத்தில் தங்கள் ஞானத்தினல் சிறந்து விளங்கினர்கள்.

232. அரசனின் சொப்பனம்

தானி. 2

தானியேலும் அவரது நண்பர் மூவரும் அரசவையில் மதிப்புள்ள நிலையில் அரசனுக்கே ஆலோசனை வழங்கத் தகுதி பெற்றவர்களாக விளங்கினர்கள். அச்சமயத்தில் அரசர் ஒரு சொப்பனம் கண்டு மனக்கலக்கம் அடைந்தவராக இருந்தார். சொப்பனங்கள் எதிர் காலத்தைக் குறிக்கும் முன் அறிவிப்புக்களாக மதிக்கப்பட்டன. சொப்பனங்களின் அர்த்தங்களைக் கூறுவதற்கென்று நிபுணர்கள் அரசசபையில் இருந்தார்கள். ஆனல் அரசன் கண்ட சொப்பனத்தை யாரும் விளக்க முடியவில்லை. ஆகையால் கோபம்கொண்ட அரசன் எல்லா ஞானிகளையும் கொல்லும்படி ஆரியோகுக்குக் கட்டளையிட்டான்.

அப்போது தானியேல் ராஜாவினிடத்தில் தனக்கு சொப்பனத்தை விளக்கத் தவணை தரும்படி வேண்டிக்கொண்டான். பின்பு நண்பர்களை அழைத்து இதுபற்றி தெரிவித்து கடவுளை நோக்கி விண்ணப்பம் செய்தான். பின்பு இராக்கால தரிசனத்தில் கடவுள் சொப்பனத்தையும் அதன் மறைபொருளையும் தானியேலுக்கு வெளிப்படுத்தினர். தானியேல் ஞானிகளை அழிக்க அரசனல் கட்டளை பெற்ற ஆரியோகினிடத்தில் போய் விளக்கம் கூற அரசனிடம் செல்ல அனுமதிக்குமாறு கேட்டான். அனுமதியும் அளிக்கப்பட்டது.

233. சொப்பனத்தின் விளக்கம்

தானி. 2


அரசனின் சொப்பனம் வருங்காலத்தைப் பிரதிபலிப்பாக இருந்தது, என்று தானியேல் கண்டான். அரசனின் சொப்பனத்தைப் பின் வருமாறு கூறினர். நீர் ஒரு பெரிய சிலையைக் கண்டீர். பிரகாசமான அந்த சிலையின் ரூபம் பயங்கரமாயிருந்தது. அதன் தலை பசும் பொன்னும், மார்பும் புயங்களும் வெள்ளியும், வயிறும் தொடையும் வெண்கலமும், கால்கள் இரும்பும், பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது. நீர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் உருண்டு வந்து அந்த சிலையின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப் பின் முழு சிலையையும் நொறுக்கிப் போட்டது. நொருங்குண்ட அந்த துகள்கள் காற்றில் பதரைப்போல் பறந்துவிட்டன. ஆனல் மோதிய கல் போய் ஒரு பெரிய பர்வதமாகி பூமியை நிரப்பியது.

இதன் அர்த்தமாவது, 'ராஜாவாகிய நீர் சகலத்தையும் சிறப்பாக ஆண்டு வருகிறீர். பொன்னான அந்தத் தலை நீரே. உமக்குப் பிறகு கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும். அதன்பின் வெண்கலமான மூன்றாவது ராஜ்யம் ஒன்று தோன்றும். நாலாவது ராஜ்யம் இரும்பைப் போல எல்லாவற்றையும் நொறுக்கித் தகர்த்துப்போடும். அது இரும்பும், களிமண்ணும் போல் இரண்டாய்ப் பிரிந்திருக்கும். இந்தக் காலத்தில் பரலோகத்தின் கடவுள் என்றென்றைக்கும் அழியாத ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார். சிலையை நொறுக்கிப்போட்ட கல்லின் அடையாளம் அதுவே. பிற்காலத்தில் சம்பவிக்கப் போவதை கடவுள் ராஜாவுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்' என்றார். இது கேட்ட ராஜா நேபுகாத்நேச்சார் முகங்குப்புற விழுந்து தானியேலை வணங்கி அவனுக்குக் காணிக்கை செலுத்தவும் தூபங்காட்டவும் கட்டளையிட்டான். தானியேலின் கடவுளே மெய்யான கடவுள், என்று ஒப்புக்கொண்டான். தானியேல் பாபிலோன் முழுவதற்கும் ஒரு பிரபுவும், ஞானிகள் எல்லோருக்கும் தலைவனுமாக ஆக்கப்பட்டான்.

234. பொற்சிலை

தானி. 3

சிலையைப்பற்றி சொப்பனம்கண்ட நேபுகாத்நேச்சார், ஒரு பெரிய பொற்சிலையை உண்டாக்கினான். அறுபது முழ உயரமும், ஆறு முழ அகலமும் கொண்ட பொற்சிலையைச் செய்வித்து, சகல தேசாதிபதிகளையும் தலைவர்களையும் அழைத்து அதை எல்லோரும் வணங்கக்கூடிய பொது இடத்தில் நிறுத்தி பிரதிஷ்டை பண்ணி, வாத்தியங்கள் முழங்கும்போதெல்லாம், யாவரும் தாழவிழுந்து, சிலையை வணங்கவேண்டும் என்று ஆணையும் பிறப்பித்தான். இந்த ஆணையை மீறியவர்கள் எரியும் நெருப்பிலே தூக்கிப் போடப்படுவார்கள் என்றும் அறிவித்தான்.



பொற்சிலை (தானி. 3)

வாத்தியங்கள் முழங்கியபோது எல்லோரும் தாழவிழுந்து பொற்சிலையை வணங்கினார்கள். மூன்று யூத வாலிபரான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ அப் பொற்சிலையை வணங்கவில்லை.

235. நெருப்பும் அதில் போடப்பட்டவர்களும்

தானி. 3



நெருப்பும் அதில் போடப்பட்டவர்களும் (தானி. 3)

தானியேலையும் அவர் நண்பர்களையும் குறித்து அரச அவையில் ஒரு பொறாமை ஏற்பட்டிருந்தபடியால் அதிகாரிகள் இத்தருணத்தைப் பயன்படுத்தி இவர்களை ஒழிக்க வகைபார்த்துக்கொண்டிருந்தனர். அவர்கள் அரசனை அணுகி இந்த மூவரும் பொற்சிலையை வணங்கவில்லை என்ற செய்தியைத் தெரிவிக்கவே அரசன் கோபம்கொண்டு மூவரையும் காரணம் விசாரித்தான்.

அவர்களோ, 'நாங்கள் ஆராதிக்கிற கடவுள் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். அப்படியே விடுவியாமல் போனாலும் நீர் நிறுத்தின பொற்சிலையை வணங்கமாட்டோம்' என்று மூவரும் கூறினார்கள். அப்போது அரசன் கடுங்கோபம்கொண்டு சூளையை ஏழு மடங்கு அதிகமாகச் சூடாக்கி அதில் இவர்களைப் போடும்படியாகக் கட்டளையிட்டான். அதன் பின் மூவரையும் கை, கால்களைக் கட்டி சூளையில் போடச் சொன்னான். அவர்களைச் சூளையில் போட்டவுடனே, சூளைக்குள் கட்டவிழ்ந்த நான்கு பேர் உலாவிக்கொண்டிருக்கக் கண்ட

யார். மூன்று பேரைத் தானே சூளையில் போட்டோம் அந்த நான்காவது நபர் யார்? தேவ தூதன்போல் தோன்றுகிறதே என்று அரசன் மந்திரிமாரைப் பார்த்துக் கேட்டான்.

பிறகு சூளையிலிருந்து வெளியே வரும்படி அம்மூவரையும் அழைத்தான். அவர்கள் நெருப்பைவிட்டு வெளியே வந்ததும், அரசனும், அதிகாரிகளும், தலைவர்களும் அவர்களைப் பரிசோதித்துப் பார்த்தனர், நெருப்பு அவர்கள் மேல் எந்தவித சேதமும் செய்யவில்லை. என்று கண்டபோது, யூதர்களின் கடவுள்தான் உண்மையான கடவுள் என்று போற்றி, அம் மூவரையும் பாபிலோனிலே உயர்ந்த பதவியில் வைத்தான்.

236. அழிவுக்குமுன் அகந்தை

தானி. 4

அரசனை நேபுகாத்நேச்சார் சகல மக்களுக்கும், ஜாதியாருக்கும், பாஷைக்காரருக்கும் பூமி எங்கும் குடியிருக்கிறவர்களுக்கும் ஒரு கடிதம் எழுதினர். அதில் யாவருக்கும் சமாதானம் பெருகக்கடவது உன்னதமான கடவுள் என்னிடத்தில் செய்த அடையாள, அற்புதங்களை பிரசித்தப்படுத்துவது தனக்கு நன்மையான காரியம் என்று அவருடைய அடையாளங்களின் மகத்துவமும் அற்புதங்களின் வல்லமையுமாயிருக்கிறது, அவருடைய ராஜ்யம் நித்தியம். அவருடைய ஆளுகை தலைமுறை, தலைமுறையாக நிற்கும் என்றும் எழுதினர்.

பின் தான் கண்ட இரண்டாவது சொப்பனத்தைப்பற்றிக் கலங்கினவனக அதன் அர்த்தத்தை சொல்லும்படி சாஸ்திரிகள், ஜோசியர், கல்தேயர், குறி சொல்லுகிறவர்களிடம் கேட்டபோது அதின் அர்த்தத்தை யாராலும் தெரிவிக்க முடியவில்லை. பின்பு தானியேலிடம் சொப்பனத்தைக் கூற அவன் பரிசுத்த கடவுளின் ஆவியினல் மறை பொருளின் அர்த்தத்தைக் கூறினன். ராஜா கண்ட விருட்சம் வளர்ந்து தேசத்தின் எல்லை பரியந்தம் உயர்ந்து வான பரியந்தம் எட்டினது. இலைகளும், கனிகளும் நிறைந்து காணப்பட்டது. எல்லா ஜீவனுக்கும் ஆகாரம் அதில் இருந்தது. அதன் கீழே மிருகங்கள் தங்கினது, கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்தது என்றுன்.

இந்த விருட்சம் ராஜாவாகிய உம்மையே குறிக்கிறது. உமது மகத்துவம், கர்த்தத்துவம் பூமியின் எல்லை பரியந்தம் எட்டியிருக்கிறது. இந்த மரத்தை வெட்டிப் போடுங்கள் அடிமரம் இருக்கட்டும். இரும்பும், வெண்கலமும், ஆன விலங்கு இடப்பட்டு பசும் புல்லிலே தங்கி மிருகங்களோடே சஞ்சரிப்பான் என்பது உம்மைத்தான் குறிக்கும் என்றும் அந்த உன்னதமானவருடைய ராஜ்யத்தைத் தமக்கு சித்தமானவனுக்கு கொடுப்பார் என்பதை நீர் அறிந்துகொள்ளும் மட்டும் ஏழு காலங்கள் கடந்துபோகவேண்டும் என்றும் அடிமரம் தரையில் இருக்கட்டும் என்றும் சொல்லப்பட்டது. நீர் பரம அதிகாரத்தை அறிந்தபின், ராஜ்யம் உமக்கு நிலை நிற்கும். ஆகையால் நீர் உம்முடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் அகற்றிவிடும். அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம் என்று தானியேல் ஆலோசனை கூறினன்.

ஒரு வருடம் ஆனபின் ராஜா அரண்மனை மேல் உலாவிக்கொண்டிருக்கும்போது இது என் வல்லமை மகிமை பிரதாபத்துக்கென்று, நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று நினைத்துக்கொண்டிருக்கும்போதே வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டானது. அதாவது உன் ராஜ்ய பாரம் உன்னைவிட்டு நீங்கிற்று. மிருகங்களோடே சஞ்சரிப்பாய். மாடுகளைப் போல் புல் மேய்வாய். உன்மேல் ஏழு காலம் கடந்துபோகும் என்றது. உடனே ராஜா மாடுகளைப்போல் புல் மேய்ந்தான். கழுகுகளுடைய இறகுகளைப்போல் அவன் தலை மயிர் காணப்பட்டது. பட்சிகளுடைய நகங்களைப் போல் ஆகி பனியிலே நனைந்தான்.

ஏழு காலங்கள் சென்றபின் ராஜா கண்களை வானத்திற்கு ஏறெடுத்தான். அவன் புத்தி அவனுக்குத் திரும்ப வந்தது. அப்பொழுது அவன் உன்னதமானவரை ஸ்தோத்தரித்து நித்தியமாக ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மேன்மை பாராட்டி அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனைகளையும், பூமியின் குடிகளையும் நடத்துகிறர் என்று அறிக்கை பண்ணியவுடன், அவன் முகக்களை திரும்ப வந்தது. மந்திரிமார், பிரபுக்கள் தேடி வந்தனர். இராஜ்யம் ஸ்திரப்பட்டது. ஆகையால் நேபுகாத்நேச்சார் பரலோக ராஜாவைப் புகழ்ந்து உயர்த்தி மகிமைப்படுத்தி அவருடைய கிரியை சத்தியம் வழிகள் நியாயமானவைகள், அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே கூடும் என்றும் எழுதினன்.

237. மர்மக் கைவிரல்

தானி. 5

நேபுகாத்நேச்சாருடைய மகனுன பெல்ஷாத்சார் கல்தேயா நகரில் அரசாட்சி செய்து வந்தான். அப்பொழுது தன் பிரபுக்களில் ஆயிரம் பேருக்கு ஒரு பெரிய விருந்து செய்து திராட்சரசம் குடித்தான். எருசலேமிலிருந்து அதாவது தேவாலயத்திலிருந்து கொண்டு வந்த பொன், வெள்ளி, பாத்திரங்களில் திராட்சரசத்தை எல்லாரும் பிரபுக்கள், மனைவிகள், மற்ற பெண்களும் குடிப்பதற்கு கொண்டுவரக் கட்டளையிட்டான். அவர்கள் குடித்துக்கொண்டு, பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, மரம், கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தார்கள். அந்நேரத்திலே மனுஷ கைவிரல்கள் தோன்றி விளக்குக்கு எதிராக அரமனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று. அதை ராஜா கண்டு அதிர்ந்து கலக்கமடைந்தான். உடனே ஜோசியர், கல்தேயர், குறி சொல்லுகிறவர்களையும் ராஜா அழைத்து வரச் சொல்லி இதன் அர்த்தத்தை வெளிப்படுத்துகிறவன் எவனே, இரத்தாம்பரமும் கழுத்திலே பொற்சரப்பணியும் தரிப்பிக்கப்படும். அவனை ராஜ்யத்தின் மூன்றும் அதிபதியாக்குவேன் என்றும் சொன்ஞன்.

அப்பொழுது ராஜாவின் ஞானிகளாலும் அந்த எழுத்தை வாசிக்கவும், அர்த்தத்தைச் சொல்லவும் ஒருவராலும் கூடாதிருந்தது. மேலும் பெல்ஷாத்சார் மிகவும் கலங்கிஞன். அப்பொழுது ராஜாத்தி விருந்து சாலைக்குள் பிரவேசித்து நீர் வாழ்க என்று வாழ்த்தி, கலங்கவேண்டாம், தானியேல் என்ற கடவுளின் ஆவி பெற்ற, ஞானமுள்ள மனிதனை அழைப்பித்து அனுப்பிஞல் அவன் உடனே அர்த்தத்தை வெளிப்படுத்துவான் என்ருள்.

அப்பொழுது தானியேலை ராஜாமுன் நிறுத்தினர். இந்த எழுத்தை வாசித்து அர்த்தம் தெரிவிக்கவேண்டும். ஏனெனில் சாஸ்திரிகளும், ஜோசியரும் இதைத் தெரிவிக்க முடியவில்லை, நீ ஒருவன்தான் கருகலானவைகளைத் தெரிவிக்கக் கூடியவன் என நான் அறிந்து இருக்கிறேன். இதைச் செய்தால் வெகுமதி உண்டு என்ருன். தானியேலோ உம்முடைய வெகுமானங்கள் உம்மிடமே இருக்கட்டும். வேருெருவனுக்குக் கொடும். இந்த எழுத்தை நான் ராஜாவுக்கு வாசித்து இதன் அர்த்தத்தைத் தெரிவிப்பேன் என்ருன்.

பரலோகக் கடவுளுக்கு விரோதமாக உம்மை உயர்த்தினீர். ஆலயத்தின் பாத்திரங்களில் திராட்சரசம் குடித்தீர்கள். கடவுளுடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிற கடவுளை நீர் மகிமைப்படுத்தாமல், காணுமல் கேளாமல் உணராமல் இருக்கிற பொன், வெள்ளி, இரும்பு மரமாகிய தேவர்களைப் புகழ்ந்தீர்கள், ஆகையால் கடவுள் உம்முடைய நாட்கள் சீக்கிரம் முடிவடைகின்றன என்றும், தராசிலே நிறுக்கப்பட்டு குறையக் காணப்பட்டாய் என்றும், பெரேஸ் என்பதற்கு ராஜ்யம் பிரிக்கப்படும் என்றும் மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் என்ற எழுத்தின் அர்த்தம் என்று விளக்கிக் கூறிஞர். அன்று இரவே பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான். தரியு தன் அறுபத்திரண்டாவது வயதில் ராஜாவாஞன்.



மர்மக் கைவிரல் (தானி. 5)

238. சிங்கக்கெபியில் தானியேல்

தானி. 6

தரியு ரர்ஜா, தன் ராஜ்யத்தை ஆளும்படிக்கு நூற்றிருபது தேசாதிபதிகளையும், அவர்களுக்கு மேலாக மூன்று பிரதானிகளையும் ஏற்படுத்தினான். இவர்களில் தானியேல் ஒருவனாயிருந்தான். எல்லாரிலும் சிறந்த மனிதனாகத் தானியேல் இருந்ததால் ராஜா அவரை எல்லாருக்கும் தலைவராக ஏற்படுத்த நினைத்தார். ஆகவே அடுத்த இரு பிரதானிகளும் பொறாமைகொண்டு அவரை ஒழிக்க வகைதேடினார்கள்.

தானியேல் ஒரு நாளிலே மூன்று தரம் எருசலேம் தேவாலயம் இருக்கும் திசை நோக்கி முழங்காற்படியிட்டுத் தவறாமல் ஜெபம் செய்யும் பழக்கம் உடையவராயிருந்தார். இதிலேதான் அவரை குற்றப்படுத்த முடியும் என்று எண்ணி, ஒரு சதித்திட்டம் தீட்டப்பட்டது. அதன்படி அவர்கள் ராஜாவுக்கு முன்பாக வந்து எந்த மனுஷனும் யாதொரு காரியத்தைக் குறித்தும் உம்மைத்தவிர எந்தக் கடவுளையாவது, மனுஷனையாவது நோக்கி, யாதொரு விண்ணப்பமும் செய்யலாகாது. அப்படி மீறிச் செய்தால் அவனை சிங்கக் கெபியிலே போடப்படவேண்டும் என்று ராஜ கட்டளை பிறப்பிக்கப்படவேண்டும். அதில் ராஜா முத்திரையிடப்படவும் செய்தனர்.

தானியேல் இந்த ராஜ கட்டளையைமீறி மூன்றுவேளையும் தன் ஜீவனுள்ள கடவுளையே நோக்கி ஜெபித்து வந்தான். இதை அரசனிடம் தெரிவித்தார்கள். அப்போது ராஜா மனமின்றித் தானியேலை சிங்கக்கெபியில் போட உத்தரவு கொடுத்தான். உன் கடவுள் உன்னைக் காப்பார் என்று ஆசிர்வதித்து தூக்கமின்றி இரவைக் கழித்தான். மறுநாள் காலையில் சிங்கக்கெபியின் கிட்ட வந்து தானியேலை அழைத்து உன் கடவுள் உன்னைக் காத்தாரா என்று கரிசனையோடு கேட்டான்.

அப்பொழுது தானியேல் ரர்ஜாவே, நீர் வாழ்க, சிங்கங்கள் என்னை சேதப்படுத்தாதபடி கடவுள் சிங்கங்களின் வாயைக் கட்டிப் போட்டார் என்று மறுமொழி பகர்ந்தான். அரசன் மனமகிழ்ச்சியோடு தானியேலைக் கெபியிலிருந்து வெளியே தூக்கிவிடச் சொன்னான். பின் தானியேலுக்கு ஒரு சேதமும் காணப்படவில்லை. குற்றஞ்சாட்டின மக்கள் யாவரையும் ராஜா கெபியிலே போட உத்தரவிட்டார். அவர்களோ கெபியின் அடியிலே சேருமுன்னே சிங்கங்கள் பாய்ந்து எலும்புகளையெல்லாம் நொறுக்கிப்போட்டது.

பின்பு தரியு ராஜா எல்லா ஜனத்திற்கும் தானியேலின் கடவுளுக்கு முன்பாக பயந்து நடுங்கவேண்டும். ஏனெனில் அவர் ஜீவனுள்ள கடவுள், என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர், அவருடைய ராஜ்யம் அழியாதது. அவரே தப்புவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும் வானத்திலும் பூமியிலும் அடையாளங்கள் அற்புதங்கள் செய்கிறவருமாயிருக்கிறார் என்று எழுதினான்.



சிங்கக்கெபியில் தானியேல் (தானி. 6)

239. ஆமோஸ்

இரண்டாம் யெரேபெயாம் என்னும் அரசன் இஸ்ரவேல் மக்களை நாற்பது ஆண்டு காலமாக அரசாட்சி செய்தான். ஆனாலும் அவன் கடவுளை நம்பவில்லை. கடவுளுக்குக் கீழ்ப் படியவும் இல்லை. அவன் ஆட்சியில் மக்கள் அநேக தவறுகளைச் செய்தார்கள்.

இந்தச் சமயத்தில் கடவுள் ஆமோஸ் என்னும் பேர்கொண்ட தீர்க்கதரிசியை இஸ்ரவேலரிடம் அனுப்பினார். மக்கள் கடவுளின் கட்டளைகளை மறந்துவிடாதபடி அவற்றை மறுபடியும் ஞாபகப்படுத்தி தீமையான வழிகளை விட்டுக் கடவுளிடம் திரும்பும்படி ஏவுவதற்காக ஆமோஸ் என்ற தீர்க்கன் வந்தார். அவர் யூதேயா நாட்டின் தென்பகுதியில் ஒரு ஆட்டுப் பண்ணை வைத்திருந்தார். இஸ்ரவேலுக்கு போகும்போது விற்பதற்காகக் கொஞ்சம் கம்பளியும் கொண்டுசென்றார். பெத்தேல் கடைத்தெருவில் அவர் வந்தபோது மக்கள் கூட்டத்தைச் சந்தித்து கடவுளின் நாமத்தில் உரத்த சத்தத்தில் அவர்களோடு கிழ்க்கண்டவாறு பேசினார். வியாபாரிகளே நீங்கள் மக்களை ஏமாற்றுகிறீர்கள். தவறான படிக்கல்லை உபயோகித்து ஏழை மக்களை மிகவும் நஷ்டப் படுத்துகிறீர்கள். நல்ல பொருட்களுக்குப் பணத்தைப்பெற்று கெட்ட பொருட்களை தருகிறீர்கள். பணம் கொடுக்க இயலாதவனை அடிமையாக்குகிறீர்கள். இல்லாவிடில் அவன் ஆடையை எடுத்துக்கொண்டு அவனைக் குளிரில் விட்டு விடுகிறீர்கள்.' இப்படி ஆமோஸ் சொல்லிக்கொண்டிருக்கையில் கடைகளுக்கு நடுவே ஒரு பணக்காரப் பெண் வாசனை தைலங்கள் கமழ அவர்களைக் கடந்து சென்றாள். அவ்வளவுதான்.

அவளைக் கண்டதும் ஆமோஸுக்கு கோபம் மிகுந்துவிட்டது. 'பெண்களே நீங்கள்தான் எல்லாவற்றிற்கும் காரணம் உங்கள் அலங்காரத்திற்கும், ஆடை, ஆபரணங்களுக்கும், உல்லாசப் பொழுதுபோக்குகளுக்கும் உங்கள் கணவன்மார்களை அதிகப் பணம் தேடும்படி செய்கிறீர்கள். அதனால்தான் அவர்கள் மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கின்றனர்.'

நீங்கள் விண்பொழுது போக்கும்போது ஏழை மக்கள் அதிக வேலையால் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். நீதி எங்கே? நீங்கள் பரிவுடன் நடந்துகொண்டால் என்ன? உங்கள் செல்வத்தையும் அன்பையும் நியாயமான முறையில் எல்லாரோடும் பகிர்ந்துகொண்டால் என்ன? பணக்காரனுக்கு ஒரு நியாயம், ஏழைக்கு ஒரு நியாயமா?

மேலும் நீங்கள் கடவுளை மறந்து, விக்கிரகங்களை வணங்குகிறீர்கள். உங்கள் அரசனும் அப்படியே செய்கிறான். மனம் திரும்புங்கள் என்று ஆமோஸ் இவ்வாறாகப் பேசினார். நம்மைப் பார்த்து இப்படி எல்லாம் நம்மை எச்சரிக்க ஓர் ஆமோஸ் தேவைதானே?

240. ஓசியா

ஆமோஸ் சென்றபின் சிறிது காலம் கழித்து ஓசியா என்ற தீர்க்கதரிசி இஸ்ரவேலுக்கு வந்தார். அவருக்கு ஒரு அழகிய மனைவி இருந்தாள். அவள் பெயர் கோமேர். ஓசியா மனைவியை மிகவும் நேசித்தார். அவர்களுக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. கோமேர் வீட்டில் தங்கி குடும்பத்தைக் கவனிக்காமல் வெளியில் சுற்றுவதையே விரும்பினாள்.

குழந்தையைகூட கவனிக்க அவளுக்கு விருப்பமில்லை. பிறகு அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. கோமேர் திருந்தவில்லை. வீட்டைவிட்டு வெளியே சென்ற மனைவி வீடு திரும்பவேயில்லை. ஓசியா மனம் உடைந்தார். மனைவியை மிகவும் நேசித்தவராயிற்றே. மனைவியில்லாமல் குழந்தைகளோடு கஷ்டப் பட்டார். இந்த நிலையில்தான் கடவுள் ஓசியாவோடு பேசினார். அது என்னவெனில், 'உன்னுடைய நிலையை நான் அறிவேன். நான் என் மக்களாகிய இஸ்ரவேலை நீ உன் மனைவியை நேசிப்பதுபோல அவ்வளவு அருமையாக நேசித்தேன். ஆனாலும் உன் மனைவி உன்னைவிட்டு விலகியதுபோல இஸ்ரவேல் மக்கள் என்னை விட்டு விலகிவிட்டார்கள். ஆனாலும் நான் இஸ்ரவேல் மக்களை இன்னும் நேசிப்பதுபோல் நீயும் மனைவியை நேசித்து அவளைத் திரும்பவும் உன்னிடத்தில் கூட்டிச் சேர்' என்றார். ஓசியா திடுக்கிட்டார். கடவுளை ஒரு புதிய கோணத்திலிருந்து பார்த்தார். இஸ்ரவேல் மக்களின் கீழ்ப்படியாமைக் கடவுளை எவ்வளவுதூரம் பாதித்துள்ளது என்று அறிந்தார். ஓடிப்போன மனைவியை யாரும் திரும்பச் சேர்த்துக்கொள்வதில்லை. ஆனால் ஓசியா கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். தற்பெருமையைக் களைந்தார்.

பிள்ளைகளை ஒரு உறவினர் பொறுப்பில் விட்டு விட்டு மனைவியைத் தேடிச் சென்ருர்.

அடிமையாக ஒருவர் வீட்டில் அவள் வேலை யாளாக இருப்பதைக் கண்டார். பணம் கட்டி அவளை அடிமைத்தனத்திலிருந்து மீட்டார். இவ்வளவு காரியம் நடந்த பிறகும் அவர் தன் மனைவியை நேசித்தார். ஓசியா இஸ்ரவேல் மக்களுக்கு கடவுளின் செய்தியை ஒரு புது அர்த்தத்தோடு தன் சொந்த வாழ்க்கையில் அனுபவித்து உணர்ந்து சொல்லுகிருர்: 'மக்களே கடவுள் உங்களை அதிகமாக நேசிக்கிருர். நீங்கள் அவரை விட்டு விட்டு விக்கிர கங்களை வணங்குவது அவருக்கு வேதனையாக இருக்குமல்லவா?'

'நீங்கள் கடவுளிடம் மன்னிப்புக்கேட்டு மனந் திரும்பி அவரிடம் வந்தால் உங்களுக்கும் உங்கள் நாட்டிற்கும் அதிக ஆசீர்வாதமாய் இருக்கும் அல்லவா? உங்கள் மனம் திரும்புதலை கடவுள் ஆவலுடனும் அன்புடனும் எதிர் பார்த்து காத்துக்கொண்டிருக்கிருர்' என்ருர்.

இந்த அழைப்பு நமக்கும் உரியதுதான் அல்லவா?

241. கடவுளின் கட்டளையை மீறல்

யோனு 1

ஒரு நாள் ஆண்டவர் யோனு தீர்க்கதரிசியிடம் ஒரு கட்டளையிட்டார். அது என்ன வெனில் நினிவே பட்டணத்திற்குச் சென்று அங்குள்ள மக்களிடம் சாட்சிபகரவும், அவர்கள் தங்கள் தீய வழிகளை விட்டு கடவுளிடம் திரும்பும்படியும் கூறவேண்டும் என்பதே.

நினிவே பட்டணம் அசீரியர்களின் தலை நகரம். இஸ்ரவேல் மக்களுக்கு எதிரிகள். யோனு இஸ்ரவேல் மக்களிடம் ஊழியம் செய்து வந்தவன். ஆகவே எதிரிகளாகிய நினிவே பட்டணத்தாரிடம் போய் ஆண்டவரின் கோபாக்கினைக்குத் தப்பித்துக்கொள்ள வகை சொல்லித் தருவதை அவன் விரும்ப வில்லை. அவர்கள் கடவுளின் கோபத்தினுல் அழிவதே அவர்களுக்குத் தகுதி என்று நினைத் தான்.

ஆகையால் அவன் ஆண்டவரின் கட்டளையை மீறி, தூரத்திலுள்ள தர்ஷிஸ் என்னும் இடத் திற்கு ஓடிப்போய்விட எண்ணி, யோப்பாவுக் குப் போய் கப்பல் ஏறினுன், அதிக தூரம் நடந்ததினுல் களைப்படைந்து கப்பலின் அடித் தட்டில் போய் தூங்கிவிட்டான்.



கடவுளின் கட்டளையை மீறல் (யோனு 1)

242. கடலில் புயல்

யோனா 2

கர்த்தர் சமுத்திரத்தின்மேல் பெருங் காற்றை வரவிட்டார். அதனால் கப்பல் உடைவது போன்ற பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. கப்பல் தலைவன் பயந்து அவனவன் தன் தன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்து, கப்பலிலுள்ள பாரத்தை சமுத்திரத்தில் எறிந்தார்கள். அதுவரை தூங்கிக்கொண்டிருந்த யோனாவையும் எழுப்பி கடவுளை வேண்டிக்கொள்ளும்படி சொன்னார்கள். பின்பு யாரால் இந்தத் தீவினை வந்தது என்று தங்களுக்குள் சீட்டுப் போட்டபோது, சீட்டு யோனா பேரில் விழுந்தது. அவர்கள் அவனை யார் என்று விசாரித்தபோது தான் ஒரு எபிரேயன் என்றும், உன்னதமான கடவுளின் ஊழியக்காரனாயிருந்தும் கடவுளின் கட்டளையை மீறியவன் என்றும் கூறினான். தன்னைத் தூக்கி கடலில் எறிந்தால் கொந்தளிப்பு அடங்கும் என்று கூறினான். ஆனால் கப்பல்காரர்கள் இரக்கம்பாராட்டி அவனைக் கடலில் எறியவில்லை. ஆனால் கொந்தளிப்பு அதிகம் ஆகவே யோனா கடலில் தூக்கி எறியப்பட்டான். அப்போது கொந்தளிப்பு அடங்கியது. கப்பல் மனிதர் மிகவும் பயந்து கடவுளுக்கு பலி பொருத்தனைகளைச் செய்தார்கள்.

கடலில் விழுந்த யோனாவை விழுங்கும்படி கர்த்தர் ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தியிருந்தார். அந்த மீனின் வயிற்றில் யோனா இராப்பகலாக மூன்று நாள் தங்கி கடவுளை நோக்கி விண்ணப்பம் செய்தான். மூன்றும் நாள் மீன் யோனாவை கரையில் கக்கினது. மறுபடியும் நினிவேக்குச் செல்லும்படி சொன்ன கர்த்தரின் வார்த்தையின்படி நினிவே பட்டணம் சென்றான்.

243. ஆமணக்குச் செடி உவமை

யோனா 3

மூன்று நாள் பிரயாணம் செய்து, நினிவே மக்களுக்கு மனந்திரும்பும்படியும் அப்படிச் செய்யாவிட்டால் அழிவு வருமென்றும் உபதேசித்தான். அரசனும் மக்களும் மனந்திரும்பி இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்தார்கள். அவர்கள் தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பியதைக் கடவுள் மனமகிழ்வோடு ஏற்றுக்கொண்டு தான் செய்வேன் என்று சொன்ன தீங்கை அவர்களுக்குச் செய்யாதிருந்தார்.

யோனாவுக்கு இது மிகவும் விசனமாயும் மனக்கசப்பாகவும் இருந்தது. கடவுள் நினிவே மக்களைத் தண்டிக்க வேண்டும் என்று யோனா விரும்பினான். ஆகவே கடவுளோடு கோபம் கொண்டான். கடவுள் அவனை எரிச்சல் அடையாமல் இருக்குமாறு எச்சரித்தார். அவனோ நகரத்துக்குக் கிழக்கே ஒரு குடிசையைப் போட்டு நினிவே நகரத்துக்குச் சம்பவிக்கப் போவதைப் பார்க்கக் காத்திருந்தான். யோனாவுக்கு நிழல் கிடைக்கும்படி தேவன் அவன் அருகில் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கப் பண்ணினார். யோனா அந்த ஆமணக்குச் செடியை குறித்து சந்தோஷப்பட்டான். மறுநாள் கடவுள் ஒரு பூச்சியை உண்டாக்கி ஆமணக்குச் செடியை அரித்துப் போகும்படி செய்தார். நிழல் இல்லாதபடியால் யோனா மிகவும் வருந்தி சாக மனதாயிருந்தான்.

கடவுள் அவனை நோக்கி, ‘இந்த ஆமணக்குச் செடியின் நிமித்தம் இவ்வளவு எரிச்சல் ஏன் என்றார். நீ பிரயாசப்படாத ஒரு செடியைக் குறித்து இவ்வளவு பரிதபிக்கிறாயே, லட்சத்து இருபதினாயிரம் பேர் கொண்ட இந்த நினிவே பட்டணத்தினிமித்தம் நான் பரிதபியாமலிருப்பேனோ’ என்றார்.

கடவுள் இஸ்ரவேலருக்கு மட்டும் சொந்தமல்ல யாவருக்கும் சொந்தம் என்பதை யோனா அறிந்துகொண்டான்.

244. தீர்க்கதரிசிகளிடமிருந்து எச்சரிக்கை

முதல் நான்கு தீர்க்கதரிசிகளாகிய ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் இவர்களுக்குப் பின் மற்றும் பன்னிரெண்டு சிறிய தீர்க்கதரிசிகள் தோன்றி இஸ்ரவேல் மக்களுக்கு கடவுளின் வார்த்தைகளை எச்சரிக்கையாக விடுத்தனர். அவர்கள் ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா ஆகியவர்கள். அவர்கள் பிரசங்கித்த கடவுளின் செய்தியாவது: 'ஒரு காலம் வரும், அப்போது தேசங்கள் யாவும் சமாதானமாய் இருக்கும். மக்கள் சமாதானத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்வார்கள், என்பதே.

மல்கியா

பாபிலோனியாவிலிருந்து யூதர்கள் வெற்றியோடு திரும்பி தங்கள் தாய் வீடாகிய எருசலேமுக்கு வந்து தங்கி மகிழ்வோடு வாழ்ந்து வந்தார்கள். வருடங்கள் உருண்டோடின. எல்லாம் சாதாரணமாக தோன்றியது. கடின உழைப்பும் ஊதியமும் இருந்தபோதிலும் யாருக்கும் மன நிறைவு இல்லை.

ஓய்வு நாளில் கோவிலுக்குச் செல்வதுகூட ஒரு பழக்கம் காரணமாக அமைந்தது, மற்றப்படி கடவுளின் மீதுள்ள அன்பால் அல்ல இப்படியான வெறுமையான நாட்களில் மல்கியா தீர்க்கதரிசி மக்களிடம் கடவுள் உங்களை இன்னும் நேசிக்கிறார். நீங்கள் மனந்திரும்புங்கள் என்று கூறினார். மக்களோ 'கடவுளை வணங்காதவர்கள் எங்களைக் காட்டிலும் நன்றாக வாழ்கிறார்களே, பின் நாங்கள் மட்டும் ஏன் கடவுளை வணங்கவேண்டும்' என்று முறுமுறுத்தார்கள். மல்கியா அவர்கள் அப்படிச் செய்வது தவறு என்று கடிந்துகொண்டார்.

'நீங்கள் ஜெபங்கள் சொல்லும்போது உங்கள் உள்ளத்திலிருந்து சொல்வதில்லை, உதட்டு அளவில் மட்டும் சொல்லுகிறீர்கள். பலிசெலுத்த நொண்டியான அல்லது வியாதியான ஆடு, மாடுகளைத் தெரிந்தெடுக்கிறீர்கள். கடவுளுக்குக் காணிக்கையாக, முதல்தரமான சிறந்ததைக் கொடுங்கள், அப்போதுதான் கடவுளின் ஆசீர்வாதத்தால் நீங்கள் நிரப்பப் படுவீர்கள்' என்றார்.

மேலும் 'கடவுள் முன்போல் அற்புதங்கள் நிகழ்த்தவில்லை என்று நினைக்கிறீர்கள். ஆனால் கடவுள் உங்களைக் காண ஒருநாள் வருவார். இதே எருசலேம் ஆலயத்தைக் காண வருவார். அவர் நல்லோரையும், தீயோரையும் பிரித்து நியாயம் தீர்க்கும்படி வருவார். அவர் வருகைக்கு முன்பாக நம்மை ஆயத்தம் செய்ய ஒரு தூதனை அனுப்புவார். அந்தத் தூதன் எலியாவைப் போல் இருப்பார்' என்றும் வருங்காரியங்களைக் குறித்து முன்னுரைத்தார்.

இதைக் கேட்ட மக்கள் கடவுளின் தூதன் எப்போது வருவார் 'இப்போதே வருவாரா அல்லது நாங்கள் வெகுகாலம் காத்திருக்க வேண்டுமா?' என்று கேட்டுக்கொண்டே ஆச்சரியத்துடன் அப்படிப்பட்ட ஒரு தூதனின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

புதிய ஏற்பாடு

முன்னுரை

புதிய ஏற்பாடு என்பது இயேசுகிறிஸ்து எப்படி கடவுளுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையே ஒரு புது உடன்படிக்கையாக வந்தார் என்பதும் கடவுளின் குமாரனுகத் தன்னை விசுவாசித்தோருக்கெல்லாம் பாவமன்னிப்பை வழங்க தன்னைத்தானே சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தார் என்பதும் அவர் மரித்து உயிர்த்தபின் சிஷர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியை உலகம் முழுவதும் பிரசங்கித்தார்கள் என்பதுமே.

மேற்கூறிய சம்பவங்கள் பாலஸ்தின நாட்டில் சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் நடந்தன. அச்சமயம் பாலஸ்தினு ரோம அரசாங்கத்திற்குட்பட்டிருந்தது. ரோமர்கள் யூதர்களைக் கடினமாக நடத்தினர். இதனுல் யூதர்கள் ரோம அரசாங்கத்தை வெறுத்தனர். தங்களை ஆள தங்களுக்கென்று ஒரு அரசன் பிறப்பார், அவர் மக்களை நியாயத்தோடும் நீதியோடும் அரசாள்வார் என்று தீர்க்கதரிசிகள் உரைத்தது எப்போது நிறைவேறும் என்று ஆவலுடன் காத்திருந்தனர்.

எருசலேமுக்கு உள்ளும் வெளியிலும் வாழ்ந்த யூதர்கள் தங்களுக்கென்று கட்டுப்பாடான மதக் கோட்பாடுகளையும், சட்ட திட்டங்களையும் வகுத்துக்கொண்டு யூதர் அல்லாதவர்களோடு அதிகம் கலவாமல் தனித்து வாழ்ந்தனர். ரோம ராஜ்யத்தில் வரி வசூலிக்கும் தொழில் செய்த யூதர்களைக் கீழ் மக்களாகவும் பாவிகளாகவும் எண்ணினர்.

யூதர்களில் பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் போன்ற பல பிரிவினர் இருந்தனர். பரிசேயர் மரணத்திற்குப் பின்னும் ஒரு வாழ்வு உண்டு என்று நம்பினுர்கள். சதுசேயர் ஆடம்பரமும் பக்தியும் கொண்டவர்கள். மரணத்திற்குப்பின் வாழ்வு இல்லை என்று சாதித்தார்கள். வேதபாரகர் அதிக அதிகாரங்களைக்கொண்ட ஆலய அதிகாரிகள்.

ரோம அரசாங்கத்தின் பிரதிநிதியாக ஏரோது அரசன் பாலஸ்தினு நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தான். இவனுக்குப்பின் அதே இடத்தில் ஆட்சிசெய்தவனும் ஏரோது என்ற பெயர்கொண்டவன்தான். பின்வரும் கதைகள் ஆரம்பித்த காலத்தில் ஆட்சிசெய்தவன் இவனே.

இயேசு பிறந்து, வளர்ந்து ஊழியம், அற்புதங்கள், உபதேசங்கள் செய்து, கொலை செய்யப்பட்டு, உயிர்த்தெழுந்து பரமேறியபின் இயேசுவின் சொல்லையும், செயலையும் தொகுத்து எழுதியவர் நான்கு பேர். மாற்கு என்பவர் இயேசுவின் போக்கையும், மனநிலைமையையும் எடுத்துக்காட்டி தேவகுமாரன் உலகுக்கு வந்த பரம இரகசியத்தை விளக்குகிறுர். மத்தேயு என்பவர், கிறிஸ்தவர்களான யூதர்களுக்கு எழுதினுர். லூக்கா என்பவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்த யூதரல்லாதவர், தாம் மனந்திரும்பியபின் சுவிசேஷப் பணியில் பவுல் அப்போஸ்தலரோடு உழைத்து வந்தவர், மருத்துவம் தெரிந்தவர். அப்போஸ்தலர் நடபடிகள் எழுதியவரும் இவரே. இவர் இந்த சுவிசேஷத்தை யூதரல்லாத புற மதத்தினருக்கு எழுதினுர். யோவான் கலிலேயாவில் செபதேயுவின் குமாரன். இவர் இயேசுவின் தெய்வீக மறைபொருளின் ஆழ்ந்த அறிவை தமது சுவிசேஷத்தின் வாயிலாகத் தெரிவிக்கிறுர். ஆகவே இந்த நான்கு பேர்களின் சுவிசேஷங்களும் ஒரே தொடரில் சுமார் நூறு கதைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

சரித்திரப் பின்னணி

விசுவாசமும் ஜெபமும்

கடவுள் இஸ்ரவேல் மக்களை மறுபடியும் காண வருவார் என்று கூறின மல்கியாவின் தீர்க்கதரிசனத்திற்குப்பின் சுமார் நானூறு வருடங்கள் கழிந்தன. பெர்சியர் படையெடுப்புக்குப் பின், கிரேக்கர் படையெடுத்து யூதேயாவைக் கைப்பற்றி ஆண்டனர். ரோமர்கள் கிரேக்கர்களை வெற்றிகொண்டபோது யூதேயா ரோம அரசாங்கத்திற்கு அடிமையாகிவிட்டது. ரோம அரசாங் கத்தின் வீரர்கள் எருசலேமிலும் மற்றும் நாடெங்கிலும் தங்கியிருந்தனர். அவர்களின் கெடு பிடியும் அதிகாரமும் யூதர்களுக்கு அதிக கஷ்டங்களையும் விளைவித்தது.

இப்போது யூதர்கள் தங்களுக்கென்று தங்களைமட்டும் அரசாள ஒரு நல்ல அரசன் கிடைக்கமாட்டானா என்று விரும்பினர். தீர்க்கதரிசிகள் 'யூதேயாவிலே ஒரு அரசன் பிறப்பார், அவர் இஸ்ரவேல் மக்களை சமாதானமாக ஆளுகை செய்வார் என்று முன் அறிவித்தார்களே. அப்படி ஒரு நீதியாக ஆட்சி செய்யும் அரசன் எப்போது பிறப்பார்? நாம் இந்த ரோமர்களிட மிருந்து விடுதலை பெற்று சுதந்திரமாக ஒரு யூத அரசை அமைத்து நிம்மதியாக வாழலாமே' என்று ஏங்கினார்கள்.


கடவுளால் வாக்குறுதிபண்ணப்பட்ட அப்படிப்பட்ட ஒரு அரசன் கட்டாயம் வருவார் என்று எதிர்பார்த்து விசுவாசித்து நம்பிக்கையோடு ஜெபம் செய்தார்கள். அந்நாட்களில் சகரியா என்ற ஒரு ஆசாரியரும் (ஆலய குரு) அவர் மனைவியாகிய எலிசபெத்தும் கடவுள் சீக்கிரமே யூதேயாவை ரோமரிடமிருந்து மீட்டு ஆட்சி செய்ய ஒரு அரசனை அனுப்பவேண்டும் என்று ஆலயத்தில் ஜெபம் செய்தார்கள். இத்தம்பதிகள் மிகவும் வயதானவராய் இருந்தனர். அவர்களுக்கு ஒரு குழந்தை இன்னும் பிறக்கவில்லை. ஆனாலும் யூதேயாவை அரசாளப்போகும் ராஜக் குழந்தை எப்போது பிறக்கும் என்று ஆவலோடு ஜெபித்தனர். கடவுளின் வாக்குப்படி கட்டாயம் நடக்கும் என்று நம்பினர்.

(இனி கதைகளைப் படிப்போம்)

245. சகரியாவின் தரிசனம்

லூ. 1

ஆலயத்தில் ஊழியம் செய்ய அக்காலத்தில் அநேக ஆசாரியர்கள் இருந்தார்கள். சகரியா தேவாலயத்தில் ஆசாரிய ஊழியம் செய்து வந்தார். அப்போது தூபங்காட்ட அவர் பெயருக்கு சீட்டு விழுந்தது. அவர் தூபங் காட்டும் வேளையில், மக்கள் எல்லோரும் கூட்டமாய் வெளியே ஜெபம் செய்துகொண்டிருந் தார்கள். அப்போது ஒரு தேவதூதன் சகரியாவைப் பார்த்து 'சகரியாவே பயப்படாதே; உன் ஜெபம் கேட்கப்பட்டது. உன் மனைவி எலிசபெத்து உனக்கு ஒரு மகனைப் பெறுவாள் அவனுக்கு யோவான் என்று பெயரிடு. அவனால் உனக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டா



சகரியாவின் தரிசனம் (லூ. 1)

கும். அவன் பிறப்பைப்பற்றிப் பலர் மன மகிழ்வார்கள். அவன் கர்த்தர் பார்வையில் பெரியவனாயிருப்பான். அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான். இவ்வாறு கர்த்தருக்கு ஏற்ற மக்களை ஆயத்தப்படுத்துவான்' என்று சொன்னார்.

அப்போது சகரியா தேவதூதனைப் பார்த்து, 'நீர் சொன்ன இவை யாவும் நடக்குமென்று நான் எதனால் அறிவேன்' என்று கேட்டார். அதற்கு தேவதூதர் 'நான் கர்த்தர்முன் நிற்பவன், என் பெயர் காபிரியேல். இதோ குறித்த காலத்தில் நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ நம்பவில்லை, எனவே நான் சொன்ன இவை யாவும் நிறைவேறும்வரை பேச முடியாமல் ஊமையாயிருப்பாய்' என்று சொல்லி மறைந்து போனார்.

தேவாலயத்திற்கு வெளியே மக்கள் சகரியாவுக்காகக் காத்திருந்தார்கள். சகரியா வரத் தாமதித்தது குறித்து வியப்படைந்தார்கள். அப்படி நீண்ட நேரம் கழித்து அவர் வெளியே வந்தபோது அவரால் மக்களோடு பேசமுடியவில்லை. அதனால் சகரியா தேவாலயத்தில் ஒரு காட்சி கண்டாரென்று மக்கள் தெரிந்துகொண்டார்கள். தன்னுடைய ஆசாரிய ஊழிய காலம் முடிந்தபின் சகரியா தன் வீடு திரும்பினார்.

246. இயேசு குழந்தை பிறப்பு முன்னறிவித்தல்

லூ. 1

காபிரியேல் தூதன் சகரியாவுக்குத் தோன்றி ஆறு மாத காலமாயிற்று. அப்போது கடவுள் காபிரியேலை ஒரு கன்னியிடம் அனுப்பினார். அந்தக் கன்னிகை கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்து என்னும் ஊரில் இருந்தார். அவர் பெயர் மரியாள். அவர் தாவீதின் வம்சத்தில் பிறந்த யோசேப்பு என்பவருக்குத் திருமணம் செய்து கொடுக்க நிச்சயிக்கப்பட்டிருந்தார்.

மரியாள் இருந்த வீட்டில் தேவதூதன் தோன்றி 'கிருபை பெற்றவளே வாழ்க! கர்த்தர் உன்னோடிருக்கிறார்' என்று சொல்லி அவரை வாழ்த்தினான். இதென்ன வாழ்த்துதலோ! என்று மரியாள் மனங் கலங்கிச் சிந்தித்தார். தேவதூதர் அவரைப் பார்த்து, 'மரியாளே பயப்படாதே! ஏனெனில் நீ கடவுளிடத்தில் கிருபை பெற்றாய். நீ ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பெயரிடு. அவர் உன்னதமானவருடைய

குமாரர் என்று சொல்லப்படுவார். கடவுளாகிய கர்த்தர் அவர் பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இல்லை' என்று சொன்னார்.

மரியாள் தேவதூதரிடம் 'இது எப்படி நடக்கும் எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையே' என்று கேட்டார். அதற்கு அவர் 'பரிசுத்த ஆவி உன்மேல் வந்து இறங்கும் உன்னதமானவருடைய வல்லமை உன்மேல் நிழலிடும். உனக்குப் பிறக்கும் குழந்தை பரிசுத்தமாயிருக்கும். அது கடவுளின் குமாரன் என்று சொல்லப்படும் என்றார். உன் இனத்தாளாகிய எலிசபெத்தும் முதிர் வயதிலே கர்ப்பம் தரித்திருக்கிறாள். அவளுக்கு இது ஆறும் மாதம். கடவுளாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை' எனக் கூறவே, மரியாள் 'இதோ நான் ஆண்டவருக்கு அடிமை நீர் சொன்னபடி எல்லாம் எனக்கு ஆகக்கடவது' என்று சொன்னார். அதன்பின் தேவதூதர் மறைந்து போனார்.



இயேசு குழந்தை பிறப்பு முன்னறிவித்தல் (லூ. 1)

247. மரியாளின் பாடல்

லூ. 1

மரியாள் வெகுநேரம் தனக்குச் சொல்லப்பட்ட கடவுளின் செய்தியைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தார். பின்பு தன் இனத்தாளாகிய எலிசபெத்திடம் சென்று அவளை வாழ்த்திவரும்படி நினைத்து, அவள் வசிக்கும் மலைநாட்டிலுள்ள யூதேயா பட்டணத்துக்கு சகரியாவின் வீட்டிற்குச் சென்று எலிசபெத்தை வாழ்த்தினார். எலிசபெத் மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்டவுடனே அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று. எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு உரத்த சத்தமாய் 'பெண்களுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது' என்றார்.

அப்பொழுது மரியாள் 'என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது, என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார். இதோ இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். வல்லமையுடையவர், மகிமையானவைகளை எனக்குச் செய்தார். அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார். இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மையினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார். தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்' என்று அழகாகப் பாடினாள்.

இப்படி ஒரு அழகிய கவிதையைப் பாடிய மரியாள், ஒரு கவிஞர் என்றே சொல்லலாம். ஒரு கவிதைக்கு அந்தந்தக் காலத்தின் சிறப்புகள் பல இருக்கும். மரியாளின் பாடலோ எந்த சமுதாயத்திற்கும் ஏற்ற அமரத்துவம் வாய்ந்த ஒரு புரட்சிப் பாடல் ஆகும். உலக மீட்பர் இயேசு பிறக்கு முன்னரே அவருடைய அன்னை இசைத்த பாடலில் ஒரு சமுதாயத்தின் மூன்று புரட்சிகள் உணர்த்தப்படுகின்றன. இப்பாடல் ஒரு கனவுபோன்று காட்சியளித்தாலும் இயேசு கிறிஸ்து தான் வாழ்ந்த குறுகிய காலத்தில் தன் அன்னையின் இக் கனவுகளை நனவாக்கி

நம்பக்கூடாத மாற்றங்களைச் சாத்தியமாக்கினார்.

மரியாளின் பாடலில் ஆத்மீகப் புரட்சி, சமூகப் புரட்சி, பொருளாதாரப் புரட்சி என்ற புரட்சிகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. இருதய சிந்தையில் அகந்தை உள்ளவர்களைச் சிதறடித்தார் என்று கூறும்போது பதவியும், பணமும் பட்டமும் ஆத்துமாவின் உயர்வைக் காட்டும் அளவுகோல்கள் அல்ல என்பதை அக்காலத்து வேத விற்பன்னர்களும் ஆலயத் தலைவர்களும் உணர்ந்துகொள்ளும்படியாகப் பாடினார்.

பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளித் தாழ்மையானவர்களை உயர்த்தினார். மரியாளின் இந்த நம்பிக்கை கடினமான மாற்றமாகத் தோன்றினாலும் அதிகாரமும் உரிமையும் பிரபுக்கள் வர்க்கத்தின் கைகளினின்று மக்களின் கைக்கு மாறும் ஜனநாயகத்தையே குறிக்கும், கொடுமையான ரோம ஆட்சியினின்றும் விடுபடத் துடிக்கும் ஒரு பெரிய சமூக, அரசியல் புரட்சியை இது வலியுறுத்துகிறது.

தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாரதி கவிஞன் பாடவில்லையா? ஒருவர் பட்டினியிருந்தாலும் கூட அது சமுதாய உணர்வினைத் தட்டி எழுப்ப வேண்டுமென்ற கருத்து வரவேற்கத்தக்கதே. பொருளாதாரத்தின் சிறப்பு இப்படி அமைந்திருக்கவேண்டும் என்பதைத்தான் மரியன்னையும்கூட 'பசியுள்ளவர்களை நன்மையினால் நிரப்பி ஐசுவரியமுடையவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்' என்று பாடினார்.

மரியாளின் பாடலில் வரும் காவியச் சித்திரங்களை வைத்துக்கொண்டும் இன்றைய சமுதாய நிலைகளைக்கூட நாம் அலசிப் பார்க்கலாம் அல்லவா?

248. யோவான் ஸ்நானகனின் பிறப்பு

லூ. 1

எலிசபெத்துக்குப் பிரசவகாலம் வந்தது. அவர் ஒரு மகனைப் பெற்றார். கர்த்தர் அவரிடத்தில் மிகவும் இரக்கம் பாராட்டினதை அயல் வீட்டாரும் உறவினரும் கேள்விப்பட்டார்கள். அப்போது கூடி வந்து அவருடனே கூட மகிழ்ந்து கொண்டாடினார்கள். பிள்ளை பிறந்த எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்வதற்கு அவர்களெல்லாரும் கூடி வந்தார்கள். அதற்கு சகரியா என்று பெயர்சூட்ட இருந்தார்கள். அப்பொழுது எலிசபெத்து, பிள்ளைக்கு யோவான் எனப் பெயரிடவேண்டும் என்று சொன்னார். அதற்கு அவர்கள் உன் உறவினரில் ஒருவருக்குக்கூட இந்தப் பெயர் இல்லையே என்று சொல்லி சகரியாவிடம் குழந்தைக்கு என்ன பெயரிடவேண்டும் என்று சைகை காட்டிக் கேட்டார்கள். அவர் எழுது பலகையைக் கேட்டு வாங்கி அதில் இவன் பெயர் 'யோவான்' என்று எழுதினார். எல்லோரும் வியப்படைந்தார்கள். உடனே சகரியாவின் வாய் திறந்தது. நாவின் கட்டு அவிழ்ந்தது. அவர் உடனே பேசத் தொடங்கினார்.

இதைகேட்ட யாவருக்கும் பயமுண்டாயிற்று. இந்தச் செய்தி யூதேயாவின் மலை நாடெங்கும் பரவியது. இச்செய்தியைக் கேள்விப்பட்ட எல்லோரும் தங்கள் மனதிலே அவற்றை வைத்துக்கொண்டு, இந்தப் பிள்ளை எப்படிப்பட்டதாய் இருக்குமோ? கடவுளுடைய கரம் அவனோடு இருந்ததே என்று சொல்லிக் கொண்டார்கள்.

சகரியா பரிசுத்த ஆவியால் நிறைந்து இஸ்ரவேலின் கடவுளாகிய கர்த்தர் போற்றுதலுக்குரியவர். அவர் தமது மக்களைத் தேடிவந்து அவர்களுக்கு ஒரு மீட்பை உண்டாக்கினார். பிள்ளையை நோக்கி, 'உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுவாய். அவருக்கென்று வழிகளை ஆயத்தம் செய்ய நீ அவருடைய முன்னோடி தூதனாகச் செல்வாய்' என்று தீர்க்கதரிசனம் உரைத்தார். பிள்ளை நாளுக்கு நாள் வளர்ந்து ஆவியிலே பலன்கொண்டது. இஸ்ரவேல் மக்களிடையே வெளிப்படையாக ஊழியம் செய்யும்வரை யோவான் ஸ்நானகன் வனாந்தரங்களில் தங்கி வந்தார்.

249. யோசேப்பு

மத். 1

நாசரேத் என்ற ஊரில் தச்சுவேலை செய்யும் ஒரு வாலிபன் இருந்தான். அவன் பெயர் யோசேப்பு. இவருக்கு ஒரு பெரிய குடும்ப வரலாறு உண்டு. தாவீது அரசனின் வம்சத்தைச் சேர்ந்தவன் என்ற பெருமைகூட



யோசேப்பு (மத். 1)

அவனுக்கு உண்டு. இப்படியாக இயேசுவின் பிறப்பின் பின்னணி தாவீது அரசனின் வம்சத்தோடும் இணைக்கப்படுகிறது. இஸ்ரவேலின் வேவுகாரர்களைக் காப்பாற்றிய ராகாப், மாமியாரைக் கனப்படுத்திய ரூத் இவர்கள்கூட யோசேப்பின் சந்ததியினர்தான். கடவுள் தன்னை நேசிக்கிறவர்களைக் கனப்படுத்துகிறார். இப்படிப்பட்ட குடும்பத்தில்தான் இயேசுவும் பிறக்கிறார்.

யோசேப்பு தன் திருமண நாளை நினைத்து மகிழ்ந்துகொண்டிருந்த நேரத்தில் தனக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்டிருந்த மரியாள் கர்ப்பவதி என்பதை அறிந்து மிகவும் வேதனைப் பட்டான். அவன் ஒரு நல்ல மனிதனாக இருந்த காரணத்தால் மரியாளைத் திருமணம் செய்யாமல் இரகசியமாகத் தள்ளிவிட யோசித்தான். கடவுளின் தூதர் கனவிலே தோன்றி, பிறக்கப்போகும் பிள்ளை பரிசுத்தாவியினால் உற்பத்தியானது என்று கூறி அதற்கு இயேசு என்றும் பெயரிடும்படி கூறினார். இயேசு என்றால் தம் மக்களின் பாவங்களை மன்னிப்பார் என்று அர்த்தம். கடவுளின் கட்டளைப்படி மரியாளை யோசேப்பு மணந்துகொண்டு அவளுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்தான். ‘ஒரு கன்னி கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவர்’ என்று ஏசாயா தீர்க்கன் சொன்னதும் நிறைவேறிற்று.

250. இயேசு பிறந்தார்

லூ. 2

ரோமப் பேரரசனாகிய அகஸ்துராயன் தன் அரசாங்கத்திலுள்ள மக்கள் தொகையைக் கணக்கு எடுக்க விரும்பினான். வரி வசூல் பண்ண சுலபமாக இருக்குமல்லவா? ஆகையால் ஒவ்வொருவரும் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளத் தங்கள் தங்கள் சொந்த ஊருக்குப் போகும்படி கட்டளை இட்டான். யோசேப்பு தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானும் இருந்ததால் தங்கள் பெயர்களை மக்கள் தொகைக் கணக்கில் பதிவு செய்துகொள்ள கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத் என்னும் ஊரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனார்.

கர்ப்பவதியாகிய மரியாளையும் மனைவியாக உடன் அழைத்துச் சென்றார். ஒரு வாரம் பயணம் செய்தபின் அழகிய மலை சூழ்ந்த பெத்லகேமை அடைந்தனர். மரியாள் மிகவும் களைத்திருந்தாள். இரவு தங்குவதற்கு சத்திரத்தில்கூட இடமில்லாதபடி மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. மரியாளின் நிலையைக் கண்டு மனதுருகி அந்தச் சத்திரக்காரன் ஆடுமாடு

படுத்துறங்கும் ஓர் இடத்தைக் கொடுத்தான். அதை சுத்தம்செய்து அதில் தங்கியபோது மரியாளுக்கு பிரசவ வேதனை ஏற்பட்டு ஓர் அழகிய ஆண் குழந்தையைப் பெற்றாள். மரியாள் குழந்தையைப் பழந்துணியினால் சுற்றி ஆடுமாடு உணவு உண்ணும் தொட்டிலில் படுக்க வைத்திருந்தாள். பாவம் அந்த நிலையில் தொட்டிலுக்கு எங்கே போவது? வானை வானங்களையும் பூமியையும் படைத்த கடவுளின் குமாரன் இப்படித் தாழ்மையாய்ப் பிறந்து பூமியில் மக்களை இரட்சிக்க ஏழையாய் வந்தார்.



இயேசு பிறந்தார் (லூ. 2)

251. ஆட்டு மேய்ப்பர்கள்

லூ. 2

ஒரு நாள் இரவில் பெத்லகேம் வயல்வெளியில் ஆட்டிடையர் தங்கள் ஆடுகளைக் கவனமுடன் காவல் காத்துக்கொண்டிருந்தனர். அவை மறுநாள் எருசலேம் சந்தையில் விற்கப்படவேண்டிய ஆடுகள். ஒரு ஊனம் இருந்தாலும் பலியிட உதவாத ஆடுகள் ஆகிவிடும். எனவே ஆடுகளுக்கு ஒரு காயமும், கீறலும் ஏற்படாதபடி அவைகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

தூங்கிவிடாதபடி கதைகள் பேசிக்கொண்டும் குளிர் காய்ந்துகொண்டும் நெருப்பு உண்டாக்கிக்கொண்டும் இருந்தனர். அந்தச் சமயம் திடீரென்று வானத்திலிருந்து ஒரு ஒளி தோன்றி அதிலிருந்து ஒரு தேவதூதன் வெளிப்பட்டான். மேய்ப்பர்கள் பயந்தனர். ஆனால் அந்த தேவதூதனோ 'பயப்படாதிருங்கள், உங்களுக்கு ஒரு நற்செய்தி கொண்டுவருகிறேன். உலகம் முழுவதற்கும் மகிழ்ச்சிதரக்கூடிய செய்தி. இன்று ஒரு குழந்தை பெத்லகேமில் பிறந்து உள்ளது.



ஆட்டு மேய்ப்பர்கள் (லூ. 2)



ஆட்டு மேய்ப்பர்கள் (லூ. 2)

அவர்தான் கிறிஸ்து. பழந்துணியிலே சுற்றப்பட்டு ஆடுமாடு தொழுவத்தில் புல் தொட்டியில் படுத்திருப்பதைக் காண்பீர்கள்' என்று கூறினான்.

இன்னும் அநேக தூதர்கள் ஒன்றுசேர்ந்து உன்னதத்திலே தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனிதர்பேரில் பிரியமும் உண்டாவதாக என்றும் பாடினார்கள். சிறிது நேரத்தில் இந்தக் காட்சி மறைந்தது. மேய்ப்பர்கள் சொப்பனம் கண்டதுபோல் நினைத்தார்கள். போய்ப் பார்த்து உண்மைதானா என்று கண்டு வருவோம் என்று சொல்லிப் புறப்பட்டார்கள் மேய்ப்பர்கள்.

மக்கள் யாவரும் தூங்கிக்கொண்டிருந்த நேரத்தில் ஆட்டிடையர்கள் பெத்லகேமில் சத்திரத்தில் மாட்டுத் தொழுவத்தில் தேடி மரியாளையும் யோசேப்பையும் கண்டு நடந்த காரியத்தையும் சொல்லி, பாலகன் இயேசுவையும் பணிந்துகொண்டனர்.

மரியாளோ தன் சிறிய மகனைப்பற்றிய ஆச்சரியமான விஷயங்களைக் குறித்து சிந்தித்துக்கொண்டிருந்தார். ஆட்டிடையர் மகிழ்ச்சியால் ஆடிப்பாடி தேவனைத் துதித்துத் திரும்ப தங்கள் இடத்திற்கே சென்றனர்.

252. குழந்தை இயேசுவைத் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லுதல்

லூ. 2

குழந்தைக்கு விருத்தசேதனம் செய்து எட்டாம் நாளிலே அதற்கு இயேசு என்று பெயரிட்டார்கள். ஐந்து வாரம் கழித்து மரியாளும் யோசேப்பும் குழந்தை இயேசுவை கர்த்தர்முன் நிறுத்த எருசலேமுக்கு எடுத்துச் சென்றார்கள். தேவ ஒழுங்கின்படி இரண்டு காட்டுப் புறாக்கள் அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளை அவர்கள் தேவாலயத்தில் பலியிடவேண்டும். அதற்காகவும் அவர்கள் அங்கு சென்றார்கள்.

சிமியோன் என்னும் பெயர்கொண்ட ஒருவர் எருசலேமில் இருந்தார். அவர் நீதியும், தேவ பக்தியும் உடையவர். மேசியாவின் வருகைக்காகக் காத்திருந்தவர். அவர் பரிசுத்தாவியில் நிறைந்திருந்தார். 'கர்த்தருடைய மேசியாவைக் காணுமுன்னே நீ சாகமாட்டாய்' என்று பரிசுத்த ஆவியானவர் அவருக்கு வெளிப்படுத்தியிருந்தார். அவர் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு தேவாலயத்திற்கு வந்திருந்தார். மரியாளும் யோசேப்பும் குழந்தை இயேசுவைத் தேவாலயத்திற்குக் கொண்டு வந்தார்கள். அப்போது சிமியோன் குழந்தையைத் தன் கையில் ஏந்திக்கொண்டு 'ஆண்டவரே, உமது வார்த்தையின்படியே உம்முடைய அடியேனை இப்போது சமாதானத்தோடே அனுப்புகிறீர். நீர் ஏற்படுத்திய உமது மீட்பை என் கண்கள் கண்டன' என்று சொல்லி இயேசுவைக் குறித்து சொல்லப்பட்டவைகளைக் கேட்ட மரியாளும் யோசேப்பும் வியப்படைந்தனர். சிமியோன் அவர்களை ஆசீர்வதித்தான். அன்னாள் என்னும் தீர்க்கதரிசினியும் தேவாலயத்தில் இருந்தார். அவர் எண்பத்து நான்கு வயதுள்ள ஒரு விதவை. அவர் தேவாலயத்தை விட்டு நீங்காமல் இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி கடவுளுக்குத் திருப்பணி செய்துவந்தார். அவரும் அந்த நேரம் அவர்களோடு வந்துநின்று கடவுளைப் புகழ்ந்தார். எருசலேமிலே மீட்புக்காகக் காத்திருந்த அனைவரிடமும் குழந்தை இயேசுவைப்பற்றி அன்னாள் பேசினார்.



குழந்தை இயேசுவைத் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லுதல் (லூ. 2)

253. அரசகுமாரன் எங்கே?

மத். 2

யூத அரசன் பிறப்பைக் குறித்து யூதர்கள் மட்டுமல்ல, பிற தேசத்தாரும், ஞானிகளும் யூதருக்குள் ஒரு அரசன் பிறப்பான். அவன் உலகத்தை நியாயத்தோடும், நீதியோடும் அரசாளுவான் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். வேத சாஸ்திரிகளும், வானசாஸ்திரிகளும் தேசத்தின் எதிர்காலத்தைக் குறிக்கும் அடையாளம் ஏதாவது தென்படுகிறதா என்று ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தனர்.

இயேசு பிறந்த நேரத்தில் வானசாஸ்திரிகள் வானத்தில் ஒரு புதிய பிரகாசமான நட்சத்திரத்தைக் கண்டனர். ஒரு பெரிய அரசன் பிறப்பதற்கு இதுதான் அடையாளம் என்று நம்பினார்கள். தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தபடி யூதேயா நாட்டில் அரசன் பிறந்திருக்கிறார் என்று அறிந்தார்கள் ஆகவே ஒரு அரசனுக்குரிய பரிசுகளோடு அவர்கள் அரசனைக்காணும் பிரயாணத்திற்குத் தயாரானார்கள். ஒட்டகங்களில் ஏறி இஸ்ரவேல், யூதேயா நாட்டை நோக்கிப் பயணமானார்கள்.

யூதேயா நாட்டை அடைந்தபோது அரசகுமாரன் எருசலேம் அரண்மனையிலே பிறந்திருப்பார் என்று நினைத்து அங்கே சென்றார்கள். அப்போது எருசலேமை ஏரோது மன்னன் ஆண்டுகொண்டிருந்தான். அவன் ரோமர்களுக்கு அடியில் அரசாட்சி செய்துகொண்டிருந்தபடியால் பேராசையும் பெருமையும் கொண்டவனாயிருந்தான். ஒரு புதிய அரசனைக் காண பரிசுகளுடன் சிலர் என் நாட்டின் எல்லையில் வந்திருக்கின்றனர் என்று கேள்விப்பட்ட மாத்திரத்தில் பொறாமை கட்டுக்கடங்காமல் அவன் உள்ளத்தில் பெருகியது. தன்னுடைய பதவி பறிபோய்விடுமோ என்று பயந்தான். மேசியா வருகையைப்பற்றி மேலும் அறிந்துகொள்ள வானசாஸ்திரிகளை அவர்கள் வந்தவுடன் 'மேசியா எங்கே பிறந்திருக்கிறார்' என்று கேட்டான். அவர்கள் 'மீகா தீர்க்கன் உரைத்தபடி தாவீதின் ஊராகிய பெத்லகேமில் பிறந்திருக்கிறார் என்றார்.' ஏரோது அரசன் பயந்து சாஸ்திரிகளை அழைத்து 'நீங்கள் முன்பு போய் பெத்லகேமில் பிறந்த மேசியாவைப் பார்த்துவிட்டு, உடனே எனக்கும் தெரியப்படுத்துங்கள். நானும் போய்ப் பார்க்க வேண்டும்' என்றார்.

வானசாஸ்திரிகள் கிழக்கிலிருந்து புறப்பட்டுப் போகையில் திரும்பவும் அந்தப் பிரகாசமான நட்சத்திரம் அவர்களை வழிநடத்தியது. கடவுள் தங்களை இவ்விதமாக வழிநடத்தியதைக் கண்டு மகிழ்ச்சியுடன் சென்றனர். இயேசு யூதருக்கு மட்டும் அரசனல்ல, புறமதஸ்தருக்கும் வானசாஸ்திரிக்கும்கூட சொந்தமானவர் அல்லவா இந்த உலக இரட்சகர்?

254. அரச குழந்தைக்கு வெகுமதிகள்

மத். 2

சாஸ்திரிகள் பெத்லகேமுக்கு அருகே வந்துவிட்டனர். யோசேப்பும் மரியாளும் மாட்டுத் தொழுவத்திலிருந்து ஒரு சிறிய வீட்டிற்கு வந்து குடியேறிவிட்டனர். யோசேப்பு தச்சு வேலை செய்து சம்பாதிக்க ஆரம்பித்து இருந்தார். சாஸ்திரிகள் இந்த மிகச் சிறிய வீட்டைக் கண்டு குனிந்து உள்ளே பார்த்தபோது ஏழைத் தாய் மரியாள் இயேசு குழந்தையை மடியில் வைத்திருக்கக் கண்டார்கள்.

உலகை ஆளும் அரசன் பிறந்திருக்கிறார். அங்கு அலங்காரம் இல்லை, ஆடம்பரம் இல்லை, வேலையாள் இல்லை. எளிமையான இடம், தங்களை எல்லாம் காட்டிலும் மிக மிகப் பெரிய ஒருவர் தாம் குழந்தையாகத் தாயின் மடியில் படுத்திருக்கிறார் என்பதை அறிந்தார்கள்.



அரச குழந்தைக்கு வெகுமதிகள் (மத். 2)

கடவுளால் அனுப்பப்பட்ட அரசன் இவர் தான் என்பதை எந்த சந்தேகமும் இன்றி ஏற்றுக்கொண்டு தங்கள் பொன்முடிகள் தரையில் பட குனிந்து வணங்கினர். ஒவ்வொருவராக ஒட்டகத்திலிருந்து பரிசுப் பொருட்களை எடுத்துப் பணிவோடு படைத்தனர். ஒருவர் பொன்னைப் படைத்தார், மற்றொருவர் தூபவர்க்கத்தைப் படைத்தார். இது ஆலய வழிபாடுகளில் பயன்படுத்தும் ஒரு வாசனைப் பொருள். மூன்றாவது சாஸ்திரியோ வெள்ளைப் போளம் என்ற பொருளைப் படைத்தார். இது இறந்தவர்களைப் புதைக்கும்போது உபயோகிக்கும் பொருள். இது ஒரு வேதனைமான காணிக்கையாக மரியாளுக்குக் காணப்பட்டது.

அரசனைக் கண்டு பணிந்து காணிக்கையும் படைத்தாகிவிட்டது. சாஸ்திரிகள் திரும்பிப் போகப் பயணப்பட்டனர். இரவில் கடவுள் அவர்களிடம் பேசி, 'ஏரோது மன்னனிடம் போய் செய்தி ஒன்றும் சொல்ல வேண்டாம், வேறு வழியாய்ப் போய்விடுங்கள்' என்று எச்சரித்தார். ஆகவே வேறு பாதையில் சொந்த நாட்டிற்குத் திரும்பச் சென்றனர்.

255. எகிப்துக்கு ஓடிப்போகுதல்

மத். 2

யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டார். அதில் கடவுளின் தூதன் தோன்றி, 'ஏரோது அரசன் குழந்தையைக் கொல்வதற்காக உங்களைத் தேடுவான். ஆகவே எகிப்துக்குச் சென்று சிறிது காலம் பத்திரமாயிருங்கள்' என்று எச்சரித்தான். ஏரோது அரசனும் சாஸ்திரிகள் திரும்பி வந்து இயேசு குழந்தையைப் பற்றித் தகவல் கொடுப்பார்கள் என்று காத்திருந்து பொறுமை இழந்தான்.

சாஸ்திரிகள் தனது கெட்ட எண்ணத்தையும் புரிந்துகொண்டு வேறு வழியாய்ச் சென்றுவிட்டார்கள் என்று தெரிந்து கோபம் கொண்டான். ஏரோது அரசன், குழந்தை இயேசுவை எப்படியும் கொன்றுவிட வேண்டும் என்று எண்ணி பல வேறு உபாயங்களைத் தேடினான்.

பெத்லகேமிலும் அதன் அருகிலுள்ள இடங்களிலும் உள்ள இரண்டு வயதுக்குட்பட்ட ஆண்



எகிப்துக்கு ஓடிப்போகுதல் (மத். 2)

குழந்தைகள் அனைவரையும் கொலை செய்யக் கட்டளையிட்டான். அதன்படியே செய்தார்கள். அடடா என்ன கொடூரம்? எத்தனை அழு குரல், எவ்வளவு புலம்பல்?

ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது அவை இல்லாதபடியால் ஆறுதலடையாமல் இருக்கிறாள் என்று எரேமியா தீர்க்கதரிசி உரைத்தது நிறைவேறிற்று.

ஆனால் இயேசு பாலகனை தன் பெற்றோரோடு எகிப்துக்குப் பிரயாணமாய்ச் சென்றார்.

இயேசு பாலகன் வளர்ந்து பெரியவர் ஆனார். கொஞ்ச காலத்தில் ஏரோது மன்னன் இறந்தபின் அவன் மகன் அர்கெலாயு ஆண்ட காலத்தில் தேவதூதன் சொற்படி யோசேப்பு குடும்பத்துடன் திரும்பவும் பிரயாணப்பட்டு யூதேயாவின் வட பகுதியிலுள்ள நாசரேத் என்னும் ஊரில் குடியேறினர். அங்கு இயேசு தன் தகப்பனாரோடு சேர்ந்து தச்சு வேலை செய்து வந்தார். குடும்பத்தையும் காப்பாற்றி வந்தார். 'நசரேயன் எனப்படுவார்' என்று தீர்க்கதரிசிகள் கூறியதும் இதனால்தான் என விளங்குகிறது.


256. ஆலயத்தில் பன்னிரெண்டு வயது சிறுவன்

லூ. 2

நாசரேத்தூரில் இயேசு வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்திருந்தார். கடவுளுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது. இவருடைய தாய் தகப்பன் வருஷந்தோறும் பஸ்கா பண்டிகைக்கு எருசலேமுக்குச் செல்வது வழக்கம். இயேசுவுக்கு பன்னிரெண்டு வயதானபோது அவர்கள் அவருடன் அந்தப் பண்டிகையைக் கொண்டாட எருசலேமுக்குச் சென்றார்கள். பண்டிகை நாட்கள் முடிந்தபின் வீட்டிற்குத் திரும்பிச் சென்றனர்.

ஆனால் சிறுவராகிய இயேசு, எருசலேமில் தங்கிவிட்டார். இதை அவரது தாயும் தந்தையும் அறியவில்லை. பயணப்பட்டு போனவர்களோடு இயேசு போயிருப்பார் என நினைத்தார்கள். ஒரு நாளின் பயணம் முடிந்தபின் அவரைத் தேடினார்கள். அவர் பயணக் கூட்டத்தில் இல்லை. எனவே அவரைத் தேடிக் கொண்டு எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். மூன்று நாட்களுக்குப் பிறகு அவர் தேவாலயத்தில் இருப்பதை அவர்கள் கண்டார்கள். அவர் போதகர்கள் நடுவில் உட்கார்ந்திருந்தார். அவர்கள் பேசினதைக் கேட்டுக்கொண்டும் அவர்களை கேள்விகள் கேட்டுக்கொண்டும் இருந்தார்.

சிறுவன் பேசினதைக் கேட்ட எல்லோரும் அவருடைய அறிவையும் அவர் தந்த பதிலையும் குறித்து பிரமித்தார்கள். அவர் தாய் தகப்பன்மாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள், மலைத்து நின்றார்கள். அப்போது அவருடைய தாயார் அவரைப் பார்த்து 'மகனே ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? உன் தந்தையும் நானும் மிகுந்த கவலையோடு உன்னைத் தேடினோமே' என்றார்கள். அதற்கு அவர் 'நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் பிதாவின் வீட்டில் இருக்கவேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதா?' என்றார். அவர் சொன்னதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. பின்பு அவர்களுடன் நாசரேத்துக்குத் திரும்பப் போய், அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தார். மரியாளோ இந்தக் காரியங்களை எல்லாம் தன் இருதயத்திலே வைத்துக் கொண்டாள். இயேசு வளர்ந்து ஞானத்தில் முதிர்ந்து கடவுளுக்கும் மனிதருக்கும் மென்மேலும் உகந்தவரானார்.



ஆலயத்தில் பன்னிரெண்டு வயது சிறுவன் (லூ. 2)

257. யோவான் ஸ்நானகனும் இயேசுவும்

லூக். 3

யோவான் ஸ்நானகன் முப்பது வயதான போது அவர் இஸ்ரவேல் மக்களுக்குப் பிரசங்கம் செய்யக் கடவுளால் உத்தரவு பெற்ருர். அவர் யோர்தான் என்னும் ஆற்றின் அருகிலுள்ள யூதேயாவின் வனந்தரத்தில் வந்து பிரசங்கம் செய்து வந்தார். அவர் ஒட்டக மயிர் உடையையும் இடுப்பில் வார்க்கச்சையும் அணிந்திருந்தார். காட்டுத்தேனும் வெட்டுக் கிளியும்தான் அவரது உணவு.

மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சீக்கிரத்தில் வரப்போகிறது என்று பிரசங்கித்து வந்தார். அப்பொழுது எருசலேம் மக்களும், யூதேயா தேசத்தாரனைவரும் அவரைத் தேடி வந்தனர். தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவரால் ஞானஸ்நானம் பெற்ருர்கள். தங்களையே நீதிமான்கள் என்று எண்ணிக்கொள்ளும் பரிசேயரும் கடவுளுக்குப் பயப்படாத சதுசேயரும் ஞானஸ்நானம் பெற வந்தார்கள். யோவான் அவர்களைப் பார்த்து 'விரியன் பாம்பின் குட்டிகளே, வரப்போகும் தேவ கோபத்திற்குத் தப்பித்துக்கொள்ள இந்த வழியை உங்களுக்குக் காட்டினவன் யார்? நீங்கள் மனமாற்றம் அடைந்தவர்கள் என்ருல் அதை உங்கள் வாழ்க்கையில் காட்டுங்கள். ஆபிரகாம் உங்களுக்குத் தகப்பன் என்று பெருமை பாராட்டாதிருங்கள். கடவுள்



யோவான் ஸ்நானகனும் இயேசுவும் (லூ. 3)

இந்தக் கற்களிலிருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை எழுப்ப வல்லவரென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் கோரிடாரி, மரங்களின் வேரருகில் வைக்கப்பட்டிருக்கிறது. நல்ல கனிகொடாத மரம் எல்லாம் வெட்டப்பட்டு நெருப்பிலே போடப்படும்' என்று சொன்னுர்.

அதைக் கேட்ட மக்கள், 'அப்படியானுல் நாங்கள் என்ன செய்யவேண்டும்?' என்று யோவானைப் பார்த்துக் கேட்டார்கள். அதற்கு அவர் 'இரண்டு ஆடைகளை உடையவன், ஆடை இல்லாதவனுக்கு ஒன்றைக் கொடுக்க வேண்டும். உணவை உடையவனும் அப்படியே உதவவேண்டும்' என்ருர். வரி வசூல் செய்யும் ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெறுவதற்கு யோவானிடம் வந்தனர். அவர்கள் அவரிடம் போதகரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்று கேட்டனர். அதற்கு யோவான் 'உங்களுக்குக் குறிக்கப்பட்டுள்ள வரித்தொகைக்கு மேல் ஒன்றும் வாங்காதிருங்கள்' என்ருர். படைவீரரும் அவரை நோக்கி 'நாங்கள் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர் 'ஒருவனையும் கொள்ளையடித்துக் கெடுக்காதீர்கள். ஒருவர்மீதும் பொய்யாய்க் குற்றம் சுமத்தாதிருங்கள். உங்கள் சம்பளமே உங்களுக்குப் போதும் என்று இருங்கள்' என்ருர்.

யோவான்தான் மேசியாவோ என்று மக்கள் தங்கள் உள்ளங்களில் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். அதை அறிந்த யோவான், மக்களைப் பார்த்து, 'நான் தண்ணீரினுல் திருமுழுக்குக் கொடுக்கிறேன். ஆயினும் என்னைவிட ஒருவர் வருகின்ருர். அவருடைய மிதியடிகளின் வாரை அவிழ்க்கவும் நான் தகுதியில்லாதவன். அவர் பரிசுத்த ஆவியினுலும் நெருப்பினுலும் திருமுழுக்குக் கொடுப்பார். அவர் கையில் தூற்றுக் கூடை இருக்கிறது. அதைக்கொண்டு தமது களத்தை முற்றிலும் துப்புரவாக்கி கோதுமை மணிகளைக் களஞ்சியத்தில் சேர்த்து வைப்பார். பதரையோ அவியாத நெருப்பிலிட்டு எரித்து அழிப்பார்' என்று சொன்னுர். இப்படியாகக் கடவுளின் வருகைக்காக மக்களை ஆயத்தம் செய்தார்.

யோவான் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும்போது இயேசு யோவானிடம் திருமுழுக்குப் பெற எண்ணி யோர்தான் ஆற்றுக்கு வந்தார். யோவானே இயேசுவைப் பார்த்து 'நான்

உம்மால் ஞானஸ்நானம் பெறவேண்டியவன். நீர் என்னிடம் வருகிறீரே' என்று தடுத்துச் சொன்னார். அதற்கு இயேசு, 'நீ தடை செய்யாமல் இப்போது எனக்கு திருமுழுக்குக் கொடு. இப்படித்தான் கடவுளுக்கு ஏற்றவை எனக் குறிக்கப்பட்ட எல்லா நீதியையும் நிறைவேற்ற வேண்டும். அது நமது கடமை' என்றார். அப்போது உடனே யோவான் அவருக்கு திருமுழுக்குக் கொடுத்தார்.

திருமுழுக்குப் பெற்றபின் இயேசு தண்ணீரை விட்டுக் கரையேறினார். அப்பொழுது வானம் திறந்தது. தேவ ஆவியானவர் புறாவைப்போல் இறங்கித் தம்மேல் வருகிறதைக் கண்டார். அப்போது வானத்திலிருந்து ஒரு சத்தம் 'இவர் என்னுடைய நேசக்குமாரர் இவரில் பிரியமாயிருக்கிறேன்' என்று உரைத்தது.

258. இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனை

லூ. 4

இயேசு சாத்தானால் சோதிக்கப்படவேண்டுமென்று பரிசுத்த ஆவியானவர் விரும்பினார். இதற்காக இயேசு வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார். அங்கு அவர் ஒன்றும் சாப்பிடாமல் இரவும், பகலும் நாற்பது நாட்கள் உபவாசம் இருந்தார். பின்பு அவருக்குப் பசி உண்டாயிற்று. அதை அறிந்த சாத்தான் அவரிடம் வந்து, 'நீர் கடவுளின் குமாரனே என்றால் இந்தக் கற்களை அப்பங்களாக்கும்படி சொல்லும்' என்றான். அதற்கு இயேசு 'ஒருவன் அப்பத்தினால் மட்டும் பிழைப்பதில்லை, கடவுளுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்' என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே என்று சொன்னார்.

அதன் பின்பு சாத்தான் அவரை எருசலேமுக்குக் கொண்டு போனான் அவரை தேவாலயத்தின் உச்சியில் நிறுத்தி, 'நீர் கடவுளின் குமாரன் என்றால் இங்கிருந்து கீழே குதியும் கடவுள் உமக்காகத் தம் தூதர்களை அனுப்புவார். அவர்கள் வந்து உமது பாதம் கல்லில் படாதபடி தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே' என்றான். அதற்கு இயேசு, 'உன் தேவனாகிய கடவுளை பரீட்சை பாராதிருப்பாயாக என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே' என்று சொன்னார்.

மீண்டும் சாத்தான் இயேசுவை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய் நிறுத்தினான். உலகத்தின் இராஜ்யங்கள் அனைத்தையும் அவற்றின் மேன்மைகளையும் காட்டினான். இயேசுவைப் பார்த்து, 'நீர் கீழே விழுந்து என்னைப் பணிந்துகொண்டால் இவை அனைத்தும் உனக்குத் தருவேன்' என்றான். இயேசு அவனைப் பார்த்து 'என்னைவிட்டு விலகிப்போ, சாத்தானே; கடவுளாகிய கர்த்தரை பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்றும் வேதத்தில் எழுதியிருக்கிறதே' என்று சொன்னார்.

இதைக்கேட்ட சாத்தான் அவரை விட்டு விலகிப் போனான். தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.



இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனை

259. பன்னிரெண்டு சீடர்கள்

மா. 3

கடவுளின் இராஜ்யம் பூமியின்மேல் வந்துவிட்டது என்பதைப் பிரசித்தப்படுத்த இதுவே சரியான நேரம் என்று இயேசு அறிந்தார்.

அந்தக் கடவுளின் இராஜ்யத்திற்கு தானே தலைவன் என்பதை அவர் மறைத்து வைத்து கடவுளின் ராஜ்யத்தின் வேலைகளைச் செய்வதில் முழு மூச்சுடனும் அன்புடனும் ஆர்வத்துட

னும் ஈடுபட்டார். இந்த வேலையைச் செய்வதற்குத் தனக்கு உதவியாட்கள் தேவை என்று உணர்ந்தார். தன்னோடு சேர்ந்து உழைத்து கடவுளின் ராஜ்ய வேலைகளைச் செய்ய சீஷர்களைத் தெரிந்தெடுக்க உதவுமாறு கடவுளிடம் விண்ணப்பித்தார்.

ஒருநாள் அவர் கலிலேயாக் கடற்கரையில் தன் பழைய சிநேகிதர்களான அந்திரேயாவையும் சீமோன் பேதுருவையும் கண்டார். 'என்னோடு வாருங்கள்' என்று அவர்களை இயேசு அழைத்தவுடன் தங்கள் மீன் வலைகளை அப்படியே போட்டுவிட்டு அவர் பின்னே சென்றார்கள். கொஞ்ச தூரத்தில் யோவானும் யாக்கோபும் மீன் வலையைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தனர். 'என்னைப் பின்பற்றி வாருங்கள்' என்று அவர்களைப் பார்த்து இயேசு சொன்னவுடனே தங்கள் தகப்பனாகிய செபெதேயுவிடம், வலைகளை கொடுத்து விடும்படி சொல்லிவிட்டு அவரைப் பின்பற்றினர். 'நீங்கள் இனி மீன் பிடிப்பவர்கள் அல்ல, உங்களை கடவுளின் ராஜ்யத்திற்கென்று மனிதர்களைப் பிடிப்பவர்கள் ஆக்குவேன்' என்று இயேசு சொன்னார்.

பலவித மக்களை இயேசு தெரிந்தெடுத்தார். மத்தேயு ரோம ராஜ்யத்தில் வரி வசூலிப்பவர். அரசாங்க அதிகாரி. வரி வசூலிப்பவர்களை யூதர் மிகவும் வெறுத்தனர். ஏனெனில் இவர்கள் அதிகம் வசூலித்து அரசாங்கத்திற்குச் செலுத்தியதுபோக மீதியைத் தாங்களே வைத்துக்கொண்டனர். அநேக ஆண்களையும், பெண்களையும் இயேசு தன்னோடு அழைத்து ஊழியத்தில் பங்குபெறச் செய்தாலும் பன்னிரண்டு பேரை மாத்திரம் அப்போஸ்தலர் என்று விசேஷமாக அழைத்துத் தன் ஊழியத்தில் பயிற்றுவித்தார். அவர்கள் பெயர்களாவன. சீமோன் பேதுரு, செபெதேயுவின் இரு குமாரர்களாகிய யோவான், யாக்கோபு, அந்திரேயா, பிலிப்பு பற்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு, கானானியனாகிய சீமோன், யூதாஸ்காரியோத்து.





பன்னிரெண்டு சீடர்கள் (மா. 3)

260. பிணியாளியும் வைத்தியனும்

மா. 2

ஒருநாள் இயேசு கடற்கரையில் கூடியிருந்த மக்களுக்குப் போதித்தார். முடிந்தவுடன் அந்த வழியாய் நடந்துபோகையில் மத்தேயு ஆயத்துறையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு 'எனக்கு பின்சென்று வா' என்றார்.

அவன் எழுந்து இயேசுவுக்குப் பின் சென்றான். தனது ஒப்பற்ற தலைவனை தன்னுடைய கூட்டத்தாருக்கு அறிமுகம் செய்ய மத்தேயு விரும்பினான். அவனுடைய வீட்டிலே அனைவருக்கும் ஒரு விருந்து செய்தான். அதில் அநேக ஆயக்காரரும், பாவிகளும் இயேசு

வோடும் சீஷர்களோடும் உணவருந்தி மகிழ்ந்திருந்தனர்.

இதைக்கண்ட வேதபாரகரும் பரிசேயரும் 'இவர் பரிசுத்தவான் என்று கூறினீர்களே. இவர் இப்படிப் பாவிகளோடும் ஆயக்காரரோடும் விருந்தில் கலந்து கொள்கிறாரே' என்று சீஷர்களைக் கேட்டார்கள். அதற்கு இயேசு 'நீங்கள் எப்போது வைத்தியனைத் தேடுவீர்கள்? சுகமாயிருக்கும்போது தேட மாட்டீர்கள், சுகவீனம் ஏற்பட்டால் தேடுவீர்கள் அல்லவா? அதுபோல இவர்கள் நோயாளிகள். கடவுளின் கட்டளைகளை மீறி கீழ்ப்படியாமை என்ற நோயினால் வருந்துபவர்களை நானே கடவுளின் மன்னிப்பை அவர்களுக்கு அளித்து இரட்சிப்பு என்னும் மருந்தினால் அவர்களை குணமாக்கும் பரம வைத்தியன்.

'நோயாளிக்கு வைத்தியம் செய்ய நோயாளி இருக்கும் இடத்திற்கு வைத்தியன் செல்ல வேண்டுமல்லவா? அதனால்தான் நான் இங்கு இருக்கிறேன்' என்றார். வேதபாரகரும் பரிசேயரும்கூட மன்னிப்பு தேவைப்படும் நோயாளிகள்தான். ஆனாலும் மனந்திரும்பி தன்னைத் தாழ்த்திப் பாவி என்று அறிக்கை செய்கிறவனையே கடவுள் மன்னிக்கிறார் என்றும் போதித்தார்.

261. இயேசுவின் முதல் அற்புதம்


யோ. 1

தண்ணீர் பழரசமாயிற்று

கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது. இயேசுவின் தாயும், அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். திராட்சரசம் குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் அவரை நோக்கி 'அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை' என்றாள். அதற்கு இயேசு, 'தாயே, என் வேளை இன்னும் வரவில்லை' என்றார்.

அவருடைய தாய் மரியாள் வேலைக்காரரை நோக்கி 'அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படியே செய்யுங்கள்' என்றாள். யூதர்கள் தங்களை சுத்திகரிக்கும் முறைமையின்படியே ஒவ்வொன்றும் இரண்டு, மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தனர்.

இயேசு வேலைக்காரரை நோக்கி 'அந்த ஆறு கற்சாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள்' என்றார். அவர்கள் அவைகளில் தண்ணீரால் நிறைய நிரப்பினார்கள். இயேசு அவர்களை நோக்கி 'நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு போங்கள்' என்றார். அவர்கள் கொண்டுபோனார்கள். அந்தத் திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி பந்திவிசாரிப்புக்காரனுக்குக் கூட தெரியாததினால், அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசி பார்த்தபோது மணவாளனை அழைத்து 'எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, மக்கள் திருப்தியடைந்த பின்பு, ருசி குறைந்ததைக் கொடுப்பான். நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே' என்றான். இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தனர்.



இயேசுவின் முதல் அற்புதம் (யோ. 1)

262. பிணி தீர்க்கும் ஊழியம்

மா. 1

ஆலயத்திலிருந்து இயேசுவையும், சீஷர்களை யும் பேதுரு தன் வீட்டிற்கு அழைத்து வந்தார். வீட்டு வாசலில் பேதுருவின் மனைவி கவலை யோடு நின்றாள். காரணம் அவள் தாயார்



பிணி தீர்க்கும் ஊழியம் (மா. 1)

மிகவும் காய்ச்சலால் அவதிப்பட்டுக்கொண் டிருந்தாள். அந்திரேயா 'இயேசு உதவி செய்வாரென்று கூறி இயேசுவை உள்ளே அழைத்துச் சென்றான். பேதுருவின் மாமி அதிக ஜுரத்தால் அவதிப்பட்டுப் படுத்திருந் தாள். இயேசு அவள் கிட்டப்போய் அவளைத் தொட்டார். இயேசுவின் கரம் பட்ட உடன் ஜுரம் அவளை விட்டு நீங்கினது. உடனே அவள் எழுந்து இயேசுவை உபசரித்து, உணவு ஆயத்தம் செய்யலானாள்.

இதைக் கண்ட அண்டை அயலார் ஆச்சரிய மடைந்து, இச்செய்தியை எல்லாருக்கும் தெரியப்படுத்தினார்கள். செய்தி பரவியதும் ஒரு பெரிய கூட்டம் பேதுருவின் வீட்டின் வாசலில் கூடிவிட்டது. இயேசுவைக் காணவும், குணம் அடையவும் நோயாளிகளும், பேய் பிடித்தவர் களும், நடக்க முடியாதவர்களும், காது கேளாதவர்களும், பார்வை இல்லாதவர்களும் இப்படியாக உறவினர்களும், நண்பர்களுமாகக் கொண்டு வந்து சேர்த்தனர். இயேசு எல்லாரையும் குணப்படுத்தினார். கடவுளின் வல்லமையை யாவரும் கண்டனர். கடவுள் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார் என்ற உண்மையை உணர்ந்தனர்.

263. பெதஸ்தா குளம்

யோ. 5

ஒரு சமயம் யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது. அச்சமயம் இயேசு எருசலேமுக்குப் போனார். அங்கே எருசலேம் ஆட்டு வாசலி னருகே, யூதருடைய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் இருந்தது. அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு. அவைகளில் குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத் திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக்கொண்டிருப்பார்கள்.

ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீ ரைக் கலக்குவான். தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சுகம் அடைவான்.

முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண் டிருந்த ஒரு மனுஷன் படுத்திருந்ததை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதியஸ்த னென்று அறிந்து, அவனை நோக்கி 'சுகமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?' என்று கேட்டார்.

அதற்கு வியாதியஸ்தன் 'ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத் தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவரு மில்லை. நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கி விடுகிறான்' என்றான். இயேசு அவனை நோக்கி 'எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட' என்றார். உடனே அந்த மனுஷன் சுகம் அடைந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தான்.

அந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது. ஆதலால் யூதர்கள் குணமாக்கப்பட்டவனை நோக்கி,

ஓய்வுநாளில் படுக்கையை எடுத்துக்கொண்டு போவது உனக்கு நியாயமில்லை என்றனர். அவன் அவர்களுக்கு மறுமொழியாக 'என்னைக் குணமாக்கினவர் சொன்னபடி நான் செய்தேன்' என்றான். அதற்கு உன்னை குணமாக்கினவர் யார்? என்று கேட்டார்கள்.

தேவாலயத்தில் இயேசு அவனை நோக்கி 'நீ குணமானாய், அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவம் செய்யாதே' என்றார். அந்த மனுஷன் போய், தன்னைச் சுக மாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவித்தான். இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்தபடியால், யூதர்கள் அவரைக் கொலை செய்ய வகை தேடினார்கள்.



பெதஸ்தா குளம் (யோ. 5)

264. சீலோவாம் குளத்தில் அற்புதம்

யோ. 9

இயேசு தேவாலயத்தை விட்டு அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி, 'ரபி, இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம்; இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ' என்று கேட்டார்கள்.

இயேசு 'அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்' என்று சொல்லி, இயேசு தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின் மேல் பூசி நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்.

அப்பொழுது அயலகத்தாரும், அவன் குருடனாயிருக்கையில் அவனைக் கண்டிருந்தவர்களும், 'இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தவனல்லவா?' என்றார்கள். சிலர் 'அவன்தான்' என்றார்கள். வேறு சிலர் 'அவனுடைய சாயலாயிருக்கிறான்' என்றார்கள். அவனோ 'நான்தான் அவன்' என்றான். அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, 'உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது?' என்றார்கள். அதற்கு அவன் 'இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன்' என்றான். அப்பொழுது அவர்கள் அவர் எங்கே என்றார்கள். அவன் 'எனக்குத் தெரியாது' என்றான். பரிசேயரிடத்தில் அவனைக் கொண்டுபோய் 'நீ எப்படிப் பார்வையடைந்தாய்?'. என்று மறுபடியும் கேட்டார்கள். அதற்கு அவன் 'இயேசு என் கண்களின்மேல் சேற்றைப் பூசினார். நான் கழுவினேன், காண்கிறேன்' என்றான்.

அப்பொழுது பரிசேயரில் சிலர் 'அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல' என்றார்கள். வேறு சிலர் 'பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான்' என்றார்கள். இவ்விதமாய் அவர்களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று.

265. ஆலயத்தில் அலறல்

மா. 1

கப்பர்நகூமுக்கு இயேசுவும் அவருடைய சீஷர்களும் போனார்கள். உடனே அவர் ஓய்வு நாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து, போதகம் பண்ணினார். அவர் வேதபாரகரைப் போலப் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால் அவருடைய போதகத்தைக் குறித்து மக்கள் ஆச்சரியப் பட்டார்கள். அப்போது திடீரென்று அங்கு ஒரு அலறல் சத்தம் கேட்டது. அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன் 'ஐயோ! நசரேய னாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்' என்று சத்தமிட்டு அலறினான்.

அதற்கு இயேசு 'நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப் போ' என்று அதட்டினார். உடனே அந்த அசுத்தஆவி அவனை அலைக்கழித்து மிகுந்த சத்தமிட்டு அவனைவிட்டுப் போய்விட்டது. எல்லாரும் ஆச்சரியப்பட்டு இது என்ன? இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார். அவைகள் இவருக்குக் கீழ்ப் படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோ டொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

அதுமுதல் அவருடைய கீர்த்தி கலிலேயா நாடெங்கும் பிரசித்தமாயிற்று.

266. இயேசுவின் திருப்பணி

மத். 11

இயேசு தம்முடைய பன்னிரெண்டு சீஷர் களுக்கும் கட்டளை கொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டணங்களில் உபதேசிக்கவும் பிரசங்கிக்கவும் அவ்விடம் விட்டுப் போனார்.

அந்தச் சமயத்தில் காவலிலிருந்த யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப் பட்டு, தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து, 'வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?' என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான்.

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக 'நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள். குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார் கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.' லூக்கா 4:16–21 இப் பகுதி இயேசுவின் திருப்பணிபற்றி நன்கு விளக்குகிறது.

267. நடனத்திற்குப் பரிசு

மாற்கு 6

ஏரோது அரசனுக்குப் பிறந்த நாள் வந்தது. அரசவையில் ஒரு பெரிய விருந்து நடந்தது. அதன் முடிவில் ஒரு அழகிய கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் ஏரோதி யாளின் மகள் சலோமி சிறப்பாக ஒரு நடன மாடி, அரசனையும் விருந்தினரையும் மகிழ்வித் தாள். அவளை சபை கைதட்டி ஆரவாரம் செய்து பாராட்டியது. அரசன் அவளுக்கு சிறந்த பரிசளிக்க விரும்பி, 'மகளே! உனக்குப் பரிசாக என்ன வேண்டும்? இராஜ்யத்தில் பாதி கேட்டாலும் தருவேன்' என்று சபையில் அறிவித்து விட்டான்.

சலோமி தன் தாயிடம் ஓடி—'அம்மா நான் அரசனிடம் என்ன பரிசு கேட்க வேண்டும்?' என்றாள். ஏரோதியாளுக்குத் தன்னைக் குற்றம் சாட்டிய யோவான் மேலே அதிகக் கோப மிருந்ததால் 'அவன் தலையைப் பரிசாகக் கேள், மகளே' என்றாள். சலோமி உடனே அரச சபைக்கு வந்து அரசனிடம் தனக்கு யோவானின் தலையை ஒரு தாம்பாளத்தில்

வைத்துத் தருமாறு கேட்டாள். இதைக் கேட்டவுடன் அரசன் மிகவும் துக்கமடைந்தான்.

ஆனாலும் சபையோர் முன் சொன்ன வாக்கைக் காப்பாற்ற வேண்டுமே என்று அரசன் சேவகரை அழைத்து, யோவானின் தலையை வெட்டி ஒரு தட்டில் வைத்து பரிசாக சலோமியிடம் கொடுத்தான். அதைக் கண்ட ஏரோதியாளின் கோபம் நீங்கி மகிழ்ச்சியடைந்தாள். யோவானின் உடல் நண்பர்களால் அடக்கம் செய்யப்பட்டது.

இது நமக்கு துக்கமான ஒரு காரியமாகத் தென்பட்டாலும் கடவுளுடைய சித்தத்தின்படி யோவான்ஸ்நானகன் இரத்த சாட்சியாக மரிக்கவேண்டியிருந்தது போலும்.

ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டபோது யோவான் அக்காரியம் நியாயம் அல்ல என்று ஏரோதிடம் சொன்னதால் ஏற்கெனவே சிறையிலடைக்கப்பட்டிருந்தான். கோபம் கொண்ட ஏரோதியாளும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யோவான்மேல் பழிதீர்த்துக்கொண்டாள்.



நடனத்திற்குப் பரிசு (மா. 6)

268. மலைப்பிரசங்கம்

மத். 5

வேதபாரகர்கள், இயேசுகிறிஸ்துவை ஆலயத்திற்குள் போதிக்க அனுமதிக்கவில்லை. அவர் போதனைகளைக் கேட்கவும் அவர்கள் விரும்பவில்லை. அவர்கட்குத் தாங்கள்தான் கடவுளைப்பற்றி அதிகம் தெரிந்தவர்கள் என்ற பெருமையும் கொண்டிருந்தனர். கடவுளின் கற்பனைகளை மோசேயின் சட்டப்படி கைக்கொள்பவர்கள் என்று இறுமாப்பாயும் இருந்தார்கள்.

ஆனால் இயேசுவோ நாம் எப்படி நினைக்கிறோம், எப்படி பிறரிடம் நடந்துகொள்ளுகிறோம் என்பதுதான் எல்லாக் கற்பனைகளைக் கைக்கொள்வதைக் காட்டிலும் பெரியது என்று போதித்தார். ஆலயத்திற்கு வெளியே திறந்த வெளிகளில் கூடிய மக்களுக்குப் போதனைகள் செய்தார். ஒருநாள் ஒரு மலைச்சரிவில் மக்களுடன் பேசினார். நீங்கள் கடவுளுடைய பிள்ளைகளாய் இருக்க விரும்பினால் கடவுளைப் போல் மாறவேண்டும். கடவுள் எல்லோரிடமும் அன்புள்ளவர். நல்லோர் மேலும் தீயோர் மேலும் சமமாக சூரியனைப் பிரகாசிக்கச் செய்பவர். அதுபோல் பாவியையும் நேசிப்பவர். தீமை செய்பவருக்கு நன்மை செய்யுங்கள் என்று போதித்தார்.

'இன்னா செய்தாருக்கு அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்ற குறட்பாவுக்கு இணங்க தீமையை நன்மையினால் வெல்லுங்கள் என்றார். ஆவியில் எளிமை உள்ளவர், துயரப்படுகிறவர்கள், சாந்தகுணமுடையவர்கள், நீதியின்மேல் பசிதாகம் உள்ளவர்கள், இரக்கம் உள்ளவர்கள், இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள், சமாதானம் பண்ணுகிறவர்கள், நீதியினிமித்தம்

துன்பப்படுகிறவர்கள் இவர்கள் யாவரும் பாக்கியவான்கள் என்றும், உங்கள் நற்கிரியைகளால் உலகத்திற்கு ஒளியாய் இருங்கள் என்றும் போதித்தார்.

பத்துக் கட்டளைகளின்படி நடக்க விரும்பும் யூதரிடம் இயேசு, 'கொலைசெய்யாதிருப்பாயாக என்ற கட்டளைக்கு நீங்கள் எப்படி கீழ்ப்படிகிறீர்கள். உங்கள் உள்ளம் பகை, கோபம் முதலிய கொலைக்குச் சமமான எண்ணங்களால்



மலைப்பிரசங்கம் (மத். 5)

நிறைந்துள்ளதே. கடவுள், உள்ளமும் சுத்தமான எண்ணங்கள் நிறைந்ததாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்' என்றார்.

'பிறரிடம் அன்போடும், பொறுமையோடும் சுத்தமான இருதயத்தோடும் பழகுவதுதான் கடவுளுக்கு மிகவும் உகந்த காரியம் என்று போதித்தார். உனக்குப் பிறர் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாயோ அதையே நீ பிறருக்குச் செய்' என்றும் பிரசங்கம் செய்தார்.

கடவுளின் பார்வையில் ஆசீர்வதிக்கப்பட்டோர் பணக்காரரும் பெருமை உள்ளவர்களும் அல்ல. ஆனால் கடவுளின் முன்னிலையில் தூய உள்ளத்தோடும் மனத்தாழ்மையோடும் இருப்பவர்களே. இயேசு தம்மைப் பின்பற்றி வருவோருக்கு வாழ்வதற்கான சிறப்பான புத்திமதிகளையும் அவரின் வார்த்தைகளைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிப்போருக்கு மிகுந்த பலனையும் வாக்கு அருளியுள்ளார். உப்பும் ஒளியும் உலகத்திற்கு எவ்வளவு அவசியமோ அதுபோல் நாமும் உலகத்திற்கு உபயோகமுள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்றும் போதித்தார்.

269. இயேசு கற்பித்த ஜெபம்

மத். 6

இரவு வெகு நேரம் ஆனாலும் இயேசு ஜெபிக்கத் தவறமாட்டார். அதுபோல் அதிகாலையிலும் சீஷர்கள் இன்னும் உறங்கும்போதே இயேசு ஜெபிக்கப் போய்விடுவார். உணவைக் காட்டிலும் ஜெபத்தைப் பெரிதாகக் கருதினார்.

ஒருநாள் சீஷர்கள் இயேசுவிடம் வந்து நாங்கள் எப்படி ஜெபம் செய்யவேண்டும் என்பதைக் கற்றுத்தரவேண்டும் என்று கேட்டனர். அதற்கு இயேசு பிறர் காணவேண்டுமென்று சத்தமாக, நீண்ட ஜெபம் செய்யக்கூடாது என்று முதலில் சொல்லிவிட்டுப் பின் உள்ளத்திலிருந்து ஜெபிக்கவேண்டும், வெறும் உதட்டினால் ஜெபிக்கக்கூடாது. வீண் வார்த்தைகளை அலப்பக்கூடாது சுருக்கமாக ஜெபிக்கவேண்டும் என்றும் கூறினார்.

நம்முடைய வாயில் சொல் பிறவாததற்கு முன்னே கடவுள் நம் தேவைகள் யாவையும் அறிவார். ஆகவே கடவுள் மட்டும் காணும்படியாக நேர்மையான சுருக்கமாக உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஜெபிக்கவேண்டும் என்று ஒரு மாதிரி ஜெபம் செய்யக் கற்றுக் கொடுத்தார். அது பின்வருமாறு 'பரமண்டலங்களில் இருக்கும் எங்கள் பிதாவே...' பரிசுத்தமான மகாப் பெரிய உன்னதக் கடவுளாயிருந்தாலும் அவர் என் தகப்பன் என்ற இனிய உறவு அங்கு ஏற்படுகிறது. 'உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூமியிலேயும் செய்யப்படுவதாக.'

கடவுளின் ராஜ்யத்தை முன்வைத்து ஜெபிக்கவேண்டும். இதன்பின்பு நம் தேவைகள் வருகின்றன. 'இன்று எங்கள் உணவை எங்களுக்குத் தாரும்.' உணவு என்பது சரீர ஆத்மீக நன்மைகள் ஆகும். எங்களுக்கு என்றால் உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் உணவு மற்றும் எல்லா நன்மைகள் கொடுக்கப்படவேண்டும் என்று பொருள்படும்.

'எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிப்பதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்.' அதாவது பிறர் குற்றங்களை மன்னித்து அவர்களை நேசிக்க நாம் தயாராய் இருந்தால்தான் கடவுள் நம் குற்றங்களை மன்னிப்பார் என்று

அர்த்தமாகும். 'எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையிலிருந்து விலக்கிக் காத்தருளும். இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றும் உம்முடையவைகளே. ஆமென்.'

கடவுள் நம் ஜெபத்தைக் கேட்பார் என்று நம்பி விசுவாசித்து ஜெபித்தால் நாம் பலன் அடைவோம். இன்று உலகிலுள்ள அனைத்து மக்களாலும் ஏறெடுக்கப்படும் ஒரே ஜெபம் இதுதான். இதை நாம் உணர்ந்து ஜெபித்தால் உலகின் அனைவரின் தேவைகளும் இதில் அடங்கி இருக்கிறது என்பதை உணரமுடியும். உலகிலுள்ள தேவைகள் அனைத்தும் பொதுவானதே. அதுபோல உலகிலுள்ள உணவு, உடை போன்ற எல்லா ஆசீர்வாதங்களும் எல்லாருக்கும் பொதுவானது ஆகும்.

கர்த்தருடைய ஜெபத்தை நாம் உணர்ந்து ஜெபித்து அதன்படி நடந்தோமானால் கடவுளின் இராஜ்யத்தை சீக்கிரமே நாம் பூமியில் ஸ்தாபிக்க முடியும் என்பதற்கு சிறிதேனும் சந்தேகமில்லை.


270. பரிசேயனும் ஆயக்காரனும்

லூ. 18

தங்களை நீதிமான்கள் என்று சொல்லிக் கொண்டு, மற்றவர்களைக் கேவலமாக எண்ணின சிலரைப் பார்த்து இயேசு சொன்ன உவமையானது இதுதான். இரண்டுபேர் ஜெபம் செய்ய ஆலயத்திற்குப் போனார்கள். ஒருவன் பரிசேயன் மற்றவன் வரி வசூலிக்கும் ஆயக்காரன்.

பரிசேயன் பெருமையோடு நின்றுகொண்டு செய்த ஜெபமாவது 'கடவுளே, அநியாயக்காரர், விபச்சாரக்காரர், பெரும் பாவிகள் இவர்களைப்போல நான் இல்லை, ஆயக்காரனாகிய இவனைப்போலும் இல்லை. நான் என்னுடைய வருமானத்தில் பத்தில் ஒரு பாகத்தைக் காணிக்கையாகச் செலுத்துகிறேன்' என்று சொல்லி ஜெபம் செய்தான்.

ஆயக்காரனோ ஆலயத்திற்கு வெளியே நின்றுகொண்டு தன் கண்களை வானத்திற்கு நேராக ஏறெடுக்கவும் துணியாமல், 'கடவுளே, பாவியாகிய என்பேரில் கிருபை உள்ளவராயிரும்' என்று தன் மார்பிலே அடித்துக்கொண்டு ஜெபம் செய்தான். அந்தப் பரிசேயன் அல்ல இந்த ஆயக்காரனே மன்னிக்கப்பட்டு, நீதிமானாகத் தீர்க்கப்பட்டவனாய்த் தன் வீட்டிற்குத் திரும்பிப் போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் தன்னைத்தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படுவான் என்று சொன்னார்.



பரிசேயனும் ஆயக்காரனும் (லூ. 18)

271. இரவில் வந்த விருந்தாளி

லூ. 11

ஒரு ஊரில் ஒரு மனிதன் தன் நண்பனைக் காணச் சென்றான். அவன் சென்ற வேளையோ இருட்டாக இருந்தது. நண்பன் வீட்டில் யாவரும் உணவு அருந்திவிட்டுத் தூங்கி விட்டனர். நடு இரவு வேளையாயிற்று. தன் நண்பனின் வீட்டுக் கதவைத் தட்டி நண்பனை அந்த மனிதன் அழைக்கிறான். கதவைத் திறந்தபோது தன் நண்பன் எனக் கண்டதும் சந்தோஷப்படுகிறான். வெகுதூரத்திலிருந்து பிரயாணம் செய்து களைத்து வந்திருக்கும் நண்பனுக்கு உணவுகொடுக்க எண்ணி, சமையலறையில் ஆகாரம் தேடுகிறான். அங்கு ஒன்றும் இல்லை. எனவே பக்கத்து வீட்டில் வசிக்கும்



இரவில் வந்த விருந்தாளி (லூ. 11)

மற்றொரு நண்பனுடைய வீட்டுக் கதவைத் தட்டி தன் சிநேகிதனுக்கு ஏதாகிலும் சாப்பிடக் கிடைக்குமா என்று கேட்டான். நித்திரை கலைந்த அயலான் இரவில் யாவரும் படுத்துவிட்டோம், வீடும் பூட்டியாகிவிட்டது என்று குரல் மட்டும் கொடுத்தான். ஆனால் வெளியே நின்றவன் விடாமல் கதவைத் தட்டிக் கொண்டே இருந்தான். எரிச்சல் அடைந்த அயலான் கொஞ்சம் ரொட்டியை எடுத்துக் கொடுத்துவிட்டு, தொல்லை நீங்கிற்று என்று வந்து மறுபடியும் படுத்துக்கொண்டான்.

ரொட்டித் துண்டைப் பெற்றுக்கொண்டு சந்தோஷத்துடன் நன்றி தெரிவித்துவிட்டு தன் வீட்டில் வந்த நண்பனுக்கு அதைக்கொடுத்து உபசரித்தான்.

எப்படி இந்த ரொட்டிக்காக அந்த மனிதன் தன் அயலானின் கதவை விடாமல் தட்டினானோ அப்படியே விடாமல் கடவுளிடம் ஜெபம் செய்ய வேண்டும் என்று இயேசு இந்த உவமையின் மூலம் கற்பித்தார்.

இதைத்தான் 'கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று லூ. 11:9-ல் கூறுகிறார்.

272. சோர்ந்து போகாமல் ஜெபம் செய்தல்

லூ. 18

இயேசு சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும் என்பதைக் குறித்து மக்களுக்கு ஒரு கதை சொன்னார். ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான். அவன் கடவுளுக்குப் பயப்படாதவனும், மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அந்தப் பட்டணத்தில் ஒரு விதவையும் இருந்தாள். அவள் அந்த நியாயாதிபதியினிடத்தில் போய் எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயம் செய்யவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள்.

நியாயாதிபதி, வெகுநாள் வரைக்கும் அந்த விதவையின் வேண்டுகோளைக் கேட்காமலும் உதவிசெய்ய மனம் இல்லாதவனுமாயிருந்தான். தான் எப்படிப்பட்டவன் என்று அறிந்திருந்தும் இந்த விதவை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறாளே, தான் கடவுளுக்குப் பயப்படாதவனும், மனுஷரை மதியாமலும் இருந்தும் இவள் அடிக்கடி வந்து தன்னை தொந்தரவு செய்யாதபடி இவளுக்கு நியாயம் செய்ய வேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான் என்று இயேசு கூறினார்,

பின்பு இயேசு அவர்களைப் பார்த்து, அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப் பாருங்கள். அந்தப்படியே கடவுள் தம்மை நோக்கி இரவும், பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இயேசு கூறினார்.

273. வீடு கட்டுதல்

மத். 7

ஒரு சமயம் இரண்டு மனிதர்கள் தங்கள் குடும்பம் வசிப்பதற்காக வீடுகட்ட நினைத்தனர். ஒருவன் கடினமான கற்பாறையான இடத்தைத் தெரிந்தெடுத்து அதின்மேல் அஸ்திபாரம் அமைத்து வீடு கட்டினான். மற்றவனோ அழகான மணற்பாங்கான இடத்தை தெரிந்து எடுத்து வீடு கட்டினான்.

வெயில் காலம்போய் மழைகாலம் வந்தது. காற்றும் மழையும் சொரிந்தது. கன்மலைமேல் கட்டிய வீடு அப்படியே நின்றது. ஆனால் மணற்பாங்கான இடத்தில் கட்டிய வீடோ, அஸ்திபாரம் மணல்மேல் அமைந்திருந்ததால் காற்று, மழை பட்டதும் வீடு சரிந்து அமிழ்ந்து தண்ணீரில் போய்விட்டது.

இந்தக் கதையை இயேசு சீஷர்களுக்குச் சொல்லிவிட்டு 'கன்மலையின்மேல் வீட்டைக் கட்டியவனைப்போல் புத்தியுள்ளவர்களாயிருங்கள். என்னுடைய போதனைகளைக் கேட்டு அதின்படி செய்து தன் வாழ்வை அமைத்துக் கொள்பவன்தான் புத்திசாலி என்றார். மேலும் என் புத்திமதிகளைக் கேட்டும் அவற்றைக் கைக்கொள்ளாமல் வாழ்பவர்கள் மணலின்மேல் வீடு கட்டியவன்போல் மதியீனர்கள்' என்றார்.

கடவுளுடைய கற்பனைகளே நம் வாழ்வின் அடிப்படையாகும். நம் ஒவ்வொருவரும் அவற்றைக் கடைபிடிக்கவேண்டியது நம்மேல் விழுந்த கடமையாகும்.

274. பாவங்களை மன்னிப்பது யார்?

மாற். 2

நாடெங்கிலும் இயேசுவைப்பற்றிப் பேசலாயினர். அவர் செய்த அற்புதங்களும் குணமாக்குதலும் எங்கும் பிரசித்தப்படுத்தப் பட்டன.


சில நாட்களுக்குப் பின்பு அவர் மறுபடியும் கப்பர்நகூமுக்குப் போனார். அவர் வீட்டிலிருக்கிறாரென்று ஜனங்கள் கேள்விப்பட்டு உடனே வாசலுக்கு முன்னும் நிற்க இடம் போதாதபடிக்கு அநேகர் கூடிவந்தார்கள். அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார். அப்போது நான்கு பேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தார்கள்.

மக்கள் கூட்டத்தினிமித்தம் அவருக்குச் சமீபமாகச் சேரக்கூடாமல், அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கி, திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை இறக்கினார்கள்.

இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி 'மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது' என்றார். அங்கே உட்கார்ந்திருந்த வேதபாரகரில் சிலர் இவன் இப்படித் தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? கடவுள் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்? என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இப்படி தங்களுக்குள்ளே சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து, அவர்களை நோக்கி, 'நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படி சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்லுவதோ எது எளிது?'

'பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்' என்று சொல்லி, திமிர்



திமிர்வாதக்காரனை இயேசு குணப்படுத்துதல் (மா. 2)

வாதக்காரனை நோக்கி 'நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன்' என்ருர். உடனே அவன் எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனுன். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு 'நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று' சொல்லி கடவுளை மகிமைப்படுத்தினுர்கள். ஆனுல் வேதபாரகரோ 'பாவங்களை மன்னிக்க இவன் யார்?' என்று இயேசுவின்மேல் கோபம்கொண்டார்கள்.

உடனே பரிசேயர் புறப்பட்டுப்போய், இயேசுவை கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடே ஆலோசனை பண்ணினுர்கள். இயேசு தம்முடைய சீஷர்களோடே அவ்விடம் விட்டு கடலோரத்திற்குப் போனுர். அநேகர் அவருக்குப்பின் சென்ருர்கள். அவர் அநேக வியாதியஸ்தரைக் குணப்படுத்தினுர்.

275. ஓய்வு நாள்

மா. 3

யூத மதத்தலைவர்களின் போதனைகளைவிட இயேசுவின் போதனைகள் வித்தியாசமாக இருந்தன. யூத மதத்தலைவர்களான பரிசேயர் என்னும் கூட்டத்தார்கள் தங்களை மிகவும் பரிசுத்தர்கள், கடவுள் மோசேயின்மூலம் கொடுத்த கற்பனைகளை அப்படியே கைக்கொள்பவர்கள் என்றும், மேலும் பல கட்டுப்பாடான சட்டதிட்டங்களையும் சடங்காசசாரங்களையும் சேர்த்துக்கொண்டு, அதன்படி வாழ்பவர்கள் என்றும் தற்பெருமை கொண்டவர்களாயிருந்தனர். மோசேயின்மூலம் கடவுள் கொடுத்த கட்டளையான ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக என்பதனை சாதாரண வேலைகளைக்கூட ஓய்வுநாளில் செய்யக்கூடாது என்ற அளவுக்கு கைக்கொண்டு வந்தனர்.

ஒரு ஓய்வுநாளில் சீஷர்களோடு இயேசு வயல் வழியே பயிர்களின் ஊடே நடந்தபோது சீஷர்கள் பயிர்களைக் கொய்து தின்ருர்கள். அதைப் பார்த்த பரிசேயர் 'ஓய்வுநாளில் செய்யக்கூடாத காரியத்தை இயேசுவின் சீஷர்கள் செய்கிருர்களே' என்று அவர்பேரில் குற்றம் சாட்டினுர்கள். அதற்கு இயேசு, 'தாவீதிற்கு உண்டான ஆபத்துக் காலத்தில் தானும் தன்னேடு இருந்தவர்களும் பசியாயிருந்தபோது ஒரு ஆலயத்திற்குள் போய் ஆசாரியர் தவிர வேறு யாரும் உண்ணக்கூடாத தேவ சமூகத்து அப்பங்களை எடுத்து உண்ணவில்லையா? ஆகவே மனிதன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வு நாள்தான் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது, மனித குமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிருர்' என்ருர்.

மறுபடியும் அவர் ஜெப ஆலயத்தில் பிரவேசித்தார். அங்கே சூம்பின கையையுடைய ஒரு மனுஷன் இருந்தான். அவர் ஓய்வுநாளில் அவனைச் சொஸ்தமாக்கினுல் அவர்பேரில் குற்றஞ்சாட்டலாமென்று அவர் மேல் நோக்கமாயிருந்தார்கள். அப்பொழுது அவர் சூம்பின கையையுடைய மனுஷனை நோக்கி, 'எழுந்து நடுவே நில்' என்று சொல்லி, பரிசேயர்களைப் பார்த்து 'ஓய்வு நாட்களில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ, ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம்' என்ருர். அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, அந்த மனுஷனை நோக்கி 'உன் கையை நீட்டு' என்ருர். அவன் நீட்டினுன். அவன் கை மறுகையைப்போல குணமாயிற்று. இதைக் கண்ட பரிசேயர் அவரைக் கொலை செய்யத் தீர்மானம் செய்தனர்.

276. இயேசுவின் விடுதலையாக்கும் பணி

லூ. 13

ஒருநாள் இயேசு ஜெப ஆலயத்தில் போதகம் பண்ணிக்கொண்டிருந்தார். அப்பொழுது பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட ஒரு பெண் அங்கே இருந்தாள். அவள் சிறிதும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள். இயேசு தம்மிடத்தில் அவளை அழைத்து பெண்ணே, 'உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்' என்று சொல்லி, அவள்மேல் தம்முடைய கைகளை வைத்தார். உடனே அப்பெண் நிமிர்ந்து கடவுளை துதித்து ஸ்தோத்தரித்து மகிமைப்படுத்தினுள்.

இயேசு ஓய்வு நாளிலே சொஸ்தமாக்கினபடியால் ஜெப ஆலயத்தலைவன் கோபமடைந்து, 'மக்களை நோக்கி வேலை செய்கிறதற்கு ஆறு நாட்கள் உண்டே, அந்த நாட்களிலே நீங்கள் வந்து சுகமாக்கிக்கொள்ளுங்கள். ஓய்வு நாளிலே அப்படிச் செய்யலாகாது' என்றான்.

கடவுள் அவனுக்கு மறுமொழியாக 'மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வு நாளில் தன் எருதையாவது, தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டு போய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா? இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வு நாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா' என்றார்.

இயேசு அப்படிச் சொன்னபோது அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள். மக்கள் அனைவரும் அவரால் செய்யப்பட்ட சகல மகிமையான செய்கைகளைக் குறித்தும் சந்தோஷப்பட்டார்கள்.

சாதாரண மக்களுக்கு ஒரு அற்ப கூனிப் பெண்ணாக காணப்படுபவள், இயேசுவின் பார்வையில் ஆபிரகாமின் குமாரத்தியாகக் காணப்படுகிறாள். கடவுளின் பார்வையில் நாம் யாவரும் சமம் என்பது உண்மையல்லவா?



இயேசுவின் விடுதலையாக்கும் பணி (லூ. 13)

277. இவன் பைத்தியக்காரன்

மாற். 3

இயேசு சாதாரண மக்களுடே திரிந்து அலைந்து அநேகரை வியாதியிலிருந்து குணமாக்கி, சாத்தானின் பிடியிலிருந்து அசுத்தாவிகளின் பிடியிலிருந்த மக்களை மீட்டு, அவர்களை நேசித்து, கடவுள் உங்களை நேசிக்கிறார் என்றும் எடுத்துச் சொன்னார். கடவுளைப்பற்றி அவர் மக்களுக்குப் போதித்தார். தன் செய்கைகளின்மூலம் தன்னிடம் கடவுளின் வல்லமை இருக்கிறது என்பதை நிருபித்துக் காட்டினார்.

அவர் உணவருந்தக்கூட நேரமில்லாதபடி மக்கள் கூட்டம் அவரைச் சூழ்ந்திருந்தனர். சீஷர்களும் இயேசுவுடனே கூட ஊழியத்தில் அதிகம் பங்கு பெற்று ஓயாது உழைத்தனர். எருசலேமிருந்த யூத மதத் தலைவர்கள் 'இவன் பெயல் செபூல் என்ற பிசாசுக்களின் தலைவனின் பெலனைக்கொண்டு, அற்புதங்களைச் செய்கிறான்' என்று குற்றம் சாட்டினார்கள்.

ஆனால், இயேசுவோ 'சாத்தானின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்கவே வந்த என்னை சாத்தானின் கையாள் என்று கூறுகிறீர்களே! சாத்தான், சாத்தானை எதிர்ப்பானா? அற்புதங்கள் கடவுளின் வல்லமையால் நடைபெறும்போது பிசாசின் பலத்தால் செய்யப்படுகிறது என்று சொல்வீர்களானால் நீங்கள் பரிசுத்தாவிக்கு எதிரான பாவம் செய்கிறீர்கள். இது ஒருபோதும் உங்களுக்கு மன்னிக்கப்படமாட்டாது. நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவீர்கள்' என்று கூறினார்.

இரவு பகல் என்றும் பாராமல் ஓயாமல் மக்களிடையே ஊழியம் செய்தும் அற்புதங்கள் பல செய்தும் வாழ்ந்த இயேசுவை, அவர் சுற்றத்தாரே இவன் பைத்தியக்காரன் மதி மயங்கியிருக்கிறான் என்று பொய்க்குற்றம் சாட்டினார்கள்.

278. கடவுளின் இராஜ்யம்

லூ. 8

விதை விதைக்கிறவன் உவமை

பற்பல இடங்களிலிருந்து திரளான மக்கள் இயேசுவினிடம் வந்தனர். அப்போது அவர் உவமைகள் மூலமாய் மக்களிடம் பின்வருமாறு பேசினார்:

வயலில் விதைக்கிறவன் ஒருவன் விதைக்கச் சென்றான். அவன் வயலில் விதைகளை விதைத்த போது, சில விதைகள் பாதையில் விழுந்து மிதிபட்டன. பறவைகள் வந்து அவற்றைக் கொத்தி தின்றுவிட்டன. சில விதைகள் கற் பாறையான நிலத்தில் விழுந்தன. அவை முளைத்தபின் அங்கே ஈரமில்லாத காரணத் தால் உலர்ந்துபோயிற்று, சில விதைகள் முட் செடிகளின் நடுவே விழுந்தன. முட்செடி களும் கூடவே வளர்ந்து, அவற்றை நெருக்கி விட்டன. சில விதைகள் நல்ல நிலத்திலும் விழுந்தன. அவைகளே நூறு மடங்காகப் பலன் தந்தன என்று சொல்லி முடித்தார்.

உடனே இந்த உவமையின் கருத்து என்ன வென்று அவருடைய சீடர்கள் அவரிடம் கேட் டார்கள். அதற்கு இயேசு உவமையின் கருத்தை விளக்கமாகக் கூறினார். விதை என்பது கடவுளின் வசனம், பாதையில் விழுந்த வசனமானது கேட்டவர்கள். விசுவா சித்துப் பின் இரட்சிக்கப்படாதபடி, பிசாசான வன் வந்து அந்த வசனத்தை தங்கள் இருதயத்தி லிருந்து எடுத்துவிடுகிறான் என்றும், கற் பாறையான நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் கடவுளின் வசனத்தை அல்லது வார்த்தை களைக் கேட்கும்போதெல்லாம் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஆனாலும் அவர் களுக்கு அந்த வசனங்களின்படி நடக்க, நிலைத்திருக்க முடியாமல், சிறிது காலம் மாத்திரம் விசுவாசித்து சோதனைக்காலத்தில் பின்வாங்கிப் போகிறார்கள்என்றும், முட்செடி களின் நடுவே விதைக்கப்பட்டவர்கள் வசனத் தைக் கேட்டும் கவலை, செல்வம், உலக இன்பம் ஆகியவற்றால் நெருக்கப்படும்போது கனிகொடுக்க முடியாமல் போகிறார்கள்.

நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்களோ வசனத்தைக் கேட்டு தங்களுடைய நல்ல இருதயத்தில் வைத்து சிந்தித்துச் செயல்பட்டு, பொறுமையோடு கனி கொடுக்கிறார்கள் என்று பலதிறப்பட்ட இருதயமுள்ள மக்களைக் குறித்து இந்த உவமையைச் சொன்னார். கடவுளின் ராஜ்யம் இப்படிப்பட்ட மக்களிடம் வரும் என்றார்.

279. கடவுளின் இராஜ்யம்

மத். 13

புளித்த மாவு

இயேசு சாமர்த்தியமான வேதபாரகரிடத் தில் பேசும்போது தைரியமாகவும் விவாதித் தும் பேசுவார். ஆனால் எளிய சாதாரண மக்கள் கூட்டத்தில் பேசும்போது கதைகள் மூலம் கடவுளைப் பற்றியும் அவர் ராஜ்யம் குறித்தும் போதிப்பார்.

ஒரு ஊரில் ஒரு தாயார் இருந்தார்கள். அவர்கள் தன் குடும்பத்திற்காக ரொட்டி செய்ய ஆரம்பித்தார்கள், முதலில் ஒரு பாத்திரத்தில் மாவை எடுத்து அதோடு கொஞ்சம் புளித்த மாவைச் சேர்த்துப் பிசைந்து மூடிவைத்து விட்டார்கள். கொஞ்ச நேரம் கழித்து அதைத் திறந்தபோது அந்த மாவு புளித்து பொங்கி, இரண்டு பங்கு அளவாகப் பெருகியிருந்தது.

இந்தச் சிறிய கதை கடவுளின் பெரிய ராஜ்யத்தை விளக்குகிறது. புளித்தமாவு மீதி மாவு அனைத்தையும் பொங்கச் செய்வதுபோல் கடவுளின் சத்தியங்கள் மக்களின் வாழ்வை மாற்றி கடவுளின் ராஜ்யத்தை இப்படியாக வளரச் செய்கிறது.

கடவுளின் வல்லமை வேலை செய்வது நம் கண்களுக்குத் தெரிவதில்லை. இந்தப் புளித்த மாவைப்போல் நாம் வேலை செய்ய கடவுள் நமக்குப் போதிக்கிறார். கடவுளின் இராஜ் யத்தை இந்தப் புளித்தமாவிற்கு ஒப்பிடுகிறார் இயேசு.

280. கடுகு விதை, புதையல்

மத். 13

கடவுளுடைய ராஜ்யத்தைப்பற்றி அநேக உவமைகள்மூலம் இயேசு மக்களுக்கு விளக்கினார். கடவுளுடைய ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைக்கிற மனிதனுக்கு ஒப்பாயிருக்கிறது. விதைக்கிறவன் மனுஷ குமாரன். நிலம் உலகம். நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்கள். களைகள் பொல்லாத புத்திரர். களைகளை விதைக்கிறவன் பிசாசு. அறுப்பு உலகத்தின் முடிவு. களைகள் நெருப்பிலே சுட்டெரிக்கப்படும். நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்தை சுதந்தரிப்பார்கள் என்றும் விளக்கமாக மக்களுக்கும், சீஷர்களுக்கும் போதித்தார்.

பரலோக இராஜ்யம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது. பரலோக இராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற புதையலுக்கு ஒப்பாயிருக்கிறது என்றும் விளக்கிக் கூறினார். ஒரு மனிதன் நிலத்தைத் தோண்டும் வேலை செய்து வந்தான். திடீரென்று ஒருநாள் அவன் மண்வெட்டியினால் வெட்டும்போது கடினமான ஒரு உலோகப் பொருளான பானையுடன் மோதியது. குனிந்து பார்த்தபோது அது ஒரு புதைக்கப்பட்ட பொக்கிஷம் என அறிந்தான். பொன்னும், வெள்ளியும் அந்தப் பானையில் நிறைந்திருந்தன.

அப்படியே அதை மண்ணினால் மூடினான். இந்த நிலத்தை தனக்குச் சொந்தமாக வாங்கிவிட்டால், இந்தப் புதையல் தனக்கே சொந்தமாகுமே என்று எண்ணினான். உடனே தனக்கு உண்டான எல்லா சொத்தையும் விற்று இந்த வயலை கிரயத்திற்கு வாங்கினான். நிலமும், புதையலும் அவனுக்கே சொந்தமானது.

பரலோக இராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற ஒரு வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. பலவித முத்துக்களைச் சேகரிக்கும் ஒரு வியாபாரி விலையுயர்ந்த ஒப்பற்ற ஒரு முத்தைக் கண்டால், தன்னிடமுள்ள எல்லாவித முத்துக்களையும் விற்று அந்த ஒப்பற்ற நல்ல முத்தை வாங்குவான் அல்லவா? என்று இயேசு பல கதைகளைச் சொல்லி விளக்கவே,

இதைக் கேட்ட மக்கள் பரலோக ராஜ்யம் எவ்வளவு மகத்துவமுள்ளது, கிடைக்கக் கூடாத ஒன்று என்று உணர்ந்தார்கள். இயேசுவையும் அவர் வார்த்தைகளையும் ஏற்றுக்கொண்டு பரலோக ராஜ்யத்தின் பிரஜைகளாயிருப்பதை மக்கள் புரிந்து கொண்டனர்.

281. பெரிய விருந்து

லூ. 14

ஒரு நாள் இயேசு பரிசேயனுடைய தலைவன் ஒருவன் வீட்டில் விருந்துண்ண வந்தார். விருந்துண்ணும் வேளையிலே விருந்தாளிகளில் ஒருவன் 'கடவுளுடைய இராஜ்யத்தில் விருந்துண்பவன் பாக்கியவான்' என்றான். அதற்கு இயேசு, கீழ்க்கண்ட உவமையைச் சொன்னார்:

ஒரு மனிதன் ஒரு பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி, அநேகரை அழைத்திருந்தான். விருந்து நேரம் வந்ததும் அவன் தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு, அழைக்கப்பட்டவர்களிடம் அனுப்பி, 'வாருங்கள் விருந்து ஆயத்தமாயிருக்கிறது என்று சொல்' என்றான். விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் எல்லோருமே சாக்குப் போக்குச் சொல்லத் தொடங்கினார்கள். ஒருவன் 'நான் வயலை விலைக்கு வாங்கினேன், அதைப் போய்ப் பார்க்கவேண்டும். ஆகையால் என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்' என்றான்.

மற்றொருவன் 'நான் இப்பொழுதுதான் திருமணம் செய்திருக்கிறேன், என்னால் வர இயலாது' என்றான். வேறொருவன் 'நான் ஐந்தேர் மாடுகளை வாங்கியிருக்கிறேன், அவற்றை சோதித்துப் பார்க்கப்போகிறேன்; ஆகவே என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்' என்றான். இவைகளைக் கேட்ட வேலைக்காரன் திரும்பிவந்து தன் எஜமானிடம் அறிவித்தான். அதைக்கேட்ட அந்த மனிதன் கோபமடைந்தான். மறுபடியுமாக அந்த வேலைக்காரனிடம் 'நீ பட்டணத்தின் தெருக்களிலும், சந்துகளிலும் விரைவாகப் போய் ஏழைகளையும், ஊனரையும், குருடர்களையும், சப்பாணிகளையும் இங்கே

அழைத்து வா' என்று உத்தரவு இட்டான். அவன் அப்படியே போய் இவர்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு வந்தபின் தன் எஜமானிடம் 'நீர் கட்டளையிட்டபடியே செய்தாயிற்று, ஆனாலும் இன்னும் விருந்து உண்ணும் இடத்தில் இடமிருக்கிறது' என்றான்.

அப்பொழுது விருந்தளிக்கும் மனிதன் வேலையாளை 'நீ நெடுஞ்சாலைகளிலும், நடைபாதைகளிலும் போய் அங்கு இருக்கிற மக்களையும் விருந்துண்ண நான் அழைக்கிறேன் என்று வருந்தி அழைத்து வா. என் வீடு நிறைய ஆட்கள் வேண்டும். ஏற்கெனவே அழைக்கப்பட்ட அந்த மனிதர்களில் ஒருவனும் என் விருந்தை ருசி பார்ப்பதில்லை' என்று கூறினான்.

பக்திமான்கள் என்றழைக்கப்பட்ட யூதர்களுக்குப் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கும் வாய்ப்பு இல்லை என்றும், யூதர்கள் புறஜாதி மக்களைப் பாவிகளாக எண்ணினாலும், பரலோகத்தைப் புறஜாதியான மக்களே நிரப்புவார்கள் என்பதே இக் கதையின் கருத்து.

தங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தும் யாவரும் பரலோக அரசுக்குள் செல்ல உரிமை உள்ளவரே. இதுவே இயேசுவின் நற்செய்தி. அவரை மீட்பராக ஏற்றுக்கொண்ட இதயங்களை ஆட்சிசெய்யவே இயேசு விரும்புகிறார்.

282. இயேசு நல்ல சிநேகிதர்

மா. 4

புயலில் படகு

ஒரு நாள் இயேசு களைப்பாக இருந்தார். ஏரிக்கரையில் காத்திருந்த மக்களுக்குப் போதிக்கவும், நோயாளிகளைக் குணமாக்கவுமாக நாள் முழுவதும் உழைத்தபின் ஓய்வுக்காக அக்கரை செல்ல விரும்பினார்.

சீடர்கள் மக்களை அனுப்பிவிட்டு படகில் ஏறிச் சென்றார்கள். இயேசு களைப்பினால் படகில் தூங்கிவிட்டார். அப்போது பலத்தக்காற்று சுழல்போல் உண்டாகி படகு அலைக்கழிக்கப்பட்டது. படகு மூழ்கிவிடுமோ என்று பயந்து சீடர்கள் இயேசுவை எழுப்பினார்கள். 'நாங்கள் சாகத்தான் போகிறோம், உமக்குக் கவலையில்லையா, தூங்குகிறீரே' என்றனர்.

அவர் உடனே எழுந்து காற்றையும் அதட்டி, கடலைப் பார்த்து 'இரையாதே, அமைதலாயிரு' என்றார். அப்போது காற்று நின்றுபோயிற்று. கடலில் மிகுந்த அமைதலும் உண்டாயிற்று. இயேசு சீடர்களைப் பார்த்து 'ஏன் பயப்பட்டீர்கள்? ஏன் என்னை விசுவாசிக்கவில்லை?' என்றார். அவர்கள் மிகவும் பயந்து இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று பேசிக்கொண்டார்கள்.

நம் தேவையை அறிந்து உதவிசெய்யும் நண்பரல்லவா நம் இயேசு?

283. பேய்பிடித்த மனிதன்

மா. 5

இயேசுவும் அவருடைய சீடர்களும் கதரேனருடைய நாட்டிற்கு வந்தார்கள். அவர்கள் படகிலிருந்து இறங்கினவுடனே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக் கல்லறைகளிலிருந்து இயேசுவுக்கு எதிராக வந்தான். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது. அவனை சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்தும் போடுவான். அவனை அடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது.

அவன் எப்பொழுதும் இரவும் பகலும் மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். அவன் இயேசுவை தூரத்திலே கண்டபோது, ஓடிவந்து அவரைப் பணிந்துகொண்டான். இயேசுவே, உன்னதமான கடவுளுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்குக் கடவுள்பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.

ஏனெனில் அவர் அவனை நோக்கி, 'அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டுப் புறப்

பட்டுப்போ' என்று சொல்லி இருந்தார். அப்
பொழுது அவர் அவனை நோக்கி, 'உன் பேர்
என்ன'வென்று கேட்டார். அதற்கு அவன்
'நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர்
லேகியோன் என்று சொல்லி தங்களை அந்தத்
திசையிலிருந்து துரத்திவிடாதபடிக்கு, அவரை
மிகவும் வேண்டிக்கொண்டான். அப்பொழுது
அவ்விடத்தில் மலையருகே அநேகம் பன்றிகள்
கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தது. அந்தப்
பிசாசுகளெல்லாம் அவரை நோக்கி பன்றி
களுக்குள்ளே போகும்படி, அவைகளுக்
குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை
வேண்டிக்கொண்டன.

இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்த
வுடனே, அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றி
களுக்குள் போயின. உடனே ஏறக்குறைய
இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம்
உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி, கடலிலே
பாய்ந்து, கடலில் அமிழ்ந்து மாண்டது.
பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி இதைப் பட்ட
ணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்
கள். அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும்
படி மக்கள் புறப்பட்டு இயேசுவினிடத்தில்
வந்து, லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்த
வன் வஸ்திரம் தரித்து, உட்கார்ந்து, புத்தி
தெளிந்திருக்கிறதைக்கண்டு பயந்தார்கள்.

பிசாசுகள் பிடித்திருந்தவனுக்கும் பன்றி
களுக்கும் சம்பவித்ததைக் கண்டவர்களும்
அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள்.
அப்பொழுது மக்கள் பயந்து அவரை எல்லைகளை
விட்டுப் போகும்படி வேண்டிக்கொள்ளத்
தொடங்கினார்கள். அப்படியே அவர் படகில்
ஏறுகிறபொழுது, பிசாசு பிடித்திருந்தவன்
அவரோடேகூட இருக்கும்படி தனக்கு உத்
தரவு கொடுக்க அவரை வேண்டிக்கொண்
டான்.

இயேசு அவனுக்கு உத்தரவு கொடாமல்,
'நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்
போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச்
செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி'
என்று சொன்னார். அந்தப்படியே அவன்
போய், இயேசு தனக்குச் செய்தவைகளை
யெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில்
பிரசித்தம் பண்ணத் தொடங்கினான். எல்லா
ரும் ஆச்சரியப்பட்டார்கள்.

பேய்பிடித்த மனிதனுக்கும் உதவி செய்தார்
நண்பர் இயேசு.

284. விசுவாசமுள்ள பெண்

லூா. 8; மா. 5

யவீரு என்பவன் ஒரு ஜெப ஆலயத் தலை
வன். அவனுக்குப் பன்னிரெண்டு வயதுள்ள
ஒரு மகள் இருந்தாள். அவள் நோயுற்று
சாகும் நிலையில் இருக்கையில் யவீரு இயேசு
வைத் தேடிப்போய் அவர் காலடியில் விழுந்து
தன் வீட்டுக்கு வந்து தன் மகளைக் குணமாக்கும்
படி அவரை வேண்டிக்கொண்டான். இயேசு
அவனோடு புறப்பட்டுப் போனார். சீடர்களும்
அவருடன் போனார்கள். அப்படிப் போகை
யில் திரளான மக்கள் இயேசுவை நெருக்கிக்
கொண்டுபோனார்கள்.

அப்பொழுது பன்னிரெண்டு வருஷமாய்
பெரும்பாடுள்ளவளாயிருந்து தன் ஆஸ்திகளை
யெல்லாம் வைத்தியர்களுக்கு செலவழித்தும்
ஒருவனாலும் குணமாக்கப்படாதிருந்த ஒரு
பெண் இயேசுவுக்குப் பின்னாக வந்து, அவ
ருடைய உடையின் ஓரத்தைத் தொட்டாள்.
உடனே அவளுடைய பெரும்பாடு நின்று
போயிற்று.

அப்போது இயேசு என்னைத் தொட்டது
யார்? என்று கேட்டார். எங்களுக்குத் தெரி
யாது என்று எல்லோரும் சொன்னபோது,



விசுவாசமுள்ள பெண் (லூா. 8; மா. 5)

பேதுருவும் அவருடனேகூட இருந்தவர்களும் 'ஐயரே, திரளான மக்கள் உம்மை சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே, என்னைத் தொட்டது யார் என்று எப்படி கேட்கிறீர்' என்றார்கள். அதற்கு இயேசு 'என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன், ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு' என்றார். அப்பொழுது அந்தப் பெண், தான் மறைந்திருக்கவில்லை என்று கண்டு நடுங்கி வந்து அவர் முன்பாக விழுந்தாள். அவரைத் தொட்ட காரணத்தையும் உடனே தான் சுகமானதையும் எல்லா மக்களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள். அவர் அவளைப் பார்த்து 'மகளே திடன்கொள் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்துடன் போ' என்றார்.

285. யவீரின் மகள் உயிர்பெற்று எழுதல்

மா. 5

இயேசு பெரும்பாடுள்ள பெண்ணுடன் பேசிக்கொண்டிருக்கையில், ஜெப ஆலயத் தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருவன் வந்து அவனை நோக்கி, உம்முடைய குமாரத்தி



யவீரின் மகள் உயிர்பெற்று எழுதல் (மா. 8)

மரித்துப்போனாள், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்றான்.

அதற்கு இயேசு, ஜெப ஆலயத்தலைவனை 'நீ பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு. அப்பொழுது உன் மகள் இரட்சிக்கப்படுவாள்' என்றார். இயேசு, தலைவன் வீட்டிற்குள் வந்த போது பேதுரு, யாக்கோபு, யோவான் மூவரையும், பெண்ணின் தகப்பன், தாயையும் தவிர வேறொருவரையும் உள்ளே வரவிடாமல், எல்லோரும் அழுது அவளைக் குறித்துத் துக்கங் கொண்டாடுகிறதைக் கண்டு அழாதேயுங்கள் அவள் மரித்துப் போகவில்லை. நித்திரையாயிருக்கிறாள் என்றார். அவள் மரித்துப் போனாளென்று அவர்கள் அறிந்ததினால் அவரைப் பார்த்து நகைத்தார்கள்.

எல்லாரையும் அவர் வெளியே போகப் பண்ணி, சுகவீனமான சிறு பெண்ணின் கையைப் பிடித்து 'பிள்ளையே எழுந்திரு' என்றார். அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது. உடனே அவள் எழுந்திருந்தாள். அவளுக்கு ஆகாரங்கொடுக்கக் கட்டளையிட்டார். அவள் தாய், தகப்பன்மார் ஆச்சரியப் பட்டார்கள். அப்பொழுது நடந்ததை ஒருவருக்கும் சொல்லாமலிருக்கும்படி அவர்களுக்கு கட்டளையிட்டுச் சென்றார்.

286. அழாதே மகளே!

லூ. 7

இயேசு நாயீன் என்னும் ஓர் ஊருக்குப் போனார். அவருடைய சீஷர்களும் திரளான மக்களும் அவருடன் போனார்கள். அவர் ஊரின் வாசலை நெருங்கின போது, சிலர் இறந்து போன ஒரு வாலிபனை பாடையிலே வெளியே தூக்கிக்கொண்டு வந்தார்கள். அவன் தாய்க்கு ஒரே மகன். அவளோ விதவை. அந்த ஊர்

மக்கள் பெருங்கூட்டமாய் அவளோடு கூட வந்தார்கள்.

இயேசு அவளைப் பார்த்து அவள் மேல் மனதுருகி 'அழாதே மகளே !' என்று சொல்லி, பாடையின் அருகில் வந்து அதைத் தொட்டார். அதை சுமந்து கொண்டு வந்தவர்கள் உடனே நின்றார்கள். இயேசு 'வாலிபனே, எழுந்திரு என்று நான் உனக்குச் சொல்லுகிறேன்' என்றார். மரித்த அந்த வாலிபன் உடனே எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினான். இயேசு அவனை அவன் தாயிடம் ஒப்புவித்தார்.

இதைப் பார்த்த மக்கள் அனைவருக்கும் பயம் உண்டாயிற்று, கடவுள் மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும் நமது மக்களை சந்தித்தார் என்றும் சொல்லி, கடவுளை மகிமைப்படுத்தினார்கள். இந்தச் செய்தி யூதேயா தேச முழுவதிலும் சுற்றியிருக்கிற திசைகள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.

இப்படியாக ஆலயத் தலைவர்களால் உதாசீனம் செய்யப்பட்ட மக்களுக்கு இயேசு நெருங்கிய நண்பரானார்.



நாயீன் விதவை (லூ. 7)

287. இரண்டிரண்டு பேராக அனுப்புதல்

லூ. 9,10

இயேசுவும் அவருடைய சீஷர்களும் மக்களைச் சந்தித்துக் கடவுளின் ஆட்சியைக் குறித்து நற்செய்திகளை எல்லா இடங்களிலும் கூறி வந்தனர். எந்த இடத்திலும் தங்கியிராமல் ஊர் ஊராகச் சென்று போதித்தனர்.

எல்லா மக்களுக்கும் கடவுளுடைய செய்தி எட்டும்படியாகக் கவனமாக இருந்தனர். இயேசு வேறு எழுபது பேரை நியமித்து தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். அவர்களுக்கு பணப்பையையும் சாமான் பையையும் செருப்புகள் இவற்றைக் கொண்டு போக வேண்டாம்; யாரையும் வழியிலே கேட்கவும் வேண்டாம் என்று அறிவுரை கூறி அனுப்பினார்.

ஒரு வீட்டில் சென்று அவர்களை ஏற்றுக்கொண்டால் அவர்களை ஆசீர்வதித்து சமாதானத்தோடே இருங்கள் என்று வாழ்த்துங்கள்.

ஊர்களுக்குச் சென்றால் அவர்கள் கொடுப்பதை உண்டு அங்குள்ள பிணியாளிகளைச் சுகமாக்கி, தேவனுடைய ஆட்சி உங்களுக்கு சமீபமாய் வந்திருக்கிறது என்று சொல்லுங்கள். உங்களை ஏற்றுக்கொள்ளா விட்டால் கவலைப்படாதிருங்கள். அதன் பலனை அவர்கள் அடைந்தே தீருவார்கள் என்று கூறி வழியனுப்பினார். மேலும் அவர்களுக்கு சுகமாக்கும் வரத்தையும், பிசாசின் பிடியிலிருந்து மக்களை மீட்கும் சக்தியையும் தமது வல்லமையினால் கொடுத்தார்.

ஊழியர்கள் எழுபது பேரும் பயத்தோடும் கருத்தோடும் அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு போதகம் செய்ய ஆரம்பித்து ஊர் ஊராகச் சென்றனர். நோயாளிகளைக் குணமாக்கினார்கள், பிசாசுகளை விரட்டினார்கள். கடவுளின் நற்செய்திகளை எங்கும் பிரசித்தப்படுத்தினார்கள். அவர்கள் திரும்பி வந்து நடந்தவற்றை இயேசுவிடம் சொன்னபோது, இயேசு கடவுளுக்கு நன்றி செலுத்தி ஊழியர்களைப் பார்த்து நீங்கள் செய்யும் ஊழியத்தின் வல்லமையினிமித்தம் பெருமை பாராட்டக் கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

288. யார் தலைவன்?

மா. 9

இயேசுவும் அவர் சீஷர்களும் பேசிக் கொண்டே ஒரு ஊர் வழியாகச் சென்றார்கள். அப்போது இயேசு பின்னால் வந்து கொண்டிருக்க முன்னால் சென்ற சீஷர்கள் வாக்கு வாதம் பண்ணிக் கொண்டு சென்றார்கள். எதைப் பற்றி? கடவுளுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு இயேசு அரசனாகி விட்டால் யாருக்கு முக்கிய பதவி? யார் பெரியவன்? என்பதைப் பற்றித்தான்.

இயேசு இவர்கள் நோக்கத்தை அறிந்தார்? உங்களில் யார் தலைவனாக இருக்க விரும்புகிறீர்கள் என்ற கேள்வியைக் கேட்டார். ஆனால் எல்லோருக்கும் தலைவனாக ஆசைதான். அனைவரும் மௌனமாக நின்றனர்.

இயேசுவே பதில் உரைத்தார். அதாவது ஒருவன் தன்னைப் பற்றிக் கருதாமல் தன் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பிறருக்குத் தொண்டு செய்து பிறர் தேவைகளை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறானோ அவனே கடவுளின் ராஜ்யத்தின் தலைவன் என்றார்.

சீஷர்களுக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. தங்களில் ஒருவனை தமக்குப் பிரியமானவனைத் தலைவராகத் தெரிந்தெடுப்பார் என்று காத்திருந்தார்கள். ஆனால் பிறருக்குத் தொண்டு செய்வதே கடவுளுக்குப் பிரியமான காரியம் என்பதை அறிந்து கொண்டனர்.

289. உப்பும் வெளிச்சமும்

மத். 5

இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு மட்டுமல்லாமல் தன்னை விசுவாசித்துக் கீழ்ப்படிய ஆவலோடு காத்திருக்கும் அனைவருக்கும் நற்செய்தியைப் போதித்தார். அங்கு தாய்மார்கள், மீன்பிடிப்பவர்கள், வியாபாரிகள், தொழிலாளர்கள், வரிவசூலிப்பவர், இளைஞர்கள், முதியோர், ஆண்கள், பெண்கள் இப்படிப் பலதரப்பட்ட மக்களிடையே இயேசு பேசினார்.

நீங்கள் என்னைப் பின்பற்றி வருபவர்கள் என்பது உண்மையானால், நீங்கள் இருக்கும் இடங்களிலேயே ஊழியம் செய்யலாம். நீங்கள் உலகத்திற்கு உப்பாயிருக்கிறீர்கள் என்றார். உப்பு உணவுப் பொருட்களைப் பாதுகாக்கும். அதுபோல நீங்கள் இருக்கும் இடமும் சுற்றுப்புறமும் கெடாமல் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. எப்படி? நேர்மை, நியாயம், கடின உழைப்பு மக்களின் தேவை அறிந்து சேவை செய்தல், லஞ்சம் வாங்காமல் பிறருக்குக் கெடுதி செய்யாமல் இருத்தல் இப்படிப்பட்ட காரியங்களை நீங்கள் செய்து ஒரு சாட்சியுள்ள வாழ்க்கை நடத்தினால் நீங்கள் வசிக்கும் சமுதாயம் கெட்டுப் போய் விடாதபடி உப்பைப்போல் நீங்கள் சமுதாயத்தைப் பாதுகாப்பவர்களாயிருப்பீர்கள்.

உப்பு ருசி கொடுக்கிறது. அதுபோல் நம் பேச்சுக்களிலும் செய்கைகளிலும் கடவுளின் உண்மையான மெய்யான சமாதானத்தையும் பிரதிபலித்து அதைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் வாழ்க்கை ஒப்பற்ற ருசியான வாழ்க்கை ஆகும்.

இயேசு நீங்கள் உலகத்திற்கு ஒளி என்றார். நீங்கள் கடவுளுக்கு உண்மையுள்ளவர்களாய் ஜீவிப்பது பிறருக்கு ஒரு சாட்சியாய், வழி நடத்துதலாய் அமையும். நீங்கள் உங்கள் நற்கிரியைகளால் பிறரால் அறியப்படுவீர்கள். மலையின்மேல் உள்ள பட்டணம் மறைந்திருக்க முடியுமா? அதுபோல உங்கள் நற்கிரியைகளால் நீங்கள் உலகத்தின் மக்களுக்கு வழிகாட்டியாய் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள்.

இப்படியாக நாம் உலகத்திற்கு உப்பைப் போலவும் வெளிச்சத்தைப் போலவும் உபயோகமுள்ளவர்களாய் இருக்கும்படி கடவுள் நமக்குச் சொல்லுகிறார்.

290. ஐயாயிர்ம் பேருக்கு உணவளித்தல்

மத். 14

ஒரு நாள் இயேசு மலையின்மேல் ஏறிச் சென்று தம் சீடர்களோடு உட்கார்ந்தார். திரளான மக்கள் தம்மை நோக்கி வருவதைக் கண்டு, பிலிப்புவினிடம், இவ்வளவு பேருக்கு உணவளிக்கத் தேவையான அப்பங்கள் எங்கே கிடைக்கும் என்று கேட்டார்? அதற்கு பிலிப்பு ஆளுக்குக் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்தாலும்கூட இரு நூற்று பணத்துக்கு அப்பங்களை வாங்கினாலும் அவை போதாதே என்று பதிலளித்தார்.

அப்போது சிமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்னும் சீடன் இயேசுவினிடம் வந்து, இங்கே ஒரு சிறுவன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு பொறித்த மீன்களும் இருக்கின்றன. ஆனால் அவை இப்பெருங் கூட்டத்திற்கு எப்படிப் போதும்? என்றார்.

இயேசு தம் சீடர்களைப் பார்த்து, 'மக்களை ஐம்பது ஐம்பதுபேராக பந்தியமரச் செய்யுங்கள்' என்றார். அந்த இடம் நல்ல புல் தரையாக இருந்தது. பந்தி அமர்ந்தவர்களில் ஆண்கள் மட்டும் ஏறத்தாழ ஐயாயிரம் பேர் இருந்தனர். இயேசு அப்பங்களையும், மீன்களையும் எடுத்துத் தோத்திரம் செலுத்தி சீடர்களிடம் கொடுத்தார். சீடர்கள் அதைப் பந்தியில் அமர்ந்தவர்களுக்கு பங்கிட்டனர். அவர்கள் அப்பங்களையும் மீன்களையும் சாப்பிட்டுத் திருப்தியானபின் இயேசு சீடர்களிடம் ஒன்றும் சேதமாகாதபடி மீதியானவைகளைச் சேர்த்து வையுங்கள் என்றார். அவர்கள் அப்படியே மீதியிருந்த அப்பத்துண்டுகளைப் பன்னிரெண்டு கூடைகளில் நிரப்பினார்கள்.

இயேசு இதேபோல ஏழு அப்பங்களையும் சில மீன்களையும் கொண்டு நாலாயிரம் பேருக்கு அற்புதமாக உணவளித்ததை மத்தேயு 15ஆம் அதிகாரத்திலும் காணலாம்.

இந்த அற்புதத்தில் நமக்கு மூன்று விஷயங்கள் தெளிவாகின்றன. ஒன்று சிறுவன் தன்னிடமுள்ள ஆகாரத்தை இயேசுவினிடம் கொடுத்ததுபோல் நம்மிடம் உள்ளதை உதாரத்துவமாக நம்முடைய தாலந்துகளை கடவுளிடம் ஒப்படைத்தால் அதை அவர் பெருகப்பண்ணி பலருக்கு உபயோகமாக்குவார். இரண்டாவது, ஸ்தோத்திரம் செய்த பின்பு உணவு பங்கீடு செய்யப்பட்டது. அதுபோல நாமும் முதலில் கடவுளைத் துதித்து ஸ்தோத்திரம் பண்ணி நம் காரியங்களைச் செய்தால், ஆசீர்வாதத்தைக் கடவுள் பொழிவார் என அறியலாம். மூன்றாவது, சாப்பிட்டுத் திருப்தியடைந்தபின்னும் உணவுப் பொருட்களை வீணாக்காமல் அவற்றை சேகரித்து வைத்தல். இதை கடவுள் விரும்புகிறார் என்பதை அறிந்துகொள்ளுகிறோம்.



ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் (மத். 14)

291. இயேசு நீரின்மேல் நடந்தார்


மத். 14

இயேசு மக்களை அனுப்பிவிட்டு தம்முடைய சீஷர்கள் படகில் ஏறி தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தினார்.

அவர்மக்களை அனுப்பிவிட்டு பின்பு, தனித்து ஜெபம் பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந்தார்.

அதற்குள்ளாகப் படகு நடுக்கடலிலே சேர்ந்து, எதிர்க்காற்றயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது. இரவின் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார். அவர் கடலின் மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்.

உடனே இயேசு அவர்களோடே பேசி 'திடன் கொள்ளுங்கள், நான்தான் பயப்படாதிருங்கள்' என்றார். பேதுரு அவரை நோக்கி, 'ஆண்டவரே நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்' என்றான். அதற்கு இயேசு, வா என்றார். அப்பொழுது பேதுரு படகை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு பயந்து, அமிழ்ந்து போகையில் 'ஆண்டவரே, என்னை இரட்சியும்' என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து 'அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்' என்றார். அவர்கள் படகில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது. அப்பொழுது படகில் உள்ளவர்கள் வந்து, மெய்யாகவே நீர் கடவுளுடைய குமாரன் என்று சொல்லி அவரைப் பணிந்துகொண்டார்கள்.



இயேசு நீரின்மேல் நடந்தார் (மத். 14)

292. கேள்விகளும் பதிலும்

யோ. 3

நிக்கொதேமு

யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் பகல் நேரத்தில் போனால் யூதர்கள் கேலி செய்வார்கள் என்று பயந்து இராக் காலத்திலே இயேசுவிடம் வந்து 'ரபி நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்' என்றான்.

இயேசு அவனுக்குப் பிரதியுத்திரமாக 'ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் கடவுளுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்றார். அதற்கு நிக்கொதேமு 'ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ' என்றான்.

இயேசு மறுமொழியாக 'ஒருவன் நீரினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்

றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்' என்றார்.

அதற்கு நிக்கொதேமு 'இவைகள் எப்படி ஆகும்' என்றான். இயேசு அவனை நோக்கி 'நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?' என்றார். பரிசேயனான நிக்கொதேமு கடவுளுடைய கற்பனைகள் யாவையும் அறிந்த யூதத் தலைவர்களுள் ஒருவனாக இருந்தபோதிலும் இரவில் இயேசுவின் போதனையால் இழுக்கப்பட்டவனாய் இயேசுவை விசுவாசித்து நித்திய ஜீவனைப் பெற்றவனாய் மாறினான்.

293. சமாரியப் பெண்

யோ. 4

இயேசு சமாரியாவிலுள்ள சீகார் எனப்பட்ட ஊருக்கு வந்தார். அவர் களைப்படைத்தவராய் யாக்கோபுடைய கிணற்றருகே உட்கார்ந்தார். அவருடைய சீஷர்கள் உணவுப் பதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள் போயிருந்தனர். அப்பொழுது சமாரிய நாட்டாளாகிய ஒரு பெண் தண்ணீர் மொள்ள வந்தாள். அவளிடம் இயேசு 'தாகத்துக்குத் தா' என்றார். அதற்கு அவள் 'நீர் யூதரல்லவா? எப்படி சமாரியப் பெண்ணாகிய என்னிடத்தில் தண்ணீர் கேட்கலாம்' என்றாள்.

இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக, 'நீ தேவனுடைய ஈவையும் தாகத்துக்குத் தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய். அவர் உனக்கு ஜீவத் தண்ணீர் கொடுத்திருப்பார்' என்றார். அதற்கு அந்தப் பெண் 'ஆண்டவரே மொண்டு கொள்ள உம்மிடத்தில் பாத்திரம் இல்லையே கிணறும் ஆழமாயிருக்கிறதே பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும். எங்களுக்கு இந்தக் கிணற்றைத் தந்த யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ?' என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக 'இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கிற தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்' என்றார்.

அந்தப் பெண் 'ஆண்டவரே எனக்குத் தாகமுண்டாகாமலும் நான் இங்கே தண்ணீர் மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்' என்றாள். இயேசு 'நீ போய் முதலில் உன் புருஷனை இங்கே அழைத்துக்கொண்டுவா' என்றார். அதற்கு அவள் 'எனக்குப் புருஷன் இல்லை' என்றாள். இயேசு 'உனக்கு ஐந்து பேர் இருந்தார்கள், இப்பொழுது உள்ளவனும் உனக்கு புருஷன் இல்லை என்பதை உள்ளபடி கூறினாய்' என்றார். உடனே அவள் 'நீர் தீர்க்கதரிசியாகிய கிறிஸ்து என்னப்பட்ட மேசியா என்பதை அறிவேன்' என்று கூறி தன் குடத்தை வைத்துவிட்டு ஊருக்குள் சென்று மக்களை நோக்கி, நான் செய்த எல்லா காரியங்களையும் பற்றி அறிவித்தவர் கிறிஸ்துதானா என்று வந்து பாருங்கள் என்றாள். அப்பொழுது மக்கள் கிறிஸ்துவாகிய மேசியாவைப் பார்க்க வந்தனர். அவள் வார்த்தையினிமித்தம் மட்டும் அல்ல, சமாரியரில் அநேகர் இயேசுவை விசுவாசித்தார்கள். எப்படியெனில் இயேசுவின் உபதேசத்தை இரண்டு நாட்கள் கேட்டு அநேகர் அவரை உலக இரட்சகராக விசுவாசித்தார்கள்.



சமாரியப் பெண் (ஏசா. 4)

பாவியான பெண்ணாக இருந்தபோதிலும் இயேசுவை சந்தித்தபின் மனம் மாறி அவரை விசுவாசித்து அநேகரை இயேசுவினிடம் வழி நடத்திய முதல் பெண்மணி இவரே. அப்போஸ்தலருக்கும் முன்பாகவே மேசியாவை இனம்கண்டு பிறருக்கு அவரை அறிமுகப்படுத்தி அநேக ஆத்மாக்களை ஆதாயப்படுத்திய முதல் மிஷனெரிப் பெண் இவரே.

294. கடவுளின் அன்பு

லூ. 15

காணாமல் போன ஆடு, வெள்ளிக்காசு

மனம் திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும் என்று சொல்லி அதை மக்களுக்கு விளக்க இரண்டு கதைகளை இயேசு சொன்னார்:

ஒரு ஊரில் ஒரு ஆடு மேய்ப்பவன் இருந்தான். அவனுக்கு நூறு ஆடுகள் இருந்தன. அவற்றை அவன் பாதுகாத்து பத்திரமாகத் தொழுவத்தில் அடைத்தபோது ஒரு ஆடு காணாமல் போயிருப்பதைக் கண்டுபிடித்தான். உடனே தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் தொழுவத்தில் விட்டு விட்டு திரும்பிப்போய் ஆடுகள் மேய்த்த இடத்திற்கே சென்று புதர்களிலும் மலை இடுக்குகளிலும் தேடி கடைசியாக அதைக் கண்டு பிடித்து 'காணாமல் போன ஆட்டைக் கண்டு பிடித்தேன்' என்று கூறி அதைத் தன் தோளின் மேல் சுமந்துகொண்டு மனமகிழ்ச்சியோடு வந்தான். இதை அயலகத்தாரிடமும் கூறி மகிழ்ந்தான்.

ஒரு பெண்ணிடம் பத்து வெள்ளிக்காசுகள் இருந்தன. ஒரு நாள் அவள் எண்ணிப் பார்த்தபோது ஒரு வெள்ளிக்காசைக் காணவில்லை. உடனே அந்த ஒன்பது வெள்ளிக்காசுகளையும் பெட்டியில் போட்டுவிட்டு வீட்டைப் பெருக்கி விளக்கைக் கொழுத்தி அந்தக் காணாமல்போன காசைத் தேடித் தேடி கடைசியாகக் கண்டு பிடித்து விட்டாள். 'காணாமல் போன காசைக் கண்டுபிடித்தேன் என்னோடு சந்தோஷப்படுங்கள்' என்று கூறினாள்.

தன்னிடமிருந்து வழிவிலகிச் செல்பவரைத் தன்னிடம் திரும்பக் கொண்டு வந்து சேர்ப்பதில் கடவுள் மிகவும் கருத்துள்ளவராக இருக்கிறார்.



காணாமல் போன ஆடு



வெள்ளிக்காசு (லூ. 15)

295. காணாமற்போன மகன்

லூ. 15

ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி, 'தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும்' என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக் கொடுத்தான். சில நாட்களுக்குப் பின்பு, இளைய மகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு தூர தேசத்திற்குப் புறப்பட்டுப் போனான். அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான். அந்த தேசத்திலே கொடிய பஞ்சம் உண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத் தொடங்கினான்.

அந்த தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். அப்பொழுது பன்றிகள் தின்கின்ற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான். ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை. அவனுக்குப் புத்தி தெளிந்தது. அப்போது அவன் தனக்குள்ளே 'என்னுடைய தகப்பன் வீட்டில் எத்தனையோ வேலைக்காரர்கள் உண்டு. அவர்கள் எல்லோரும் திருப்தியாய் உண்கிறார்கள். நானோ இங்கு பசியினால் சாகிறேன் நான் எழுந்து என் தகப்பனிடம் போய், தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன். இனி நான் உம்முடைய மகன் அல்ல. உமது கூலியாட்களில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்' என்று சொல்லிக்கொண்டு, புறப்பட்டு தன் தகப்பனிடம் வந்தான்.

அவன் தூரத்தில் வரும்போதே, அவன் தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டான். மகன் தகப்பனிடம், 'தந்தையே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு விரோதமாகவும் நான் பாவம் செய்தேன். நான் இனிமேல் உம்முடைய மகன் என்று சொல்லப்படத் தகுதியில்லாதவன்' என்றான். ஆனால் தகப்பனோ தன் வேலைக்காரர்களைக் கூப்பிட்டு 'நீங்கள் சீக்கிரமாய்ப் போய் உயர்ந்த ஆடைகளைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள், இவன் கைக்கு மோதிரம் போடுங்கள், இவன் கால்களுக்கு மிதியடி மாட்டுங்கள். இவன் மரித்திருந்தான். திரும்பவும் உயிரோடு வந்திருக்கிறான். காணாமற்போயிருந்தான் திரும்பவும் காணப்பட்டான். ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்கவேண்டு மல்லவா?' என்றான்.

அவனுடைய மூத்த குமாரன் வயலிலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது, கீதவாத்தியத்தையும், நடனக் களிப்பையும் கேட்டு, ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து, இதென்ன என்று விசாரித்தான். அதற்கு அவன் 'உம்முடைய சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார்' என்றான்.

அப்பொழுது அவன் கோபமடைந்து உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான். அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக 'இதோ, இத்தனை வருஷ காலமாய் நான் உமக்கு ஊழியஞ் செய்து ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை.

வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப் போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை



காணாமல் போன மகன் (லூ. 15)

இவனுக்காக அடிப்பித்தீரே' என்றான். அதற்குத் தகப்பன், மகனே, 'நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது. உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான், ஆனபடியினாலே நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாக இருக்கவேண்டுமே' என்றார். எந்த நிலையிலும் கடவுள் நம்மை நேசிக்கிறார் என்பதே இக்கதையின் கருத்து.

296. ஊசியின் காதில் ஒட்டகம்

மா. 10

இயேசு புறப்பட்டு யூதேயாவில் எல்லைகளில் வந்தார். வழியிலே போகையில் ஒருவன் ஓடி வந்து அவருக்கு முன்பாக முழங்கால் படியிட்டு 'நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும்' என்று கேட்டான். அதற்கு இயேசு 'நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? கடவுள் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே.'

'விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே' என்றார். அதற்கு அவன் 'போதகரே இவைகளை எல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கின்றேன் என்றான். இயேசு அவனைப் பார்த்து அவனிடத்தில் அன்புகூர்ந்து 'உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு, நீ போய் உனக்கு உண்டானவைகளை எல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றிவா' என்றார்.

அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து துக்கத்தோடே போய்விட்டான். அப்பொழுது இயேசு சுற்றிப் பார்த்து, தம்முடைய சீஷரை நோக்கி 'பணக்காரர்கள் கடவுளுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்' என்றார்.

அவர்கள் பின்னும் அதிகமாய் ஆச்சரியப்பட்டு, அப்படி யார்தான் இரட்சிக்கப்படக்கூடும் என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, 'மனுஷரால் இது கூடாததுதான், கடவுளால் இது கூடாததல்ல, கடவுளாலே எல்லாம் கூடும்' என்றார்.

297. பெரிய காணிக்கை

மா. 12

இயேசு ஆலயத்தில் காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, மக்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள்.

ஏழையான ஒரு விதவையும் வந்து ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள்.

அப்பொழுது இயேசு தம்முடைய சீஷரை அழைத்து 'காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப்பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றார்.

'அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள். இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார். இதுவே கடவுளுக்கு உகந்த பெரிய காணிக்கை ஆகும்' என்றார்.



பெரிய காணிக்கை (மா. 12)

298. பெரிய பணக்கார விவசாயி

லூ. 12

இயேசு 'பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல' என்று ஒரு உவமையைத் தம் சீஷர்களுக்குச் சொன்னார். ஐசுவரியமுள்ள ஒருவன் இருந்தான். அவனுக்கு நிலம் நன்றாய் விளைந்திருந்தது. அப்பொழுது அந்த ஐசுவரியவான் 'நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே என்று சொல்லி, என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்துப் பின்பு, ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேக பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன்' என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான்.

கடவுளோ அவனை நோக்கி, 'மதிகேடனே, உன் ஆத்மா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்,' என்றார். கடவுளிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்.

பணம் இல்லாதவன்கூட எப்படிப் பணம் தேடுவது எதை உண்போம் எதை உடுத்துவோம் என்ற சிந்தனையிலேயே இருக்கிறான். 'முதலாவது கடவுளுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்' என்று இயேசு சொல்கிறார். கடவுளுக்கு வாழ்க்கையில் முதலிடம் கொடுங்கள். கடவுள் உங்கள் தேவைகளை எல்லாம் சந்திப்பார் என்பதே இக் கதையின் கருத்து.

299. பணக்காரனும் ஏழை லாசருவும்

லூ. 16

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.

லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான். நாய்கள் அவன் பருக்களை நக்கிற்று.

பின்பு அந்த தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய்விடப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அந்த ஐசுவரியவான் 'தகப்பனாகிய ஆபிரகாமே நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரிலே தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும் இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே' என்று கூப்பிட்டான்.

அதற்கு ஆபிரகாம் 'மகனே நீ பூமியிலே உயிரோடிருக்கும் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய். லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான். அதை நினைத்துக்கொள். இப்பொழுது லாசரு தேற்றப்படுகிறான். நீயோ வேதனைப்படுகிறாய். மேலும் எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே ஒரு பெரும் பிளவு இருக்கிறது. ஆகையால் இவ்விடத்திலிருந்து உங்களிடம் வர விரும்புகிறவர் கடந்து வரமுடியாது. அவ்விடத்திலிருந்து ஒருவரும் எங்களிடம் கடந்து வரவும் முடியாது' என்றான். அப்பொழுது அவன் அப்படியானால், 'தகப்பனே எனக்கு ஐந்து சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன்' என்றான்.

ஆபிரகாம் அவனை நோக்கி 'அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு. அவர்

களுக்கு அவர் செவி கொடுக்கட்டும்' என்றான். அதற்கு ஐசுவரியவான், 'அப்படியல்ல தகப்பனாகிய ஆபிரகாமே மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள்' என்றான்.

அதற்கு ஆபிரகாம் 'அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால் மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும் நம்பமாட்டார்கள்' என்று சொன்னார்.

பூமியிலே கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் சகல ஈவுகளையும் செல்வங்களையும் நாம் பிறரோடும் விசேஷமாக ஏழை எளியவர்களோடும் பகிர்ந்து அனுபவிக்கவேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்.

300. இயேசு தன்னை வெளிப்படுத்துதல்

மா. 8

இயேசுவும் அவருடைய சீஷர்களும் புறப்பட்டு, பிலிப்பு செசரியா பட்டணத்தைச் சேர்ந்த கிராமங்களுக்குப் போனார்கள். வழியிலே அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி மக்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்' என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் 'சிலர் உம்மை யோவான் ஸ்நானகன் என்றும் சிலர் எலியா என்றும், வேறு சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்' என்றார்கள். அப்பொழுது இயேசு 'நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்,' என்று கேட்டார். பேதுரு உடனே 'நீர் கிறிஸ்து' என்றான்.

அப்பொழுது தம்மைக் குறித்து ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு அவர்களுக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார். அல்லாமலும், மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு கொல்லப்பட்டு, மூன்று நாளைக்குப் பின்பு உயிர்த்தெழுந்திருக்க வேண்டியதென்று அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்.

இந்த வார்த்தையை அவர் தாராளமாகச் சொன்னார். அப்பொழுது பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டு போய், அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான். அவர் திரும்பித் தம்முடைய சீஷரைப் பார்த்து, பேதுருவை நோக்கி 'எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்' என்று சொல்லி அவனைக் கடிந்து கொண்டார்.

பின்பு அவர் ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து, 'ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்.' என்று இயேசு கூறினார்.

301. இயேசு மறுரூபமாகுதல்

லூ. 9

இயேசு 'இங்கே, நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யத்தைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றார். இந்த வார்த்தைகளைச் சொல்லி ஏறக்குறைய எட்டு நாளான பின்பு, அவர் பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் கூட்டிக் கொண்டு ஜெபம் பண்ணுவதற்கு ஒரு மலையின் மேல் ஏறினார்.

அவர் ஜெபம் பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று, அவருடைய உடை வெண்மையாகிப் பிரகாசித்தது. அன்றியும் மோசே, எலியா என்னும் இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு அவருடனே சம்பாஷணை பண்ணி அவர் எருசலேமிலே நிறைவேற்றப் போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பேதுருவும் அவனோடிருந்தவர்களும் நித்திரை மயக்கமாயிருந்தார்கள். ஆகிலும்

அவர்கள் விழித்து அவருடைய மகிமையையும் அவரோடே நின்ற அவ்விரண்டு பேரையும் கண்டார்கள். அவ்விருவரும் அவரை விட்டுப் பிரிந்து போகையில், பேதுரு இயேசுவை நோக்கி, 'ஐயரே நாம் இங்கே இருக்கிறது நல்லது. உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம்' என்று தான் சொல்லுகிறது இன்னதென்று அறியாமல் சொன்னான். அப்பொழுது 'இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவி கொடுங்கள்' என்று மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

அந்தச் சத்தம் உண்டாகையில் இயேசு ஒருவரே காணப்பட்டார். தாங்கள் கண்டவைகளில் ஒன்றையும் அவர்கள் அந்நாட்களில் ஒருவருக்கும் சொல்லாமல் அடக்கி வைத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் இயேசுவின் மகிமையை முகமுகமாய்த் தரிசித்தார்கள்.



இயேசு மறுரூபமாகுதல் (லூ. 9)

302. இளைஞனை குணமாக்குதல்

மா. 9

மறு நாளில் அவர்கள் மலையிலிருந்து இறங்கினபோது திரளான ஜனங்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்தார்கள். அவர்களில் ஒருவன் சத்தமிட்டு, போதகரே என் மகனைக் கடாட்சித்தருள வேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்கிறேன். அவன் எனக்கு ஒரே பிள்ளையாயிருக்கிறான்.

ஒரு ஆவி அவனைப் பிடிக்கிறது. அப்பொழுது அலறுகிறான். அது அவனை நுரைதள்ள அலைக்கழித்து, அவனைக் கசக்கினபின்பும், அவனை விட்டு நீங்குவது அரிதாயிருக்கிறது. அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரை வேண்டிக்கொண்டேன், அவர்களால் கூடாமற்போயிற்று என்றான்.

இயேசு பிரதியுத்தரமாக 'விசுவாசமில்லாத மாறுபாடான சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடிருந்து, உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்? உன் மகனை இங்கே கொண்டுவா' என்றார். அவன் சமீபித்து வருகையில் பிசாசு அவனைக் கீழே தள்ளி, அலைக்கழித்தது. அவன் தரையிலே விழுந்து, நுரைதள்ளிப் புரண்டான். அவர் அவனுடைய தகப்பனை நோக்கி 'இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று?' என்று கேட்டார். அதற்கு அவன் 'சிறு வயது முதற்கொண்டே உண்டாயிருக்கிறது. இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும், தண்ணீரிலும் தள்ளிற்று. நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால் எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவி செய்யவேண்டும்' என்றான்.

இயேசு அவனை நோக்கி நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். உடனே பிள்ளையின் தகப்பன் 'விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும்' என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான். அப்பொழுது ஜனங்கள் கூட்டமாய் ஓடிவருகிறதை இயேசு கண்டு, அந்த அசுத்த ஆவியை நோக்கி 'ஊமையும் செவிடுமான ஆவியே இவனை விட்டுப் புறப்பட்டுப் போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்' என்று அதை அதட்டினார். அப்பொழுது அது சத்தமிட்டு அவனை மிகவும்

அலைக்கழித்துப் புறப்பட்டுப்போயிற்று. அவன் செத்துப்போனான் என்று அநேகர் சொல்லத் தக்கதாகச் செத்தவன்போல் கிடந்தான். இயேசு அவன் கையைப் பிடித்து அவனைத் தூக்கினார். உடனே அவன் எழுந்திருந்தான்.

வீட்டில் அவர் பிரவேசித்தபொழுது அவருடைய சீஷர்கள் 'அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று?' என்று அவரிடத்தில் தனித்துக் கேட்டார்கள். அதற்கு அவர் 'இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது' என்றார்.

303. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் சுகமடைதல்

லூ. 7

ஒரு நாள் இயேசு கப்பர்நகூமுக்கு வந்தார். அங்கே நூற்றுக்கு அதிபதியாகிய ஒருவனுக்குப் பிரியமான வேலைக்காரன் வியாதிப்பட்டு மரண அவஸ்தையாயிருந்தான். அவன் இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டபோது, அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்கவேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ளும்படி யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுப்பினான்.

அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து அவரை கருத்தாய் வேண்டிக்கொண்டு 'நீர் இந்த



நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் சுகமடைதல் (லூ. 7)

தயவு செய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான், அவன் நம்முடைய மக்களை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான்' என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களுடனே கூடப் போனார். வீட்டுக்குச் சமீபமானபோது நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி, 'நீங்கள் அவரிடத்தில் போய் ஆண்டவரே! நீர் வருத்தப்பட வேண்டாம், நீர் என் வீட்டுவாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல.

நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை. ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு, நான் ஒருவனைப் போ என்றால் போகிறான். மற்றொருவனை வா என்றால் வருகிறான். என் வேலைக்காரனை இதைச் செய் என்றால் செய்கிறான் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள்' என்று அவர்களை அனுப்பினான்.

இயேசு இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி, தனக்குப் பின் வருகிற ஜனங்களை நோக்கி, 'இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றார். அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, வியாதியாய்க் கிடந்த வேலைக்காரன் சுகமடைந்திருக்கிறதைக் கண்டார்கள்.

304. செவிடன் குணமடைதல்

மா. 7

மறுபடியும் இயேசு தீரு, சீதோன் எல்லைகளை விட்டு பின் தெக்கப்போலியின் எல்லைகளின் வழியாய்க் கலிலேயாக் கடலருகே வந்தார். அங்கே கொன்னைவாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக்கொண்டார்கள்.

அப்பொழுது அவர் அவனை மக்கள் கூட்டத்தை விட்டு தனியே அழைத்துக்

கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு, வானத்தை அண்ணாந்து பார்த்து பெருமூச்சுவிட்டு 'எப்பத்தா' என்றார். அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம். உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான்.

அதை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். ஆகிலும் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்கள் அதை பிரசித்தம்பண்ணி, எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார், செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் பண்ணுகிறார் என்று சொல்லி மென்மேலும் ஆச்சரியப்பட்டார்கள்.

305. மரங்கள் நடக்கின்றன

மா. 8

இயேசு பெத்சாயிதா ஊருக்கு வந்தார். அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டு வந்து அவனைத் தொடும்படி இயேசுவை வேண்டிக்கொண்டார்கள்.

அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டுபோய், அவன் கண்களில் உமிழ்ந்து, அவன்மேல் கைகளை வைத்து எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். அவன் ஏறிட்டுப் பார்த்து மரங்கள் நடப்பதுபோல காண்கிறேன் என்றான். மரங்கள் என்று அவன் குறிப்பிட்டது மனிதரைத்தான். பின்பு இயேசு மறுபடியும் அவன் கண்களின்மேல் கைகளை வைத்து அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார். அப்பொழுது அவன் சொஸ்தமடைந்து, யாவற்றையும் தெளிவாய்க் கண்டான். பின்பு அவர் அவனை நோக்கி நீ கிராமத்தில் பிரவேசியாமலும், கிராமத்தில் இதை ஒருவருக்கும் சொல்லாமலும் இரு என்று சொல்லி அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

306. குருடன் பார்வையடைதல்

லூ. 18

இயேசு எரிகோவுக்கு சமீபமாய் நடந்து வருகையில் ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். மக்கள் நடக்கிற சத்தத்தைக் கேட்டு அவன் இதென்ன என்று விசாரித்தான். நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது அவன் 'இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்' என்று கூப்பிட்டான்.

இயேசு நின்று அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படிச் சொன்னார். அவன் கிட்ட வந்தபோது அவர் அவனை நோக்கி, 'நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய்' என்று கேட்டார். அதற்கு அவன் 'ஆண்டவரே, நான் பார்வை அடையவேண்டும்' என்றான். இயேசு அவனை நோக்கி 'நீ பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது' என்றார்.

உடனே அவன் பார்வையடைந்து, கடவுளை மகிமைப்படுத்திக்கொண்டே அவருக்குப் பின் சென்றான். மக்கள் எல்லாரும் அதைக் கண்டு கடவுளைப் புகழ்ந்தார்கள்.



குருடன் பார்வையடைதல் (லூ.18)

307. கீழ்ப்படிதல்—இரு குமாரர்

மத். 21

இயேசு தேவாலயத்தில் உபதேசம் பண்ணுகையில் பிரதான ஆசாரியரும் மக்களின் மூப்பரும் அவரிடத்தில் வந்து, 'நீர் எந்த அதிகாரத்தினல் இவைகளைச் செய்கிறீர். இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?' என்று கேட்டார்கள். இயேசுவும் அவர்களிடத்தில் யோவான் ஸ்நானகனைப்பற்றிப் பல கேள்விகள் கேட்டார். அதற்கு அவர்கள் எங்களுக்குத் தெரியாது என்ருர்கள். நானும் இன்ன அதிகாரத்தினல் இவைகளைச் செய்கிறேன் என்று சொல்லேன் என்று கூறி மறுபடியும் அவர்களிடத்தில் பல உவமைகளைச் சொன்னர்.

உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். மூத்தவனிடத்தில் அவன் வந்து, மகனே நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலை செய் என்ருன். அதற்கு அவன் மாட்டேன் என்ருன். ஆகிலும் பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனன். இளையவனிடத்திலும் தகப்பன் வந்து அப்படியே சொன்னன். அதற்கு அவன் போகிறேன், ஐயா என்று சொல்லியும் போகவில்லை. இவ்விருவரில் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் யார் என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் மூத்தவன்தான் என்ருர்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி, 'ஆயக்காரரும் பாவிகளும் உங்களுக்கு முன்னே கடவுளுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிருர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்ருல் யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை. ஆயக்காரரும் பாவிகளுமோ அவனை விசுவாசித்தார்கள். அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை' என்று இயேசு கூறினர்.

308. பிறரை நேசித்தல், மன்னித்தல்

மத். 18

சீஷர்கள் இயேசுவிடம் வந்து அநேக கேள்விகளைக் கேட்டனர். இயேசு அவர்களுக்கு உவமைகள்மூலம் பதில் கொடுத்தார். பேதுரு அவரிடத்தில் வந்து, ஆண்டவரே என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழு தரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு ஏழுதர மாத்திரம் அல்ல, ஏழெழுபது தரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்.

எப்படியெனில், பரலோக ராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப் பார்க்கத் தொடங்கினபோது, பத்தாயிரம் வெள்ளிப் பணம் கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத் தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால் அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான்.

அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி 'ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன்' என்ருன். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்.

அப்படியிருக்க அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில் தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து 'நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும்' என்ருன். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து 'என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன்' என்று அவனை வேண்டிக்கொண்டான்.

அவனே சம்மதியாமல், போய் அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு, மிகவும்

துக்கப்பட்டு ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து, பொல்லாத ஊழியக்காரனே நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன்.

நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ' என்று சொல்லி அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனை எல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்.

'நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால் என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்' என்று இயேசு கூறினார். இயேசு கற்பித்த ஜெபத்திலுள்ள, 'எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்களும் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்' என்பதன் கருத்தும் இதுதான்.

309. நல்ல சமாரியன்

லூ. 10

இயேசு தமது சீஷரிடத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து அவரைச் சோதிக்கும்படி 'போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும்' என்று கேட்டான்.

அதற்கு இயேசு 'நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன?' என்றார். அவன் பிரதியுத்தரமாக 'உன் கடவுளாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூருவதுபோலப் பிறரிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது' என்றான்.

இயேசு 'நீ நிதானமாய் உத்தரவு சொன்னாய், அப்படியே செய். அப்பொழுது பிழைப்பாய்' என்றார்.

அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி, 'எனக்குப் பிறன் யார்' என்று கேட்டான். இயேசு பிரதியுத்தரமாக ஒரு உவமையைச் சொன்னார்.

ஒரு மனிதன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் உடைகளை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி குற்றுயிராக விட்டுப்போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து அவனைக் கண்டு வேறு பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து அவனைக் கண்டு வேறு பக்கமாய் விலகிப்போனான்.

பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில் அவனைக் கண்டு, மனதுருகிக் கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும், திராட்சரசமும் வார்த்து காயங்களைக்கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து 'நீ இவனை விசாரித்துக்கொள். அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன்' என்றான்.



நல்ல சமாரியன் (லூ. 10)

'இப்படியிருக்க கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனுயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது' என்றார். அதற்கு நியாயசாஸ்திரி 'அவனுக்கு இரக்கஞ் செய்தவனே' என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி, 'நீயும் போய் அந்தப்படியே செய்' என்றார்.

'உன்னைப்போல் பிறனை நேசி'. இதுவே எல்லாக் கட்டளைகளுக்கும் அடிப்படை. கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பது இதுவே.

310. வெள்ளாடுகளும் செம்மறி ஆடுகளும்

மத். 25

நியாயத்தீர்ப்பு நாட்களிலே நாம் யாவரும் அவரவர் செய்கைகளுக்குத்தக்கதாக நியாயம் தீர்க்கப்படுவோம்.

மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.

அப்பொழுது, சகல மக்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறுகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்.

அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து 'வாருங்கள், என் பிதாவினுல் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

பசியாயிருந்தேன்—எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன்—என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனுயிருந்தேன்—என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள், உடை இல்லாதிருந்தேன்—எனக்கு உடை கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன்—என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலில் இருந்தேன்—என்னைப் பார்க்க வந்தீர்கள்' என்பார்.

அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக, 'ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்கு உணவு கொடுத்தோம்? எப்பொழுது உம்மை தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்போது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக் கொண்டோம்? எப்போது உம்மை உடை இல்லாதவராகக் கண்டு உமக்கு உடை கொடுத்தோம்? எப்போது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம்' என்பார்கள்.

அதற்கு ராஜா பதிலாக 'மிகவும் சிறிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்பார். அப்பொழுது இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, அவர் 'சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை. அந்நியனுயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை. உடை இல்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு உடை கொடுக்கவில்லை. வியாதியுள்ளவனுயும் காவலிலடைக்கப்பட்டவனுயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை' என்பார்.

அப்பொழுது அவர்களும் அவருக்குப் பிரதியுத்திரமாக 'ஆண்டவரே, உம்மை பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், உடை இல்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவி செய்யாதிருந்தோம்' என்பார்கள். அப்பொழுது ராஜா அவர்களுக்கு மறுமொழியாக 'மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்பார்.

அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்று இயேசு இந்த வசனங்களைச் சொல்லி முடித்தார். நம்மைச் சுற்றி வாழ்பவர்களின் தேவைகளைப்பற்றி நாம் கருத்து உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்.

311. இயேசு பாவியை மன்னித்தல்

லூ. 7

மனுஷகுமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார். அவர் போஜனப் பிரியனும் மதுபானப் பிரியனுமான மனிதன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்றபடி ஒருநாள் பரிசேயரில் ஒருவன் தன்னுடனே இயேசு போஜனம் பண்ணவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டதால், இயேசு அந்தப் பரிசேயனுடைய வீட்டில் சென்று பந்தியிருந்தார்.

அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு பெண் அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமள தைலம் கொண்டு வந்து, இயேசுவின் பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து தன் தலைமயிரினால் துடைத்து அவருடைய பாதங்களை முத்தம் செய்து பரிமள தைலத்தைப் பூசினாள்.

ஆனால் அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது 'இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற பெண் இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார், இவள் பாவியாயிருக்கிறாளே, என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

இயேசு அவனை நோக்கி, 'சீமோனே உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும்' என்றார். அதற்கு அவன் போதகரே, 'சொல்லும் என்றான்.

அப்பொழுது அவர் ஒருவனிடத்தில் இரண்டு பேர் கடன்பட்டிருந்தார்கள். ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்க வேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான் அதைச் சொல்' என்றார்.

சீமோன் பிரதியுத்திரமாக 'எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன்' என்றான். அதற்கு அவர் 'சரியாய் நிதானித்தாய்' என்று சொல்லி, பெண்ணிடமாய்த் திரும்பி சீமோனை நோக்கி 'இந்தப் பெண்ணைப் பார்க்கிறாயே, நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை. இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தம் செய்யவில்லை. இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல் என் பாதங்களை ஓயாமல் முத்தம் செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமள தைலம் பூசினாள்.

ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன். இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது. இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. 'எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான்' என்று சொல்லி அவளைப் பார்த்து 'உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது' என்றார். அப்பொழுதுகூடப் பந்தியிருந்தவர்கள் 'பாவங்களை மன்னிக்கிற இவர் யார்?' என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

இயேசு அந்தப் பெண்ணைப் பார்த்து 'உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ' என்றார்.



இயேசு பாவியை மன்னித்தல் (லூ. 7)

312. பாவிகளை நேசிக்கும் இயேசு

யோ. 8

ஒரு நாள் இயேசு தேவாலயத்தில் உட்கார்ந்து மக்களுக்கு உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒழுக்கக் கேடான ஒரு பெண்ணை வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் கொண்டு வந்து அவளை நடுவே நிறுத்தி, 'போதகரே, இந்தப் பெண் ஒழுக்கக்கேடாக நடந்ததை நாங்கள் எங்கள் கண்களினால் கண்டு கையும் மெய்யுமாய்ப் பிடித்துக்கொண்டு வந்தோம். இப்படிப் பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர்?' என்றார்கள். அவர்மேல் குற்றம் சுமத்துவதற்கான காரணம் உண்டாக்கும் பொருட்டும் அவரைச் சோதிக்கும்படியாகவும் இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து விரலினால் தரையிலே எழுதினார்.

அவர்கள் இடைவிடாமல் இயேசுவைக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து 'உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன்' என்று சொல்லி அவர் மறுபடியும் குனிந்து தரையிலே எழுதினார். அவர்கள் அதைக் கேட்டு தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு பெரியோர் முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனியே உட்கார்ந்திருந்தார். அந்தப் பெண் அருகில் நின்றாள். இயேசு நிமிர்ந்து அந்தப் பெண்ணைத் தவிர வேறொருவரையும் காணாமல், 'பெண்ணே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உனக்குத் தண்டனை தர முன்வரவில்லையா' என்றார். அதற்கு அப்பெண் 'இல்லை ஆண்டவரே' என்றாள். இயேசு அவளை நோக்கி, 'நானும் உன்னைத் தண்டிக்கப்போவதில்லை. நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே. உன் பாவம் உனக்கு மன்னிக்கப்பட்டது' என்றார். எப்பேர்ப்பட்ட பாவிகளையும் இயேசு நேசிக்கிறார், மன்னிக்கிறார்.

313. இயேசு குழந்தைகளை நேசித்தல்

மா. 10



இயேசு குழந்தைகளை நேசித்தல் (மா. 10)

இயேசு யோர்தானுக்கு அக்கரையிலுள்ள யூதேயாவின் எல்லைகளில் வந்தார். மக்கள் மறுபடியும் அவரிடத்தில் கூடி வந்தார்கள். அவர் தம்முடைய வழக்கத்தின்படியே மறுபடியும் அவர்களுக்குப் போதகம் பண்ணினார்.

அப்பொழுது சிறு பிள்ளைகளை அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். கொண்டுவந்தவர்களை சீஷர்கள் அதட்டினார்கள்.

இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள், கடவுளுடைய இராஜ்ஜியம் அப்படிப் பட்டவர்களுடையது என்றார். எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் கடவுளுடைய இராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

314. பத்துக் குஷ்டரோகிகள்

லூ. 17

இயேசு எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகையில் அவர் சமாரியா கலிலேயா என்னும் நாடுகளின் வழியாக நடந்துபோனார். ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது அவர் ரோகமுள்ள மனுஷர் பத்துப் பேர், குஷ்ட எதிராக வந்து, தூரத்திலே நின்று, அவருக்கு ஐயரே, எங்களுக்கு இரங்கும்' என்று சத்த மிட்டார்கள்.

அவர்களை இயேசு பார்த்து நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார், அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள். அவர்களில் ஒருவன், தான் ஆரோக்கியமானதைக் கண்டு திரும்பி வந்து, உரத்த சத்தத்தோடே கடவுளை மகிமைப் படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப் புறவிழுந்து அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத் தினான். அவன் சமாரியனாயிருந்தான். அப் பொழுது இயேசு 'சுத்தமானவர்கள் பத்துப் பேர் அல்லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே? என்றார். கடவுளை மகிமைப்படுத்துவதற்கு இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பி வரக்காணோமே என்று சொல்லி அவனை நோக்கி, நீ எழுந்து போ, உன் விசு வாசம் உன்னை இரட்சித்தது' என்றார்.

315. நானே மெய்யான திராட்சைச் செடி

யோ. 15

இயேசு தன்னை நானே வாசல், நானே நல்ல மேய்ப்பன், நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். நானே திராட்சச் செடி, நானே உலகத்திற்கு ஒளி, நானே ஜீவ அப்பம் இன்னும் நானே, நானே என்று தன்னைக் குறித்தே நமக்கு அறிமுகப்படுத்தி உள்ளார். நாம் அவரைப் பின்பற்றி வரும் படியும் அழைக்கிறார்.

இயேசு மேலும் தன்னை நான் மெய்யான திராட்சச் செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர், அவரை விசுவாசிக்கிறவர்கள் கொடிகள் என்று விளக்கிக் கூறுகிறார். 'அவரில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார். கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார்' என்று இயேசு சொல்கிறார்.

இயேசு தன்னைத் திராட்சைச் செடியாகவும் மக்களாகிய நம்மை அவரில் இணைந்திருக்கும் கொடிகளாகவும் உருவகப்படுத்துகிறார். கொடி கள் செடியோடு இணைந்திருந்தால்தான் அவை உயிருள்ளதாக இருக்கும். பூ பூக்கும், காய் காய்க்கும், பழம் கிடைக்கும். செடிகள் செடியி லிருந்து வெட்டிப் போடப்பட்டால் உயிரற்ற கொடிகளாகும். அங்கே பூ இல்லை காய் இல்லை, கனியும் இல்லை. ஆகவே கொடிகள் செடியோடு இணைந்திருப்பதைப்போல நாம் கடவுளோடு இணைந்திருக்கவேண்டும். அப் போது நாமும் கனி கொடுப்போம். என்ன கனிகள்? ஆவியின் கனிகள். அவை என்ன? அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், ஆகிய ஒன்பது கனி களை நாம் கொடுப்போம்.

நம்மில் இக் குணநலன்கள் நிறைந்திருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார்.



நானே மெய்யான திராட்சைச் செடி (யோ. 15)

316. கனியில்லாத அத்திமரம்

லூ. 13

ஆயிரக்கணக்கான மக்கள் இயேசுவின் உப தேசத்தைத் தினமும் கேட்டாலும் வெகு சிலரே மனம் திரும்பி அவரை ஏற்றுக்கொண்ட னர். மனம் திரும்பாவிட்டால் பிரயோஜன மில்லை என்பதனை இக்கதையின்மூலம் விளக்கு கிறார்.

ஒரு மனிதன் தன் திராட்சைத்தோட்டத்தில் ஒரு அத்தி மரத்தை நட்டிருந்தான். அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி 'இதோ மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன். ஒன்றையுங் காணவில்லை. இதை வெட்டிப்போடு. இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது?' என்றான்.

அதற்கு தோட்டக்காரன் 'ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும், நான் இதைச் சுற்றி லும் கொத்தி எருப் போடுவேன். கனி கொடுத் தால் சரி, கொடாவிட்டால், இனி மேல் இதை வெட்டிப் போடலாம் என்று சொன்னான்' என்றார். கடவுள் நமக்குக் கொடுக்கும் வாய்ப்பு களை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். நல்ல மரம் நல்ல கனி கொடுப்பதுபோல நம் முடைய நற்கிரியைகளால் நாம் கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுவோம் என்று பொறுமையுடன் கடவுள் காத்துக்கொண்டிருக் கிறார்.

317. புத்தியுள்ள கன்னிகைகள்

மத். 25

தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது அதை புத்தியோடு உபயோகப்படுத்தி கடவு ளின் இராஜ்யத்துக்கு வர முயற்சிக்கவேண்டும் என்று இந்தக் கதையை இயேசு சொன்னார்.

பரலோக இராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர் கொண்டு போகப் புறப்பட்ட பத்துக் கன்னிகை களுக்கு ஒப்பாயிருக்கும் அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்கள், ஐந்து பேர் புத்தியில்லாத வர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை மட்டும் எடுத்துக்கொண்டு போனார்கள். எண்ணெயையோ கொண்டுபோக வில்லை. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டி களோடுங்கூட தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்.

மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர் கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். நடுராத்திரியிலே இதோ மணவாளன் வருகிறார். அவருக்கு எதிர் கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது அந்தக் கன்னிகைகள் எல்லோரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி 'உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங் கொடுங்கள் எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே' என்றார்கள், புத்தியுள்ள வர்கள் பிரதியுத்தரமாக 'அப்படியல்ல, எங்க ளுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி நீங் கள் விற்கிறவர்களிடத்திற்குப் போய் உங்களுக் காக வாங்கிக்கொள்ளுங்கள்' என்றார்கள்.

அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்துவிட்டார். ஆயத்தமாயிருந்த வர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக் குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப் பட்டது. பின்பு மற்றக் கன்னிகைகளும் வந்து, ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்க வேண்டும் என்றார்கள்.

அதற்கு அவர் 'உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றார். 'மனுஷ குமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிற படியால் விழித்திருங்கள்' என்றார். வாழ்வில் எண்ணெயும் வேண்டும் தீவட்டியும் வேண்டும். அப்போதுதான் முழுமையான ஒளி கிடைக்கும். ஆவிக்குரிய வாழ்வும் நம் உலக ஜீவியமும் இணைந்தால்தான் முழு வாழ்வு. உதாரணம் மத். 23:23.

318. மூன்று வேலையாட்கள்

மத். 25

கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் ஈவுகளையும் தாலந்துகளையும் பயன்படுத்தி நமக்கும் பிறருக்கும் உதவியாகவும் கடவுளின் நாமத்திற்கு மகிமையாக இருக்கும்படியாகவும் நாம் அதை பயன்படுத்தவேண்டும் என்று கூறி மேலும் பரலோக ராஜ்யம் புற தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனிதன், தன் ஊழியக்காரரை அழைத்து தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது என்றுகூறி திறமைக்குத் தக்கதாக ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், இரண்டு தாலந்தும் ஒரு தாலந்துமாக மூன்றுபேரிடமும் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான்.

ஐந்து தாலந்தை, இரண்டு தாலந்தை வாங்கினவர்கள் போய் வியாபாரம் செய்து வேறு ஐந்து, இரண்டு தாலந்துகளை சம்பாதித்தார்கள். ஒரு தாலந்தை வாங்கினவனோ போய் நிலத்தைத் தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்து வைத்தான்.

வெகுகாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பி வந்து அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான். அப்பொழுது ஐந்து இரண்டு தாலந்தை வாங்கினவர்களும் வந்து முறையே 'ஆண்டவனே, ஐந்து தாலந்தைக் கொண்டு வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன்' 'இரண்டு தாலந்தைக் கொண்டு வேறு இரண்டு தாலந்தை சம்பாதித்தேன்' என்றார்கள். உடனே எஜமான் அவர்களை நோக்கி 'நல்லது உத்தமமும், உண்மைமுயுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி' என்றான். ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து 'ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும் தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனிதன் என்று அறிந்து பயந்துபோய் உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ உம்முடையதை வாங்கிக்கொள்ளும்' என்றான்.

அவனுடைய எஜமான் பிரதியுத்தரமாக 'பொல்லாதவனும், சோம்பலுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே அப்படியானால், நீ ஏன் என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டு வைக்கவில்லை? அப்பொழுது நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக்கொள்வேனே' என்று சொல்லி 'அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து பத்து தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். பரிபூரணமும் அடைவான். இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும். பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்' என்றான். கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் தாலந்துகளை உபயோகிக்கவேண்டும் என்பதே இக்கதையின் கருத்து.

319. மரத்தில் ஏறிய குள்ளன்

லூ. 19

இயேசுவும் அவரது சீஷர்களும் பஸ்கா பண்டிகை கொண்டாடுவதற்காக எருசலேம் நோக்கி வந்துகொண்டிருந்தனர். அவர்கள் எரிகோ பட்டணத்திற்கு அருகே வந்தபோது அநேக மக்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். அந்தப் பகுதி ஒரு பாலைவனமாக இருந்தபோதிலும் எரிகோவில் இருந்த தண்ணீர் ஊற்றுகளால் எரிகோ மட்டும் செழிப்பான ஊராக இருந்தது.

அந்த ஊரில் சகேயு என்னும் வரி வசூலிக்கும் ஆயக்காரன் வாழ்ந்து வந்தான். வரி வசூலிக்கும் யூதர் பாவிகளாகவும் வெறுக்கத்தக்கவர்களாகவும் கருதப்பட்டு வந்தனர். ஏனென்றால் யூதர்களிடம் வரி வசூலித்து ரோமர்களுக்கு அல்லவா செலுத்துகிறார்கள். மேலும் ரோம இராஜ்யம் எப்போது ஒழியும் தங்களின் யூத இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்று காத்திருக்கும் வேளையில் ஆயக்காரர்களை மக்கள் எங்ஙனம் மதிப்பார்கள்?

இதனால் சகேயு பணக்காரனாயிருந்தும் மகிழ்ச்சியில்லாமல் வாழ்ந்து வந்தான். அநேகரால் வெறுக்கப்பட்டு ஒதுங்கி வாழ்ந்தான். அவன் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரைக் காண ஆவலோடிருந்தான். இயேசு அவ்வழியாக வருகிறார் என்று அறிந்து எப்படியும் அவரைச் சந்தித்துவிட தீர்மானித்தான், தான் குள்ளமாக இருந்தபடியால் கூட்டத்தோடு வரும் அவரைக் காண வசதியாக ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறி உட்கார்ந்து காத்துக்கொண்டிருந்தான்.

இயேசு அந்த வழியாய் வந்தபோது அண்ணாந்து பார்த்து, 'சகேயுவே சீக்கிரமே இறங்கி வா, இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டும்' என்று அவனிடம் சொன்னார். சகேயு உடனே இறங்கி வந்து அவரை மகிழ்ச்சியோடு தன் வீட்டில் ஏற்றுக்கொண்டான். அதைக் கண்ட யாவரும் 'இவன் பாவியான மனிதனாயிற்றே. இவன் வீட்டில் தங்கப் போகிறாரே' என்று முணுமுணுத்தார்கள்.



மரத்தில் ஏறிய குள்ளன் (லூ. 19)

இயேசு கூட்டத்தாரோடே அவன் வீட்டில் போய் உணவு அருந்தி, பேசிக்கொண்டிருந்தார். இதனால் சகேயு மனம் திரும்பினான். அதனால் அவனாக முன்வந்து 'இப்போதே என் சொத்தில் பாதியை ஏழைகட்குக் கொடுத்துவிடுகிறேன். நான் யாரையாவது வஞ்சித்து எதையாவது வாங்கினதுண்டானால் அதையும் நான்கு மடங்காக திருப்பித் தந்துவிடுகிறேன்' என்று கூறினான்.

இயேசுவோ அதைக்கேட்டு மனமகிழ்ந்து, 'இன்று இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. சகேயு போன்ற இப்படிப்பட்ட மக்களைத்தான் நான் தேடிவந்தேன். கடவுளைவிட்டு விலகி வாழ்ந்த இவன் கடவுளை நேசித்து, அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிய முன் வந்துள்ளான்' என்றார். கூட்டத்தாரும் ஆச்சரியப்பட்டனர். சகேயுவா இப்படி மனம் மாறினான் என்று கூறினார்கள்.

ஆயக்காரன், பாவி என்று சமூகத்தால் ஒதுக்கப்பட்ட சகேயு கடவுளுக்குப் பிரியமான மனிதனாக மாறினான். கடவுளின் பார்வையில் ஒவ்வொருவரும் முக்கியமானவரே. கடவுளுக்குப் பாரபட்சம் இல்லை.

320. இயேசுவின் சிநேகிதர்

லூ. 10

(மார்த்தாள், மரியாள்)

எருசலேமுக்கு அருகிலுள்ள பெத்தானியா என்னும் சிற்றூரில் மார்த்தாள், மரியாள் என்ற இரு சகோதரிகளும் லாசரு என்ற அவர்கள் சகோதரனும் வசித்து வந்தார்கள். இயேசு எருசலேமுக்கு வரும்போதெல்லாம் அவர்கள் வீட்டில் தங்கிப்போவது வழக்கம். அப்படி ஒரு முறை அவர் சீஷரோடுகூட வந்தபோது மார்த்தாள் இயேசுவுக்கும் அவரோடு வந்தவர்களுக்கும் சமையல் செய்து பரிமாற விரும்பி அதிகமான வேலைகளைச் செய்துகொண்டிருந்தாள்.

மரியாளோ இயேசுவை உபசரித்து அவர் பாதத்தடியில் அமர்ந்து அவர் போதனைகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள், இதைக் கண்டு எரிச்சலடைந்த மார்த்தாள், மரியாளைத்



இயேசுவின் சிநேகிதர் (லூ. 10)

தனக்கு சமையலில் உதவிசெய்ய வரும்படி அழைத்தாள். ஆனல் இயேசுவோ மார்த்தாளை அன்புடன் நோக்கி, 'எங்களுக்காக அதிகமாகக் கவலைப்படவேண்டாம். எளிமையான உணவே போதும். மரியாளைப்போல நல்ல தருணத்தைப் பயன்படுத்திக்கொள். என்னுடைய வசனங்களை கேட்பதுதான் இப்போது செய்யவேண்டிய சரியான காரியம்' என்ருர். நாமும்கூட மார்த்தாளைப்போல உலகக் காரியங்களில் அதிகக் கவனம் செலுத்தாமல் மரியாளைப்போல கடவுளைப்பற்றிய காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முயற்சி செய்யவேண்டும்.

321. மரித்த லாசரு உயிர்பெறுதல்

யோ. 11

இயேசுவுக்கு அநேக நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் மார்த்தாள், மரியாள் என்ற சகோதரிகளும் அவர்களின் சகோதரன் லாசருவும் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் எருசலேமுக்கு அருகில் உள்ள பெத்தானியா என்னும் சிற்றூரில் வாழ்ந்து வந்ததால், இயேசு எருசலேமுக்கு வர நேர்ந்தபோதெல்லாம் இவர்கள் வீட்டில் தங்குவது வழக்கம்.

ஒரு முறை இந்த லாசரு வியாதிப்பட்டான். சகோதரிகள் இயேசுவுக்கு செய்தி அனுப்பினர். ஆனல் இயேசுவோ உடனே புறப்பட்டு வராமல் சிறிது காலம் தாழ்த்தினர். இரண்டு நாளைக்குப் பின்பு லாசரு மரித்துப்போனன் என்று அறிந்தார். அதன்பின்பு இயேசு பெத்தானியாவுக்குச் சென்ருர். சீஷர்கள்கூட லாசரு வியாதியாயிருந்தபோதே இயேசு சென்று இருந்தால் நலமாய் இருக்குமே என்று அபிப்பிராயப்பட்டனர். ஆனல் இயேசுவோ கடவுளின் மகிமை வெளிப்பட இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்த எண்ணினர்.

பெத்தானியாவுக்குச் சென்று அடைந்தபோது மார்த்தாளும், மரியாளும் எதிர்கொண்டு ஓடி இயேசுவின் பாதங்களில் விழுந்து வணங்கி அழுதார்கள். இந்தக் குடும்பத்தை இயேசு அதிகமாக நேசித்தபடியால் கண் கலங்கி அழுதார்.

'அவனை எங்கே வைத்திருக்கிறீர்கள்' என்று கேட்டார். கூடி இருந்த யூதரும் கண் கலங்கினர். சகோதரிமார் லாசரு இறந்து நான்கு நாட்கள் ஆயிற்று என்றும் அவனை வைத்த இடம் நாற்றம் எடுக்கும் என்றும் கூறினர்.

அப்போது இயேசு 'மரித்தவன் உயிர்ப்பான்' என்று அவர்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தி 'விசுவாசத்தால் கடவுளுடைய மகிமையைக் காணலாம்' என்று போதித்து கல்லறையண்டையில் சென்று மேற்கல்லை எடுத்துப் போடச் சொன்னர். பின்பு கடவுளை நோக்கி ஜெபித்தார். 'நீர் எப்போதும் எனக்குச் செவி கொடுக்கிறீர் என்று அறிவேன். ஆனலும் நீர் என்னை அனுப்பினதை சூழ்ந்து நிற்கும் மக்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கட்காக இதைச் சொன்னேன்' என்று கூறி உரத்த சத்தமாய் 'லாசருவே வெளியே வா' என்று கூப்பிட்டார். லாசரு எழுந்து தன்மேல் சுற்றிக் கட்டப்பட்ட கட்டுகளுடன் அப்படியே வெளியே வந்தான். அவனை கட்டவிழ்த்துவிடும்படி இயேசு கூறினர். கூடி இருந்த மக்கள் வியப்பினல் நிறைந்து இயேசுவை விசுவாசித்தார்கள். சகோதரிமார்களுக்கோ மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. ஆனல் இச்செய்தியைக் கேள்விப்பட்ட பரிசேயர்கள் இயேசுவைக் கொலைசெய்யத் திட்டமிட்டனர்.

இயேசு பஸ்காப் பண்டிகைக்கு ஒரு வாரம் முன்பு பெத்தானியாவுக்கு வந்து தான் உயிரோடு எழுப்பின லாசருவோடு விருந்துண்டு மகிழ்ந்தார். அப்போது மரியாள் விலையேறப்பட்ட நளதம் என்னும் தைலத்தில் ஒரு ராத்தல் கொண்டுவந்து அதை இயேசுவின் பாதங்களில் பூசி தன் தலைமயிரால் அவர் பாதங்களைத் துடைத்தாள். அந்த வீடு முழுவதும் வாசனையால் நிறைந்தது.



மரித்த வாசரு உயிர்பெறுதல் (யோ. 11)

இதைக் கண்ட பண ஆசைகொண்ட யூதாஸ் காரியோத் 'இந்தத் தைலத்தை முன்னூறு பணத்திற்கு விற்று ஏழைகளுக்குக் கொடுக்கலாமே' என்று சொல்ல இயேசு 'நான் மரித்து அடக்கம் பண்ணப்படும் நாளுக்கு இச்செய்கை முன்னேடியாய் இருக்கிறது' என்றார்.

இச்சமயம் ஏராளமான மக்கள் இயேசுவையும் லாசருவையும் காண கூடி வந்தார்கள். அநேகர் இயேசுவை விசுவாசித்தனர்.

322. பெரிய ஊர்வலம்

மா. 11

இயேசு தம் சீஷர்களோடு பெத்தானியா என்னும் ஊருக்கு மறுமுறை வந்திருந்தார். அப்போது சீஷரில் இருவரை நோக்கி, 'உங்களுக்கு எதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கள். மனுஷர் ஒருவரும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்கும், அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள்' என்றார்.



பெரிய ஊர்வலம் (மா. 10)

யாராவது 'ஏன் இப்படிச் செய்கிறீர்கள்' என்று கேட்டால் 'இது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள், உடனே அவன் அனுப்பிவிடுவான்' என்று சொல்லி அவர்களை அனுப்பினர். அவர்கள் போய் அப்படியே கட்டியிருந்த அந்தக் குட்டியை அவிழ்த்தார்கள். ஏன் அவிழ்க்கிறீர்களென கேட்கவே இது ஆண்டவருக்கு வேண்டுமென்று கூறினர்கள். அப்படியே அவிழ்த்துக்கொண்டு வந்துவிட்டார்கள். அவர்கள் அந்தக் குட்டியை இயேசுவினிடத்தில் கொண்டுவந்து, அதின்மேல் தங்கள் உடைகளைப் போட்டார்கள். அவர் அதின் மேல் ஏறி பவனி போனர். அநேகர் தங்கள் ஆடைகளை வழியிலே விரித்தார்கள். வேறு சிலர் மரக் கிளைகளைத் தரித்து வழியிலே பரப்பினர்கள். குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு முன் நடப்பாரும் பின் நடப்பாரும், ஓசன்ன! கர்த்தரின் நாமத்தினலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

கர்த்தரின் நாமத்தினலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் இராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக, உன்னதத்திலே ஓசன்ன' என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். இயேசு எருசலேம் தேவாலயம் மட்டும் பவனி வந்தார். சகரியா தீர்க்கதரிசி கூறியபடி கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்' என்பது நிறைவேறிற்று.

323. இயேசுவுக்கு எதிர்ப்பு

மா. 11


ஆலயத்தில் இயேசு

எருசலேம் நகரத்தைச் சுற்றி ஊர்வலம் வந்தபின் இரவில் பெத்தானியாவில் ஒய்வு எடுத்து, மறு நாள் இயேசு எருசலேம் ஆலயத்திற்கு வந்தார். ஆலயத்தின் முன் பகுதி ஒரு பொது இடம். யாவரும் வரப் போக இருக்கலாம். ஆனல் உட்பகுதியோ யூதர்கள் தவிர புற மதஸ்தர்கள் உள்ளே நுழையக்கூடாது என்று அறிவிப்பு காணப்பட்டது. மீறினல் தண்டனைக்குட்படுவார்கள் என்பதும் தெரிந்ததே. ஆலயத்தில் அமைதி இல்லாமல் பரபரப்பான ஒரு

சூழ்நிலையை இயேசு கண்டார். காணிக்கையாகப் படைக்கப்படும் ஆடுமாடுகளையும், பறவைகளையும் மற்ற பொருட்களையும் கொள்ளை லாபத்திற்கு விற்பனை செய்வோரும் வாங்குவோரும் எழுப்பிய சப்தமும் அதிகமாக இருந்தது. ஆலயத் தலைவர்கள் இதற்கு உடந்தையாய் இருந்தனர்.

இயேசு உள்ளே சென்று விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்திவிட்டு, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்துவிட்டு, ஒருவரும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டு போகவிடாமல் 'என்னுடைய வீடு எல்லாமக்களுக்கும் ஜெப வீடு எனப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகை ஆக்கினீர்கள்' என்று கோபித்தார்.

அதை வேதபாரகரும் பிரதான ஆசாரியரும் கேட்டு அவரைக் கொலை செய்ய வகை தேடினார்கள். ஆனால் மக்கள் யாவரும் இயேசுவின் உபதேசங்களை ஏற்று அவரைப் பின்பற்றியதாலும் லாசரு உயிரோடு வந்தபின் இயேசுவுக்கு ஏற்பட்ட புகழ் பிரசித்தம் அதிகமானதாலும் பயந்திருந்தனர். ஆனால் அவரைச் சமயம் பார்த்துக் கொன்றுவிட சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.



இயேசுவுக்கு எதிர்ப்பு (மா. 11)

324. இயேசுவுக்கு விரோதிகள்

மா. 12

பெத்தானியாவில் தங்கிக்கொண்டு பகலில் எருசலேம் தேவாலயத்தில் நாள்தோறும் பிரசங்கம் செய்து வந்தார். பஸ்கா பண்டிகை சமயமாயிருந்தபடியால் மக்கள் கூட்டம் அதிகமாய் இருந்தது. வேதபாரகரும், பரிசேயரும் பஸ்கா பண்டிகை முடிந்து மக்கள் கூட்டம் குறையட்டும். அப்புறம் இயேசுவைப் பிடித்துக் கொலை செய்யலாம் என்று காத்திருந்தனர்.

பஸ்கா பண்டிகைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வேதபாரகர்கள் இதற்காக ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினர். ஆனால் இயேசுவோ இவை எல்லாவற்றையும் அறிந்தவராய் சீஷரிடம் 'இந்தப் பஸ்காவின்போது நான் ரோமர்களிடம் ஒப்புவிக்கப்படுவேன் அவர்கள் என்னைச் சிலுவையில் அறைந்து கொல்லுவார்கள்' என்றார்.

இயேசு போதகம் பண்ணிக்கொண்டிருந்த போது யூதத் தலைவர்கள் அவரைக் குற்றம் கண்டுபிடிக்க தந்திரமாய் வகை தேடினார்கள். ஏனென்றால் யூதர்கள் ரோம ஆளுகைக்குள் இருப்பதை விரும்பாதவர்கள். அவர் பேச்சினாலும் அவரைக் குற்றப்படுத்த எண்ணி சிலரை அவரிடம் அனுப்பினார்கள்.

அவர்கள் வந்து, 'போதகரே, நீர் சத்தியமுள்ளவரென்றும், எவனைக் குறித்தும் உமக்குக் கவலையில்லை என்றும் அறிந்திருக்கிறோம். நீர் முகதாட்சணியம் இல்லாதவராய்த் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறீர். இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ?' என்று கேட்டார்கள்.

அவர்களுடைய மாயத்தை இயேசு அறிந்து 'நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்? நான் பார்க்கும்படி ஒரு பணத்தை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்' என்றார். அவர்கள் அதைக் கொண்டு வந்தவுடன் 'இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது' என்று கேட்டார். 'இராயனுடையது' என்றார்கள்.

அதற்கு இயேசு 'இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள்' என்றார். அவர்கள் அவரைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். இயேசு 'ஆம்'

என்றால் மக்கள் அவரை மதிக்கமாட்டார்கள் 'இல்லை' என்றால் ரோமர்களுக்கு எதிரி என்று இலகுவாகக் குற்றம் சாட்டலாம் என்று எண்ணியவர்கள் ஏமாற்றமடைந்தார்கள்.

கடவுளுக்கு உரியதை கடவுளுக்குச் செலுத்த வேண்டும். அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டியதை அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டும் என்பது நமக்கும் பொருந்தும் ஒரு விதிதானே.



இயேசுவுக்கு விரோதிகள் (மா. 12)

325. திராட்சத் தோட்டக் குத்தகையாளர்கள்

மா. 12

ஒரு நாள் இயேசு ஒரு கூட்டத்தில் போதகம் பண்ணிக்கொண்டிருந்தார். அக்கூட்டத்தில் வேதபாரகர், பரிசேயர் இருப்பதைக் கண்டார். அவர்களுக்காக ஒரு கதையைச் சொன்னார்.

ஒரு மனுஷன் ஒரு திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி அதைச் சுற்றிலும் வேலியடைத்து இரசத் தொட்டியை உண்டுபண்ணி, கோபுரத்தையும் கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாக விட்டு, புறதேசத்திற்குப் போயிருந்தார். தோட்டக்காரரிடத்தில் திராட்சக் கனிகளில் தன்பாகத்தை வாங்கிக்கொண்டு வரும்படி பருவ காலத்திலே அவர்களிடத்தில் ஒரு ஊழியக்காரனை அனுப்பினான்.

அவர்கள் அவனைப் பிடித்து அடித்து வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள். பின்பு வேறொரு ஊழியக்காரனை அவர்களிடத்தில் அனுப்பினான். அவர்கள் அவன்மேல் கல்லெறிந்து தலையிலே காயப்படுத்தி, அவமானப்படுத்தி அனுப்பிவிட்டார்கள். மறுபடியும் வேறொருவனை அனுப்பினான். அவனை அவர்கள் கொலை செய்தார்கள். வேறு அநேகரையும் அனுப்பினான். அவர்களில் சிலரை அடித்து சிலரைக் கொன்றுபோட்டார்கள்.

அவனுக்குப்பிரியமான ஒரே குமாரன் இருந்தான். என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று சொல்லி, அவனையும் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பினான். தோட்டக்காரரோ இவன் சுதந்தரவாளி, இவனைக் கொலை செய்வோம் வாருங்கள். அப்பொழுது சுதந்தரம் நம்முடையதாகும் என்று சொல்லிக்கொண்டு அவனைப் பிடித்துக் கொலை செய்து திராட்சத் தோட்டத்துக்குப் புறம்பே போட்டுவிட்டார்கள்.

திராட்சத் தோட்டத்திற்கு எஜமான் திராட்சத் தோட்டத்தை மற்றவர்களுக்கு ஒப்புக் கொடுப்பான் அல்லவா? என்றார். இந்த உவமையைச் சொல்லி முடித்தபோது அதைக் கேட்டுக்கொண்டிருந்த அனைவருக்கும் அதன் அர்த்தம் புரிந்தது. யூத தேசம் எப்போதும் ஒரு திராட்சத் தோட்டமாக உருவகப்படுத்தப்படுகிறது. அதன் அரசர்களும் தலைவர்களும் கடந்த நூற்றாண்டுகளில் கடவுளின் தூதுவர்களையும் தீர்க்கதரிசிகளையும் நிராகரித்துவிட்டார்கள். தனது சொந்தக் குமாரனாகிய இயேசுவை உலகத்திற்கு அனுப்பி வைத்தபோது அவரையும் கொலை செய்யத் திட்டமிடுகிறார்கள்.

வேதபாரகர்கள் இயேசுவின் போதனைகளைக் கேட்டு மனந்திரும்புவதை விட்டுவிட்டு மென்மேலும் கோபமும், வெறுப்பும் கொண்டு அப்போதே இயேசுவைக் கொன்றுபோட விரும்பினார்கள். ஆனால் சமயம் வாய்க்கட்டும் என்று காத்திருந்தனர்.

326. உள்ளே இருந்த விரோதி

மத். 26

பஸ்கா பண்டிகைக்காக இயேசுவும் சீஷர்களும் எருசலேமுக்குச் சென்றார்கள். வழியில் மக்களும் கூட்டம் கூட்டமாகப் பண்டிகைக்கு மகிழ்ச்சியாகச் சென்றவண்ணம் இருந்தனர். சீஷர்களும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டனர். அவர்கள் இயேசு ஒரு நாள் அரசனாக வருவார். நமக்கு முக்கிய பதவிகளைக் கொடுப்பார். அந்த நாள் எப்போது வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

ஆனால் இயேசுவோ அவர்களுக்குத் தான் இந்த பூமியை ஆளுகிற அரசனாகப்போவதில்லை என்று எச்சரித்தார். தன்னைப் பின்பற்றி வருபவர்களின் இதயத்தில் ஆட்சி செய்வேன் என்றும் சீக்கிரமே கொலை செய்யப்பட்டு, உயிர்த்தெழுந்தபின் உலகம் முழுவதிலும் கடவுளின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்றும் சொன்னார்.

சீஷர்களுக்கு இது சரியாகப் புரியவில்லை. ஆனால் யூதாஸ்காரியோத் என்ற சீஷன் மட்டும் இதை வேறு விதமாகப் புரிந்துகொண்டான். இவன் இயேசுவும் சீஷர்களும் கொண்ட கூட்டத்திற்கு பொக்கிஷதாரராக இருந்தான். இயேசு அரசனாகிவிட்டால் யூத இராஜ்யத்தில் பொக்கிஷதாரராகப் போகலாம் என்று பேராசைகொண்டிருந்தான். இவன் இந்த இயேசு ரோம இராஜ்யத்தை வென்று யூத இராஜ்யத்தை ஸ்தாபித்து அரசனாகப்போவதில்லை என்று அறிந்துகொண்டான். பெத்தானியாவில் மரியாள் பரிமளத் தைலத்தை இயேசுவின் பாதத்தில் ஊற்றிய அன்றே இயேசு தன் எதிர்காலத்தைப்பற்றி வேறுவிதமாகச் சொன்னது அவன் ஞாபகத்தில் வந்தது.

பதவி ஆசையும், பண ஆசையும் கொண்ட யூதாஸ் இதனால் ஏமாற்றமடைந்து வருந்தி, பணம் சம்பாதிக்க வேறு வழி தேட எண்ணினான். ஆலயத் தலைவர்கள் இயேசுவைப் பிடிக்க வகை தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தான். அவர்களிடம் தான் இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறேன் எனக்கு என்ன தருவீர்கள் என்றான். இயேசுவின் கூட்டத்திற்குள்ளேயே ஒருவன் இயேசுவைக் காட்டிக் கொடுக்க முன்வந்தது அவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. முப்பது வெள்ளிக் காசை அவன் கையில் கொடுத்தார்கள். அதை முன் பணமாக வைத்துக்கொண்டு இயேசு எங்கே போகிறார் எங்கே தங்கியிருக்கிறார் என்பதைச் சீக்கிரமே காட்டிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொண்டனர்.

இப்புதிய எஜமானர்களுக்கு விசுவாசமான ஊழியக்காரனாயிருக்க விரும்பி வேகமாக செயல்படலானான். யூதாஸ் காரியோத் பழைய எஜமானாகிய இயேசுவை விட்டுவிட்டான் அல்லவா?

327. பஸ்கா பண்டிகை ஆயத்தம்

மா. 14

பஸ்கா பண்டிகை வாரம் கடந்துகொண்டிருந்தது. பஸ்கா உணவைச் சமைக்கும் நேரமும் நெருங்கிவிட்டது. இந்த பஸ்கா பண்டிகை என்ன தெரியுமா? வெகு காலத்திற்கு முன் கடவுள் இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும், தலைச்சன் சங்கார அழிவிலிருந்தும் மீட்ட அந்த ஆண்டில் கடவுளுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு கொண்டாடப்பட்ட பண்டிகை தான். இந்தப் பண்டிகையை எப்படி அனுசரிக்க வேண்டுமென்று திட்டவட்டமாக மோசே கூறி உள்ளார். அதன்படி இஸ்ரவேல் மக்கள் வருடா வருடம் இப்பண்டிகையைக் கொண்டாடி வந்தனர்.

பஸ்கா உணவை எப்போது எப்படி என்னென்ன சமைப்பது என்பதைக்கூட மோசே குறிப்பிட்டுள்ளார். குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஆட்டு மாமிசத்தைச் சமைத்து கசப்புக் கீரையோடும் புளிப்பில்லாத மாவினால் செய்த அப்பத்தோடும் உண்பார்கள். இதை மக்கள் பாரம்பரியமாகத் தங்கள் குடும்பத்தாருக்குச் சொல்லி வந்தார்கள். இதன்மூலம் பரம்பரையாக இஸ்ரவேலர் எகிப்திலிருந்து மீண்டு வந்த வரலாற்றை அறிந்து வந்தனர்.

இந்த பஸ்கா உணவைத் தன் சீஷர்களோடு தனித்துச் சாப்பிட இயேசு விரும்பினார். இதுதான் தன் கடைசி பஸ்கா என்று உணர்ந்து எதிர்காலத்தைப்பற்றி சீஷர்களுக்கு

விளக்கிக்கூற அவர்களோடு தனித்திருக்க விரும்பினார். எருசலேம் நகரெங்கும் இப்பண்டிகைக்காக மக்கள் வந்து கூடியவண்ணம் இருந்ததால் இட நெருக்கடி ஏற்பட்டது. இயேசுவுக்கு ஒரு தனியிடம் தேவைப்பட்டது. சீஷர்களில் இருவரை அழைத்தார்.

பஸ்காவைப் பலியிடும் நாளாகிய புளிப்பில்லாத அப்பம் சாப்பிடுகிற முதலாம் நாளிலே அவருடைய சீஷர்கள் இயேசுவிடம் வந்து நீர் பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே போய் ஆயத்தம்பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள். இயேசு தமது சீஷரில் இருவரை நோக்கி, நீங்கள் நகரத்திற்குள்ளே போங்கள், அங்கே ஒரு மனிதன் தண்ணீர்க்குடம் சுமந்துகொண்டு எதிர்ப்படுவான். அவன் பின்னே போங்கள். அவன் எந்த வீட்டில் பிரவேசிக்கிறானோ அந்த வீட்டு எஜமானை நீங்கள் நோக்கி இயேசு தன் சீஷர்களோடு பஸ்காவை புசிக்கிறதற்கான தகுதியான இடம் எங்கேயென்று போதகர் கேட்கிறார் என்று சொல்லுங்கள்.

அவன் கம்பளம் முதலானவைகள் விரித்து ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டறையை உங்களுக்குக் காண்பிப்பான். அங்கே நமக்காக ஆயத்தம் பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார். அப்படியே அவருடைய சீஷர் புறப்பட்டு நகரத்தில் போய் தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டு பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.


328. இயேசுவின் தாழ்மை

யோ. 13

பஸ்கா உணவை உண்ண இயேசுவும் சீஷர்களும் மாடி அறையை அடைந்தனர். அவர்கள் களைத்துப்போய் காலில் தூசியோடு அமர்ந்திருந்தனர். அந்த அறையில் ஒரு குடத்தில் தண்ணீரும் அதன் அருகில் ஒரு அகலக் கோப்பையும் துண்டும் வைக்கப்பட்டிருந்தன. கோப்பையில் நீர் ஊற்றி துண்டை அதில் நனைத்து கால்களைச் சுத்தம் செய்யவேண்டும். இந்த வேலையை வீடுகளிலுள்ள வேலையாள் செய்வது வழக்கம். ஆனால் இங்கு இயேசு எழுந்து, தன் உடைகளைக் கழற்றிவைத்து, ஒரு துண்டை எடுத்து அரையிலே கட்டிக்கொண்டு பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த துண்டினால் துடைக்கவும் தொடங்கினார். அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி, 'ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா' என்றான். இயேசு 'நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை' என்றார். அதற்கு பேதுரு 'ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையும் கூடக் கழுவும்' என்றான்.

அவர்களுடைய கால்களை இயேசு கழுவின பின்பு, தம்முடைய உடைகளைத் தரித்துக்கொண்டு திரும்ப உட்கார்ந்து, நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? இதன் அர்த்தம் என்ன என்று உங்களுக்கு விளக்குகிறேன்.

'ஒருவன் தொண்டனாகவும் இருக்கத் தெரிந்திருக்கவேண்டும். தலைவனுக்குத் தாழ்மை



இயேசுவின் தாழ்மை (யோ. 13)

வேண்டும். தான் பெரியவன் என்ற கர்வத்தை விட்டு விட்டு பிறருடைய தேவைகளைக் கவனித்து ஊழியம் செய்யவும் தெரிந்திருக்கவேண்டும். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றும், தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் என்றும் கூறி உபதேசித்தார்.

நாமும்கூட அநேகருக்கு புத்திமதி சொல்லுகிறோம். ஆனால் இயேசு செய்து காட்டியது போல் நாமும் செய்வோமா?

329. கர்த்தரின் பந்தி

மா. 14

உணவு படைக்கப்பட்ட மேஜையின் முன் அமர்ந்தனர். இயேசு கவலையோடு இருக்கிறார் என்பதை அவர் முகம் காட்டியது. சந்தோஷமாக இருந்த சீஷரும் கவலைப்பட்டனர். 'உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்' என்று இயேசு சொன்னார். உடனே ஒவ்வொருவனும் தான் தானோ அவன் என்று கேட்டனர். யூதாஸ்காரியோத் புரிந்துகொண்டான். இயேசுவும் அவனைப் பகிரங்கமாகக் காட்டிக்கொடுக்காமல் அவனையும் மன்னித்து அன்பாகவே நடத்தினார்.

யூதாஸ்காரியோத் முகம் வேறுபட்டவனாக அமர்ந்திருந்தான். அவனுக்கு அப்பம் அளித்தபின் நீ செய்வதை சீக்கிரமாய்ச் செய் என்றார். மற்ற சீஷர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. யூதாஸ் பணப்பையை வைத்துக்கொண்டிருந்தபடியினால், அவன் போய் பண்டிகைக்குத் தேவையானவைகளைக் கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது, இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்தார்கள்.

ஆனால் யூதாஸ்காரியோத் உடனே எழுந்து வெளியே இருட்டில் மறைந்துபோனான். அதன் பின்பு பஸ்கா உண்ணும் பழக்கத்தை மாற்றி வேறுவகையாக உணவு அருந்தினர். அவர்கள் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள்.

அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி, இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுதான் இன்றைய வரை நாம் கடைப்பிடித்து வரும் இராப்போஜனம் என்னும் கர்த்தரின் பந்தி ஆகும். இதன் கருத்தை சீஷர்கள் அப்போது உணராவிட்டாலும் கடவுளின் பெரிதான திட்டத்தில் மனித குலத்தை இரட்சிக்கத் தன் சொந்தக் குமாரனாகிய இயேசுவை ரத்தம் சிந்தச்செய்து உலகின் பாவத்தை மன்னித்து அவர்களுக்கு புது வாழ்வுதரச் சித்தம் கொண்டார் என்பதை அறிந்துகொண்டனர்.



கர்த்தரின் பந்தி (மா. 14)

330. சீஷர்களை ஆயத்தப்படுத்துதல்

மா. 14

பஸ்கா உணவு முடிந்தபின் இயேசு சீஷர்களோடு வெகுநேரம் மனம்விட்டுப் பேசினார். எதிர்காலத்தில் நடக்கப்போவதைக் குறித்து அதாவது தனது மரணம் உயிர்த்தெழுதல் குறித்துப் பேசினார். அன்றிரவே சீஷர்கள் இயேசுவினிமித்தம் துன்பம் அடைந்து சிதறி ஓடிவிடுவார்கள் என்றார்.

அதைக்கேட்ட பேதுரு தான் மட்டும் அப்படி செய்யமாட்டேன் என்று அடித்துக் கூறினார். இயேசு அவனை நோக்கி 'இன்றைய இந்த ராத்திரியிலே சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்கு முன்னே நீ மூன்று தரம் என்னை மறுதலிப்பாய்' என்றார். அதற்கு பேதுரு 'உம்மோடே மரிக்கவும் நான் ஆயத்தமாய் இருக்கிறேன். ஆகவே மறுதலிக்க மாட்டேன்' என்றான். எல்லோரும் அப்படியே சொன்னார்கள்.

இயேசு அவர்களைப் பார்த்து 'உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. கடவுளிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்' என்றார்.

'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். நான் உயிர்த்தெழுந்த பின்பு கலிலேயாவில் உங்களைச் சந்திப்பேன்' என்று சீஷருக்கு வாக்களித்தார். அதன் பின்பு சீஷர்களுக்கு உறுதுணையாகப் பரிசுத்தாவியானவரை அனுப்பி அவர்களைத் திடப்படுத்துவதாயும், பரிசுத்தாவி சீஷர்களை பெலப்படுத்தி, ஞானத்தைக் கொடுத்து போதிக்கவேண்டிய வழியைக் காண்பிப்பார் என்றும் கூறினார். பின்பு பிரிந்து போகுமுன் சீஷர்களுக்கு ஒரு பரிசளித்தார். அது என்ன?' 'சமாதானம்'. 'சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன், உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.'

நானே வழியும் சத்தியமும் என்பதன் கருத்து என்ன? இயேசுதான் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள பாலம். பாலமாகிய இயேசுவின் வழியாகத்தான் நாம் கடவுளை நெருங்கமுடியும் என்பதே.

331. இயேசு கைது செய்யப்படுதல்

மத். 26

சீஷர்களுடன் பேசி முடிந்தபின் ஓய்வுக்காகவும் ஜெபம் செய்வதற்காகவும் கெத்செமனே என்னும் தோட்டத்திற்கு வந்தார்கள். பிறகு இயேசு சீடர்களை நோக்கி, 'நான் அதோ அங்கே போய் ஜெபம் செய்து கொண்டிருக்கையில் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள்' என்றார். பிறகு பேதுரு, யாக்கோபு, யோவானையும் அழைத்துக்கொண்டு சென்றார். அப்பொழுது அவர் மனத்துயரம் அடைந்து தத்தளிக்கத் தொடங்கினார். இயேசு அவர்களைப் பார்த்து 'நீங்கள் இங்கே தங்கி என்னோடு விழித்திருங்கள்' என்றார்.

அப்படிச் சொல்லி, அவர் சற்று அப்பால் போய் முகங்குப்புற விழுந்து, 'என் பிதாவே கூடுமானால் இந்த துன்பப் பாத்திரம் என்னை விட்டு நீங்கிப்போகக் கருணைகூறும். ஆயினும் என்னுடைய சித்தம் அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே செய்யும்' என்று மன்றாடினார். பிறகு தம் சீடர்களிடம் வந்து அவர்கள் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர் அவர்களை அப்படியே தூங்கும்படி விட்டு விட்டு, மறுபடியும் போய் முன்பு சொன்ன வார்த்தைகளையே சொல்லி ஜெபம் செய்தார். அப்பொழுது வானத்திலிருந்து தேவதூதர் ஒருவர் வந்து அவரைப் பலப்படுத்தினார்.

இயேசு மிகுதியான துக்கம் கொண்டவராய் மிகுந்த ஊக்கத்துடன் ஜெபம் செய்தார். அவர் வியர்வை இரத்தப் பெருந்துளிகள் போலத் தரையில் விழுந்தது. அவர் ஜெபம் செய்து முடித்தபின் எழுந்து சீடர்களிடம் சென்று 'இன்னுமா தூங்கி இளைப்பாறிக் கொண்டிருக்கிறீர்கள்? போதும், நேரம் வந்து விட்டது. இப்பொழுதே மனிதகுமாரன் பாவிகள் கையில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார். எழுந்திருங்கள், போவோம். என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் இதோ வந்துவிட்டான்' என்றார். இயேசு இவ்விதமாய்ப் பேசிக் கொண்டிருக்கும்போது, யூதாஸ் அங்கே வந்தான், அவனோடு ஒரு பெரிய கூட்டத்தார் வாள்கள், தடிகள், தீ பந்தங்கள், விளக்குகள் ஆகியவற்றோடு, அவ்விடத்திற்கு வந்தார்கள். அவர்கள் தலைமை ஆசாரியர்கள், வேத அறிஞர்கள், மூப்பர்கள் ஆகியோரால் அனுப்பப்பட்டவர்கள். 'நான் யாரை முத்தமிடுகிறேனோ அவர்தான் இயேசு, அவரைப் பிடித்துக்கொள்ளுங்கள்' என்று யூதாஸ் அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான்.

அப்படியே அவன் இயேசுவின் அருகில் வந்து, 'ரபீ வாழ்க' என்று சொல்லிக்கொண்டே முத்தமிட்டான். அப்பொழுது அவனைப் பார்த்து, 'நண்பனே முத்தத்தினாலா நீ மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய்' என்றார்.

அப்போது அவர்மேல் கைபோட்டு அவரைப் பிடித்தார்கள். இதைக் கண்ட பேதுரு கோபம்கொண்டு, ஒரு வேலைக்காரனை வலது காதை வெட்டினான். 'கடவுளின் சித்தம் நிறைவேறுகிறது. அதனால் இதெல்லாம் நடைபெறுகிறது. ஆகவே வீண் கோபம் வேண்டாம்' என்று சொல்லி இயேசு அந்தக் காதைத் தொட்டு உடனே குணமாக்கினார்.

இதற்குமேல் இங்கு நின்றால் ஆபத்து என்று பதறிக்கொண்டு சீஷர்கள் திசைக்கு ஒன்றாக ஓடிவிட்டனர். இயேசுவைப் படைவீரர்கள் பிடித்துக் கட்டி தலைமை ஆசாரியனுடைய அரண்மனைக்குக் கொண்டு சென்றார்கள்.



இயேசு ஜெபம் செய்தல் (மத். 26)



இயேசு கைது செய்யப்படுதல் (மத். 26)

332. இயேசுவை எனக்குத் தெரியாது

லூ. 22

அவர்கள் இயேசுவைப் பிடித்தபின்பு, பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டு போய் விட்டார்கள். பேதுருவும் தூரத்திலே பின் சென்றான். அவர்கள் முற்றத்தின் நடுவிலே நெருப்பை மூட்டி, அதைச்சுற்றி உட்கார்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்த போது, பேதுருவும் அவர்கள் நடுவிலே

உட்கார்ந்தான். அப்பொழுது ஒரு வேலைக்காரி அவனை நெருப்பண்டையிலே உட்கார்ந்திருக்கக் கண்டு, அவனை உற்றுப்பார்த்து இவனும் அவனோடிருந்தான் என்றாள்.

அதற்கு அவன், 'பெண்ணே, அவனை அறியேன்' என்று மறுதலித்தான். சற்று நேரத்துக்குப் பின்பு வேறொருவன் அவனைக் கண்டு, 'நீயும் அவர்களில் ஒருவன்' என்றான். அதற்குப் பேதுரு 'மனுஷனே, நான் அல்ல' என்றான். ஏறக்குறைய ஒரு மணி நேரத்துக்குப் பின்பு வேறொருவன் அவனைப் பார்த்து, ''மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான், இவன் கலிலேயன் தான்' என்று சாதித்தான்.

அதற்கு பேதுரு, 'மனுஷனே, நீ சொல்லுகிறதை அறியேன்' என்றான். அவன் இப்படிச் சொன்னவுடனே சேவல் கூவிற்று. அப்பொழுது இயேசு திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார். 'சேவல் இருமுறை கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய்' என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து வெளியே போய் மனங்கசந்து அழுதான்.



இயேசுவை எனக்குத் தெரியாது (லூ. 22).

333. யூதாஸ் காரியோத்து

மத். 27

இயேசுவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட பின்பு அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டு வந்து, 'குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ்செய்தேன்' என்றான். அதற்கு அவர்கள் 'எங்களுக்கென்ன, அது உன்பாடு' என்றார்கள்.

அப்பொழுது அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு புறப்பட்டுப் போய், நான்று கொண்டு செத்தான். பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசை எடுத்து, இது இரத்தக்கிரயமானதால், காணிக்கைப் பெட்டியிலே இதைப் போடலாகாதென்று சொல்லி, ஆலோசனை பண்ணின பின்பு, அந்நியரை அடக்கம் பண்ணுவதற்குக் குயவனுடைய நிலத்தை அதினாலே கொண்டார்கள்.

இதினிமித்தம் அந்த நிலம் இந்நாள் வரைக்கும் இரத்தநிலம் என்னப்படுகிறது. 'இஸ்ர



யூதாஸ் காரியோத்து (மத். 27)

வேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள்' என்று எரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று.

334. இயேசுவை தலைமைச் சங்கத்தின் முன் நிறுத்துதல்

லூ. 23

இயேசுவைக் கைது செய்தவர்கள் அவரைத் தலைமை ஆசாரியனாகிய காய்பாவின் வீட்டிற்குக் கொண்டு போனார்கள். அங்கே வேத அறிஞர்களும் மூப்பர்களும் கூடியிருந்தார்கள். அவர்கள் இயேசுவை மரண தண்டனைக்கு உள்ளாக்கும்படி அவருக்கு விரோதமாகப் பொய்சாட்சிகளைத் தேடினார்கள். பொய் சாட்சிகள் இருவர் வந்து, 'இவன் தேவாலயத்தை இடித்து விட்டு அதை மூன்று நாளில் என்னால் கட்டி எழுப்ப முடியும் என்று சொன்னான்' என்றனர்.

அப்பொழுது தலைமை ஆசாரியன் எழுந்து இயேசுவிடம் 'இவர்கள் உனக்கு விரோதமாகச் சொல்லுகிறார்களே அதற்கு நீ என்ன பதில் சொல்லுகிறாய்?' என்று கேட்டான். இயேசுவோ பதில் ஒன்றும் சொல்லாமல் அமைதியாயிருந்தார். மறுபடியும் தலைமை ஆசாரியன் அவரிடம், 'ஜீவனுள்ள தேவனுடைய நாமத்தில் நான் உன்னைக் கேட்கிறேன். நீ கடவுளுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்' என்று கேட்டான். அதற்கு இயேசு 'நான் கடவுளுடைய குமாரனாகிய கிறிஸ்துதான்' என்று சொன்னார்.

தலைமை ஆசாரியன் அதைக் கேட்டவுடனே தன் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு 'இவன் தேவதூஷணம் பேசினானே! இனிமேல் நமக்குச் சாட்சிகள் எதற்கு? இப்போது நீங்களே இந்த தேவநிந்தனையைக் கேட்டீர்கள். இதைக் கேட்ட நீங்கள் என்ன தீர்ப்பு அளிக்கிறீர்கள்?' என்று சங்கத்தாரைக் கேட்டான்.

அதற்கு அவர்கள் 'இவன் மரண தண்டனைக்கு உரியவன்' என்று கூக்குரலிட்டார்கள். அப்போது சிலர் இயேசுவின் முகத்தில் துப்பி அவர் தலையில் குட்டினார்கள். வேறு சிலர் அவர் கண்களைக் கட்டி, அவரது கன்னத்தில் அறைந்து 'கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யாரென்று ஞானதிருஷ்டியால் உணர்ந்து சொல்லும்' என்று கேலி செய்தார்கள்.



இயேசுவை தலைமைச் சங்கத்தின் முன் நிறுத்துதல் (லூ. 23)

335. இயேசு விசாரிக்கப்படுதல்

லூ. 23

இரவு முழுவதும் ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக இயேசு அன்னா காய்பா என்பவர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டார். அநேகர் இயேசுவின்மேல் பொய்க் குற்றங்களைச் சாட்டினார்கள். ஆனால் குற்றங்களை நிரூபிக்க முடியவில்லை. கடைசியாக பிரதான ஆசாரியன் இயேசுவை நேராகப்

பார்த்து 'உண்மையைச் சொல். நீ கடவுளின் குமாரனாகிய மேசியாவா?' என்று கேட்டான். இயேசு 'ஆம் நான் தான்' என்றார்.

இதுவே அவர்களுக்குப் போதுமான குற்றமாகத் தோன்றினது. இயேசு கொலை செய்யப்படத்தான் வேண்டும் என்று முடிவு கட்டினர். ஆனால் ரோம தேசாதிபதி தூக்குத்தண்டனை விதித்த பின் தான் கொலை செய்ய முடியும். ஆகவே இயேசுவை ரோம தேசாதிபதியாகிய பொந்தியுபிலாத்துவின் அரண்மனைக்குக் கூட்டிச் சென்றார்கள். கொலைத் தண்டனைக்கு ஏதுவான பொய்க் குற்றச்சாட்டுகளையும் ஜோடித்தனர். அங்கு இயேசுவை அரண்மனை சேவகர்கள் அடித்துத் துப்பி அறைந்து சித்திரவதை செய்து கேலி செய்தனர்.

பிலாத்து விசாரணை செய்தபின் இயேசுவை யூதர்கள் பொறாமையால்தான் கொல்ல விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டான். அநேக பொய்க் குற்றச் சாட்டுகளைக் கேட்டபின்னும் இயேசு குற்றமற்றவர் என்பதை அறிந்தான். அச்சமயம் எருசலேமுக்கு வந்திருந்த ஏரோதிடம் இவன் கலிலேயனோ என்று விசாரிக்க அனுப்பினார்.

ஏரோதும் எந்தக் குற்றமும் கண்டுபிடிக்க முடியாமல் பிலாத்துவிடம் மறுபடியும் அனுப்பிவிட்டான். பஸ்கா பண்டிகையின் போது யாராவது ஒரு குற்றவாளிக்கு சிறையிலிருந்து விடுதலை கொடுப்பது வழக்கம். அதன்படி இம்முறை இயேசுவுக்கு விடுதலை கொடுத்து விடுவோம் என்று பிலாத்து கூட்டத்தைப் பார்த்துச் சொன்னான்.

ஆனால் அவர்களோ சிறையிலிருந்த கொடிய கொலைகாரனான பரபாஸ் என்பவனை விடுதலை செய்து தரும்படியும் இயேசுவை சிலுவையில் அறையும்படி மறுபடியும் மறுபடியும் கூக்குரல் இட்டுக் கொண்டே இருந்தனர். பிலாத்து ரோம சட்டத்தின்படி இயேசு குற்றமில்லாதவராயிருந்தாலும் யூத மக்களின் பிடிவாதத்திலிருந்து இயேசு விடுதலைபெற முடியாது என்று கண்டு மக்களைப் பிரியப்படுத்த பரபாசை விடுதலையாக்கி இயேசுவைச் சிலுவையில் அறையும்படி பாவிகளிடம் ஒப்புக் கொடுத்தான்.

இந்தக் குற்றமில்லாத மனிதன் இரத்தம் சிந்துதலுக்கு நான் எவ்விதத்திலும் காரணம் அல்ல என்று தெரிவித்து எல்லார் முன்னிலையிலும் தன் கைகளைக் கழுவினான்.



இயேசு விசாரிக்கப்படுதல் (லூ. 23)



இயேசு கேலி செய்யப்படுதல் (லூ. 23)

336. கொல்கதாவுக்குப் போகும் வழி

மா. 15

இயேசுவை வாரினால் அடித்து சிலுவையில் அறைய வேண்டும் என்று தீர்ப்பாகி விட்டது. அப்பொழுது போர்ச்சேவகர் அவரைத் தேசாதிபதியின் அரண்மனையாகிய மாளிகையில் கொண்டுபோய், அவ்விடத்தில் போர்ச்சேவகருடைய கூட்ட முழுவதையும் கூடிவரச் செய்து சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள் முடியைப் பின்னி அவருக்குச் சூட்டி யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரை வாழ்த்தி அவரை சிரசில் கோலால் அடித்து, அவர்மேல் துப்பி, முழங்கால்படியிட்டு அவரை வணங்கினார்கள்.

அவரைப் பரியாசம் பண்ணினபின்பு, சிவப்பான அங்கியைக் கழற்றி, அவனுடைய உடைகளை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி வெளியே கொண்டுபோனார்கள். கனமான மரத்தால் ஆன சிலுவையை அவர் தோள்மேல் சுமத்தி அவரை அடித்து துன்புறுத்தி நடத்திக்கொண்டு போனார்கள். அவரை நேராக நடக்கக்கூடாதபடி பலவீனமாகி கீழே விழுந்தபோது சிரேனே ஊராகிய சீமோன் அந்த வழியாக வந்தான். அவன் அந்தச் சிலுவையைத் தன்மேல் சுமந்துகொண்டு செல்ல இயேசு போர் வீரர்களால் இழுத்துச் செல்லப்பட்டார். இப்படியாகக் கூட்டம் கொல்கதா என்னும் இடம் நோக்கிச் சென்றது. பெண்களும், குழந்தைகளும் அவரை நேசித்தவர்கள் குடும்பத்தினர் அழுதுகொண்டு பின் சென்றனர்.

இயேசு அவர்களைத் திரும்பிப் பார்த்து 'எனக்காக அழவேண்டாம், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்' என்று கூறினார்.



கொல்கதாவுக்குப் போகும் வழி (மத். 15)

337. சிலுவையில் இயேசு பேசிய ஏழு வாக்கியங்கள்

மா. 15; லூ. 23; யோ. 19


பேசிய ஏழு வாக்கியங்கள்

சிலுவையில் அறைவது என்பது ரோம ராஜ்யத்தின் கொடிய தண்டனை. பெரிய மரச் சிலுவையை தரையில் கிடத்தி அதில் குற்றவாளியைக் கை இரண்டிலும் பெரிய ஆணிகளை அடித்து கால்கள் இரண்டையும் சேர்த்து மரத்தோடு ஆணி அடித்து அப்படியே தரையிலிருந்து நிமிர்த்தி ஊன்றிவிடுவார்கள். அதில் தொங்கும் மனிதன் இரத்தம் கசிந்து வேதனையில் உருகி வெயிலிலும், தூசியிலும் தாகத்தால் வருந்தி உயிர்விடுவான்.

இத்தகைய கொடிய தண்டனையை ஒரு குற்றமும் செய்யாத இயேசுவுக்குக் கொடுத்தனர். இயேசுவை நடுவிலும் இரண்டு பக்கங்களிலும் இரண்டு சிறைக் குற்றவாளிகளையும் சிலுவையில் அறைந்தனர். அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார் என்னும் வேத வாக்கியம் இப்படி நிறைவேறியது.

அங்கு கூடியிருந்த வேதபாரகர்கள், பிரதான ஆசாரியர்கள் 'பிறரை இரட்சித்தானே, தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும். சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும்' என்று கேலி செய்தனர். இயேசு 'பிதாவே இவர்கட்கு

மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்' என்றார் (முதல் வாக்கியம்). யூதருடைய ராஜா என்று எழுதிய பலகையைச் சிலுவையில் இயேசுவின் தலைக்கு மேலாகப் பொருத்தி வைத்தனர். சிலுவையில் அறையப்பட்டவர்களில் ஒருவன் இயேசுவிடம் 'நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்' என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி 'நாமோ நாம் செய்த தீவினைகளுக்குத் தண்டனை அடைகிறோம். ஆனால் ஒரு குற்றமும் இந்த இயேசு செய்யவில்லையே' என்று சொல்லி, இயேசுவை நோக்கி 'ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்' என்றான். அதற்கு இயேசு 'இன்றைக்கு நீ



சிலுவையில் இயேசு (மத். 15)

என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்' (இரண்டாம் வாக்கியம்) என்று வாழ்த்தினார். வேதனை அதிகமானதால் 'என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்' (மூன்றாம் வாக்கியம்) என்று கூறினார். அந்நிலையிலும் தன் தாயைப் பார்த்து தனக்குப் பதிலாகத் தாயை கவனித்துக்கொள்ள தன் உற்ற சிநேகிதன் யோவானைக் காட்டி 'இதோ உன் மகன்' என்று கூறி யோவானிடம் 'இதோ உன் தாய்' (நான்காம் வாக்கியம்) என்று தன் தாயைக் காட்டினார். யோவான் உடனே மரியாளைத் தன் தாயாக ஏற்றுக்கொண்டான்.

அந்த நேரம் பகல் நேரமாயிருந்தாலும் பூமி எங்கும் இருள் மூடியது. சூரியன் இருண்டு போனது. மரண நேரம் நெருங்கியது. 'தாகமாயிருக்கிறேன்' (ஐந்தாம் வாக்கியம்) என்றார். ஒருவன் கடற்காளானைக் காடியிலே தோய்த்து அதை ஒரு கோலில் மாட்டிக் குடிக்கக் கொடுத்தான். தான் மனித குமாரனாகப் பூமியில் பிறந்து கடவுளின் சித்தத்தின்படி செய்ய வேண்டிய கடமைகள் 'எல்லாம் முடிந்தது' (ஆறாம் வாக்கியம்) என்று கூறி 'தேவனே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்'. (ஏழாம் வாக்கியம்) என்று மகா சப்தமாய்க் கூப்பிட்டு தலையைச் சாய்த்து தன் ஜீவனை விட்டார். அப்போது தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. இதைக் கண்ட நூற்றுக்கு அதிபதி 'இவர் உண்மையிலே தேவ குமாரன் தான்' என்றான்.

338. இயேசுவின் மரணத்திற்குப்பின்

யோ. 19

இயேசு மரித்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்.

அந்தப்படி போர்ச்சேவகர் வந்து, அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டிருந்தவனுடைய காலெலும்புகளையும், மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவன் அவன் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.




யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்து செல்லல்
(யோ. 19)

அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான். அவனுடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப் படுவதில்லை என்கிற வேத வாக்கியம் நிறை வேறும்படி இவைகள் நடந்தது. அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள் என்று வேறொரு வேத வாக்கியம் சொல்லுகிறது. இவைகளுக்குப் பின்பு அரிமத்தியா ஊரானும், யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போகும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான். பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால் அவன் வந்து, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போனான்.

ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டு வந்தான். அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே துணிகளில் சுற்றிக் கட்டினார்கள்.

யோசேப்பு தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே இயேசுவின் சரீரத்தை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான். இதை மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் இன்னும் அநேகரும் பார்த்தார்கள்.



கன்மலையில் இயேசுவின் உடல் வைக்கப்படுதல் (யோ. 19)



இயேசுவின் மரணத்திற்குப் பின் (யோ. 19)

339. இயேசு உயிரோடு எழுந்தார்


யோ. 20

வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இருட்டு நீங்குமுன் மகதலேனா மரியாள், யாக்கோபின் தாயாகிய மரியாள் சலோமி என்பவர்களும் ஆண்டவருடைய கல்லறைக்குத் தாங்கள் ஆயத்தம் பண்ணின சுகந்தவர்க்கங்களை எடுத்துக்கொண்டு போனார்கள். நமக்குக் கல்லறைக் கல்லை புரட்டிக் கொடுப்பவன் யார்? என்று சொல்லிக்கொண்டு போகவே, ஏற்கெனவே அக்கல் புரட்டிக்கிடப்பதைக் கண்டனர். உடனே மகதலேனா மரியாள், சீமோன் பேதுரு, யோவான் என்பவர்களிடம் ஓடிப்போய் 'யாரோ ஆண்டவரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை' என்று அறிவித்தார்கள்.

அதற்குள் மற்ற பெண்கள் கல்லறைக்குச் சென்றார்கள். அப்பொழுது அங்கு பிரகாசமுள்ள ஆடை அணிந்த இருவரைக் கண்டார்கள். அவர்கள் இந்தப் பெண்களைப் பார்த்து உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை. அவர் உயிர்த்தெழுந்துவிட்டார். இதோ அவரை வைத்த இடம். இனி நீங்கள் போய் இந்தச் செய்தியை அவருடைய சீடர்களுக்கு அறிவியுங்கள் என்று சொன்னார்கள். அதைக் கேட்ட அந்தப் பெண்கள் நடுக்கமும், திகிலும் அடைந்தவர்களாய்க் கல்லறையைவிட்டு வெளியேறி, ஓடிப்போய் இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் இயேசுவின் சீடர்களுக்கு அறிவிக்கப்போனார்கள்.

வழியில் இயேசுதாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு வாழ்க என்றார். அவர்கள் கிட்ட வந்து

அவரைப் பணிந்துகொண்டார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி 'பயப்படாதிருங்கள், நீங்கள் போய், என் சீஷர்கள் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்' என்றார்.



இயேசு உயிர்த்தெழுதல் (யோ. 20)

அவர்கள் போகையில் காவல் சேவகரில் சிலர் நகரத்துக்குள்ளே வந்து நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள். இவர்கள் மூப்பரோடே கூடிவந்து, ஆலோசனை பண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து, 'நாங்கள் நித்திரை பண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து இயேசுவைக் களவாய்க் கொண்டுபோய் விட்டார்கள்' என்று சொல்லுங்கள். இது தேசாதிபதிக்குக் கேள்வியானால் நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள். அவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள். இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள் வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது.

340. எம்மாவூருக்குப் போகும் வழி

லூ. 24

இயேசு உயிர்த்தெழுந்த அதே நாளில் சீடர்கள் இருவர் எருசலேமிலிருந்து எம்மாவூ என்னும் சிற்றூருக்குச் சென்றுகொண்டிருந்தனர். அந்த ஊர் எருசலேமிலிருந்து ஏழு மைல் தூரத்தில் இருக்கிறது அவர்கள் நடந்த இந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் குறித்து ஒருவரோடொருவர் பேசிக்கொண்டே சென்றனர். இப்படி அவர்கள் பேசிக்கொண்டே நடக்கையில், இயேசு தாமே அவர்களுடன் நடந்துபோனார் என்றாலும் அவர் இன்னார் என்பதைக் கண்டுகொள்ளாதபடி அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தன. இயேசு அவர்களைப் பார்த்து 'நீங்கள் துக்கத்துடனே வழியில் பேசிக்கொள்ளும் இந்தக் காரியம் என்ன?' என்று கேட்டார். இப்படிக் கேட்டதும் அவர்கள் முகம் வாடி நின்றனர். அவர்களுள் ஒருவரான கிலேயோப்பா என்பவர் 'நீர் எருசலேமிலே இருந்தும் இந் நாட்களில் அங்கு நடந்தவற்றை அறியாமலிருக்கிறீர்போலும்' என்றான். அதற்கு இயேசு 'அங்கு நடந்தது என்ன?' என்றார். அதற்கு அவர்கள் 'நசரேயனாகிய இயேசுவைப்பற்றிய சங்கதிகளே, அவர் கடவுள் முன்னும் எல்லா மக்கள் முன்னும் செயலிலும் சொல்லிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாக விளங்கினார். அவரைப் பிரதான ஆசாரியர்களும் அதிகாரிகளும் மரணத் தீர்ப்புக்கு ஆளாக்கி சிலுவையில் அறைந்து கொன்றார்கள். நாங்களோ இஸ்ரவேல் மக்களை மீட்டு இரட்சிப்பார் என்று நம்பிக்கொண்டிருந்தோம். இவை எல்லாம் நடந்து மூன்று நாளாகிறது. என்றாலும் எங்களைச் சேர்ந்த பெண்களில் சிலர் அதிகாலமே கல்லறைக்குப் போய் அவருடைய உடல் அங்கே இல்லாததைக் கண்டு திரும்பி வந்தார்கள். அவர் உயிரோடு இருக்கிறார் என்று சொல்லும் தேவ தூதர்களைக் கண்டோம் என்று சொல்லி எங்களைப் பிரமிக்கப் பண்ணினார்கள். அப்பொழுது எங்களிலே சிலர் கல்லறைக்குப் போய் சொன்னவை அத்தனையும் உண்மை என்று கண்டோம்' என்றார்கள்.

அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி, 'அறிவில்லாதவர்களே, தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்க இயலாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து தமது மகிமைக்குள் செல்லுவதற்குமுன் இந்தப் பாடுகளை எல்லாம் அடைந்து தீரவேண்டுமல்லவா!' என்று சொன்னார். அதன்பின் மோசே முதல் தீர்க்கதரிசிகள் அனைவரும் தம்மைக் குறித்து எழுதியுள்ள வேதப் பகுதிகளையும் எடுத்து விளக்கினார்.

அவர்கள் எம்மாவுக்கு வந்ததும் இயேசு அதற்கப்பாலும் போகிறவர்போல தம்மைக் காண்பித்தார். மாலை நேரமாயிற்று பொழுது சாய்ந்துவிட்டது எங்களுடனே வந்து தங்கும் என்று வருந்திக் கேட்டார்கள். இயேசு அவர்

களுடனே போனார். பின்பு அவர்களோடு உணவருந்த உட்கார்ந்தார். அப்பொழுது அவர் அப்பத்தை எடுத்து துதி செலுத்தி, அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுது அவர்கள் கண்கள் திறக்கப் பட்டன. அவர்தான் இயேசு என்பதை அவர் கள் கண்டுகொண்டனர், உடனே அவர் மறைந்துபோனார்.

அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து 'அவர் நம்மோடு பேசிக்கொண்டு நமக்கு வேதத்தை விளக்கிக் காட்டும்போது நமது உள்ளம் கொழுந்துவிட்டு எரியவில்லையா?' என்று சொல்லி எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். அங்கே ஒன்றாகக் கூடியிருந்த பதினொருவரையும் அவர்களோடு இருந்தவர்களையும் கண்டார்கள். அங்கிருந்தவர்கள் ஆண்டவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்துவிட்டார். சீமோனுக்குக் காட்சியளித்தார் என்று சொன்னார்கள். இவர்களும் தாங்கள் எம்மாவுக்குப் போய்க்கொண்டிருந்த வேளையில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கையில் தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும் சீஷர்களுக்கு விவரமாகச் சொன்னார்கள்.

341. தோமாவின் கதை

யோ. 20

வாரத்தின் முதல் நாளாகிய அன்று சாயங்கால வேளையில் சீஷர்கள் கூடியிருந்த இடத்தில் யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், உயிர்த்தெழுந்த இயேசு வந்து நடுவே நின்று, 'உங்களுக்குச் சமாதானம்' என்றார். அந்தச் சமயம் திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனே கூட இருக்கவில்லை.

மற்ற சீஷர்கள் 'இயேசுவைக் கண்டோம்' என்று அவனிடம் சொன்னார்கள். அதற்கு தோமா, 'அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தைக் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்' என்றான். மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள். தோமாவும் அவர்களோடுகூட இருந்தான். கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று, 'உங்களுக்குச் சமாதானம்' என்றார்.

பின்பு அவர் தோமாவை நோக்கி, 'நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார். உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு' என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக 'என் ஆண்டவரே! என் தேவனே' என்றான். அதற்கு இயேசு 'தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்' என்றார்.

இந்தத் தோமாதான் இந்தியாவிற்கு வந்த அப்போஸ்தலன். மலையாளப் பகுதியில் சபைகளை ஸ்தாபித்துப் பின் சென்னைக்கு வந்து பரங்கிமலையில் ஒரு குடிசையில் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது ஈட்டியால் விலாவில் குத்தப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார் என்பது வரலாறு. இதன்மூலம் கிறிஸ்துவின் நற்செய்தி இந்தியாவுக்கு வந்து சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதும் தெளிவாகிறது. இன்று இந்தியாவில் கிறிஸ்தவ மக்களின் எண்ணிக்கை இந்திய ஜனத்தொகையில் இரண்டரை சதவிகிதம் ($2\frac{1}{2}$%) மட்டுமே.



தோமாவின் கதை (யோ. 20)

342. இயேசு கலிலேயாவில் சீடர்களுக்குக் கொடுத்த கட்டளை

மத். 28

இயேசு கலிலேயாவிலே தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் பதினொரு சீஷர்களும், போனார்கள். அங்கே அவர்கள் அவரைக் கண்டு பணிந்துகொண்டார்கள், சிலரோ சந்தேகப்பட்டார்கள். அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.

கலிலேயாவில் பதினொரு சீடர்களும் என்ன செய்வதென்று தெரியாமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். சீமோன் பேதுரு முன் போல் மீன் பிடிக்கப்போவதாக அறிவித்ததும் அவரோடுகூட இன்னும் சில சீஷர்களும் சேர்ந்துகொண்டனர். அன்றிரவே அவர்கள் கடலில் வலை வீசினர். ஆனால் மீன்கள் ஒன்றும் அகப்படவில்லை. விடிந்தபோது இயேசு கரையிலே நின்றார்.

அவர்கள் அவரை இயேசு என்று அறியவில்லை. 'ஏதாவது உணவுக்காகவாவது மீன் அகப்பட்டதா' என்று இயேசு கேட்க அவர்கள் 'இல்லை' என்றார்கள். அப்பொழுது அவர் 'உங்கள் படகுக்கு வலப்புறமாக வலையைப் போடுங்கள்' என்று சொன்னார். அவர்கள் அப்படிச் செய்தபோது வலை கிழிந்துபோகும் அளவிற்கு மீன்கள் அகப்பட்டன. அவற்றை வலையோடு இழுத்துக்கொண்டு கரை சேர்ந்த போது கரையில் நிற்பவர் இயேசு என்று உணர்ந்தார்கள்.

அவர்கள் கரையிலே வந்திறங்கினபோது கரி நெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள். இயேசு அவர்களை நோக்கி, 'வாருங்கள் உணவு உண்ணுங்கள்' என்றார். இது உயிர்த்தெழுந்த இயேசு மூன்றாம் முறை தம் சீஷர்களுக்கு தரிசனமான சம்பவம், அவர்கள் உணவு உட்கொண்ட பின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி 'யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?' என்று கேட்டார். அதற்கு அவன் 'ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்' என்றான். அவர் 'என் ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயாக' என்றார். இதே கேள்வியை மூன்று முறை கேட்டார். அதே பதிலைச் சொன்னார் பேதுரு. இயேசுவும் 'என் ஆடுகளை மேய்ப்பாயாக' என்று மூன்று முறையும் கட்டளையிட்டார்.

பேதுரு இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தேசமெங்கும் நற்செய்தி அறிவித்து அநேகரை கிறிஸ்துவுக்குள்ளாகக் கொண்டு வந்தார். அதினால் ரோமர்களால் கைது செய்யப்பட்டு இத்தாலி நாட்டில் சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு மரித்தார் என்பது வரலாறு. பரி. பேதுரு அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ரோம் நகரில் பரி. பேதுரு பேராலயம் பிரமாண்டமாகக் கட்டப்பட்டு உள்ளது. வத்திகன் நகரிலுள்ள போப் ஆண்டவர் ஆராதனை செய்யும் பேராலயம் இதுவே.

அப்போஸ்தலருடைய நடபடிகள்

முன்னுரை

லூக்கா என்னும் சுவிசேஷகன் இந்நூலை எழுதினார். தன்னுடைய நற்செய்தியின் நூல் தொடர்ச்சியாக இதை எழுதி உள்ளார்.

மருத்துவரான லூக்கா இயேசுநாதரின் அடியாராக விளங்கினார். லூக்கா நற்செய்தி நூலும் அப்போஸ்தலர் நடபடிகளும் தேயோப்பிலு என்ற விசுவாசியான புறஜாதியான அதிகாரிக்கு நிருபம் போன்று எழுதப்பட்டுள்ளது. லூக்கா யூதரும் அல்ல, இயேசுவின் சீஷரும் அல்ல. ஆனால் இயேசுவை விசுவாசித்த ஒரு புறமதஸ்தர்.


இந்த அப்போஸ்தலர் நடபடிகள் இயேசு பரத்துக்கேறியது, பரிசுத்தாவி ஊற்றப்பட்டது, அப்போஸ்தலர் இயேசுவின் நாமத்தை எங்கும் பிரசங்கித்தது. திருச்சபை வளர்ந்தது, பேதுருவின் ஊழியம், பிணியாளிகளை குணப்படுத்தியது. பிறகு புறமதத்தினரால் துன்புறுத்தப்பட்டது. இவையெல்லாம் கொண்டது. மேலும் ஸ்தேவான் இரத்தசாட்சியாய் மரித்தது, சுவிசேஷம் எங்கும் பரவியது. பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது. சுவிசேஷ ஊழியனாக மாறி எல்லா இடங்களிலும் இயேசுவைப் பிரசங்கித்து அதனால் ரோம அரசரால் சிறையில் அடைக்கப்பட்டு ரோம நகரத்தில் இரத்தசாட்சியாய் மரித்ததையும் கூறுகிறது.

343. இயேசுவின் பரமேறுதல்

அப். 1

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களில் அவர் அவருடைய சிநேகிதர்களுக்குப் பல தடவைகளில் தரிசனமானார். இயேசு அவரைப் பின்பற்றி வந்த அநேக மக்களுக்குக் காட்சி கொடுத்தார். ஏனெனில் ஒருவரும் இயேசு உயிருள்ளவராக எழுந்தார் என்று சந்தேகப்படாமல் இருப்பதற்காக அப்படிக் காட்சி கொடுத்தார்.

இயேசு ஒரு ஆவியல்ல. அவருடைய சிநேகிதர்கள் அவரைத் தொட்டு, அவரோடு போஜனம் பண்ணியும் வந்தனர். ஆனால் அவருடைய சரீரம் வித்தியாசமானதாக இருந்தது. அவர் மூடப்பட்ட கதவுகளுக்குள்ளும் நுழைந்தும், வெளியே போகவும் முடியும். இந்த வாரங்களில் இயேசு தனது சீஷர்கள் தான் மரிப்பதற்கு முன் விளங்கிக் கொள்ளாத அநேக காரியங்களை விளக்கினார். அவர் பழைய ஏற்பாட்டில் மேசியாவைக் குறித்து எழுதிய தீர்க்கதரினத்தை ஞாபகப்படுத்தினார். அவர் மக்களுக்காகப் பாடுபடவும் பின் உயிர்த்தெழுவதுபற்றியும் கூறியிருப்பதைக் கூறினார். ஆனால் யூதத் தலைவர்கள் வேதங்களைப் படித்தனர். ஆனால் மேசியாவை ஒவ்வொருவரும் ராஜாவாக முடிசூட்டுவார்கள் என்பதை மட்டும் ஏற்றுக்கொண்டனர்.



இயேசுவின் பரமேறுதல் (அப். 1)

ஒரு நாள் இயேசு சீஷர்களோடு ஒலிவமலைச் சரிவில் பேசிக்கொண்டிருக்கும்போது, அந்த நாளில் இயேசுவுக்கு முடிசூட்ட எத்தனித்துக் கேட்டனர். அதற்கு இயேசு கடவுள் அந்த நாளைத் தெரிந்துகொள்வார். நான் உங்களுக்குச் சொல்வது என்னவென்றால், உங்களுக்கு நான் கொடுக்கும் வேலையைச் செய்யுங்கள். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறேன். நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள். நீங்கள் எனக்கு எருசலேமிலும் பின் உலகம் முழுவதிலும் சாட்சியாக இருக்கவேண்டும் என்றார். மற்றவர்களுக்கு என்னைப்பற்றி போதித்துத் திருமுழுக்குக் கொடுங்கள் என்றார். நான் உங்களுக்குத் துணையாக பரிசுத்த ஆவியானவரை அனுப்புவேன். பரிசுத்தாவியானவர் வருகைக்காகக் காத்திருங்கள் என்கிறார்.

அப்பொழுது அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க உயர ஒரு மேகத்தின் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில் வெண்மையான வஸ்திரம் தரித்த இரண்டுபேர் கூடியிருந்தவர்களிடம் வந்து இயேசு வானத்துக்கு எப்படி ஏறிப் போனாரோ அப்படியே திரும்பவும் வருவார் என்று கூறினார்கள். அதன்பின்பு யூதாஸ்காரியோத்திற்குப் பதிலாக அப்போஸ்தலரைத் தெரிந்தெடுக்க யோசேப்பு, மத்தியா என்ற இருவரையும் நிறுத்தி ஜெபம் செய்து சீட்டுப்போட்டனர். மத்தியாவின் பெயருக்குச் சீட்டு விழுந்தது. எனவே மத்தியா அப்போஸ்தலரில் ஒருவனாக பன்னிரெண்டாவது நபராக சேர்த்துக்கொள்ளப்பட்டான்.

344. பரிசுத்தாவியானவரின் வருகை

அப். 1,2

இயேசுவானவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் பெண்களும் அவர் தாயாராகிய மரியாள்; சகோதரர்களோடுங்கூட ஒருமைப்பட்டு ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். பஸ்கா பண்டிகை முடிந்து ஏழு வாரம் கழித்தபின் யூதர்கள் பெந்தெகோஸ்தே பண்டிகை கொண்டாடுவார்கள். அச்சமயம் உலகிலுள்ள யூதர்கள் யாவரும் எருசலேமில் ஒன்றுகூடி பண்டிகையைக் கொண்டாடுவார்கள்.

அந்த சமயம் ஒரு அற்புத சம்பவம் நடந்தது. அப்பொழுது பலத்தக் காற்று அடிக்கிற முழக்கம்போல சடுதியாய் வானத்திலிருந்து ஒரு முழக்கம் உண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அக்கினிமயமான நாவுகள்போல பிரிந்திருக்கும் நாவுகள் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்கள் உள்ளத்தில் கிடைத்த உணர்வு, அமைதி மறக்க முடியாததாக இருந்தது. இயேசு உயிருடன் இருந்த சமயம் சொன்ன வாக்குத்தத்தம் நிறைவேறிற்று. பரிசுத்த ஆவியானவர் அவர்கள் உள்ளத்தில் நெருங்கி உண்மையாகவும், நித்தியமாகவும் தங்கினர்.

அவர்களெல்லாரும் ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினர்கள். அந்தச் சத்தம் உண்டானபோது திரளான மக்கள் கூடிவந்து தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதைக் கேட்டபடியினலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்துச் சந்தேகப்பட்டு இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். மற்றவர்களோ இவர்கள் மதுபானத்தினுல் நிறைந்திருக்கிருர்களென்று பரியாசம் பண்ணினர்கள்.

அப்பொழுது பேதுரு எழுந்துநின்று உரத்த சத்தமாய் மக்களைப் பார்த்து 'யோவேல் தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நடந்தேறுகிறது' என்று சொன்னர். மேலும் 'கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். என்னுடைய ஊழியக்காரர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். அல்லாமலும் உயர வானத்திலே தாழப் பூமியிலே இரத்தம், அக்கினி புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்போது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன் இரட்சிக்கப்படுவான்' என்று கடவுள் உரைக்கிருர் என்று கூறி பின்னும் 'இஸ்ரவேலிலே நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனுகிய இயேசுவைக்கொண்டு கடவுள் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினலே தாம் கடவுளுடையவர்கள் என்பதை உங்களுக்கு வெளிப்படுத்தினர். அந்த இயேசுவையே நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். கடவுள் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவர் உயிர்த்



பெந்தேகொஸ்தே பண்டிகை (அப். 1,2)

தெழுந்தார். இதற்கு நாங்கள் எல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்' என்றார். உடனே இஸ்ரவேலர்கள் இருதயத்திலே குத்தப்பட்ட வர்களாகி நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்க, பேதுரு நீங்கள் மனந்திரும்பி இயேசுகிறிஸ்து நாமத்தில் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளுங்கள். அப்போது பரிசுத்தாவியின் வரத்தைப் பெறுவீர்கள்' என்றார். உடனே மூவாயிரம் பேர் அவர் வார்த்தையை ஏற்றுக் கொண்டு சபையில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் கூடி உணவு அருந்துவதிலும் ஜெபம் செய்வதிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். தினமும் கடவுளைத் துதித்து மக்களெல்லாரிடத்திலும் தயவுபெற்று வாழ்ந்தனர்.

345. பெந்தெகொஸ்தே பண்டிகை

அப். 2

ஆதித் திருச்சபை ஸ்தாபிக்கப்பட்ட காலத்தையும் இது குறிக்கிறது. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தாவி ஊற்றப்பட்டபின் கல்வியறிவில்லாத, பயந்த சுபாவமும், குழப்பமான எண்ணங்களும் கொண்டிருந்த சீஷர்கள் எப்படி மாறினார்கள்? அவர்கள் பெலனடைந்து பல இடங்களில் பல பாஷைகளில் பிரசங்கித்தார்கள். அன்று சுமார் மூவாயிரம் பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர் என்று பார்க்கிறோம். அன்று வளர ஆரம்பித்த சபை இன்னும் வளர்ந்துகொண்டே இருக்கிறது.

பெந்தெகொஸ்தே என்பது பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூதர்கள் விருந்து கொண்டாடும் ஒரு விழா நாள். அந்நாளிலே அறுவடையின் முதல் பலன்களைக் கடவுளுக்குப் படைத்து நன்றி சொல்வார்கள். அதுபோல அன்று பரிசுத்தாவி ஊற்றப்பட்டதின் அறுவடையாக மூவாயிரம் பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். பின்னால் வரப்போகும் பெரிய ஆன்மீக அறுவடையைக் குறிக்கும் அடையாளமாக இச்சம்பவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனால் சாதாரண அறுப்பின் பண்டிகையாக ஆசரிக்கப்பட்ட நாள் பரிசுத்தாவியின் பண்டிகையாக மாறிவிட்டது. மேல் நாடுகளில் இயேசு பரத்துக்கேறினதைப் பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள். பரிசுத்தாவியின் பெந்தெகொஸ்தேயையும் பண்டிகையாகக் கொண்டாடி வருகின்றனர்.

346. வளரும் திருச்சபை

அப். 3,4

சுகமளித்தலும் குழப்பமும்

ஒரு நாள் பேதுருவும், யோவானும் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்திற்குச் சென்றார்கள். அப்பொழுது சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனை சுமந்துகொண்டு வந்து, பிச்சை கேட்கும்படி தேவாலய வாசலண்டையிலே வைத்தார்கள். அவன் வழக்கம்போல் அங்கு வந்த பேதுரு யோவானிடம் பிச்சை கேட்டான். பேதுரு உடனே அவனை 'என்னை நோக்கிப்பார், என்னிடம் பொன்னும், வெள்ளியும் இல்லை. இயேசுவின் நாமத்தில் எழுந்து நட' என்று சொல்லி வலது கையினாலே அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான். அவன் உடனே குதித்தெழுந்து தேவனைத் துதித்துக்கொண்டு நடந்து போனான். இதைக் கண்ட மக்கள் பிரமித்தார்கள். பேதுரு உடனே இவர்களைப் பார்த்து 'எங்கள் சுய பக்தியினாலாவது, சக்தியினாலாவது இவனை நடக்கப் பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்காமல், ஜீவாதிபதியாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்போது ஆசீர்வதிக்கப்படுவீர்கள்' என்று போதித்தார். உடனே ஆசாரியர்களும், சதுசேயரும் இவர்கள் இருவரையும் பிடித்து காவலில் வைத்தார்கள். ஏனெனில் இவர்கள் இயேசுவை முன்னிட்டு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலை பிரசங்கித்ததினால் கோபங்கொண்டனர்.

மறு நாளிலே பிரதான ஆசாரியன், அன்னா காய்பா அவன் குடும்பத்தார், யோவான் எல்லோரும் எருசலேமில் கூடி பேதுரு, யோவானை நிறுத்தி எந்த வல்லமையினால்,

எந்த நாமத்தினாலே இந்த அற்புதத்தைச் செய் தீர்கள் எனக் கேட்டனர். பேதுரு ஆவியினால் நிறைந்து மக்களின் அதிகாரிகளே, இஸ்ர வேலின் மூப்பர்களே, பிறவிச் சப்பாணி நடக் கிற இந்தக் காரியம் உங்களாலே சிலுவையில் அறையப்பட்டவரும், கடவுளால் மரித்தோரி லிருந்து எழுப்பப்பட்டவருமாகிய நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே நடந்தது என்றான். அன்று சுமார் ஐயாயிரம் பேர் இயேசுவை விசுவாசித்தனர்.



வளரும் திருச்சபை (அப். 3,4)

347. அனனியா, சப்பீராள்

அப். 5

அப்போஸ்தலரும் விசுவாசிகளும் ஒரே இருதயமும், ஒரே மனமும் உள்ளவர்களாய் வாழ்ந்து வந்தனர். அவரவர் நிலம், பொருட் கள், வீடுகள் விற்று மொத்தமாக வைத்து தனது பொருள் என்றில்லாமல் எல்லோருக் கும் பொதுவாக வைத்து உபயோகித்தனர். யாவருக்கும் எந்தக் குறைவும் இல்லாமல் சந்தோஷமாக அனுபவித்து வந்தார்கள்.

அந்தச் சமயத்தில் அனனியாவும் அவன் மனைவி சப்பீராளும் தங்கள் காணியாட்சிகளை விற்று ஒரு பங்கை வஞ்சித்துவிட்டு ஒரு பங்கைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத் திலே வைத்தார்கள். பேதுரு இதை அறிந்து அனனியாவினிடத்தில் 'நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத் தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? நீ மனுஷனிடத்தில் அல்லாமல் தேவனிடத்தில் பொய் சொன்னாய்' என்றான். இதைக் கேட்ட வுடன் இருதயத்திலே குத்தப்பட்டவனாய்க் கீழே விழுந்து ஜீவனை விட்டான். யாவருக்கும் பயம் உண்டாயிற்று. வாலிபர் சேலையில் சுற்றி அவனை அடக்கம் பண்ணினார்கள்.

மூன்று மணிநேரம் கழித்து சப்பீராள் உள்ளே நுழைந்தபோது, பேதுரு நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள் என்றான். ஆம் என்றாள். கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிற தற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ உன் புருஷனையும் அடக்கம் பண்ணின வர் கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் கொண்டுபோவார்கள் என்றவுடனே பேதுருவினுடைய பாதத்தில் அவளும் விழுந்து ஜீவனை விட்டாள். அவளையும் புருஷனண்டை யிலே அடக்கம் செய்தனர்.

சபையினரெல்லாருக்கும் இவைகளைக் கேட்ட மற்றவர் யாவருக்கும் மிகுந்த பயம் உண்டா யிற்று. ஆனால் அப்போஸ்தலரோ மக்களுக் குள்ளே அநேக அற்புத அடையாளங்களைச் செய்தார்கள். திரளான ஆண்களும் பெண் களும் விசுவாசமுள்ளவர்களாகக் கர்த்தரிடத் தில் அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டனர். பிணியாளிகளைப் படுக்கை, கட்டில் மேலும் கிடத்தி பேதுருவின் நிழலாகிலும் பட்டுச் சுக மடையக் கொண்டு வந்தனர். மேலும் சுற்றி யுள்ள பட்டணங்களிலிருந்து திரளான பிணி யாளிகளையும், அசுத்தாவி பிடித்த மக்களையும் எருசலேமுக்குக் கொண்டு வந்தனர். அவர்க ளெல்லாரும் இயேசுவின் நாமத்தில் குணமாக் கப்பட்டனர். அப்போது பிரதான ஆசாரியனும் சதுசேய சமயத்தார் அனைவரும் எழும்பி, பொறாமையினால் நிறைந்து. அப்போஸ்தலர் களைப் பிடித்து பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள்.

348. பேதுரு சிறையிருப்பிலிருந்து விடுதலை

அப். 5

சிறைச்சாலையில் அப்போஸ்தலர்களை வைத்து வைக்கமுடியவில்லை. ஏனெனில் கர்த்தருடைய தூதன் இராத்திரியில் சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே கொண்டுவந்து, நீங்கள் போய்த் தேவாலயத்தில் இந்த ஜீவ வார்த்தைகளை மக்களுக்குப் போய்ச் சொல்லுங்கள் என்றான். உடனே அவர்கள் அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்து போதகம் பண்ணினார்கள்.

பிரதான ஆசாரியனும், மூப்பரெல்லாரையும் வரவழைத்து அப்போஸ்தலர்களைக் கொண்டுவரும்படி சேவகரைச் சிறைச்சாலைக்கு அனுப்பினார்கள். அங்கு அவர்கள் இல்லை என்று அறிவிக்கப்பட்டது. இந்தச் சங்கதியைக் கேள்விப்பட்டபோது பிரதான ஆசாரியரும் மற்றவர்களும் கலக்கமடைந்தனர். அப்போது ஒருவன் வந்து நீங்கள் காவலில் வைத்த மனிதர் தேவாலயத்தில் நின்று மக்களுக்குப் போதகம் பண்ணுகிறார்கள் என்று அவர்களுக்கு அறிவித்தான் உடனே சேனைத் தலைவன் சேவகருடன் போய் அவர்களை அழைத்துக்கொண்டு வந்தான். ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக நிறுத்தி நீங்கள் இந்த இயேசுவின் நாமத்தைக் குறித்து போதகம் பண்ணக்கூடாது என்று உறுதியாகக் கட்டளையிட, நீங்கள் கீழ்ப்படியாமல், இதோ எருசலேமை உங்கள் போதகத்தினால் நிரப்பி இயேசுவின் இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்துகிறீர்களே என்றான், பிரதான ஆசாரியன்.

அதற்கு பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் மறுமொழியாக 'மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் கடவுளுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்றும், நீங்கள் மரத்திலே தூக்கின இயேசுவை நம் கடவுள் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவ மன்னிப்பையும் அருளுகிறதற்காக அவரை இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார் என்ற உண்மை சம்பவங்களுக்கு நாங்கள் சாட்சியாகவும் பரிசுத்த ஆவியானவருக்கும் சாட்சியாக இருக்கிறோம்' என்றார்கள். இதைக் கேட்ட அவர்கள் மூர்க்கமடைந்து அவர்களைக் கொலை செய்ய வகை தேடினார்கள்.

பரிசேயரில் ஒருவனான கமாலியேல் அவர்கள் செய்யப்போகிற காரியத்தைக் குறித்து எச்சரித்தான். 'ஏனெனில் தெயுதாஸ், யூதாஸ் என்பவர்கள் எழும்பி தங்களைப் பின்பற்ற வேண்டுமென்று அநேக மக்களை தம் பக்கமாக இழுத்தனர். ஆனால் அவர்களும் அந்த இருவரும் அழிந்துபோயினர். அவர்களை நம்பின மக்களும் சிதறடிக்கப்பட்டனர். ஆனால் இந்தக் காரியம் தேவனால் உண்டாயிருந்ததேயானால் அதை ஒழித்துவிட உங்களால் கூடாது' என்றான், என்றாலும் அப்போஸ்தலர்களை அடித்து இயேசுவின் நாமத்தைக் குறித்து பேசக்கூடாது என்று எச்சரித்து விடுதலை பண்ணினார்கள். ஆனால் இவர்களோ யாருக்கும் செவிகொடாமல் இயேசுவின் நாமத்தை தினந்தோறும் தேவாலயத்திலும் வீடுகளிலும் பிரசங்கித்தார்கள்.

349. இரத்தசாட்சி ஸ்தேவான்

அப். 6,7

இந்த நாட்களில் இயேசுவின் சீஷர்கள் அதிகமாக இருந்தனர். கிரேக்கர்கள் தங்கள் விதவைகள் சரியாக விசாரிக்கப்படவில்லை என்று எபிரேயருக்கு விரோதமாய் முறுமுறுத்தனர். அப்பொழுது பன்னிருவரும், சீஷர் கூட்டத்தைக் கூட்டி நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல் பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல என்று கூறி, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். உடனே அவர்களில் விசுவாசமும், பரிசுத்த ஆவியும் நிறைந்த நற்சாட்சி பெற்றிருந்த ஏழுபேரைத் தெரிந்துகொண்டார்கள். அதில் ஸ்தேவான் ஒருவரும் மற்ற ஆறுபேரும் அப்போஸ்தலர் முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். சீஷர்கள் ஜெபித்து அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள். பின்பு தேவவசனம் விருத்தியடைந்தது. சீஷருடைய தொகை அதிகமாக எருசலேமில் பெருகிற்று.

ஸ்தேவான் விசுவாசத்தினாலும் பரிசுத்தாவியின் வல்லமையினாலும் நிறைந்தவனாக மக்

களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து வந்தான். சிரேனே, அலெக்சந்திரியா, ஆசியா தேசத்தாரில் சிலர் எழும்பி ஸ்தேவானுடன் தர்க்கம் பண்ணினார்கள். அவருடைய ஞானம், பரிசுத்த ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாததால், இவன் தூஷண வார்த்தைகளைப் பேசக் கேட்டோம் என்று சொல்லும்படி பொய்ச் சாட்சிகளையும் நிறுத்தினர். ஆலோசனை சங்கத்தார் அனைவரும் அவர்மேல் கண் வைத்தனர். ஸ்தேவான் முகம் தேவதூதன் முகம்போலிருந்தது. அவர் பேசத் தொடங்கினார்: நீங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாதவர்கள், பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்கிறவர்கள். தீர்க்கதரிசிகளை கொலை செய்தவர்கள். இப்பொழுதும் இயேசுவுக்கு துரோகிகளும் அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள் என்றான். இவைகளைக் கேட்டவுடனே கோபமடைந்து பற்களைக் கடித்தார்கள் ஸ்தேவான் பரிசுத்தாவியினாலே நிறைந்து வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் கடவுளுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றார். உடனே மக்கள் அவன்மேல் பாய்ந்து நகரத்திற்குப் புறம்பே தள்ளி கல்லெறிந்து கொன்றார்கள்.

அப்போது ஸ்தேவான் முழங்காற்படியிட்டு கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று கடவுளை தொழுதுகொண்டிருந்தான். பின்னும் இவர்கள்மேல் இந்த பாவத்தை சுமத்தாதிரும் என்று சொல்லி ஜீவனை விட்டார் இரத்த சாட்சியாக மரித்தார். தேவபக்தியுள்ள மனிதர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி அவனுக்காகத் துக்கம் கொண்டாடினர்.

350. பிலிப்புவின் ஊழியம்

அப். 8

அப்போஸ்தலர் பல இடங்களிலும் பிரிந்து போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தனர். அப்பொழுது பிலிப்பு என்பவர் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப்போய் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கித்தும், அதிசயங்களையும் செய்துகொண்டிருந்தார். அநேகரிலிருந்து அசுத்தாவி மிகுந்த சத்தத்தோடு கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டுப் போனது. அநேக திமிர்வாதக்காரரும், சப்பாணிகளும் குணமடைந்து வந்தனர். இதனால் பட்டணத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று.

பிலிப்பு செய்த அற்புதங்களைக் கண்டும் பிரசங்கங்களைக் கேட்டும் அநேக மக்கள் திருமுழுக்குப் பெற்றனர். அதில் சீமோன் என்னும் மாயவித்தைக்காரனும் ஒருவன் இருந்தான். ஒரு நாள் திடீரென்று கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி, நீ எழுந்து காசா பட்டணத்திற்கு வனாந்திர மார்க்கமாய்ப் போ என்றார். அப்படியே பிலிப்பு போனான். அச்சமயம் எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவருக்கு மந்திரியும், கருவூலத் தலைவனுமாயிருந்த ஒருவன் எருசலேமுக்குக் கடவுளைப் பணிந்துகொள்ள வந்திருந்தான். திரும்பிப் போகும்போது தன் இரதத்தில் உட்கார்ந்து ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தை வாசித்துக்கொண்டே போனான். அச்சமயம் பிலிப்பு பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் அந்த இரதத்தில் ஏறி எத்தியோப்பியனை நோக்கி, நீ வாசிக்கிறதின் கருத்து உனக்குத் தெரியுமா என்றான், அது எனக்கு எப்படித் தெரியும்? அதை ஒருவன் எனக்குத் தெரியப்படுத்த வேண்டுமல்லவா என்றான். உடனே பிலிப்பு இயேசுவைக் குறித்து இதில் சொல்லப்பட்டிருக்கிறது என்று விளக்கிக் கூறினார். உடனே அவன் விசுவாசித்து தண்ணீரைக் கண்டவுடன் இரதத்தை நிறுத்தி பிலிப்புவினால் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டான். பின் மந்திரி பிலிப்புவைக் காணாமல் சந்தோஷமாக தன் வழியே போனான். பிலிப்புவோ பரிசுத்தாவியானவரால் செசரியாவிற்குக் கொண்டுபோகப்பட்டார். அங்கே அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார், அநேகர் விசுவாசிகளானார்கள்.

351. கடவுள் சவுலைத் தெரிந்தெடுத்தல்

அப். 9

சவுல் என்பவன் யூத குலத்தில் பிறந்தவன். தர்சிசில் வாழ்ந்தவன், மிகவும் படித்த திறமை வாய்ந்த வாலிபன். கிரேக்கு, லத்தீன் மொழி தெரிந்தவன். ரோம நாட்டுக் குடிமகன். பரிசேயன் என்று சொல்லக்கூடிய அளவு எருசலேமில் யூதருக்கு ஆசிரியரான கமாலியேல் என்பவரிடம் கல்வி கற்றவன். இயேசுவைப் பற்றிய புதிய போதனைகளை அடியோடு அழிக்க மிகவும் பிரயாசப்பட்டவன். ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்படுவதற்கு உடந்தையாயிருந்தவன். இன்னும் கர்த்தருடைய சீஷர்களைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி பிரதான ஆசாரியரிடத்திற்குப் போனவன். இயேசுகிறிஸ்து மார்க்கத்தாராகிய ஆண்களையும் பெண்களையும் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினவன்.

அவன் பிரயாணமாய்ப் போய்த் தமஸ்குவுக்குச் சமீபித்தபோது சடுதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது. உடனே சவுல் தரையிலே விழுந்தான். வானத்திலிருந்து சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன், ஆண்டவரே, நீர் யார் என்று கேட்க, 'கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம், என்றார். அவன் திகைத்து ஆண்டவரே 'நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்' என்றான். உடனே கர்த்தர் 'நீ எழுந்து பட்டணத்திற்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும், என்றார்.

சவுல் எழுந்து கண்கள் தெரியாதவனாய் இருந்ததால் கைலாகு கொடுத்து அவனை தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். அவன் அங்கு மூன்று நாள் பார்வையில்லாமலும், உணவு உட்கொள்ளாமலும் இருந்தான். கர்த்தர் அனனியாவிற்கு தரிசனமானார். நீ எழுந்து நேர்த் தெருவுக்குப் போ, யூதாவின் வீட்டில் சவுல் என்பவன் ஜெபம் பண்ணும்போது அனனியா தன்மேல் கை வைக்கவும், தான் பார்வையடையவும் தரிசனம் கண்டான் என்றார். அதற்கு அனனியா கடவுளிடம் உம்முடைய பரிசுத்தவான்களுக்கு தீங்கு செய்தவன், ஆசாரியர்களால் அதிகாரம் பெற்று அவர்களைக் காவலில் போட எத்தனித்தவன் என்று கூறினான். அதற்கு கர்த்தர் நீ அவனிடம் போ, திருமுழுக்குக் கொடு என்றார். அவன் புறஜாதிகளுக்கும், இராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தைச் சொல்ல நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான், என் நிமித்தம் அதிகப் பாடுபடவேண்டுமென்பதை அவனுக்குக் காண்பிப்பேன் என்றார். உடனே அனனியா சவுலிடம் சென்று அவனுக்கு திருமுழுக்குக் கொடுத்தார்.



கடவுள் சவுலைத் தெரிந்தெடுத்தல் (அப். 9)

352. பவுலின் மனமாற்றமும் ஊழியமும்

அப். 9

சவுல் யூதாவின் வீட்டில் பார்வையற்றவனாய் இருக்கும்போது தான் கண்ட தரிசனத்தின்படி அனனியா தன்னிடம் வந்து அவன்மேல் கைகளைவைத்து சகோதரனாகிய சவுலே உனக்கு தரிசனமான இயேசு நீ பார்வை அடையும்படி என்னை உன்னிடத்திற்கு அனுப்பினார் என்றான். உடனே கண்களிலிருந்து மீன் செதில்கள்போல விழுந்தன. சவுல் பார்வை அடைந்தான். பின் அனனியா மூலம் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டான்.

பின் சவுல் பவுல் என அழைக்கப்பெற்றான். அவன் தமஸ்குவிலுள்ள சீஷர்களுடனே சில நாட்கள் தங்கியிருந்தான். பின் பெலன் கொண்டு, திடன்கொண்டு ஆலயங்களில் கிறிஸ்து கடவுளுடைய குமாரன் என்று பிரசங்கித்தான். இதைக் கேட்டவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களை கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டுபோகும்படி வந்தவன் இவன் அல்லவா என்றார்கள்.

சவுல் அதிகமாகத் திடன்கொண்டு, இவரே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்தி தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களை கலங்கப்பண்ணினான். இப்படி அநேக நாள் சென்றபின்பு, யூதர்கள் அவனைக் கொலை செய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள். ஆகவே சீஷர்கள் ராத்திரியிலே அவனைக் கூட்டிக்கொண்டுபோய், ஒரு கூடையிலே வைத்து மதில் வழியாய் இறக்கிவிட்டார்கள். சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே சேர்ந்துகொள்ளப் பார்த்தான். அவர்கள் அவனை சீஷனென்று நம்பாமல் எல்லோரும் அவனுக்குப் பயந்தார்கள்.

அப்பொழுது பர்னபா என்ற சீஷன் பவுலைச் சேர்த்துக்கொண்டு அப்போஸ்தலனிடத்தில் அழைத்துக்கொண்டுபோய் வழியிலே அவன் கர்த்தரைக் கண்ட விதத்தையும், அவர் அவனுடனே பேசினதையும், தமஸ்குவில் அவன் ஏசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான். பின்பு பவுல் எருசலேமிலே கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்து, கிரேக்கருடனே பேசித் தர்க்கித்தான். அவர்களும் பவுலைக் கொலை செய்ய எத்தனித்தனர். சகோதரர் அதை அறிந்து, அவனைச் செசரியாவுக்கு அழைத்துக்கொண்டுபோய் தர்சுவுக்கு அனுப்பி விட்டார்கள். அப்பொழுது யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம்பெற்று பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும் பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகி வந்தது.

353. பேதுருவின் அற்புத ஊழியம்

அப். 9

ஐனேயா, தொற்காள்

பேதுரு லித்தா ஊரிலுள்ள பரிசுத்தவான்களிடத்தில் போனார், அங்கே எட்டு வருஷமாய்த் திமிர்வாதமுள்ள ஐனேயா என்பவனைக் கண்டான். உடனே அவனைப் பார்த்து 'ஐனேயாவே, இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார், நீ எழுந்து உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்' என்றார். உடனே அவன் எழுந்திருந்தான். லித்தா, சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு கர்த்தரிடத்தில் மனந்திரும்பினார்கள்.

யோப்பா பட்டணத்தில் தொற்காள் என்னும் பேருள்ள சீஷி இருந்தாள். அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள். அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி மேல் வீட்டிலே கிடத்தி வைத்தார்கள். பேதுரு, லித்தா ஊரில் இருக்கிறாரென்று கேள்விப்பட்டு சீஷர்கள் இரண்டு மனிதரை அனுப்பி அவரை வரவழைத்து, மேல் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகள் எல்லாரும் அழுது தொற்காள் உயிருடன் இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்து சூழ்ந்து நின்றார்கள்.

பேதுரு எல்லாரையும் வெளியே போகச் செய்து முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி

தபித்தாளே, எழுந்திரு என்றார். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள். அவர் அவளுக்குக் கைகொடுத்து அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து அவளை உயிருள்ளவளாக அவர் களுக்கு முன் நிறுத்தினார். இந்த விஷயம் யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாச முள்ளவர்களானார்கள்.

354. ரோம அதிபதி கொர்நேலியுவும் பேதுருவும்

அப். 10,11

இத்தாலியா பட்டணத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத் தில் வசித்து வந்தான். இவன் கடவுள் பக்தி யுள்ளவனும், தன் வீட்டார் அனைவரோடும் கடவுளுக்குப் பயந்தவனுமாயிருந்தான். மக்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து எப் பொழுதும் கடவுளை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டே இருந்தான்.

ஒருநாள் தேவதூதன் கொர்நேலியுவைக் கூப்பிட்டு உன் ஜெபங்களும், தருமங்களும் கடவுளுடைய சந்நிதியில் எட்டியிருக்கிறது. ஆகையால் நீ யோப்பாப் பட்டணத்தில் சீமோனிடம் தங்கியிருக்கும் பேதுருவை அழைத்துக்கொண்டுவா. அப்பொழுது அவர் நீ செய்யவேண்டியதை உனக்குச் சொல்லுவார் என்று கூறிவிட்டுச் சென்றார். உடனே கொர் நேலியு மூன்று வேலை ஆட்களை சீமோன் வீட்டில் தங்கியிருக்கும் பேதுருவை அழைத்துவரும்படி அனுப்பினான். பேதுரு மேல் வீட்டில் ஜெபம் பண்ணும்படி ஏறினார். பின் ஞானதிருஷ்டி அடைந்து ஒரு தரிசனத்தைக் கண்டார்.

பேதுரு அப்போஸ்தலன் யோப்பா பட்டணத் தில் சீமோன் வீட்டில் தங்கியிருந்தார். ஒரு நாள் பசியோடு மேல் வீட்டில் ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கும்போது ஞானதிருஷ்டியினால் ஒரு தரிசனம் கண்டார். அதாவது வானம் திறந்திருக்கிறதாகவும், நாலு மூலைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல் ஒரு விதமான கூடு தன்னிடத்தில் இறங்கி தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும் கண்டார். அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாட்டு மிருகங்கள், காட்டுமிருகங்கள், ஊரும்பிராணிகள், ஆகாயத் துப் பறவைகள் யாவும் இருந்தன. அதை அடித்துப் புசி என்று சொல்லும் ஒரு சத்தத் தையும் அவர் கேட்டார். அதற்கு பேதுரு அப்படி அல்ல ஆண்டவரே, தீட்டும் அசுத்தமு மாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக் காலும் புசித்ததில்லை என்றான். உடனே கடவுள் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் கேட்டது, மூன்றும் தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதைக் குறித்து தனக் குள்ளே சந்தேகப்படுகையில் கொர்நேலியுவி னால் அனுப்பப்பட்ட மனிதர்கள் பேதுரு இருந்த வீட்டிற்கு வந்தனர். அப்பொழுது ஆவியானவர் இதோ மூன்று மனிதர் உன்னைத் தேடி அழைத்துப்போக வந்திருக்கிறார்கள். உடனே அவர்களுடனே கூடப்போ, நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார்.

பேதுரு இறங்கிப்போய் இதோ நீங்கள் தேடுகிற மனிதன் நான்தான். நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன என்று கேட்க, அவர்கள் நீதிமானும், தேவனுக்குப் பயப்படு கிறவரும், யூத மக்களால் நற்சாட்சி பெற்றவரு மாகிய கொர்நேலியுவின் வீட்டிற்கு உம்மை அழைத்துவரச் சொன்னார் என்றார்கள். மேலும் உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி தூதனாலே கட்டளை பெற்றார் என்றும் கூறினார்கள். உடனே பேதுரு மூன்று பேரையும் உள்ளே அழைத்து உபசாரஞ்செய்து மறுநாளிலே அவர்களுடனும், சில சகோதர ருடனும் சேர்ந்து செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள்.

யூதர்கள் புறமதத்தாரோடு எவ்வித சம்மந்த மும் வைத்துக்கொள்ளமாட்டார்கள், பழக மாட்டார்கள். புறமதத்தாரை அசுத்தமானவர் கள் என்று யூதர்கள் புறக்கணிப்பார்கள். ஆனால் இயேசுவோ யூதர்களை எப்படி நேசித் தாரோ அப்படியே புறமதத்தினரையும் நேசிக் கிறார் என்பதை தரிசனம்மூலம் பேதுருவுக்கு உணர்த்துகிறார். அதன்பின் யூதனாகிய பேதுரு கொர்நேலியு அனுப்பிய மூன்று ரோமர்க ளாகிய புறமதஸ்தாரைத் தன் வீட்டில் உபசரித்தான். கடவுளால் சுத்தம் செய்யப் பட்டதை மனிதன் அசுத்தம் என்று கருதக் கூடாதல்லவா?

கொர்நேலியு ஆவலுடன் தன் உறவினர்கள் சிநேகிதர்களை அழைத்து பேதுருவின் செய்திக் காகக் காத்திருந்தனர். பேதுரு உள்ளே

நுழைந்தவுடன் கொர்நேலியு அவர் பாதத்தில் விழுந்து பணிந்துகொண்டான். பேதுரு அவனை தூக்கி நிறுத்தி நானும் ஒரு மனிதன்தான் என்றார். பின்பு கொர்நேலியு தான் எதற்காக அவரை அழைத்தான் என்று விவரமாக நடந்ததைச் சொன்னான். பேதுரு உடனே ஆவியினால் நிறைந்து கடவுளின் வார்த்தைகளைக் கூறத் தொடங்கினார். கடவுள் பட்சபாதமுள்ளவர் அல்லர், எல்லா மனிதருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்து பாவ மன்னிப்பையும் நித்திய ஜீவனையும் கொடுக்கிறவர் என்றும் பிரசங்கித்தார். விசுவாசத்தோடு வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் யாவர்மேலும் பரிசுத்தாவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும் குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு இவர்களும் திருமுழுக்குப் பெற கட்டளையிட்டார். அநேகர் கர்த்தருடைய நாமத்தினாலே திருமுழுக்குப் பெற்றார்கள். சில நாட்கள் பேதுரு அங்கு தங்கி தேவ வசனத்தை இன்னும் ஆழமாகப் போதித்து வந்தார்.

355. சிறைச்சாலையில் பேதுரு

அப். 12

அக்காலத்தில் ஏரோது அரசன் சபையிலே சிலரைத் துன்பப்படுத்தி வந்தான். யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலை செய்தான். பேதுருவையும் பிடித்து சிறைச்சாலையிலே வைத்தான். ஆனால் அங்கே ஒரு அற்புதம் நடந்தது. ஏன் தெரியுமா? சபையார் பேதுரு விடுதலை பெற வேண்டுமென்று கடவுளை நோக்கி ஊக்கத்தோடு ஜெபம் செய்துவந்தனர். நடந்தது என்ன? பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் பேதுருவைத் தட்டி எழுப்பினார். உடனே சங்கிலிகள் கைகளிலிருந்து விழுந்தது. உன் அரையைக் கட்டி, பாதரட்சைகளைத் தொடுத்து, வஸ்திரத்தைப் போர்த்துக் கொண்டு என் பின்னேவா என்றும் உரைத்தார். பேதுருவோ தான் ஏதோ ஒரு தரிசனம் காண்கிறதாக நினைத்தார். அவர்கள் முதலாம், இரண்டாம் காவல்களைக் கடந்து நகரத்திற்குப் போகிற இருப்புக் கதவண்டையிலே வந்த போது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது. அதன் வழியாய் வீதி நெடுக நடந்து போனார்கள். உடனே தூதன் மறைந்து விட்டார்.

பேதுருவுக்குத் தன் உணர்வு அதாவது தெளிவு வந்தது. உடனே சாட்சிகூற ஆரம்பித்துவிட்டார். ஏரோதின் கைக்கும், யூத மக்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படி கர்த்தர் தம் தூதனை அனுப்பினார் என்றார். பின் யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டிற்கு வந்தார். அங்கே அநேகர் கூடி ஜெபித்துக்கொண்டிருந்தனர். பேதுரு கதவைத் தட்டினார். உடனே ரோதை என்பவள், அது பேதுருதான்; தட்டிக்கொண்டு வாசலுக்கு முன் நிற்கிறார் என்று கூறினாள். ஜெபித்துக்கொண்டிருந்தவர்கள் அவள் வார்த்தையை நம்பாமல் நீ பிதற்றுகிறாய் என்றனர். அது தூதனாய் இருக்கலாம் என்று கதவைத் திறந்தபோது, பேதுரு நிற்பதைக் கண்டு பிரமித்தனர்.

பின் பேதுரு கர்த்தர் எவ்விதம் தன்னைக் காவலிலிருந்து தூதனைக்கொண்டு விடுவித்தார் என்பதை விளக்கிக் கூறினார். இச்செய்தியை மற்றவர்களுக்கும், யாக்கோபுக்கும், சகோதரர்களுக்கும் அறிவியுங்கள் என்று கூறிவிட்டு செசரியா பட்டணத்திற்குப் புறப்பட்டுப் போனார்.

356. பவுலின் பிரசங்கம்

அப். 13,14

அந்தியோகியா சபை விருத்தியானது. பவுலும் பர்னபாவும் ஒரு வருடம் அங்கே தங்கி சபையில் போதித்து வந்தார்கள். யூதர் அல்லாதவர்கள் மத்தியிலும் நற்செய்தியை அறிவித்தார்கள். இஸ்ரவேல் மக்களை எந்த விதம் கடவுள் பிதாக்களைத் தெரிந்துகொண்டு நாற்பது வருஷமாய் வனாந்தரத்தில் அவர்களை ஆதரித்து வந்தார் என்றும், சவுல் தாவீது அரசாட்சி செய்யும்போது அவருடைய சந்ததி

யிலே இஸ்ரவேலுக்கு இரட்சகரான இயேசுவை எழும்பப் பண்ணினார் என்றும், இவருக்குமுன் யோவான் மனந்திரும்புதலுக்கு என்று கொடுத்த ஞானஸ்நானத்தையும் குறித்துப் பேசினான். பின் இயேசுவைக் கொலை செய்து கல்லறையில் வைத்தபோது கடவுள் அவரை மரித்தோரிலிருந்து எழும்பி, அநேகருக்குத் தரிசனமானார். இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே தமது குமாரனை ஜெனிப்பித்து அவருடைய பிள்ளைகளுக்கு வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார் என்றும் நாங்களும் அவரையே சுவிசேஷமாய் அறிவிக்கிறோம் என்றும் இக்கோனியா பட்டணத்திலே கிரேக்கரும், யூதரும் விசுவாசிக்கத்தக்கதாய்ப் பிரசங்கித்தார்.

லீஸ்திராவில் பவுல் பிரசங்கம் பண்ணும்போது தன் தாயின் வயிற்றில் சப்பாணியாய் பிறந்தவன், கால்கள் விளங்காதவனாய் உட்கார்ந்து பிரசங்கம் கேட்டுக்கொண்டிருந்தான். இவனுக்குள் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் உண்டென்று பவுல் கண்டு, நீ எழுந்து 'கால் ஊன்றி நில்' என்று உரத்த சத்தமாய்ச் சொன்னார். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான். மக்கள் இதைக்கண்டு தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் வந்திருக்கிறார்கள் என்று சத்தமிட்டு பர்னபாவை 'யூப்பித்தர்' என்றும், பவுலை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள். கோவில் பூஜாசாரி எருது, பூமாலைகளையும் கொண்டுவந்து மக்களோடே கூட அவர்களுக்கு பலியிட மனதாயிருந்தார்கள். இதைக் கேட்டவுடன் பவுல் உங்களைப் போல் பாடுள்ள மனுஷர்கள்தான் நாங்கள், நீங்கள் வீணான கடவுளாகிய யூப்பித்தர் மெர்க்கூரி இவைகளைவிட்டு ஜீவனுள்ள தேவனாகிய இயேசுவினிடத்திற்கு திரும்பவேண்டும் என்று பிரசங்கிக்கிறோம். கடவுள் மழைகளையும், செழிப்பான காலங்களையும் தந்து ஆகாரத்தினாலும், மகிழ்ச்சியாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி இவ்விதமாக நம்மை அவருக்கு சாட்சியாக விளங்கப் பண்ணுகிறார் என்று கூறி பிரசங்கம் செய்தார். சில யூதர்கள் பவுலைக் கல்லெறிந்தனர். பின் அவன் மரித்துப் போனான் என்று எண்ணி பட்டணத்துக்கு வெளியே இழுத்துக்கொண்டு போனார்கள். ஆனால் பவுல் எழுந்து பட்டணத்திற்குள் பிரவேசித்தார்.

357. பவுலின் ஊழியம்

அப். 15,16

அந்தியோகியா பட்டணத்திற்கு கப்பல் ஏறிச் சென்று அங்குள்ள சபை மக்களை கூடிவரச்செய்து கடவுள் அவர்களைக் கொண்டு செய்தவைகளை அறிவித்து சுவிசேஷத்தை பிரசங்கித்து வந்தார். பல பட்டணங்களிலும் பிரயாணமாய்ப்போய் ஆவிக்குரிய போதனை கொடுத்து வந்தார் பவுல். துரோவாவில் ஒரு தரிசனம் கண்டார். மக்கெதோனியா நாட்டு மனிதன் தங்களுக்கு உதவிசெய்ய பவுலை வேண்டிக்கொண்டான். அங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்து வந்தார்கள்.

பிலிப்பு பட்டணத்திற்கு வந்து சில நாட்கள் தங்கி ஓய்வுநாளில் ஆற்றினருகே உட்கார்ந்து, அங்கே கூடிவந்த பெண்களுக்கும் உபதேசித்து வந்தார். அவர்களில் லீதியாள் என்பவளும் அவள் வீட்டாரும் விசுவாசிகளாகி திருமுழுக்குப் பெற்றார்கள். அவர்கள் போகையில் குறி சொல்லுகிற ஒரு பெண் தன் எஜமானுக்கு மிகுந்த ஆதாயம் தேடிக்கொண்டிருந்தாள். அவள் இவர்களைப் பின்தொடர்ந்து இந்த மனிதர் உன்னதக் கடவுளுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிப்பவர்கள் என்று மிகுந்த சத்தமிட்டாள். இப்படி அநேக நாட்கள் செய்துகொண்டு வந்தாள். பவுல் சினங்கொண்டு 'அசுத்த ஆவியே இவளை விட்டுப் புறப்பட்டுப்போ' என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன் என்று சொன்னவுடனே அசுத்த ஆவி புறப்பட்டுப் போயிற்று. அவள் குறி சொல்வதை அன்றிலிருந்து விட்டு விட்டு கடவுளின் விசுவாசியானாள். அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயம் நின்றுபோயிற்று என்று கண்டு கோபமடைந்து பவுலையும் அவரோடு கூட ஊழியம் செய்த நண்பனாகிய சீலாவையும் அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்தார்கள்.

358. சிறைச்சாலையில் சங்கீதம்

அப். 16


பவுலையும் சீலாவையும் அதிகாரிகள் அடித்து இவர்கள் யூதர்கள் தகாத முறைகளை அனுசரிக்கும்படி ரோமர்களுக்குப் போதிக்கிறார்கள் என்று கூறி அவர்களை காவலில் வைத்தார்கள். கால்களைத் தொழுமரத்தில் மாட்டியும் வைத்தனர். ஆனால் நடு இரவிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி கடவுளைத் துதித்துப் பாடினார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அதிர்ந்து கதவுகள் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று. சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு தன்னையே தற்கொலை செய்யப்போனான். பவுல் இதைக் கண்டவுடன் மிகுந்த சத்தமாய் உனக்குக் கெடுதி ஒன்றும் செய்யாதே நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான். உடனே அவன் இருவருக்கும் முன் விழுந்து ஆண்டவன்மாரே 'நான் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்' என்று கேட்டான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டினரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். அவர்களும் உடனே திருமுழுக்குப் பெற்றார்கள். அவன் வீட்டார் யாவரும் மகிழ்ச்சியும் அடைந்தனர். அப்போது சேவகர்கள் அதிகாரிகளினால் உத்தரவு பெற்று அவர்களை விடுதலைபண்ணி சமாதானத்துடன் போய்விடுங்கள் என்றார்கள். பவுல் எங்களை நியாயம் விசாரியாமல் சிறையில் அடைத்ததினால், அதிகாரிகளே வந்து எங்களை போகச் சொல்லவேண்டும் என்றான். ரோமர்கள் ஆயிற்றே என்று பயந்து தயவாய்ப் பேசி அனுப்பினார்கள். பின் இவர்கள் லீதியாளிடத்திற்குப் போனார்கள். அங்குள்ள சகோதரர்களுக்கும் ஆறுதல் சொல்லிச் சென்றனர்.

359. பவுலும் சீலாவும்

அப். 17,18

பவுல் தன் வழக்கத்தின்படியே ஜெப ஆலயத்தில் வேத வாக்கியங்களின் நியாயங்களை எடுத்து சம்பாஷித்து கிறிஸ்து பாடுபடவும், மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் போதித்தும் திருஷ்டாந்தப்படுத்தியும் வந்தார். யூதர்களில் சிலரும், கிரேக்கரில் பக்தியுள்ள திரளான மக்களும் பெண்களில் அநேகரும் விசுவாசித்தனர். பின் பெராயாவில் மனோவாஞ்சையாய் மக்கள் வசனத்தை ஏற்றுக்கொண்டனர். நற்குணசாலிகளாக மாறினார்கள் ஏனென்றால் தினந்தோறும் அவர்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்துக் கற்றுக்கொண்டு வந்ததினால்தான்.

அத்தேனே பட்டணத்தில் விக்கிரகம் நிறைந்திருக்கிறதைக் கண்டு, பவுல் தன் ஆவியில் மிகுந்த வைராக்கியம் அடைந்து, ஜெப ஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தைவெளியில் எதிர்பட்டவர்களோடும், தினந்தோறும் உண்மைக் கடவுளைப்பற்றி போதித்தான். அவர்கள் பவுலை மார்ஸ் மேடைக்கு அழைத்துக்கொண்டு போய், புதிதான உபதேசம் கேட்க ஆவலுள்ளவர்கள் நாங்கள், ஆகையால் நீர் பேசும் என்றார்கள். அப்பொழுது பவுல் எழுந்து நின்று 'அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த கடவுள் பக்தியுள்ளவர்கள் என்று காண்கிறேன். எப்படியெனில், நான் சுற்றித்திரிந்து, உங்கள் வழிபாட்டுக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது அறியப்படாத கடவுளுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற



பவுலும் சீலாவும் (அப். 17,18)

அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் என்றும், உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின கடவுளானவர் வானத்திற்கும், பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால், கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை. பணிவிடைகொள்வதும் இல்லை என்றும், சகல மக்களையும் ஒரே இரத்தத்தினால் தோன்றப் பண்ணினார்.கடவுள் யாவருக்கும் சமீபமாயிருக்கிறார். அவருடைய சந்ததியாராக நாம் இருக்கவேண்டும் என்றும் அதற்கு மனந்திரும்ப வேண்டும் என்றும், கடவுள் நமக்குக் கட்டளையிடுகிறார்' என்று பிரசங்கித்தார். இதைக்கேட்ட சிலர் உண்மைக் கடவுளுக்கு விசுவாசிகளாயினர்.

கொரிந்து பட்டணத்தில் ஆக்கில்லா, பிரிஸ்கில்லா என்பவர்களை பவுல் சந்தித்து அவர்களோடு தங்கி, கூடார வேலை செய்துகொண்டே சுவிசேஷத்தைப் போதித்து வந்தார். இதன்மூலம் ஜெப ஆலயத் தலைவன் கிறிஸ்பு தன் வீட்டினரோடு திருமுழுக்குப் பெற்றான். கர்த்தர் பவுலுக்கு தரிசனமாகி 'நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே, நான் உன்னுடனே இருக்கிறேன்' என்றார். பவுல் அங்கு தங்கியும் எபேசு, செசரியா, அந்தியோகியா, அலெக்சந்திரியா பட்டணங்களில் தேவ மார்க்கத்தைத் திட்டமாய்ப் போதித்தும் வந்தார். அநேகர் இயேசுவில் விசுவாசம் வைத்தனர். அதோடு எதிர்ப்பும் இருந்தது. தொடர்ந்து கர்த்தருடைய ஊழியம் அவரால் செய்யப்பட்டு வந்தது.

360. எபேசுவிலே குழப்பம்

அப். 19

பவுல் எபேசுவிலே மூன்று வருடம் தங்கினார். இதனால் ஆசியாவில் குடியிருந்த யூதரும், கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தருடைய வசனத்தைக் கேட்டனர். இயேசுவின் நாமத்தினாலே திருமுழுக்குப் பெற்றார்கள். பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவியினால் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். பவுலின் கைகளினால் கடவுள் விசேஷித்த அற்புதங்களைச் செய்துகொண்டு வந்தார். அவருடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும், கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர்மேல் போடும்போது வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப் போயிற்று. பொல்லாத ஆவிகளும்கூட அவர்களைவிட்டுப் போயிற்று. கர்த்தராகிய இயேசுவின் நாமம் இந்த விதமாக மகிமைப்பட்டது.

மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புத்தகங்களைச் சுட்டெரித்து உண்மைக் கடவுளின் விசுவாசிகளானார்கள். இவ்வளவு சீக்கிரமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்தது. ஆகையால் இந்தக் கிறிஸ்து மார்க்கத்தைக் குறித்து பெரிய கலகம் உண்டாயிற்று. ஏனெனில் தெமேத்திரியு என்னும் தட்டான் தியானாளின் கோவிலைப்போல வெள்ளியினாலே செய்து பணம் சம்பாதித்துக்கொண்டிருந்தான். இதை பவுல் அப்போஸ்தலன் தடுத்தான். கைகளினால் செய்யப்பட்ட கடவுள், கடவுள்கள் அல்ல என்று எபேசு, ஆசியா முழுவதும இயேசுகிறிஸ்துவைப்பற்றிப் போதித்து அநேகரை கிறிஸ்தவர்களாக்கினார். இதை அறிந்த விக்கிரக வணக்கத்தார் கோபத்தால் நிறைந்து எபேசியருடைய தியானாளே பெரியவள். என்று இரண்டு மணி நேரம்விடாம கூச்சல் இட்டனர். இதனால் பட்டணம் முழுவதும் கலகம் விளைந்தது. அபபொழுது பட்டணத்தின் தலைவன் கூட்டத்தைக் கலைத்து அனுப்பிவிட்டான். இவ்விதம் குழப்பத்தை நிறுத்தும்படி வழிசெய்தான்.

361. பவுலின் நீண்ட பிரசங்கம்

அப். 20,21

கலகம் அமர்ந்தபின் பவுல் தன் சீஷருடன் மக்கெதோனியாவுக்குப் போனார். கிரேக்கு தேசத்தில் மூன்று வருடம் தங்கினார். துரோவா பட்டணத்தில் நடு ராத்திரி மட்டும் இயேசு கிறிஸ்துவைப்பற்றி பிரசங்கித்தார். அப்பொழுது ஐத்திகு என்னும் வாலிபன் ஜன்னல் அருகில் உட்கார்ந்து தூக்க மயக்கத்தினால் மூன்றாம் மெத்தையில் இருந்து கீழே விழுந்து மரித்துப்போனான். உடனே பவுல் இறங்கிப் போய் அவன்மேல் விழுந்து அவனை அணைத்துக்கொண்டு, கலங்காதிருங்கள். இவன் உயிர்

இவனுக்குள் இருக்கிறது என்று கூறி ஜெபித்துப் பின் உயிர் உள்ளவனாக அவனை மக்களிடம் கூட்டிக்கொண்டு வந்தார் இதனால் மக்கள் ஆறுதல் அடைந்து கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தார்கள். பவுல் கடவுளிடத்தில் மனந்திரும்புவதைக் குறித்தும், தொடர்ந்து இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும், எல்லா மனிதருக்கும் போதித்துவிட்டு பல ஊர்களுக்கும் போனார். போகும் வழிகளில் எல்லாம் இயேசுக்கிறிஸ்துவை சாட்சியாக அறிவித்தும் வந்தார்.

இரவும் பகலும் இடைவிடாமல் விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் புத்தி சொல்லிக்கொண்டார்கள். பவுல் அவருடைய சிநேகிதருடன் கடல் கடந்து பிரயாணம் செய்தார். செசரியாவில் சில நாள் பிலிப்போடு தங்கினார்.

அப்போது அகபு என்ற தீர்க்கன் தீர்க்கதரிசனமாக பவுலிடம், உன்னைக் கையும் காலுமாகக் கட்டி யூதர்கள் ரோமர் கையில் உன்னை ஒப்புக்கொடுப்பார்கள் என்று கர்த்தர் என்னிடம் கூறினார். மேலும் பவுலை எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று பெண்களில் சிலர் கூறி அழுதார்கள். அதற்கு பவுல் என்னை விட்டு விடுங்கள், என்னை வேதனைப்படுத்தாதிருங்கள் நான் எருசலேமுக்குப் போகத் தீர்மானித்து விட்டேன் என்றார். இயேசுகிறிஸ்துவுக்காக கட்டப்பட மாத்திரம் அல்ல, மரிக்கவும் ஆயத்தமாய் இருக்கிறேன் என்று கூறினார்.

362. பவுலின் சிறையிருப்பும் இரகசிய சதியும்

அப். 22,23

பவுல் எருசலேம் தேவாலயத்தில் பிரசங்கித்துக்கொண்டிருக்கும்போது ஆசிய நாட்டு யூதர்கள் பவுல்மேல் கைபோட்டு நம்முடைய மக்களுக்கும் வேத பிராமணத்திற்கும் விரோதமாக எல்லாருக்கும் இவன் கிறிஸ்துவைப் போதித்து வருகிறான். இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என்று சத்தமிட்டார்கள். உடனே மக்கள் கலக்கம் அடைந்து பவுலைப் பிடித்து தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்துக் கொண்டுபோய் அவரை அடித்தார்கள்.

பவுல் சேனாதிபதியிடம் பேசுவதற்கு உத்தரவு கேட்டான். தான் தர்சு பட்டணத்தின் யூதன் என்றும் தான் இயேசுவை எப்படிச் சந்தித்து வல்லமை பெற்றார் என்றும், எபிரேய பாஷையிலே சாட்சி கூறியும் இயேசுவைக் குறித்து பிரசங்கித்து வந்தார், என்பதையும் விவரித்துக் கூறினார். இதைக் கேட்ட மக்கள் இப்படிப்பட்டவனை பூமியில் இருந்து அகற்ற வேண்டும். இவன் உயிரோடு இருக்கிறது நியாயம் இல்லை என்று சத்தம் இட்டனர்.

சேனாதிபதி பவுலை சவுக்கால் அடித்து விசாரிக்கச் சொன்னான். பவுல் நூற்றுக்கதிபதியை நோக்கி ரோமனும் நியாயம் விசாரிக்கப்படாதவனுமாயிருக்கிற மனுஷனை அடிக்கிறது உங்களுக்கு நியாயமா என்று கேட்டார். சேனாதிபதி பவுலினிடத்தில் வந்து நீ ரோமனா? என்று கேட்டான். அதற்குப் பவுல் தான் ரோமன்தான் என்று கூறினார். உடனே அவனை கட்டவிழ்த்து பிரதான ஆசாரியர் ஆலோசனை சங்கத்தார் அனைவருக்கும் முன்பாக நிறுத்தினார்கள். அன்று இரவு கர்த்தர் பேசினார். பவுலின் அருகே நின்று 'பவுலே திடன் கொள். நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்ததுபோல ரோமாபுரியிலும் சாட்சி கொடுக்கவேண்டும்' என்றார்.

விடியற் காலையில் நாற்பது யூதர்கள், பவுலைக் கொலை செய்யும்வரை நாங்கள் புசிப்பதும் குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணினார்கள். ஆலோசனை சங்கத்தாரோடேகூட இங்கு


பவுலின் சிறையிருப்பும் இரகசிய சதியும் (அப். 22,23)

கூட்டிக்கொண்டு வாருங்கள். நாங்கள் கொலை செய்ய ஆயத்தமாயிருக்கிறோம் என்றனர். இந்த சதியைப் பவுலின் சகோதரியின் குமாரன் கேள்விப்பட்டு கோட்டைக்குள் போய் பவுலுக்கு அறிவித்தான். பின் சேனாதிபதிக்கும் இந்த சதி அறிவிக்கப்பட்டது. உடனே நூற்றுக்கு அதிபதி இருவர் செசரியாப் பட்டணத்திற்குப் போக இரு நூறு காலாட் படை, எழுபது குதிரை வீரர்கள், இருநூறு ஈட்டிக்காரரையும் இரவில் ஆயத்தம்பண்ணி, ஒரு நிருபத்தையும் பேலிக்ஸ் தேசாதிபதிக்கு எழுதி அனுப்பினன். தேசாதிபதி ஏரோதின் அரண்மனையிலே பவுலைக் காவல் பண்ணும்படி கட்டளையிட்டான்.

363. கப்பல் சேதம்

அப். 24,27

பவுல் பல வருடமாக காவலில் வைக்கப்பட்டார். அடிக்கடி ரோம அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டும் வந்தார். ஆனாலும் பவுலின் காரியம் தீர்க்கப்படவில்லை. பவுல் கடைசியில் நான் சீசர் முன்பு நியாயம் தீர்க்கப்பட விரும்புகிறேன் என்றான். ரோம அதிகாரியான யூலியு என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் இத்தாலியா நாட்டுக்கு பிரயாணமாகப் போக ஒழுங்கு செய்யப்பட்டது. பவுலின் நண்பர்களில் சிலரும் லூக்கா என்பவரும் தங்கள் சொந்தச் செலவில் கப்பல் பிரயாணத்தை மேற்கொண்டனர்.



கப்பல் சேதம் (அப். 24,27)

முதலில் கடல் அமைதியாக இருந்தது. பிறகு புயல் வீசியதால் கப்பல் ஓட்டி, கஷ்டத்துடன் ஒரு துறைமுகத்திற்குக் கொண்டுபோகப் பிரயாசப்பட்டார். பவுல் பிரயாணத்தை நிறுத்தும்படி கட்டளையிட்டார். ஏனெனில் கப்பலுக்கும் அதிலுள்ள பொருள்களுக்கும் மனிதர்களுக்கும் சேதம் உண்டாகும் என்று எச்சரித்தான். ஆனால் தொடர்ந்து ஓட்டிக் கொண்டு போனார்கள். மேலும் பெருங்காற்றிலும் மழையிலும் அடிபட்டார்கள். பொருட்களையும், கப்பல் தளவாடங்களையும் கடலில் எறிந்தார்கள். சூரியன், நட்சத்திரங்களையும் காணமுடியாமல் பெருங்காற்று மழையுடன் அடித்ததினால் தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கை இழந்தனர். பவுல் அவர்களை தைரியப்படுத்தி உயிர்ச் சேதம் வராது, ஏனெனில் தான் வழிபடும் கடவுள் அதை வெளிப்படுத்தினார் என்றார். பயந்துபோய் பதினான்கு நாட்கள் சாப்பிடாமல் இருந்த மக்களை திடப்படுத்திசாப்பிடும்படி செய்தார்.

கப்பலின் பின் பகுதி உடைந்துபோயிற்று. நூற்றுக்கு அதிபதி நீந்தத் தெரிந்தவர்கள் கரையேறவும், சிலர் கப்பற் பலகைத் துண்டுகள்மேலும் ஏறிக்கரையேரவும், கட்டளையிட்டான், இவ்விதமாய் எல்லோரும் தப்பி மெலித்தா தீவில் கரை சேர்ந்தனர்.

364. ரோமாபுரியில் பவுல்

அப். 28

மெலித்தா தீவில் கரை சேர்ந்ததும் அங்குள்ள இருநூற்றி எழுபது பேருக்கும் அங்கிருக்கும் மக்கள் பாராட்டின அன்பு பெரிதாய் இருந்தது. மழைக்காகவும் குளிருக்காகவும் அவர்கள் நெருப்பை மூட்டி அனைவரையும் சேர்த்துக்கொண்டனர். பவுல் சில விறகுகளை நெருப்பில் போட்டார். அப்போது ஒரு விரியன் பாம்பு அவர் கையைக் கவ்விக் கொண்டது. அச்சமயம் அத்தீவு மக்கள் இந்த மனிதன் கொலை பாதகன் என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள். பவுல் அந்தப் பாம்பை தீயிலே உதறிவிட்டார். அவருக்கு ஒரு தீங்கும் ஏற்படவில்லை. இதைக் கண்ட மக்கள் இவர் தேவனே என்று சொல்லிக்கொண்டனர்.

புபிலியு என்ற தீவிற்குத் தலைவன் அவர்களை ஏற்றுக்கொண்டு மூன்று நாட்கள் பட்சமாய் உபசரித்தான். புபிலியுவின் தகப்பனார், ரத்தப் பேதியினாலும், சுரத்தினாலும் வருத்தப்பட்டுக் கிடந்தார். பவுல் உடனே அவனிடத்திற்குப் போய் ஜெபம்பண்ணி அவன் மேல் கைகளை வைத்து அவனை குணமாக்கினார். இந்தக் காரியம் தெரியவந்த பின்பு தீவில் உள்ள மற்ற நோயாளிகளும் பவுலினால் குணமாக்கப்பட்டனர். பின்பு மூன்று மாதம் சென்றபின் தீவு மக்கள் தேவையான பொருட்களை கப்பலில் ஏற்றி அநேக மரியாதையுடன் பவுலை வழிவிட்டு அனுப்பினார்கள்.

மிதுனம் என்ற கப்பலில் புறப்பட்டனர். சிரகூசா, புத்தேலியு என்ற பட்டணங்களுக்குப் போய் இறுதியில் ரோமாபுரிக்கு வந்தனர். அதற்கு இடையில் பவுல் வருகையைக் கேள்விப்பட்டு சிலர் அப்பியபுரம், மூன்று சத்திரம் ஊர்கள் வரைக்கும் எதிர்கொண்டு வந்து பவுலை கண்டுகொண்டனர். கடவுளுக்கு நன்றி செலுத்தினார்கள்.

பின்பு ரோமாபுரியில் பவுல் தனித்துக் குடியிருக்க உத்தரவு பெற்றுக்கொண்டார். அங்குள்ள யூதருக்கு மோசேயின் நியாயப் பிரமாணத்திலும், தீர்க்கதரிசன ஆகமத்திலிருந்தும் இயேசுவின் நற்செய்தியைப் போதித்து வந்தார். கடவுளுடைய இராஜ்யத்தைக் குறித்தும் சாட்சி கொடுத்து வந்தார். கடவுளுடைய இரட்சிப்பு யூதருக்கு மட்டும் அல்ல புறஜாதியாருக்கும் உண்டு என்ற நற்செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவித்தார். இவ்விதமாக இரண்டு வருடங்கள் இயேசுவின் சுவிசேஷத்தை தைரியமாக பிரசங்கித்துக்கொண்டு வந்தார். இறுதியில் ரோமப் பேரரசால் பொய்க் குற்றம் சாட்டப்பட்டு சிறைச்சேதம் செய்யப்பட்டார் என்பது வரலாறு.

கடிதம் எழுதியவர்கள்

பவுல், பேதுரு, யாக்கோபு

பவுல் அப்போஸ்தலன் அநேக கடிதங்களை (நிருபங்களை) பல சபைகளுக்கு எழுதினார். எங்கெல்லாம் சென்று நற்செய்தியைப் பரப்பினாரோ, அங்கெல்லாம் விசுவாசிகள் கூடி ஆங்காங்கே சபைகளை உருவாக்கினார்கள். இந்த சபைகளுக்குத் தலைவர்களை நியமித்து அறிவுரைகள் கூறுவதுதான் நிருபங்களாக அமைந்தன.

இந்த நீண்ட நிருபங்களை அவர் எங்கிருந்து எழுதினார் தெரியுமா? கிறிஸ்துவைப்பற்றி போதித்ததினால் ரோம அரசால், கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார். அப்போது தான் இந்த நிருபங்களை கொரிந்து சபை, ரோமாபுரி சபை, கலாத்திய சபை, எபேசு சபை, பிலிப்பி சபை, கொலோசெய சபை, தெசலோனிக்கேய சபை ஆகிய சபைகளுக்கு புத்திமதிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி சுகசெய்தி விசாரித்து, கடவுளின் ஆசீர்வாதங்களையும் சொல்லி, தனக்கு ஊழியத்தில் உதவி செய்தவர்களுக்கு நன்றி தெரிவித்து எழுதினார். மேலும் தனிப்பட்ட நபர்களுக்கும், தனிப்பட்ட காரியங்களைக் குறித்தும் கடிதம் எழுதியுள்ளார் (உ–ம்.) தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் முதலியவை ஆகும்.

இன்னும் பேதுரு அப்போஸ்தலன் ரோமாபுரியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். யாக்கோபு என்னும் சபைத் தலைவரும் சிதறிக் கிடக்கும் கிறிஸ்தவர்களுக்கும் கடிதம் எழுதி உள்ளார்.

இங்கே உதாரணமாகப் பரி. பவுல் பிலேமோனுக்கு எழுதிய நிருபத்தைப் படிப்போம்.

365. ஓடிப்போன அடிமை (பிலேமோன் நிருபம்)

ஒநேசிமு என்பவன் பிலேமோன் என்னும் கனவானுக்கு வேலையாளாய் இருந்தான். அவன் ஒரு தடவை எஜமானிடமிருந்து, சில பொருட்களைக் களவு செய்துகொண்டு ஓடிப் போய்விட்டான். அவன் பவுல் அப்போஸ்தலனிடம் அடைக்கலம் புகுந்து மனம் திருந்தி நல்லவனாக மாறி அவரிடமே உதவியாளனாக இருந்தான். பரிசுத்த பவுல் இந்த ஒநேசிமுவை தனக்கு உதவிக்காக வைத்துக்கொள்வதைவிட தன் பழைய எஜமானிடம் மன்னிப்பைப் பெற்று, விசுவாசத்தோடு மறுபடியும் அவ

னிடமே ஊழியம் செய்யட்டும் என்று விரும்பி, பரிசுத்த பவுல் தன் சிநேகிதரான பிலேமோனுக்கு ஒரு அன்புக் கடிதம் எழுதுகிறார்.

பிலேமோனுக்கு பரி, பவுல் எழுதிய இந்த அருமையான நெஞ்சுருக்கும் கடிதத்தை வேதத்தில் நீங்கள் படித்துப் பாருங்கள். ஒநேசிமுக்காகப் பிணைப்பட்டு அவன் செலுத்த வேண்டியவற்றைத் தானே செலுத்திவிடுவதாகவும் ஒநேசிமுவை தான் பெற்ற மகன் அருமை சகோதரன் என்றும் அவனை மன்னித்து ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் படிப்பவர் மனம் உருகும்படி ஒரு கடிதம் எழுதி உள்ளார்.

இப்படியாகத் தனிப்பட்டவர்களுக்கும் பரி. பவுல் நிருபம் எழுதி உள்ளார்.



ஓடிப்போன அடிமை (பிலேமோன் நிருபம்)

366. புதிய வானம் வெளிப்படுத்தல்

இயேசுவால் மிகவும் நேசிக்கப்பட்ட சீஷனாகிய யோவான் வெகுகாலம் வாழ்ந்திருந்தார். கிறிஸ்தவர்கள் ரோமர்களால் துன்பப்படுத்தப்பட்ட காலம், யோவான் சிறைப்பிடிக்கப்பட்டு பத்மூ தீவில் இருந்தார். கடவுள் உண்மையாய் இருக்கிறாரா, அவர் திரும்ப ஒரு முறை வருவாரா என்று ஏங்கியிருந்த காலம். அப்போது ஒரு நாள் யோவான் கனவில் தோன்ற ஏழு முக்கிய சபைகளுக்கான தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைப்பற்றி சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக எழுதியுள்ளார்.

கடவுள் ஜெகஜோதியாக அமர்ந்திருக்கும் மோட்ச லோகத்தையும் கண்டார். எதிர் காலத்தைப்பற்றிக் குறிப்பிட்ட செய்திச் சுருள் ஒன்று அவர் கையில் இருந்தது, ஒரே ஒருவர் தான் அந்த சுருளை வாசித்து அதன்படி செயல்படமுடியும். அவர்தான் இயேசுகிறிஸ்து. அவர் அச்சுருளை எடுத்தபோது தேவதூதர்கள் அவரைப் போற்றி கீதங்கள் பாடினர்.

கடவுளின் விரோதியாகிய சாத்தான் மக்களை பாவத்தில் தள்ள இயேசு பாவத்தைத் தன் மரணத்தினால் வென்றார். பழையவை எல்லாம் ஒழிந்து எல்லாம் அழகும் புதிதும் ஆயின. இயேசுவை விசுவாசிக்காதவர்கள் கடவுளை விட்டு அப்புறப்படுத்தப்படுவார்கள். மோட்ச லோகத்தை யாரும் அசுத்தப்படுத்தமுடியாது. இயேசுவை ஏற்றுக்கொண்ட மக்கள் இப்போது அவரோடு ஆளுகை செய்வார்கள். அங்கு அழுகையில்லை, கண்ணீரில்லை, ஒரே மகிழ்ச்சி. கடவுளுடைய நகரம் ஒரே ஒளிமயமாயிருக்கும். யோவான் இத்தரிசனத்தைக் கண்டார். அந்த நாள் எப்போது வரும் என்று ஏங்கினார். 'நான் சீக்கிரமாய் வருவேன்' என்று இயேசு சொன்னார். 'ஆம் இயேசுவே சீக்கிரம் வாரும்' என்று யோவான் சொன்னார்.



ஆசிரியரைப்பற்றி . . .

மேல்நாட்டுப் பயணக் கட்டுரைகளைத் திருமண்டிலத் திங்கள் ஏட்டில் தொடர்கதையாய் எழுதி பல நூறு வாசகர்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர். செய்திகளை மனத்தில் பதியும் வண்ணம் வழங்கும் எழுத்தாற்றல் உடையவர். உலகின் பல்வேறு நாடுகளிலும் அதிகமாகப் பயணம் செய்தவர். அங்குள்ள திருமறைக் கதைக் கொத்துக்களை ஆராய்ந்தவர். தாய்மார் திருமறைக் கதைகளைப் பயின்று, ஓய்வு நேரங்களில் பிள்ளைகளுக்கு அவற்றை ஊட்டவேண்டும் என்னும் நாட்டமுடையவர்.

மதுரை-இராமநாதபுரம் திருமண்டில பேராயர், அருட்பெருந்திரு. அறிவர் டி. டேவிட் ஞானய போத்திராஜுலு அவர்களின் **துணைவியார் ஆசிரியர் திருமதி ஹெலன் மேரி கஸ்தூரிபாய்**, B.A., B.T. அவர்கள்.